ஓம்
ஸ்ரீகுரு கணேசாய நம:

சொரூபஞான சாரசங்கிரகத் திரட்டு

இஃது

திருவனந்தபுரத்திலிருந்து
திருவண்ணுமலை-கானலப்பாடியில் சமாதிகொண்டிலகும்

ஸ்ரீ சற்குரு சுவாமிகளால்

நூதனமாகவியற்றப்பெற்றிருந்ததை

இறவாஞ்ச்சேரி—மளிகை

டா. அ. கோவிந்தசாமி வன்னியர்

அவர்கள் பொருளுதவியால்

திருவாரூர்—விஜயபுரம்
ஸ்ரீகுரு ஞானபூபதிகள் அவர்களது
"கருணைநிதி" அச்சு நிகேதனத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

1937.

விலை ரூ. 1—8—0.


இப் புத்தகத்தில் அடங்கிய நூற்கள்.

ஆகபதினொருபுத்தகங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்:—

(1) பா. அ. கோவிந்தசாமி வன்னியர்,
மளிகை, இறவாஞ்சேரி,
பூந்தோட்டம் S. I. R. வழி.

(2) ஸ்ரீ சற்குரு சுவாமிகள் மடாலயம்,
கானலப்பாடி—திருவண்ணமலை.



ஸ்ரீ சற்குருசுவாமிகள் திருவுருவம்.

உ

ஸ்ரீகுரு கணேசாய நம:

சொரூப ஞான சார சங்கிரகம்

வந்தேகுரும்ஸ்ரீசிவராமசந்திரம்
வேதாந்தவிக்ஞானகநசுவரூபம்
நாராயணம்தீர்த்தபதம்பதீந்திரம்
சம்சாரரோகார்ணவவடவாக்னிம்

சரஸ்வதி நமஸ்க்ருத்ய கவிதா நந்ததாயினி
விஷ்ணும் நமாமி சததம் பஜேகம் ப்ரீதி பூர்வகம்.

திருவணக்கம்.

கண்ணுயிர்க் கண்மணியே காரண குருமணியே
என்னுயிர்க் கிருமணியே யிருமணி திருமணியே
விம்மணிக் குணமணியே விமலபரி பூரணியே
பொன்னடிக் கமலமூலம் பூசனைசெய்வாய் நெஞ்சே.

கண்ணுயிர்க் கருணைசாக்ஷி காரணகுருவே சாக்ஷி
மண்ணுயிர் மானசாக்ஷி மானசகமல சாக்ஷி
வெண்மதி போதசாக்ஷி வேதவேதாந்த சாக்ஷி
சின்மய சர்வசாக்ஷி சிற்சதானந்த சாக்ஷி.

கண்ணேயென் குணமணியே காரண குருமணியே
அண்ணேயென் றிருமணியே அகிலகுண கணமணியே
விண்ணேயென் துரைமணியே விண்ணுக்கந் தரமணியே
சின்மய சிவமணியே சிந்திதம் சிந்தாமணியே.

ஓம்

ஸ்ரீ சற்குருவே நம:

மோக்ஷத்துக்கேதுவாகிய இந்த மானிட சரீரமானது ஜனன மரணத்துக்குக் காரணமாகிய சம்சாரப் பிரவாகத்தினால் அசிதியான நதியிற் சேர்ந்தலைகளுடன் கூடிய கர்ப்பாந்தகடலை யடைந்திருகரையுங் காணாமற்றடிக்கும் ஜனங்களுக்கிந்தாபத்தாகிய கடலைத் தாண்டுவதற்குச் சுலபமா யொருவழியிருக்கிறது. அதாவது, சுகர்ம்மமான கப்பலேறி யொருகுருவையோடக் காரனாக நம்பி, விசுவாசமென்கிற பாய்மரங்கட்டிப் பகவானுடைய கிருபையாகிய அனுகூலமான காற்றின் பலத்தினாலதிவேகமா யோட்டிப்போய் மறுகரை சேர்ந்து ஞானபூமியை யடையலாம். விவேகானந்தமா யிருக்கலாம். இதிற் சந்தேகமில்லை.

இந்தப்பரத கண்டத்தில் மானிட சரீரங்கிடைப்பததிதுர்லபம். எப்படியென்றால். நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கு நூறாயிரம்யோனி பேதத்திலிந்த மானிட ஜனனமானது வட சமுத்திரத்திற் கிடக்குமொரு நுகத்தடித்துளையிற் றென் சமுத்திரத்திலிருக்கிற ஒரு சிறிய கோலானது போய்த் தானே நுழைவதெவ்வளவு கஷ்டசாத்தியமோ வவ்வளவு வருமையாயிருக்கிறது. இவ்வள வருமையான மானிட சரீரங்கிடைத்தாலுஞ் சம்சார பந்தத்திலகப்பட் டனுபவிக்குஞ் சுகமோ வதிசுவல்பம். அதிலுண்டாகுந் துக்கமோவளவில்லை ஆனாலும், மானிட சரீரங்கிடைத்தாற்றானெல்லா சுகமுமடையலாம். எப்படியென்றால், ஸ்ரீ பகவானை யசஞ்சலமான பத்தியோடு பூஜித்தாலவர் பக்த ஜனப்பிரியராதலா லபீஷ்டமான

விகலோக பரலோக போகத்தையுங் கொடுத்துத் தன்னுடைய திருவடியையுங் கொடுத்தருளுவர்.

ஸ்ரீ பகவான் கற்பக விருக்ஷமுங்காமதேனுவும் போலிருப்பதாற், றன்னை யடைந்தவர்களுக்கு வேண்டியவரங்களைக் கொடுப்பார். அவாளவாளுடைய கர்மத்துக்குத் தக்கபடி பலனைக் கொடுப்பது சத்தியம். யாதொரு பலனையுங் கோருமல் ஸ்ரீ பகவானைப் பூஜித்தால் மோக்ஷத்தை யடையலாம்.

எப்படியென்றால், இந்தவுலகத்தி லொருகாலம் க்ஷாமம் வந்து அராசகமாய்விட்ட சமையத்திற் சீவர்களின் கஷ்டதிசையைப் பார்த்து ஸ்ரீ பகவான் கருணாநிதி யாகையால், ஸ்ரீ பூமிதேவியைக் காமதேனுவாக வரச்செய்து, தேவாள், அசுராள், மனுஷியாள் முதலிய சகல ஜீவகோடிகளையு மந்தக் காமதேனு முலைவழியாய் வேண்டிய வபீஷ்டங்களைக் கறந்தெடுத்துக் கொள்ளும்படிக்குக் கிருபை செய்ததிலதுகண்டதேவர்கள், தங்களரசனுன விந்திரனைப் பிரதானமான கன்றாக்கிவிட்டு, அமிர்தமானபாலையும், அசுராள் பிரகலாதாழ்வாரைக் கன்றாக்கிவிட்டு மத்தியத்தையும் மற்றுமுள்ள மனுஷியாதிகள் தங்கள் தங்களுக்குள் பிரதானமானதைக் கன்றாக்கிவிட்டு இஷ்டமான போகவஸ்துக்களையுங் கறந்துக் கொண்டார்கள். இதுபோலவே ஸ்ரீ பகவானிடமன்புவைத்தால் நாம் கோரியதெல்லா மடையலாம். இந்திரனுகவும் பிரும்மாவாகவும் விஷ்ணுவாகவும் சிவனுகவும் வேணுமென்று நினைத்தாலு மந்தந்த ரூபத்தையும் பதத்தையு மடையலாம். மானிட சுகம் வேண்டினுலு மடையலாம். மோக்ஷ விச்சையுண்டானு லதையுமடையலாம். இதிற்சந்தேகமேயில்லை.

அதாவதெப்படி யென்றால், இந்தப் பிரபஞ்சமாகப் பட்டதெல்லாம் பகவத் சொரூபம். ஆனாலு மிந்தப் பிரபஞ்

சத்திலனேகமான விருக்ஷங்களும், பசுக்களுமாயிருக்கின்றன. இந்தவுலகமெல்லாம் விருக்ஷங்களும் பசுக்களுமாயிருந்தாற் பகவான் வேறுண்டோ வென்றால் வேறில்லை. பகவானும் பசு விருக்ஷ ரூபமாகவே காணப்படுவர். ஆனாலு முண்மையறியாமற் கேவலம் பசுப்பிராணிகளைப் போலவே ஸ்ரீ பகவானைப் பாவித்தாற் கடைசியா யப்படிப் பாவித்தவர்களுமந்த ரூபமாய் விடுவார்கள். ஸ்ரீ பகவான் பசுபதியாயிருப்பவர்.

எல்லாவற்றிலும் மகிமையுடையவர் ஸ்ரீ பகவான் இதிற்சந்தேகமில்லை. அப்படியிருக்க, ஸ்ரீ பகவானுக்கும் பசுப்பிராணிகட்கு மென்ன பேத முண்டென்கிற பக்ஷத்திற், பசுக்களைப் போலவும், விருக்ஷங்களைப் போலவும், ஸ்ரீ பகவானிருந்தாலும், இந்த உலகத்திலுள்ள அனேக விருக்ஷங்களிற் பிரதானமாகிய கற்பக விருக்ஷமாகவும், அனேகம் பசுக்களிற் பிரதானமாகிய காமதேனுவாகவுமிருப்பர். அதுபோலவே எல்லா விருக்ஷங்களும், பசுக்களும் பிரதானமாயிராமற், கற்பக விருக்ஷமும் காமதேனுவு மெப்படிப் பிரதானமோ, வப்படிபோல ஸ்ரீ பகவானெல்லா நாம ரூபங்களாயிருந்தாலு மவைகளுக்குட் பிரதான கர்த்தாவாயிருக்கிறார். பாலில்லாப் பசுவாலும், பலனில்லா விருக்ஷத்தாலும் யாதொரு சீவகாருண்யமும் பரோபகாரமுஞ்செய்ய வேதுவில்லை. ஆதலால், நிஷ்காம தர்மமே கற்பக விருக்ஷமுங் காமதேனுமாயிருக்கும். காமகர்மமே அனேக பசுப்பிராணிகளுங் காடுமரங்களுமாயிருக்கும்.

வாசுதேவனான ஸ்ரீபகவானெல்லா ஜீவகோடிகளுடைய சுவரூபமாயிருந்தாலு, மவ்வவற்றிற் பிரதானமாகிய மகிமையுடையவராகவிருக்கிறார். ஸ்ரீ பகவானுக்கோ ஜனன மரண துக்கமில்லை. மற்ற ஜீவர்களுக்கோவென்றாற், கெற்பவா

சத்திற்கட்டுப்படுதல், ஜலம் பூரித்தல், உதராக்கினி சுடுதல், பிரசூதவாயு நெட்டித்தள்ளுதல், யோனித்துவார நெருக்குண்டல், முதலிய துன்பங்களும் மரணகாலத்திலுண்டாகும் பலவிதமான துன்ப துக்கங்களையுமனுபவிப்பதாயிருக்கிறது. இந்தப்படியே ஜீவர்களனேக கால மடிக்கடி பலவிதங்களான துன்பங்களையுந் துக்கங்களையு மனுபவிப்பதாயிருக்கிறது. ஆகையால், ஸ்ரீ பகவானுக்கும் பசுக்களுக்கு மனேக பேதமிருக்கிறது. துக்க நிவர்த்தியும், ராகத்துவேஷாதிவர்ச்சியமுமில்லாம லெல்லாம் பகவானுக சஞ்சல சித்தங்கொண்டு நினைத்தாலனுபவத்துக்கு ஸ்ரீ பகவான்தானுக முடியாது; சேவிக்கவும் மார்க்கமில்லாமலாய்விடும்.

ஸ்ரீ பகவான் தன்னைச் சேவிப்பவர்களுக்குத்தானனுக்கிரகஞ் செய்வர். தன்னைச் சேவியாதவர்களுக்கனுக்கிரகஞ் செய்யார். ஆனால், ஸ்ரீ பகவான் பக்ஷபாதியோ வென்றால்? அல்ல. எப்படி யென்றால், கற்பக விருக்ஷமும், ஜலமும், அக்கினியும், தன்னையடைந்தவர்களுக்கு வறுமையையுந் தாபத்தையுஞ் சீதத்தையு மெப்படிப்போக்குமோ, அப்படிப்போல ஸ்ரீபகவானுந் தன்னையண்டினோர்க்கனுக்கிரகஞ் செய்வது சத்தியம்.

ஸ்ரீ பகவான் துஷ்ட நிக்கிரகஞ் சிட்ட பரிபாலனஞ் செய்ய வேண்டியதற்காகவே, அனேக லீலாவதாரங்கள் செய்திருப்பது. ஆனால், ஸ்ரீபகவானுக்குத் தொழிலுண்டோ வென்றால், சிருட்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகியவைந்து தொழில்களுண்டு. இவைகளுள் அனுக்கிரகந்தானெல்லா வற்றிலுஞ் சிறந்தது. பிரும்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் இவர்கள் பஞ்சகர்த்தாக்கள். இந்தப் பஞ்சமூர்த்திகளில் மேலாகியவர் சதாசிவன். ஸ்ரீ சற்குருவாய்வந்தனுக் கிரகஞ்செய்வது மிந்த

சதாசிவமூர்த்திதான். இவருக்கிருப்பிடம் சுத்தவைகுண்டம். இதுவே எல்லாவற்றிற்கும் மேலான லோகம். இவருடைய சதி மனோன்மணி. இந்த மனோன்மணியும் சதாசிவமுங் கூடித்தானனுக்கிரகம் பண்ணுவது. ஆதலால், சதாசிவமென்பது எப்போதும் நிஷ்டானுபூதியாய்த் திரிகாலத்தும் பேதமில்லாமல் ஆனந்தமாயிருப்பது ஆதலால், மகத்துக்களெல்லாம் இதை சதாசிவப் பிரும்மமென்கிற திரிநாமங்களாற்றுதிக்கின்றூர்கள். முமுட்சுக்களுக்கு மோக்ஷமடையும் பொருட்டு சொரூப ஞானம்வந்து அபரோட்ச ஞானனுபவம் வருவதற்குமுன், முக்கியமாவதென்ன வென்ருல், ஒரே விசாரமாயிருப்பதுதான் முக்கிய காரணம். மனசினுடைய விசாரமாவதொரு க்ஷணமாத்திரத்திலனேக விசாரம் வந்து போகிறதுண்டு. அவைகள் தேகவாசனை, லோகவாசனை, சாஸ்திரவாசனை இவைகளெல்லாம் விசாரமாயிருந்தாலும், ஆத்ம விசாரமொன்று மாத்திரந்தான் மோக்ஷகாரணமாகும். மற்றவை ஜனன மரணத்துக்குக் காரணமாகும்.

மனசுக்கு மோக்ஷகாரணமான ஆத்ம விசாரஞ் செய்வது மகாப்பிரயாசமாயிருக்கும். ஆனலு மாத்ம சுகத்திலாசையுள்ளவர்க்குச் சுலபமாயனுஷ்டிக்க வொருவழியிருக்கிறது. அதாவது, தனக்குப் பிரியமான வொருகுருவையடுத்துக்காத்து அவருடைய ஸ்ரீ பாதகமலத்தைத் தன்னுடைய இதய கமலத்தில் ஸ்திரமாய்வைத்துத் தியானித்துப் பூசிப்பதுதான் ஆத்ம விசாரம். அதனுல், சகுணசொரூப விக்ஞான மடைந்து தானே எல்லாமென்னும் சகுண சொரூபமாயிருந்து நிர்க்குணத்தியானஞ் செய்யலாம். பிரயாசமல்ல. இதுவே மகா விசாரமென்கிறது. சுருதிகளுக்குஞ் சாதுக்களுக்குஞ் சம்மதம். இது கூடாமல், அனேக யக்ஞம், தானம், தபசுகொண்டும் சாஸ்திர பாடங்

கொண்டு மிந்த ஆத்ம விசார முண்டாவது மகாப்பிரயாச மென்பது முன் கூறியதாத்பரியம்.

ஆத்ம விசாரத்தினுற் சொரூப மாகலாமென்பதற் கொரு சாக்ஷிபார்க்கலாம். அதாவது, ஒரு குளவியானது ஒரு புழுவைத்தூக்கித் தன் கூண்டிலடைத்து வைத்ததை யுஞ் சில நாள் சென்ற பிறகு அந்தபுழுவே குளவியாகி, வெளியிற்பறந்துபோனதையும், நாம் பார்க்கிறோம். இது வெகு ஆச்சரியமல்லவா! அந்தப்புழுவானது குளவியையே ஸ்திரமாக நினைத்திருந்ததினுலல்லவா அந்தக்குளவி ரூப மதற்குவந்தது. அதுபோல, சீவனிட வம்சமான மனமு மெதை ஸ்திரமாக பாவிக்கிறதோ அந்த ரூபமாகலா மென்பதனுபவம்.

ஆத்மாவானது அகண்டசச்சிதானந்த வஸ்துவாயும், ஆதிமத்தியாந்தமில்லாததாயும், பரிபூரணமாயும், சர்வவியா பகமாயும், அவேத்தியமாயும், மகாவாக்கியங்களின் லெக்ஷி யார்த்தானுபவமாயு மிருப்பதாக சுருதிகளும் மகத்துக்களுஞ் சொல்லுகிறார்கள். இப்படிக்கிருந்தாலு மிது அனுபவத் துக்குவரும் பொருட்டு முதலாவ தொருகர்மம் வேண்டியது. அதாவது, குரு, சுருதி, யுக்தி, அனுபவம் எப்படி யென் ருல்? ஞானமாவது முக்கிய பலம். இந்தப் பல முண்டாவ தற்கொரு விருக்ஷம் வேணுமென்பதவசியம். விருக்ஷமில்லா விட்டாற் பல மில்லை. பலத்துக்கு முக்கிய காரணம் விருக்ஷம். ஆனதால், ஞானபலத்துக்கு முக்கிய காரணம் யோக விருக்ஷம். இதிற்சந்தேகம்வேண்டாம். யோக விருக்ஷ மாவது சொரூப ஞானம். இந்த யோகவிருக்ஷத்தினுலுண் டாவது ஞான பலம். இதுபோல, சொரூப ஞானியானவன் ஞானபலத்தைபடைவன். இதுவே சித்தாந்தம். இந்தயோக விருக்ஷத்தின் பலம் ஞானமாயிருக்கையால், இந்தயோக விருக்ஷத்துக்கொருவித்து வேண்டியதவசியம். வித்தினுடைய

குணமெப்படி யிருக்குமென்று லந்தப்பலம் போலவே யிருக்கும் வித்தில்லாமற் பலமும், பல மில்லாமல் வித்து முண்டாவதில்லை. ஆதலால் வித்தும், பலமும் வேறு வேருகக்காணவில்லை. ஆனாலும், இந்த வித்துக்கும், விருக்ஷத்துக்கும் பலத்துக்கும் நாமரூபங்களுண்டு. இந்த நாமரூபங்களிருந்தாலல்லவோ பிறகு நாமரூபங்களில்லை யென்று கிரகிக்ககூடும். ஆதலாலந்த யோக விருக்ஷத்துக்கு மூலவீரியமாவது பிரமந்தான். அதற்கு ரூபம் பிரணவாக்ஷரம். பிரணவமென்பது பிர்ம்மவித்து. எப்படி யென்றால், அளவில்லாம லகண்டமாயிருந்த பிர்ம்ம பலத்துக்கும், ஏகமான விருக்ஷத்துக்கும், வித்து? ஏகமாயணு மாத்திரமான பிரணவந்தான். அகண்டமாயிருந்த பலத்துக்குச் சமானம் அணுமாத்திரமான வித்து எப்படியாகு மென்றால், ஒரு பெரிய ஆலமரத்தினுடைய சிறிய விரையில், அந்த விருக்ஷ மடங்கியிருப்பதுபோல, இந்தப் பிரணவாக்ஷரத்துக்குள்ளே சகலப் பிரபஞ்ச விருக்ஷங்களு மதின்பீஜமு மடங்கியிருக்கும்.

ஓ, என்கிற அக்ஷரந்தான், வந்ததுகொண்டு அது பிரணவமாகமாட்டாது. அதனுடன் பூச்சியமுஞ் சேர்ந்தாற்ருன் அதற்குப் பிரணவமென்றும், பீஜாக்ஷரமென்றும், மூலாக்ஷரமென்றுஞ் சொல்லப்படும். இது பரம ரகசியமாயிருக்கிறது. இந்த வித்தைப் பயிர் செய்து, பலமனுபவிக்கு மதிகாரி யாரென்றால் இயம நியமாதி சாதனங்களிற் பழகினவனும், ராகத்துவேஷாதிகளை விட்டவனும், சாத்வீக குணமுள்ளவனும், சற்குருபக்தனுயு மிருப்பவனே யதிகாரி.

பிரணவ சாரமாவது, பூச்சியனுகிய சீவனும், புகழையுடைய ஈசனும், ஆகிய விரண்டுபதமும், பிரணவத்தினுடைய பதார்த்தம். எதார்த்தமொன்ருகவே யிருக்கும்.

பிரணவ சொரூபத்திலிருந்தும் பூச்சியனாகிய சிவத்துவ மெப்போது வெளியில் வந்ததோ, வப்போதே யீசுரத்துவம் வெளிக்கு வந்துவிட்டது. ஈசனே சீவன், சீவனே ஈசன் என்பது மகாவாக்கியசாரம். ஈசுவர சப்தமில்லாவிட்டால், சீவசப்தமில்லை, சீவசப்த மில்லாவிட்டா லீசுவரசப்தமும் நாஸ்தி. ஆனதாலிந்த சீவேஸ்வர சப்தமிரண்டும் வாச்சியார்த்தபேதமே தவிற, அந்தரார்த்த மொன்றேயாம். இந்தப் பிரணவம் பிருமத்துக்கு மூலமல்ல. பிரும்மமென்பது நிர்ம்மூலமாயிருப்பது; இதிற் சந்தேகமில்லை. பிரபஞ்சத்துக்கு மூலம் பிரணவமென்பதாகவே முன்கூறிய தாத்பரிய அர்த்தம். எப்படியென்றால், பிரணவமாகிய பிரபஞ்ச விருக்ஷத்திலிருந்து பிரும்மமாகிய ஞானபல முண்டாகிற படியால், பிரணவத்தைப் பிருமத்துக்கு மூலமென்று முன் கூறிய தாத்பரியம்.

பிரணவார்த்தமாவதற்கு இனியொருவுண்மை சொல்லலாம். அதாவது, சிலந்தி பூச்சிகள் தன்னுள்ளிருந்த நூல்களைக்கொண்டு வலைகட்டித் தானுமந்த வலையிலிருந்து கொண்டு வந்தபோகங்களை யனுபவித்தும் பின்பந்த நூல்களையெல்லா மொருக்ஷணிகமாத்திரத்திற் சமயங்கொண்டு அந்த நூல் வலைபைத் தன்னுக்குள்ளே கிரகித்தடக்கிக் கொண்டு தான் சொஸ்தமா யிருந்துவிட்டதுபோலேயும், ஒரு ஆலமரத்தின் ஒரு சிறிய வித்திற் பெரிய விருக்ஷம் சூட்சுமமாயடங்கியிருப்பதுபோலேயும், அந்த ஒரே ஆலமரத்திலனேக வித்துக்க ளிருப்பதுபோலேயும், ஸ்தூல சூட்சுமங்களைச் சிந்திக்கும்போது இந்தப் பிரணவத்திலிருந்தே சர்வ ஜகத்துஞ் சீவர்களு முண்டானதாகவும், அந்தப் பிரணவத்திலேயே சகலமு மடங்குவதாகவும் சுருதி யுக்தி யனுபவம். இது ஆரோபமாயு, மபவாதமாயும், நூலும் வஸ்திரமும்போலிருக்கும்.

ஆதலாற் பிரபஞ்ச மூலமாயும், பீஜாக்ஷரமுமாயிருந்த பிரணவத்தின் முளை, பிரபஞ்சமும் பிரும்மமுமா யிருக்கிறது. பிரபஞ்சத்துக்குச் சாக்ஷியாயிருந்த சீவனும், பிருமந்தான். இதுவே மகா வாக்கியானுசரணமா யிருக்கும். இதற்குச் சந்தேகம் வந்ததெப்படியென்றால், ரஜ்ஜு கண்டத்தை யிராத்திரி யிருட்டிற்கண்ட வொருவனதை சர்ப்பமாக வெண்ணிப் பயந்ததைப்போல, பேதபுத்தியால் வந்த சீவப்பிரமையே சீவ பயத்துக்குக் காரணமானதுபோல, இந்தப் பிரபஞ்ச விருக்ஷத்துக்கு வித்தான மூலாக்ஷரத்திலிருந்து, முதலாவது மூன்று முளை வரும். அதாவது, புண்ணியம், பாவம், மிசிரம் என்கிற இந்த மூன்று பலங்களை யுண்டாக்குகிறது. அதாவது, சொர்க்கம், நரகம், மானிடபோகம். இந்த மூன்று பலங்களையும் விரும்பாமல் காம கர்மத்திலும், போகத்திலு, மாசையைவிட்டு நிஷ்காம சத்கர்மியாய்ச், சற்குருபக்தராய், ராகத்துவேஷாதியீனராய், ஏகாந்த யோகநிஷ்டராயிருப்பது மகான்கள் சுபாவம்.

அக்கியானமென்கிற ஸ்தூலாபிமானமாகிற சம்சார விருக்ஷத்தை விக்கியானமென்கிற வாளினாலறுத்து ஞானமென்கிற பெருந்தீயினாற் சுட்டு விபூதியாய்த் தரித்திருக்குமென்பதே தாத்பரியம். அக்கியானத்துக்குக் காரணம் ஆவரணம். ஆவரணத்துக்குக் காரணம் பிரபஞ்சம். பிரபஞ்சத்துக்குக் காரணம் விக்ஷேபம். விக்ஷேபத்துக்குக் காரணம் தாமசகுணம். தாமசகுணத்துக்குக் காரணம் பாபம். பாபத்துக்காரணம் கர்மம். கர்மத்துக்குக் காரணம் ராஜஸகுணம். இவைகள்தான் ஞானத்துக்கு விபரீதமாயிருப்பதாக மகத்துக்கள் வாக்கியம். இவைகளில் முன்கூறிய பாபம், ஆவரணம், விக்ஷேபம் இம்மூன்றும் நசித்தால் சீவன்முக்தனாகலாம். இதிற் சந்தேகமில்லை.

இவைகளை நாசஞ்செய்வதெப்படி யென்றால், பிராரத்துவ கர்மத்தை அநுபவித்துக்கொண்டிருந்தாலு மிதை நிவர்த்திபண்ணவேணுமென்கிற தீவிர வைராக்கியமுடையவன் சாத்வீக நிஷ்காம கர்மத்தினாற் பாபமாகிய மலம் நீக்கமாகும்.

ஞானத்துக்கு முதலாவது மலசோதனை செய்யவேண்டியதவசியம். இரண்டாவது ஆவரணமென்கிற மறைப்பானது ஸ்ரீ சற்குருவின் காருண்யமான மகாவாக்கிய வுபதேசத்தால் நீங்கும். அப்போதனதுள்ளம் சுயம்பிரகாசத்தினால் வியாளமல்ல விது கயிறுதானென்கிற சந்தேகநிவர்த்தியுமுடனே வந்துவிடும். அப்போது விக்ஷேபகாரியமான விபரீதபிராந்தி நசிக்கும். இந்தப்படி பரோக்ஷ, அபரோக்ஷ, அத்வைத, அநுபவமாகாமல் அனேகமான சாஸ்திர சாகரத்தில் முழுகியும் அடிக்கடி யுபதேசஞ்செய்துங் கற்றுக்கொண்டுமிருந்தாலும் இருதயத்தின்கண் தெளியாமலிந்த சூட்சுமதிருஷ்டி யுண்டாகிறதில்லை.

பிரணவத்துக்குள்ளடக்கம் சர்வ சராசர பூதகோடிகளும், பூதகோடிகளுக்குள்ளே பிரணவமுமடங்கியிருக்கும். இதற்குப் பிரமாணவநுபவமுண்டு. ஆனாலுமிந்தப்படி விசுவாசத்துடன் கண்டு உபாசிப்பவனே சிரேஷ்டமான சாத்வீகமுடைய பிராமணன். இவர்களே சந்நியாசியாகவும் சாதுவுமாக விருக்கலாம்.

இந்தப் பிரணவ சாரமறிவதற்குத்தான் பிரணவ சுவரமான தன்மாத்திரையிலிருந்து, ஸ்தூலபஞ்சபூதமாகவும் நாமரூபங்களான பிரபஞ்ச காரியமாகவும் சுருதி ஸ்மிருதி வேதாகம புராண இதிகாசங்களாகவும், நானுபாஷைகளாகவும், மற்றுமனேகமான திரிசிய வஸ்துக்களாகவும் முக்

குணங்கொண்டு பிரும்மாவினல் க்ஷமிக்கப்பட்டது. இவைகளுக்கெல்லாம் விலக்ஷணமாகிய சீவன் ஏகன். ஆத்மா அசடன், அசன், அமிர்தன், அகிலாதாரன், நிராதாரன், நித்திய நிர்மல சுவயஞ்சோதி யானந்தவஸ்துவாயிருந்தும் எதார்த்தந் தெரியாமல் விபரீதபிராந்தியை உண்டாக்குவது மநேக நாமரூபங்களாகத் தோற்றுவிப்பதும் மாயாகாரியம். இதுகளொன்று மாத்ம தர்மமல்ல. அப்படியிருக்க, விதுகளையெல்லா மாத்ம தர்மமாயும் சீவனுக்கு துக்கம் சுபாவீகமாக தோற்றுவிப்பது மனசினுடைய வியாபாரந்தான். சொர்ப்பனங்கண்டவன் சாக்கிரமாயெழுந்திருந்து விசாரித்தபோது சொர்ப்பனத்திற் கண்ட சுகதுக்க மனோப்பிரமையெல்லாம் மித்தையென்று தோற்றுவதுபோல, மனம் சாந்தி வந்தால் மாயாகாரியமான பிரபஞ்சமெல்லாம் மித்தையென்று அறியப்படும். சீவ சொர்ப்பனமாவது சரீரம் ராகத்துவேஷாதி தத்துவங்களாயிருக்கும். ஈசுவர சொர்ப்பனமாவது ஜகத்சராசரமுமடங்கி இருக்கும். இந்தப் பிரபஞ்சநாசத்தின்கண் பிரணவாத்மா ஏகமாய் விளங்கியிருக்கும் என்பதே முன்கூறிய தாத்பரியம்.

ஆதலாற் பிரபஞ்சகாரியமெல்லாம் பிரணவத்துக்குள் ஆரோபணஞ்செய்து அடக்கி இந்தப்பிரணவத்தை யிருதயகமலத்தில் நிறுத்தி விசாரணை செய்வதே யாத்மயோகமாகும். அதாவதெப்படியென்றல், ஆத்மாவினல் பிரணவத்தையும், பிரணவத்தினல் ஆத்மாவையும், சமரசமாயறியக்கூடும். இது கூடாமல் மற்றெந்த வுபாயங்களாலு மாத்மாவை யறியக்கூடுவதல்ல. ஆத்மாவை ஆத்மாவுக்கறியக்கூடுமென்பதே இதின் சித்தாந்தம். இந்தப்பிரணவமே, எல்லா யோகத்துக்கும், எல்லா மந்திரங்களுக்கும் மற்று எல்லாவற்றிற்கும் மூலமாயுங் காரணமாயுமிருக்கும்.

சகல பூதகோடிகளிடத்தி லாத்மாவும் ஆத்மாவுக்குள் சகல பூதகோடிகளும் அடங்கியிருப்பதினலல்லவோ வாசுதேவனென்கிற திருநாமம் சுருதியினல் ஸ்ரீ ஹரிபகவானுக்குச் சொல்லக்காரணம். சர்வாத்மாவே பரமாத்மாவென்றும் பரமாத்மாவே சர்வாத்மாவென்றும் சுருதிகள் முறையிடுகின்றன.

ஆனலும், சரீரிகளுக்குப்புண்ணிய,பாப,மிசிர,சொர்க்க, நரக, சுகதுக்காதி பெந்தமோக்ஷம் ஏற்படுவதெப்படி யென்ருல், இவைகளெல்லாவற்றிற்குங் காரணம் பிரபஞ்சம். பிரபஞ்சத்துக்கு காரணம் அவித்தை அவித்தைக்குக் காரணம் மாயை. மாயையால் கண்டதுதான் அவித்தை என்பதற்கு தாத்பரியம் இந்த மாயையைத்தான் நித்திய ஸம்சார துக்கத்துக்குக் காரணி என்றும் மித்தை என்றும் அவித்தை யென்றும் சொல்லுவதுண்டு.

அப்படியிருந்தாலும் சில மஹாத்மாக்களுடைய சம்மதம் எப்படி யென்ருல். அவித்தைக்குக் காரணம் வித்தை. அதாவது, அக்கினியில் சூடுதோற்றுவதுபோல பிர்ம சன்னிதானத்தில் தோற்றிய சத்திக்கே அபின்னசத்தி யென்றும், ஆனந்த மூலப்பிருகிருதி யென்றும், வித்தை யென்றும், நிர்மல சூக்ஷ்ம ரூபிணி யென்றும், சுத்தத் தத்வ வித்தை என்றும், மற்றும் அனேக விசேஷ நாமங்கள் சொல்லுவதுண்டு. இந்த மூலப்பிரகிருதியிலிருந்தும், முக்குணம். இதில் மஹதத்துவம், அஹங்காரம், சம்சாரம், முதலிய சமஸ்தமும் அந்தர்வாசனையில் சூக்ஷ்மமாயிருந்தும் ஸ்தூல சரீரங்கள் தோற்றியது. இதற்குப் பிரதானமாகிபது மனம். எல்லாவற்றிற்கும் மனமாயிருந்தாலும் மனசுக்குக்காரணம் ஒன்று உண்டென்பதை நன்ருய் அறியவேண்டும். அதாவது, மனசுக்குப் பெற்றதாய் சாத்வீகம். சாத்வீகத்திற்குக் காரணம் பரிசுத்தம். பரிசுத்தத்திற்குக் காரணம் பரமாத்மா.

பரமாத்மாவுக்குக் காரணமில்லை. இந்த ஸ்தூல பிரபஞ்ச காரியமான போகத்துக்கும், சூக்ஷமவித்தையினுல் வந்த பரகதிக்கும் காரணம், மனம் ஒன்றே. இந்த மனேசக்திதான் பெந்த மோக்ஷ மிரண்டிற்குங்காரணம். அதாவது, மனம் அவித்தியாவசம் சேரும்போது பெந்தமாயிருக்கும். அந்த மனமே திரும்பி வித்தியாவசம் சேரும்போது மோக்ஷ காரணமாகுமென்பதே முன் கூறிய தாத்பரியம். மனசினுடைய குணம் சாத்வீகமாயிருந்தபோதிலும் மற்ற இதர குணங்களான இராஜஸ தாமஸங்கள் இரண்டுங்கூடிவந்து வியாபாரம் செய்வதாதலால் மனசுக்குக் கலக்கக்காரணம். சாத்வீகம் தெளியாமல் போச்சுது. ஆதலால், இந்த குற்றம் யாராலே யார் பேரில் சுமத்தப்பட்டதென்று நன்ருய் விசாரித்து அறியும்போது, தன் மனமே எல்லாத்துக்குங் காரணம். ஆதலால், சுகதுக்கத்துக்கும், பெந்த மோக்ஷத்துக்கும் மனமொன்றே காரணமா யிருக்குமென்பது தாத்பரியம். ஆத்ம பிராப்திக்கு ஏதுவாய் வந்த மனம் பெந்துவாயும் கேவலம் பசு பிராணிகளைப்போல தன்னை மறந்து தேகமே நித்தியமென்றும் போகமே சத்தியமென்றும் நினைப்பவர்களுக்கு மனம் சுவாத்ம வயிரியாயும் இருக்கும். முன் கூறிய பெந்து சத்துரு. இந்த இரண்டு பாவனையும்விட்டு சமானமாயிருப்பதே மனசுக்கு சமாதானம். அதாவது எப்படியென்ருல், மனம், ஆகாசம்போலாகவும், ஆகாசமோ சர்வவியாபகமாகவும், அதாவது சர்வபிராணிகளிடத்திலும் உள்ளும்புறமும் இடைவிடாமல் எண்ணைத்தாரைபோல யிருந்தபடியால் அகண்ட சச்சிதானந்தமென்று பெரியோர்கள் சொல்லுவதுண்டு. இதுகளுக்கெல்லாம் மூலபீஜமானது பிரணவமொன்றேயாம். இதற்கு சாரம் எப்படியென்ருல் பிரணவம் இல்லாவிட்டால் ஆத்மவித்தை இல்லை. ஆத்மவித்தை யில்லாவிட்டால், மோக்ஷமும் சாக்ஷித்துவ

மும் கிடையாது. ஜீவர்களுக்கு ஜீவபாவனையிருந்தமட்டும் சரீரபாவனையும் தோற்றிக்கொண்டிருக்கும். சரீரபாவனை யிருந்தமட்டும் சீவபெந்தமுமிருக்கும். சீவபெந்த மிருந்த மட்டும் ஆத்மா சாக்ஷியாக தோற்றிக்கொண்டிருக்கும். சீவ பெந்தமில்லாவிட்டால் ஆத்மசாக்ஷி யென்பதுமில்லை. ஜீவன் வேறு, சாக்ஷி வேறு என்கிற துவிதபாவனை உள்ளமட்டும் அத்துவிதம் பலப்படாது. அதாவது ஜீவன், ஈசன், ஆத்மா, அவன், இவன், நீ, நான், என்கிற துவிதம். அத்துவித மாவதெப்படியென்றால், முன்கூறிய துவிதபாவனை யெல்லாம் மித்தை யென்றும் அவித்தை யென்றும் இதுகளெல்லாம் மூடக்கண்ணுக்கு காணப்பட்டு யிருந்தாலும் இது நித்தியமும் சத்தியமும் அல்லவென்றும், பஞ்சேந்திரியங்களுக்கும் தோன்றிய தென்றும் எதார்த்தமல்ல. ஆனாலும், துவிதத்திலிருந்துதான் அத்துவிதம் அடைய வேண்டும். துவிதிகளுக்கு அத்துவிதம் பொய்யாம். அத்துவிதிகளுக்கும் துவிதம் பொய்யாம். இந்தக்கவலைதான் ஒன்றுக்கொன்று சண்டைபிடிக்கக் காரணம். இந்தப் பொய் மெய் இரண்டுக்கும் மத்தியில் பக்ஷபேதமில்லாமல் சமமா யிருப்பவனே சன்னியாசி. ஆதலால் இந்த சந்நியாசியைக் கண்டால் துவிதம் விடலாம். துவிதம் விட்டால் அத்துவிதம் அடையலாம். எப்படி யென்றால், துவிதத்திலிருந்தே அத்துவிதம் அடையவேண்டிய தென்றும், துவிதமில்லாவிட்டால் அத்துவிதம் இல்லையென்றும், அத்துவிதம் அடைந்தால் துவிதம் வேண்டியதில்லை யென்றும், முன்கூறிய தாத்பரியம். நெருப்பிலிருந்து தோற்றிய சூடு நெருப்புள்ளவரையில் இருக்கும். நெருப்பு இல்லாவிட்டால் சூடும் இல்லை அதுபோல, பிர்மசத்தி யில்லாவிட்டால் பிர்மசத்தமும் இல்லை. பிர்ம சுபாவமே சத்தி. பிர்மம் சூரியனைப்போலவும், சத்தி பிரகாசம்போலவும், தோற்றுவது சுபாவீகம். ஆன

லும், நிவர்த்தி பிரவர்த்திகளுக்கு போகம் மோக்ஷம் இரண்டையும் கொடுப்பது இந்த ஒரே சத்திதான். எப்படியென்ருல் சம்சாரியினுடைய அனுபவமாவது விறகுகட்டையிலிருந்து நெருப்புப்பிடித்து எரியும்போது உண்டான புகை போலே முடிவில் நாசமாய்ப் போய்விடும். அதெப்படியென்ருல், பிர்மத்திலிருந்தும் தோற்றுவதான ஸ்தூல பிரபஞ்சமும் பிர்மலோகபரியந்தமுள்ள, விஷய சுகபோகங்களும் எல்லாம் நாசமாய் புகைபோலே கடைசியில் இல்லாமல் போய்விடும். பக்திக்குக்காரணம் சாத்வீகம். சாத்வீகமானது மனசுக்குக் காரணமாகுமென்று முன் கூறியிருக்கிறது. அப்படிக்கிருந்தாலும், மற்ற விபரீதமான குணம் இரண்டும் கூடிக்கலந்ததற்கு முக்கிய காரணம் கர்மம். இந்த கர்மம் திரிவிதமாய் வந்தது எப்படி யென்ருல், திரிவிதகரணங்களினுலும் புண்ணியம், பாவம், சாமான்யம். அதாவது, உத்தமம், மத்திமம், அதமம் என்றும் சொல்லலாம். இது மூன்றுக்கும் ஒவ்வொன்றிலே மும்மூன்றுவிதமாக நவவிதமாக யிருக்கும். இவைகளிற் புண்ணியத்திற் புண்ணிய மிகுதியானுல் சாத்வீகமாயும், புண்ணியத்தில் மத்திமம் மிகுதியானுல் ராஜஸமாயும், புண்ணியத்திற் பாபமிகுதியானுல் தாமஸமாயுமிருக்கும். புண்ணியத்திற் புண்ணியமடைந்தவர் சாத்வீககுண பக்தராயும், புண்ணியத்தில் மிசிரமடைந்தவர் ராஜஸகுணபக்தராயும், புண்ணியத்திற் பாபமடைந்தவர் தாமஸகுண பக்தராயு மிருப்பார்கள்.

இதில், சாத்வீகம் தீப லெக்ஷணமாயும், ராஜஸம் தீபத்தின் சுவாலை லெக்ஷணமாயும், தாமசம் தீபத்தின் திரிச்சுடர் லெக்ஷணமாயுமிருக்கும். இந்த மூன்று குணமும் சூரியனும், பிரகாசமும், மறைப்பும் போலிருக்கும். இதற்குமேல்

பரிசுத்தமான சாத்வீகம் நிவாததீபம்போலிருக்கும். இதில் முன் கூறிய மூன்றுவித குணமுடைய பத்தர்களுக்கும் இருதயக்கிரந்தியுண்டாகும். பரிசுத்தமான பத்தி அசைவற்றதாயிருக்கும். பரிசுத்த மில்லாவிட்டால் ஞானக்கினி பலக்குறைவா யிருக்கும். ஞானக்கினி பலமில்லாவிட்டால் கர்ம வாசனையும் பாபமும் நசிக்காது. அதெப்படி யென்றால், மூடபாவம் விட்டுமேலேறினாலும் சுவானுபவம் வராமலிருந்த மட்டும் இருதயக்கிரந்தி யென்பது தாத்பரியம். அதுவெப்படி நசிக்குமென்றால், ஸ்ரீசற்குரு நிச்சயமான சுத்த சாத்வீக ஏகாந்த பக்தியுடையவனுக்கு சகல சந்தேகங்களும் ஞானக்கினியால் தகிக்கப்படும். இதிற் சந்தேகமில்லை.

இவைகளில் சுத்த சாத்வீகமுடைய பத்தனுக்கு எல்லாம் பரமாத்மாவாகவும், சாத்வீகமுடைய பத்தனுக்கு ஆத்மா சர்வ அந்தரியாமியாகவும், ராஜஸமுடைய பத்தனுக்கு ஆத்மா சமீபமாயும், தாமச குணமுடைய பத்தனுக்கு ஆத்மா வெகு தூரமாயுந் தோற்றுவதாயிருக்கும். சுத்த சாத்வீகன் பூசிப்பதெப்படி யென்றால், அகம் பிரும்மாஸ்மி என்கிற விசுவாசத்துடன் சதா நிஷ்டானுபூதியாயிருப்பது. சாத்வீகன் பூசிப்பதெப்படியென்றால் சுத்த நிர்மல இருதய கமலமான புஷ்ப பீடத்தில் ஸ்ரீ குரு பாதமிரண்டையும் சேர்த்து வைத்து ஆனந்தமாயும் அமிர்தமாயுமிருக்கிற சுரவாகினியாகிற கெங்காசலங்கொண்டும், பஞ்சலங்காரங்களைக்கொண்டும், பஞ்சரச பஞ்சகவ்ய பஞ்சாமிர்தங்களைக்கொண்டும், பஞ்சாக்ஷராதி சுருதி, கீர்த்தனம், தியானம், இதுகளைக் கொண்டும், அனேக சுகந்த பரிமள சாத்வீக புஷ்பங்களைக் கொண்டும், தூபதீபாதி நைவேத்தியங்களைக்கொண்டும், பூஜிக்கப்படுவதென்றும், இன்னமும் இந்திரியங்களையும் ஸ்தூல பஞ்சபூதங்களையும் சூட்சும தன்மாத்திரையிலடக்கி,

சூட்சும தன்மாத்திரையை அகங்காரத்திலடக்கி, அகங்காரத்தை மகதத்துவத்திலடக்கி, மகதத்துவத்தை இருதயத்திலும், இருதயத்தை மகாகாசத்திலும், மகாகாசத்தை மூலப்பிரகிருதியிலும், மூலப்பிரகிருதியைப் பரமாத்மாவிலும், பரமாத்மாவை அநுபவத்திலும் அநுபவத்தை ஆனந்தத்திலும், ஆனந்தத்தை நிர்விகல்பத்திலும், அடக்கிப் பூஜிக்கப்படுவதென்றம், இதுவே மகா பூஜையென்றும், இதற்காகவே பஞ்சவறிவிற்பட்ட மானிட சரீரம் எடுத்ததென்றும், கடவுளைப் பூஜிக்கவேண்டியதற்காகவே சகல அவயவங்களையும் கடவுளால் நமக்கெல்லாம் கொடுக்கப்பட்டதென்றும், இது செய்யாவிட்டால் ஒரு சுகமுமகப்படமாட்டாதென்றும், சுருதிகளிலும் மகத்துக்களும் சொல்லப்படுவதுண்டு. இந்த அநுபவம் வரவேண்டியதற்குத்தான் சரியை கிரியையாதி மார்க்கங்களும் நிஷ்காம நியமானுஷ்டானங்களும் ஏற்படுத்தி யிருக்கிறது.

இனி ராஜஸகுண பத்தன் பூஜிப்பதெப்படியென்றால், சாதுக்களிலும் பிரதிமாதிகளிலும் பூஜிக்கப்படும்.

தாமசகுண பத்தன் பூஜிப்பதெப்படியென்றால், மிருத்சிலைத்தாருபிரிதிமாதிகளிலும், ஸ்ரீ பகவானிருக்கும் என்கிற விசுவாசமாக நம்பி, அனேகம் காடு, மலை, மரங்களிலேறி கஷ்டமடைந்து புஷ்பங்களை சம்பாதித்தும் பூஜிக்கப்படும்.

இந்தப்படி உத்தமம், மத்திமம், அதமம், குணாதீதம் என்ற இந்தநால்வகை பத்தரிலும் குணாதீதம், நிர்மலம். சாத்வீகம், தெளிவு. இராஜஸம், சஞ்சலம். தாமஸம், மறைப்பு. இது சாத்வீக குணத்தின்பேதம் மூன்றாக பிரித்துச் சொன்னதல்லாமல் ராஜஸ தாமஸ இரண்டு குண காரியங்களும் இவர்களுக்குச் சம்பந்தப்பட்டதல்ல. மேற் சொல்லிய மூன்றுவித குண பக்தர்களும் முமூட்சுக்கள்தான். ஆனு

லும், அனுபவத்துக்கு வெகு பேதமுள்ளதாயிருக்கும். இது சாத்வீக குணபத்திலெக்ஷணம். இனி ராஜஸ தாமசங்களி லும் ஒவ்வொன்றிலும் மேற்சொல்லியபடி மும்மூன்று விதங்களாக விருக்கும். இதில் ராஜஸ குணத்தின் பிரிவாவது வைதீகம், சம்மிசரம், நிஷேதம், இப்படி மூன்றுவித பூஜையிலடங்கியிருக்கும். இதில் வைதீகம், சுவர்க்கபதம், சம்மிசிரம், பூலோக சுகம். நிஷேதம், பசுவாதிகள். இப்படி மூன்றுவிதமாயிருக்கும். இனி தாமஸமாவது ஸ்தாவர வஸ்துக்களாம். இந்தப்படி பேதமாய் வருவதற்குக் காரணமென்னவென்றால். பொன்மணி பல மாற்றுள்ளவைகளனேகம் ஒரு பையிற் சேர்த்துக்கட்டி சூட்சுமமாய் வைத்தது போல, ஜீவாத்மாக்களெல்லாம் பிரளய காலத்தில் வெகுவாசனையோடுங்கூடி மூலமான பையிற் சேர்ந்து லயத்தை யடைந்து இருந்ததாதலால், ஜகத் சிருஷ்டி காலத்தில் வாசனைக்குத் தகுந்தபடி மாயையிலிருந்தும் தாமஸ குண காரியமான ஜகத் சராசரங்களையும் ராஜஸ குணகாரிய ஜீவர்களையும், சரீராதிகளையு முண்டாக்கப்பட்டது.

எப்படியென்றால், அந்த தாமஸ குணமே மூன்றுவிதமான விக்ஷேபம், ஆவரணம், மலம் ஆக மூன்று ரூபமுண்டு. அதாவது எப்படியென்றால், விக்ஷேப காரியம் பிரபஞ்சம், ஆவரணம், மறைப்பு. மலம், பாபம். இந்த மூன்றுமில்லாதவனே முத்தனும். இவைகளை எப்படி விடுவதென்றால், முதலாவது வேண்டியது, மலசோதனை. அதாவது, பாப நிவர்த்தி பண்ணுவது. பாப நிவர்த்தியோ எப்படியென்றால், நிஷ்காம தர்மத்தினுலும் சாத்வீக வுபாசனத்தினுலும், பாபம் நிவர்த்தியாகும். பாப நிவர்த்தியானுல் ராகத்துவேஷாதி மலமற்று, அந்தக்கரணம் பரிசுத்தமானுல் உடனே யொரு குருநிதி கிடைக்கும். குருநிதி கருணுகடாக்ஷத்தினுல் ஆவரணமென்கிற மறைப்பு நீங்கும். அப்போது தனதுள்ளம்

சுவயம் பிரகாசத்தினுல் விக்ஷேபமென்கிற விபரீதப் பிராந்தி நசிக்கும். இந்தப்படி ஞானனுபவம் வந்த மகாத்துமாக்களும் மறுபடியும் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் செய்வது முண்டு. அப்படி செய்வதெதற்காகவென்ருல், முன் நீங்கிய ஆவரணம் திரும்பிவராமலிருப்பதற்கும் ஆத்ம விடையமாதலாலும் செய்யவேண்டியதாவசியந்தான்.

இந்த சராசரப் பிராணிகளுக்கும் உற்பத்திக்குக் காரணம் கர்மம். கர்மத்துக்குக் காரணம் ஜன்மம். இந்த ஜன்மகர்மங்களெதுபரியந்தமிருக்குமென்ருல், அகங்காரமிருந்தமட்டு மிருக்கும். இந்த அகங்காரத்துக்கும் ஸ்தூல பிரபஞ்சத்துக்குங்காரணம் பிரணவம். இந்தப் பிரணவத்திலிருந்தும் ஆரோபிக்கப்பட்ட பிரபஞ்சமெல்லாம் இந்தப் பிரணவத்துக்குள்ளே அபவாதஞ் செய்தடக்கித் தியானிக்கும்போது, ஏகமாயும் நிர்மலமாயுமிருக்கும். அதாவதற்கு ஒரு குருநிதிவேண்டுவது ஆவசியந்தான். ஸ்ரீ சற்குருவுபதேசமில்லாமலும், அனுக்கிரகமில்லாமலும், கியானம், விக்ஞானம், இரண்டும் வரமாட்டாது. குருவித்தையினுல் ஞானப் பிரகாசத்தை யெல்லோர்க்கும் பார்க்கலாம். ஸ்ரீ குரு வித்தையானதுதான் பிர்மவித்தை என்கிறதற்குத் தாத்பரியம். குருவில்லாவிட்டால் பிர்மவித்தையொருவருக்குங் கிடையாது. ஏனென்ருல், திரிமூர்த்திகளாலுஞ் செபிக்கக்கூடாததாயும், முக்குணத்துக்கதீதமாயும், அதிசூட்சுமமாயும், ஒரு சத்தியுண்டு. அதுதான் இந்த ஜகத்தையுமெல்லாவற்றையுமுண்டுபண்ணிவைத்தது. இந்த சத்தியினுடைய அவதாரமானது மிகவரிது. தசாவதாராதி காரியங்களாயும், மகத்துக்களாயும், சில காலத்தில் அவதரிப்பது மிந்த சத்திதான்.

இந்த சத்திக்கே எல்லாவற்றிற்கும் வல்லபையென்றும், குருவென்றும், மனேன்மணியென்றும், நித்திய சத்திய

வித்தியாரூபிணி யென்றும், பிரணவாத்மீகை யென்றும், விசுவசாக்ஷியென்றும், விபுவென்றும், சூட்சுமரூபிணியென்றும், பராபரையென்றும், பரப்பிரும்ம சுவரூபிணியென்றும், மற்றுமனேக விசேஷ நாமங்கள் சொல்வதுண்டு. அப்படியிருந்தபோதிலும், அந்த சத்தி தானேவந்து அவதாரமெடுத்தும், கடைத்தேறும்பொருட்டு ஸ்ரீ ஒரு குருவை நம்பி, யாராலுங்கடக்கக்கூடாத ஈனமாயையைத்தாண்டிக் கைவல்யபதமடைந்தார். இது சுருதி சம்மதமாயிருக்கிறது. ஆதலால் எல்லோருக்கும் மோக்ஷமடையும்பொருட்டு சற்குரு வேண்டியதவசியந்தான். இந்த சத்திதானே சுயேச்சையாய் வந்து அவதாரஞ் செய்த ஸ்ரீ கிருஷ்ண பிரானுக்கும் மாயாஜயத்துக்கு ஒரு குரு வேண்டுவது ஆவசியமாகக் கண்டு சாந்தீபினி மகாரிஷியை குருவாக்கி, இறந்துபோன குரு புத்திரனை வரவழைத்துக் குருதக்ஷிணையாகக்கொண்டு வந்து கொடுத்து, குருவனுக்கிரகம் பெற்றுக்கொண்டார். ஆதலால், குருவனுக்கிரகமே எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் மேலானது. இதனுல் எல்லா போகமும் மோக்ஷமுமடையலாம். குருவில்லாவிட்டால் அனேக யக்ஞம், தானம், தவம், மற்ற இயம நியமாதி சாதனங்களாலும், கர்ம சந்நியாச யோகங்களினுலும், ஆத்மானுபூதியாக மாட்டாது.

இதற்குப் பிரமாணம் சாக்ஷியுண்டு. குருவனுக்கிரகம் எல்லாவற்றிற்கும் வேண்டுவது ஆவசியந்தான். குருவனுக்கிரகமில்லாவிட்டால் ஒன்றுக்கும் ஒரு பயனுமாகமாட்டாது. அதற்கு உவமை எப்படியென்றுல், ஒரு தீவாந்தரம் போகவேண்டியதற் கொரு கப்பல் ஓட்டுவதற்கு ஒரு ஓடக்காரன் வேண்டியது ஆவசியம். அந்த ஓடக்காரன் முயற்சியாயில்லாவிட்டால் அந்த கப்பலில் பல சகாயிகளேறியிருந்தாலும், பாய்மரம் நன்றுய்க் கட்டியிருந்தாலும், காற்றும்

நன்ருய் வசமாயிருந்தாலும், தான் நினைத்தவிடம் போய்ச் சேருவது கஷ்டம். வேருெரு தீவாந்திரத்துக்குப் போனுலும் போகும்; அல்லது தன்னூருக்கே திரும்பி வந்தாலும் வரும். இது நிலையல்ல. பகவானுக்கும் குரு வேணுமாவென்ருல், பகவானுக்கும் குருவேண்டுவது ஆவசியந்தான். ஆனதால், இந்த சமுசாரத்தில்பட்ட ஜனங்களுக்கும் குரு வேண்டியது ஆவசியந்தான். ஜகதீஸ்வரனை ஸ்ரீ பகவானுக்கும் ஒரு குருவிருக்கிறதா? குருவை ஆசரிக்கவேணுமா? வென்கிற சந்தேக மிருக்கும்பக்ஷத்தில் மாயாப் பிறப்பை யறுக்க குரு வேண்டுவது ஆவசியந்தான். ஆதலால், ஸ்ரீ பகவானும் மாயையிலவதரித்துப் பிரவர்த்தியிலிருந்து ஒரு குருவை நம்பி நிவர்த்தியாகும் பொருட்டு, மார்க்கத்தை காண்பித்து உலகிடம் பரிபாலிப்பது பகவானிட தர்மம். பெரியவாளில் முன்னேர்கள் நடந்த மார்க்கம் ஆசரித்து நடப்பதே எல்லோருக்கும் க்ஷேமம். இந்த மார்க்கம் காட்டுவதற்குத்தான் பகவான் அவதாரம் எடுப்பதும், குருபரம்பரையைக் காட்டி வைப்பதும். பகவானும் பெரியோர்களும் இதை ஆசரியாமற் போனுல் லோகமெல்லா மிது கண்டு ஆதரியாமல் அனுதராய் வந்துவிடும். ஆதலால் லோகரை நரகத்துக்காளாகும்படி பகவான் கட்டளையிட்டதாக வந்துவிடும். அப்படி வராமலிருக்கவேண்டியதற்கு லோகரக்ஷகனுகிய ஸ்ரீ பகவான் கருணுநிதி லீலாவதாரமாக வந்து மாயாமானிடரைப்போலேயிருந்தும், லோகத்தில் அதர்மத்தை நீக்கித் தர்மரக்ஷை செய்வதற்காக லீலாவதாரமெடுத்து, லோகரக்ஷை செய்வதற்கு சாதுக்களை குருவாக்கிக்கொண்டா ரென்பது தாத்பரியம். ஸ்ரீ பகவானுக்குக் குருவாகுமோ? சாதுக்கள் என்கிற பக்ஷத்தில் சாதுக்களே பகவான். பகவானே சாதுக்கள். இதற்குச் சந்தேகம் வேண்டாம். ஏனென்ருல், சகலப் பிராணிகளிடத்திலும் பகவானிருந்த போதிலும், சாதுக்

களிடம் பகவானில்லையென்கிற தெப்படிச் சொல்லக்கூடும்? ஆதலால், சாதுக்களில் பகவான் விசேஷணமாய் விளங்கி யிருக்கு மென்பது முன் கூறிய தாத்பரியம். இந்தப்படி பகவானுக்குக் குரு சாதுக்களும், சாதுக்களுக்கு குரு பகவானும். இதுதான் குருபரம்பரை.

ஸ்ரீ சற்குரு வுபதேசமாவ தெப்படி யென்றால், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் கீதையில் கூறியதாவது, நிஷ்காம தத்துவ சத்பக்தி யில்லாதவர்களுக்கும் வைராக்கியம், மோக்ஷயிச்சை, இவைகளில்லாதவர்களுக்கும், இயம நியமாதி சாதனங்க ளில்லாதவர்களுக்கும், உபதேசம் செய்யக்கூடாதென்கிறதே தாத்பரியம். என்னில், கிருபாநிதிகளா யிருந்தவர்களிடம் நானும் கிருபாநிதியாயிருந்து அனுக்கிரகம் பண்ணுவது என்றும், என்னுடைய சத்தியங்கே யிருக்குமென்கிறதும், பகவான் முன் கூறியதற்கு தாத்பரியம். நானிருக்குமிடம தேடிக் காணமல் என்னைத் தேடி யனேகமிடம் அலைந்தாலும் என்னைக் காணமாட்டாது.

வீட்டுக்குள்ளேயிருந்த பொருளை மறந்து காட்டுக்குள்ளே போய்த் தேடினுற் காணுமா? காணமாட்டாது. வீட்டுக்குள்ளேயிருந்த பொருளை நினையாவிட்டாலு மகப்படுமா? அகப்படமாட்டாது. அதுபோல, தன்னிட இருதயத்திலிருந்த பரமாத்மாவை மறந்து, காடு, மலை, குளம், கோவில், மற்று மனேக ஸ்தலங்களிலும், வைகுண்டம், கைலாயம் முதலிய ஸ்தலங்களிலும், அநேக கோடி கல்ப காலம் தேடித் தேடி நடந்தாலும், ஸ்ரீ குருவான என்னை யாருங் காணமாட்டாது. இந்தப் பிரபஞ்சமெல்லாம் ஆக்கி யழிப்பதும், போகம் மோக்ஷமெல்லாங் கொடுப்பதும் நான் தான். என்னைத் தவிற இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவரும் ஒரு வஸ்துவுங் கிடையாது. ஆதலால், நான் ஆனந்தமாயிருக்கு

மிடம் பாராமல் நான் வேறே, சாதுக்கள் வேறே, என்பதாக நினைந்துகொண்டு,சேவிப்பவர்க்கும், நான்மோக்ஷங்கொடுக்க மாட்டேன். என்னை மதியாமலும் சேவிக்காமலு மிருந்தாலும், சாதுக்களை நானாகப் பாவித்து அன்புற்று சேவிப்பவனுக்கு நானே அநுக்கிரகம் பண்ணுவேன். சந்தேகமில்லை. இது சத்தியவாக்கியம். ஆதலால், கடைத்தேறுவதற்குஆசையிருந்தவர்களுக் கெல்லாம் ஒரு குரு வேண்டுமென்பது ஆவசியமென்பதே முன்கூறிய தாத்பரியம். இனியும். சந்தேகமிருந்தால், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்கு குரு, சாந்தீபினி மகரிஷியும், ஸ்ரீ ராமமூர்த்திக்கு குரு, வசிஷ்டபகவானும், ஸ்ரீ பரசுராமமூர்த்திக்கு குரு ஸ்ரீ பரமசிவனும், பரமசிவனுக்குக் குரு அனந்தமூர்த்தியும், இந்தப்படி குரு பரம்பரை இருந்ததுண்டு. ஆதலால், ஈசுவரனானாலும் முன்கூறிய மாயாஜயத்துக்கு குருபக்தி விசுவாசமில்லாமல் வேறொரு உபாயமுமில்லை. சம்சாரக் கடலைத்தாண்டுவதே மாயாஜயம் என்கிற தாத்பரியம். மாயாஜயத்துக்கு இந்திரியங்களை ஜயிப்பது என்கிறது அர்த்தம். சம்சார கர்த்தா யாரென்றால் மனம். மனசுக்கு சம்சாரம் ஆசை. மனசுக்கு ஆசையாவதெதுவென்றால் விஷயபோகம். போகம் எதற்கு வேண்டியதென்றால், இந்திரியங்களுக்குத்தான். இதுகளுக்கெல்லாம் காரணம் மனசு. மனசினுடைய ஆசாபாசபந்தத்தினால் மோசம் வந்துவிட்டது. ஆதலால் மனசுக்கு ஆசையிருந்தமட்டும், நிராசை வராது. அந்த நிராசை வரவேண்டியதற்குத்தான் நிஷ்காமமும் குரு உபாசனையும் வேண்டியது முக்கியம். தன்னுடைய சரீரத்தில் பிரியமிருந்தமட்டும், போகத்தில் இச்சை வரும். போகத்திலிச்சையிருந்தமட்டும், ஆத்மாவில் பிரியம் வராது.

எவ்வளவு சரீராதிகளிற் சினேகம் விடுவதோ அவ்வளவும் ஆதம சினேகமுண்டாம். ஆதலால், சரீரமே சம்சாரத்

துக்கு மூலம். சரீரத்திலாசை விடுவதே சம்சார நிவர்த்தி. சரீர ஸ்நேகமெப்படி விடலாமென்றால், போகத்திலிச்சையுள்ளவனுக்குத் தன்சரீராதிகளிலும் பத்தினியிலும்எவ்வளவு பிரியமிருந்ததோ, அவ்வளவு பிரியத்தையும் குருவினிடத்தில் வைத்து ஆத்மாவில் பிரியமும், சிநேகமும் வந்து விட்டால், துராசை நசிக்கும். துராசையெல்லாம் நசித்தால், பரமானந்தத்திலாசையுண்டாகும்; மனசினுடைய ஆசாபாசமும் நிவர்த்தியாகும். அனுபவத்துக்கு மகத்துக்கள் காட்டிய வழி இதுதான். சந்தேகம்வேண்டாம். வேதவாக்கியங்களும் மகத்துக்களும் பொய்சொன்னதாக நினைந்து, இதை தள்ளிவிட்டவனுக்கு எந்த காலத்திலும் ஒரு பிரயோசனமுமாகமாட்டாது. இதுகளெல்லாம் வேதாந்த சித்தாந்தங்களுடைய முக்கிய தாத்பரியமென்று உத்தம ரிஷிகளாலும் மற்றுமுள்ளவர்களாலும் துதிக்கப்படுவதென்றும், சத்தியமே ஞானமென்றும், ஞானமே தபசென்றும், தபசே மௌனமென்றும், மௌனமே சுருதி தர்மமென்றும், தர்மமே திதிக்ஷையென்றும், திதிக்ஷையே ஆனந்தமென்றும், ஆனந்தமாவதே நிச்சயமென்றும், நிச்சயமானதே தைரியமென்றும், அதுவே மேலான சுகமென்றும், சுகத்துக்குச் சுகசாதனங்கள் வேண்டுவதே ஆவசியமென்பதாக மேல் கூறியதுக்கெல்லாம் உண்மையான சாரம். அனேக சாஸ்திரங்களைப் பார்த்து முகபாடஞ்செய்து பண்டிதராக விருந்தாலும், மொத்தத்தில் சுருக்கமான சாரம் வசமாகாமல் போனால் நல்ல சந்தனக்கட்டையைச் சுமந்த கழுதையைப்போலேயும், நிதிகாத்திருந்த சர்ப்பத்தைப்போலேயும், மலட்டு பசுவுக்கு தீனிபோட்டதுபோலேயும், ஒரு பலமுமாகமாட்டாது. அநேக சாஸ்திரங் கற்றுக்கொள்ளலாம். அதற்குக் குற்றமில்லை. எல்லா சாஸ்திரங்களிலும் சுருக்கமான தாத்பரியங்களறிய வேண்டியது ஆவசியம். சாஸ்திரம் தெரியாமல்

போனால், விசேஷமான பக்தியிருந்தாலும் சஞ்சல மிருக்க லாம். ஞானமும் பக்தியுமிருந்தால் சஞ்சலம்வராது என்ப தற்குச் சந்தேகமில்லை.

ஆதலால், அனேக சாஸ்திரங்கள் பார்த்தபோதிலும், அவைகளின் சாரங்களை சங்கிரகமாக்கி அறிந்து அனுபவிப்ப தற்குப் பரம ரகசியத்தையொரு மந்திரமாக உள்ளடக்கி, ஊமையைப்போலிருப்பதுதான் சாஸ்திரங்களுக்கெல்லாம் சாரமான சுருக்கம். ஏனென்றால், அநேக சாஸ்திரங்களைப் பார்த்தபோதிலும், மனம் ஓரே நிலையிலிராமற்போனால் ஆத்துமத்தியானஞ் செய்யக்கூடுவதல்ல. அதாவது, மனோ வியாபாரமிருந்தமட்டும், அது பல வழியோடிக்கொண்டே யிருக்கும். அதெப்படியென்றால், காட்டில் வசிக்கும் ஜந் துக்களை நாட்டில் கொண்டுவந்து ஒரு கூட்டிலடைத்து வைத்தால் அது காடுபோய்ச்சேரும்படி விசாரமிருந்தது போலே மனம் நிலையில்லாமல் வந்துவிடும். மனசுத்தியில்லா விட்டால் உபாசனைப் பலப்படாது. உபாசனை சுத்தியில்லா மல் போனால் சுருதி நிலைப்படாதென்றும், சுருதி நிலைப்படா விட்டால் குரு விசுவாசம் நிலைப்படாதென்றும், குரு விசு வாசமில்லாவிட்டால், ஞானமும் வராதென்பதே முன்கூறிய தாத்பரியம்.

ஆதலால், ஆத்மானுபவத்தில் ஆசையுள்ள சிஷ்யனுக்கு குருவுபதேசம் என்னவென்றால். அதை வெளியாய்ச் சொல் லக் கூடாது. காதிலுபதேசம் பரமரகசியம். அது மற்றவர்க ளுக்கு காதில் பட்டால், குருவனுக்கிரகமில்லாமலும், பல னில்லாமலும் போய்விடும். உபதேச காலத்தோடு குரு சந்நிதியிற் செய்யவேண்டிய கட்டளையெப்படியென்றால், நிஷ்காம தர்மமும் வைராக்கியமு முடையவனாய் முமூட்சு வாயிருப்பனென்று தாத்பரியம்.

முமுட்சுவாகப்பட்டவன் உடல், பொருள் ஆவி மூன்றும் சற்குருவுக்கு அடிமையாக மனச்சங்கல் பத்தினல் சமர்ப்பணமாக்கியிருப்பவனுக்கு குரு சொன்ன கட்டளை எதுவோ அதுகளெல்லாமுபதேசமாம். குரு வாக்கியமெல்லாம் மகா வாக்கியம். இந்தப்படி நினைந்து, திரிவிதகரணங்களினுற் செய்யப்பட்ட கர்மங்களெல்லாம் மகத்பதத்தின்கண் அர்ப்பணமாக்கிச் செய்வதுதான் பிர்ம்மார்ப்பணமென்றும், பிர்ம்மபூஜையென்றும், மகத்துக்களும் சொல்லுவதுண்டு. இதற்கு நிராசையானது முக்கியமாய் வேண்டும்.

ஆசை நிவர்த்திக்கு நிராசையான தர்மம். தர்மமாவதெப்படியென்ருல், ஆசையின்மீதே தர்மபுத்தியிருந்தால், துராசை நிவர்த்திக்கலாம். ஆசையாவது, உடல், பொருள், ஆவி மூன்றே. தர்மமாவதெல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாக்குவதுதான். அந்த தர்மத்தினுல் சத்துருக்களை ஜயிக்கலாம். ஆசை நிவர்த்தி பண்ணலாம். மனசையுஞ் செயிக்கலாம். வாசனுக்ஷயமும் தத்துவ போதமும் வரும். ஆனதால், தர்மமே ஜெயம். அதர்மம் ஜயிக்கமாட்டாது. தர்மமுள்ளவனிடத்தில் அதர்மம் கிட்டவுங்கூடவாது. தர்மங்கொண்டுதான் அதர்மத்தை ஜெயிக்கவேண்டும் அதர்மம் நசித்தால் அதுவே தர்மம். இன்னமும் தர்மமாவதெப்படி யென்ருல், தர்ம சாஸ்திரங்கள், இதிகாச புராணங்கள் இவைகளைப் பார்த்து தர்மாதர்மங்களைத்தெரிந்து, சுதர்மம் பண்ணுவதும். தர்மந்தான். சர்வ கர்மங்களையும் விட்டு குருவை யெடுத்துக் காத்து சேவிப்பது இதிலும் மேலான தர்மம். தர்மமென்பதற்கு அர்த்தம் எல்லாம் தர்மமாயிருக்கவேண்டும். தர்மமே ஜெயமென்றும், தர்மமே ஜீவகாருண்யமென்றும், தர்மமே பொருளென்றும், தர்மமே சத்தியமென்றும், தர்மமே பக்தியென்றும், தர்மமே பரகதியென்றும், தர்மமே

குருவென்றும், தர்மமே குரு கிருபை யென்றும், தர்மமே சத்கீர்த்தி யென்றும், தர்மமே பெந்துவென்றும், தர்மமே பரமாத்மாவென்றும், தர்மமே தான மென்றும் அர்த்தமாகும். தர்மமுள்ளவர்களிடத்தில் எல்லா ஐஸ்வர்யங்களும், நற்குணங்களும், லெக்ஷுமி கடாக்ஷமுமிருக்கும். ஆனதால் எல்லாவற்றிலும் சிறந்தது தர்மம். இன்னமும் தர்மமாவது எப்படி யென்றால், எல்லாவற்றிலுஞ் சிறந்ததே சுதர்மம். சுதர்மமாவது, அவாளவாள் வர்ணாசிரமத்துக்குத் தகுந்த சுதர்மங்களைப் பண்ணவேண்டியதும், அப்படி சுதர்மங்களைப் பண்ணினால் போகம், மோக்ஷம், இது இரண்டில், எது வேண்டுமோ அதை அடையலாம். இதுவே அநுபோகமாகு மென்பதாக ஸ்ரீ பகவத் கீதையிலும் மற்றுமனேக சாஸ்திரங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால், காமகர்மத்தை விட்டு நிஷ்காமகர்மம் பண்ணவேண்டியதென்றும், சுகர்மமே பரகெதியென்றும், சுகர்ம புண்ணிய விசேஷத்தால் குரு சந்நிதி தெரிசனமாகுமென்றும், சாஸ்திரங்களும், மகாத்துமாக்களும் சொல்லப்பட்டிருப்பதுண்டு. இதற்குச் சந்தேகம் வேண்டாம். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியான பகவான் பகவத்கீதை பதினெட்டாமத்தியாயத்தில் கூறியதாவது, முதலாவது, சுகர்மத்தை யொருவரும் விடக்கூடாதென்றும், அப்படி விட்டவர்கள் புலிக்குச் சமானமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதல்லாமல், நாலாம்பதம் அடைந்திருக்கும் ஞானிகளுங்கூட சுகர்மம் பண்ணவேண்டியதென்றும், ஞானிகளுக்கும் எக்ஞம், தானம், தவம், இவைகளை விடாமலிருக்கவேண்டியதென்றும், இதுவே ஞானிகளுக்கும் சுகர்மமாகுமென்றும், ஸ்ரீ பகவான் கூறியதற்குத் தாத்பரியம். இந்தப்படி ஞானிகளுக்கும் சுகர்மம்வேண்டுவது அவசியமாயிருந்தபோது

காமிகளுக்கும், நிஷ்காமிகளுக்கும் சுகர்மம்வேண்டுவது அத்தியாவசியந்தான். சுகர்மத்தினால்ஊர்த்தகதியுண்டாகும்.

ஞானிகளுக்குச் சுகர்மம் முன் கூறிய தாத்பரிய மென்னவென்றால், எக்ஞம், தானம், தவம். இதில் எக்ஞமாவது பிர்ம எக்ஞம். அதாவது பிரும்மானுசந்தானம். தானமென்பதற்கர்த்தம் உடல், பொருள், ஆவி மூன்றும் மனசங்கல்பமாக ஸ்ரீகுரு பகவானுக்கு அர்ப்பணம் பண்ணுவதுதான். இதுவுமல்லாமல், இம்சையில்லாமலிருப்பதும் பரம தர்மமாம். தபசுக்கு அர்த்தம் நிஷ்காம தர்மம் நிராசையாயிருப்பதுதான். இது ஞானிகளுக்குடைத்தாகிய சுதர்மம். வர்ணாசிரமிகளுக்கு சுகர்மமாவதெப்படி யென்றால், வர்ணாசிரமத்துக்குத் தகுந்தபடி அதிகாரம்போலக் கர்மம் பண்ண வேண்டியது.பிதுர்க்கள்,தேவர்கள்,ஆசிரியர்கள்,மகத்துக்கள் இவர்களை யெல்லாம் பூஜிப்பதும், பஞ்சயக்ஞங்களை நிஷ்காமமாய் செய்வதும், சுகர்மம். ஒருவர் செய்யுங்கர்மத்தைப் பார்த்து அதிகாரமில்லாமல் அதையே வேறொருவருக்குச் செய்யக்கூடாது. செய்தாலது நிஷேதமாம். அவாளவாளுக்குப் பகவான் கட்டளையிட்டபடி வருணாசிரமத்துக்குத் தகுந்தபடி செய்வதுதான் விதி. விதி நிஷேதம் விட்டு, துராகார துஷ்கிருத அகர்மம், விகர்மங்களைப் பண்ணுவதானால், நரக பலமாம். இதற்குச்சந்தேகம் வேண்டாம். வருணாசிரம தர்மமான சுகிர்த்தியத்தினாலும், சுகிர்திகளாய் வந்து பரம பதத்தையடையலாம். அதாவதற்கு முதலாவது சரியை, கிரியை, யோகம். இதுகள் ஞான சாதனங்கள் உள்ளவையெல்லாவற்றிலும் முக்கியமாயிருக்கு மென்றும், இதுகளினால் முறைப்படி படிப்படியா யேறி நாலாம் பதமடைந்த சீவன்முத்தர்களுக்கு விதிநிஷேதங்கள் தள்ளிவிட்டவாதலால், அவர்களுக்குக் கீழ்ப்படி இறங்கியுமேறவேண்டிய தவசியமில்லை. அவர்களெந்த கர்மம் பண்ணினாலும், எது செய்தாலும், செய்தவர்களல்ல. அபிமானாதி அந்தக்கரண

வுபாதியற்ற பரமாத்மாவுக்குச் சித்தேதது? ஜடமேது? ஜகத் பிர்ம கர்மமேது? ஜனனமேது? மரணமேது? சுகமேது? துக்கமேது? களங்கமற்ற ஆகாசம்போல ஆத்மரூபமாயிருப்பது தான்.

இந்த முறைப்படியேறிப்போய் வழிபார்த்து உபாசனை செய்யாமல், லோகத்திலொருவருக்கும் முத்தியடையக்கூடுவதல்ல. இதல்லாமல், ஞான சாஸ்திரங்களனேகம் பார்த்து வாயினுற்பேசி, ஜீவன்முக்தனுவதற்கு வழிபாராமலும், உபாசனை செய்யாமலும், யோக முறை குரு பக்தியில்லாமலும், தர்க்கம் பேசிக் காலக்ஷேபஞ் செய்தவர்களுக்கு ஞானத்தின் சுகந்தமானுலும் வரமாட்டாது. எந்தெந்தப்படி யேறினுலும், அந்தந்தப் படியிலிருந்தும் சுகர்மம் பண்ணுவதானுல் முறைப்படியேறி நாலாம்பத மடையலாம். இதைவிட்டு, முதல்படி யேருமல் நாலாம் படிக்கு கால் வைத்தால், தலை கீழாய் தோற்றுவது போலிருக்கிறது. ஆதலாற் கர்ம யோகத்தை நிஷ்காமமாயும் சங்கிரகமாக்கி உபாசனு யோகத்தை அனுஷ்டானம் பண்ணிக்கொண்டிருந்தால் ஞான யோகத்தை யடையலாம். ஆதலால், ஞானம், பக்தி, கர்மம், இந்தப்படி மூன்று யோகமுண்டு. இந்த மூன்று யோகங்களும் புருஷார்த்த சாதனங்களாம். இதுகளில் ஞானத்துக்குக் கர்ம காண்டம் வெகுதூரம். ஞான காண்டத்திற்கும் கர்ம காண்டத்திற்கும், மத்தியிலுள்ளது உபாசனுகாண்டம். ஆதலால், போகத்தையுங் கர்மத்தையும் விட்டு, உபாசனு காண்டத்திலிருந்து, ஞான மடையும் பொருட்டு, இந்த மூன்று யோகத்தையும் வேதமாதா விதிக்கப்பட்டது. எப்படியென்றுல், காமிகளுக்குக் கர்ம காண்டமும், காம கர்மத்தை விட்டு நிஷ்காம கர்மத்தினுல் கொஞ்சமான மனசுத்தி வந்தவனுக்கு உபாசனு காண்டமும், அந்தக்கரண மற்ற

ஆத்மயோகிகளுக்கு ஞான காண்டமும் அதிகாரமாகு மென்பதே முன் கூறிய தாத்பரியம். உபாசனா யோகி யினுடைய லெக்ஷண மெப்படி யென்றால், உபாசனா யோகங் கள் அனேகவிதமிருந்தாலும், ஒரு சற்குருவையடுத்து சேவி ப்பதும், உபாசிப்பதும, எல்லாவற்றிலுஞ் சிறந்தது. இந்த உபாசனை கொண்டு சுவரூப ஞானமடைந்து ஆத்ம ஞானத் தையுமடையலாம். ஆனாலும், சொரூப ஞானமும், ஆத்ம ஞானமுமிரண்டல்ல. சகளம் நிஷ்கள மிரண்டுமொன்றாகவே யிருக்கும். சகளமே நிஷ்களம். நிஷ்களமே சகளம். இதிரண் டும் வெண்ணெயும் நெய்யும் போலிருக்கும். குருவென்கிற வாக்கியத்திற்கர்த்தம், குருவானது சத்து. சத்தானது குரு. அதாவது, சத்தா மாத்திரமாய், எங்கும் பரிபூரணமாய், ஆன ந்தமாயிருக்கும் வஸ்து நிர்ணய மாக்குவதே குரு. இந்த அநுபவம் வந்தவர்களுக்கு எல்லாம் சமானமாயிருக்கும்.

எப்படி யென்றால், அனாத்துமாக்களுக்கெல்லாம் குரு வாயும், தூரஸ்தமாயும், ஆன்மாக்களுக்கெல்லாம், சமானமா யும், சமீபமாயும், ஆத்மா, அனாத்மா இரண்டுக்கும் மத்தியஸ் தியாயுமிருந்த சக்தியை உபாசனை கொண்டு, அசத்பாவனை தள்ளி, சற்பாவனை கொண்டு அசத்தும், சத்தும், சதசத்தும் இல்லாமல் அளவற்ற ஆனந்தமாயிருக்கலாமென்பதே முன் கூறிய தாத்பரியம். ஆத்மானுபவம் வந்துவிட்டால், ஆனந்த ரூபிணியாயிருந்தவித்தியா சத்தியும், ஆத்மாவு மொன்றாயிரு க்கும். ஆத்மாவிலிருந்து உண்டான ஆனந்தமும் ஆத்மாவும், வேறு வேறல்ல. ஆத்மாவின் சுபாவமே ஆனந்தம். இந்தப் படி அநுபவம் வந்தவர்களுக்கு ஆத்மாவும், அறிவும், ஆனந் தமும் ஒன்றாகவேயிருக்கும். ஆதலால், அனாத்துமாவோடு சேர்ந்து விஷயபோகங்களை யனுபவிப்பதும், சகதுக்கங்களை யூட்டுவதும், இதில் வைராக்கிய முடையவர்களுக்கு ஆத்மா

வோடு சேர்ந்து ஆனந்தத்தை யூட்டுவதும், இந்த சக்திதான். ஆதலால், நித்திய பெந்தத்துக்கும், நித்தியமுத்திக்கும் வித்தையும், அவித்தையும் இரண்டு நாமமுமொரே சத்தியாம். இந்தசக்தியை உபாசிக்காமல் போக மோக்ஷமிரண்டுங்கிடையாது. இந்த சத்தி அனாத்மாவோடு சேராமற்போனல், விஷய போகங்களும், சேட்டிப்புமில்லை. ஆத்மாவோடு சேராமற் போனல், ஆனந்தமுமில்லை. ஆதலால், பெந்தமோக்ஷமிரண்டையும் ஊட்டுவதற்குவித்தையும்மலினியுமாயிருந்தது இந்த ஓரேசத்தியாம். அபிமானிகளுக்கு இரண்டாகத்தோற்றுவது அக்ஞான காரணம். இது இரண்டுக்கும் காரணமாயிருந்த தற்குப்பிரதானமாயிருந்தது மனமொன்றேயாம் அதாவது, விடயங்களை சிந்திக்கும்போது அனாத்மாவிற்சேர்ந்திருக்கும். மோக்ஷத்தை சிந்திக்கும்போது ஆத்மாவிற்சேர்ந்திருக்கும், மாயா விமோசனமானல், மனமே பரமாத்மா. மனம் பரமாத்மாவாகும்போது, மனமென்பதும் அவித்தையென்பது மில்லை. குருவென்பதும் வித்தையென்பதுமில்லை. இதுகளெல்லாம் குருவருள் மகா வாக்கியம்பெற்று மனேயை பரியந்தம் இருக்குமென்பதே முன் கூறிய தாத்பரியம். இந்தப் பரம ரகசியமானது அனுபவங்கொண்டல்லாமல் வாக்கினற் சொல்லிக்காட்டுவதற்கு ஒருவராலும் முடியாது. பரமாத்மா வுடைய நிலையாவது, இங்கும், அங்கும், எங்கும்பரன், பரிபூரணன், பரமானந்தன், இந்தப்படி சுருதிகள் முறையிடுவதுண்டு. இதனுடைய உண்மையான அர்த்தம் குருவருள் மகா வாக்கியத்திலடங்கியிருக்கும். அது கூடாமல் வாசாரம்பணத்தினல் அனுபவிக்கக்கூடியதல்ல. பக்குவம்வந்த ஒரு சிஷ்யனுக்கு அனுபூதிமானகிய வொரு குரு மகாவாக்கிய வுபதேச மெப்படியென்றால், இங்கும், அங்கும், எங்கும் என்கிற பதம் மூன்றுக்கும் அர்த்தம் மூன்றுண்டு. அனுபவ மொன்றயிருக்கும். பதம் மூன்றவது. தத், துவம், அசி.

இம்மூன்றும் தத் பதம், துவம் பதம், அசி பதம். இங்குமென்கிற வாக்கியத்துக்கு அர்த்தம் குருவே தத் பதமென்றும், அங்கும் என்கிற வாக்கியத்துக்கு அர்த்தம் சிஷ்யனே துவம்பதமென்றும், எங்கும் என்கிற வாக்கியத்துக்கு அர்த்தம் அசி பதம் ஐக்கியம். அதாவது, குருவும், சிஷ்யனும் கூடிச்சேர்வதாம். எப்படி யென்றால், குருவாக்கியம் குருவான யென்னிடத்திலும் சிஷ்யனை உன்னிடத்திலும் சராசரப்பிராணிகளிடத்திலும் உள்ளும் புறம்பும் பரிபூரணமாய் அபேதமாய் விளங்குவதென்றும் அர்த்தம். ஆதலால், பரோக்ஷஞானம் வாராதவனுக்கு அபரோக்ஷமான இந்த மகா வாக்கியத்துக்கு அதிகாரமேயில்லை.

ஆசாரியரைச் சேவிக்காமலும், இயம நியமாதி சாதனங்களிற் பழகாமலும், இருந்தவர்களுக்கு சத்து, சித்து, ஆனந்தமாயிருக்கும் முத்திபத மடைவதற்கு வேறேயொரு மார்க்கமுமில்லை. நிஷ்காம அனுஷ்டானமும் சித்த சுத்தியும் வந்தவர்களுக்கு சற்குரு லாபம் தானேவரும் சற்குரு லாபம் வந்தவர்களுக்கு மோக்ஷத்துக்கு அதிகாரமுண்டு. இதுகூடாமல் தீர்த்தாடனுதி, தவம், தானம், வேதாத்தியயனம், க்ஷேத்திரோபவாசம், சன்னியாசம், இயம நியமாதி சாதனங்களினுலும், மற்றுமனேக கர்மங்களில் எத்தனவானுயிருந்தாலும் சத்து சித் தானந்தமாம் முத்தி சித்திக்கமாட்டாது. இதுகளெல்லாம் முத்தி லெக்ஷியமாகு மென்பது மனுே பிரமந்தான். குரு பத்தியில்லாமல்போனுல் சாங்கிய யோகாதிகளினுலும் மற்றுமனேக பிரயத்தனங்கள் செய்திருந்தாலும் ஞானம் வராதென்பது சுருதி சம்மதம். கொஞ்சமாக மனச்சுத்தி வந்தவர்களுக்கு அந்தக்கரண சுத்திவருவதற்கு இனியொரு மார்க்கமுண்டு. அதாவது, மனமானது சத்தியத்திலும், புத்தியானது தர்மத்திலும், சித்தமானது

குருபத்தியிலும், அகங்காரமானது ஜீவகாருண்யத்திலும், தபசிலும், சிவனை பரமாத்விலும் சேரும்படி உபாசிப்பவனுக்கு அந்தக்கரணம் நிர்மல பரிசுத்தமாகும். நிர்மல மென்பதர்க்கர்த்தம் சாத்விகம். சாத்விக பக்திகொண்டு ராஜஸதாமஸங்களைப் போக்கடித்து, ஆத்ம பதமடையலாம். சந்தேகம் வேண்டாம். இதுதான் பரோக்ஷ அபரோக்ஷ ஞான சங்கிரகம். இந்த நிச்சயமான ஏகாந்த பத்தியும், விசுவாசமும் வருவதற்குமுன் இளம் பத்தியாயிருந்தபோது, ஒரு அபீஷ்டமான மூர்த்தியையுபாசிக்கவேண்டியது அவசியந்தான். அதாவது, கணபதி, விஷ்ணு, சிவன், மாயை, சூரியன் ஆகவைந்து. இது தவிற, இன்னுமனேக மூர்த்திபேதங்களிருந்தாலும், அவைகளெல்லாம் இந்த பஞ்ச மூர்த்திகளுடைய அம்சங்களாகவே யிருக்கும். இந்த பஞ்ச மூர்த்திகளில் ஒரு மூர்த்தியானாலும் அவாளவாளுக்கு இஷ்டமுள்ள மூர்த்தியை பக்திமுற்றுங்கால பரியந்தம் உபாசிக்கவேண்டியது. இந்தப்படி சேவித்துக்கொண்டிருந்தால் சற்குணமும், குருபக்தியுமுண்டாகும். குருகடாக்ஷத்தினலாத்மாவையறியும்போது, இந்த ஐந்து மூர்த்திகளும் தத்துவங்களாயிருக்கும்.

உத்தமம் தத்துவபோதம், மத்திமம் வேதபாடம், அதமம் சாஸ்திர பாடம். இதுவே பெரியவாளுடைய சம்மதம். ஆதலால், குரு முகமே முகம். அதுவே முடி. குருபதமே பதம். அதுதான் அடி. இதுவே ஆண்டவனுடைய அடிமுடி. இந்த அடிமுடியை மாலும் அயனும் தேடிக்காணார்கள் என்கிற தாத்பரியம். சூட்சுமத்திலாதியந்தமில்லாத அகண்ட சச்சிதானந்தமாகிய சிவபிரானுக்கு அடி முடியில்லை யென்பதே நிச்சயம். இந்தஸ்தூலத்துக்குத்தான் அடிமுடியுண்டென்பது. இந்த ஸ்தூல பிரபஞ்சமானது பிர்ம்மாவினல் சிருஷ்டிக்கப்பட்டது. இந்த ஸ்தூலத்திக்கும் பிர்மாவுக்குங்

காரணம், சூட்சுமம். சூட்சுமத்துக்கு ஒரு காரணமுமில்லை. அனேகமான சுருதி ஸ்மிருதி வேதாகம புராண இதிகாசங்கள் இதுகளையும் இந்தப் பிரபஞ்சமெல்லாவற்றையுமுண்டு பண்ணிவைத்த பிர்மாவுக்கு நானே சிருஷ்டிகர்த்தா, நானே எல்லாவற்றையும் உண்டு பண்ணினவன் என்கிற ராஜஸாபிமானகெர்வத்தினால் குரூர பாவனைகொண்டு சூக்ஷும ரூபியாயிருந்த ஸ்ரீ பரமேஸ்வரனுடைய திருமுடியைத் தேடி காணாமல் கண்டதாக லோகரக்ஷகராகிய ஸ்ரீமன் நாராயணருடைய முன்பாக நான்போய் சிவன் முடி பார்த்துக்கொண்டு வந்தேன் என்பதாக பொய் வார்த்தை சொல்லியதாதலால் அந்தத்தலையைப் பரமசிவனறுத்தாரென்றும் சாஸ்திரங்களிற் சொல்வதுண்டு. இது எதார்த்தமென்பது நிச்சயம். ஏனென்றால், குருவித்தையும் ஞானனுபவம் வாராமல் அநேக சாஸ்திரங்களைப் பார்த்தும், அனுபவிகளைப் போலே நான் பிர்மத்தைக்கண்டேன் என்கிற பொய் வார்த்தை சொல்லி திரிவோர்களுக்கு என்னகதி வரப்போகிறதோ!

எல்லாம் பகவானைக்கண்டு சேவிப்பவனுக்கு சுவரூபந்தானேயடையும். சுவரூபமடைந்தால், சுவயம்பிரகாசமடையலாம். சுவரூபமடையும் பொருட்டு, ஒரு குரு வேண்டுவது ஆவசியம். சுவரூபமாவதெப்படியென்றால், தானும், குருவும், பகவானு, மீரேழுலகங்களும் ஒன்றாய் தோற்றுவதுதான் சுவரூபம். எல்லாந்தானாய் ஏக சுவரூபமாய் இருப்பதுதான் சகுணம். இந்த சகுணந்தான் நிர்க்குணமாகும். சகுணம், நிர்க்குணம் இரண்டில்லை யென்பதே நிர்ணயம். அதாவதெப்படியென்றால் சகுணத்திலிருந்து நிர்க்குணத்தியானஞ் செய்யும்போது, தான் யாராகுமென்பது நன்றாய் விசாரிக்கும்போது, தன்னைத் தவிர வேறொரு வஸ்துவுங் காணப்படவில்லை. இது உண்மையா யிருக்கும்போது தனக்

கன்னிபமாக பரோக்ஷமும், அபரோக்ஷமும் கிடையாது. ஆதலால், சகுணம், நிர்க்குணம் இரண்டும் ஒன்றேயா மென்பது தாத்பரியம்.

சகுணத்துக்குள் நிர்க்குணமும் நிர்க்குணத்துக்குள் சகுணமும் பார்த்து சேவிப்பவனுக்கு ஒரு பேதமுமில்லை. இரண்டும் நிர்க்குணமாம். எப்படியென்றால், ஆத்மாகுணா தீதமென்கிற வாக்கியத்துக்கு யுக்தியாவது, அந்த குணம் ஆத்மாதான். இதற்கு சந்தேகம் வேண்டாம். பாலும் நெய்யும் போலேயிருக்கும். சகுண நிர்குணத்தை பாலி லிருந்து வெண்ணையைபெடுத்து உருக்கும் போது அதுவும் நெய்யாகும். சூட்சுமயுக்தியினாலும், அநுபவத்தினாலும், சுவரூபம் தானே நசிக்கும். சுவரூபம் நசிப்பதற்கு வேறே பிரயத்தினம் செய்யவேண்டியதில்லை. சுவரூபமடையும் பொருட்டுப் பிரயத்தினம் செய்யவேண்டியதே அவசியம். ஆத்மசுகமாவது அதீதம். அதாவது, யாராலும் சொல்ல முடியாது. அதீதானந்த மென்பதற்கு அர்த்தம் ஆத்ம சுகம். ஆத்மசுகமாவது, பிர்மானந்தம். பிர்மானந்தமாவது, அளவற்றது. அளவற்றதே பரமசுகம். இதுதான் பாவனைக்கு அதீதமாயிருக்கும். பரமானந்தானுபவம் பாவனாதீத மாயிருக்கும், பரமாத்மாவை பாவனை கொண்டு தானறியவேண்டும். இந்தப் பதினாலுலோகமும் பாவனை தான். ஜனனமரணதுக்கங்களும் பாவனைதான். இகபர சுகதுக்கங்களும் பாவனைதான். புண்ணிய பாபமிசிரங்களும் பாவனைதான். பாவனை கொண்டு பரகதியு மடையலாம். காமிகளானபேர்கள் கர்மக்கடலில் வீழ்ந்து ஆசையான அலையிற்சிக்கி அகங்காராதி மகாமச்சியாதிகளுக்கு இரை யாகத் தீருமென்பது தாத்பரியம்.

பிர்மவித்துக்களெல்லாம் பிர்மபலமாகும். பிர்மபல மென்பது சத்து, சித்து, ஆனந்தமாம். ஞானமென்பதற்கு

அர்த்தம் தன்னைத் தானறிவது. தன்னை தானறிபவன் ஆருவான். அவன் ஈசன். அவனுக்கு ஜனிமிருதி சம்சார பந்ததுக்கம் கிடையாது.

அனேக வேதாந்த சாஸ்திரங்கள் பார்த்தும் தன்னைத் தானறியாதவன் மூடக்கியானிதான். சாஸ்திரங்களிற் சொன்ன அனுபவமெல்லாம் தனக்கோ அல்லது தனக்குப் பிரியமான குருவுக்கோ இருந்தாலது தனக்கு அனுபவமாகும். தனக்கும் குருவுக்கும் அனுபவமில்லாமற்போனல் சாஸ்திரக்ஞானம் வெகு கிலேசம். புத்தி சலனத்துக்குக் காரணம். குருவினுடைய அனுபவத்தை யெப்படி தெரிந்து கொள்ளலாமென்றல் குருவிடத்தில் நிராசையான பக்தியினுலும் பிர்மசரிய விருத நியமாதி குணங்களினுலும் சிரத்தா பக்தி விஸ்வாசத்தினுலும் சாத்வீகத்தினுலும் சதா சம்சர்க்கத்தினுலும் தெரிந்துகொள்ளலாம். அதாவது, சிஷியனுக்கு சாத்துவீககுணம் எவ்வளவு மிகுதி வருகிறதோ அவ்வளவும் குருவிஸ்வாசம் வரும். இதற்கு எத்தனை காலமானுலுமாகட்டும்; கிலேசம் வேண்டாம். அனுவபம் தானே வரும். அதாவதெப்படி யென்றல், பயிர்செய்து பலனையனுபவிக்கவேண்டியவனுக்கு கழனியுழுது காலத்தில் பயிர் போடவேண்டியது. கழனியும் நன்றயுழவேண்டியது. வித்தும் நல்லதா யிருக்கவேண்டியது. அதினதின் காலாகாலம் பார்த்துப் பயிர் போட்டுப் பரிபாலனஞ் செய்து காத்துக் கொண்டிருந்தவனுக்கு அதனுடைய பலன் தானே கிடைக்கும். இதுபோல ஞானத்துக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் உண்மையாக விருந்தால் ஞானமடையலாம்; சந்தேகம் வேண்டாம்.

இதற்கு கர்மயோகமாகட்டும் உபாசனுயோகமாகட்டும் ஞானயோகமாகட்டும் இது மூன்றுங்கூடி யாகட்டும்

எந்தப்படிக்கானாலும் அதிகாரக்கிரமம்போலே உபாசிப்பவனுக்குப் பக்தியுமுண்டாகும், முத்தியுந் தானே வரும். ஆத்மயோகமாவதே எல்லா யோகத்திலுஞ் சிறந்தது. ஆத்மயோகமே எல்லா யோகத்துக்கும் சபாபதி. ஆத்மயோகமாவது ஆத்மாக்களுடைய சமூகம் ஏகமாயுபாசிப்பதுதான். ஆத்மாவையும் அனாத்மாவையும் அறியும் வஸ்து ஆத்மா ஒன்றேயாம். அனாத்மாவினால் ஆத்மாவை யறியக்கூடுவதல்ல. ஆத்ம, அனாத்மா விவேகம் வந்தவர்களுக்கு இரண்டில்லை.

ஆத்மாவும் பிரபஞ்சமும் ஒன்றேயாம். இரண்டில்லாதவனுக்கு சம்சாரதுக்கமில்லை. பரமாத்மாவைவிட்டுப் பிரிந்தது ஜீவாத்மா. ஜீவத்துவம் விட்டால் அது பரமாத்மா. சீவபாவனை சடம், துக்கம், பயம். சீவத்துவம் விட்டால் அது துக்க நிவர்த்தி. சுகம். அபயம். பரமாத்துமாவில் ஐக்கியம். ஆனந்தப்பிராப்தி. ஜீவத்துவம்வந்த காரணமெப்படி யென்றால், இதை யொருவருக்குஞ் சொல்லிமுடியாது. ஆனாலுஞ் சாஸ்திரங்களும் மகத்துக்களும் சொல்வதெப்படி யென்றால், ஜீவத்துவ காரணம் மாயை; அதற்கு அதிஷ்டானம் மனம். இந்த ஜகத்துக்கும் தேகேந்திரியாதி பூதங்களுக்கும் மனமே பிரதானம். இந்த மனமானது அவித்தியகாரணமென்றும், மாயையென்றும், அதினுடைய குணபாவ விசேஷங்களை நன்றாயறிந்துகொள்ளாமல் சில வேதாந்த சாஸ்திரிகள் அநேக சாஸ்திரங்களிலுள்ள சாரம் பிரசங்கம் பண்ணியும், இதுவே பரமரகசியமென்பதாக உபதேசம் பண்ணிவைத்தும், முடிவில் ஒன்றுமில்லை யென்பதாகத் தீர்மானிப்பதுண்டு. மனோரூபத்தை நன்றாய் அறியவேண்டும். வேதாந்த சாஸ்திரங்களெல்லாம் எப்போதும் பரிசுத்தமாய்த்தானிருப்பது. ஆதலால், மனம்

பரிசுத்தமானால் அது வேதாந்தமாகும். இந்த மனசுக்கு மூலகாரணம் மாயை. இந்த மாயாகாரியமான பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் மனசுக்கு உண்மையாகத் தோன்றிக் கொண்டிருந்தாலும் மனசுக்கு அதீதமான பொருள் ஒன்றிருப்பதாயறியும்போது இதுகளெல்லாம் மாயையென்றும் மித்தையென்றும் நிர்மானிக்கப்படும். மனோலயம் வந்தால் மாயையறும். மனோலயம் வருவதற்குக் காரணம் சத்திய தர்மாதிகளும் பக்திவிசுவாசமும் கொண்டுவரும். மனோலயம் வந்தால் அகங்காரம் நசிக்கும். அகங்காரமான நாம் ஒரு பாண்டம். இந்த பாண்டத்துக்குக் காரணமானது மண். மண்ணில்லாமற் போனால் நாமரூபங்களான குடமேது. மண்ணைக் குடமாக்கிச்செய்வது குசவனுடைய வியாபாரம். இதற்கு காரணமெப்படி யென்றால், பாண்டமென்பதற்கு அர்த்தம் நான்தான் அபிமானி ஜீவனென்றும், குசவன் தொழிலாவது மனோவியாபாரமென்றும், மண்ணென்பதற்கு உதாரணம் பரமாத்மாவென்றும் முன்கூறிய தாத்பரியம். மண்ணைப் பாண்டமாக்கிச் செய்வது மனோ வியாபாரமாம். மனோவியாபாரம் விட்டால் பாண்டமுங் கிடையாது. பாண்டத்துக்குக் காரணம் பரமாத்மா. காரிய காரண மிரண்டும் ஒன்றாயறிவது சத்தியம். காரணமான மண்ணில்லாவிட்டால் காரியமான பாண்டமுமில்லை. ஆதலால், பாண்டமிருந்தமட்டும் காரணம் மண்ணாகவும் பாண்டமுடைந்துவிட்டால் அதுவே மண்ணாயுமிருக்கும். இந்த யுக்தி அனுபவம் வருவதற்கு மகத்சேவைதான் முக்கிய மென்பதாக முன் சொல்லப்பட்டிருப்பதுண்டு. ஆனாலும் ஸ்ரீ நாரதபகவான் கூறியதாவது, அடுத்த பூர்வ ஜென்மத்தில் நான் ஒரு தேவதாசியுடைய புத்திரனாகப் பிறந்தேன். அந்த ஜன்மத்தில் மகாத்மாக்களைப் பூஜித்த பலத்தினால் இந்த ஜன்மம் பிர்மபுத்திரனாய் நாரதனாய்ப் பிறந்

தேன். இது அதி அற்புதம் மகத் தெரிசனத்தால் வந்ததென்றும் இப்போது நான் ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கினேனென்றும் கூறியிருப்பது. ஆதலால், மகத் தெரிசன சுகம் அளவற்றதென்று முன்கூறிய தாத்பரியம். இந்தப் படி அனுபவிக்க வேண்டியதல்லாமல் வேறுவிதமா யனுபவிக்கக் கூடுவதல்ல. அதாவதெப்படி யென்றால், ஒருவனுடைய அனுபவம் மற்றொருவனுக்குக் கற்றுக் கொடுத்தாலும் அப்பியாசங்கொண்டல்லாமல் அனுபவம் வரமாட்டாது. அனுபவங்கொண்டு தானறியக்கூடும். கரும்புக்கும் வெல்லத்துக்கும் நாமரூபங்களுண்டு. அதின் மதுரத்துக்கு நாமரூபமில்லை, அது சாப்பிட்டுப் பார்த்தவனுக்கு அதின் சுபாவீகமான மதுரம் தெரியும். ஆதலால், ஒருவன் மதுரமென்று வாயினாற் பேசியதால் மற்றொருவனுக்கு அந்த மதுரமான ரசம் வராமலிருந்ததுபோலே. சீவன் முக்தியாவது இந்தப்படி யிருக்கிறது யென்பதாக ஒருவன் ஒருவனுக்குச் சொன்னாலும் அனுபவம் வரமாட்டாது. அந்தப் பிரசங்கம் விருதாவென்பதே தாத்பரியம்.

உலகத்திலுத்தமன்மார்களை யெப்போதும் சேவிக்க வேண்டும். மத்திமன்மார்களை யொருகாரியசாத்தியமாக வேண்டியதற்கு மாத்திரம் சேவிக்கவேண்டும். அதமன்மார்களை ஒருக்காலும் சேவிக்கக்கூடாது.

இதல்லாமல் வருணாசிரமத்திலிருந்தும் விதிமுறைப்படி நடக்காமல் அதை நிஷேதித்துத் தவறிக் கீழ்ப்பட்டவர்களுக்கு மறுபடி பின்னுமொரு கர்மம் விதிக்கப்பட்டதல்ல. வர்ணசங்கிரமமான நமக்கு வர்ணாசிரமிகளைப்போலே கர்மமும் ஆசாரமும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால், விகர்மம் என்கிறது தாத்பரியம். கர்மமெல்லாம் விட்டவன்

அவனுதலால் அவன் அகர்மியாயிருக்க, விகர்மதோஷங் கூடிவந்துவிடும். சுகர்மத்தை விட்ட வேறொருவருடைய கர்மம் சிரேஷ்டமாயிருந்தாலுங்கூட அதைப்பார்த்து வேறொருவரும் அதிகாரமில்லாமல் செய்யக்கூடாது. நியமப்படி இருந்து செய்துவருவது சுகர்மமாம். சுகர்மமே பாகதிக்கு மார்க்கம். அகர்மம் விகர்மம் இந்த இரண்டும் நரகமார்க்கமாம். இந்த கலிகாலத்தில் மிகுதி ஜனங்களும் வர்ண்சங்கிரகமாயிருக்கும். சங்கரவர்ணிகளுக்கு பிதுர் தேவாதி யாராதன முதலிய யாதொரு கர்மமும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், அவர்கள் கர்மத்துக்கு அதிகாரிகளல்ல. அப்படியிருக்க, அவர்கள் அகர்மிகளாதலால்; வருணுசிரமிகளைப்போலே கர்மம் செய்தால் அது விகர்மமாம். சர்வ கர்மங்களையும் முறைப்படி விட்டவனுனும், தவறி வர்ணுசிரம ஸ்தானத்திலிருந்து கீழ்பட்டவனுனும், மகத்துக்களைப் பூசிப்பதற்கும், சேவித்து கடைத்தேறுவதற்கும், எல்லோர்க்கு மதிகாரமுண்டு. வர்ணுசிரம சாரமாவது இந்த கலிகாலத்தில் பிராணிகளுக்கு வர்ணுசிரமம் முறைப்படி யேறி நாலாம்பத முத்தியடைவதற்கு மகாப்பிரயாசம். ஏனென்றால், கலிதர்மமெல்லாம் விபரீதமாம். வர்ணத்துக்குத் தகுந்தபடியுள்ள ஆசாரமும் ஆசிரமும் எள்ளளவுங் கிடையாது. தர்மமெல்லாம் காட்டுக்குப் போய்விட்டது. சாத்வீகமடியோடு போச்சுது, எல்லாம் தாமஸ குணத்தினுல் அந்தமாயிருக்கும். மகத்துவமுள்ள துஞ் சண்டாளரிடமாய் விட்டது. இந்த கலிக்கு குடியிருப்பு எவ்விடமென்றால் பொய்வார்த்தை பேசுவோனிடத்திலும், சூதாடுமிடத்திலும், மதுபானியிடத்திலும், குருத்துரோகி, மித்திரத்துரோகியிடத்திலும், காமியிடத்திலும், கொடுங் கோபியிடத்திலும், அரும்பாவியிடத்திலும், பிரபஞ்ச விஸ்வாசியிடத்திலும், விசுவாசபாதகம் செய்வோனிடத்திலும்,

விபசாரியிடத்திலும், சண்டாளனிடத்திலும், அதிலோபியினிடத்திலும், கொலையாளியிடத்திலும், நீசனிடத்திலும், திருடரிடத்திலும் மற்றும் இன்னும் அநீதியான விடங்களிலும் கலி சுகமாய் வாழுமிடம். இவைகளெல்லாம் மோக்ஷத்துக்கு விபரீதமாயிருக்கிறது. ஆனாலும், வர்ணாசிரமங்கொண்டல்லாமல் மோக்ஷமடையும் பொருட்டு மார்க்கமில்லை. இந்தப்படி இருதலைக்கொள்ளியாய் வந்துவிட்டதாதலால் மோக்ஷமடையும் பொருட்டு மகாப்பிரயாசமென்பதாகப் பெரியோர்களும், சுருதிகளும் சொல்லப்பட்டிருப்பதுண்டு. ஆனாலுஞ், சத்தியம், ஞானம், தபசு, மவுனம், சுருதிதர்மம், திதீக்ஷை, உற்சாகம், நிச்சயம், தைரியம், இவைகளெல்லா குணமும் இருப்பவர்களிடம் கலி வந்து சேரமாட்டாது. இதுவுமல்ல. இந்தக் கலிசபையைக் கடப்பதற்கும் வர்ணாசிரமங்கொண்டு மோக்ஷமடைவதற்கும் ஒரு மார்க்கமுண்டு.

அதாவது வர்ணம் 4.	ஆசிரமம் 4.	மோக்ஷசாதனம் 4.
சூத்திரன்	பிர்மசாரி	சரியை
வைசியன்	கிரகஸ்தன்	கிரியை
க்ஷத்திரியன்	வானப்பிரஸ்தன்	யோகம்
பிராமணன்	சந்நியாசி	ஞானம்

மோக்ஷம் 4	யுகமாவது 4	பாவனை 4	குணம் 4
சாலோகம்	கலியுகம்	தேகோகம்	தாமஸம்
சாமீபம்	துவாபரயுகம்	ஜீவோகம்	ராஜஸம்
சாரூபம்	திரேதாயுகம்	ஈசோகம்	சாத்வீகம்
சாயுச்சியம்	கிருதயுகம்	பிரும்மோகம்	குணாதீதம்

இந்த வர்ணாசிரமங்களுக்கெல்லாம் அதீதமாயிருந்ததே மோக்ஷம். இந்தக் கலியுகம் அந்திய யுகமாயிருந்தபோதி

னும் நமக்கெல்லாமிது ஆதியுகமாக விருக்கிறது. அப்படியிருக்க முன்கூறிய கலிசபையை கடப்பதற்கு மகத்தெரிசனமும், பகவன்னாம சங்கீர்த்தனங்களும் அடிக்கடி செய்துகொண்டிருப்பவனுக்கு கலிசபையைக் கடந்து சாலோகமடைந்து சரியையிலிருந்து கிரியைக்கு அதிகாரியாகும். அப்போது கலிதாமஸம் சரீரமே, நானென்கிற சூத்திரத்துவம் போய்விடும். கிரியையாவது இயம நியமாதி சாதனங்களினும் குருவுபதேச மந்திர தீக்ஷாதிகளினாலும் ஜீவவியாபாரமான வைசியத்துவம் போய் நானே யெல்லாமீசுவரன் என்கிற யேகாந்த பக்தி யோகத்தினல் சாரூபமடைந்து அகம் பிர்ம்மாஸ்மி யென்கிற பிராமணனாய்ப் பிர்ம்மபதமடையலாம் இதில் சந்தேகம் வேண்டாம். இந்தப் பிரபஞ்ச விசுவாசம் உடைத்தானவனுக்கு இது வராது.

ஏனென்றால், ஒரு குற்றவாளியை நாளையதினம் வதைக்கும்படியாக வொரு ராஜன் சிக்ஷை விதிக்கப்பட்டு அதைத் தெரிந்துகொண்டவனுக்கு அந்த வதை பீதியைவிட்டு யாதொரு போகத்திலும் இச்சை வராது. அதுபோலே, இந்த மலமூத்திரமான சரீரம் இன்றைக்கோ நாளைக்கோ மற்றெந்த நிமிஷத்திலோ இறந்து மண்ணாய்ப் போகுமென்கிற நிச்சயம் உடையவர்களுக்கு மோக்ஷமடையலாம்.

சூரியனாலறியப்படும் உபாயங்களுக்கு சந்தேகமில்லை. அதுபோலே ஆசாரியராலறியப்படும் வித்தையும் அனுபோகமாம். ஆசாரியர் அனேகரிருந்தாலும் சந்தேகமுள்ளவனுக்கு சந்தேகம் தீராது. ஓரே ஆசானாயிருந்தாலும் போதும். விசுவாசமிருந்தமட்டும் சகல சந்தேகமும் தீரும். அதீதமான வேதாந்த சாஸ்திரங்க ளனேகம் பார்த்து ஞானம் நடித்தும் சாதுக்களுக்குக் குற்றங்கூறி பிரதிமாதிகளிலும் மற்றும் விசுவாசமாக பாவித்து யோசிப்பதும்

சேவிப்பதும் அநேகருண்டு. இவைகளெல்லாம் வேதாந்தத்துக்கு விபரீதமாயிருக்கிறது. தன்னிருதயந் தெளிந்தவனுக்கு பிரதிமாதிகளிலும் பிராணிகளிடத்திலும் தன்னிடத்திலும் பகவானிருப்பதாயறியலாம். சர்வ பூதங்களிலும் பகவானைப் பார்ப்பதுதான் சாத்வீகம். பகவானுக்கும் சர்வ ஜீவபிராணிகளுக்கும் என்ன பேதமென்றால் பகவானுக்கும் ஜீவர்களுக்கும் சரீரம் ஒன்றுதான் சைதன்யமாயிருந்த ஆத்மாவு மொன்றுதான். இது சுருதி யுக்திக்குச் சம்மதமாயிருக்க, என்ன பேதமெனில், கர்மத்துக்கும் குணத்துக்கும் வெகு பேதமாயிருக்கும். பகவானுக்கு சாத்வீககுணமே யுடையதாதலால் மகிமைபெறியிருக்கும். பசுப் பிராணிகளான நாமெல்லாம் ராஜஸ தாமஸங்களான குணங்களில் மிகுதியாயிருப்பதால் வெகு பேதமாயும் கீழ்மையாயுமிருக்கும். பகவானவர் எப்போதும் பரம சுகி. பசுப் பிராணிகளான நாமெல்லாம் எப்போதும் துக்கி. ஆதலால், ராஜஸ தாமஸங்களைத்தள்ளி சாத்வீகத்திலிருந்து பகவானை யுபாசித்துப் பகவானுடைய பதம் சேர்ந்ததானல் பேதமில்லாமல் பகவானைப்போலே நாமும் நடக்கலாம். சந்தேகமில்லை.

இந்த முறைப்படி அநுபவம் வராமல் எல்லாம் பகவான் என்பதாகப் பேசுவதானல் ஒரு கொசுவும் பகவானய் வரலாம். கொசுவைப் பகவானுக நினைந்தால் நாமும் கொசுவைப்போலாகும். பகவத்குணமில்லாதவன் ஒரு கொசுவுக்குச் சமானமாம். முன்கூறிய சாத்வீகம் வராமல் எல்லாம் பகவானென்றால் கொசுவுமொரு பக்ஷிதான். ஸ்ரீ கெருடனும் ஒரு பக்ஷிதான். சப்தத்திலும் அர்த்தத்திலும் பேதமொன்றுமில்லை. அநுபவத்துக்கு வெகு பேதமுண்டு. எல்லாக் கல்லும் கல்லுதான். மாணிக்கக் கல்லும்

கல்லுதான். ஆனாலும், கவலையற்ற மனசுக்குமாத்திர மிந்த பேதங்கிடையாது. மனோலையம் வருமளவும் பகவானை அதி தப்பொருளாகச் சேவிக்க வேண்டுமென்பதே தாத்பரியம்.

சந்திரனும் ஜலத்தில் கண்ட சந்திரனும்போலே பேத மாய்த் தோற்றுவதெல்லாம் கர்மகுண விபரீதத்தினால் வந்துவிட்ட பேதபுத்தியினால் இரண்டாகத் தோற்றுவதும் ஜனனமரண துக்கத்துக்குக் காரணமென்றும், குணகர்மங் கள் நசித்துவிட்டால் விபரீதம் நாசமடையுமென்றும், விப ரீதம் போய்விட்டால் ஜனனமரண துக்கமறுமென்றும், சுருதிகளால் சொல்வதுண்டு. இதற்கு முக்கியமானது நிஷ்காமம். நிஷ்காம தர்ம கர்மத்தினால் சாத்துவீகமடைந் தும், சாத்துவிக உபாசனைகொண்டு ராஜஸ தாமஸங்களை யோட்டி, எல்லா மீசுவரார்ப்பணமாக கர்மம் பண்ணுவோ ருக்குப் புண்ணியம், பாவம், நரகம், சுவர்க்கம், பெந்தம், மோக்ஷம், சுகம், துக்கம் இவைகள் ஒன்றும் கிடையாது. இறப்பும், பிறப்புமில்லாதவனுக்கு ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் இம்மூன்றுங் கிடையாது. அதாவதெப்படி யென்றால், அனேக ஜென்ம ஜென்மங்களிற் செய்த நிஷ்காம புண்ணிய பரிபாகத்தினால் சற்குருவை அடைந்தவனுக்கு வந்த ஞானாக்கினியினால் வாசனையெல்லாம் நசிக்கும்.

சுவயஞ்சோதியான பரமாத்மா குணாத்துக்கதீதமாத லால் குணங்களிடஞ் சேர்வதும், பெந்திப்பதும், மோகிப் பதுமில்லை. வாளும் உறையும்போலே சரீராதிகளில் சம்மந் தம் ஆத்மாவுக்குக் கிடையாது. சுகதுக்கமுங் கிடையாது. எந்தப் பிராணிகளிடத்திலும், பேதமில்லாமல் எல்லாவற் றிற்கும் இடங்கொடுத்தும் ஆகாசம்போலே எங்கும் வெளி யாயும் அதி சூட்சுமமாயும் திரிகரணங்களாலுங் காணக் கூடாததாயும் இருக்கும், பராபர வஸ்துவே எல்லோர்க்கும்

ஆசிரயம். ஆனாலும் திரிகரணங்களாலும் காணக்கூடிய தல்லவென்றால் திரிகரணங்களைக் கொண்டல்லாமல் வேறொரு காரணத்தைக்கொண்டறியக்கூடுவதல்ல. திரிகரணங்களைக்கொண்டுதான் அறியக்கூடும். அதாவதெப்படியென்றால், வாக்கு, மனசு, காயங்களைக்கொண்டு தியானிப்பதும் பூஜிப்பதும் துதிசெய்வதுமானால் திரிகரணங்களும் பகவானுக்கு அற்பணமாகும். திரிகரணங்களும் அடங்கினால் பகவத்பத மடையலாம். திரிகரணங்களும் பகவானிடம் சேர்ப்பது எப்படியென்றால், கண்ணாலே கண்டதெல்லாம் பகவானுடைய ரூபமாகவும், காதாலே கேட்டதெல்லாம் பகவானுடைய துதியாகவும், மற்றும் இந்திரியங்களாற் செய்வதெல்லாம் பகவானுடைய பூஜையாகவும், அபிமானமென்பதை எல்லாவற்றிலு மெளியவன் நாமொரு ஜீவப்பிராணியென்றும், தாழ்மையை யுடையவனாய் இருப்பவனுக்கு விருத்தி க்ஷய மொன்றுமில்லை. எது குற்றங்குறை யிருந்தாலும் எல்லாம் நிவர்த்திபண்ணி ஸ்ரீ பகவானனுக்கிரகம் பண்ணுமென்றும் பகவானுடைய திருவாக்கியமுண்டு. இதற்கு சந்தேகம் வேண்டாம்.

எல்லாம் பகவானாகக்கண்டு சேவிப்பவனுக்கு எல்லா லோகத்திலும் பரிசுத்தமாயிருக்கலாம். எல்லா லோகமும் பரிசுத்தமாக்கலாம். சேவையாவது அனேகவிதமானாலும் இரண்டுவிதமாக அடங்கி இருக்கும். அதாவது, பகவானை அதிதப்பொருளாக நினைந்து சேவிப்பதொன்று, பகவானை எல்லாவற்றிலுஞ் சமானமாய்க் கண்டு சேவிப்பதொன்று. இதிரண்டுக்கும் விரோதமில்லை. இது இரண்டும் ஞானியும் பத்தனுமாயிருக்கும். ஞானிக்கும் பத்தனுக்கும் வழியொன்றேயாம். ஞானியும் பத்தனும் தம்மிலொரு பேதமுமில்லை யென்பதாகப் பல சுருதிகளிலுஞ் சொல்லுவதுண்டு.

ஞானியும் பத்தனும் பிர்மமாம். ஆதலால், ஞானத்துக்கு எளிதாயும் எல்லாவற்றிற்குஞ் சிறந்ததாயுமுள்ளது, பக்தி. ஏகாந்த பக்தனுடைய லெக்ஷணமாவது எப்படியென்ருல், பக்தனுடைய லெக்ஷணமும், பிர்மத்தினுடைய லெக்ஷணமும் ஓரே ரீதியாயிருக்கும். பரப்பிர்மத்துக்கு லெக்ஷியமும் லெக்ஷணமுங் கிடையாது. அதுபோலே சாதுக்களுடைய லெக்ஷணமும் மகிமையும் அறிவதற்கும் மகாப்பிரயாசம். ஆனாலும், சத்விருத்தியில் நாளுக்குநாள் சந்திரனுடைய விருத்திபோலே அனுபவத்தினால் தெரிந்துகொள்ளலாம். சத்சங்கம்கொண்டு மனம் நிற்சங்கமாம். நிற்சங்கத்தினுல் மனம் நிர்மோகமாம். நிர்ம்மோகத்தினுல் மனம் நிர்ச்சல தத்துவம் விளங்கும். நிர்ச்சலதத்துவம் விளங்குவதானுலது தான் ஜீவன்முத்தி. ஆதலால், எல்லாவற்றிற்குங் காரணம் பிரதானமானது மனம். ஆனாலும் சாதுலெக்ஷண சங்க்ஷேபமாவது சர்வ பிராணிகளிடத்திலும் கிருபையுள்ளவனுய், யாரிலும் ஒரு வஸ்துவிலும் பேதமில்லாதவனுயும் நிஷ்காமியாய் திதீக்ஷையுள்ளவனுய் மவுனியாயும், சத்திய வாக்கியமான அமிர்தத்தைப் பொழிகிறவனுயும் நல்ல சாந்த குணமுடையவனுயும், ஞானவிருத்தனுயும், தானசீலனுயும், பிராணதாரணைக்கு வேண்டிய ஆகாரங்களை யூட்டுகின்றவனுயும், அப்பிரமத்தனுயும், பொறுமையுடையவனுயும், ஒன்றுமறியாத சிசுவைப்போலேயும் குணகர்மத்துக்கு ஏதுவான ஆறுவித குணகர்மங்களை விட்டவனுயும், சந்தோஷ இருதயனுயும், சாதுசீலனுயும், சங்கல்பவிகல்பமில்லாதவனுயும், மாயாகல்பிதமான குணதோஷமிரண்டையும் மாயமென்றறிந்து தர்மாதர்மங்களை விட்டவனுயும், ஏகாந்த பக்தனுயும் சதாநந்தமுக்தனுயுமிருக்கும். இன்னமும் ஒருவராலுங் கடக்கக்கூடாததான மாயையை நான் கடந்தேன் என்பதாக நினைத்து நடனஞ்செய்யும். சில சமயம் இதுகால

பரியந்தம் சேவிக்காமல் பகவானை நான் மறந்துவிட்டேன் என்பதாக அழும். சில சமயம் இந்த லோகவிருத்திகளை யெல்லாம் மறந்து உன்மத்தனைப்போலே நடக்கும் சில சமயம் விளையாடும். சில சமயம் பாட்டுப் பாடும். சில சமயம் மூடனைப்போலே நடக்கும். சில சமயம் அசையாமல் இலை யில்லா விருக்ஷம்போலிருக்கும். சில சமயம் அந்தகனைப் போலேயும், ஊமையைப்போலேயும், செவிடனைப்போலே யும் இருக்கும். சில சமயம் பூதபௌதிக மிாண்டையுஞ் சிந்தியாமல் வர்த்தமானனுயுமிருக்கும். சில சமயம் பூமி யைப்போலேயும் கங்கையைப்போலேயும் மோக்ஷ மார்க்கத் தைக் காட்டுவதாயு மிருக்கும். இதுவுமல்லாமல் ஆகாசம் போலேயும் சமுத்திரம்போலேயும் அக்கினியைப்போலேயும் இருக்கும். இதுகளுடைய லெக்ஷணமும் குணமும் ஒரு வருக்கும் சொல்லி முடியக்கூடுவதல்ல. ஆதலால், சாதுக் களுடைய லெக்ஷணமும் பிர்ம்மத்தினுடைய லெக்ஷணமும் சொல்லுவதற்கும் அதை கேட்பதற்கும் காண்பிப்பதற்கும் ஒருவராலும் முடியாது என்பது தாத்பரியம். ஆதலால், பகவானை யிடைவிடாமல் சேவிக்கவேண்டுமென்றும், பகவானே சாதுக்களென்கிற நிச்சயமுடையவனுக்கு சாதுக் களிலிருந்து பகவதனுக்கிரகங்கிடைக்கும். தானே ஜீவன் முத்தனுய் வந்துவிடும். எல்லா தேவர்களும் பிதுர்க்களும் பிரசாதிக்கும் தர்மார்த்த காம மோக்ஷமும், மற்றுமெல்லா சுகமுங் கிடைக்கும்.

அநேக பலங்களில் ஆசையிருந்தாலும், ஒருவனுக்குக் கற்பகவிருக்ஷமொன்றிருந்தால் போதும். அதனுல் எல்லா லாபமுங் கிடைக்கும். கற்பக விருக்ஷமொன்றிருந்தாலும், அதினடியில் ஜலமும் எருவும் சேர்த்தால் விருக்ஷமும் கிளை களும், விருத்தியாய் பலமுமுண்டாகும். கிளைகள்தோறும்

சேர்த்தால் விருக்ஷமும் பலமுமாகாது. ஆதலால் மூலாதாரத்தின்கண் ஸ்தாபிக்கப்பட்ட வித்தே மேலாதாரத்தில் பலமாய் வருமென்பதும் அதாவதற்கு சகல கர்மங்களும் சதா பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்வதற்கு உபாயம் மகத்பதமே ஆதாரமாயிருக்குமென்றும் பகவானுடைய பூஜாவிதிகளனந்தவிதமாயிருந்தபோதிலும் மகத்பாதபூஜையே எல்லாவற்றிலும் சிறந்ததென்றும் அதுவே பகவத்பூஜை யென்றும் பகவானுடைய திருவாக்கியங்களிலும் சொல்லப்பட்டிருப்பதுண்டு. ஆதலால், சாதுக்களை அக்கிராசனத்தில் வைத்துப் பாதபூஜை செய்வதுதான் எல்லாவற்றிலும் சிறந்ததென்றும், இதுதான் பக்தியோகத்துக்கு முக்கியமென்றும், இதனல் எல்லா பலன்களுமாகுமென்றும், முன்கூறிய தாத்பரியம். இந்த சுவரூப ஞானசங்கிரகமானது எல்லோர்க்கும் சந்தோஷமாயிருக்க வேணுமென்றும் எல்லோருமனுக்கிரகிக்க வேணுமென்றும், எல்லோர்க்கும் அநேக தெண்ட நமஸ்காரம்.

ஜீவகாருண்யம் மனம்பொருந்தி ஸ்ரீ குருவின் பதமலர் சிரசின்மேல் பாவித்து சதா குருவருள் திருநாமங்களைச் செபிப்பதானல் இந்த கலிகாலத்தில் எல்லோரும் சுலபமாய் மோக்ஷமடையலாம் என்பதாக உபநிஷத்துக்களிலும் சொல்லப்பட்டிருப்பதுண்டு. இவைகளுக்கெல்லாம் ஆதாரமானது ஸ்ரீ குருபதபத்தியென்றும், பத்திபெறுவதே சீவன்முத்தியென்றும், ஆதலால், ஞானமாதாவானது பத்திதானென்றும், இதுவே எல்லாவற்றிற்குஞ் சிறந்ததென்றும், இதனல் எல்லாசுகமும் அடையலாமென்றும், முன்கூறியதுகளுக்கெல்லாம் சுருக்கமான தாத்பரியம். இது உண்மையென்றுணர்வோர்களெல்லோர்க்கும் நமஸ்காரம்.

முற்றிற்று.

Printed at the Karunanithi Press, Vijayapuram. 36 1888

உ

ஸ்ரீ சற்குருவே நம:

அறிவு விளக்கம்.

வினாயகர் துதி.

ஆனைமுக பாலன் காப்பு
ஆறுமுக வேலன் காப்பு
ஆநந்தமாம் வாணி காப்பு
ஆதிகுரு நாதன் காப்பாம்.

குருவணக்கம்.

ஆரண முடிவாய் நின்றபூரண பரமே போற்றி
காரண குருவாய் வந்த கருணைஎன் மனமே போற்றி
நாரணனரனுந் தாயும் நான்முகன் குகனும் போற்றி
சாரண சராசரமும் சரணமே போற்றி போற்றி.

பங்கமற்று பயமற்று பவசாகரமு மற்று
சங்கையற்று சலனமற்று மன சங்கற்ப மற்று
அங்கமற்றக மற்றருள் பெற்றமலா நந்தமாம்
தங்க மலத்தன் சற்குருவை அஞ்சலி செய்குவாம்.

வசனம்.

பூர்வ புண்ணிய விசேஷ பாக்கியத்தினால் ஒரு நாள் மனம் எகாந்தத்தில் அன்பாய் அறிவையடுத்து அநேக வணக்கத்துடன் அடிபணிந்து ஒ ஆண்டவனே! எனையாட்கொள்ளும் ஐயனே! மெஞ்ஞானதேசிகனே! அடியேனுடைய சம்சார துன்பம் தொலையும் மார்க்கம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உலகத்தின்கண் சம்சாரமானது அனைவருக்கும் பேரின்பமாய் இருக்க, உனக்கு வந்த துன்பமென்ன? மனம் ஓ சுவாமி! அடியேனுடைய துன்பம் முதலாவது கெற்பவாச துன்பம், இரண்டாவது ஜென்ன துன்பம், மூன்றாவது பால்ய துன்பம், நான்காவது கௌமாரதுன்பம், ஐந்தாவது யௌவனதுன்பம், ஆறாவது வயோதிகதுன்பம், ஏழாவது மரணதுன்பம் இன்னும் மண்ணாசை துன்பம், பெண்ணாசை துன்பம், பொன்னாசை துன்பம், பொல்லாத துன்பம், அகங்காரதுன்பம், அபிமான துன்பம், ராகத்துவேஷாதி சமஸ்தமும் துன்பம், மரண சமயத்தில் எமதண்டனை துன்பம், மரணசேஷம் நரக துன்பம் அநேகமுண்டு. ஆதலால், உலகத்தின்கண்ணுள்ள சுகமெல்லாந் துன்பமாயிருக்கிறதேயல்லாமல், இன்பம் அணுவளவுங் கிடைபாது. இதற்கு நாமென்னசெய்வோமென்று அடிபணிந்து மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்தப்படி துன்பமனேகமிருந்தாலும் துன்பத்திற்குக் காரணம் உன்னுடைய ஆசையுடைய மனம் ஒன்றுதான். ஆதலால், ஆசையையும் மனதையுமடக்கி, அருள் பெற்றுப் பரிபூரணானந்தப் பொருளையடைந்தால் துன்பமெல்லாம் நீங்கி பேரின்பமாயும், சிரஞ்சீவியாயுமிருக்கலாம். சந்தேகம் வேண்டாம். மனம் ஓ ஆண்டவனே! பூரண நிலையாவது யாது?

ஓ மனமே கேள்! சராசரத்துக்கும் அந்தர்யாமியாயும், சர்வ சாக்ஷியாயும், ஏகமாயும், ஆகாசம்போல் எங்கும் பரிபூரணமாயும், சச்சிதானந்த சொரூபமாயுமுள்ள பரமாத்மாவாமென்றறிக. இதைக்கேட்ட மனம் ஓ சுவாமி! இது எனக்குத்தெரியும். இதை நான் இதற்கு முன்னமே கேட்டுமிருக்கிறேன். சுருதி முதலான பல

நூல்களிலும் பார்த்திருக்கிறேன். பல பேர்களும் சொல்லக் கேள்வியுமுண்டு. பூரணம் பூரணமென்று சொல்லுமாத்திர மல்லாமல் பூரணவஸ்துவானது அணுவளவானாலும் என் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஓ ஐயனே! அடியேனுடைய சந்தேகமாவது சுருதிப் பிரமாணங்களும் பெரியோர் வாக்கியங்களும் பொய்யா, அல்லது பொய்யானால் எங்கும் வெய்யல்போல் பூரணமான வஸ்து ஒன்று இருந்தால் என் கண்ணுக்கும் புலப்படுமே ஓ! ஓ! இது என்ன விபரீதம். எங்கும் ஆகாசம்போல பூரணமான வஸ்து உண்மையா யிருந்தால் அதை மறைக்கப்பட்ட வஸ்து உலகத்தில் எது வென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! எல்லாம் கண்டறிந்த நீ உன் முகத்தில் இரண்டு கண்களிருப்பதை நீ கண்டாயா? ஆனாலும் விளங்கிய கண்ணாடியில் பார்த்தால் பார்க்கலாம். அது போல பூரணானந்த வஸ்துவானது ஊனக்கண்ணுக்குப் புலப்படத்தகுந்த தல்ல. அது ஞானக்கண்ணுக்குப் புலப் படும் வஸ்துவாமென்றறிக.

ஓ மனமே இன்னுங்கேள்! உபநிஷத்தாதி பிரபல சுருதிப்பிரமாணங்களும் பெரியோர் மகா வாக்கியங்களும் பொய்யாமென்றெண்ணுவோர்களுக்கு கோடி கோடி கற்ப காலமானாலும் ரௌரவாதி நரகமாமென்பதற்குச் சந்தேக மில்லை. பிறவிக்குருடனுக்கு சூரியன் இருளாமென்பது போல பூரணப்பொருளை மறைக்கப்பட்டது யாதென்றால், உன் மனதினால் உன்னை நீ மறந்துவிட்டதுதான், மறப்பு வேறே கிடையாது. அதைத்தவிற வேறே மறைக்கப்பட்ட வஸ்து ஒன்றுமில்லை என்பது நிச்சயம். அதானது ஆத்மாவை எப்படி மறைக்குமென்றால், அனாதியான அசுத்த வாசனையோடுகூடி நானெனதென்கிற அபிமான விருத்தியி

ணல் தன்னைத்தான் மறந்துவிட்டதுவே யொன்றுதான் ஆத்மாவை மறைக்கப்பட்டதாமென்றறிக. அசுத்த வாசனை யாவது யாதென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அசுத்த வாசனையாவது அனுதியாயுள்ள சங்கற்பத்தோடுகூடிய மூலமாயாவாசனையான ஆணவாதி மும்மலங்களுமாம். அதானது ஆணவம், மாயை, கர்மம் இந்த மும்மலங்களுமற்றால் அருள்பெற்று பூரணனந்தம் விளங்குமென்றறிக. அந்த மும்மலங்களும் அறுமுபாய மெப்படியென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஞானசாதனங்கள் நான்கும் அடைந்தருள்பெற்ற ஞானசாரியரை யடுத்து அடிமைகொடுத்து உடல், பொருள், ஆவி மூன்றுந் தாரைவார்த்து கபடமில்லாமல் அநேக நாள் பாதுகார்த்துப் பணிவிடை செய்து பழகி வருவதானல் மும்மலங்களுமறும். மும்மலங்களுமற்றால் உண்மையாய் நிர்மலமாயுள்ள அருள்பெறலாம். அருள் பெற்றால் பூரணனந்த தெரிசனமடையலாம். இதற்குச் சந்தேகம் வேண்டாம். இந்த முறைப்படி ஸ்ரீ சற்குருவிடத்தில் சிரத்தாபக்தி விஸ்வாசமில்லாமலும் அருள்பெறமலும் அநேக ஞானநூல்களைப் படிப்பதாலும் தலைகீழாய் நின்று, கொடிய தவங்களைச் செய்தலாலும் பூரணனந்தப்பொருளைக் காணமுடியாது என்பது சத்தியம். ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றால் பூரணனந்தப்பொருளை யடையலாமென்றும் மகத்துக்கள் கூறி இருப்பதும் சத்தியம். ஸ்ரீ மகானுபாவரான தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதில் ஒரு அணுமாத்திரமுனக்குச் சொல்லுகிறேன் இதை நீ உண்மையாக நம்புவாயானல் உன்னுடைய சகல சந்தேகங்களும் தீரும். அதாவது,

அங்கிங்கெனுதபடி யெங்கும் பிரகாசமாய் யாநந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்தெது தன்னருள் வெளிக்குளே யகி
[லாண்டகோடி யெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது மன
[வாக்கினிற்
றட்டாமல் நின்றதெது சமயகோடிகளெலாம் தன்தெய்வ
[மென்தெய்வமென்
றெங்குந்தொடர்ந் தெதிற் வழக்கிடவு நின்றதெது வெங்கனும்
[பெருவழக்கா யாதினும்
வல்லவொரு சித்தாகி யின்பமா யென்றைக்கு முள்ளதெதுமேற்
கங்குல்பகலற நின்ற வெல்லையுள தெதுவது கருத்திற்கிசைந்த
[ததுவே
கண்டனவெலா மோனவுரு வெளியதாகவுங் கருதி யஞ்சலி
[செய்குவாம்.

ஓ மனமே கேள்! இந்த மகானுபாவர் அருள்செய்த இப்பாட்டில் தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம் என்பதினுடைய தாத்பர்யத்தை விசாரித்துப்பாரும். உன்னுடைய சந்தேகமெல்லாம் தீரும். அதாவது ஸ்ரீ சற்குருவின் திருவருள்குள்ளே அகிலாண்டகோடி சராசரத்தையும் பார்த்தால் அதற்குள்ளே உன்னையும் பார்க்கலாம். இதைக்கேட்ட மனம் ஓ ஆண்டவனே! அருளானது எங்கேயிருக்கிறது யென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அருளான பரம்பொருளிருக்குமிடம் ஆலமரத்தின் ஒரு விதைக்குள் அதிசூக்ஷ்மமாயும் ஊனக்கண்ணுக்குப் புலப்படாததாயும் ஒரு ஆலமரமிருப்பதுபோல் ஞானக்கண்ணினுல் பார்த்தால் சராசர பூத கோடிகளுக்குள்ளிலும் அந்த அருள்நிறைந்து மறைந்து

பழுத்திருக்குமென்றறிக. ஆனால் இந்தப்படி சராசரத்துக்குள் அருள் பழுத்து அமிர்தானந்தமிருக்க அதை எடுத்தனுபவியாமல் கேவலம் நாய், கழுதை முதலான ஜெந்துக்களைப்போல் அலைவானேன் ஜீவர்கள் என்று மனங்கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! மோக்ஷமடைவதற்கு அதிகாரபேதமுண்டு. அதானது இந்த பூதலத்தில் உள்ள பிராணிகளில் பிரதானம் மானிடஜாதி. மானிடஜாதிகளெல்லாம் மோக்ஷத்திற்கு அதிகாரிகள்தான். ஆனாலும் அதுகளிலும் அனேக சாதிகளுண்டு. அதுகளில் சிறந்தவாள் பிராமணாள்தான் மோக்ஷத்திற்கு பூரண அதிகாரிகளாம் என்று வேதங்கள் முறையிடுகிறது. பிராமணனைவன் யார்? எதினால் பிராமணனாகுமென்றும் மனங்கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! பிராமணாள் யாரென்றால் சாத்வீகமுடையவாளே பிராமணாள் என்றும் பிராமணாளே சாத்வீகமுடையவாளென்றுமறிக. அதுவுமல்ல பிர்மக்கியானனேனப்பிராம்மண: என்கிற சுருதிப்பிரமாணங்களுமுண்டு. அதாவது ஈனஜாதியாயிருந்தும் கொலை, களவு முதலான பஞ்சமாபாதகியான வால்மீகரைப்போலையும், நீசகுலத்திற்பிறந்த நந்தனாரைப்போலேயும் தாமசராஜசகுண கர்மங்களை அடியோடு தள்ளிவிட்டு நல்ல சாந்தமாய் ஆத்மபக்தி விஸ்வாசத்துடனிருப்பவனே பிராமணனுமென்றறிக. இதற்குச் சந்தேகம்வேண்டாம். இழிகுலத்திற் பிறந்தவனானாலும் ஈசுவர பக்தி விசுவாசமுடையவன் பிராமணனும். தொழுகுலத்திற் பிறந்தவனானாலும் பகவத்பக்தி விஸ்வாசமில்லாதவன் சண்டாளனுமென்றும் வேதங்களிற் கூறியிருக்கிறது. சாத்வீகமுடையவாள் தான் சைவாள் என்றும், சாத்வீகமுடையவாள்தான் வைஷ்ண

வாள் என்றும் அறிக. சாத்விகம், ராஜசம், தாமசம் இந்த மூன்றுகுணகாரியமா மிந்த உலகம். இதில் திரிவித கர்மிகளாம் மனுஷியர்கள், சதுர்வர்ணங்களுமென்றறிக. ஆதலால் திரிவிதகரணங்களினாலும் கடவுளை உபாசித்தால் திரிவிதகரணங்களு மடங்கும். திரிவிதகரணங்களு மடங்கி விட்டால் திரிவிதகுணகர்மங்களும் கிடைபாது. திரிவித குணகர்மங்களுமடங்கி விட்டால் சதுர்வாஞசிரமமுங்கிடையாது. அது பரிசுத்தமாயுள்ள வீரசைவமாமென்றறிக. இப்படிக்கொத்த பரிசுத்தகுணமுடைய வீரசைவத்திற்கும் பரிசுத்த பரமசிவத்திற்கும் தம்மில் அணுவளவும் பேதங் கிடையாது. அதாவது எல்லாம் பரமசிவமாயும் பரமசிவத்தைத் தவிர வேறு இல்லை என்பது வீரசைவமத சித்தாந்தமாம். ஆதலால் சராசரத்துக்குங் குருவானதும் அருள்செய்வதும் வீரசைவமத சித்தாந்தமாம். ஆதலால் சராசரத்துக்குங் குருவானதும் அருள்செய்வதும் வீரசைவ குருவாமென்றறிக. வீரசைவமாவது சதாசிவம். இப்படிக்கொத்த வீரசைவ பரமசற்குருவைபடுத்து பாதுகாத்துப் பணிவிடை செய்து அருள்பெற்று எதார்த்தமான பொருள் சம்பாதித்து சிற்பத பிரகாசமடைந்தால் மனங் குளிர்ந்து துக்கங்களெல்லாம் நீங்கி தர்ப்பரமாயுள்ள பிர்ம்மாநந்தமாயிருக்கலாம். இதற்கு நிஷ்காமியமாய் சாத்வீக குணமுடையவர்களாய் நான்கு சாதனங்களுமடைந்தவர்களாம் மோக்ஷத்திற்கு அதிகாரி என்று முன்கூறியதின் தாத்பர்யம். ஆனாலும் ஸ்ரீ சற்குருவை ஒரு மனுஷிபனாக நினைக்கலாகாது. சதாசிவமாய் நினைக்கவேண்டும். அதாவது ஒரு குருவைபடுத்து பரமேஸ்வர புத்தியுடன் பாதுகாத்து பணிவிடைசெய்யவேண்டும் அதைத்தவிர குருவை ஒரு மானிடனாக நினைந்தால் அதோகதியடையுமென்று சுருதி முதலானதுகளிலும், பெரியோர்களாலும் கூறப்பட்டிருக்

கிறது. பரமகுருவைக்கண்டதும் பரப்பிர்மத்தைக்கண்டதும் ஒன்றுதான் குரு தரிசனமாவது ஆசையையடக்கி உள்ளன்புடன் எல்லாங் குருவாகப் பார்ப்பது தான். ஆனாலும் குருவே மூலக்கணபதி, குருவே பிர்மா, குருவே விஷ்ணு, குருவே ருத்திரன், குருவே மகேஸ்வரன், குருவே சதாசிவம், குருவே சாக்ஷாத் பரப்பிர்மமென்றறிக. ஆதலால் தன் குருவை பரப்பிர்மமாக நம்பி விஸ்வாசமாய் உள்ளன்புடன் கண்டவாள் பரப்பிர்மத்தைக்கண்டவாள். அது கூடாமல் குருவைக்காணாது அதாவது சற்குருவைக் கண்டவனுக்கு அதைத்தவிர வேறே தெய்வமுங்கிடையாது. கண்டளவெலாங் குருவாகக் கண்டவன் சராசரத்தையும் குருவாகக் கண்டவனும்.

ஓ மனமே இன்னுங் கேள்! குருவானது பிரணவ சொரூபமாயும், சுயம்பிரகாசமாயும், பரிபூரணானந்தமாயுள்ளதாம். அதைப்பார்க்கும் பொருட்டு கண்ணனது யாதென்றால் அந்த சற்குருவின் திருவருட்பிரகாசமாம். அந்த அருட்பிரகாசமான கண்ணன பரவெளிக்குள்ளே பார்த்தால் சரா சரத்தையு மதற்குள்ளே பார்க்கலாம். சராசரத்திற்குள் குருவையும் பார்க்கலாம். அந்த குருவருட்குள்ளே அகிலாண்டகோடி பிர்மாண்டங்களும், அளவிறந்த கோடி பிர்ம்ம ருத்ராதிகளும், ராமகிருஷ்ணாதி தசாவதாராதிகாரியங்களும், அநேகநேககோடி தேவாதி தேவர்களும் பிறந்திறந்து விட்டதையும் பார்க்கலாம். மனம் ஓ சுவாமி! ஆலமரத்தின் விதைக்குள்ளிருக்கும் விருக்ஷம்போல் சூக்ஷ்மமாய்ப் பார்ப்பதற்கரிதான அருளையடையு மார்க்கம் யாதென்றுகேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பொருளின் ஆசையுடைய தரித்திரன் மிகுந்த செல்வமுள்ள ஒரு தனவானையடுத்து சரீ

ரத்தை அவனுக்கு அடிமைகொடுத்து அவன்சொன்ன கட்டளைப்படி கஷ்டமடைந்து தொழில்செய்து அவனை சந்தோஷிப்பித்து பொருள் சம்பாதிப்பதுபோல் அருள்பெற்ற மகானைபடுத்து அன்பாய் சற்குருவாக நம்பி பலநாள் பாதுகாத்து பக்தி விஸ்வாசத்துடன் பணிவிடைசெய்து பழகி வருவதானல் பரிபக்குவகாலத்தில் அருள் கிடைக்குமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். இதைத்தவிர அருளாசையைவிட பொருளாசையானது அற்பமாயும், அநித்தியமாயும், அநேக அநர்த்த துக்கங்களுக்கேதுவாயும், அதிகோர பயங்கரமாயும், சர்வதா மனசஞ்சலமாயுமுள்ளபொருளை சம்பாதிப்பதும் மகாப்பிரயாசம். அது கைவசமிருந்தாலும் மகா கஷ்டம். ஒருவர் கையில் கொடுப்பதற்கும் மகா கஷ்டம். கொடுத்தாலும் அதைத்திரும்ப வாங்குவதும் மகா கஷ்டம். கடைசியில் அப்பொருளழிந்து போனாலும் மகா கஷ்டம். பொருளிநக்கத் தான் இறந்துவிடும்போதும் மகா கஷ்டம். ஆதலால், பொருள் அதிகமிருந்தவாளுக்கு சதா துன்பமல்லாமல் சுகமணுவளவுங் கிடையாது என்பது சத்தியம். இதற்குச்சந்தேகம் வேண்டாம். ஆதலால் சத்தியமாயும், நித்தியமாயும், அதீதானந்தமாயுமுள்ள பரம்பொருள் கைவசமாகும்பொருட்டு முன்கூறினபடி பிரயத்தனம் செய்தும், வெகுகாலம் தவஞ்செய்தும் ஆண்டவன் அடிமைப்பட்டு அருள் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். மகா கஷ்டமடைந்து பொருள் சம்பாதித்தவாளுக்கு இகத்திலும் கஷ்டம், பரத்திலும்கஷ்டம். பொருளாசைவிட்டு அருளாசையுடன் நிராசையாய் எதார்த்தமான பொருள் சம்பாதித்தவாளுக்கு இகத்திலும் சுகம், பரத்திலும் சுகம். சிரஞ்சீவியாய் பிர்ம்மானந்தமாயிருக்கலா மென்பதற்குச் சந்தேகமில்லை. அருளிருந்தவர்களுக்கு இவ்வுலகமுமுண்டு, அவ்வுலகமுமுண்டு, எவ்வுலகமுமுண்டு. பொருளதிகமிருந்தவா

ளுக்கு இவ்வுலகமுமில்லை, அவ்வுலகமுமில்லை, எவ்வுலகமுமில்லை. ஆதலால் அருளிருந்த இடங்களில் எல்லாப் பொருளுமிருக்கும் இதற்குச் சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! அருளானது யாதென்றால் பிர்மசக்தியாமென்றறிக. அதை ஞானசிற்சக்தியென்றும் சற்குருவென்றும் மகத்துக்கள் சொல்லுவார்கள். அந்த பிர்மசக்தியானது ஏகம். அதிலிருந்தும் தோற்றப்பட்ட மாயையால் அனந்தமாயும் அளவிறந்தகோடி பூதங்களாயும், அதுகளுக்கெல்லாம் தாயாயும், ஏகமாயும் அரூபமாயும், பரிபூரணமாயுமுள்ள ஞான சிற்சக்தி ஒன்றுதான் அருள்சக்தி என்றுமறிக. இந்தப்படி சர்வசக்தி வல்லமையுள்ள அருள்சக்தியானது ஆத்மசக்தியாதலால் அக்கினியிற்சூடுபோல் ஆத்மாவோடு அபின்னமாயிரண்டறக் கலந்து ஆதியந்தமில்லாமல் அதீதாநந்தமாயிருப்பதுதான் அருள் சக்தி என்றறிக. ஆத்மப்பிரதானமாய்ப் பிர்மாநந்தமாய் எங்கும் பிரகாசமாய் வேதமுடிவானதும் அந்த அருள்சக்தி தான். குருவை பூரணபிர்மமென்றெண்ணி நம்பிக்கையும் பூரணவிஸ்வாஸமும் அனந்நிய பக்தியுடன் உள்வஞ்சனையெல்லாம்விட்டு குருபதத்தியானஞ்செய்து பழகிவருவதனால் சித்தம் பரிசுத்தமாய் அந்தஞான சிற்சக்தியால் உள்ளந்தெளிந்து அருள்கிடைக்கும் சந்தேகம் வேண்டாம். குருவை பரமாத்மாவாக நினையாமல் மனிதனென்றும், அதைத்தவிர பரமாத்மாவானது பரிபூரணமாமென்றும், நானொரு சம்சாரியென்றும், இந்தப்படி திரிவிதமாய் எண்ணுவோர்கள் அதோகதியடைவார்கள். சந்தேகமில்லை.

ஓ மனமே இதனுடைய உண்மை உள்ளபடி உறுதியாக உனக்கு விளங்கும்பொருட்டு ஆத்மாவி லன்புடன் விசாரித்துப்பார்த்தால் உன்னுடைய சந்தேகமெல்லாந் தீர்ந்து

தெளிவடையும். எல்லா நூல்களைப் பார்த்தாலும், அதைப் படித்தாலும் உண்மையை அறியாமற்போனால் குருடன் கூத்துப்பார்த்தது போலவும், ஊமையன் சங்கீதம் படித்தது போலவும், செவிடன் கதைகளைக் கேட்டது போலவும், ஆறு குருடர்கள்கூடி ஒருயானையைக் கண்டதுபோலவும் நிரூபிக்க வேண்டும். குருவாக்கியத்தை உண்மை என்று நம்பாத மூடர்கள் அதோகதி யடைவார்களென்பதற்குச் சந்தேக முண்டா? இல்லை. ரௌரவாதி நரகத்திலிருந்துங் கடைத்தேறும் பொருட்டு சற்குருவானவர் திருவாய்மலர்ந்தருளிய மஹா வாக்கியார்த்த சாரோபதேசங்களைத் தள்ளிவிட்ட மகாபாபிகளுக்கு ரௌரவாதி நரகமே வீடாமென்பதற்குச் சந்தேகமில்லை. குருவானவர் யார் என்று மனங்கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! குருவானவர் பிரணவாகாரமாயும், சச்சிதானந்த சொரூபமாயும் ஞானசிற்சக்தியோடுகூடி யிரண்டறக்கலந்து விளங்குகின்ற பரமாத்மா ஒன்றுதான். அவரே சராசரத்துக்கும் குரு. ஆனாலும் அது அரூபம். ஆதலாலதை அஞ்ஞானிகள் காணக்கூடியதல்ல. அதைக் காட்டும்பொருட்டு ஒருசொரூபமாயும் ஞானசிற்சக்தியினுடைய அம்சமான அவதாரமாயும் மனுஷரூபமாயு மிருக்கும். குருவே உபதேசிகரென்றறிக. இவரை எல்லோரும் பார்த்தாலும் பார்க்கலாம். ஆனாலும் இவரை மகா புண்ணியவான்களே பார்க்கக்கூடும். ஓ மனமே! குருவருள் ஞான சிற்சக்தியானது ஆகாசம்போல் ஏகமாயும், அநந்த சக்தியானது சூரியசந்திர நக்ஷத்திராதிகளைப்போல் அநேக மாயும், இன்னும் அருள்சக்தியானது சமுத்திரம் போலேக மாயும் அரூபமாயும் அநந்த சக்தியானது அநேக நதிகளைப் போல் அநேகரூபமாயும் காண்க. ஆனாலும், அந்த அருள்

சக்தியும் அநந்தசக்தியும் வேறுவேறல்ல. அந்த அருள்சக்தியினுடைய அம்சமாம் அநந்தசக்தி என்றறிக. ஆனாலும் முன்கூறிய சமுத்திரமும் நதியும்போல் வெகுபேதமாயும் அஞ்ஞானிகளுக்குத் தோன்றும். தோன்றினும் சமுத்திரத்திலுள்ள ஜலந்தான் நதிகளிலும் ஓடுகிறது. அது சமுத்திரம்போய்ச் சேர்ந்தாலும் சேராமற்போனாலும் சமுத்திரமானது கூடுதலுங்குறைவுமில்லாமல் சமமாயிருக்குமென்பதே ஞானிகளுடைய அபிப்பிராயம். ஆதலால் அநந்தசக்தி அநேகம் அருள்சக்தியிற் சேர்ந்தாலும் சேராமற்போனாலும் அருள்சக்தியிற் கூடுதலும் குறைவுமில்லாமல் பூரணமாயிருக்குமென்பது நிச்சயம். ஆதலால் அருளானது சராசரத்திற்கும் குருவாம். அந்த சராசரத்திற்கும் அந்தர்யாமியாயும், சர்வசாக்ஷியாயும் சச்சிதானந்த சொரூபமாய் விளங்குவதும் அந்த சற்குருதான். ஓ மனமே! நீ உபசாந்தமானால் எல்லாம் குருவாமென்றும், அதுபிர்மஞான சிற்சக்தியாமென்றும் அறிக. அதாவது களங்கமற்ற கண்ணாடியில் நின்முகம்பார்ப்பதைப்போல் சற்குருவின் திருவருளான ஞானசிற்சக்தியான கண்ணாடியில் பார்த்தால் உன்னுடைய ஆத்மாவைப் பிரத்தியக்ஷமாய் உன்னை நீ பார்த்தால் சர்வமுகமும் பார்க்கலாம், சந்தேகம்வேண்டாம்.

மனம் ஓ ஆண்டவனே! இப்படிக்கொத்த அருள்ஞான சிற்சக்தியையும், குருசரணாரவிந்தத்தையும் பிர்மானந்தபதத்தையும் அபேதமாய் நினையாமல் மறந்துவிடுவதற்கு காரணம் அகங்காரம் ஒன்றுதானென்றும் அறிந்தேன். ஆனாலு மின்னும் அடியேனுடைய சந்தேகமாவது அகங்காரமான வஸ்து யாது? அதனுடைய உற்பத்திஸ்தானமாவது யாது? லயமாவது யாது? அதையடக்குமுபாய மெப்படி? என்று மனங்கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! இந்த ஸ்தூலலிங்க சரீரமே நான் என்கிறபாவனையாம். அகங்காரம். இந்த அகங்காரத்திற்கு உற்பத்திஸ்தானமாவது, முக்குணத்திற்கும்மூலமான மூலப்பிரகிருதியாம். அந்த மூலப்பிரகிருதியின் முக்குணங்களால் தோற்றுவதாம் இந்த ஸ்தூலப் பிரபஞ்சம். ஆதலால் சராசரமும் அகங்காரமென்றறிக. இப்படிக்கொத்த அகங்காரத்திற்குக் காரணமாயும் அனாதியாயும் மூன்று வினை சேர்க்கை வாசனையாயிருக்கிறது. அதானது ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம். இதுகள் மூன்றும் அடிக்கடி வித்தும் பயிரும்போல் அனுபோகமாக இருக்கிறது. ஆகாமியமாவது இனிமேல் அடுத்த ஜென்மத்திலும் நல்லபோக சுகங்களையனுபவிக்க வேணுமென்கிற சங்கற்பவாசனையாம். சஞ்சிதமாவது இந்தஜென்மத்தில் காமியார்த்தமாகச் செய்துவரும் கர்மத்தின் விட்டகுறையாம். பிராரத்துவமாவது பூர்வஜென்மத்தில் செய்த இருவினையின் பலனும். இந்தப் பிராரத்துவ வினையானதை திருமூர்த்திகளானாலும் மகா க்ஞானிகளானாலும் அனுபவியாமல் விடமுடியாது என்பது சத்தியம். அதாவதெதுபோலென்றால், சென்ற வருஷத்தில் சம்பாதித்துவைத்த வித்துதான் இப்போது பயிர்செய்ததில் ஒருபாகம் அனுபவித்தும், அதில் ஒரு பாகம் வித்தாகவைத்தது. இந்தப்படி யினிமேலும் அநேக போகங்களை அனுபவிக்கவேணுமென்கிற சங்கற்பவாசனையாம் சஞ்சிதம். அதுபோல அடிக்கடி ஜெனன மரணாதி சுகதுக்கங்களை யனுபவிப்பதும் சுபாவீகமாம். இந்தப்படி கோடிகற்பமானாலும் நிலையில்லை. அதாவது, மாயாசூத்திரமான காலசக்கிரத்திற்பட் டடிக்கடி குலால சக்கரம்போற் சுற்றிச் சுற்றி உழலுவதற்கோராதி யந்தமில்லை. இப்படிக் கொத்த மூன்றுவினையு மெப்படி தொலையுமென்று மனங் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இவ்வுலகத்தின்கண் பிராணிகளின் க்ஷேமத்தின்பொருட்டு நிவர்த்தி பிரவிர்த்தி என இரண்டுவிதமுண்டு. இதுகளில் நிவர்த்தியிலிச்சையும் பிரவிர்த்தியில் நிராசையுமாய் கர்மம் செய்து பழகிவருவதானல் சஞ்சிதமானவித்து அடியோடு நசிக்கும். சஞ்சிதம் நாசமானல் ஆகாமியமான சங்கற்பமேது? ஆகாமியமான சங்கற்பவாசனையில்லாவிட்டால் பிராரத்துவமானது அனுபவித்தும் தீரும். இந்தப்படி ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் இதுகள் மூன்றும் நசித்தால் கர்மம் தொலையும். கர்மமில்லாவிட்டால் அகங்காரமும் சம்சாரமுங்கிடையாது. அகங்காரமும் சம்சாரமும் நாசமானல் ஸ்ரீ சற்குருவின் திருவருள் கிடைக்கும். அருள்பெற்ருல் சங்கற்பவிகற்பமறும். சங்கற்பவிகற்பமற்ருல் ஜெனனமரணுதிதுன்பமறும். ஜெனனமரணுதி துன்பமில்லாவிட்டால் பேரின்பமான பரமாத்மபரமாநந்தசுகமடையலாம். சந்தேகம் வேண்டாம். மனம் இதைக்கேட்டு ஆனந்தமாய் பேரின்பத்திலாசையுடன் அறிவை வணங்கி ஓ ஆண்டவனே! முன்கூறிய சஞ்சிதந்தான் அகங்காரத்திற்கும் ஜென்மசம்சார துன்பங்களுக்கும் காரணமென்றறிந்தேன். ஆனுலுமிந்த சஞ்சிதம் உண்டாவதற்கு மூலகாரணம் யாதென்று கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! சஞ்சிதமுண்டாவதற்குக் காரணம் அனுதியாயுள்ள சரீரசேர்க்கை வாசனையாம். ஆதலாலதை ஒருவருக்கும் வெளியிடமுடியாது. ஆனுலும் பெந்தமோக்ஷமிரண்டிற்கும் காரணமாயும், அனுதியாயுமொரு மூலப்பிரகிருதியுண்டு. அந்தமூலப்பிரகிருதியானது உலகைசிருஷ்டிக்கு முன்னம் ஏகமா யரூபமா யானந்தமாய் நிராதாரமாயிருந்த பரமாத்மாவோடுகூடி இரண்டறக்கலந்து பிர்மானந்தமாயிருந்தது. சிருஷ்டிகாலத்தில் அந்த மூலப்பிரகிருதியான

மாயையும் இச்சையினால் ஆத்மாவுக்குள்ளே யரூபமாயிருந்தும் ஒருசொரூபம் தோன்றியது. அந்த சொரூபமானதின் பாதம் பாதாளமாயும், இடை பூமியாயும், முகம் சொர்க்கமாயும், முடி ஆகாசமாயும், மூலப்பிரகிருதியிலிருந்தும் முதலாவது முக்குணத்தோடு கூடிய மகத்தகங்காராதி தன் மாத்திரைகளும் பஞ்சபூதாகாரமாய் அநேககோடி பிர்மாண்டங்களும் அண்டபிண்ட சராசரங்களும் பிறந்தன. இதுகளுக்கெல்லாம் நிமித்தகாரண மூலமானது முக்குணத்தோடு கூடிய அகங்காரமான சொரூபமொன்றுதான். இந்த மூல அகங்காரத்திலிருந்தும் பிறந்ததெல்லாம் அகங்காரக்குட்டிகளாம். அந்த அகங்காரமான மேகக்குட்டிகளே ஆத்மாவான ஞான சூரியப்பிரகாசத்தை மறைக்கப்பட்டதென்றறிக. ஆதலால் அகங்காரமாம் முன்கூறிய சஞ்சிதத்திற்கும் உற்பத்திக்குங் காரணம். அகங்காரத்தை யடக்கி குரு அருளான கண்ணாடியில் நின்முகம் பார்த்தால் பார்க்கலாம். அதானது நின் மனம் பரிசுத்தமானால், விளங்கிய கண்ணாடியில் வேறொரு விளங்கிய கண்ணாடியை அதின் மேலே காட்டும்போது, அபேதமாய் விளங்குவதுபோல், அருளான கண்ணாடியில் நிர்மலமாய் அறிவான கண்ணாடி விளக்கிக்காட்டும்போது அதுகளிரண்டும் அபேதமாய் விளங்கி, இரண்டறக்கலப்பதுபோல நீயும் பிர்மானந்தமாய் சிரஞ்சீவியா யிருக்கலாம். மனம் இதைக்கேட்டு, அறிவை வணங்கி ஓ சுவாமி! அதிகோரமாயும் முழு மூடமாயும் மத்த கஜம்போல் பலமுடையதாயும் மகாபயங்கரமாயுமுள்ள அகங்காரத்தை யடக்கி அருள்பெருமார்க்கத்தை விசாலமாக அடியேனுக்குஉள்ளபடி. திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மத்தகஜம்போலுள்ள அகங்காரத்தை யடக்குவது மகா பிரயாசமல்லவா? ஆனாலும் அருளான

சிங்கத்தைப் பார்த்தால் அகங்காரமான மத்தகஜமடங்கும். அருளான சிங்கமாவது எதுவென்றால் குருவான சங்கமாம். அதோடு கூடியதாம் பரிசுத்த மாயை. அகங்காரமானது அசுத்த மாயை. அதானது ஆத்மாவை அந்தரங்க சங்கரமாக மறைத்துவைத்துக்கொண்டு சரீரமே நான் என்கிற அபிமானத்தினால் செய்யுங் காம கர்ம சங்கற்பமாம். சரீரமானது பஞ்சபூத சஞ்சயமயம். அதாவது, பஞ்சபூத சஞ்சய சுக்கில சுரோணிதமான மண்ணுந்தண்ணீரும் கூடி இரண்டறக்கலந்து குயவன் தொழிலாலுண்டாக்கப்பட்ட பாண்டமாமிந்த அகங்காரமான லிங்க சரீரம். அதானது, ஜீவனும் மாயையுங்கூடி பஞ்சபூதாகாரமாய் ஐந்தைந்து ரூபமாய் அநேகாநேக ரூபமாய்த் தோற்றப்பட்டது. எல்லாம் பஞ்சபூதமைந்துதான். அந்தப் பஞ்ச பூதத்திலே பிறந்து பஞ்சபூதத்திலே வளர்ந்து, பஞ்சபூதமே ஆதாரம். பஞ்சபூதமே ஆகாரம். பஞ்சபூதமே எமகாலன். அந்த எமகாலன் எல்லாவற்றையும் சாப்பிடும் அந்த எம காலன்மார்களை காலசத்தி சாப்பிடும். அந்த காலசத்தியை மூலமாயை சாப்பிடும். அந்த மூலமாயையானது எல்லாவற்றையும் சாப்பிட்டுக்கொண்டு பிர்ம்மகற்பத்தின் முடிவில் தன் பதியான பரமாத்மாவிலடங்கி சூக்ஷ்மமாயிருக்கும். ஆனாலுமந்த மாயையினிடத்தில் ஆத்மாவானது வாளும் உறையும்போல் யாதொரு சம்மந்தமுமில்லாமல் பற்றற்றிருப்பதாம். ஆனாலிது இரண்டும் அனாதியாயும் ஏகமாயுமுள்ளதாம். மனம் ஓ சுவாமி அப்படி இரண்டில்லாமல் ஏகமாயிருந்த பரமாத்மாவினிடத்தில் மாயாசக்தியுண்டானது எப்படி என்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அக்கினியில் தூமம்போலேயும், நீரில் குமிழிபோலேயும், பரமாத்மாவினிடத்தில் தோற்றப்

பட்ட மாயா சக்தியானது பரமாத்மாவி லடங்கியிருக்கும் போது அது சுத்த பிர்ம்மமாமென்றும், பெரியவாள் சம்மதம். அதாவதெப்படியென்றால் பரமாத்மாவான மண்ணின் அம்சங்கொண்டு மாயா அகங்காரமான குடம் அந்த அகங்காரமான குடத்தையுடைத்து தூளாக்கிப்போட்டால் அது முன்போல் பரமாத்மாவான மண்ணோடுகூடி ஏகமாய் அபேதமாய் யிரண்டறக் கலந்து இருக்கு மென்பதுபோல் நிஜரூபமான பரமாத்மாவினிடத்திலிருந்தும் சொற்பன சமானமாய்த் தோற்றப்பட்ட மாயா அகங்காரமாம் ஆத்மாவை மறைக்கப்பட்டது. அதாவது சத்துரூபமாயிருந்த ஆத்மாவை அசத்துரூபமாயிருந்த மாயை எப்படி மறைக்குமென்றால் தீயை புகை மறைப்பதுபோலேயும், சூரியசந்திரர்களை ராகு கேதுக்கள் வெகுதூரத்திலிருந்தும் பருவத்தின் முடிவில் மறைப்பதுபோல் ஆத்மாவினிடத்தில் வெகுதூரமிருந்தும் மாயையால் மறைக்கப்பட்டதாகத் தோற்றுவதும் தோன்றுவதுமந்த மாயைதான். அதானது ஆத்மாவை எப்படி மறைக்குமென்றால் பஞ்சதன்மாத்திரைகளோடு கூடிய அந்தக்கரணமாவது அந்தராத்மாவை மறைக்கப்பட்டதாம். அந்தக்கரணமெதுவென்றால் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இதுகள் நாலுங் கூடியதாம். உள்ளத்தில் விவேகம் விளங்குமானால் கள்ளமாயுள்ள அந்தக்கரண பிரமைபான அந்தகாரம் எள்ளளவுங்கிடையாது. அந்தகாரம் நீங்கிவிட்டால் ஆத்மா பரமானந்த பரிபூரண பரஞ்சோதியாய் விளங்கும். உன் உள்ளந்தெளிவடைந்தால் எல்லாம் பிர்ம்ம மயமாம். மனம் ஓ ஆண்டவனே! எல்லாம் பிர்ம்மமயமானால் அகங்காரத்தோடு கூடிய நானும் பிரம்மமல்லவா? குருயார், சிஷியனார், பெந்தமாவதுயாது, மோக்ஷமாவதுயாது, நரக சொர்க்காதி சுக துக்க பேதாபேதங்களேது அது அப்படி

யிருக்க நான் எதை குருவாய் வணங்கவேண்டுமென்று கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! எல்லாம் பிர்ம்மமயமென்று நீ உண்மையாக யறிந்தால் பிர்ம்மாநந்தமாய் சும்மாயிருக்க வேண்டும். அது கூடாமல் விவகாரமிருந்தமட்டும் உள்ளன்புடன் கடவுளை ஆண்டவனடிமையாக குருவை உபாசனை செய்யவேண்டும். அதுகூடாமல் குதர்க்கம்பேசி வாதாடியலையும்பேர்கள் அகங்காரத்தோடுகூடியுள்ள அந்தக்காரணமற்ற மகான்கள் கூறிய மகாவாக்கியங்களான ஞான நூல்களைப் பார்த்து கிளிபைப்போல் வாய் பேசிப்பேசி என்ன பிரயோஜனம். எல்லாம் பிர்மமயமென்றறிந்த மகா யோகிகள் அந்தக்கரணத்தைபடக்கி ஆத்மாராமனுப் பிர்ம்மானந்தமாய் சும்மாயிருப்பார்கள். இவ்வுலகமெல்லாம் கெனவு கண்டதுபோலவும், கானல் ஜலம்போலேயும், கண்டதொன்றும் உண்மையல்லவென்றும், மகத்துக்களும் வேதங்களும் கூறிய மகாவாக்கியங்களினுடைய தாற்பர்யம் எதுவென்றால், சராசரத்திற்கும் அந்தரியாமியாயிருந்த பரமாத்மாவானது அரூபமாதலால் அது அஞ்ஞானிக ளறியக்கூடியதல்ல. அசத்தான அகங்கார மடியோடு நசித்தால் எல்லாம் பிர்ம்ம மயமாம் என்றும் அறியலாம். இதுகூடாமல் சூடு சூடு என்று சொன்னால் சூடாகுமா, சீதம் சீதம் என்று சொன்னால் சீதமாகுமா, அன்னம் அன்னமென்று சொன்னால் பசி தீருமா, அமிர்தம் அமிர்தம் என்று சொன்னால் சிரஞ்சீவியாயிருக்கலாகுமா, அது போல், எல்லாம் பிர்மம் பிர்மம் என்று வாய்ப் பேச்சினால் பிர்ம்ம மயமாய் ஜீவன் முத்தியடையலாகுமா, அநேக ஞான நூல்களைப்பார்த்து பிர்ம்மம், பிர்ம்மமென்று கிளியைப்போல எவ்வளவுகாலம் பேசினாலும் பிர்ம்மாநந்த பதமடையமுடியாது. அந்த சர்வாத்மாவானது வாக்கு

மனங் காயங்களினாலும் எட்டாத வஸ்துவாம். மால் அயன் தேடியுங் காணாததாம். ஆதலால் அப்படிக்கொத்த பரமாத்மாவைப் பார்க்கவேண்டிய ஆவலுடன் அன்னதான தபோ விருத யாகாதி கர்மங்களினாலும் அநேக வேதாந்த சாஸ்திர பாடங்களினாலும் அந்த பிர்ம்மாநந்தப் பொருளைப் பார்க்க முடியாது, இது சத்தியம். ஆனாலுமதை எப்படிப் பார்க்கக் கூடுமென்றால் அந்தகரணமற்று அருள்பெற்று அசைவற்ற வாகாசம்போல் பரிபூரணமாய் விளங்கும் மகா யோகிகளுடைய அந்தரங்க சமாதியில் பார்க்கக்கூடியதாம். இதற்கு சந்தேகம் வேண்டாம். ஆதலால், எல்லாம் பிர்மமயமாமென்றெண்ணி விஸ்வாசம்வந்தால் விவகாரமெல்லாம் விட்டு ஆசையற்று, அசைவற்று, ஆனந்தமாய் சும்மாயிருக்க வேண்டும். அதற்கதிகாரமும் சக்தியுமில்லாவிட்டால் சராசரத்தையும் பரமாத்மாவாகப் பாவித்து பக்திசெய்யவேண்டும். அதற்கும் சக்தியில்லாவிட்டால் ஒருகுருவையடுத்து பரமாத்மபாவனையால் அன்புற்று சேவிக்கவேண்டும். அதற்கும் சக்கியில்லாவிட்டால் நல்ல சத்கர்மங்களைச்செய்து பரமாத்மாவில் அர்பணமாக்கவேண்டும். ஓ மனமே! இவைகளில் எதனாலாகிலும் மனதை ஒரு வழியாக்கி யடக்குமுபாயம் பாராமல். எல்லாம் பிர்மமென்றால் உனக்கென்ன லாபம் வரும். ராகத்துவேஷாதி யபிமானமிருக்குமட்டும் மனம் எதைக்கண்டது. என்னசுகமடைந்தது. மனதை யடக்குவதே சுருதியுக்தி அநுபவமாம். மனமடங்கிவிட்டால் அது பிர்மமாமென்பதற்குச் சந்தேகமில்லை. மனமடக்குவது மகா பிரயாசம். ஆனாலும் அந்தக்கரணம் நான்கும் குணங்கள் மூன்றும், செய்வினை யிரண்டும்கூடி கலந்திருந்து அரை நிமிஷத்திற்குள் அநேக தேசமெல்லாம் சுற்றிச்சுற்றியலையும் மனதிற்கு இருவினையும் குணங்கள் மூன்றும் அந்தக்கரணம் நான்கும் இருக்குமட்டும் மனமடங்காது. வினைகளிரண்டும்

குணமூன்று மடங்கிவிட்டால் மனம் பரிசுத்தமாம். ஓ மனமே! உனக்கு எல்லாந்தெரியுமானாலும் உன் மனதை உனக்குத் தெரியுமா தெரியாது? மனமானது திருடன் ஆதலால் நானாவழியோடிப்போன திருட்டு மனதை யடக்கும்பொருட்டு அம்மனதைப் பிடித்துக் கட்டவேண்டும். அதற்கு முதலாவது அந்த திருட்டு மனதைத் தேடுவதாம் சரியை. அந்தத் திருட்டு மனதைத் தேடிக்கண்டதுதான் கிரியை. அந்த திருட்டு மனதைக் கண்டுபிடித்துக் கட்டுவதே யோகம். அந்தத் திருட்டு மனதைக் கொல்லுவதே ஞானமாம். ஆதலால் ஞானமடையும்பொருட்டு மனம் அடக்குவதற்கு குருவை உபாசனை செய்யவேண்டும். அதற்கு முதலாவது மனதிற்கு மூன்று குணமிருந்தமட்டும் சகுணமாயுபாசிக்கவேண்டும். அந்தப்படி சகுணத்தியானம் செய்து ராஜச தாமசமற்று சாத்வீகமடைந்தால் அந்த சகுணத்தியானத்திலிருந்தும் தன் குருவை நிற்குணத்தியானம் செய்ய வேண்டும். அதாவது இந்திரியங்களையெல்லாம் மெள்ள மெள்ள மனதினாலடக்கி ஆசையைவிட்டு மனதை துரியநிலையில் நிறுத்தி தூயபக்தி விஸ்வாசத்துடன் பார்த்தால் பரமானந்தமாயிருக்கும். அதற்குமுன் அன்பான அகமலர்க் கமலமதை எடுத்து அதிக சிரத்தையுடன் ஆதரவால் அர்ச்சனை செய்யவும் அன்புடன் தியானித்தும், துதித்தும், நமஸ்காராதி கைங்கரியங்களைச் செய்தும் அபேதமாய் பூசனை செய்யவும் பழகி வருவதானால் வாக்கு, மனக், காய மூன்று மடங்கும். முக்கரணங்களுமடங்கினால் முத்தொழிலும் நசிக்கும். முத்தொழிலும் நாசமடைந்தால் மூன்றவஸ்தையுங் கிடையாது. மூன்றவஸ்தையுமில்லாவிட்டால் முக்குணசகிதமான மூன்று அகங்காரமும் நசிக்கும். அகங்கார மூன்று மடங்கிவிட்டால் மும்மலங்களுமறும். மும்மலங்களுமற்றால் சித்தம் பரிசுத்தமாய் ஸ்ரீ சற்குரு திரு

வருள் பெறலாம். ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றால் ஆத்மக்ஞானம் தானேயடையலாம். எல்லாவற்றிலும் சிறந்தது ஞானம், ஞானத்திலும் சிறந்தது ஸ்ரீ பரம குருபக்தி. பரம குருபக்தி இல்லாமல் ஞானம் வராது. ஞானமில்லாமல் பக்தியும் வாராது. ஆதலால் ஞானமும் பக்தியுமிரண்டும் துகந்துகமாய் யேகமென்றறிக. ஞானமாவது எதுவென்றால் வாக்குமனக்காயங்களான இந்திரியங்களையடக்கி தன்னைத்தானறிவதாம். பக்தியாவது யாதென்றால் வாக்கு மனக்காய மூன்றினாலும் கடவுளை பஜனை செய்து ஜீவாத்மாவை பரமாத்மாவி லக்கியம் செய்வதுதாம். அதாவது ஆத்மா பரமாத்மாவினிடத்தில் மிகுந்த அன்புதான் ஐக்கியமென்றறிக. ஞானமாவது சர்வ ஆத்மாக்களும் பரமாத்மா ஒன்றுதான் சந்தேகமில்லை என்றும், அபேத பாவனையாயிருப்பதுதான். இன்னுங்கேள் பக்தியானது தாசாநுதாச பாவனையாய் குருபகவத்பாத சேவை செய்வதுமாம். இன்னும் ஞானமாவது பிர்மானந்தமாயிருப்பதாம். பக்தியாவது மனோகரமாம். ஞானமாவது சுயம்பிரகாசமாம். இன்னும் பக்தியாவது பரமசுகத்தைத் தேடுவதாம். ஞானமாவது பரமானந்தமாயிருப்பதாம். பக்தியாவது துக்க நிவர்த்தியாம். இன்னும் ஞானமாவது சுகமாய் பிர்மானந்தமாய் சும்மாயிருப்பதாம். ஆதலால் ஞானத்திற்கு முக்கியமானது பக்தியொன்றுதான். குருபக்தி இல்லாத ஞானம் காற்றினிடம் விட்ட பஞ்சுக்கு சமானமாம். ஆகலால் ஞானத்திலும் சிறந்தது ஸ்ரீ சற்குரு பக்தியாமென்றறிக. பக்தியில்லாத ஞானமும் பக்தியில்லாத கர்மமும் பக்தியில்லாத தபோவிருதாதி நிஷ்டைகளும் வியர்த்தங்களாம். எத்தொழிலுக்கும் முதலாவது சத்பக்தி வேண்டுமென்றறிக. இந்த உலகத்தில் பக்தி இல்லாமல் ஒருவருமில்லை. ஆனாலும் பிரகலாத ஆழ்வார் முதலான பக்தருடைய சரித்திரங்களைப்

பாரும்; சந்தேகந்தீரும். பக்தியில்லாமல் அருளுங் கிடையாது. பொருளுங்கிடையாது. அருள் பெருவிட்டால் ஞானமுங்கிடையாது. ஆதலால் எல்லாவற்றிலும் சிறந்தது ஸ்ரீ சற்குருபக்தி ஒன்றுதான். அதினுல் அருள் கிடைக்கும். சற்குருவின் திருவருள் கிடைத்தால் எல்லா சித்தியும் பெறலாம். மனம் ஓ சுவாமி! ஸ்ரீ சற்குருவின் திருவருளைப் பெறுவதெப்படி. அதினுடைய சொரூபமென்ன வென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! குரு அருளானது அந்தக்கரண தெரிசனமாம். அதற்கு ரூபமில்லை. அரூபமாம். ஆனுலும் அது சுயம்பிரகாசமாய் பிர்மானந்தமாயுமுள்ளதாம். அதைப் பெறுவதெப்படி என்றுல் முன் அநேகநேக ஜென்மங்களில் அன்பர்களான மகத்துக்களையடுத்து கபடமில்லாமல் ஆத்ம விஸ்வாசத்துடன் பாதபூசை செய்து பழகிவந்த இயற்கை வாசனையால் புண்ணியம் பூரணமானுல் அந்தக்கரணம் பரிசுத்தமாகும். அந்தக்கரணம் பரிசுத்தமானுல் பூர்ண விஸ்வாசமாய் ஒரு சற்குரு தெரிசனமாகும். சற்குரு தெரிசனமானுல் அந்தக் குருவையடுத்து அவருடைய உள்ளம் சுயம்பிரகாசமாய் சந்தோஷித்தருள் செய்யும் பொருட்டு கபடமில்லாமல் பாதுகாத்து பலநாள் பணிவிடை செய்துப் பழகி வருவதனுல் அவர் சந்தோஷமடைந்து சூரியோதயகாலத்தில் இருளானது மெள்ள மெள்ள நீங்கி எங்கும் பிரகாசமாய் விளங்குவதுபோல குருப்பிரசாதமான அருள் பிரகாசத்தினுல் மெள்ள மெள்ள தன் உள்ளமிருள் நீங்கி அருளான பரஞ்சோதி உதயமாய் எங்கும் பிரகாசமாய் பரிபூரணுனந்தமாய் விளங்குவதாம். அருட்பரம் பெரும் பொருளென்றுமறிக. இதைத்தவிர மந்திரமல்ல, தந்திரமல்ல, சதாநிஷ்டை செய்வதுமல்ல. அருளான பரம்பொருள் மகாத்மாக்களை

நாம் அன்புற்றுப் பார்த்தால் அதுதான் அருள். அதானது ஜனன மரணாதி துன்பங்களுக்கேதுவான ஈஷணை வலையை அறுத்து நிராசையாய் நாசமில்லாத பூரணாநந்தமுட்கொள்வதாம். அருட் பரம் பெரும் பொருளென்றறிக. புண்ணியமில்லாமலிப்படிக்கொத்த அருளைத் தேடிக் கண்டடுத்துக் கூடுவது மகாப் பிரயாசம். ஏனெனில் பூர்வ புண்யத்தினாலொருவனதை யடுத்து கண்டருள் பெற்றாலும் அதனுடைய அநுபவத்தை யொருவர்க்கொருவர் சொல்லிக்கொடுக்கத் தகுந்ததல்ல கொடுத்தாலுமதை கேட்டுக்கொள்ளத் தகுந்ததுமல்ல. அந்தக்கரணம் சுத்தமானால் சூரியனைப் பார்த்த பத்மராகத்தைப்போல் அருள் பொருந்தி ஐக்கியமாயிருக்கும். அதாவது குருவைப் பிர்மானந்தமாய் அன்புருகக் கண்ட சந்தோஷமே ஐக்கியமாம். அதுவே பிர்மானந்தமாம். மனம் ஓ ஆண்டவனே! ஆசைதான் பெந்தத்திற்கேதுவானதென்றும், பெந்தமே மோக்ஷத்திற்கு விரோதமென்றும் நன்றாய்த் தெரிந்து கொண்டேன். ஆசையால் வந்ததுதான் இந்த சரீரம். இந்த சரீர மெடுத்ததற்கு முன் ஆசையானது எங்கே யிருந்தது? சரீரம் மரணமடைந்தபின் அந்த ஆசையானதும் மரணமடையுமா அல்லது யிருக்குமா? அப்படி யிருக்குமானால் அதற்கிருப்பிடமெங்கே? அதைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆசைக்கு ஓர் அளவும், எல்லையும், தொகையும், ஆதியந்தமுமில்லை. ஆனாலும் எள்ளு வித்தானது பூமியிற்போட்டு முளைத்து இரண்டிலையான சமயம் அந்த எள்ளும் அதனுடைய எண்ணெயுமெங்கேயிருந்தது. அதுபோல் வித்தானது முளைத்து கிளையான சமயத்தில் அந்த வித்தும் அதனுடைய பலனுமெங்கேயிருந்தது. அதுபோல் நீ உன்தாயார் வயிற்றில் ஜெனனமாவதற்குமுன்

நீ எங்கேயிருந்தாய்? அதனக்குத் தெரியுமா? தெரியாது. அது அப்படியிருக்க நீ முன்கேட்டகேள்விக்கு நான் என்ன பதில்சொல்லவேண்டுமென்று யோசிக்கின்றேன். ஆனாலு மிந்த உலகத்தின்கண் சராசரபூதகோடிகளும் ஆசையி லிருந்தும் பிறந்தது. அதானது அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம், சராயுஜம் இந்தப்படி நான்குவகை பூதகோடி களும் ஆசையிலே பிறந்தது. அதாவது அநாதியாயுள்ள மூலவாசனையெல்லாம் சூக்ஷ்மமாய் தன்கெற்பத்திற்குள் வைத்துக்கொண்டு அதிசூக்ஷ்மமாய் எங்கும்பரிபூரணமாயும் சர்வவல்லமை யுடையதாயுமிருந்த மூலமாயசக்தியினுடைய சாமார்த்திய வைபவ மொருவருக்கும் தெரியாது. ஆனாலு மந்த சக்திதான் சர்வத்திற்கும் வித்தானதும் வித்துக்குள் முளையானதும் அந்தசக்திதான். அந்த முளையின் கருத் தானதுமந்த சக்திதான் அந்தமுளையை மரமாக்குவதும் அந்த சக்திதான். அந்த மரத்தை வளர்ப்பதுமந்தசக்தி தான். மரத்தின் பூவானதுமந்த சக்திதான். பூவுக்குள் பலன் தோற்றுவதுமந்த சக்திதான். அந்த பலத்தை வளர்ப் பதுமந்த சக்திதான். அந்தக்காயை பாழாக்குவது மந்த சக்திதான். அந்தப்பழத்தினுடைய மதுரமானதுமந்த சக்திதான். அதற்குள்ளிருந்த வித்தானதுமந்த சக்திதான். எல்லா ஜீவர்களுமந்த சக்திதான். எல்லா ஜீவர்களையும் ஜீவிப்பிக்கச்செய்வதுமந்த சக்திதான். எல்லாஜீவர்களுக் கும் ஜீவியானதுமந்த சக்திதான். மாதாபிதாக்களுடைய காமமானதுமந்த சக்திதான். சர்வபிராணிகளுக்கும் உற் பத்தி ஸ்தானமானதுமந்த சக்திதான். அது கெற்பத்துக் குள்ளிருந்து தவறிப்போகாமல் பத்துமாதங்காப்பாற்றியது மந்த சக்திதான். அநேகவிசித்திரமாய்த் தோற்றுவதுமந்த சக்திதான். நல்ல சுகந்தமானபுஷ்பங்களுமந்த சக்திதான். அந்த புஷ்பங்களின் வாசனையானதுமந்த சக்திதான்

அந்த புஷ்பங்களிலதிக மதுரமாயுண்டான மதுவுமந்த சக்திதான். அந்த மதுவின் போதையானதுமந்த சக்திதான். அதையநுபவித்தானந்தமாயிருந்ததுமந்த சக்திதான். அகிலாண்டகோடி பிர்மாண்ட நாயகியானதுமந்த சக்திதான். ஓர் அண்டத்துக்குள் ஒரு பிண்டத்தை யுருவாக்கினதுமந்த சக்திதான். ஒருபிண்டத்திற்குள் பிர்மாண்ட கோடியண்டங்களை நிர்மாணம்செய்ததுமந்த சக்திதான். அநேக நாமரூபங்களை ஒன்றற்கொன்று தாரதம்மியமில்லாமல் அநேகவித பேதமா யிந்திர ஜாலம்போல் சத்தியமாய்த் தோற்றிவைப்பதுமந்த சக்திதான். பிர்மாண்டங்களை எல்லாம் ஒருபாண்டமாக்கி ஆண்டதுமந்த சக்திதான். பரம ஞானிகளுக்குள்ளே ஞானசிற்சக்தியாயிருந்ததுமந்த சக்திதான். பரமபக்தாளிடத்தில் இச்சா சக்தியாயிருந்தது மந்த சக்திதான். நல்ல சத்கர்மிகளிடத்தில் கிரியாசக்தியாயிருந்ததுமந்த சக்திதான். எல்லாமந்த சக்திதான். எல்லாவற்றிலுமந்த சக்திதான். எங்கும் பரிபூரணமாய் ஸ்ரீமயமாயிருந்ததுமந்த சக்திதான். சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம் திரோதானம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிர்த்தியங்களுமந்த சக்திதான். அந்த பஞ்சகிர்த்தியங்களுக்கு முன்னும் பின்னும் உள்ளும் புறமும் கீழும் மேலும் பரிபூரணமாயிருப்பதுமந்த சக்திதான். அகிலாண்டமுமந்த சக்திக்குள்ளே ஒரணுமாத்திரமாயடங்கியிருக்கிறது. அந்த அணுவுக்குள்ளே அகிலாண்டமுமிருக்கிறது. அகிலாண்டதிற்குள்ளிலுமந்தசக்தி யணுவுக்கணுவாயும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆதலால் அஞ்ஞானிகளுக்குள்ளே ஆசையாயும் விஞ்ஞானிகளுக்குள்ளே நிராசையாயுமிருந்ததுமந்த சக்திதான். இதற்கு ஆதியந்தங் கிடையாது. என்பது நிச்சயம். ஓமனமேகேள்! பிர்மசக்திக்கு அளவும் தொகையும் எல்லையுமில்லை. மனம் ஓ சுவாமி! இந்த பிர்ம சக்திக்குடைய சக்தன் யார் என்றுகேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்த பிர்மசக்திக்குடையவர் யாரென்ருல் பிர்மசக்தன் ஒருவனேயாம். பிர்ம்மசக்தனுடைய சக்தியாதலால் அதற்கு பிர்மசக்தி என்றும், பிர்ம்மசக்தியினுடைய சக்தனுதலால் பிர்மசக்தனென்றும் மகத்துக்கள் சொல்லுவார்கள். எல்லாசக்திக்கும் சக்தியானது பிர்மசக்தி ஒன்றுதான். எல்லாசக்திக்கும் சக்தனுக்கும் சக்தன் பரமாத்மா ஒன்றுதான். பிர்மசக்தியானது சக்தனிலும் சக்தன் சக்தியிலும் அடக்கமானுல் அதைத்தவிர அணுவளவும் வேறேயில்லை என்பது நிச்சயமாம். ஓ மனமே! ஒருகாலத்திலாவது மாயாசம்மந்தமில்லாத பரமாத்மா ஒன்றுதான் சர்வசக்தனென்றும், ஒருகாலத்தும் பிரியாமல் தன்பதியான பரமாத்மாவோடுகூடி இரண்டரக்கலந்திருந்ததுதாம் பிர்மசக்தி என்றும் இரண்டும் நாதியாமென்றறிக. அதானது பாலுக்குள் நெய்யிருந்ததுபோல நிரூபிக்கவேண்டும். மாயாகற்பிதமிருந்தமட்டும் அநேகசந்தேகங்களும் தர்க்கம் தகராருகளுமாயிருக்கும். மாயாகற்பிதமில்லாவிட்டால் சந்தேகமணுவளவுமிராது சூக்ஷ்மமாயிருக்கும் ஆகாசம் போல் பரிபூரணமாயும் ஏகமாயும் பிர்மத்தோடொத்திருந்த பிர்மசக்திக்கு அநேகநாமரூபங்களுண்டு. ஆகாசம்போல் அபேதமாய் பரிபூரணமாயிருந்த பரமாத்மாவுக்கு நாமரூபங்கிடையாது. அதாவது ஆதியந்தமில்லை. ஆனுலுமதுகளிரண்டும் ஏகமாகையால் அகண்டமான சக்தியிலிருந்தும் அநந்தசக்திகள் தோற்றியது. அந்த அநந்தசக்திகளும் அகண்டபரிபூரணமான பிர்மசக்தியிலடங்கியிருக்கும். அந்த பிர்மசக்தியானது அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமான பரமாத்மாவிலடங்கியிருக்குமென்றறிக. மனமிதைக்கேட்டு ஓ ஆண்டவனே! அடியேனுடைய சந்தேகமாவது அகண்டபரிபூரண சச்சிதானந்த சொரூபமான பரமாத்மாவுக்கு ளடங்கியிருந்த மாயாசக்தி

யானது அந்த பரமாத்மாக்குள்ளிருந்தும் ஆமையைப்போல் ஐந்து அவயவங்களோடு கூடி வெளிப்படக் காரியமென்ன வென்று கேட்க அறிவுகூறியது.

ஓ மனமே கேள்! அகண்டமான பரமாத்மாவில் ஐக்கியமாய் அரூபமாய் ஆனந்தமா யிரண்டறக் கலந்திருந்த மாயா சக்தியானது ஆமையைப்போல் ஐந்து அவயவங்களோடுகூடி யொரு சொரூபமா யிருந்துகொண்டு மூன்றுலகத்தையுஞ் சிருஷ்டித்தது. இந்தப்படி ஒரு கற்பகாலம் சுகமாயிருந்து பார்த்ததில் அடிக்கடி துன்பம் மேலிட்டு இதில் அணுவளவுமின்பமில்லை என்று கண்டு அந்த ஐந்து அவயவங்களை ஆமையைப்போல் தனக்குளடக்கி ஆத்மாவுக்குள்ளே யணுவாயடங்கி அரூபமா யானந்மா யிருந்தது. அது மகத்தகங்காராதி தன்மாத்திரைகளினுலும் பஞ்சபூதாகாரமான உலகமானது சொற்பன சமானமென்றெண்ணி ஐந்து அவயவங்களேயும் தனக்குள்ளடக்கித் தான் தன்பதியான பரமாத்மாவி லிரண்டறக் கலந்திருந்தது. இந்தப்படி ஒரு கற்பம் கழிந்தபின் முன்போலடிக்கடி எத்தனையோ கோடி கற்பமாய் விட்டதோ இனிமேலெத்தனைகோடி கற்பமாகப்போகிறதோ இது ஒருவருக்கும் தெரியாது என்பது நிச்சயம். ஆனலும் ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றால் சந்தேகந்தீரும். மனம் ஓ ஆண்டவனே! தேவரீர் ஒரு சமயம் அகண்டபரிபூரணவஸ்துவாம் குரு என்றும், ஒரு சமயம் சராசரப்பிரபஞ்சமாம் குருவென்றும் ஒரு சமயம் முக்குணத்திற் கதீதமாயும் பரிசுத்தமாயும் சிற்பிரகாசமாயுமுள்ள அருட்சக்தியாம் குருவென்றும் முன் கூறியிருக்கிறீர்கள். இந்தப்படி அநேகம் குருவைக் காண்பித்தால் அடியேனெந்தக் குருவை நம்பவேண்டும். ஒரு குருவினிடத்தில் சந்தேகமில்லாமல் அன்புடன் விஸ்வாசமிருந்தா

லல்லவோ மனமொருமைப்படும். மனமொருமைப்பட்டு ஒருவழி போனலல்லவோ மனமடங்கும். ஆதலாலடியே னுடைய சந்தேகமெல்லாந் தீர்த்தருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நிவர்த்தி, பிரவிர்த்தி இதுகளிரண் டும் நரர்களின் க்ஷேமத்தின்பொருட்டு கடவுளாலேற்பட்ட தாம். இதுகளில் பிரவிர்த்தியின் பயனுவது போகம். நிவர்த்தியின் பயனுவது மோக்ஷம். பிரவிர்த்தியாவது காம கர்மம். அது பெந்தம். நிவர்த்தியாவது நிஷ்காமகர்மமாம். அது பெந்தநிவர்த்தி. அதுவே மோக்ஷம். இதுகளுக் கதிகாரி பேதமுண்டு. அதாவது நிவர்த்திக்கு இச்சை யுடையவாள் அதிதுர்லபம். மற்றனைவரும் பிரவிர்த்திக் கிச்சையுடையவா ளதிகமென்றறிக. கர்மிகளுக்கு காமி யார்த்தமாக சம்சாரமானது மென்மேலும் விர்த்தியாகும் பொருட்டு உபதேசம் செய்யும் பொய்க்குருக்களு மநேக முண்டு. அதற்கு மந்திரகலை தந்திரகலையு மநேகமுண்டு. இதுகளினலாசை மென்மேலும் வளரும். ஆசை வளர வளர சம்சாரதுன்பங் கொடியதாகும். நிவர்த்திக்கு இச்சையுடையவாளுக்கு உபதேசிகர் ஒருவரே போதும். அப்படியுள்ள மகத்துக்கள் மனிதர்களில் கோடாகோடியில் ஒருவரிருந்தாலுமிருக்கும். ஆனுலும் நான்கு சாதனங்களு மடைந்து ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெறவேண்டும். அந்த சற்குருவானது முக்குணத்திற்கதீதமாயும் மாயாசகித ராயும் மாயாரகிதராயும் மானிடரூபமாயும் குணதீதமாயு மிருக்குமென்றறிக. அப்படிக்கொத்த குருதெரிசனமாவது ராகத்துவேஷாதி அபிமானவிர்த்திகளோடு கூடியிருக்கும். சம்சாரிகளுக்குக் கிடைப்பதரிது என்றும் முன்கூறிய தாத் பர்யம். ராகத்துவேஷாதி யபிமானவிர்த்திகளை நீக்கி சித்தம்

பரிசுத்தமானால் ஸ்ரீ சற்குருவின் தெரிசனமாகும். மனம் ஓ சுவாமி! ராகத்துவேஷாதிகளாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆகாசம்போல் பரிசுத்தமாயும் சாத்வீகமாயுமுள்ள சித்தத்தை அசுத்தமாக்குவது யாதெனில் ராகத்துவேஷாதிகள் பதின்மூன்றுமாம். அதாவது ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மதம், மாச்சர்யம், ஈருஷை, அசூயை, டம்பம், தெர்ப்பம், அகங்காரம் இதுகள் பதிமூன்றும் சித்தத்தை அசுத்தமாக்கி ஆத்மாவை மறைக்கப்பட்டதாம். இதுகளில் ராகமாவது தன்மனதுக்கிணங்கிய ஒருபெண்ணைக் கைபிடித்துக் கல்யாணம்பண்ணி சம்மதமுண்டாக்கியதால் இவள் என்னுடைய மனைவி, நான் சொன்னபடி கேட்கவேண்டும், இவளெனக்குச் சொந்தம், எனக்கு தாசியாயிருக்கவேண்டும், இவளோடுகூடி அனுபவிக்கும் சுகமே சுகம், இதுவே மகா சிலாக்கியம், இதுவே மகா பாக்கியம், இதுவே தேவாமிர்தம். இதை ஒருநாளும் விடக்கூடாது என்றும் இப்படிக்கெல்லாம் பிரியமாய் அபிமானிக்கும் விர்த்திகளுக்கு ராகமென்று பெயர். இரண்டாவது துவேஷம் என் மனைவியை வேறொருவர் தொட்டால் அவனை வெட்டவேணுமென்றபிமானிப்பதாம் துவேஷம். மூன்றாவது காமம் என் மனைவிக்கு குழந்தை பிறக்கவேண்டும், வீடு வேண்டும், மாடு வேண்டும், பூமி வேண்டும், பொன் வேண்டும், பலவகைத் தானியங்களும் வேண்டும், பொன் வெள்ளி பாத்திரங்கள் ஆனை சேனை பரிவாரங்கள் தட்டுமுட்டு சாமான்கள் வேண்டும், கீர்த்தி சித்திகளனேகம் பெறவேண்டும், பலம் வேண்டும், ஆயுசு வேண்டும், இன்னமும் மனைவி மக்களநேகம் வேண்டும், இந்தப்படி எல்லாமபிமானிப்பதாம் காமம். நான்காவது குரோதம் ஓகோ இவள்

என்னுடைய மனைவியாயிருந்தும் நான் சொன்னபடி கேட்கிறதில்லை, மக்களும் நான் சொன்னபடி கேட்கிறதில்லை, இதற்கு நாமென்ன செய்வோம், ஆனாலுமிவர்களை எல்லாமிரண்டுதுண்டாய் வெட்டிப்போட்டு நானெங்கேயாவது போய்விடுகிறேன் என்றபிமானிப்பதாம் குரோதமென்றறிக. ஐந்தாவது லோபம் தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருளில் ஒருகாசானாலும் ஒருவருக்கும் நான் கொடுக்கமாட்டேன், அல்லாமல் நல்ல தர்மத்திற்கானாலும் ஒரு காசு கொடுத்தால் அவ்வளவும் பொருளில் தொகையில் குறைவாகிவிடும் என்பதற்குச் சந்தேகமுண்டா? ஆதலால் ஒருவருக்கும் ஒருகாசும் கொடுக்கமாட்டேன். இந்தப்படி எல்லாமபிமானிப்பதால் லோபம். ஆறாவது மோகம் நித்தியமாயுள்ள பரமானந்த சுகத்தை மறந்து அநித்தியமாயும் அநேக துன்பங்களுக்கேதுவாயும் பொம்மையைப்போல் மாயாமயமாயுமுள்ள சரீராதி வஸ்துக்களில் இன்பமாயபிமானிப்பதாம் மோகம். ஏழாவது மதம் நீ யாரடா நானொரு சிங்கம் அநேகம் யானைக்கூட்டம் வந்தாலும் நான் பயப்படமாட்டேன் அடே கெஜபோக்கிரி முழுமூடா நானயாரென்றுனக்குத் தெரியுமா நானொரு காரியத்திற்கு தொடர்ந்தால் அதை விடேன் எனக்கெதிரி யொருவருங் கிடையாது பொருளுக்கு முதல்வன் நான்தான் ஆதலால் எல்லோரும் வந்து என் காலில் விழவேண்டும் அல்லாமற் போனால் அவன் குடியை அடியோடு கெடுப்பேன் அவனுடைய கள்ளமெல்லா மெனக்குத் தெரியும் இந்தப்படி எல்லாமபிமானிக்கும் விர்த்தியாம் மதம். எட்டாவது மாச்சரியம் இவன் எனக்கிழிவானவன் இதற்குமுன்னம் என் கீழ்வேலைக்காரனாயிருந்து மிப்போது செல்வமுடையவனாய் மேலே யிருக்கிறான் என்னைக் கண்டால் மரியாதை செய்கிறதில்லை அது எனக்கு வயற்றெரிச்சலா யிருக்கிறது

இந்தப்படி எல்லாமபிமானிக்கும் விர்த்தியாம் மாச்சரியம். ஒன்பதாவது ஈருஷா எனக்குவந்த துன்பம் எதிரிக்கு வரக் கூடாதா வென்றபிமானிக்கும் விர்த்தியாம் ஈருஷா. பத்தா வது அசூயை எதிரிக்குவந்த இன்பமெனக்கு வரக்கூடாதா வென்றபிமானிக்கும் விர்த்தியாம் அசூயை. பதினொன்று வது டம்பம் நான் மகா புண்ணியவானென்று பலரு மென்னைப் புகழவேண்டும் அதற்கு பல யாகாதி கர்மங்களைச் செய்யவேண்டும் குலாசார தர்மமே பெரிதென்றெண்ணு வார்கள் இந்தப்படி யபிமானிக்கும் விர்த்தியாம் டம்பம். பனிரெண்டாவது தெர்ப்பம் எதிராளி செய்த அபகாரத்தை நான் செத்தாலும் மறக்கமாட்டேன் நான் யாருக்கும் பயப் படமாட்டேன் என்னிடம் யார் வந்தாலும் வரட்டும் அவனை நான் ஜெயிப்பேன் அல்லாமற்போனால் அவன் வந்தென் காலில் விழவேண்டும் அதல்லாமல் நானடங்கமாட்டேன் என்று அபிமானிக்கும் விர்த்தியாம் தெர்ப்பம். பதின்மூன்று வது அகங்காரம் மேற்கூறிய ராகாதி பனிரெண்டும் ஒன்று கக்கூடிய ஸ்தூல சரீரமே நானென்றபிமானிக்கும் விர்த்தி யாம் அகங்காரம். அந்த அகங்காரத்தின் சுபாவீகமாவது எப்படியென்றால் நான் கண்ணினால் கண்டதும் சத்தியம். என் காதினால் கேட்டதும் சத்தியம். வாக்கினால் பேசிய தும் சத்தியம் நான் கையினால் செய்ததும் சத்தியம் நான் நினைந்ததும் சத்தியம் நான் சொன்னதும் சத்தியம் நான் செய்ததும் சத்தியம் நான் செய்வதும் சத்தியம் நான் போகாமலிருந்தால் அந்தக்காரியம் நடக்குமா நடக்கமாட் டாது ஒருவராலுமாகாத காரியம் நானனேகமாய் முடித்தே னிது நிச்சயம் இன்னும் சில காரியமிருக்கிறது அதையும் முடித்துப்பின் உயிர்விடுகிறேன். இந்தப்படி இந்திரியங் களினாற் செய்யும் தொழில் பொய்வினையெல்லாம் நானென் றபிமானிக்கும் விர்த்தி ஒன்றுதான் அகங்காரம். இப்படிக்

கொத்த அகங்காரமான ராகாதிவிர்த்திகள் பதின்மூன்றும் அனாதியான சேர்க்கை வாசனையோடு கூடிய பிண்டமாமிந்த லிங்கசரீரம். சரீரத்தினாற் செய்வது கர்மம். கர்மத்தின் பயனாவது புண்ணிய பாபம். இதுகளில் புண்ணியமதிக மானால் சொர்க்கம். பாவமதிகமானால் நரகம். இதுகளிரண் டும் சமமானால் மானிட ஜென்மம். ஆனாலும் சொர்க்கத்தி லுமுண்டு நரகம். நரகத்திலுமுண்டு போகம். இந்தப்படி சரீரம் அடிக்கடி எடுப்பதும் கர்மமும் மரணமும் ஜென்மமு மடிக்கடி நரகமும் சொர்க்கமும் ஆவதுமழிவது மெல்லாம் மாயா கற்பிதமாம். இதற்காதியந்தமில்லை. கர்மகர்த்தா வானது அகங்காரம். அந்த அகங்காரத்திற்கு அறிவாயபி மானித்திருந்தது ஜீவன். அந்த ஜீவனை யறியாமல் ஜடமே நானென்றபிமானிப்பதே அஞ்ஞானம். இதை யடக்குவதே சுகம். மனம் ஓ சுவாமி! மேற்கூறிய நானென்றபிமானிச் கும் அஞ்ஞானத்தை யடக்கு முபாயமெப்படி அது எந்தக் காலத்திலடங்குமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இயற்கையாய் வந்த சாதுசங்கப் பழக்கத்தினால் புண்ணியம் மேலிடும். புண்ணிய மேலிட் டால் அந்த ஜென்மத்தில் ஒரு சற்குரு தெரிசனங் கிடைக் கும். அந்த சற்குரு தெரிசனமடையுநாள் வரைக்கும் இந்த அகங்காரத்திற்கும் சம்சாரத்திற்கும் நாசமில்லை. நெடுநாளிருந்து ஸ்திரீபோகாதி சுகங்களை யனுபவிக்கும் பொருட்டு ஆசையுடையவாளுக்கு இதனுடைய உண்மை விளங்காது. அதாவது கனவிலும் நினைவிலும் மனமொன்று தான். ஆனாலும் மரப்பாலுண்டு மயங்காமல் மனப்பா லுண்டு மயங்காமலிரு என்பதுபோல் மனப்பாலுண்டா லருட்பால் பெறலாம். அருட்பால் பெற்றால் அகங்காரம் நசிக்கும். அகங்காரம் நசித்தால் அருட்பாலுண்ணலாம்

சந்தேகம் வேண்டாம். மனம் அருட்பால் பசுவானது எதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஸ்ரீ சற்குருவாம் அருட்பால் பசுவென்றறிக. அந்தப் பசுதான் அநேகம் காமதேனுவைப் பெற்ற தாய். அது மகா காமதேனுவாமென்றறிக. இந்தக் காமதேனுவுக்கு அர்ப்பமான புல் கொடுத்தால் அளவிறந்த பால் கிடைக்கும். ஆனாலது காமதேனுமல்ல, கற்பகத் தருவுமல்ல. சிற்பிரகாசமான ஸ்ரீ சற்குருவின் திருவருளாம். ஸ்ரீ சற்குரு தெரிசனமானால் அது கற்பகத்தருவைப் போல் கேட்ட வரம் கொடுக்கும். தர்ப்பரமாயுள்ள பரமாத்ம தெரிசனமாமென்று மறிக. மனம் இன்னம் குரு தெரிசனமாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சித்தம் பரிசுத்தமாய் முன்கூறிய சிற்பிரகாசத்தினால் வஸ்து நிர்ணயமடைவதுதான் குரு தெரிசனம். குரு தெரிசனமே அருள் தெரிசனம். அருள் தெரிசனமே பரதெரிசனம். பரதெரிசனமே பரமானந்த தெரிசனம். பரமானந்த தெரிசனமே பரிபூரண தெரிசனம். பரிபூரண தெரிசனமே பரமாத்ம தெரிசனமாமென்றுமறிக. மனம் ஓ சுவாமி! பரமாத்ம தெரிசனமாவது எதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! தானும் தன் குருவும் தர்ப்பரையும் பரமாத்மாவும் சராசர பூதகோடிகளும் ஏகமாயும் சிற்பிரகாசமாயும் பரிபூரணமாயும் நிஷ்களேபரமாயும் நிற்குண நிராமயமாயும் சச்சிதானந்த சொரூபமாயும் விளங்குவதாம் பரமாத்ம தெரிசனம். அதாவது நாமரூபாதி சமஸ்தமு மறந்து சங்கற்ப விகற்பம்விட்டு இருவாசனையுமற்று அசைவற்று நிருவிகற்ப சமாதியாய்ப் பிர்ம்மானந்தமாயிருப்பதாம்

அனுபவ திருஷ்டாந்தம். ஆதலால் முன்கூறிய அருளே பரஞ்சோதியாமென்றும், அதை உபாசித்தால் நிஜஸ்வரூபத்தைக் காட்டுவதாம் அருளென்றும் அதுவே குருதெரிசனமென்றறிக. மனம் நிஜஸ்வரூபமாவது எதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நிஜஸ்வரூபமாவது நித்திய பரிபூரண பரமானந்த வஸ்துவாமென்றறிக. ஆதலால் பரமானந்த சுகத்தில் பிரியமுடையவாள் முதலாவது ஸ்ரீ சற்குருவின் திருவடி சேவித்து திருவருள் பெறவேண்டும். ஆனாலும் அருளை பிரத்தியக்ஷமாய் மறைக்கப்பட்டது அஞ்ஞானம், ஆவரணம் இவ்விரண்டுமாம். அஞ்ஞானத்துக்கிடமானது சம்சாரமான சரீரம். சரீரத்தினால் வந்தது இருவினை. இருவினையால் வந்தது புண்ணியபாபம். அந்த புண்ணிய பாபத்தினால் வந்தது நரகசொர்க்கம். மனம் ஓ சுவாமி! அந்த சமமாயிருந்த பஞ்சபூதாம்சமான சரீரத்தில் புண்ணிய பாபம் வந்ததெப்படி என்றுகேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சராசரத்தையும் சிருஷ்டித்து அதுகளுக்கெல்லாம் அந்தர்யாமியாயிருந்த கடவுள் ஒருவரே சர்வத்திற்கும் காரணமாயும் கர்த்தாவாயுமிருப்பதால் அவர் தன்னிடத்திலு மிருப்பவரென்கிற விவேகமில்லாமல் ஆத்மாவை மறந்து சரீரமே நானென்றும் அபிமானத்தினால் செய்யுங்கர்மமே மகாபாபம். அதானது தின்றதும் பாபம் குடித்ததும் பாபம் கையிலும் பாபம் காலிலும் பாபம் நடப்பதும் பாபம் கை எடுத்ததும் பாபம் கொடுத்ததும் பாபம் எடுத்ததும் பாபம் வாக்கிலும் பாபம் நாக்கிலும் பாபம் மூக்கிலும் பாபம் மூலையிலும் பாபம் தலையிலும் பாபம் இடையிலும் பாபம் துடையிலும் பாபம் அடியிலும் பாபம் முடியிலும் பாபம் முன்னிலும் பாபம் பின்னிலும்

பாபம் கீழிலும் பாபம் மேலிலும் பாபம் கனவிலும் பாபம் நினைவிலும் பாபம் ஆதலால் சர்வாங்கமும் பாபமென்றறிக. மனம் ஓ சுவாமி! இந்தப்படி சரீரமுழுதும் பாபமானால் புண்ணியமேதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சரீரமே நானென்கிற அகங்காரம் அடியோடு விட்டுவிடுவதே புண்ணியத்திலும் மேலான அழிவற்ற மகா புண்ணியமாம். இதைத்தவிர வேறேயுள்ள புண்ணியமெல்லாம் சொர்ப்பனத்திற்கு சமானமாம். ஆதலால் அகங்காரம் அடியோடு நசித்தால் தன் செயலறும். தன் செயலற்றால் பாபமெல்லாம் பஞ்சுபோல் பறந்துவிடும். பாபமெல்லாந் தொலைந்துவிட்டால் அதுவே மகா புண்ணியத்திலும் மேலான புண்ணியமாம். புண்ணியம் மிகுதியானால் குருப்பிரசாதமான அருள் கிடைக்கும். அந்த அருட்பிரகாசமான வெளியிலே அனைவரையும் பார்க்கலாம், தனியாயிருக்கலாம், பிர்ம்மானந்த அடைவு மனுபவிக்கலாம். சிரஞ்சீவியாய் வாழலாம் சந்தேகம் வேண்டாம். மனம் ஓ சுவாமி! அகங்காரத்தைக் கொல்லும் மார்க்கமெதுவென்று கேட்க அறிவு கூறியது. அகங்காரத்தைக் கொல்லுவது மகா பிரயாசம். ஏனென்றால் இவ்வுலகத்தின்கண் சர்வ பிராணிகளுக்கும் சுகத்திலேயே ஆசையிருக்கிறது. அதாவது எனக்கு சுகமடையவேணு மடையவேணுமென்பதாய் அனைவரும் நினைப்பார்கள். உலகமெல்லாம் கெட்டுப்போனாலும் போகட்டும். நானு மென் சம்சாரமும் க்ஷேமமாய் நெடு நாளிருக்க வேணுமென் றெண்ணும்பேர்கள் அதிகமாம். சர்வ பிராணிகளிடத்திலும் தயவும், ஜீவகாருண்ணியமில்லாமல் விபரீதமாய் இம்சாபுத்திகளாய் கொலை, களவு, கட்காமம், குருநிந்தனை முதலான பஞ்சமாபாதகிகளாய் சரீராபிமானிகளாயிருக்கும் மூடர்களுக்கு இகத்தில் சர்வ பிராணி

களும் விபரீதமாயிருக்கும். கூடுவிட்டு எமலோகம் போனு லும் அவ்விடத்திலுள்ள அனைவரும் சத்துருவாயிருக்கும். உலகநிந்தை செய்தவர்களை உலகமெல்லாம் நிந்திக்கும். உலகவந்தனம் செய்தவர்களை உலகமெல்லாம் வணங்கும். ஒரு பிராணிகளையும் நாம் பயப்படுத்தாமலிருந்தால் ஒரு பிராணிகளிடத்திலும் நாம் பயப்படவேண்டியதில்லை. ஜீவ காருண்யமுடையவராய் சர்வ பிராணிகளையும் சிரசால் வணங்குவோர்களுக்கு எமபயமில்லையாதலால் அகங்காரக் குடித்தனமே நரகம் வேறில்லை. தன் செயலாம் கொடு வினைகள். தன் செயலே எமதூதராம். தன்செயலற்ருல் எமபயமில்லை மனம் ஓ ஆண்டவனே, இந்தப்படி மகா கோரமாயும், அதிமூடமாயும் திருமூர்த்திகளாலும் அடக்க முடியாததாயுள்ள அகங்காரத்தையடக்கி அருள் பெறுவ தெப்படி என்று மனம் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஒருவராலும் அடக்கமுடியாத அகங்காரத்தையடக்கி அருள்பெறமுபாய மொன்றிருக் கிறது. அந்தப் பரம ரகசியத்தை உனக்குச் சொல்லு கிறேன். அதை நீ உண்மையாக நம்புவாயானுல் உன் னுடைய அகங்காரத்தையடக்கி யருள்பெறலாம் சந்தேகம் வேண்டாம். அகங்காரத்தை யடக்குமுபாயம் முதலாவது சரியை, கிரியை, யோக சன்மார்க்கத்துடன் ஏறிப்போய் ஞானசாதனங்கள் நான்குமடைந்து மும்மலங்களுமற் றருள் பெற்ருல் அகங்காரமடியோடுமடங்கும். அகங்காரமடங்கி விட்டால் ஸ்ரீ குருதெரிசனமாகி அருள் கிடைக்கும். அருள் கிடைத்தால் மித்தியாசங்கற்பமறும். மனம் ஓ சுவாமி! சரியை, கிரியை, யோகம், ஞானம் இதுகள் இன்ன தின்னதென்று அருள்செய்ய வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

சரியையாவது அகங்காரத்தை யடக்கும் பொருட்டு ஸ்ரீ சற்குருவைத் தேடுவதாம். கிரியையாவது அகங்காரத்தை யடக்கும்பொருட்டு ஒரு குருவைக் கண்டடுத்துப் பணிவிடை செய்வதாம். யோகமாவது அகங்காரத்தை யடக்கவேண்டி அப்பியாசம் செய்து குணமூன்றுமடக்குவதாம். குணமூன்று மடங்கிவிட்டால் அகங்காரமடியோடு நசிக்கும். ஞானமாவது மும்மலங்களுமற்று குருவருளால் தன்னைத்தானறிவதாமென்றுமறிக. மனம் ஒ சுவாமி! மும்மலமாவது தாமசகுணமாமென்றும்; அந்த தாமசகுணத்தில், தாமசகுணத்திலும் ராசசகுணத்திலும் சாத்வீக குணத்திலும் பிறந்த ஜீவாத்மாக்கள் கடைத்தேறும் பொருட்டு சன்மார்க்கமாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஒ மனமே கேள்! முதலாவது சரியையிலிருந்து தாமசகுணத்தை நீக்கி இரண்டாவது கிரியையிலிருந்து நிஷ்காமமாய் ராசசகுணத்தை நீக்கி மூன்ருவது யோகத்திலிருந்து அப்பியாசம் செய்து மனம் நிர்மலமாய் சாத்வீக குணமும் நீக்கி நான்காவது ஞானம் அதாவது முக்குணமும் நிற்குணமாய் நிர்ம்மலமாய் ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்ருல் நாலாம்பதமான ஞானம் கரதலாமலகம்போல் கைவசமாமென்பதற்குச் சந்தேகமில்லை. மனம் ஒ சுவாமி! முன் கூறிய நான்கு சாதனங்களாவது யாதென்று கேட்க அறிவு கூறியது. முதலாவது நித்தியாநித்திய வஸ்து விவேகம். இரண்டாவது இகலோக பரலோக வைராக்கியம். மூன்ருவது சமாதியாறும். நான்காவது மோக்ஷ இச்சை. மனம் ஒ சுவாமி! இதுகளில் முதலாவது விவேகமாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஒ மனமே கேள்! நித்தியமின்னது அநித்தியமின்னதென்றறிவதாம். நித்தியமாவது ஆத்மா என்றும், அநித்

தியமாவது அநேகப் பிரபஞ்ச வஸ்துக்களாமென்றும், அதாவது சரீராதி வஸ்துக்களெல்லாம் அழிந்துவிடும், ஆத்மாவானது ஒருகாலத்திலு மழியத்தகுந்ததல்ல என்கிற நிச்சயமானல் அதுவே விவேகம். மனம் வைராக்கியமாவது யாதென்று கேட்க அறிவு கூறியது. இக்லோகத்திலும் பரலோகத்திலுமுள்ள போகத்திலின்பம் அணுவளவும் வேண்டியதில்லை. அது துன்பமாமென்றறிந்து நாய் வாந்தியைப்போல் வெறுத்து தூரத்தள்ளி விட்டு விடுவதாமென்றறிக. மூன்றாவது சமாதியாவது யாதென்றுகேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சமாதியாவது சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை இதுகளாறுமாமென்றறிக. மனம் இனி மோக்ஷ இச்சையாவது யாதென்று கேட்க அறிவு கூறியது. அநாதியான பெந்தத்தை விட்டு மோக்ஷமடைய வேண்டுமென்று முயற்சி செய்வதாம். மனம் ஓ சுவாமி! முயற்சியாவதெதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நிராசையாய் நித்தியானந்தமடையும்பொருட்டு சிரத்தாபத்தியுடன் ஒரு சற்குருவை யடுத்து வித்தியாப்பியாசம் செய்வதாம். இந்தப்படி நான்கு சாதனங்களுமடைந்தால் ஸ்ரீ சற்குரு தெரிசனமாகும். சற்குரு தெரிசனமானல் அகங்காரத்தைவிட்டருள் பெறலாம். இந்தப்படி சரியை கிரியை யோகமார்க்கப்படி ஏறி நான்கு சாதனங்களையடைந்து அருள் பெருமல் எக்கியம், தானம், தபசு இதுகள் முதலான கர்மங்களினலும் அநேக ஞான நூல்களைப் படிப்பதாலும் சந்நியாச விர்த்தியாலும் யோகாப்பியாசத்தினலும் அருள் கிடையாதென்பது நிச்சயம். ஆதலால் அகங்காரத்தை யடக்குவதற்கு ஒரு சற்குரு

வேண்டியதவசியம். எதுபோலென்றால் ஆழமதிகமுள்ள ஆற்றைத் தாண்டுவதற்கு ஒரு தோணி வேண்டியதவசியம். அதுபோல் சம்சாரசாகரத்தைத் தாண்டுவதற்கு ஆசிரியருடைய அருள் வேண்டியதவசியம். அதற்கு முதலாவது ஒரு சற்குருவை நம்பவேண்டும் அப்படி சற்குருவையடைந்து நம்பாதவனுக்கு ஒரு கர்மமும் சுபமாகாது. எதற்கும் முதலாவது சற்குருவந்தனஞ் செய்து கர்மம் செய்தாலது சுபமாகும். குருவந்தனம் செய்தபின செய்யுங்கர்மமெல்லாம் ஈஸ்வரார்ப்பணமென்றறிக. முன்கூறிய நான்கு சாதனங்களடைவதற்கும் ஒரு சற்குருவேண்டியதவசியந்தான். நான்கு சாதனங்களடைந்தாலும் அருள் பெறுவதற்கும் ஒரு சற்குரு வேண்டியதவசியம். அருள் பெற்றால் சராசரமுஞ் சற்குருதான். சராசரமும் சற்குருவாக நம்பினல் தன்னிடத்திலும் ஒரு சற்குருவைப் பார்க்கலாம். சராசரத்திற்கும் அந்தர்யாமியானதும் சற்குருதான். எல்லாம் சற்குரு பரமாத்மாவைத்தவிர அணுவளவுங் கிடையாதென்பது நிச்சயமாம். எல்லாம் பரமாத்மாவானல் குருவேது, சிஷ்யனேது, பெந்தமேது, மோக்ஷமேது, ராகத்துவேஷாதியபிமானமேது, சம்சாரதுன்பமேது இதுகளெல்லாம் சுத்தப்பொய். ஆத்மா ஏன்பதே சத்தியமாம். இதுவே வேதாந்தமென்றும் சித்தாந்தமென்றும் பெரியோர்களுடைய சம்மதம். இந்தப்படி அனுபவமாகும்பொருட்டு ஒரு ஸ்ரீ சற்குரு வேண்டியதவசியம். (மனம்) குரு யார்? சிஷ்யனர்? என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பரிசுத்தமான மாயையோடுகூடி பரமானந்தமாயிருந்த பரமாத்மாவானது குருவென்றும் சிஷ்யனவது அசுத்தமாயையோடுகூடி சம்சாரியாய் துக்கியாயிருந்த ஜீவாத்மாவாம் சிஷ்யனென்றுமறிக. குருவென்றும்

சிஷ்யனென்றும் தோற்றுவதற்குக் காரணம் அசுத்தமாயை. அசுத்தமாயை நாசத்தின்கண் குருவென்றும் சிஷ்யனென்கிறதும் சுத்தப் பொய். அதாவது மனேலயமானல் பரமாத்மாவை ஏகமென்றுமறியலாம்; சந்தேகம் வேண்டாம். மனம் ஓ சுவாமி! இந்தப்படி ஏகமாயும் பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவானது இரண்டாய்ப் பிரித்துச் சொல்வதற்குக் காரண மென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இரண்டாய்ச் சொல்லுவதற்குக் காரணம் அசுத்தமாயை. அசுத்தமாயை இல்லாவிட்டால் பரமாத்மாவே ஜீவாத்மா, ஜீமாத்மாவே பரமாத்மா. இது யிரண்டல்லாத ஏகமாம். இரண்டாய்த் தோற்றுவதற்குக் காரணம் அசுத்தமாயை. அசுத்த மாயை இல்லாவிட்டால் சுத்தமாயையேது. சுத்தமாயை இல்லாவிட்டால் அசுத்தமேது. ஆதலால் சுத்த மசுத்த மிரண்டும் மனச்சஞ்சலமாம். மனச் சஞ்சலமடியோடற்ருல் ஆத்மா சுத்தமுமல்ல, அசுத்தமுமல்ல நித்திய பரிபூரணமாயும் ஏகமாயும் சச்சிதானந்தமாயும் விளங்குமென்றறிக. இந்தப்படி மனக்கவலேயற்று வஸ்து நிர்ணயமாய் தன்னுடைய தத்துவமறிந்தால் தனக்குள்ளே அநேக மூர்த்திகளேயும் பார்க்கலாம். மனம் ஓ சுவாமி! மனக்கவலே யறும் பொருட்டு மருந்தேதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனக்கவலே யறும்பொருட்டு மணி மந்திராதி ஔஷதங்கள் அளவிறந்தகோடி இருக்கிறது. உலகத்தின்கண் அதுகளெல்லாம் கற்றுணர்வதற்கு ஆயுசு அற்பமாயிருக்கிறது. ஆதலால் பரமரகசியமாயும் கைவசமுள்ளதாயும் சுலபமாயுமுள்ள மணிமந்திராதிகளே உனக்குச் சொல்லுகிறேன் கேள். அதை நீ உண்மையாக நம்புவாயானல் மனக்கவலேயறும். முன் கூறியதில் முதலாவது மணி

யாவது யாதென்றால் இந்த உலகத்தின்கண் மணி அநேகம். அது அளவிறந்தகோடி யிருக்கிறது. அதுகளெல்லாவற்றி லும் சிறந்த திவ்வியமான மணி மனோன்மணியொன்றுதான். அந்த மனோன்மணியை ஸ்ரீ சற்குருவின் திருவடியிற்சேர்த் தால் அதுவே எல்லாவற்றிலும் திவ்வியமான பெறுமணி யென்று மறிக. இனி மந்திரமாவது எழுகோடியானாலும் எல்லா மந்திரத்திற்கும் சிறந்த மந்திரமானதொன்றிருக் கிறது. அதுதான் ஸ்ரீசற்குரு உபதேசமான பிரணவாக்ஷர மொன்றேயாகும். தந்திரமாவது தன் செய்கைதான். அதா வது உலகர் செய்வதெல்லாம் தந்திரமானாலும் எல்லாத் தந் திரத்திலும் சிறந்தது சர்வ கர்மமும் ஈஸ்வரார்ப்பணமாக்கி ஸ்ரீ சற்குருவின் திருவடி பூஜை செய்வதாம். இனி ஔஷத மாவது உலகத்திலுள்ள சர்வ வஸ்துக்களும் ஔஷதமாம். ஆனாலும் எல்லா மருந்திற்கும் மருந்தானது ஸ்ரீசற்குருவின் திருவருள் மருந்தொன்றுதான். இப்படிக்கொத்த மருந் தானது விவேகாமிர்தமாமென்றும், இதைச் சாப்பிடும் பொருட்டு முன் கூறின நான்கு சாதன பத்தியமிருக்க வேண்டும். இப்படி சாதன பத்தியமாயிருந்து விவேகாமிர்த ஔஷதத்தைச் சாப்பிட்டு வைத்தியர் சொன்னதுபோல் பத்தியமிருந்தால் அவிவேகத்தினால் வந்த பவரோகம் அடி யோடு நசிக்கும். பவரோகம் நாசமானால் மனக்கவலையறும். சந்தேகம் வேண்டாம். மனம் ஓ சுவாமி! பவரோகமாவது யாது? அதற்கு ஔஷதமாவது யாது? அதை அடையும் மார்க்கமெதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பவரோகமாவது தாபத்திரையாதி அபிமான துன்பமாம். அதற்கௌஷதமானது ஸ்ரீ சற்குரு வின் திருவருளால் விளங்கப்பட்ட விவேகாமிர்த ரசாயன மாம். இதை உள்ளபடி யடையுமார்க்கம் இளம் பக்தியா

யிருந்த சமயத்தில் ஒரு ஞானசாரியரை யடுத்து வஞ்சக மில்லாமலும் தன் செயலாக அபிமானித்துவரும் வர்ணு சிரமாதி குலாசார தர்மங்களும் புண்ணிய பாபங்களும் பாத காணிக்கையாக வைத்து உடல், பொருளாவி மூன்றும் தாரைவார்த்து அடிமை கொடுத்து அதிக சிரத்தா பக்தி விஸ்வாசத்துடன் வாக்கு மனக்காயங்களினுல் பாதசேவை செய்து பழகி வருவதானுல் அந்த இளம் பக்தியானது முற்றும். அது முற்றும்போது பழுக்கும். அதே யருளான விவேகாமிர்தமாம். ஆதலால் எல்லாவற்றிலும் சிறந்தது ஸ்ரீ சற்குருவின் பாத பக்தி விஸ்வாசமாம். சற்குரு பக்தி விஸ்வாசமுள்ளவாளுக்கு மனக்கவலையானது அணுவளவுமிராது. மனக்கவலைக்குக் காரணம் அகங்காரம். அகங்காரமானது பூலோக வைகுந்த கைலாசம் வரைக்குமிருக்கும். ராகத்துவேஷாதி யபிமானங்களு மதுவரை யிருக்கும். ஆனுலுமிதைக் காமிகளறியமாட்டார்கள். அகங்காரமிருந்தமட்டும் வைகுந்தம் போனுலும் கைலாசம் போனுலும் எந்த யிடம் போனுலும் கஷ்டந்தான். அகங்காரம் சாந்தமானுல் சம்சாரத்திலிருந்தாலும் சந்நியாசியாய் விட்டாலும் மெத்தைமேற் படுத்தாலும் புழுதியில் படுத்தாலும் சுகம். வைகுண்டம், கைலாசம், நரகம், சொர்க்கம் இதுகளெல்லாம் சமமாம். அதுவுமல்லாமல் அகங்காரம் சாந்தமானுல் அது பரபிர்ம்மமாம். அகங்காரத்தினுல் செய்வது கர்மம். கர்மத்தினுல் ஜன்மம். கர்மம் முடிவானது ஜன்மசாபல்யமாம். மனம் ஓ சுவாமி! கர்மத்திற்குக் காரணமென்ன, அதை அருளிச் செய்ய வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! கர்மத்திற்குக் காரணம் காமம் ஒன்றேயாம் வேறில்லை. அந்தக் கர்மத்ாலடையும் பயனுவது

இரு வினையாம். அதாவது மெய்வாசனை யென்றும், பொய் வாசனை யென்றும், சுத்த வாசனை யென்றும், அசுத்த வாசனையென்றும் இரண்டு விதமாய் பெரியோர்கள் சொல்லுவார்களென்று மறிக. மனம் ஓ சுவாமி! இதுகளில் மெய் வாசனையான சுத்த வாசனையாவது யாது, பொய் வாசனையான அசுத்த வாசனையாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மெய்யான சுத்த வாசனையாவது இயற்கையால் வந்த புண்ணியமென்றும் பொய்யான அசுத்த வாசனையாவது சேர்க்கையால் வந்த பாபமென்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள். இந்த இரு வினைக்குங் காரணம் மனமொன்றுதான். மனத்திற்கு உபஜீவனமாவது இரு வினையுமாம். ஆதலால் இரு வினையுமற்றால் மனம் செத்துப்போகுமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். மனம் செத்தால் இரு வாசனையேது, இரு வாசனையும் மனதும் ஆசையுங் கூடி இரண்டறக்கலந்திருப்பதாதலால் மனம் மரணமடையும்போது இரு வாசனையும் ஆசையு மதோடே சாகும். இரு வாசனையும் மனதும் ஆசையுமற்ற யிடம் நித்திய நிஷ்கள நிர்மல பிர்ம்மானந்தமென்று மறிக. மனம் ஓ ஆண்டவனே! நீரும் பாலு மிரண்டறக் கலந்ததுபோலே யுள்ள இரு வாசனையும், தேன்போலே யிருந்த மனமும் யிதுகள் மூன்றும் ஒன்றாகக் கூடி யிரண்டறக் கலந்திருப்பதை பாலும் நீரும் தள்ளி தேன் வேறே எடுக்குமுபாய மெப்படி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! முன் கூறிய இரு வாசனைகளில் சுத்த வாசனையாவது முன்னமே கைவசப்படுத்தி, அது கொண்டு அசுத்த வாசனையை மெள்ள மெள்ளத் தள்ள வேண்டும். அசுத்த வாசனையானது நாசமானால் மனம்

பரிசுத்தமாகும் மனம் பரிசுத்தமானால் அருளையடைந்து எதார்த்த ஞானம் தானே விளங்கும். எதார்த்த ஞானம் கைவசமானால் பிர்ம்மாநந்தமாய் இருக்கலாம். பிர்ம்மாநந்த மானால் சுத்த வாசனையு மசுத்த வாசனையு மற்று ஞானம் அஞ்ஞான மிதுகளிரண்டும் கர்ப்பூர தீபம்போலே இரண்டு மில்லாமல் சாந்தமாய் சும்மா இருக்கலாமென்று மறிக. மனம் ஓ சுவாமி! மேற்கூறிய சுத்த வாசனையின் தன்மை யாவதெதுவென்று கேட்க அறிவு கூறியது. சுத்த வாசனை யின் தன்மையாவது பரிசுத்தமாயும் நித்திய சுகத்துக்கு ஹேதுவாயும் நிராசையாயும் ஆனந்தமாயுமுள்ள சத்திய சங்கற்பமாம். அதாவது சத்தாயும் சித்தாயும் ஆனந்தமாயு முள்ள ஆத்மத் தியானம் செய்வதாம். இனி அசுத்த வாசனையின் தன்மையாவது அசூசியாயும் அநித்தியமாயும் அநேக துன்பத்திற்கிடமாயும் தேகேந்திரியாதி விஷயங்களி லுள்ள போக சங்கற்ப விகற்பமாம். அதாவது, ஸ்திரீ போகாதி விஷயங்களிலுள்ள பேராசையாம். பேராசையை விட்டால் அதுவே பேரின்ப விளக்கமாம். அதானது வேத முடிவிலும் நாதமுடிவிலும் சாந்தமான சரத்திலும் சாந்த மான கருத்திலும் சொந்த குண முடிவிலும் அபிமான முடி விலும் அஞ்ஞான முடிவிலும் இரு வினைகள் இரு வாசனை முடிவிலும் மனோன்மணிச் சுடரிலும் சுழிமுனை நடுவிலும் சுயஞ்சோதியைப் பார்க்கலாமென்று மறிக. மனம் ஓ சுவாமி! அந்த ஜோதியான தெப்படிப் பட்டதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமேகேள்! அந்த மாயாரகிதமான பரமசோதி யான பராமாத்மாவானது சத்துமல்ல அசத்துமல்ல சதசத்து மல்ல நித்தியமுமல்ல அநித்தியமுமல்ல சத்தியமுமல்ல அசத்தியமுமல்ல குணமுமல்ல நிர்க்குணமுமல்ல சுத்தமு

மல்ல அசுத்தமுமல்ல ஆதியுமநாதியுமல்ல அதற்கு அந்தமும் பெந்த மோக்ஷமுமில்லை. அது பரிபூரணமாயுள்ள சுயம்பிரகாசமான பரமஜோதியாமென்று மறிக. மனம் ஓ ஆண்டவனே! இந்தப்படி ஆத்மாவானது ஆனந்தமாயும் அபேதமாயும் அனுமயமாயும் அவ்வியக்தமாயும் அரூபமாயும் அநாசரமாயுமிருக்க அதற்கு இருவாசனையும் வந்தவாறெப்படி? அது சரீரத்திற்கோ ஆத்மாவுக்கோ? இதில் கர்ம கர்த்தா யார்? அந்தகர்ம பலத்தைப் புசிப்பதார்? இதுகளை அருள் செய்ய வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சரீரமும் ஆத்மாவுங்கூடி யிரண்டறக் கலந்திருந்து மாயாசகிதனுயிருந்தும் ஆத்மாவை மறந்து சரீரமே நானென்றும் சங்கற்பித்து ஆசையோடுகூடி கர்மங்களைச் செய்வதாதலால் அதின் பலன்களை யெல்லாம் சின்மயனுகிய ஜீவன் புசிப்பதுபோல் தோற்றுமென்று மறிக. அதாவது மாயாகுண சகித்துவம் விட்டால் ஜீவன் குணரகிதனுய் நிற்குணமாயிருக்குமென்றுமறிக. அதைத் தவிர ஜீவனுனது எதுகால பரியந்தம் புசிக்குமென்றால் மனேலய பரியந்தம் தோன்றுமல்லாமல் ஜீவன் புசிப்பதெதார்த்தமல்ல. ஜீவனுக்கு சரீர சம்மந்தமாவது மன சங்கற்பமாம். மன சங்கற்பம் விட்டால் அகங்காரமடியோடு நசிக்கும். அகங்காரம் நசித்தால் ஜீவன் பரமாத்மாவாம். ஆனுலும் நான் புசிக்கிறேனென்றும் தோற்றுவதற்குக் காரணம் மனதினுடைய அஞ்ஞானமாம். ஆனுலும் மனம் பரிசுத்தமாயுள்ளது. ஆனலந்த மனதிற்கு அஞ்ஞான ஆரோபமாகத் தோற்றுவது சுபாவீகம். அதானது சேர்க்கை வாசனைப் பழக்கம் அங்ஙனம் எப்படியெனில் அதாவது பரிசுத்தமான ஸ்படிகத்தினருகில் சிகப்பு வர்ணமான வஸ்துவை

சேர்த்து வைத்தால் அந்த சுத்த ஸ்படிகமும் சிகப்பு வர்ண மாய்த் தோற்றுவது உண்மைதான். அதுபோல் பரிசுத்த மான ஆத்மாவும் மனதும் இந்திரியங்களோடு கூடி சம்பந்த மாயிருப்பதாதலால் ஜீவன் பெந்தனுய்த் தோற்றுவது சுபா வீகம். அதுபோல் பரிசுத்தமான அந்தக்கரணத்தில் குண மூன்றும் சேர்க்கையால் தோற்றுவதாம். அதாவது ஜீவன் தேகேந்திரியாதி அந்தக்கரணத்தோடொத்திருந்தமட்டும் ஜீவன்தான் புசிக்குமென்று தோற்றுவது மனதினுடைய சுபாவீகம். அதாவது சொர்ப்பனம்போல் தோற்றுவதாம். சொர்ப்பனம் வாஸ்தவமானுல் உலகம் சத்தியமாய்த் தோற் றும். உலகம் சத்தியமாய்த் தோற்றி யிருந்தமட்டும் விஷய சுகத்தை அனுபவிக்குமென்பதுபோலத் தோற்றுவது மாயை. மாயை நாசத்தின்கண் ஜீவன் முக்தனுமென்ப தற்குச் சந்தேகமுண்டா? இல்லை இல்லை குண மூன்றும் அடங்கிவிட்டால் மாயாத்தோற்றம் தோற்றுவதற்கிடமில்லை. சொர்ப்பன சமானமான தேகேந்திரியாதி விஷயங்களில் உள்ள ஆசையை விட்டால் மனம் பரிசுத்தமாகும். மனம் பரிசுத்தமானுல் ஜீவன் புசிப்பதாகத் தோற்றுவதற்கிடமில்லை. ஆதலால் அஞ்ஞான காரணம் மனதினுடைய அசுத்தமாம். மனதை ஒரு சற்குருவுக்குத் தெத்தங் கொடுத்தால் மனம் பரிசுத்தமாய் தேக பெந்தம் விட்டு ஜீவன் முக்தனு யருள் ஞான மடையலாம். அருள் ஞான மடைந்தால் சகல சந் தேகமுந் தீரும். அதற்கு அநேக குரு, அநேக சாஸ்திரங் கள், அநேகவித நிஷ்டைகளைச் செய்வதிலும், உண்மையான ஒருகுரு, குரு சொன்ன சாஸ்திரம், குரு சொன்ன நிஷ்டை செய்வது, மெத்தவு நன்று. இதனுல் மனம் பரிசுத்தமாய் ஏகாந்தமாய் நிலைப்படும். அதாவது, அநேக குருவையடுத் தாலும் அருள் கொடுக்கத் தகுந்தது மேற்கூறிய ஞான சிற்சக்தியாலுணர்ந்த சற்குரு ஒன்றுதான். இரண்டல்ல

வென்பது நிச்சயம். அநேக சாஸ்திரங்களைப் பார்த்தாலும் ஆத்மா ஒன்றுதான். அதுகளுடைய அநுபவமாவது ஆத்மாவினை ஆத்மாவில் ஐக்கியம் செய்வது ஒன்றுதான். அநேக நிஷ்டைகளைச் செய்தாலும் அறிவானதொன்றுதான். இரண்டல்ல. ஆனால் நானாவிதமாய் அறிந்தலையும் மனதை யொருமைப்படுத்தி உபசாந்தமாக்குவது எப்படி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நானாவிதமாயலையும் மனதை யடக்குவது மகாப் பிரயாசம். ஆனாலுமதையடக்கும் உபாயம் யாது எனில், வாக்கு மனக் காய மூன்றும் ஒரு சற்குருவினிடத்தே ஸ்திரமாய்ச் சேர்த்து வைத்துப் பழக்கவேண்டும். அதாவது வாக்சானதை மனதிலடக்கி மனதை சரீரத்திலடக்கி சரீரத்தை முக்குணத்திலடக்கி முக்குணத்தை மூலமாயையி லடக்கி மூலமாயையை சற்குருவிலடக்கி சற்குருவை ஆத்மாவில் பார்த்து ஆத்மாவை பரமாத்மாவிலடக்கி பரமாத்மாவை துரிய நிலையில் கண்டு துரிய நிலையை துரியாதீதத்திலும் துரியாதீதத்தை அதீதாநந்தத்திலும் அதீதாநந்தத்தை அவ்வியக்தமான பரிபூரணத்திலுமடக்கி நிர்ச்சலமாய் நிர்மல சயஞ்சோதியாய் நிர்விகற்ப சமாதியாய் இருக்குமிடத்தில் நீயேது நானேது வாக்கு மனக் காயமேது எல்லாம் நாம் பரிபூரண வஸ்து ஒன்றுதானென்றும், ஆதலால் பரிபூரண வஸ்துவைத் தவிர நானென்கிற அகங்காரமணுவளவுமில்லையென்பது நிச்சயமாம். அதற்கு முன் கூறினபடி பல குருவைத்தேடாமல் ஒரு குருவை யடுத்து வாக்கு மனக் காய மூன்றும் அவருக்குத் தாரைவார்த்து ஒருமைப்படுத்தி அவர் திருவடிக் கமலத்தில் ஸ்திரமாய் நிறுத்தவேண்டும். அதற்கு சக்தி யில்லாவிட்டால் வாக்கானது ராமேஸ்வரத்திலும் மனமானது ஹரித்துவாரத்திலும் காயமானது காசியிலும்

கைங்கரியமானது ஈசுரார்ப்பணமாயும் ஸ்திரமாயிருந்தாலும் மனம் கிரமமாய் ஒருமைப்படும். இது கூடாமல் வாக்கு பாழூரிலும் மனமானது பொய்யூரிலும் காயமானது மெய் யூரிலுமிருந்தால் அதுகளை ஒருமைப் படுத்துவது மகாப் பிர யாசம். அதாவது வாக்கிலே அசத்தியமும் மனதிலே வஞ் சகமும் காயத்திலே அகங்காரமும் திரிவிதமாயிருந்து செய் யுங் கர்மங்கள் சுகர்ம மாகா. அதுகள் அகர்ம விகர்மமா மென்றும் மகான்கள் சொல்லுவார்கள். முக்கரணங்களும் சத்தியமாய் பரிசுத்தமா யொத்திருந்து செய்யும் சத்கர்மங் களும் சுகர்மமாம். அது புண்ணியமாமென்றும் அதனுல் பரகதிக்கு மார்க்கமாமென்றும் மகான்களினுடைய சம்மதம். மனம் ஓ சுவாமி! வாக்கிலே ஒன்று தொடுப்பாய் மனதிலே யொன்று நினைப்பாய் தொழில்கள் பலவிதம் செய்வதானல் அதை எப்படி யடக்கக் கூடுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அப்படியுள்ள மனதை அடக்கமுடி யாது. ஆனாலும் முக்கரணங்களும் சத்தியமாயொத்திருந்து செய்யுங் சத்கர்மங்களை சத்தியமாய் சற்குருவை நம்பி ஈஸ்வரார்ப்பணஞ்செய்து பழகிவருவதானல் முக்கரணங் களும் தானேயடங்கும். அங்ஙனம் எப்படியெனில் நிராசை யானதை அணுமாத்திரமானலும் முன்னாலே வைத்துக் கொண்டு நிஷ்காம சத்கர்மங்களைச் செய்து பழகிவருவதா னல் நிராசை வளரும். நிராசை வளரவளர ஆசையடங்கும். ஆசையடங்கிவிட்டால் ஞானநந்தம் மேலிடும். இதைத் தவிர ஆசையானது அணுமாத்திரமானலும் முன்னாலே வைத்துக்கொண்டு காமகர்மங்களைச் செய்தால் ஆசை மென் மேலும் வளரும். ஆசை வளர வளர அகங்காரங் கொடிய தாகும். அகங்காரம் வளர வளர அஞ்ஞானமும் வளரும். அஞ்ஞானம் வளர வளர துன்பம் மேலிடும். துன்பம்

மேலிட்டால் வஞ்சனையநேகமாகும். பஞ்சமாபாதகம் வந்தடையும். பஞ்சமாபாதகமே கொடிய நரகமாம். மனம் ஓ சுவாமி! ஆசை எந்தயிடத்தில் பிறந்தது. அது எவ்விடத்திலிருக்கிறது. அதை எப்படி யடக்கக்கூடுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆசையானது அனாதியான மூலவாசனையோடுகூடிய அகங்காரத்திற்குள் பிறந்தது. அந்த அகங்காரத்திற்கு முன்னும் பின்னும் மேலுங்கீழும் ஆசை இருக்குமிடமென்றறிக. ஆசைதான் சம்சாரத்திற்கு வித்தும் பலமுமாயிருக்கிறது. இதற்கோராதியந்தமில்லை. அதானது ஆசையும் மனதுங்கூடி யிறண்டறக் கலந்திருப்பதாதலால் அந்த மனதை ஒருவருக்கும் தெரியாது. ஆனாலும் ஆசையைப்பெற்றதே மனம் மனதைப்பெற்றதே மூலமாயை. அந்த ஆசையான மனம்பெறுவதாம் ஆசைக்குட்டிகள். ஆசைக்குட்டிகளானது ராகத்துவேஷாதி அபிமானவிர்த்திகளோடு கூடிய ஜீவர்களாமென்றறிக. அதாவது மனசங்கற்பமாம். மனசங்கற்பத்துக்குக் காரணம் அகங்காரம் ஒன்றுதான் வேறில்லை. அகங்காரமானது எதற்குமிடங்கொடுக்கும். ஆதலால் அகங்காரமடங்கிவிட்டால் அதோடுகூடிய ஆசையும் மனதும் அடியோடடங்கும். மனம் ஓ சுவாமி! அகங்காரத்தை யடக்குமுபாயம் எப்படியென்றும் அது எவ்விடத்திலிருக்கிறதென்றுங் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரத்திற்கிருப்பிடம் அஞ்ஞானசங்கற்பமென்கிற நாட்டிற்குள்ளேயிருக்கிறது. அந்த அகங்காரத்தை யடக்குவது மகா பிரயாசம். அகங்காரமானது கொடிய காலசர்ப்பமாம். அந்த காலசர்ப்பத்தின்

தலையானது மூன்று குணமாம். அதற்கிருப்பிடம் அஞ்ஞானமென்னுங் காட்டில் அனாதியான சேர்க்கைவாசனையோடுகூடிய ஆசையென்னும் புற்றுக்குள்ளே யிருக்கிறது. அந்த அகங்காரமான பாம்புக்கு அணுமாத்திரமான அறிவிருக்கிறது. அந்த அறிவினை மறைக்கப்பட்டதாம் அகங்காரம். அந்த அகங்காரத்தின் தலை மூன்றையுமறுத்தால் அகங்காரமான பாம்பு சாகும். அகங்காரமான பாம்பு செத்தால் அணுமாத்திரமாயுள்ள அறிவு விளங்கி அகண்டபரிபூரணானந்தமாகும். (மனம்) ஓ சுவாமி! அஞ்ஞானமெனுங்காட்டில் பேராசை என்னும் புற்றுக்குள்ளிருக்கும் பொல்லாத பெரும்பாம்பை எப்படிக் கண்டறியக்கூடுமென்றும் அதை கொல்லக்கூடுமென்றும் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அந்த அகங்காரத்தைத் தேடிக் கண்டறிவது மகாப்பிரயாசம். ஏனென்றால் அறிவை மறைக்கப்பட்டது அகங்காரம். அகங்காரமுடையவாளுக்கு தன்னுடைய அகங்காரத்தை தனக்கே கண்டறியக் கூடியதல்ல. அந்த அகங்காரமான பாம்பை யாராணாலும் கண்டடிக்கப்போனால் சீறிக்கொண்டு கடிக்கவரும். எல்லாப் பாம்புக்கும் நாலு பல்லில் விஷம். அந்த அகங்காரமான பாம்புக்கு சர்வாங்கமும் விஷம். எந்தப் பாம்பு கடித்தாலும் கடிபட்டவன் ஒருவனுக்குத்தான் விஷம். அதற்கு மணிமந்தர ஔஷதங்களுண்டு. அதினால் தீராமல்போனால் அவன் ஒருவன்தான் சாகும். அகங்காரமான பாம்பு கடித்தால் அதற்கு மணிமந்தர ஔஷதங்களும் கிடையாது. அதுவுமல்லாமல் தானும் சாகும். தன் வம்சமும்கூடி கூட்டத்தோடே குலநாசமாகும். அகங்காரமான பாம்பு கடித்து செத்தபேர்கள் அளவிறந்தகோடி. அகங்காரமே எமகாலன். அகங்காரமே தனக்குச் சத்துரு. அகங்காரமே நரகம்.

அகங்காரமே பெந்தம். அகங்காரமே பவபயம். அகங்காரமே சம்சாரம். அகங்காரமே ராகத்துவேஷாதிகளுக்குக் காரணம். ஆதலால் அகங்காரமே சதா துன்பமாம். அதுதான் பிர்ம்மானந்தமாயுள்ள நிதியை மறைக்கப்பட்டது. அந்த முக்குணமுடைய அகங்காரமான கொடிய மலைப்பாம்பின் தலை மூன்று மறுத்துவிட்டால் குணரகிதமான பிர்ம்மானந்த நிதியை யெடுத்து நெடுநாள் அநுபவிக்கலாம். மனம் ஓ சுவாமி! அந்தக்கோரமூடமான பெரிய மலைப்பாம்பின் தலை மூன்று மறக்குமுபாய மெப்படி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஸ்ரீ சற்குருவின் திருவருளான வாள் கைவசமானுல் அதைக்கொண்டறுத்து அந்த ஞானக்கினியால் சுடலாம். அகங்காரத்தைச் சுட்ட சுடலைச் சாம்பலை சிவபெருமான் எடுத்ததை பஞ்சாக்ஷரமான விபூதி இதுதானென்றும் அனைவருக்கும் தெரியும்பொருட்டு சர்வாங்கமெல்லாம் பூசிக்கொண்டு நடராஜனாய் ஒற்றைக்காலைத்தூக்கி நடனஞ்செய்வதென்றறியவும். ஆதலால் அகங்காரத்தைச் சுடுவதாம் சிரேயஸ்களுக்கெல்லாம் மேலான சிரேயஸ் என்றும் அகங்காரத்தைக் கொல்வது எல்லாவற்றிலும் சிறந்ததென்றும் எல்லா ஞானநூல்களிலும் மகாத்மாக்களும் கூறியிருக்கிறது சத்தியம். அதாவது எல்லா சுருதிப் பிரமாணங்களிலும் கூறியதில் முக்கிய தாத்பரியம் எதுவென்றால் அகங்காரத்தை யடக்குவது ஒன்றுதான். இதைத்தவிர வேறொரு தாத்பர்யமுமில்லை என்பது சத்தியம். ஆதலால் அகங்காரத்தைக் கொல்லும்படி முயற்சி செய்பவர்களிடத்தில் பரமசிவன் உதவியாயிருக்குமென்றறிக. அதாவது காமியகர்மத்தினுல் ஆசையும் அகங்காரமும் வளருமென்றும், நிஷ்காமத்தினுல் நிராசை வளருமென்

றும், நிராசை வளர்ந்தால் ஆசையும் அகங்காரமும் அடியோடே நசிக்கும் என்பதே முன்கூறிய தாத்பரியம். அகங்காரத்தை யடக்கும்பொருட்டு அகங்காரம் வேண்டியதவசியம். அதாவது சாத்வீக அகங்காரத்தைக்கொண்டு ராஜஸ அகங்காரத்தையும் தாமச அகங்காரத்தையுங் கொன்று பரிசுத்த நிலையை யடைந்து பரமாத்மத்தியானஞ் செய்வதானல் அந்த சாத்வீக அகங்காரமுமடங்கும். அடங்கிவிட்டால் நீரிற்குமிழிக்குச் சமானமான அற்ப ஆயுசோடுங்கூடிய சரீரமும் சொர்ப்பனத்துக்குச் சமானமான சம்சாராதிகளும் அதோடுகூடியுள்ள போகங்களும் அரை நிமிஷத்திற்குள்ளழிந்துவிடும். இதுகள் நித்தியமல்லவென்றறிந்து தீவிர வைராக்கியம் வந்தவர்களுக்கு அகங்காரமே ஒரு குருவாயும், பந்துவாயும், குலதெய்வமாயுமிருக்கும். இவைத்தவிற ஆசையோடுகூடிய அகங்காரமான தடியைச் சுமக்கும் சுமையாளிக்குச் சுமைகூலியாவது எமதண்டனை. அகங்காரமான மூட்டை ஒருவருக்கும் சொந்தமல்ல. அது பரமாத்மாவிலிருந்தும் தோற்றியதாம். இதை உள்ளபடி யறிந்து பரமாத்மாவிலடக்கி நிராசையானல் சாந்தமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. அகங்காரம் சாந்தமானல் எமதண்டனையுங் கிடையாது. (மனம்) ஓ சுவாமி, அடியேனுடைய விண்ணப்பமாவது அரூபமான பரமாத்மாவினிடத்தில் அனுகூலமாயிருந்த மாயையிலிருந்தும் சொரூபமாய் அகங்காரம் பிறக்க என்னகாரணமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அநாதியான வெகுர்வாசனையோடு கூடிய ஜீவர்களை எல்லாம் மூலமாயையின் வசஞ்சேர்த்து பிர்ம்ம கற்பத்தின்கண் முடிவில் பஞ்சவர்ணமான ஒரு பையில் பல மாற்றுள்ள பொன்மணிகள் பலவிதமும் போட்டு ஒன்ருகக்கட்டி சூக்ஷித்து வைத்ததுபோல் அந்த பரிபூர

ஞானந்த பிர்ம்ம சக்திக்குள் சூக்ஷுமமா யடக்கிவைத்துக் கொண்டிருந்தது. அதுகளை எல்லாம் பூர்வவாசனைக்குத் தகுந்தபடி முன்போல் சிருஷ்டிசெய்ய வேண்டுமென்கிற இச்சையோடுகூடி கடவுளின் சுவாதீனமாயும், பரிசுத்தமாயு மிருந்த மாயையிலிருந்தும் சாத்வீககுணமா யவதார மெடுத்த விஷ்ணு. அந்த விஷ்ணுவானவர் தன்னுடைய அம்சங்கொண்டு ஒரு கிரியாசக்தியை சகல அவயவங்க ளோடுகூடி சிருஷ்டித்தது; அதுதான் பிர்மா. அந்த பிர்மா சாத்வீகத்தினம்சமான ராஜச குணமாம். அந்த ராஜச குணமான பிர்மாவுக்கு சராசர ஜீவராசிகளை எல்லாம் பூர்வவாசனைக்குத் தகுந்தபடி சிருஷ்டி செய்யும் பொருட்டு உபாயத்தையும், அதுகளெல்லாம் கடைத்தேறும்பொருட்டு நீதி மார்க்கத்தையும், விதி நிஷேதாதி தர்ம கர்மங்களையும், சுருதி வேதாதி புராணங்களையு முபதேசிக்கப்பட்டது. அதை ஒத்துக்கொண்டு அந்த கிரியா சக்தியான பிர்ம்மா தன்னைப்போல் சகல அவயவங்களோடுகூடி சராசர ஜீவர் களுடைய பூர்வ வாசனைக்குத் தகுந்தபடி சரீராதி வஸ்துக் களையும் சிருஷ்டித்தது. அதுகளுக்கெல்லாம் அந்த போகாதி நிமித்தம் அவைகளுக்கெல்லாம் கால குண பேதத் தினல் சாத்வீகத்தையும் தர்ம மரியாதையையும் மறந்து அதர்மமும் அக்கிரமமும் மேலிட்டு தாமசாந்தகாரத்தில் மூழ்கி அஞ்ஞானத்தினல் அகங்காரம் மேலாகிவிட்டது.

மனம் ஓ சுவாமி! இதைக்கேட்டு கானற்ஜலம் கண்டது போலும், கனவுகண்டதுபோலும், ஜகமுழுதும் பொய்யா மென்றும், வேதாந்திகளும், மண்ணும் பலபாண்டமும் போலும், பொன்னும் பலமணிகள்போலும், ஜகத்தெல்லாம் பிர்ம்மமயமாமென்று சித்தாந்திகளும் சொல்லுவார்கள். இதுகளிலெதுதான் உண்மை என்றும், எதை நம்பவேண்டு மென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! வேதாந்தமென்றும் சித்தாந்தமென்றும் சொல்வதிரண்டு மொன்றுதான். இதுகளிரண்டும் பேதமில்லை. ஆதலாலிது இரண்டையும் நம்பவேண்டும். எல்லாம் பொய்யானல் மெய்யேது. எல்லாம் மெய்யானல் பொய்யணுவளவுங் கிடையாதென்பது நிச்சயமல்லவா? ஆதலால் பொய் மெய்யிரண்டுமாயிருப்பது மனமொன்றுதான். அந்த மனமானது வேதாந்தமுமல்ல; சித்தாந்தமுமல்ல. அது சுத்தப்பொய்யாம். ஓ மனமே! கானற்ஜலம் போல் தோற்றியது சரீராதிப் பிரபஞ்ச வஸ்துக்களாம். அதை உண்மையாகக் கண்டதும் மனம் ஒன்றுதான். ஆதலால் மனதிற்கு திரிவித குண கர்ம சங்கற்ப மிருக்குமட்டும் திருமூர்த்தி முதலான தேவர்களும் திரிவிதகுணமான அவதாராதி கர்மபேதங்களும் சுருதி வேதாதி நான சாஸ்திரங்களும் சராசர ஜீவராசிகளும் அதிலும் மகத்துக்களும் சகுணமாயும் நிர்க்குணமாயும் பசுபதியாயும் ஆண்டவனடிமை குருசிஷ்ய பெந்தமோக்ஷ மிதுகளெல்லாம் வெகுவிதபேதமாயுள்ளதாய்த் தோற்றுவது திரிகுணமயமான மனசங்கற்பமல்லாமல் பரிசுத்த ஆத்மாவில் அணுவளவும் பேதமில்லை என்பது சத்தியம். அதுவுமல்லாமல் தோற்றுவதற்குக் காரணம் பொய் மாயையாயிருந்த மனதிற்குத் தோற்றுவதல்லாமல் அது எதார்தமல்லவென்றும் வேதாந்திகளுடைய அபிப்பிராயம். ஆதலால் மனச்சங்கற்பமற்று மனோலயமானல் நிர்க்குணமாமென்றும், அது மெய்யறிவிளக்கமென்றும் தாத்பரியம், மனம் ஓ சுவாமி! இனி சித்தாந்திகளுடைய அபிப்பிராயமாவது யாதென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சர்வேந்திரியாமியாய் சர்வ சங்கற்பத்திற்கும் காரணமாயிருந்ததும் பரமாத்மா ஒன்றுதான்.

ஆதலால் மண்ணும் பலபாண்டமுமொன்றுதான். அது போல ஜகத்முழுவதும் பிர்ம்மமயமா மென்றும் ஏகமாய் பரிபூரணமாயுள்ளதாமென்றும் சித்தாந்திகள் சொன்னதும் உண்மைதான். மனம் ஓ ஆண்டவனே! முன் கூறினபடி உண்மையாக இருக்க சர்வ வியாபகமாயும் சர்வமத சம்மத மாயும், சச்சிதானந்த ஸ்வரூபமாயும், ஏகமாயும், பரிபூரண மாயும், சத்தியமாயும், நித்தியானந்த ஸ்வரூபமாயுமுள்ள பரமாத்மா எல்லோருக்கும் பொதுவாயிருக்க அநேகவித பேதமாய் பரமசிவன் வேறே ஸ்ரீ மஹாவிஷ்ணு வேறே, இந்தப்படி அநேக மூர்த்திபேதமாயும் சிவனே பெரிது, விஷ்ணுவே பெரிது, என்று பிடிவாதம் செய்வதும், அதை சில பேர்கள் குதர்க்கம்பேசி சண்டைபிடித்து பிராது கொடுக்க என்ன காரணமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஒருவன் ஒரு நாயானதை வளர்த் துக்கொண்டு வந்தான். அதற்கு யாரையுங் கடிக்க சாமார்த் தியமுண்டு. அது அப்படியிருக்க அந்த நாயைவிட்டு எஜ மான் வேறொரு தேசம்போய் சிலநாள் கழித்தபின் ஒருநாள் பாதிராத்திரி சமயத்தில் மாறுவேஷம் போட்டுக்கொண்டு வந்தாலும் இவன் நம்முடைய எஜமான்தான் என்கிற அறிவு அந்த நாய்க்கு உண்டென்பது சந்தேகமில்லை. அந்த நாய்க் குள்ள விவேகத்தில் அணுவளவானாலும் மதகெர்வமடைந்த சமயவாதிகளுக்கிராது.

ஓ மனமே கேள்! ஒருவனிடத்தில் ஒரு திவ்யமான சிந்தாமணியிருக்க சிந்தாமணியென்று தனக்குத் தெரியாத வனுக்கு வேறொரு அதிதிவ்யமான சிந்தாமணி காண்பித் தால் எப்படித் தெரியும். அதுபோல தன்னிடத்திலிருக் கும் விஷ்ணு பகவானையும் சிவபெருமானையும் தெரிந்து கொள்ளக் கருத்தில்லாதவன் வைகுந்தம் போனாலும் கைலா

சம்போனாலும் எப்படித் தெரிந்துகொள்ளமுடியும். ஆதலா லிந்த மதாசாரிகள் மகாஞானிகளென்றும் சொல்லலாம். அதாவது ஏழாவது பாற்கடலுக்குள்ளே பாம்பின்மேல் பள்ளிகொள்வதாம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவென்றும், அவருக்கு ஆறுமுழ பீதாம்பரமும் நாலு கையும் நாலாயுதமுள்ளதாயும் மேகவர்ணமாயும் மற்றும் அநேக திவ்விய குணமுடைய தாயும் ஸ்ரீ, பூமியிரண்டும் இருபாகமாயும் வைத்துக்கொண்டு படுத்துத்தூங்குவதாயும் வைஷ்ணவமதஸ்தர்கள் கண்டது முண்மைதான். இவர்கள் எப்போதுணர்வார்களோ தெரியாது. இனி சைவமதஸ்தர் சிவனைக் கண்ட காக்ஷி சொல்வேன் கேள். ஏழுகிரிக்கு வடதிசையில் எட்டாவது கைலை என்னும் ஒரு கிரி இருக்கிறது. அதானது வெள்ளிமலை. அந்த வெள்ளிமலையில் பரமசிவன் பார்வதி சமேதராயிருக்கிறாரென்றும் அந்த பரமசிவத்தின் சொரூபமாவது செஞ்சடையும் சுரநதியும் அரைமதியும் வன்புலித்தோலுடையாடையும் கையில் மான் மழு முதலானதுகளும் தரித்து சர்வாங்கமெல்லாம் விபூதிருத்திராக்ஷமும் சர்ப்ப கங்கணமும் சர்ப்ப பூஷணமும் திருக்கண்கள் மூன்றும் திருவடிகளிரண்டும் வெள்ளிபோல் நிறமுடைய ஒரு இருஷப வாகனத்தின்மீது பார்வதியம்மனை இடது தொடைமேல் வைத்துக்கொண்டு வீற்றிருப்பதை சைவமதஸ்தர்கள் கண்டதும் உண்மைதான். இதற்கு சந்தேகமுண்டா. பாலாழிக்குள்ளும் ஆகாசத்திற்கு உள்ளும் புறமும் சராசர பிராணிகளிடத்திலும் நிறைந்து பரிபூரணமாயிருக்கிற விஷ்ணுவையும் சிவபெருமானையும் சமயவாதிகளுக்குத் தெரியாது. ஆதலால் இருமதஸ்தர்களும் சபைகூடி இருபாகமாய் குதர்க்கம் பேசி எங்கும் தொடர்ந்து எதிர்வழக்காய் எங்களுடைய தெய்வமே பெரிது, அதல்ல, எங்களுடைய தெய்வமே மேலானது, உங்களுடைய தெய்வமாகிய சிவன் பிச்சாண்டி,

செத்த சவத்தைச் சுட்ட சுடலைப்பொடியில் நடனமாடுந் தெய்வம், எங்களுக்காகா போ போ வென்று விஷ்ணு மதாசாரியர்களும், அதைக் கேட்டு சைவாசாரியர்கள் கோபங் கொண்டு, பல்லைக்கடித்து, அடா முழுமூடா உங்களுடைய விஷ்ணுவானவர் ஒரு பன்றிதான் இதற்குச் சந்தேகமில்லை, அந்தப் பன்றியானது பூமியைக் கிழித்து பாதாளம்வரை தேடியும் எங்களுடைய சிவபெருமான் திருவடியைக்காணுத புத்திகெட்ட விஷ்ணு எங்களுக்காகா போ போ, என்று சைவமதாசாரியர்களும், இந்தப்படி இருமதஸ்தர்களுங் கூடி சண்டைபிடித்து பிராது கொடுத்ததைச் சமரச ஞானமுடைய ஜட்ஜிகள் பார்த்து இரு மதஸ்தர்களையும் வரவழைத்து விசாரணை செய்ததில் சண்டைபிடிக்கக் காரணம் அகங்காரமொன்றுதான், அகங்காரத்தினுல் மதகெர்வமென்றும், மத கெர்வத்தினுல் பிடிவாதமாச்சுதென்றும், இவர்களுடைய பிடிவாதமானது பக்தியல்ல, இது நிந்தாஸ்துதியானதால், ஈஸ்வரனை நிந்திப்பவர்களாமென்றும், ஈஸ்வரனை நிந்திப்பது கொடிய பாபமாதலால் இவர்களிருமதஸ்தரும் குற்றவாளிகளாமென்றும் குற்றத்திற்குத் தகுந்தபடி தண்டனை ஏற்படுத்தி அதுகளில் இது பெரிய குற்றமாமென்றும், இதற்கு சிக்ஷை கொடிய நரகமாமென்றும், விதிக்கப்பட்டது. எல்லோருக்கும் பொதுவாயும் ஏகமாயும் சர்வாந்திரியாமியாயும் சர்வ வஸ்துக்களிலும் வியாபகமாயும் சர்வ சாக்ஷியாயும் மதரகிதராயும் அபேதமாயுமிருக்கும் கடவுள் ஒருவரே சர்வமுமாதலால் ஒரு வஸ்துக்களையும் தூஷிக்காமலிருப்பது மெத்தவும் நன்று நன்று என்று வேதங்களாலும் பெரியோர்களாலும் கூறப்படுகிறது. ஆதலால் சர்வ பிராணிகளிடத்திலும் ஜீவகாருண்யமும் உபசாந்தமுமாய் வணங்குவதாம் ஈஸ்வர குரு பக்தி என்றும், இது தான் ஏகாந்த பக்திக்கு முதற்படி என்றும், இதனுல் ஜீவன்

முத்தியடையலாமென்றும், சுருதிப்பிரமாணங்களும் பெரியவாளும் கூறியிருக்கிறது சத்தியம். ஒரு வஸ்துக்களிலும் விபர்தமில்லாமலும் பேதமில்லாமலும் தூஷியாமலும் சராசரத்தையும் ஒரு குருவாகக்கண்டு வணங்குபவர்தான் உத்தம குரு பக்தர்களென்றும், சாத்வீககுணவிர்த்தி எல்லாம் பரமாத்மாவாகப் பார்ப்பதுதான் ஞானத்திரட்டென்றும், பெரியவாள் சம்மதம். இதற்கு முக்கியமானது உத்தம குருபக்தியாமென்றும் உத்தம குருபக்தருக்குத்தான் பூரணக்ஞானமும் சித்தி முத்தியு மடையக்கூடுமென்பது தாத்பரியம். மனம் ஓ சுவாமி! பூரணக்ஞானமாவது யாதென அருள் செய்ய வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தங்களிலும் மணிமந்திர தந்திர ஔஷதங்களிலும் கைலாச மாமலையிலும் பாற்கடல் நடுவிலும் ஆகாச வீதியிலும் கண்டதிலும் கேட்டதிலும் நினைந்த யிடத்திலும் தானாய் யேகமாய் ஆதியந்தமில்லாமலும் சர்வசாக்ஷியாயும் பூரணமாய் நிறைந்ததுவாம் பரமாத்மா யேகமென்று மறிக. மனம் ஓ சுவாமி! இப்படிக்கொத்த பூரணக்ஞானம் உண்மையாயறிந்து அதை அடையுமார்க்கம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! காட்டிலிருக்கும் புழுவை ஒருகுளவி எடுத்து கூட்டிலே புதைத்து வைத்து கொஞ்ச காலத்திலது குளவி சொரூபமாவதுபோல் பூரணக்ஞானியாம் பரமாசாரியருடைய திருவடி இரண்டையுந் தியானிப்பதனால் ஸ்வரூப சாக்ஷாத்காரமடைந்து பூரணக்ஞான மடையலாம். ஆனால் பூரணக்ஞானத்தை மறைப்பது மனக் குற்றம். மனக் குற்ற மற்றால் திருச்சிற்றம்பல தெரிசனமாகும். (மனம்) ஓ

ஆண்டவனே. மனதின் சொரூபமாவதென்ன, அதற்கு வந்த குற்றமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனமானது அரூபமான பரமாத்மாவினுடைய அம்சமான மாயையாதலால் அதானது பரமாத்மாவைப்போல் அரூபமாகையால் அதை ஒருவருக்கும் பார்க்கக்கூடியதல்ல. தன் முகம் தன்னை மறைப்பதுபோல் தன் மனமே தன்னை மறைக்கப்பட்டது. அதனால் தன் மனதை தனக்குக் காணக்கூடாதென்பது நிச்சயம். ஆனாலுமது சீரத்தோடு கலந்திருந்தமட்டும் அதற்கு ரூபமுண்டு அதாவது அரை நிமிஷத்திற்குள் அநேக நாம ரூப சங்கற்பமாயிருக்கும். அந்த மனதிற்கு பெந்தமானது சீர சம்பந்தம். அது மாயா சூத்திரத்தினால் பஞ்ச பூதமாயும், சுக்கில சுரோணிதங்களாயுமுள்ள மண்ணும் தண்ணீரும் கூட்டி குயவன் தொழில்போல் சராசரத்திற்கும் சீரம், அதானது ஆண் குறியாயும் பெண் குறியாயுமிருக்கும். இப்படிக்கொத்த சீரங்களுடைய மனமானது ஆண்குறி பெண்குறியிலும், பெண்குறி ஆண்குறியிலும், கூட்டுறவாய் உற்பத்திக்கு ஸ்தானமாயும் அநேக சங்கற்ப விகற்பத்தோடு கூடியும் பொருந்தியிருக்கும். இதனால் தங்கம்போலிருந்த மனதிற்கு அநேக சஞ்சலமுண்டாயிற்று. அதனால் ஆண்மனம் பெண் குறியாயும் பெண் மனம் ஆண் குறியாயுமிருக்கிறது. அதாவது இது என் மனைவி, இவரென் மணவாளனென்கிற ஸ்திரிபாவனையாயும் துக்க சாதனங்களான அனாத்ம வஸ்துக்களோடு கூடி பாலும் நீரும் இரண்டறக் கலந்ததுபோல் பசுபதி பாவனையாய் அநித்தியமாயுள்ள வஸ்துக்களிலாசை கொண்டு அதனால் கஷ்டப்பட்டு அலைவது அநாதியாம். ஆண்டவனுடைய அருள் கிடைக்கும் நாள் வரைக்கும் இதற்கு அந்தமும் கிடையாது. சங்கற்பமற்றால் ஆதியந்த

மான மனமில்லை. மனோலயமானால் சங்கற்ப விகற்பமான மாயாசொரூபமில்லை. மனம் இதைக்கேட்டு ஆண்டவன் அடிமை யார், பசு பதி பாசம் எதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆண்டவனென்பது நித்திய நிதான நிராமயமாயும், பரிசுத்த பரிபூரண நிர்மலமாயும், ஏகமாய் அரூபமாய் அகண்டமாய் நிற்குணமாயுமுள்ள பரமாத்மா ஒருவர்தான் ஆண்டவன். அடிமையாவது தன் சிற்சக்தியான பரமாத்மாவின் அம்சமான ஜீவனும் சிற்சக்தியின் அம்சமான மனமுங்கூடி இரண்டறக் கலந்திருப்பதாம் அடிமை. இனி பசு பதி பாசமாவது, இதில் பசுவானது ஆசாபாசத்தில் கட்டுப்பட்ட மனந்தான். பதியாவது ஜாக்கிரத் சொர்ப்பன சுழுப்தி இந்த மூன்று அவஸ்தைக்கும் சாக்ஷியாயிருந்த ஜீவன்தான் பதி. இனி பாசமானது மென்மேலும் போகத்திலுள்ள ஆசைதான். ஆதலால் ஆசைக்குக் காரணம் மாயை. ஆசையினால் செய்வது கர்மம். கர்மத்தினால் பெந்தம். கர்ம பெந்தம் விட்டால் பாசமறும். பாச பெந்தம் விட்டால் பசுபாவனை விடும். பசுபாவனை விட்டால் ஜீவன் முக்தனும். அது பரமாத்மாவாம். சந்தேகம் வேண்டாம். முன் கூறிய பசுவானதிற்கு விபரம். மூலப்பிரகிருதி, மகதத்துவம், அகங்காரம், தன் மாத்திரைகளைந்து, பஞ்ச பூதமைந்து, இந்திரியங்கள் பத்து, மனது ஒன்று, ஆக யிருபத்துநான்கு தத்துவங்களுமாம். இதுகளுக்கு பதியானது ஜீவன். அந்தப்பதி யிருந்தமட்டும் சதி என்கிற சங்கற்பமிருக்கும். அந்தச் சதி யிருந்தமட்டும் பதி என்கிற சங்கற்பமிருக்கும். சதியில்லாவிட்டால் பதி என்கிற சங்கற்பமில்லை. ஆதலால் பிரகிருதிநாசத்தின்கண் புருஷனென்கிற நாமமுங் கிடையாது. அதானது முன்கூறிய யிருபத்து நாலு

பிரகிருதி தத்துவங்களும் புருஷனை ஜீவனில் லயமானல் பசு பதி பாசமற்று ஜீவன் முக்தனும்.

ஓ மனமே இன்னும் கேள்! பசுவானது ராஜசம். பதி யானது சாத்வீகம். பாசமானது தாமசகுணமாம். மனம் ஓ ஆண்டவனே! பரமாத்மாவானது எங்கும் யேகமாயும், சரீரமானது பஞ்சபூதமயமாயுமிருக்க வர்ணுசிரமாதி குலா சார தர்மங்களாவது யாது? இதுகளில் ஆத்மாவுக்கோ, தேகத்துக்கோ, வர்ணுசிரமத்தைப் பிரதானமாக்கி நீ இழி குலத்தோனென்றும் நான் தொழுகுலத்தோனென்றும் விப ரீதமாயும், அநேக பேதமாயும் ஏற்படுத்தக் காரணம் என்ன வென்றுகேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சரீரம் நிஜமானல் வர்ணுசிரமம் சரி. அதாவது முக்குணத்துக்குளடக்கமான சராசரபிராணி களில் பிரதானமானது மனிதர்கள். மனிதர்களுக்கு ஜனன மரணுதி சம்சாரத்திலிருந்தும் கடைத்தேறும் பொருட்டு வர்ணுசிரமம் தவராமல் நிஷ்காமமாய் கடவுளை உபாசித்து அகங்காரத்திற்கும் சம்சாரத்திற்கும் ஜனன மரணுதி துன்பங்களுக்கேதுவான வர்ணுசிரமாதி குலாசார தர்மங்க ளெல்லாம் மாயாகாரியமாம். அது பொய்யாமென்றறிந்து அவைகளையடியோடு தள்ளிவிட்டு விதேக கைவல்யமடையும் பொருட்டு சன்மார்க்கமாக வேதமாதா கூறியது முண்மை தான். இந்தப்படி வேதங்கூறியதின் எதார்த்தம் தெரியா மலும் அன்னர்த்த நிமித்தம் வேதங்களைப் படிப்பதும் சாதுக்களிடத்தில் குதர்க்கம்பேசி வர்ணுசிரமம் மேலான தென்றெண்ணி அதில் பிரம்ம சரிய முதல் நாலாச்சிரமங் களும் அடியோடு தள்ளிவிட்டு ஜாதியில் பெரிய ஜாதி யென் றெண்ணி பிதிர்தேவாதி சாதுக்களுக்கும் நிவேதனம் செய்

யாமல் மறைவுகட்டிச் சாப்பிட்டு வீண்காலம் போக்கினுல் அந்த வர்ணுசிரமங்கொண்டென்ன பிரயோசனம். அதினுல் நரகமே பலமாமென்றும் வேதமாதா கூறியதாம். மகா பூதங்களிலிருந்தும் பிறந்த அபஞ்சீகிருத பூதங்களை ஐந்தாக எண்ணியதும் வேதந்தான். ஐந்து பூதத்தையும் பத்துதுண்டாக்கிப் பாகம் செய்ததும் வேதந்தான். பத்தில்பாதி ஐந்துபாகம் நாலு நாலாகப் பாகம்செய்து இருபத்தைந்தாக்கி பஞ்சீகாணம் செய்ததும் வேதந்தான். அதுகளைத் தொண்ணூற்றுராகப் பாகம்செய்து பிர்ம்மாண்ட மென்கிற ஒரு மாயாபட்டணத்தை நிர்மாணம் செய்ததும் அந்த வேதந்தான். பரமாத்மாவே சர்வாத்மாவென்று சர்வாத்மாவே பரமாத்மாவென்று கூறியதும் வேதந்தான். எல்லாமானுலும் பஞ்சபூதமைந்துதான். ஜடமானுலும் பூரணக்ஞானமடையுநாள் வரைக்கும் இந்த மாயாசொரூபம் உண்மையாக யிருக்குமென்று கூறியதும் வேதந்தான். பூரணக்ஞானமடைந்தவாளுக்கு இது உண்மையல்லவென்றும், உண்மையாகத்தோற்றுவது அஞ்ஞானமென்று கூறியதுமந்த வேதமாதாதான். இதைக்கேட்ட (மனம்) ஓ சுவாமி! சத்தியமாயு நித்தியமாயுமுள்ள பூரணக்ஞானத்திற்குள்ளே அஞ்ஞான முண்டானதெப்படி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அறிவையறிந்தது பரமாத்மா. அறிவைமறந்தது அகங்காரத்தோடு கூடிய ஜீவாத்மா. அந்த ஜீவாத்மாவுக்கு சரீரமே நான் என்கிற அகங்காரமாம் அஞ்ஞானம். அஞ்ஞானம் விட்டால் அந்த ஜீவனே பூரணமாம். அஞ்ஞானமிருக்குமட்டும் ஜீவனுக்குப் பூரணம் விளங்காது. பூரணக்ஞானமடைந்தவாளுக்கு அஞ்ஞானம் அணுவளவுமிராது. ஆதலால் பூரணக்ஞானத்திற்குள்ளே அஞ்ஞான

மிருக்குமென்றும் அஞ்ஞானத்திற்குள்ளே பூரணமிருக்கு மென்றும் தோற்றுவதும் அஞ்ஞானமாம். பூரணக்ஞானத் திற்குள்ளே எப்படி அஞ்ஞானம்வருமென்று புத்திகொண்டு உண்மையாக விசாரித்தால் வரக்காரணமில்லை. அது மூட் காலத்திலும் பூரணமாம. ஏனென்றால் பூரணக்ஞானத்திற் குள்ளே அணுமாத்திரமானாலும் அஞ்ஞானமிருக்குமென்று தோற்றினால் பூரணக்ஞானம் விளங்காது என்பது சத்தியம். இதைக்கேட்ட (மனம்) ஓ சுவாமி! இந்தப்படி ஆத்மா பூரணமாயிருக்க அஞ்ஞானம் வந்தவாறெப்படியென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே! நீ கேட்டதற்கு உதார்ணம். கானற்ஜலம், கடல்நுரை, கயற்றிற்பாம்பு, கிளிஞ்சலில் வெள்ளி, மண் ணிற் பாண்டம், கந்தர்வ நகரம், மலடியின் மைந்தன், ஆகா சத்தில் சித்திரம், இந்தப்படி உலகத்தில் கண்டதெல்லாம் அஞ்ஞானமாம். ஆதலால் அஞ்ஞானம் நீங்கிவிட்டால் பூரணக்ஞானத்தைத் தவிற அஞ்ஞான மணுவளவுமில்லை. அதாவது புத்தி இந்திரியங்களால் தோற்றப்பட்ட உலகை மானது அஞ்ஞான மோகத்தினால் ஆரோபமாய்த் தோற்றுவ தாம் அகங்காரமென்றும், இதை அன்புற்று அருள் பெற்று உணர்ந்து பார்த்தால் உலகமெல்லாம் சொர்ப்பன சமானமாமென்றும், அறியப்படும். ஆனாலும் இந்த மாயாப் பிரபஞ்சமானது அகங்காரமான ஒரு விருக்ஷம். இந்த மாயாப்பிரபஞ்சமான விருக்ஷத்திற்கு வித்தானது அநாதி யான மூலவாசனை. இதற்கு இடமானது மனம். மூளையா னது கர்மம். மரமானது அகங்காரம். கிளையானது நாலு வேதம். புஷ்பமானது சங்கற்பம். அதின் பலனானது நரக சொர்க்கம். இதை யனுபவிப்பது ஜீவாத்மா. இந்த அகங் காரமான விருக்ஷமிருந்தமட்டும் இதன் பலன்களை ஜீவன்

புசிக்கும். ஆதலாலிந்த விருக்ஷத்தை அடியோடு வெட்டி வேரைப்பிடுங்கிவிட்டால் ஜீவனுக்கு உபஜீவனங்கிடையாது. இதைக் கேட்ட மனம், இப்படியிருக்கு மகங்காரமான விருக்ஷத்தை அறுத்து, வேரோடு பிடிங்கித்தள்ளும் உபாயம் எப்படியென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அஞ்ஞான மோகத்தால் ஆரோப மாய்த் தோற்றமிந்த அகங்காரமான விருக்ஷத்தை அடியோ டறுக்குமுபாய மெப்படி என்றால், குருவருள் விஞ்ஞான மான கோடாலிகொண்டு வெட்டி மூலவாசனையான வேரை யடியோடு பிடிங்கி பிரக்ஞானமென்னும் பெருந்தீயினாற் சுட்டு சாம்பலாக்கிப் போட்டால் அகங்காரமான விருக்ஷ மேது. அகங்காரத்தைப் போக்குவதற்கு இது நல்ல உபா யம். இதைத் தவிர வேறொரு விதத்திலும் முடியாது. அகங்காரமான விருக்ஷத்தின் பலமான வித்தும் மூலவாசனை யான வேரும் அடியோடு பிடுங்கிவிட்டால் சம்சாரத்தோடு கூடிய அகங்கார விருக்ஷம் அடியோடு நசிக்குமென்று முன் கூறிய தாத்பரியம். ஆதலால் வாசனைக்ஷயமும், மனோலய மும், நிராசையும், நல்ல விவேகமும், அடைந்த ஜீவன் முத் தர்களுக்கு இவ்வுலகமும் எவ்வுலகமும் சத்தாமாத்திரமாத லால் எல்லாம் சத்தாய்த் தோற்றுவதற்குச் சந்தேகமில்லை. ஆதலால் சிற்றின்பமான போகத்தில் ஆசையிருந்தமட்டும் உலகம் வேறு ஆத்மா வேறாகத் தோன்றும். அதுவுமல்ல, அஞ்ஞானிகளுக்கு நிவர்த்தி சாஸ்திரம் பொய்யென்றும், பிரவிர்த்தி சாஸ்திரம் மெய்யென்றும், எண்ணுவார்கள். நிராசையாய் இச்சை எல்லாம் விட்டவாளுக்கு நிவர்த்தி சாஸ்திரம் மெய்யென்றும், பிரவிர்த்தி சாஸ்திரம் பொய் யென்றும், நம்புவார்கள். இந்த உலகம் உண்மையாகத் தோற்றுவது யாதென்றால், இந்திர ஜாலகனுடைய மாயா

வித்தை உண்மையாகத் தோற்றுவதுபோல் இந்திரியங்களுக்கும் மனதிற்கும் தோற்றுவதல்லாமல் எதார்த்தமல்ல. இந்திரியங்களும் மனதும் அடங்கிவிட்டால் சொல்வதற்கிடமில்லை. ஒன்றுமே தோற்றுவதற்குமிடமில்லை. கேழ்வியும் பேச்சும் தோற்றமுமில்லாவிட்டால் கேட்டவர் யார்? கண்டவர் யார்? சாக்ஷியேது? ஜடமேது? ஜகத்தேது? பெந்தமேது? மோக்ஷமேது? சொர்ப்பனங்கண்டுணர்ந்தவர்களைப் போல் ஒரு வஸ்துவுங் கிடையாது. இதைக்கேட்ட (மனம்) ஓ சுவாமி இதுகளிப்படியிருக்க இந்திரியங்களையடக்கி மனோலயமடைந்த மகான்களின் லெக்ஷணம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஒரு பரம சற்குருவையடுத்து மனதை யடிமைகொடுத்து புத்தியில் ஸ்திரமாக்கி சித்த சங்கற்பமான மும்மலங்களும் போக்கி அகங்காரத்திலுள்ள அபிமானம் நீக்கி அஞ்செழுத்தையும் அறிவுக்குளடக்கி அந்த ஐந்தெழுத்துக்குள்ளிருந்த பொருளை அருள்பெற்று ஆகாசம்போல் எங்கும் பரிபூரணமான துரியநிலையை யடைந்து பிர்ம்மானந்தமாய் துரியாதீதமாயும் சுயஞ்சோதியாயும் சும்மாயிருப்பதாமென்றறிக. (மனம்) ஓ சுவாமி மனோலயமானால் பரமாத்ம வஸ்து எப்படியிருக்கும், எங்கேயிருக்குமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆத்மாவானது ஆகாசம்போல் எங்கும் பரிபூரணமாய் சூர்யகோடிப் பிரகாசமாய் நித்திய நிர்க்குண நிஷ்களமாய், நிஷ்பிரபஞ்ச ஸ்வரூபமாய், சுத்த நிர்மல நிர்ச்சலமாய், நிரூப நிராதர நிரகங்கார நிராச்சரேயனாய், நிர்வேத்திய, நிர்வையிர, நிர்மோக, நிர்மூலமாயும், நிர்வாச்சிய நிராமய நிர்விகற்ப நிராகாரனாயும், நித்தியமாய், சத்தியமாய், நிர்த்தொந்துவனாயும், நிர்முக்தனாயும், ஸ்தூல சூக்ஷ்ம கார

ணங்களுக்கு அதீதமாயும், சாக்ஷியாயும், சூக்ஷுமமாயும், சர்வ பரிபூரணானந்தமாயும், சச்சிதாநந்தமாயும், வியோமாந்த சாரமாயும், விளங்குவதாம் பரப்பிரம்ம வஸ்துவென்றறிக. இந்தப்படி ஏகமாயும், அரூபமாயும், பரிபூரணமாயுமுள்ளது பரமாத்மா அநேகமாயும் அநேகநேகவித நாமரூபங்களோடுகூடி அநேக ஜீவர்களாயும், வெகுவித குணபேதமாயும், இந்த உலகம் வேறாகத்தோற்றுவது அஞ்ஞானம். அஞ்ஞானத்துக்குக் காரணம் மாயை. மாயாகுண விர்த்தியாம் அந்தக்கரண பிர்மை. அந்தக்கரணம் நாசமானால் அஞ்ஞானகுணவிர்த்திகள் அடியோடு நசிக்கும். அஞ்ஞான குணவிர்த்திகள் நாசமடைந்தால் ஆத்மா அனுமயனும். ஆத்மா அனுமயமானால் ஆத்மக்ஞானமாம். அறிவுவிளங்கும். அறிவு விளங்கிவிட்டால் சந்தேகந்தீரும் இப்படிக்கொத்த பரமானந்தபதமடைவது மகா துர்லபம். ஏனென்றால் இது உண்மையாக அனுபவித்தும் அனுபவிக்கும் பொருட்டு உபதேசஞ்செய்யும் பரமதேசிகர்களும் அதை உண்மையாக அறிந்து அப்பியாசம்செய்து அனுபவிக்கும் சிஷ்யர்களும் இந்தக்கலியுகமான உலகத்தின்கண் அதிதுர்லபம். ஆனாலும் அதையுள்ளபடி கண்டனுபவிக்கும் மகத்துக்கள் இவ்வுலகத்தின்கண் நாலுபேர்களுண்டு. இதைக் கேட்ட (மனம்) ஓ சுவாமி! அந்த மகத்துக்கள் நான்கு பேரும் யாரென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! முன்கூறின மகத்துக்கள் நாலு பேர் அவர்கள் யாரென்றால் பிரம்மாநந்தவீட்டுக்கதிகாரிகள். இவர்களில் முதலாவது விசாரணை, இரண்டாவது சந்தோஷம், மூன்றாவது குருபக்தி, நான்காவது சாந்தம். இவர்கள் நால்வரும் பிரம்மானந்த வீட்டுக்கதிகாரிகளாய் பிரம்மானந்தபதத்தைக் கண்டுண்டு கொண்டாடி தோத்திரங்

களைச் செய்தும், தியானிப்பதும், பூசிப்பதும், நேசிப்பதும் அன்பர்களுக் கனுகூலமாய் ஒரு காரியத்தின்கண் மந்திரியைப்போலவும், கருணையில் தாசியைப்போலவும், ரூபத்தில் லெக்ஷிமியைப்போலவும், பொருமையில் பூமியைப்போலவும், சிநேகிதத்தில் மாதாவைப்போலவும், அடுத்த அன்பர்களுக்கு அனுகூலத்தைச் செய்யும் பரம தேசிகராம். ஆதலால் இவர்களுடைய பாதசேவை பரமகதிக்கு வழி. இவர்களுடைய பாதசேவை கைவசமாகி இவர்கள் நமக்கனுகூலமானல், மூன்றுலோகமும் தாண்டிப் பிரயத்தனங்கூடாமல் முக்குணத்துக்கதீதமான பரமானந்தபதம் கரதலாமலகம்போல் கைவசமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. இந்தப்படி சாந்தியாதி நற்குணங்கள் நாலில் ஒன்றாகிலும் கைவசமில்லாத மூடர்களுக்கு அநேககோடி கற்பமானாலும் மோக்ஷங் கிடையாது; போகமுங் கிடையாது. இதைக் கேட்ட (மனம்) ஓ சுவாமி, சாந்தியாதி குணமாவது என்ன? அதற்குப் பொருளாவது யாது? அதை யருள்செய்ய வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சாந்தியாதி குணமாவது, விசாரணை, சந்தோஷம், குருபக்தி, சாந்தி இது நாலுக்கும் பொருள். முதலாவது விசாரணையின் தாத்பர்யமாவது வைராக்கியத்துடன் எதார்த்த சாஸ்திரங்களைக் குருமுகமாய் படித்து அதனுடைய எதார்த்தத்தை விசாரணை செய்து உண்மை இன்னதென்றறிந்து, நாம் முன்னிருந்த இடமெங்கே? நாமிவ்விடத்திற்கு வந்த காரியமென்ன? நம்மாலாகவேண்டிய காரியமென்ன? இந்தவுடலழிந்துவிட்டால் நாமடையப்போகிற விடமெங்கே? நித்தியமாவது யாது? அநித்தியமாவதெது? நானென்கிறவன் யார்? எனக்குச்சொந்தமாவதெது? நீ யென்பவன் யார்? உனக்கும்

நமக்கும் தலைவனர்? உண்மை நிலையாவது யாது? அதை அடையும் பொருட்டு உயிர் யோகமாவது யாது? இந்தப் படி பெரியோர் மகாவாக்கியமான பிரபல சுருதிப்பிரமாணங் களை குருமுகமாயாராய்ந்துபார்த்து அறிவதுதான் விசா ரணை. இரண்டாவது சந்தோஷமாவது. பூமிமுதல் நாதம் வரை மூன்றுலோகத்திலுமுள்ள இன்பமெல்லாம் சிற்றின்ப மென்றும், இது நித்தியமல்ல அதிக துன்பமென்றறிந்து, தீவிர வைராக்கியத்துடன் ஒரு காலத்திலும் துன்பமில்லா மலும் அழிவற்ற மோக்ஷமான பேரின்பத்தில் பேராசை யுடையவனுப் திரிகாலத்திலும் நாசமில்லாததாயுமுள்ள பர மாத்ம சந்தோஷமாம் சந்தோஷமென்றறிக. மூன்றாவது சற்குரு பக்தியானது ஔபாசனுதி அக்கினி ஹோத்திரம் முதலான தந்திரங்களும், காயத்திரி முதலான மந்திரங் களும், சந்தியாவந்தனுதி நித்திய கர்மானுஷ்டானங்களும், மற்றும் தர்மா தர்மங்களும், விதி நிஷேதாதி குண தோஷங் களும், புண்ணிய பாவங்களும், விட்டு நிஷ்காமியாய் பரிசுத்த சித்தனுப் பரமக்ஞானியாயும் பரமகுரு பக்தனுயுமுள்ள ஒரு பரமாசாரியரையடுத்து ஆத்மாவில் பொருந்திய சந்தோஷ மும்,சாந்தியாதி நற்குணங்களுமாய், மிகுந்த அன்புடன் தன் உடல் பொருளாவி மூன்றும் அவர் திருவடித்தாமரைமல ரில் அர்ப்பணமாக்கி, கபடமில்லாமல் வணங்கி, திருத் தெண்டமிட்டு, அவரை விட்டுவிடாமல் பாதுகாத்துப் பணி விடை செய்துவருவதாம் குருபக்தி என்றுமறிக. நான் காவது சாந்தம். இந்திரியங்களையும் மனதிலுள்ள ராகத் துவேஷாதிகளையுமடக்கி சுத்த சாத்வீகமடைவதாம். இப் படிக்கொத்த மஹாத்துக்களிடம் நமக்குப் பிரியமிருந்தால் அவர்களும் நம்மேல் பிரிமாயிருப்பார். அவர்கள் பிரியமா யிருந்தால் இந்த மூன்று லோகத்தையுங்கடந்து, பிர்ம்மா னந்தபதத்தையடைந்து, பேரின்பமான வீட்டில் சிரஞ்சீவியா

யிருக்கலாம். முன்கூறிய சாந்திபாதி குணங்கள் நான்கில் முக்கியமானது சாந்தம். சாந்தகுணமுடையவனுக்கு எதினாலும் ஒரு காலத்திலும் துக்கங்கிடையாது, சாந்தமாவது, காமசுரபியைப்போல் காண்க. பவ சாகரத்தைத் தாண்டும் உபாயம் சாந்தமாம். சாந்தமானது காமக்குரோதம், லோபம், மோகம் இதுகளையடக்கியதாமென்று சிலபேர்கள் சொல்லுவார்கள். முக்குணத்திலடக்கமாம் சாந்தமென்றும், நிராசையடைவது சாந்தமென்றும், பூமி முதல் நாதபடியுள்ள சமஸ்தப்பிரபஞ்ச நாமரூபங்களை மறந்து அவ்வியக்தமான பரமாத்மாவி லையிக்கியமாயிருப்பதுதான் சாந்தமென்றும், இந்திரியங்களை எல்லா மடக்கில் அகங்காரமான சித்தம் ஞானமாயிருக்கும் அக்கினியில், ஆகுதிசெய்வதாம் சாந்தமென்றும், நிஷ்காமமாய் நல்ல சத்கர்மங்களை ஈஸ்வரார்ப்பணஞ்செய்வதாம் சாந்தமென்றும், சில மஹாத்துக்களுடைய அபிப்பிராயம். இந்தப்படி பல பெரியோர்கள் சொன்னதெல்லாம் உண்மையே. ஆனாலும் இதுகளுடைய தாத்பர்யம் சித்தம் நிர்மல பரிசுத்தமானால் அதுவே சாந்தம். அதுவே வேதாந்த சித்தாந்தமுமாம். (மனம்) ஓ சுவாமி. வேதத்தை நன்றாயறிந்தவர்களுடைய அபிப்பிராயமாவது இன்னதென தெளிவாயுரைத்தருள்செய்யவேண்டுமென்று கேட்க. அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! வேதமானது சப்தப்பிரமாணமாம். அதுவும் பரமாத்மாதான். ஆனாலும் சப்தமானதற்குக் காரணம் இந்திரியம். இந்திரியங்களுக்குக் காரணம் மனம். மனதுக்குக்காரணம் ஆத்மா. ஆத்மாவானது கடல்போலவும், மனமானது அலைபோலவும், சப்தமானது அந்த அலையின் ஒலிபோலவும். ஆத்மாவும் மனதும் சப்தப்பிரமாணங்களும் ஏகமென்றறிவது அனுபவப்பிரமாணமாம். (மனம்)

ஓ சுவாமி, அனுபவப்பிரமாணமாவதின் தாத்பர்யமென்ன வென்று கேட்க, அறிவு கூறியது. அநுபவப்பிரமாணமாவது உண்மைக்ஞானவிளக்கமாம். உண்மைக்ஞான விளக்கமாவது தன்னைத்தான் அறிவதாம். தான் யாரென்றால் எல்லாவற்றையும் கண்டறியும் வஸ்துவாம். அதையறிவதும் அது தான். ஆனாலுமது விக்ஞானங்கொண்டறிய வேண்டும். விக்ஞானமாவது என்னவெனில் சர்வ தத்துவங்களுக்கும் அந்தர்யாமியாயும், சர்வபரிபூரண நிர்மலாத்மாவாயும், அபரிச்சேத்தியனுயும், ஏகமாயும், அரூபமாயும், பரமாயும், பராபர பரமானந்த பரிபூரணமாயும், புத்தி முதலான இந்திரியங்களினாலறியக்கூடாததாயும் உள்ளதாம் ஆத்மா. இந்தப்படியுள்ள பரமாத்மாவினிடம் அன்பு வைத்து மனம் பரிசுத்தமாக்கி ஜீவாத்மாவினை ஐக்கியம் செய்வதுதான் மூலவித்தியாவென்றறிக. அதாவது ஜீவாத்மா பரமாத்மாவிலைக்கியமடைந்தால் ஜீவன் வேறே கிடையாது. ஆனாலும் ஜீவன் வேறு பரம் வேறு இல்லை. பரமாத்மாவே ஜீவாத்மா, ஜீவாத்மாவே பரமாத்மா. அதாவது, தத்பதார்த்தமாயும், துவம் பதார்த்தமாயும் அசி பாதார்த்தமாயுமுள்ள மஹா வாக்கியத்தின் பொருள் அன்புற்று குருவருள் பெற்ற மஹான்களுக்கு விளங்குமல்லாமல் அஞ்ஞானிகளுக்கு விளங்காது. அதாவது சப்தப் பிரமாணங்களினாலும் வாக்கு மனக் காயங்களினாலும் அறியக்கூடியதல்ல. அது மாயைக்கு அதீதமாம் பூரணப்பொருளென்றறிக. அந்தப் பூரணக்ஞான குருவருளாலறிந்தால் மாயை அணுவளவுங் கிடையாது. அதாவது பூரண ஆத்மாவுக்குள்ளே அணுவளவானாலும் மாயை இருக்குமென்று சந்தேக முடையவர்களுக்கு அவ்வளவும் பூரணக்ஞானம் குறைவாயிருக்குமென்பது நிச்சயம். ஆதலால் எல்லாம் பிரம்மமயமென்றெண்ணுபவர்க்கு மாயை அணுவளவுங் கிடையாது. எல்

லாம் பிர்ம்மமயமென் றறிந்தவர்கள் பரமானந்த பாற்கடலில் தோற்றமும் ஒடுக்கமுமாய் தோன்றுகிற மனமான அலையும், ஒலியான இந்திரியங்களும், ஏகமாமென்பதுபோல் சராசரப்பிரபஞ்சமும் பரமாத்மாவும் சரீராதி வஸ்துக்களுமெல்லாம் பரப்பிர்ம்ம மயமாய் பார்ப்பவருக்கு மாயையானது சுத்தப்பொய். மாய்கை உள்ளதாகத்தோற்றுவது மனச்சஞ்சலமாம். மனச் சஞ்சலமற்றால் மாயையேது. மாயையில்லாவிட்டால் ஜடமேது? ஜகத்தேது? ஜன்மமரணாதி துன்பமேது? பெந்த மோக்ஷமாவதேது? மாயையில்லாவிட்டால் பிரபஞ்சம் அணுவளவுந் தோற்றாது. எதுபோலென்றால் மலடி வயிற்றில் பிறந்த மகனுக்கு அநேக நாம ரூபாதி குணதோஷங்களை விதிக்கப் படுவதுபோல் மாயாமயமான உலகம் நானாவிதமாய் அநேக நாம ரூபாதிகுணதோஷங்களைச் சொல்லுகிறதுகள். தாம் சப்தப்பிரமாணமென்றும், அது மித்தையென்றும், இந்த மித்தையாரூபத்தை மறந்ததே உண்மைக்ஞானமென்றறிக. (மனம்) ஓ ஆண்டவனே மாயையாவது யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மாயையாவது களங்கம். களங்கமாவது பொய். பொய்யான வஸ்து பின்னொரு வஸ்துவைப் பெற்றதாகச் சொன்னால் அதை நம்பலாமா? ஏனென்றால், பொய்ஸ்திரம்பெறுமா? பொய்ஸ்திரம்பெற்றால் அந்தவஸ்துவும் பொய்யாமென்றறியலாம். இந்தப் பரமரகசியத்தை யாரறிவார்களோ அவர்கள்தான் எதார்த்தக்ஞானிகளென்றறியலாம். ஆனாலும் அற்பபுத்திகளுக்கு விபரீதமாய்த் தோற்றும். அதானது எங்கும் பரிபூரணமாயும் நிர்மலமாயுமுள்ள ஆகாசத்தில் சூரியபகவான் சஞ்சரிப்பதால் பூமியிலுள்ள ஜந்துக்களுக்கு இரவும் பகலுமாய்த் தோற்றுவது போல, ஜீவன் சிதாகாசகுகையிலிருந்தும் மனச்சங்கற்பமான

இரவும் பகலும் இருளும் வெளியுமாயடைந்து பொய்யூருக்கு அரசாக்ஷியாய் பேராசையுடைய மந்திரியோடுகூடி அசட்டு வேடிக்கையாய் அகங்காரமென்கிற குதிரைமேலேறி அஞ்ஞானமென்கிற கொடிய காட்டுக்குப்போய் வேட்டையாடும் வேளையில் மோகமென்கிற பசி தாகமடைந்து, அசுத்த வாசனையாம் இச்சையென்கிற ஈன சம்சாரத்தையடைந்து, மதிகெட்டு, பிரசண்டவாயுவினுலுண்டானசுழற்காற்றிலகப்பட்ட துரும்பு சுற்றிச் சுற்றி சுழல்வதுபோல, மாயாசூத்திரமான காலசக்கரத்தில் சுற்றிச் சுற்றி சுழலும் ஜீவர்களுக்கெல்லாம் அற்ப புத்திகளாய் அநேக பேதமாயும் நானுவிகாரமாயும் தோற்றுவதெல்லாம் முன்கூறிய மூலப்பிரகிருதியின் விகுர்தியான முக்குணகாரியமாம். அந்த முக்குணகாரியமான இந்த ஸ்தூலப்பிரபஞ்சத்தில் நாலுவகை யோனியான அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், உற்பிஜம், இந்தப்படி நாலுவகை யோனியாய் நானுவிதமாய்ப் பிறந்து, அநேக பேதமாயும், கிரேத, திரேத, துவாபர, கலி என்ற நான்கு யுகமாயுந் தோற்றுவது எப்படியென்றால், ஒரு சிலந்திப்பூச்சியானது தன்னுள்ளிருந்த நூல்களைக் கொண்டு விசாலமாயொரு வலையைக் கட்டி அந்த வலைக்குள்ளிருந்தும் விளையாடுவதுபோல, நிராகாரமான பிரணவஸ்வரூபத்திருந்தும் உண்டாக்கப்பட்ட அணுகியான ஜீவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு, மூலப் பிரகிருதியின் மாயாகுண சூத்திரத்தினுல் உலகமான வலையைக்கட்டி, நாதப்பிரம்மத்திலிருந்தும் தோற்றப்பட்ட சப்த, பரிச, ரூப, ரச கந்தங்களான இந்திரியங்களினுல் பூர்வவினைக்குத் தகுந்தபடி ஜீவர்களெல்லாம் போகங்களை அநுபவித்து விளையாடுவதும், வாராத போகத்தில் பேராசை கொள்வதும், சுக துக்கங்களை யனுபவிப்பதும், சுபாவீகமாய்த் தோற்றுவது மூலப்பிரகிருதியின் மாயா குணங்களால் தோற்றுவதாம்

இந்தப் பிரபஞ்சம். அதாவது இந்திர ஜாலம்போலேயும் நாடகம்போலேயுமா மென்றறிக. (அங்ஙனம் எப்படி யெனில்) மூன்று குணபேதமாயும் நாலுயுகமாய் அதிலு மிது கலியுகமாமிது. தாமசகுணமாகையால் இந்தக் கலி யுகத்தில் அதிக ஜனங்கள் தாமசகுண மதிகமாய் அகாத மாயும் கெம்பீரமாயும் அதி பயங்கரமாயுமுள்ள சம்சார சாகரத்தில் வீழ்ந்து ஆசையான வலையில் சிக்கி, கொலை களவுகள், கா்மம், குரு நிந்தனை முதலான (பஞ்ச) பாதகர் களாய் முடிவில் எமலோகம்போய் நரகமான வீடு சேர்வார் கள். அதாவது தோல், ரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, கொழுப்பு, சுக்கிலம், மலம், மூத்திரம், ஈளை, கோழை முத லான துர்க்கந்தத்தத்தோடு கூடியும், (ஆயுசு) மின்னலுக் குச் சமானமாயும், நிழலுக்குச் சமானமாயும், ஜலசந்திர னுக்குச் சமானமாயும், நீர்க்குமிழிக்குச் சமானமாயும், நிஸ்ஸாரமாயுள்ள சரீரத்தை நானெனதென்கிற அபிமானி யாய் மாயாரூபமாயும், அசூசியாயும், அநித்தியமாயும் கொடிய கால கூட விஷத்திற்குச் சமானமாயுமுள்ள ஸ்திரீ போகாதி வஸ்துக்களில் மிகப் பிரீதியாயுள்ள ஆசையை வைத்து, அந்த விடயத்தையே கண்கண்ட சுகமென்றும், பிரத்தியக்ஷமான பலமாமென்றும், அமிர்தத்தைப்போலவும் மிகவும் மேலாக எண்ணி, அமிர்தத்தைப் போலுள்ள ஆத்ம சுகமானது காளகூட விஷத்தைப்போலவும் பூமியிற் பொருள் புதைத்து வைப்பதை புருஷார்த்தமென்றும், இந்தப்படி விஷய ஆசையினுல் அடையும் பயனுவது மோக மென்றும், நிராசையாலடையும் சுகம் நேசமாமென்றும், அறியாத தாபத்திரையாதி துக்கங்களும் நரகத்திற் கேது வான ராகத் துவேஷாதி சம்சாரம், குழந்தை, குட்டி, பொருள் முதலான வஸ்துக்கள் மென்மேலும் விர்த்தியாய் க்ஷேமமடையும்பொருட்டு காமியார்த்தமாய் ஆடு மாடு முத

லான பசுப் பிராணிகளை வதை செய்து கடவுளை உபாசிக்கும் ஜீவகாருண்யமுடைய புண்ணியவான்கள் அளவிறந்தகோடி. ஆகையால் இவர்களை எம்மதிமான்களும் மனுஷிபராக எண்ணுவார்களா? எண்ணார்கள். எண்ணவுமாகாது. இவரும் அந்தப் பசுப்பிராணிகளுக்குச் சமானமாமென்பதற்குச்சந்தேகம்வேண்டாம். ஏனென்றால் காட்டிலிருக்கும் பசுப் பிராணிகளுக்கு ஆகாரம் எப்படி யென்றால், பலம் குறையும் பிராணிகளைப் பலமுடைய பிராணிகள் சாப்பிட்டுத் திருப்தியடைவதுபோல, ஆசையுடைய மாந்தர்களும் விருதாவாய்ப் பசுப் பிராணிகளை யறுத்து துஷ்ட தேவதைகளை உபாசிப்பார்கள். இதனால் க்ஷேமமாயும் சிரஞ்சீவியாயுமிருக்கலாமென்று எண்ணுவார்கள். அந்த எண்ணமாவது விபரீதமாமென்றும், இதின் பயனுவது ரௌரவாதி நரகமாமென்றும் தெரியவில்லை. கொலை மறுத்தலே ஜீவகாருண்யமென்றும் வேதமாதா கூறியிருக்கிறது. அதாவது, சர்வ சராசரத்திற்கும் கடவுள் ஒருவரே அந்தரியாமியாயுமிருப்பதாதலால், அந்த சராசரத்தையும் குருவாயும் பரமாத்மாவாயும் பார்த்து உபாசிக்கும் மகான்கள் ஒரு துரும்பையாவனும் அறுப்பார்களா? பசுவைக் கொன்று தின்று அதின் தோலைச் செருப்பாக்கி தானஞ் செய்தால் புண்ணியமாமென்பதுபோல் பல ஜீவர்களையும் கொலைசெய்தால் அதினுல் நாம் க்ஷேமமடையலாமென்பது துர்மோகமல்லவா! ஒரு பிராணியையும் வதை செய்யாமலிருப்பதே பரதர்மமென்றும், கடவுள் திருவாய்மலர்ந்தருளிய பிரபலச்சுருதி பிரமாணங்களிலும் மகத்துக்களாலும் கூறப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை நிஷ்காமிகளறிவார்கள். காமிகளாயுள்ள அஞ்ஞானிகள் இதின் உண்மை யறியமாட்டார்கள். கர்ம நிவர்த்திதான் மோக்ஷம். ஆனாலும் நிஷ்காமமாய் சற்கர்மங்களை ஈசுரார்ப்பணமாக முடிக்கவேண்டும். இச்சை கூடாமல்

செய்வது மெத்தவும் சுகர்மமாம். ஒரு பிராணியைக் கொன்றால் அதற்குத் தண்டனையுண்டு. அதற்கு மாண்டவிய ரிஷியினுடைய கதையே நிரூபிக்கக்கூடியது. பாஹிம்சைக்குக் காரணம் பேராசை. பேராசையானது துராசை துராசையினால் கோபமுண்டாம். கோபத்தினாலும் ஆசையினாலும் கொலை களவு முதலான பஞ்சபாதகத்தைச் செய்வார்கள். கொலையின் பயனாவது கொடும்பாபமென்றறிக. இதற்கு கொடிய நரகங்களும் ஏற்படுத்தியிருக்கிறது. பாபமிருந்தமட்டும் சரீரபாவனை யிருக்கும். சரீரபாவனையிருந்தமட்டும் ஜீவன் பெந்தனாய்த் தோற்றும். சரீரபாவனைவிட்டு ஆத்மபாவனைகொண்டு கர்மபெந்தம் விட்டால் ஜீவன் முத்தனாமென்றும் சுருதிகளும் பெரியவர்களும் முறையிடுவது சத்தியம். அதைத்தவிர உலகமெல்லாம் மனோபாவனையாம். அது மாயை. மாயாபாவனையானது யாதென்றால் அது பரமாத்மாவுக்குள்ளிருந்தும் மாயையால் தோற்றமுமொடுக்கமுமாம். அதாவது ஜாக்கிரமும் சுழுத்தியும்போலவும் இரவும் பகலும்போலவும் மனசங்கற்பமானது கண்ணால் கண்டதும் காதினால் கேட்டதும் மனதினால் நினைந்ததும் நாமரூபாதி சமஸ்தமும் மனசங்கற்பமாம். இந்த மனசங்கற்பமானது ஜாக்கிர சொர்ப்பன சுழுத்தி என்கிற மூன்றவஸ்தையோடுகூடி முக்குணசகிதமாய் மனமிருந்தமட்டுமிருக்கும். மூன்றவஸ்தையும் முக்குணங்களும் விட்டால் மனசங்கற்பமறும். மனசங்கற்பமற்றால் அது நிற்குண நிர்ம்மலமாமென்றறிக. ஆதலால் மனம் பரிசுத்தமாய் ஏகாந்தஸ்தானமடைவதாம் உண்மைஞ்ஞானமென்றும், பிரம்மானந்த விளக்கமென்றும், பெரியவர்கள் சம்மதம். ஆனாலும் மனமிருந்தமட்டும் நானென்றும் நீ என்றும், அவனிவனென்றும் அநேக பேதமாய்த் தோற்றும். மனமடங்கிவிட்டால் நான் நீ இரண்டில்லை. நான் நீ இரண்டுமில்லா

விட்டால் துவிதமேது? துவிதமில்லாவிட்டால் ஜடமேது? ஜகத்தேது? பந்தமேது? மோக்ஷமேது? எல்லாம் கனவு கண்டுணர்ந்ததுபோல மனமடங்கிவிட்டால் ஒன்றுமே தோற்ருது. தோற்றமும் ஒடுக்கமும் மனசங்கற்பமான கங்குல்பகலாம். மனசங்கற்பமற்ருல் கங்குல் பகலறும். கங்குல்பகலற்ருல் ஸ்வயம்பிரகாசமாய் பூரணனந்தமாய் விளங்கும். ஆனாலும் முன்கூறிய நான் நீ என்கிற இரு பாவனை விட்டுவிடு முபாயமெப்படி யென்ருல் உடல் பொருளாவி மூன்றும் குருவிடத்தில் தத்தம் செய்தால் எல்லாம் நீ. எல்லாம் நீயானுல் நானேது? முக்காலத்திலுங் கண்டதெல்லாம் கனவாமென்ருல் நானேது? நீயேது? நானும் நீயுமில்லாவிட்டால் எல்லாம் பிரம்மமயமாமென்றறிக. அதாவது மண்ணுன குடத்தை உடைத்துத் தூளாக்கிவிட்டால் அது மண்ணுமென்பதுபோல மனம் பரிசுத்தமாய் அகங்காரத்தை உடைத்துத் தூளாக்கிவிட்டால் அது பரமாத்மாவாம் என்றறிக. ஆகாசத்துக்குள்ளே வாயுவாதி நாலு பூதங்களும் கலந்திருந்தாலும் அவைகளால் ஆகாசத்துக்குப் பந்தமில்லாததுபோல ஆத்மாவிலிருந்து தோற்றப்பட்ட சமஸ்த பிரபஞ்சமும் ஆத்மாவிடத்தில் யாதொரு பற்றுதலுங் கிடையாது. ஆனாலும் தீயும் புகையும்போல ஆத்மாவினுடைய அம்சமாம் சமஸ்த பிரபஞ்சமுமென்றறிக. தீயில்லாவிட்டால் புகையேது? புகையிருந்தால் தீயிருக்குமென்பது நிச்சயந்தான். அதுபோல ஆத்மா இல்லாவிட்டால் பிரபஞ்சமேது? பிரபஞ்சம் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தால் அதற்குக் காரணம் ஆத்மாவாமென்பது நிச்சயமாம். காரணமில்லாமற்போனுல் ஒரு காரியமும் கிடையாது. காரணமான மண்ணில்லாவிட்டால் காரியமான குடமேது? அதுபோல் காரணமான பரமாத்மாவும் காரியமான பிரபஞ்சமும் வேறல்ல. ஏகமாமென்றறிந்தால் ஆத்மாவைத்

தவிர அணுவளவும் வேறேயில்லை யென்பது நிச்சயமாம். ஆதலால் மாயையானதும் பரமாத்மா. மனமானதும் பரமாத்மா. ஜகத்தானதும் பரமாத்மா. ஜடமானதும் பரமாத்மா. எள்ளுக்குள்ளெண்ணெய் போலும் எங்கும் பிரகாசமாய்ப் பரிபூரணமாம் பரமாத்மா. வெண்ணெயும் நெய்யும்போல் ஏகமாம் பரமாத்மா. அதாவது அஞ்ஞானமென்கிற நானென்னு மகங்கார இருளைப் பிரக்ஞானங்கொண்டு நீக்கி விஞ்ஞானமென்கிற தீபத்தினால் பார்த்தால் எங்கும் பிரகாசமாய் எல்லாம் பிர்மமயமாக விளங்குமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். அகங்கார கருவிகளற்றுப் பரிபூரணானந்தத் தெளிவடைந்தால் சகல சந்தேகங்களும் நசிக்கும். எல்லாம் தானாய் தனக்கன்னியமில்லாமல் பரிபூரணமாம் பரமாத்மா. அதானது தத்துவார்த்த சமானமாயும், சர்வ தத்துவாந்தரியாமியாயும், அபரிச்சேத்தியனாயும், ஆகாசம்போல் பரிபூரணமாயும், ஸ்வயம்பிரகாசமாயும், விளங்குவதாம் பரமானந்தவஸ்து வென்றறிக. இப்படிப்பட்ட பரமானந்த பரிபூரண ஸ்வரூபானந்த நிஷ்டையடையும் பொருட்டு சுலபமான மார்க்கம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரமென்கிற கட்டையை அரகராவென்றும் ஈசுரார்ப்பணமாக்கிக் குருவின் திருவடியான பரமானந்த பதம்பிடித்து அறிவான பூமலர்க்கொண்டு பூசை செய்து அவ்யக்தமான பரப்பிர்ம்மத்தில் அர்ப்பணமாக்கி நிராசையான நிர்மலபாத தீர்த்தம் சிரசால் வணங்கிச் சாந்தமான பல மதுர பதார்த்தங்களாம் உபசாரங்களைக்கொண்டு சிரத்தா பக்தி விசுவாசங்கொண்டு நிஷ்காமமாய் அன்புடன் பூசைசெய்து உடல் பொருள் ஆவி மூன்றும் தூபதீபங் காட்டிப் பேரின்பத்துடன் குருவுக்கு மூன்று பிரதக்ஷணம்

வந்து திருவடிக்கு தீர்க்கதண்டமிட்டு ஆண்டவனடிமை யென்றும் ஐயனை வணங்கி நின்று அன்புடனருட்பிரசாதம் இரு கையால் வாங்கி அமிர்தமாயநுபவித்து ஆனந்த பாஷ்பம் பொழியத் துதிசெய்து பின்னும் அடிக்கடி தீர்க்க தெண்டமிட்டுத் திருவடிகளை சிரசால் வணங்கிச் சிந்தையெல்லாம்விட்டு ஆத்மயோகமென்றும் நிர்விகற்பசமாதியாய் ஞானானந்தமுடிவிலே பிர்ம்மானந்தமாய் மௌன சமாதியிலிருப்பதாம் எதார்த்த ஞானமென்றறிக. இவை நூதன விவேகிகளுக்குள் நுழையா. ஏனென்றால் அகங்காரமடியோடு நாசமடையும்பொருட்டு மார்க்கம் பாராமலும் தீவிரவைராக்கியம் குருபக்தி இவைகளில்லாமலும் அகங்கார அபிமானியாய் தன்னறிவு முன்னிட்டுக் குருவினைப் பின்னிட்டு குதர்க்கியாய் அநேகமான ஞானநூல்களைப் பார்த்தும் சம்சாரக்கடலின் நடுவிலே கிடந்து இரு கரையுங் காணமல் அலைவது கோடி பிர்ம்மகற்பமானாலும் கரைகாணாது. அறிவானது சிற்சக்தியின் பிரகாசமாம். சிற்சக்தியானது பரமாத்மாவின் பிரகாசமாம். அதாவது ஞானசிற்சக்தியாமென்றறிக. ஆதலால் ஒரு சற்குருவை நம்பி பின்னாலே போனால் அந்த ஞானசிற்சக்தியால் உணர்வதாம் எதார்த்தக்ஞானம். அந்த ஞானசிற்சக்தியின் ஸ்வரூபமாவது யாதென்றால், அது பிர்ம்மானந்த ஸ்வரூபமாம். பிர்ம்மானந்த சக்திக்குப் பதியானதும் பரமாத்மா. குருவானதும் பரமாத்மா. ஆதலால் சராசர ஜீவர்களுக்கும் குருவானதும் பதியானதும் அந்த ஞானசிற்சக்தியாமென்றறிக. அதானது ஆத்மாவோடு இரண்டறக்கலந்து அபேதமாய் ஆகாசம்போல் எங்கும் பரிபூரணமான இந்த ஞானசிற்சக்திக்குள்ளே பஞ்சபூதங்களும் அநேககோடி பிர்ம்மாண்டங்களும் அநேகவிதமான ஜீவர்களும் தேவாதி தேவர்களும் மனிதர்களும் மகத்துக்களும் சராசரபூதகோடிக

ளெல்லாம் வித்துக்குள்ளே மரம்போலவும், மரத்துக்குள் வித்துபோலவும் ஸ்தூலமாயும் சூக்ஷுமமாயும் காரணமாயு மடங்கி யிருக்கிறுர்கள். இவைகளில் மகத்துக்களானது அந்த ஞான சிற்சக்தியின் அம்சமான திருவவதாரமென் றறிக. ஆதலால் சுகஜீவியாய் இருக்கும்பொருட்டு அறிவானது ஒரு குருவின் திருவடிக்குப் பின்னிட்டு நடப்பதானுல் அறிவு விளங்கி பிர்மானந்தசக்தியிலடங்கியிருக்கும். அறிவானது ஞானசிற்சக்தியிலடங்கிவிட்டால் அகங்காராதி தத்துவங்களெல்லாம் அடியோடு நசிக்கும். அகங்காராதி தத்துவங்கள் நாசமடைந்தால் அறிவு விளங்கி நிர்மலமாய்ப் பிர்ம்மானந்த விளக்கமாமென்றறிக. ஆதலால் அறிவை மறந்த மறப்பே மனமாமென்றும், அந்த மனமே திருடனு மென்றும், குருடனுமென்றும், கோர மூடமாமென்றும், கொடும்பாபியாமென்றும், தானே தனக்குச் சத்துருவா மென்றும், எமனுமென்றும், குருத்துரோகியாமென்றும், அவர்கட்கு நரகமாம் வீடென்றுமறிக. அறிவையறிந்த அறிவே பரமாத்மாவும் பந்துவாயுமிருக்கும். அதாவது நித்தியமாயும் சத்தியமாயுமுள்ள அதாவது வேதாந்த சித்தாந்த சமரச சச்சிதானந்த ஸ்வயஞ்சோதியாய் பரிபூரணனந்தமாய் விளங்குவதாம் அறிவு விளக்கமென்றும் பெரியவாள் சம்மதம். இப்படிப்பட்ட ஞானிகளின் இலக்ஷணமென்னவென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உலகத்தின்கண் ஞானிகள் அநேக விதமிருந்தாலும் அவர்கள் இரண்டுவிதமாம். அதாவது அகக்ஞானிகளென்றும், புறக்ஞானிகளென்றுமறிக. இவர்களில் புறக்ஞானமாவது யாதென்றுல்? அநேக ஞானநூல்களைக் கற்றுணர்ந்தும், எல்லாம்விட்டு தீவிர வைராக்கியத்துடன் சந்நியாசியாய் ஞானவீட்டை யடைந்தாலும்,

அதற்குள்ளே நுழையவிடாமல் தடுக்கும்பொருட்டு மூன்று வித முட்டாள்கள் காவலிருக்கிறார்கள். இவர்கள் மகா பலமுடையவர்களும் அறிவுகெட்ட மூடர்களுமாதலால் இவர்கள் ஞானவாசலைத் தடுக்கிறார்கள். இவருடைய இணக்கமும் நல்லதல்ல. பிணக்கமும் நல்லதல்ல. அப்படி (இவரே) இணங்கினாலும் பிணங்கினாலும் இவர் பேரின்பமான ஞான வீட்டுக்குள்ளே விடமாட்டார் என்பது நிச்சயம். இப்படி பேரின்பமான ஞானவாசலைத் தடுக்கும் மகா பலமுடைய துஷ்டமுட்டாள் மூவரும் யார் என்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனமானது ஒருமைப்படுத்தி ஏகாந்த சித்தமாக்கி சகசானந்த சதா நிஷ்டையையடைந்து சொரூப சாக்ஷாத்காரமாகும்பொருட்டு உள்முகமாய் விளங்காமல் அதற்கு விரோதமாய் ஞானவாசலைத் தடுக்கும் முன் கூறிய விடமூடர்கள் மூவரும் யாரென்றால், அதம்பாவனை, சம்சயபாவனை, விபரீதபாவனை. அதாவது, அஞ்ஞானம் விபரீதம் சந்தேகம் இவைகள் மூன்றுமாம் எதார்த்த ஞானத்துக்கு விரோதிகளாமென்றறிக. இவைகளில் சந்தேகமென்பது யாதென்றால், நானென்றும் குருவென்றும் பரமாத்மாவென்றும் உலகமென்றும் இவைகள் நான்கும் ஏகமென்றறியாமல், நான் வேறே குரு வேறே பரமாத்மா வேறே உலகம் வேறே என்று எண்ணி மனக்கவலைபடைந்து அநேகவித சந்தேகத்திற்கிடமாய் குரு சுருதி யுக்தி அனுபவமில்லாமல் கெட்டலைந்து ஆசாரியார் வாக்கியப் பிரமாணங்களெல்லாம் மெய்யா பொய்யா, பூரணக்ஞானம் குருவுக்கிருக்குமா, குருவும் நம்மைப்போல ஒரு மனுஷன்தானே, எல்லாவற்றிலும் சிறந்தது கடவுள்யென இந்தப்படி நினைப்பதெல்லாம் சந்தேகமென்றறிக. இரண்டாவது விபரீதம். அதா

வது, மோக்ஷம் பொய்யாமென்றும் போகம் மெய்யாமென்றும் மந்தபுத்திகளாய் மோக்ஷம் மெய்யானாலும் ஒரு ஜன்மத்தில் அடையத்தகுந்ததல்லவென்றும் அநேக ஜன்மம் வேண்டியிருக்குமென்றும் ஆதலாலிந்த ஜன்மம் கிடையாது என்றும் தேகமே நித்தியம் போகமே சத்தியமென்றெண்ணுவது விபரீதமாம். மூன்றாவது அஞ்ஞானம். அதாவது நான் அநேக ஞானநூல்களைப் பார்த்திருக்கிறேன். எனக்கதினுடைய அநுபவ தாத்பர்யம் நன்றாய்த் தெரியும். ஆனாலும் நான் சம்சாரி. இவள் என்னுடைய சம்சாரம். இவைகளுக்கெல்லாம் கர்த்தா நான்தான். நான் மரணமடைந்தால் இவர்களுக்கு யாரும் துணையில்லை. ஆனாலும் வீண்காலம் போக்காமல் மரணகாலம் வரையில் நல்ல போகங்களை அநுபவித்து ஆனந்தமாயிருக்க வேண்டும். செத்துப்போனபின் சுகதுக்கமேது? அதெல்லாம் சுத்தப் பொய். இந்தப்படியெல்லாம் நினைப்பது அஞ்ஞானமாமென்றும் புரக்ஞானமாமென்று மறிக. இந்தப்படி சந்தேகம் விபரீதம் அஞ்ஞானமாகிய இம்மூன்று முழுமூடர்களுங்கூடி மனக்கவலை யடைந்ததாதலால் ஞானக்கினியில்லாமல் கெட்டு ஏகாந்த ஸ்தானமான நிஜஸ்வரூப சாக்ஷாத்காரமடைவதற்கு மார்க்கமில்லை. இவர்கள்தான் புரக்ஞானிகளென்றுமறிக. இனி முன்கூறிய அகக்ஞானிகளாவென்றால் நெருப்புபிடித்த கட்டையின் விபூதிக்குள் நெருப்பு பூத்திருந்தது போல திரிகுணமான உலக விபூதிக்குள் சூக்ஷ்மமாய் மறைந்திருந்த ஆத்மாவைப் பார்க்கும்பொருட்டு அந்தத் திரிகுணமயமான உலக விபூதியை ஊதிப்பார்த்தால் ஆத்மாவானது சுயம்பிரகாசமாய் விளங்கும். ஆதலால் திரிகுணமயமான அகங்காரத்தையடக்கி நானும் நீயும் அஷ்டதிசை பதினான்குலகமும் அதற்குள் சராசர ஜீவர்களும் மற்றும் மேலான தேவாதிதேவர்களும் மனிதர்களும்

குரு தெய்வம் பரமாத்மா இவைகளேகமாமென்றும், இது நாமல்ல கடவுளின் திரிகுணமயமான விபூதிஸ்வரூபமாமென்றும் அதுவே நாமாகுமென்றும் அந்த நாமென்கிற அகங்காரவிபூதியை ஊதிப்பார்த்தால் அது நாமல்ல நாம் பரமாத்மாவாமென்றும் அறிவதாம் பரோக்ஷக்ஞானமென்றறிக. அந்த பரோக்ஷக்ஞானமாவது உண்மை நிலையைக் கண்டதாம் காட்டுவதுமாம். இந்தப்படி அகங்காரத்தை விட்டு நிஜஸ்வரூபமான பரோக்ஷமடைந்தால் அதுவே அகக்ஞானமாமென்றும் அபரோக்ஷக்ஞான அநுபவமாமென்றறிக. இன்னும் முன்கூறிய பரோக்ஷமாவது யாதென்றால், சராசரத்துக்கும் அந்தரியாமியாயும் சர்வபரிபூரணமாயும் ஏகமாயுங் குருவாயுங்கண்டுபாசிப்பதுதான் பரோக்ஷமென்றறிக. இன்னும் அபரோக்ஷமாவது யாதென்றால் ஜாக்கிரம், சொப்பனம், சுழுப்தி இம்மூன்று அவஸ்தையோடுகூடிய சாத்வீகம், ராஜசம், தாமசம் இம்மூன்று குணத்திற்கும் அதீதமாயும் அகண்டபரிபூரண சச்சிதானந்தஸ்வரூபமாயும் விளங்குவதாம் அபரோக்ஷமென்றறிக. இந்தப்படி பரோக்ஷ அபரோக்ஷமிரண்டையும் அறிந்த நீ யாரென்று உனக்குள் அன்புற்றுப் பார்த்தால் உன்னுடைய சந்தேகமெல்லாந்தானே நசிக்கும். அஞ்ஞானவிபரீதங்களுந் தீரும். இதற்குச் சந்தேகம் வேண்டாம். இன்னுங்கேள் மனமே, சந்தேகநிவர்த்தியாவது இவ்வுலகமெல்லாம் பொருளாயிருந்தாலும் பிதா சம்பாதித்த பொருளுக்கும் புத்திரன் அவகாசியாமென்பதுபோல இவ்வுலகத்தில் சாஸ்திரங்கள் அளவிறந்தகோடி இருந்தாலும் தன் குருவின் மகாவாக்கியப் பிரமாணங்களை நம்பி பூரணவிசுவாசமும் சிரத்தையும் பக்தியுமுடைய சிஷ்யர்களே சகல சந்தேகங்களுந்தீர்ந்து பூரணக்ஞானத்திற்கு அவகாசியாமென்றறிக. ஆதலால் அறிவுக்குமறிவான அறிவை வணங்கும் மனமே மனம்.

மனத்தையடக்கும் அறிவே அறிவு. அறிவை யடக்கும் பொருளே பொருள். ஆதலால் மனமடங்கிவிட்டால் அறிவுமடங்கும். அறிவடங்கிவிட்டாலதுவே பரோக்ஷ அபரோக்ஷ அத்துவிதமாமென்றுமறிக. மனமானது மாயை, அது அணுவுக்கணுவாயுமிருந்து அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமான பரமாத்மாவை மறைக்கக் கூடியது. மனமடங்கிவிட்டால் மாயை கிடையாது. மனமானது சர்வப் பிராணிகளுக்கும் ஒன்றுதான். அறிவான ஆத்மாவும் ஒன்றுதான். ஆனாலும் வெகுவிதபேதமாவது யாதென்றால், அநாதியான வாசனையோடுகூடிய மாயாகுண பேதமாமென்றறிக. அந்த மாயாகுணபேதமூன்றும் கர்ம வாசனையுமடங்கிவிட்டால் மனம் பரிசுத்தமாய் அபேதமாய் நிர்மலமாய் விளங்குமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். மனம் சரீர அகங்காரத்தோடுகூடி இருந்தமட்டும் அணுமாத்திரமாயும் அஞ்ஞானமாயும் அநேகபேதமாயும் தோற்றுவது சுபாவீகமாதலால் அகங்காரத்தை அறிவுகொண்டடக்கி அறிவை ஆத்மாவென்றறிந்தால் அறிவு விளங்கி சந்தேகமெல்லாந் தீரும். சந்தேகநிவர்த்திக்குக் காரணம் முன்கூறிய ஏகாந்த குருபக்தி ஒன்றுதான் வேறில்லை. அதாவது குருபக்திகொண்டால் சித்தம் பரிசுத்தமாம். சித்தம் பரிசுத்தமானால் உத்தம குருபக்தியடையலாம். உத்தம குருபக்தனுக்கு குருஉபதேசமாவது அநாதமாயும் அநாமயமாயும் அநாதாரமாயும் நிராதாரமாயும் நிராகாரமாயும் நிரூபமாயும் நிரஞ்சனமாயும் நிஷ்கள களேபரமாயும், ஸ்ரீ சற்குருவாயுமுள்ள பிரணவாக்ஷரமாம். அந்த பிரணவாக்ஷரத்திலிருந்தும் கடலொலிபோலும் சிங்காரமான வண்டின் தொனிபோலும் மணிநாதம்போலும் ரீங்காரமென்கிற ஒரு நாதந்தோன்றும். அந்த நாதமானது ஞானசிற்சத்தியாமென்றறிக. அந்த ஞானானந்த சிற்சத்தியின் பூர

ணப் பிரகாசமானது ஸ்ரீங்காரமென்கிற மகதத்துவமா மென்றறிக. அந்த மகதத்துவத்திலிருந்தும் அகங்காரத் தோடுகூடிய யகரமென்கிற சப்த தன்மாத்திரையும் அந்த சப்த தன்மாத்திரையிலிருந்தும் வகரமென்கிற பரிச தன்மாத்திரையும் அந்த பரிச தன்மாத்திரையிலிருந்தும் சிகரமென்கிற ரூப தன்மாத்திரையும் அந்த ரூப தன்மாத் திரையிலிருந்தும் மகரமென்கிற ரச தன்மாத்திரையும் அந்த ரச தன்மாத்திரையிலிருந்தும் நகரமென்கிற கந்த தன்மாத் திரையும் ஆக பஞ்ச சக்திகள் பிறந்தன. இந்தப்படி சப்த ஸ்பரிச ரூப ரச கந்தங்களாம் தன்மாத்திரைகளான பஞ்சா க்ஷரமும் முன்கூறின பிரணவமுதல் மூன்றக்ஷரமும் ஆக எட்டு அக்ஷரமும் அஷ்ட சக்தியாம். இந்த அஷ்டசக்தி யுந்தான் அகங்காரமான ஸ்தூலபிரபஞ்சத்திற்கு முக்கிய காரணமென்றறிக. இவைகளில் ஏழு அக்ஷரமும் பிரண வத்திலடக்குவதாம். அகங்காரத்தினடக்கமென்றும் யோக முடிவென்றும் நாத முடிவென்றும் வேதாந்தமென்றும் வேதாந்திகளான பெரியோர்களின் அபிப்பிராயம். ஆனு லும் சொரூபசாக்ஷாத்காரமடையும்பொருட்டு சகல அவய வங்களோடுகூடிய கடவுளின் சொரூபமாமிந்த ஸ்தூலபிர பஞ்சத்தை ஏகமாய்க்கண்டுபாசித்து வணங்கி வருபவர்க ளுக்கு வேறொரு தெய்வமுங் கிடையாது என்பது நிச்சய மாம். ஆனாலும் இவைகளில் முக்கியமாயும் திரிகாலத்தி லும் நாசமில்லாததாயுமுள்ள பரமாத்மாவான பிரணவ சொரூபம் ஒன்றுதான். பிரணவசொரூபமடைந்தவர் ளுக்கு வேறொரு பேச்சுங்கிடையாது. இந்தப்படி எதார்த் தக்ஞானமடையும்பொருட்டு பரமாசாரியருடைய உபதேச மும் குரு பக்தி விஸ்வாசமும் வைராக்கிய அப்பியாசமும் அருளுமில்லாமல்போனால் எதார்த்தக்ஞானமான அநுபோ கம் அணுவளவானாலும் கனவிலுங்கிடையாது. ஆதலால்

ஞானத்துக்கதிகாரிகள் ஏகாந்த பக்தியோகிகளாமென்றறிக. குருபக்தி யோகமில்லாமல் சித்தம் பரிசுத்தமடையாது. சித்தம் பரிசுத்தமடையாமற்போனால் யோகாப்பியாசம் செய்யமுடியாது. யோகாப்பியாசமில்லாவிட்டால் ஞானமடையாது. குருபக்தி யோகத்தின் முடிவாம் ஞானமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். அப்பியாச யோகமாவதுயாதென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அப்பியாசயோகத்திற்கு, முதலாவது இந்திரியங்களை எல்லாம் அடக்கிச் சித்தம் பரிசுத்தமாக்கிக்கொண்டு, அப்பியாசஞ் செய்யவேண்டும். அதாவது சமமாய் ஓர் ஆசனத்தில் சமகாயனாயிருந்து அமல இருதயனாய் சுகமாதும்வண்ணம் இரண்டு கைகளும் தொடைமேல் வைத்து ஸ்ரீ சற்குருவின் திருவடியிரண்டும் சித்தத்தில் ஸ்திரமாய் நிறுத்தி நாசிகாக்கிரத்தில் ஈக்ஷணனாய்ப் பிராணனுடைய சஞ்சாரமார்க்கத்தைப் பார்த்து அந்த பிராணாபான வாயுக்களை ரேசக பூரக கும்பகமாக்கி மெள்ள மெள்ள அப்பியாசஞ்செய்து பழகிவருவதனால் குருதரிசனமாகும். குருவானது பிரணவஸ்வரூபமாம். அதாவது சாந்தமாயும் சமானமாயும் சாமளமாயும் கோமளமாயும் குணாதீதமாயும் நிஷ்களமாயும் கோடிசூரியப் பிரகாசமாயும் அகண்ட பரிபூரண நித்திய நிர்மல நிர்ச்சலமாயும் சச்சிதானந்த சொரூபமாயும் விளங்குவதாம் பிரணவஸ்வரூபமென்றறிக. இதை ஸ்ரீ சற்குருவின் சன்னிதானத்தின்கண் அப்பியசிக்கவேண்டுவதாதலால் சங்க்ஷேபமாகச் சொன்னோம். இதைக்கேட்ட மனம் பரிசுத்தமாய் நித்திய பரிபூரணானந்த சமுத்திரத்தில் மூழ்கி பக்தியாய் அறிவை வணங்கி ஓ ஆண்டவனே! தேவரீரின் திருவருளால் உண்மைநிலை இதுவென்றும் உணர்ந்தேன். எல்லாம் பரிபூரணப்பொருளே நாமென்றறிந்தேன்.

சந்தேகமெல்லாந் தீர்ந்து தெளிவடைந்தேன். ஆனாலும் அடியேனுடைய சந்தேகமாவது, ஆகாசம்போல் எங்கும் பரிபூரண பரமாத்மா ஏகமாமென்றும், அதைத்தவிர அணு வளவும் வேறேயில்லையென்றும் முன்கூறியது உண்மை நிலை யானால் அனாதியான வாசனையோடுகூடிய ஜீவர்கள் அநேக விதபேதமாய் வேறாகப் பந்தப்படுவதற்குக் காரணம் யாதென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! எங்கும் பரிபூரணமான பரமாத்மா வுக்கு உற்பத்தி ஸ்திதி நாசம் பந்தமோக்ஷம் விர்த்தி க்ஷயங்க ளிவைகள் ஒன்றும் முக்காலத்திலுங் கிடையாதென்பதே எதார்த்தக்ஞானிகளுடைய அபிப்பிராயம். ஆனாலும் பர மாத்மா வேறே. ஜீவாத்மா வேறே. ஜீவனுக்குப் பெந்த மோக்ஷ சுகதுக்காதிகள் சமஸ்தமும் உண்மையாகத் தோற்று வது சுபாவம். ஆனாலுமது உண்மையல்ல. மாயையினால் தோற்றுவதாமென்றும், அது அப்படித் தோற்றுவதும் அஞ்ஞானிகளுடைய மனதிற்குத் தோற்றமல்லாமல் எதார்த்தமல்லவென்பதாம், எதார்த்த ஞானிகளுடைய அபிப்பிராயம். அதாவது அநேக ஜலபாத்திரங்களில் ஏக மாயிருக்கிற சூரியபகவானை அநேக ரூபமாய்ப் பார்ப்பது போல, மாயாப்பிரதிபிம்பிதமாய் சிதாபாசமாகவிருக்கும் ஜீவர்களுக்குப் பெந்தமென்பது சொப்பனம் போலவும், மோக்ஷமென்பது உணருவதுபோலவும் என்றறிக. ஜீவ பாவனையாவது, மனதின் அஞ்ஞானம் ஒன்றுதான். மனதி னுடைய ஆசாசங்கற்பமாம் பெந்தமென்றறிக. அதாவது மனம் ஆத்ம சங்கற்பத்தைப் பின்னிட்டு அநாத்ம சங்கற்பம் செய்வதாம் பெந்தமென்றும், அந்த அனாத்மசங்கற்பத்தை விட்டு ஆத்மசங்கற்பமடைவதாம் மோக்ஷமென்றும், சுருதி ப்பிரமாணங்களும் பெரியோர்களும் கூறியிருக்கிறார்கள்.

ஆனாலும் ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறாகத்தோற்று வது மனதினுடைய அஞ்ஞானமாம். அதாவது பூரண ஆத்மாவிலிருந்தும் ஜீவர்கள் வேறாகத்தோற்றுவது எப்படி யென்றால் ஏகமான சூரியபகவானை ஜலமிருக்குமிடமெல் லாம் பார்த்தால் அநேக சூரியபகவானைக் காண்பதுபோல, ஏகமாம் ஆத்மாவை மூன்று விதமான மாயாகுணமாயும் அநேகவித பேதமாயுள்ள ஜலத்தில் அநேகம் ஆத்மாவைக் கண்டது சரிதான். அதாவது முன்கூறிய முக்குணங்களில் சாத்வீகமான குணம் தெளிவுடைய ஜலம்போல். அந்தத் தெளிவுடைய ஜலத்திற்கண்ட பூரணப்பிரகாசமாம் திரு மூர்த்திகளுமென்றறிக. இரண்டாவது ராஜசகுணம் கலக் கமான ஜலம்போல். அந்த கலக்க ஜலத்திற்கண்ட பூரணப் பிரகாசமாம் ஜீவர்களென்றறிக. மூன்றாவது தாமசகுணம். அதிக கலக்கமாய்ச் சேறாகயிருந்த ஜலத்திற்கண்ட பூரணப் பிரகாசமாம் சரீராதி வஸ்துக்கள். இதனுடைய உண்மை அன்புற்றுப்பார்த்தால் ஆகாசத்தில்கண்ட சூரியனைத்தவிர ஜலத்தில் சூரியன் கிடையாதென்பது நிச்சயமாம். ஆன லும் ஜலத்திற்குள்கண்ட சூரியனைப்பார்த்தால் ஆகாசத்தில் கண்ட சூரியனைப்பார்த்து ஏகமாமென்றறிவதுபோல் மன திற்குள்ளே யிருந்த ஆத்மாவைப் பார்த்தால் அது பரிபூரண மாமென்றறியலாம் சந்தேகம் வேண்டாம். ஜலமில்லாத பாழான பூமியில் சூரியனுடைய பிரதிபிம்பம் கிடையாதது போல் திரிகுணமயமான மனக்கலக்கமற்று நிர்மலமானல் ஜீவனேது? ஜடமேது? ஜகத்தேது? பூரணவஸ்துவுக்கு ஒருபேதமும் ஒருகாலத்திலுங் கிடையாது. இந்த அனு பவம், பரமதேசிகர் தன்றிருவுளமாம் மகா வாக்கியமான தத்துவமசியின் தாத்பர்யமறிந்தவர்களுக்குச் சந்தேகம் அணுவளவும் கிடையாதென்பது சத்தியம்.

ஓ மனமே கேள்! சராசரத்தையும் ஒரு குருவாகக் கண்டவன்தான் தன்னைக் கண்டவன். சராசரத்தைக் கும்பிட்டவன்தான் தன்னைக் கும்பிட்டவன். சராசரத்தைப் பரிபூரணமாகக் கண்டவர்களுக்கு நானேன்கிற அகங்காரம் அணுவளவுங் கிடையாதென்பது நிச்சயம். அகங்காரி யார் என்றால் மூன்றவஸ்தையோடு கூடிய ஜீவாத்மா. ஆதலால் மூன்றவஸ்தையும் ஸ்ரீ சற்குருவின் திருவருள் கொண்டு தள்ளிவிட்டால் ஜீவன் முக்தனுமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். மூன்றவஸ்தையின் விபரம் ஜாக்கிர சொப்பன சுழுத்தி ஆகிய இவைகள் மூன்றுமாம். அதாவது சாத்வீகம் ராஜசம், தாமசம் ஆகிய இம்மூன்று குணங்களோடு கூடியும் இரவும் பகலுமாயிருக்கும். இதில் ஜாக்கிரம் சொப்பனம் இரண்டவஸ்தையும் மூன்று மூன்றவஸ்தையோடு கூடி இருக்கும். இதில் சுழுத்தியில் பேதங்கிடையாது. அதாவது ஜாக்கிர ஜாக்கிரம். ஜாக்கிர சொப்பனம், ஜாக்கிர சுழுத்தி, சொப்பன ஜாக்கிரம், சொப்பன சொப்பனம், சொப்பன சுழுத்தி ஆக ஆறு. இந்த ஆறு அவஸ்தையும் மறந்த சுழுத்தி ஒன்று. இந்த ஏழு அவஸ்தையும் ஜீவ சிருஷ்டியாமென்றும், இதுவே ஜீவனுக்குப் பெந்தமா மென்றும், இதற்கு மூலகாரணம் மன சங்கற்பமாமென்றும், மன சங்கற்பமற்றால் ஜீவன் முக்தனுமென்றும், சுருதிப் பிரமாணங்களும் மகான்களும் கூறி யிருக்கிறது உண்மை. உண்மை சொல்லாத சிஷ்யனுக்கு உபதேச மாகா. உண்மை விளங்காத சிஷ்யனுக்கு உபதேசமானாலும் உண்மை நிலை யடையான். வாக்கு சத்தியமானால் மனம் உண்மை நிலை யடையலாம். சந்தேகம் வேண்டாம். இந்தப்படி ஜீவனுக்கும் பெந்த ஹேதுவாயும் அஞ்ஞானமாயும் உள்ள ஏழு அவஸ்தையும் விட்டுவிடுவதெப்படி யென்று மனங்கேட்க அறிவு கூறியது.

ஒ மனமே கேள்! முன் கூறிய ஏழு அவஸ்தையிலும் சிறந்தது ஜாக்கிராவஸ்தை. அந்த ஜாக்கிராவஸ்தையி லுள்ள மூன்று அவஸ்தையும் நாசமானால் முன் கூறிய ஏழு அவஸ்தையும் தானே நசித்துப்போகும். இந்த மூன்றவஸ்தையும் விட்டு விடுமுபாய மெப்படி யென்றால் மனதை ஜாக்கிர ஜாக்கிரமான அவஸ்தையில் ஸ்திரமாய் நிறுத்திக் கடவுளை உபாசித்தால் மற்ற இரண்டவஸ்தை யும் அடியோடு நசிக்கும். ஜாக்கிர ஜாக்கிரமடைவ தெப்படி யென்றால், நிஷ்காம சற்கர்மியாய் சித்தம் பரிசுத்த மாக்கி ஆத்ம விசாரஞ் செய்வதாம். அதாவது, வாக்கு மனக் காயங்களினாலும் ஆத்மாவை ஸ்ரீ சற்குருபக்தி செய்வதாம். நானாப் பிரகாரமும் கடவுளின் திருவடித் தியானம் செய்வது ஜாக்கிர ஜாக்கிரமென்றறிக. இனி ஜாக்கிர சொப்பனமாவது நானாப்பிரகாரமுள்ள போகத்தி லிச்சையும் காம சங்கற்பமுமாம். ஜாக்கிர சுழுத்தியாவது முன் கூறிய இரண்டவஸ்தையும் மறந்து மன சங்கற்ப மற்றதுபோல் அரைக்கால் நிமிஷம் மயக்கமாயிருந்ததாம். முன் கூறிய ஜாக்கிர ஜாக்கிரமாவது துரியநிலை யடைவதா மென்றறிக. அதாவது முக்குணத்திற்கும் மூன்றவஸ்தை களுக்கும் முக்கரணங்களுக்கும் முத்தொழில்களுக்கும் மும் மலங்களுக்கும் அதீதமாயும் பரிசுத்தமாயுமுள்ளதாம் துரிய நிலை. மனம் துரிய நிலை யடைவதாம் அநர்த்த நிவர்த்தி. ஆனந்தப் பிராப்தியாவது துரியாதீதம். அதாவது அதி ஜாக்கிரத் ஜாக்கிரமென்றறிக. எங்கும் பரிபூரணமாம் ஆகா சத்திற்குள் சர்வ பூதங்களும் அடங்கி யிருந்தாலும் பூரண ஆகாசத்திற்கு அணுவளவுங் குறைவிராததுபோல் எங்கும் பரிபூரணமான பரமாத்மாவுக்குள் சர்வ பூதங்களும், சர்வ பூதங்களுக்குள் பரமாத்மாவும், ஏகமாயுள்ள பூரணமா மென் றறிக. மலமற்ற ஆகாசம்போ லெங்கும் நிறைந்த பரமாத்மா

ஏகமாய் எதற்கும் இடங் கொடுத்தும் எதிலும் பற்றற்றதா யும் பரமானந்த பரஞ்ஜோதியாம் பரமாத்மாவாவது நித்திய பரிபூரணனந்தமாமென்பது சத்தியம். நாவினுலொரு பொய்யும் சொல்லாமலிருந்த தினமே புண்ணிய தினம். சரீரத்தினுல் ஒரு பொய்யும் செய்யாமலிருந்தால் அது புண் ணிய க்ஷேத்திரமாமென்றறிக மனத்தினுல் ஒரு பொய்யும் எண்ணுமலிருந்தால் அது சுவர்க்கத்திலும் மேலாமென்ப தற்குச் சந்தேகம் வேண்டாம். கர்மத்தில் சிரத்தையுடைய வர்களுக்கு முக்தி வெகுதூரமாமென்றும் கர்ம சங்கற்பம் விட்டு குரு பக்தி செய்தால் ஜீவன் முக்தியடையலாமென் றும் பெரியவர்கள் சம்மதம். இதைக் கேட்ட மனம் ஓ ஆண்டவனே! மனம் சாந்தமானுல் ஆத்மா பூரணமாமென் பதற்குச் சந்தேகமில்லை. அது அப்படி யிருக்க ஞானிகளின் சரீரம் வியோகமானுல் அந்தச் சரீரத்தை சமாதிவைத்து பூசை பண்ணுவதெதற்கு? அந்த ஆத்மாவிற்கோ சரீரத் திற்கோ என்று மனங் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பூசையாவதின் பிரயோசனம் மன சங்கற்ப மிருந்தமட்டுமல்லாமல் மன சங்கற்பமற்று உப சாந்தமானுல் பிரயோசன மில்லை என்பது நிச்சயம். ஆனு லும் அப்படிப்பட்ட எதார்த்த ஞானிகள் இந்த உலகத்தின் கண் கோடியிலொருவர்களிருந்தாலு மிருப்பார்கள். ஆத லால் சரியை கிரியை யோகமிவைகளிருந்தும் சரீரம் வியோக மானுல் அந்த ஜீவர்களுக்கு சூக்ஷும சரீரமுண்டு. அந்த சூக்ஷும சரீரத்திற்கும் ஸ்தூல சரீரத்தைப்போல் பசி தாகாதி சுக துக்கங்களுமுண்டு. ஆதலால் அவைகளுக்குப் பூசை செய்ய வேண்டியதவசியம். அதாவது சந்நியாசி முதலான சாதுக்களை சமாதி வைத்து ஈஸ்வர பக்தியுடன் பிதிர் தேவாதி திருமூர்த்திகளை உத்தேசித்தும் மகாக்ஞானி

களின் பாத பூசை செய்வதாம் சமாதி பூசை. ஆதலால் சரியை கிரியை யோகம் ஞானம் இவைகளிலிருந்தாலும் ஸ்தூல சரீரம் விட்டபின் அதிகாரத்திற்குத் தகுந்தபடி சாலோக சாமீப சாரூப்பிய சாயுச்சிய மிந்தப்படி நான்கு முக்தி யுண்டு. ஆதலால் முன் கூறினபடி சமாதி பூசை செய்தவர்களுக்கு அந்தந்த ஸ்தான மடையலாமென்பதற் குச் சந்தேகம் வேண்டாம். ஆதலால் பெரியவர்களின் சமாதி பூசையாவது எல்லாவற்றிலும் சிறந்தது. அதாவது கர்மம் முடிவான தந்திரமாம். ஆதலால் சமாதி பூசை செய்வது உலகத்தின்கண் மெத்தவும் நன்று நன்று. இதனுல் தர் மார்த்த காம மோக்ஷம் நான்கு மடையலாமென்பது சத்தியம். இதினுலெல்லா மூர்த்திகளும் திருப்தியடையும். எல்லாப் பலமுமடையலாம். ஒரு பெரியவரைச் சமாதி வைத்து பூசித்தால் அது சராசரத்திற்கும் பூசையாம். அது பிரம்ம பூசையாமென்றறிக. பிரபலச் சுருதிப் பிரமாணங் களும் பெரியோர் வாக்கியங்களும் நம்பாதவர்களுக்கு குரு வாக்கிய விஸ்வாசம் வராது. குருவாக்கிய விஸ்வாசம் இல்லா விட்டால் சம்சார சாகரத்தையும் நரகத்தையும் தாண்ட முடியா தென்பது நிச்சயம். குருவாக்கியம் உண்மையாக நம்பினுல் சம்சார சாகரத்தையும் நரகத்தையும் தாண்டி பிரம் மானந்தபதம் அடையலாம் என்பது சத்தியம். குரு சொன்னபடி கர்மம் செய்தாலும் மோக்ஷம். அதல்ல உபா சனை செய்தாலும் மோக்ஷம். அதல்ல ஞானநிஷ்டை செய் தாலும் மோக்ஷம். அன்புடைய சிஷ்யனுக்கு ஞானுசாரியர் உபதேசிப்பது எப்படியென்ருல், ஓ மனமே கேள்! என்னை நீ குருவாயும் பரமாத்மாவாயும் நம்பி என் மகாவாக்கியத்தை நீ உண்மையாக நம்புவாயானுல் நீ அதோகதியடையமாட் டாய் என்பது சத்தியம். குரு எந்த வாக்கியத்தைச் சொன்னுலும் அது மகா வாக்கியமாக நம்பவேண்டும். நீ

அதோகெதியடையாயென்றும் சற்குருநாதன் கிருபையால் அருளிச்செய்த வாக்கியம் எதானாலும் அது மகா வாக்கியமாக நம்பி விஸ்வாச பக்தியுடைய சிஷ்யன் அதோகதியடையானென்பதே இதன் முக்கிய தாத்பர்யம். நாளைக்கு நல்லதுவரும் என்று சொன்னதை உறுதியாக நம்பாதவர்களுக்கு எப்படி நல்லது வரும். இதைக்கேட்ட மனம் அறிவை வணங்கி அறிவிலடங்கி அறிவும் துரியநிலையடைந்து துரியாதீதமாய் பிர்ம்மானந்தமாய் பரமபதம் அடைந்தார்கள் என்பது தாத்பர்யம்.

ஸ்ரீ மத்தேசிகாய திரிபுரஹர பரப்பிரஹ்மணே நமோநம:

அறிவுவிளக்கம் முற்றிற்று.

மனம் ஓ ஆண்டவனே! முன்கூறிய அறிவு விளக்கத்தைக் கேட்டு அடியேனுடைய சந்தேகமெல்லாந் தீர்ந்துவிட்டது. என்னுள்ளம் தெளிவடைந்தேன். ஆனாலும் பரோபகாரமாக இன்னும் அடியேனுடைய விண்ணப்பம். சம்சாரத்தோடுகூடி இல்லறத்திலிருந்தும் கடவுளை உபாசித்தால் மோக்ஷமடையலாமா? அல்லது எல்லாம்விட்டு வைராக்கியத்துடன் துறவற ஆசிரமத்தை யடைந்து சந்நியாசம்பெற்று உபாசனைசெய்து மோக்ஷமடையவேணுமா? இதுகளிரண்டில் சிலாக்கியம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மோக்ஷமாவது அநேகவித பேதமுண்டு. அதுகளிளெல்லாவற்றிலும் சிறந்தது பிறப்பறுப்பதாம் விதேக கைவல்யம். சந்தேகம்வேண்டாம். ஆனாலுமந்தப் பிறப்பை யறுத்து விதேக கைவல்ய மடையும் பொருட்டு சம்சாரத்திலிருந்தாலும், சந்நியாசம் பெற்றுக்

கொண்டாலும், இகலோகத்திலும் பரலோகத்திலும் உள்ள போக சுகத்தை அடியோடே தூரத் தள்ளிவிட்டு, நிராசை யாய் சிரத்தா பக்தி விஸ்வாசத்துடன நல்ல விவேகியாய் சமதமாதி நான்கு சாதனங்களை யடைந்து, ஞானசாரியரை யடுத்து அருள் பெற்ற மகான்கள் நாலாசிரமங்களில் எதில் இருந்தாலும் அல்லது நாலாசிரமத்தையும் விட்டு குணாதீத மாய் அதிவர்ணாசிரமமாயுமுள்ள துறவற ஆச்சிரமத்திலிருந் தாலும் தாமரையிலைத் தண்ணீர்போல் பற்றற்ற ஆகாசம் போலும் பரிபூரணமாய் ஜீவன் முக்தனா யிருந்தும் விதேக கைவல்ய மடையலாம். சந்தேகம் வேண்டாம். ஆனாலுமிது கலிகாலம். உலகத்தின்கண் கலி அதிகரித்த காலமாதலால் சம்சாரத்திலிருந்தும் கடவுளை உபாசித்து பிறப்பை யறுப் பது அசாத்தியம். ஏனென்றால் சம்சாரத்திலுட்பட்ட வனும், அவருடைய மனைவி மக்கள் தாய் தகப்பன்மார்களனை வரும், அடுத்த பெந்துக்களும், பக்கத்து வீட்டுக்காரரும், எல்லாம் சாத்விக குணமுடையவரா யிருந்தால், இல்ல றத்திலிருந்தும் கடவுளை உபாசித்து மோக்ஷமடையலாம். சந்தேகம் வேண்டாம். அப்படியே சம்சாரத்திலிருந்து முன்னோர்களில் சில மகத்துக்கள் கடவுளை உபாசித்து மோக்ஷமடைந்தாரென்றும் சில சாஸ்திரங்களில் கூறப் பட்டது சத்தியந்தான். அந்தக்காலமானது இந்தக்கால மல்ல. அந்தக் காலமானது, முன் கிரேதாயுகமாயிருந் தது. கிரேதாயுகத்தில் உள்ள மனிதர்களெல்லாம் சத்திய தர்மாதிகளும் சாத்விக விருத்தியுமுடையவராதலால் எல்லோரும் சம்சாரத்திலிருந்து கடவுளை உபாசித்து மோக்ஷமடைந்தார்களென்பது சத்தியம். இக்காலம் கலி யிற்கலியாதலால் அதிக ஜனம் தாமச குணமுடைய வராய் எங்கெங்கு இடத்திலும் கலியால் கலகமாய் பகையா யிருக்கிறது. மனைவி மக்களிடத்திலும் பந்துக்களிடத்

திலும் பக்கத்து வீட்டுக்காரரிடத்திலும் பகையா யிருக்கிறவர்களெல்லாம் நமக்கும் பகையாயிருக்கிறது. ஆதலால் ஒருவருக்கொருவர் கருடனும் சர்ப்பங் களும் போலவும், ஸ்ரீ ராமரும் ராவணேஸ்வரனும் போல வும், வாலியும் சுக்கிரீவன் போலவும், தாருகாசுரனும் காளியும் போலவும், கீரிப்பிள்ளையும் பாம்புகளும் போலவும், பகையால் எங்கெந்த இல்லறத்திலும் சதியிடத்தில் புருஷா ளும் புருஷாளிடத்தில் சதியும், தகப்பனிடத்தில் மக்களும், மக்களிடத்தில் தகப்பனும், பெந்து சத்துருக்களைப்போல வும் தங்களில் தங்கள் பகையாய், விபரீதமாய், அந்யோன்ய விரோதமாய், கொலை, கபடம், கள், காமம், குருநிந்தை, பர தூஷணம், இநதப்படி பலவிதமான துஷ்கர்மிகளாய் பஞ்ச பாதகிகளாய் அதிக ஜனங்களிருப்பதால் அதிலொருவன் பரிசுத்தமாயிருந்தாலும் இந்தக்கலிகாலத்தில் சம்சாரத்தி லிருந்து கடவுளை உபாசிப்பது அசாத்தியமென்றும் மேற் கூறிய தாத்பரியம். ஆதலால் எல்லாம் விட்டு ஏகாங்கியாய் ஏகாந்த ஸ்தானமடைந்து குருவைநம்பி கடவுளை உபாசித் தால் இந்தக் கலிசபையைத் தாண்டி ஜீவன் முத்தியடைய லாம் சந்தேகம் வேண்டாம். மனம் ஓ சுவாமி! இந்தப்படி கலியால் வந்த துன்பமானது இந்த வுலகத்தின்கண் இப் போது நெருப்பிலே விழுந்த விட்டில் பூச்சிகளைப்போல் ஒருவருக்கொருவர் சண்டைபிடித்து தம்மிலடித்து நாச மடையப்போகிறதுபோல் தோன்றுகிறது. ஆனால் இது களுக்கெல்லாம் காரணம் கலிதானென்றும் நின் திருவருளா லறிந்தேன். ஆனாலிந்தக்கலி பிறக்கக் காரணம் யாது? கலி பிறந்தவிடமெது? எந்தச்சமயத்தில் கலி பிறந்தது? கலி யுடைய சொரூபம் யாது? அந்தக் கலியையடக்கி ஆனந்த மாயிருப்பதற்கும் சன்மார்க்கம் யாதென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! கலிபிறப்பிற்கு மூலகாரணம் பேராசை ஒன்றுதான். இனி கலியின் சொரூபமாவது யாதெனில், அதை யொருவருக்கும் பார்க்கக்கூடியதல்ல. ஆனுலும் முன்கூறிய பேராசையின் நிமித்தம் கொடுங்கோபம் பிறந்தது. அந்தக் கொடுங்கோபநிமித்தம் தாமசகுணம் பிறந்தது. அந்த தாமசகுணத்தினுல் அதிகோர பயங்கரமான கலிபிறந்தது. அந்தக்கலியினுடைய் சொரூபமாவது யாதெனில், அது பேராசையுடைய மனிதருக்குத் தெரியாது. அதை மகாத்மாக்களில் பக்தி விஸ்வாசமுடைய சாதுக்களுக்குப் பார்க்கக்கூடியதுமாம். அங்ஙனம் எப்படியெனில், ஓ மனமே! நீ சற்குரு பக்தனுதலால் முன்கூறிய கலியுடையசொரூபம் உள்ளபடி உண்மை யுனக்குச் சொல்லுகிறேன்கேள்! முன்கூறிய கலியின் சொரூபம் யாதெனின், பேராசையும், கொடுங்கோபமும், அகங்காரமும், தாமசகுணமும், இது நான்கும் ஒன்ருகச் சேர்ந்ததே கலியுடைய சொரூபம். இதுகள் நான்கு மடங்கிவிட்டால் கலியென்பது சுத்தப் பொய். ஆனுலும் அஞ்ஞானிகளுக்கு கலியென்பது மெய். அங்ஙனம் எப்படியெனில், ஒருவனுக்குப் பேராசை கொண்டால் கொடுங்கோபம் தானே வந்தடையும். கொடுங்கோபம் வந்தடைந்தால் அகங்காரம் மேலிடும். அகங்காரம் மேலிட்டால் தாமசகுணம் தனியாய்த் தானேவரும். தாமசகுணம் பூரணமானுல் அதுதான் கலியுடைய சொரூபம். கலியுடைய சொரூபத்தில் எதார்த்தஞானம் சூன்யமாயிருக்குமாதலால் இந்தக் கலியுடைய சொரூபத்தைப் பாமரானுக்குத் தெரியாது. ஆதலால் கலிவருகிறதும் போகிறதும் அதின் இருப்பிடமும் அதின் செயலும் ஒருவருக்கும் தெரியாது. ஒருவனுக்கு கலிவந்து கூடினுல் பேய் பிசாசு பிடித்து ஆடுவதுபோல் ஆடும். அந்தகனைப்போல் ஒரு தேசமும் தெரியாமல் திக்கும் திசைகளும் எந்த சத்துருக்

களையும் ஒன்றுமே தெரியாது. தன்னையும் தெரியாது. பூதபவுஷ்ய வர்த்தமானங்களும் தெரியாது. எல்லாம் வெறுக்கும். தகப்பனை அறுத்தாலும் அறுக்கும். தாயை அறுத்தாலும் அறுக்கும். பெண்சாதி குழந்தையை அறுத்தாலும் அறுக்கும். பின்னொருவனை அறுத்தாலும் அறுக்கும். பின்னுமனேகமான கொலை செய்தாலும் செய்யும். ஜலத்திலே விழுந்து செத்தாலும் சாகும். நெருப்பிலே குதித்தாலும் குதிக்கும். மரத்திலேறிக் கைவிட்டாலும் விடும். தானே தன் கழுத்தை தன் கையால் கத்தியினால் அறுத்தாலும் அறுக்கும். இந்தப்படி உலகத்தின்கண் நாசஹேதுவாயும் அதிக பலமுடையதாயும் மகாபராக்கிரம முள்ளதாயுள்ள கலியுடைய சொரூபத்தை உள்ளபடி அறிந்துகொள்வதற்கும் அதைச்சொல்லி போதப்படுத்துவதற்கும் அசாத்தியம். ஆனாலும் மகாத்மாக்களுக்கு இந்தக் கலியுகம் கிரேதாயுகமாயிருக்குமென்றறிக. ஆதலால் மகாத்மாக்களிடம் கலிவந்தடுத்தால் சூரியபகவான் கிட்ட இருள் வந்தணுகுமா. அல்லாமல் இருள்வந்தடுத்தாலும் அந்த இருளும் சூரியப் பிரகாசமாய் வந்துவிடும். அதுபோல் மகத்சன்னிதானத்தின்கண் கலிவந்தடுத்தால் அந்தக் கலி நாசமாய்ப்போய்விடுமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். ஆதலால் இந்தப்படியுள்ள கலிசபையைத்தாண்டி துக்க சாகரத்திலிருந்தும் கடைத்தேறும்பொருட்டு அபேக்ஷையுடைய மனிதர்களுக்குச் சொல்லுகிறேன் கேளும். முதலாவது, கலிசபையைத் தாண்டும்பொருட்டு சன்மார்க்கமாவது யாதெனில், கலிவந்தடுக்காமல் தடுக்கும்பொருட்டு நிஷ்காமமாய் நல்ல சற்கர்மங்களையும் சாசுவதமான தர்மத்தையும் செய்யவேண்டும். அதுகூடாமலுள்ள அகர்ம விகர்ம சுகர்மத்தையும் கலிகாலத்தில் தூரத்தள்ளிவிட வேண்டியது. ஆனாலும் கலியைத் தடுப்பது மகாப்பிரயாசம். ஏனென்றால்

கலிக்கு சர்வாதிகாரமும் இருப்பதாதலால் நல்ல சற்கர்மங்களை விதிமுறைப்படி செய்தாலும் கலிவரும். கலிவந்தால் கர்மலோபம் வந்து தவறிப்போகும். கர்மம் தவறிப்போனால் அதின் பலமும் விபரீதமாய் வந்துவிடும். ஆதலால் இந்தக் கலியுகத்தின்கண் வேதங்களிற் கூறியபடியுள்ள சற்கர்மங்களுங்கூட விலக்கப்பட்டிருக்கிறது. கலியுகத்தின்கண் சதுர்வர்ணங்களும் தாமசகுணமுடையவராதலால் கர்மம் செய்யும்பொருட்டு அதிகாரிகள் ஒருவருமில்லை யென்றும் சதுர்வர்ணமும் சூத்தரப்பிராயமாய் தாமசகுணமுடையவராதலால் ஒரு கர்மத்திற்கு மதிகாரமில்லை யென்றும் வேதங்களிலும் மகத்துக்களும் கூறியிருக்கிறது சத்தியம். ஆதலால் சர்வகர்மங்களும்விட்டு மகத்சன்னிதானத்தின்கண்ணடுத்து நிராசையாய் நித்தியமாயுள்ள கர்மத்தையும் சாஸ்வதமாயுள்ள தர்மத்தையும் சமாராதனை செய்து சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் பூசிக்கவும் சேவிக்கவும் துதிக்கவும் ராமநாம பஞ்சாக்ஷராதி திருநாமங்களை ஜெபிக்கவும் சர்வப்பிராணிகளிடத்திலும் ஜீவகாருண்ணியமும் பரோபகாரஞ் செய்யவும் இந்தப்படி சத்தியமாயுள்ள சற்கர்மங்களை ஒருபொழுதிலும் தவறிப்போகாமல் மகத்பதத்தின்கண் அர்ப்பணமாக்கினால் பாபம்வந்தடையா. பாபம் வந்தடையாமற் போனால் கலிவந்தணுகா. இதுகளில் எல்லோருக்கும் அதிகாரமுண்டு. இதினால் அதிக துக்ககரமாயும் நரகத்திற் கேதுவாயுமுள்ள கலிசபையைத்தாண்டி ஜீவன்முக்தனாய் பிர்ம்மானந்தமாயிருக்கலாம். சந்தேகம் வேண்டாம். இந்நூலில் கூறியதிற்கெல்லாம் சுருக்கமான பொருள் யாதெனில், அகங்காரத்தையடக்கவும், ஸ்ரீ சற்குருபக்தி விஸ்வாசம் வந்தால் எதார்த்த ஞானம் விளங்குமென்றும், எதார்த்த ஞானம் விளங்குமானால் அத்தியாத்மக்ஞானம் அனுபவமாகுமென்றும் தாத்பர்யம். அத்தியாத்மக்ஞானத்

தின் அனுபவமாவது யாதெனில் சகசானந்த நிஷ்டையி லிருந்தும் பிர்ம்மானந்த சமுத்திரத்தில் மூழ்கி தூங்காமல் தூங்கி கண்மூடி மௌனியாய் நிற்விகற்ப சமாதியடைந்து சும்மா இருப்பதாமென்றும் தாத்பர்யம். இதைத் தவிர அநேக ஞான நூல்களைக் கற்றுணர்ந்தும் வெகுஜனங்கள் கூடிய சபையில் பிரசங்கம் செய்வதும் சாத்வீககுணவிர்த்தி யாம். ஆனாலுமது சாத்வீகத்திலுள்ள தாமசகுணவிர்த்தி யாமென்றும், தான் தனிமேயிருந்து சாஸ்திரபாராயணஞ் செய்வது சாத்வீகத்திலுள்ள ராஜசகுணமாமென்றும், நிவர்த்திக் கிச்சையுடன் அன்பாய் ஸ்ரீ சற்குருபக்தி விஸ் வாசத்துடன் குருவிடத்தில் கற்றுக்கொள்ளுகிறதும், தன்னையடைந்த சிஷ்யர்களுக்கு பரமரகசியமாயுள்ள மோக்ஷ சாதனங்களை உபதேசிப்பது சாத்வீககுணந் தனியாயிருக்கு மென்றும், இந்நூலில் முன் கூறியதற்கெல்லாம் சுருக்க மான தாத்பர்யம். எல்லா வேதாந்த நூல்களுக்கு முள்ள முக்கிய தாத்பர்யம் இதுவே. மோக்ஷமடையும் பொருட்டு அபேக்ஷையுடைய மனிதர்களுக்கு உத்தமம் தத்துவ போதம். மத்திமம் வேதபாடம். அதமம் சாஸ்திரபாடம். தீர்த்தாடனம் மனப்பயித்தியம். இந்தப்படி யெல்லாம் அறிவுவிளக்கத்தை மனதிற்கு உபதேசம் செய்தபின் இதுக ளெல்லாம் மனதிற்கு அனுபவமாகுமா ஆகாதா வென்கிற சந்தேகம் இருந்ததாதலால் மறுபடியும் அறிவு ஓ வாரீர் மனமே கேள்! உனக்கு இவ்வளவு சொன்னதெல்லாம் அனு பவத்திற்கு வந்ததா? ஏனென்றால் துஷ்ட ஸ்திரீகளுக்கு தன் புருஷன் பதிவிரதா மார்க்கத்தைச் சொன்னதுபோலே யும், மூர்க்க சிஷ்யர்களுக்கு சற்குரு உபதேசம் செய்தது போலவும், சஞ்சலமனக் குரங்குக்கு எவ்வளவு சாரோப தேசம் செய்தாலும் விளங்குமாவென்கிற சந்தேகமிருக் கிறது. ஆனாலும் உனக்கொரு இதிகாசத்தைச் சொல்லு

கிறேன். அதை நீ உண்மையாக நம்புவாயானால் உன்னுடைய சந்தேகமெல்லாந்தீரும். அங்ஙனம் யாதெனில், ஒரு கிராமத்தில் பிராம்மண குலத்திற் பிறந்த ஒரு சாஸ்திரிகளொருவர் இருந்தார். அவர் மெத்தவும் அநேக சாஸ்திரங் கற்றுணர்ந்தவர். சம்சார குடும்பத்தோ டொத்திருப்பவர். ஆனாலுமவர் அநேக சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார். உபதேசமாவது யாதெனில், குருபக்தி விஸ்வாசத்துடன் நூற்றியெட்டு ராமநாமம் ஜெபித்தால் ஜென்மசாபல்யமாகுமென்றும் உபதேசம் செய்து அவாளவாளிடத்தில் பொருள்வாங்கி சம்சார விருத்தியை நடத்திவந்தார். அது அப்படியிருக்க, அந்த சாஸ்திரிகள் ஒரு நாள் ஒரு சிஷ்யனோடுகூடி வேறொரு கிராமத்திற்குப்போகிறதாக நேரிட்டு வந்தார்கள். அந்தப்படி இருவரும் தனியேவரும் மார்க்கத்தில் சிஷ்யன் கேட்கிறான். ஓ சுவாமி! தேவரீர் அடியேனுக்கு நூற்றெட்டு ராமநாமம் ஜெபம்செய்யும்படி உபதேசித்தருளியது. அதை அடியேன் தினசரியும் ஆதரித்துவருகிறது. ஆனாலும் எல்லாவற்றிலும் சாரமாயும் பரமரகசியமாயுமுள்ள ஒரு மந்திரத்தை அடியேனுக்குபதேசித் தருளவேண்டுமென்று சிஷ்யன் சொன்ன வார்த்தையைக் கேட்டு சந்தோஷமடைந்து உபதேசஞ் செய்தார். அதாவது, ஓ எனது அன்புள்ள சிஷ்யனே கேள். எச்சமயத்திலும், எத்தொழிலிலும், குருசரணம், குருசரணம், என்றெண்ணிக்கொண்டு திரிந்தால் எல்லாம் சுகமாயிருக்குமென்றும், இதினால் மோக்ஷங் கிடைக்குமென்றும் உபதேசஞ்செய்தார். சிஷ்யனதை உண்மையாக நம்பிக்கொண்டு மறுபடி சிலது தூரம் வந்த சமயம் வழியில் ஓர் ஆறிருந்தது. அந்தச் சமயம் ஆற்றில் தண்ணீர் பெருகியிருந்தது. அப்பொழுது அந்த சாஸ்திரிகள் சிஷ்யனைக்கூப்பிட்டு தண்ணீர் எவ்வளவு இருக்கு

மென்று பாருங்களென்றார். அதைக்கேட்ட சிஷ்யன் குரு சரணம் குருசரணமென்றெண்ணிக்கொண்டு, ஆற்றில் இறங்கியது. அந்தச் சமயம் ஒரு முதலை வந்து கிடந்தது. அது முதலையென்று தெரியாமல் முதலைமேல் தன் கால் வைத்துவிட்டான். அது சமயம் அந்தக் குருபக்தனை எவ்வித அபாயமில்லாமல் மறுகரை கொண்டுவிட்டு, மறுபடியும் அந்த முதலை திரும்பிவந்தது. அதைப்பார்த்த அந்த சாஸ்திரிகள் வெகு ஆச்சரியப்பட்டு நானல்லவா இந்த சிஷ்யனுக்குக் குரு, என் மகிமையினாலல்லவா என் சிஷ்யனை யாதொரு வருத்தமின்றி மறுகரை கொண்டுசேர்த்தது. ஆதலால் நம்முடைய பாதத்திற்கு இவ்வளவு மகத்துவம் இருக்கிறதென்று எண்ணிக்கொண்டு ஆற்றில் காலை வைத்து விட்டார். அந்த சமயம் அந்த முதலை அவரைப்பிடித்து விழுங்கிவிட்டது. ஆதலால் முன் கூறினபடியுள்ள சிரத்தா பக்தி விஸ்வாசத்துடன் ஒரு சற்குருவை நம்பி, அவரே பரதெய்வமென்றெண்ணி, அவர் திருவடியே சரணு கெதி யென்றுபாசித்து, உபாசனை செய்து பழகிவருவதானால், மனம் பரிசுத்தமாய் அருள்கிடைக்கும் அருள் கிடைத்தால், சராசரமுங் குருவாய்த்தோற்றும் சராசரமும் பரமாத்மாவாகத் தோற்றினல், நின்னிடத்திலும் பரமாத்மாவைப் பார்க்கலாம். அப்போது தானும் குருவும் சராசர ஜீவர்களும் ஏக சொரூபமாய் விளங்கும். இந்தப்படி கடவுளை ஏக சொரூபமாய் உபாசித்துப் பழகிவருவதானல் சொரூபானந்தம் விளங்கும். சொரூபானந்த முக்தியடைந்தால், அப்பியாசமும் பிரயத்தனமும் கூடாமல் விதேகானந்த கைவல்ய பதம் தானேயடையும். இதற்குச் சந்தேகமில்லை. இது சத்தியம். ஆதலால் ஒரு சிஷ்யன் ஒரு குருவையடுத்தால் அந்தக் குருவுக்கு ஞானனுபவம் இல்லாமற்போனாலும் தன் குரு தனக்கு பரதெய்வமென்கிற

விஸ்வாச பக்தியிருந்தால் அதுவே சிலாக்கியம். அதினால் மோக்ஷமடையலாம். சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! உண்மைக்ஞானானுபவ விளக்கத்தின் தாத்பர்யம் யாதெனில், அநித்திய சுழுத்தியானந்தத்திற்கும் அதீதமாயுள்ள நித்திய பரமானந்தத்தை அனுபவிப்பவர்களாம். அவர்கள்தாம் உண்மைக்ஞானிகளென்றுமறிக. அங்ஙனம் எப்படியெனில், கண் மூடிமௌனியாய், தனுகரணாதிகளையும் மறந்து, நிற்விகற்ப சமாதியையடைந்து, சும்மாவிருப்பதே ஞானானுபவம். இதுவே உண்மைக்ஞானிகளுடைய இலக்ஷணம். இப்படிக்கொத்த மகத்துக்களை யாருக்கு எப்படித் தெரியுமென்றுகேட்டால், அதற்குச் சொல்லுகிறேன் கேள். அதற்கதிகாரிகளாரென்றால், நான்கு சாதனையுமடைந்து உள்ளன்பும் கையில் பூசா சாதனங்களையும் எடுத்துக்கொண்டு, மகத் சன்னிதானத்திலிடம்போய், அந்த மகானுடைய சர்வாங்கமும் பார்த்தால் காந்தத்தினிடம்சேர்த்த இரும்பைப்போலேயும், மேகத்தைப்பார்த்த மயிலைப்போலேயும், புளகாங்கிதங்கொண்டு, ரோமாஞ்சலிதமும், சஞ்சஞ்சாரமும், ஆனந்தபாஷ்பமும், உண்டாகும். அந்தச் சமயம் அந்த மகானைப்பார்த்ததென்றும், பார்க்கக்கூடுமென்பதற்கும், சந்தேகமில்லை. அது கூடாமல் அநேக தபோ விரதாதி தானங்களினாலும், எக்கியங்களினாலும், தீர்த்தாடனாதி பிதிர் தேவாதி பூசனைகளினாலும், சந்நியாச விருத்தியினாலும், இயமநியமாதி சாதனங்களினாலும், மகத்தெரிசனம் கிடைப்பதரிது. மகத்தெரிசனங் கிடையாமற்போனால் ஞானத்தின் கெந்தமானாலும் அணுவளவுங் கிடையாது. ஆதலால், மகத்தெரிசனமே எல்லாவற்றிலும் சிறந்ததென்றும், மகத்துக்களும் வேதங்களும் கூறியதாதலால், இதை உண்மையாக நம்பும்பேர்களுக்கு

உண்மைக்ஞானம் விளங்குமென்றும், நித்தியானந்த சுகத்தை அனுபவித்துக்கொண் டிருக்கலாமென்றும், இந் நூலின் முக்கியமான பொருள். இதே அறிவு விளக்கத்தின் முக்கிய தாத்பர்யம். அறிவு விளக்கமாவது யாதெனில், நித்தியமின்னது, அநித்தியமின்னது, இதுகளிரண்டையும் விபரமாய்த் தெரியப்படுத்தவும், தெரிந்துக் கொள்ளவும், இனிமேல் மெய்யறிவுவிளக்க மென்பதற்கு அர்த்தம், மித்தியாரூபத்தை மறந்து துரியபதமடைந்து துரியாதீதமாய் இருப்பதாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ சற்குருவே நம:

உ

ஸ்ரீ சற்குருவேநம:

மெய்யறி விளக்கம்.

காப்பு.

ஆதிகுரு நாதனருள் ஆனைமுகபால காப்பாம்.
பூமிமுதல் நாதமுடி பூதங்களைந்துங் காப்பாம்.
நாதமுடி வானயோக குருபாதங் காப்பாம்.
மூவர்கள் முனிவர்களும் மூவுலகெங்கும் காப்பாம்.
வேதமுறை வேதியரும் வேதாந்திகளுங் காப்பாம்.
வாதமுறை யாரும்பல சித்தர்களுங் காப்பாம்.
மெய்யறி விளக்கமிதின் மேல்மனசாந்தங் காப்பாம்.
துய்யமலை துரியநிலை யருளும் பொருளுங் காப்பாமே.

ஓம் ஸ்ரீகுரு பாததீர்த்த கெங்கே பவானி புவனேஸ்வரி
மனோன்மணி அருள்மோதநீ
பரபோதநீ பதநிநீயெங்குமா யாரு
யெழுந்தருளு மானந்த வெள்ளமே
வாணியே சரஸ்வதி நாராயணி சிவே பார்வதி
பகவதி பரமானந்த சுந்தரி
உன்மகிமை யுன்னடிமை எவ்வுயிரு மாகையா லுன்னடியி
லன்புட னஞ்சலிசெய்குவாம்.

குரு வணக்கம்.

மெய்யறி விளக்கமென்றும் வேதமுடிவான நாதம்
கைவிரற் காட்டியென்னைக் காத்தகுரு பாதம்போற்றி
பொய்ப்பொறி புலன்கள்பத்தும் கரணங்கள் நான்கும் நீக்கி
கைலைமலை நிலைவாழும் ஸ்ரீகுருதெக்ஷணாமூர்த்தியே நம:

நூல்.

அனாதிகாலம் ஜெனன மரண துன்பத்திற்கேதுவான சம்சாரசாகரத்திற்பட்டுக் கெட்டலைந்தும் பூர்வ புண்ணிய பரிபாகத்தினால் ஒரு ஜென்மத்தில் தெய்வ வசத்தால் மனம் மெய்யறிவையடுத்து அனேக நாள் பாதுகாத்துப் பணி விடை செய்துப் பழகிவரவே, ஒரு நாள் ஏகாந்தத்தில் அந்த மெய்யறிவை வணங்கிக் கேட்கிறது.

ஓ சுவாமி! உண்மைஞ்ஞான விளக்கமாவது யாதென்று வினவ அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உண்மைஞ்ஞான விளக்கமென்பது பரிசுத்தமான வேதாந்த நிலை. அந்த உண்மைஞ்ஞான விளக்கமறியும்பொருட்டு முதலாவது நான்கு வேதத்தின் சொரூபத்தை நன்றாய்ப் பார்த்துக் கண்டறியவேண்டும். அங்ஙனம், வேதசொரூபத்தைப் பாராமலும் அதன் பொருளைத் தெரியாமலும் அந்தப்படி நடவாமலும் எப்படி வேதாந்தமடையக்கூடும்? ஏனென்றால், நான்கு வேதங்களுக்கும் ஒழிவிலொடுக்கமாவது வேதாந்தமென்றறிக. வேதத்தின் சொரூபமாவது யாதென்று மனம் வினவ அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! வேதத்தின் சொரூபமறிவது மகாப் பிரயாசம். ஆனாலும், ஒரு சற்குருவையடுத்து அன்புற்று சேவித்தருள் பெற்றால், அந்த வேதத்தையும் அந்த வேதத்திற்கதீதமான வேதாந்தத்தையும் விபரமாய்ப் பார்க்கக் கூடியதுமாமென்றறிக. ஓ மனமே கேள்! இன்னும் நான்கு வேதமும் சப்தப்பிரமாணங்களாம். அதானது, இந்திரியங்களினாலும், மனத்தினாலும், சரீரத்தினாலும், கிரகிக்கத்தகுந்ததுமாம். அந்த சப்தப் பிரமாணமான வேதத்தின் சொரூப

மாவது, பூமி முதல் நாதம்வரையிலுள்ள நாம ரூபாதி சர்வப் பிரபஞ்ச வஸ்துக்களுமாமென்றறிக. இதுகளுக்கெல்லாம் அந்தரியாமியாயும், ஏகமாயும், பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவை யறிவதாம் உண்மைக்ஞான விளக்கம். அங்ஙனம் உண்மைக்ஞான விள்க்கம் விளங்கவொட்டாமல் மறைக்கப்பட்ட வஸ்து யாதெனில், முன்கூறிய வேதம் நான்குமாம் அந்த வேதமானது ஞானம், பக்தி, கர்மம் இந்தப்படி மூன்று காண்டமாயும், புருஷார்த்தமாயும், போகார்த்தமாயுங் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால், அந்த மார்க்கத்திலிருந்துந் தவராமல் கிரமமாய் மேலேறி நான்கு வேதத்தையும் உபசங்காரஞ்செய்து, நாலு வேதத்திற்கும் மூன்று குணத்திற்கும், அந்தமான 'தத்துவமசி' என்கிற நான்கு மகா வாக்கியத்தின் பொருளை ஆசாரியரின் மூலமாயருள் பெற்ருல், வேதாந்தமான உண்மை நிலையை யடையலாம். சந்தேகம் வேண்டாம்.

ஓ சுவாமி! முதலாவது, வேதத்தின் சொரூபமறிவதே மகாப்பிரயாசம் ஆனுலும், சொரூபத்தின் விபரந்தெரியாமற் போனுலந்த சொரூபத்தை எப்படித்தியானிக்கக்கூடும்? தியானநிஷ்டை இல்லாமற்போனுல் எப்படி சித்தியடையக் கூடும்? அதுபோல், வேதத்தின் சொரூபந்தெரியாமல் அதை எப்படி உபசங்காரஞ் செய்யக்கூடுமென்றும் மனம் வினவ. அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சராசரப்பிரபஞ்ச வஸ்துக்கள் வேதத்தின் சொரூபமாமென்றும், இதற்கு சர்வாந்திரியாமியாயிருந்ததும் சர்வசாக்ஷியுமாயிருந்ததும் வேதாந்தம். இதை நீ உண்மையாயறிந்தால் உன் சரீரமும் வேதமல்லவா? ஆதலால், உன்னிடத்தில் ஒரு பெரிய மலைபோலிருக்கும் நான் என்கிற அகங்காரமான கட்டையை உண்மைக் ஞான

விளக்கமென்கிற பெருந்தீயினுற் சுட்டுச் சாம்பலாக்கினல் வேதமேது? வேதமில்லாவிட்டால் வேதாந்தமான உண்மைக்ஞானமெய்விளங்கும்.

ஓ சுவாமி! இந்தப்படி அகங்காரத்தைக் கொல்வதெப்படி? என்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரத்தைக்கொல்வது மகாப்பிரயாசம். ஆனலும், ஒரு சற்குருவையடுத்து நான்கு சாதனைகளையும் அடைந்தருள்பெற்றால் அகங்காரம் அடியோடே நசிக்கும். சந்தேகம் வேண்டாம்.

ஓ சுவாமி! நான்கு சாதனையாவது யாது? அதையடையும் மார்க்கமாவது யாதென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நான்கு சாதனங்களில் முதலாவது மனம் கர்மபந்தம்விட்டு நித்தியானந்தமாயுள்ள மோக்ஷத்தை அபேக்ஷிப்பதாம். இரண்டாவது, இகபர போகத்திலுள்ள வைராக்கியம். மூன்றாவது, நித்தியாநித்தியவிவேகம். நான்காவது, சமாதியாறுமடைவதாம். இந்தப்படி நான்கு சாதனையும் பெற்று ஆணவாதிமும் மலங்களும் நீக்கினல் அருள்பெறலாம். அருள்பெற்றால், அகங்காரம் நசிக்கும். அகங்காரம் நசித்தால், சின் முத்தனுகும்.

ஓ சுவாமி! வேதத்தின் சொரூபமானது தேகப்பிரபஞ்ச வஸ்துக்களும் அதற்கனுசாரமான குணதர்மகர்மங்களுமாம். பிராணிகளிற் பிரதானம் மானிடசரீரம். சரீரமானது தொண்ணூற்றாறு தத்துவங்கள். தத்துவங்களிற் பிரதானம் மனம். மனம் சுத்தமானுல் அருளடையலாம். ஆதலால், இந்த தொண்ணூற்றாறு தத்துவங்களுடன்

கூடிய இந்தச் சரீரத்தில் மனம் பிறந்தவிடமெங்கே? இதற்கிருப்பிடமெங்கே? ஒடுக்கமெங்கே? மனதையடக்க வேண்டிய குருவும், அருளும், பொருளுமிருக்கும் ஸ்தானம் யாதென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்தச் சரீரம் மொத்தந் தொண்ணூற்றாறு தத்துவங்களுண்டு. அதுகளிற்பிரதானம் ஆறு தத்துவம். அதற்கு ஸ்தானமாவது ஆறாதாரம். அதில் முதலாவது, மூலாதாரம். இரண்டாவது, சுவாதிஷ்டானம். மூன்றாவது, மணிபூரகம். நான்காவது, அநாகதம். ஐந்தாவது, விசுத்தி. ஆறாவது, ஆக்ஞை. இந்த ஆறு ஆதாரங்களிலுங் கிரமம் கிரமமாயும், பிரதானமாயும், பிரத்தியேகம் பிரத்தியேகமாய், ஆறுமூர்த்திகளுண்டு. அதாவன:—மூலாதாரத்தின்கண் மூலக்கணபதியும்; பல்லபசத்தியும்; சுவாதிஷ்டான நிலையில் பிர்மாவும் சரஸ்வதியும்; மணிபூரகத்தின் கண் மகாவிஷ்ணுவும் ஸ்திரீதேவியும்; அநாகத்தில் ருத்திர மூர்த்தியும் ருத்திராணியும்; கண்டஸ்தானத்தில் மகேஸ்வரனும் மகேஸ்வரியும்; ஆக்ஞாசக்கரத்தில் சதாசிவனும் மனோன்மணியுமாம். இதுகளுக்கெல்லாம் பிரதானமானது ஜீவனும் மனதுமாம். இதுகளிரண்டில் ஜீவன் நிர்விகாரியாதலால் அதற்கிறப்பும் பிறப்புமில்லை. மனதிற்குத்தான் பிறப்புமிறப்புமுள்ளதாய்த் தோன்றுவதென்றறிக. மனம் லயமானால் ஒன்றுமே இல்லை. ஆனாலும் மனம் பிறந்தவிடம் முன்கூறிய மூலாதாரம். அதற்கு சுபாபமாயிருப்பிடம் சுவாதிஷ்டானநிலை. அதானது, சிருஷ்டி கர்மம். இதற்கு ஒடுக்கம் தன்னுள்ளம். உள்ளமென்பது ஆக்ஞாசக்கரத்தின்கண் அதற்குள் குருவும், அருளும், பொருளும், சமரசமாய்ப் பரிபூரணமாய் நிறைந்திருக்கப்பட்டவிடம். ஆதலால், முன்கூறிய சுவா

திஷ்டான நிலையையடைந்து, ஸ்திரீபோகாதி விஷயங்களில் ஆசையுடையவராய், காமியகர்மங்களைச் செய்யும் அசுத்தமான மனதிற்கு மேற்கூறிய பிர்மசபையாயிருக்கிற உள்ளத்தில் நுழைவது மகாப்பிரயாசம். ஆதலால், குருவும் அருளும் பொருளும் தெரியாமல் அந்தகாரப்பட்டு, ஆசாபாசத்தில் சிக்கி, வீண்காலம் போக்கித் தலைகீழாய் வந்து நரகத்தீயில் விழுவார்கள்.

ஓ சுவாமி! இந்தப்படி குருவருளும் பொருளும் தன்னிடத்திலிருக்கத் தனக்குத்தானே அந்த அருள்பெற்றுப் பிர்மானந்தமா யிருக்கக்கூடாதா? வேறொரு குருவைத் தேடவேணுமாவென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! தன்னைத்தான் மறந்திருக்கின்ற வஸ்துவைப் பார்க்கும்பொருட்டு வேறொரு குருவின் திருவருள் வேண்டியதவசியம். ஆனாலும் அனாதியான கர்மவாசனையோடுகூடி மூலாதாரத்தின்கண் பிறந்த மனமானது அந்த மூலாதாரத்தின்கண்ணிருந்தும், சுவாதிஷ்டான நிலையைப்பற்றி அனாதிகாலமாய்வந்த சேர்க்கைவாசனைப் பழக்கங்கொண்டு சிருஷ்டி செய்வதாதலால், ஸ்திரீபோகாதி விஷயங்களிலும், ஆசைபெருகி, அடிக்கடி தன்னைத்தான் மறந்து, அசுத்தவாசனையடைந்து, சித்தம் பரிசுத்தமில்லாமல் கெட்டலையக்காரணம்.

ஓ மனமே இன்னும் கேள்! மனமானது ஆகாயம்போல் சர்வவியாபகம். ஆனாலும், பரிசுத்தமில்லாமலும், சற்குரு பக்தி விஸ்வாசமில்லாமலும், தன் உள்ளம் போனால் அந்த மனதை உள்ளே விடமாட்டாது. அல்லாமல், பலாத்காரமாயுள்ளே போனால் அரைநிமிஷமானாலும் தங்குகிறதற்கிடங்கொடாமல் பிடித்துத் தலைகீழாய்த் தள்ளிவிடும்.

சந்தேகமில்லை. ஏனென்றால், அது திருவுள்ளப் பிர்மானந்தமான சபையாதலால், அங்கே அசுத்தமுடையவர் போனால் உள்ளே விடமாட்டாது. ஏனென்றால், அந்த ஆசிரமத்தைப் பாதுகாத்து, அனேகம் பகவத்பாரிஷாளுடைய சமுகம் சூழ்ந்திருக்குமிடமாதலால், தேகமே நித்தியம், போகமே சத்தியமென்றெண்ணும் பாபிகளை யுள்ளே விடமாட்டாதென்பது தாற்பரியம். இதைத்தவிர ராகத்துவேஷாதியபிமானம்விட்டு, குருவருள்பெற்ற மகான்களுக்கெந்தவிடம்போனாலும் போகலாம். தடையில்லை.

ஓ சுவாமி! குருவானவர் யார்? அவாளுடைய சொரூபமாவது, அருளாவது யாதென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சராசரத்திற்கும் அந்தர்யாமியாயும் சர்வசாக்ஷியாயுங் குணாதீதமாய்ப் பரிசுத்தமாய்ப் பரிபூரணமாயுமுள்ள சிற்சத்தியுடன்கூடி, இரண்டறக்கலந்து, சச்சிதானந்தசொரூபமாயும், விளங்கியிருக்கும் பிரணவசொரூபமொன்றுதான் சற்குருவென்றறிக. இரண்டாவது, ஓ மனமே கேள்! இந்தப்படி சூட்சுமமாயிருந்த சற்குருவின் ஸ்தூல சரீரத்தையுங்கேள். சிற்சத்தியின் திருவவதாரமானது ஒரு மனுஷ்யரூபமாயும் அந்தப் பரிசுத்த மாயையில் அவதாரமெடுத்தும், பரம்பரையாயுள்ள மகான்களுடைய அருள்பெற்றும், எதார்த்தஞானத்தையடைந்த மகான்கள் தான் சற்குரு. இதுதான் குருவின் ஸ்தூலரூபமென்றறிக. இனி மூன்றாவது, குருவருளாவது யாதெனில், சிற்றறிவையும், சிற்றின்பத்தையும், விலக்கி, பேரறிவினால் பேரின்பத்தை விளக்குவதாம். அங்ஙனம் எப்படியெனில், அசுத்தமாயும், சிற்றறிவாயும், அஞ்ஞானத்திற்கு மூலமாயுமுள்ள

ஆணவாதி மும்மலங்களும் நீக்கி, பரிசுத்தமாயும், பேரறிவாயுமுள்ள உண்மைக்ஞான விளக்குவதாமென்றறிக.

ஓ சுவாமி! அங்ஙனம் ஏகமாயும் பரிபூரணமாயுமுள்ள சமரச சச்சிதானந்த சொரூபத்திலிருந்தும் பேதமாய்ப் பேரறிவென்றும் சிற்றறிவென்றும் இருவிதமாய் வந்தவாறு எங்ஙனமென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அங்ஙனம் வந்தவாறு அவித்தையின் சுபாவீகமென்பதல்லாமல் வேறில்லை. அவித்தையாவது யாதெனில்:- ஏகமாயும், பரிபூரணமாயும், அபேதமாயுமுள்ள பரமான்மாவிலிருந்தும், தோற்றப்பட்ட சிற்சத்தியின் பிரகாசத்தினுல் தோற்றுவதாம் இந்த சராசரப் பிரபஞ்ச வஸ்துக்களு மென்றறிக. அந்த சிற்சத்தியின் அம்ஸமாம் ஜீவன். அந்த ஜீவசத்தியானது ஏகமாயும் அரூபமாயுமிருந்த சிற்சத்தியொன்றுதான். அந்த ஜீவசிற்சத்தியி லிருந்தும் அபாரமான நெருப்பில் அனேகந் தீப்பொறிகள் கிளம்பினுற்போல் அனேக ஜீவர்கள் பிறந்தன. அங்ஙனம் அனேகவிதமான ஜீவர்களுக்கெல்லாம் பூர்வவினைக்குத் தகுந்தபடி போக போக்கியங்களை யநுபவிக்கும் பொருட்டு சகல அவயவங்களோடுகூடியும் அவித்தியாரூபமாயுள்ள ஒரு அசுத்த மாயை பிறந்தது. அதுதான் இந்த உலகத்தின்கண் சராசர பிராணிகளுக்கும் சரீரமாமென்றறிக. இந்தப்படியுள்ள சரீரத்தில் ஜீவன் ஐக்கியமாய் போக்தாவாயிருந்தமட்டும் ஜீவர்களெல்லாம் சிற்றறிவுடையவர்களாயும், இப்படிக்கொத்த துர்ச்சங்கப்பழக்கமும், துர்விஷயங்களிலுள்ள பேராசையும், விட்டு நிராசையாய் சர்ச்சங்கப்பழக்கமும், மோக்ஷத்தி லபேக்ஷையும், வந்தால் பேறறிவிளக்கமென்றும், மெய்யறிவிளக்கமென்றும், உண்

மைக்ஞானநிலை என்றும், சுருதிப்பிரமாணங்களிலும் பெரியோர்களாலும் கூறப்பட்டுளது.

ஓ சுவாமி! இந்தப்படியுள்ள ஜீவர்களெல்லாம் தாபத்திரயாதி சம்சார துக்கங்களுக்கும் நரகத்திற்குங் காரணமான அகங்கார துன்பம் அடிக்கடி எவ்வளவு வந்தாலும் அதை விட்டுவிடுவதும் பெரிய துன்பமென்றும் எண்ணுகிறேன். அது அப்படியிருக்க, எப்படி மோக்ஷத்தை நம்புவதென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மரணகாலமடுத்தத் தீரா ரோகிகளுக்கு எவ்வளவு நல்ல மருந்தும் நல்ல நல்ல வைத்தியர்களிருந்தாலும், பிரயோஜனங் கிடையாது. அதுபோல் பேராசையுடைய பாபிகளுக்கு ஞானோபதேசஞ்செய்தால், அதை நஞ்சைப்போல் எண்ணுவார்கள். உலகத்தின்கண் அஞ்ஞானிகளான ஜீவர்கள் அறிவுதான் பெரிதென்றும், அதல்ல மனந்தான் எல்லாவற்றிலும் பிரதானமென்றும், சொல்லிக்கொண்டு ஈனசம்சாரத்திற் கட்டுப்பட்டலைவார்கள். மனதை யடக்கும் உபாயத்தையும் அறிவுக்குமறிவான அறிவை யறிவதுமாம் பேரறிவென்றும், மெய்யறிவென்றும், உண்மைக்ஞான விளக்கமென்றும், பெரியவாள் சம்மதம்.

ஓ சுவாமி! சம்சாரிகள் வர்ணாச்சிரமத்திலிருந்துஞ் செய்யவேண்டிய கிரகஸ்தாச்சிரமம் யாது? அந்தக் கிரகஸ்தாச்சிரமத்திலிருந்துந் துறவாத்தாச்சிரம மடையும் மார்க்கம் யாது? அப்படியே துறவாத்தாச்சிரமத்தை யடைந்த சாதுவின் நிலையாவது யாதென்று மனம் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! வர்ணாச்சிரம தர்மமாவது யாதெனில், சம்சாரிகள் இல்லறத்தில் வர்ணாச்சிரம தர்மத்தோடு கூடியிருந்தும் பிராம்மணாதி சதுர் வர்ணங்களும் அவாளவாளுக்குடைத்த அதிகாரத்திற்குத் தகுந்தபடி நிஷ்காமமாய் நல்ல சத்கருமங்களைச் செய்யவும், பிதுர் தேவாதி சாதுக்களைப் பூசிக்கவும், பிராம்மணாள் வேதம் படிக்கவும், அதிகாரம் போல் கற்றுக்கொடுக்கவும், அதுபோல், நல்லவர்களைப் பார்த்து தானங்கொடுக்கவும், வாங்கவும், காலதேசாவஸ்தைக்குத் தகுந்தபடி எக்யஞ் செய்யவும், செய்விப்பிக்கவும், இந்தப்படி ஆறுகர்மங்களைச் செய்யும்பொருட்டுப் பிராம்மண ஜாதிக்குள்ள அதிகாரம். இன்னும் மூன்று சந்தியா காலங்களிலும் சந்தியாவந்தனங் காயத்திரி முதலான ஜெப தபங்களைச் செய்யவும், இன்னும் பிராம்மணனுக்குடைத்தான சத் கர்மங்க ளனேகமுண்டு. அதுகளெல்லாம் சாதுக்களின் திருவடியில் நிஷ்காமமாய் ஈஸ்வரார்ப்பணஞ் செய்து சமார்ப்பணமாக்கவும், இந்தப்படி யெல்லாம் பிராம்மணாள் செய்யவேண்டிய குலாசார தர்மமென்றும் வேதத்தின் பொருளை நன்குயறிந்த மகான்களின் சம்மதம். இந்தப்படியுள்ள பிராம்மணாள் இல்லறத்திலிருந்துஞ் சாதுக்களின் பாதைபூஜை செய்யவும், அங்ஙனம் எப்படியெனில், அதிவர்ணாச்சிரமத்தை யுடைத்த மகான்கள் தன்னிடத்திற்கு வந்தால், அந்தக்கிரகஸ்தாள் சதிபுருஷாளிருவருமாய் கூடி, அந்த சாதுவை உபரியாயுள்ள ஓராசனத்திலுட்காரவைத்து, அந்த மகாத்மாவினுடைய வர்ணாச்சிரமகுல தர்மங்களைக் கவனிக்காமல், பிர்ம சைதன்னியத்தைப் பார்த்துத் திருவடியிரண்டும் விசாலமாயுள்ளவொரு தாம்பாளத்தில் சேர்த்து வைத்தும் வலது பாதம் புருஷனும் இடது பாதம் மனைவியுமாகப் பிடித்து வைத்துக்கொண்டு, அனுமோதமா யிருவரும் ஈஸ்வர பக்தி விஸ்வாசத்துடன் நல்ல சுத்தஜலங்

கொண்டு பாதப்பிரக்ஷாளனஞ் செய்யவும், அந்த பாததீர்த்த மானதைக் கோடித்தீர்த்தமாய் நினைத்து, அணுவளவும் பூமியிற் சிந்தாமல் சிரசிற்றறிக்கவும், பானஞ்செய்யவும், ஜல கெந்த தூப தீபாதிகளைக் கொண்டுப் பாத பூஜை செய்யவும், மாதுரியமாயுள்ள அன்னபானாதிகளை யூட்டிச் சந்தோஷிப் பிக்கச் செய்யவும், அந்த உச்சிட்டமானதை சதி புருஷா ளிருவரும் அமிர்தத்தைப்போற் புசிக்கவும், இந்தப்படி யெல்லாஞ் செய்துப் பழகிவருங் கிரகஸ்தன் சதி புருஷா ளிருவருங் கூடிக் காமத்தாற் புணர்ந்த மகாபாபமெல்லாம் வேரோடே நாசமடையும், மோக்ஷத்திற்கும் வழியாகும். இந்தப்படியெல்லாஞ் செய்வதே பிராம்மண ஜாதிக்கடுத்த இல்லற தர்மமென்றறிக.

ஓ மனமே இன்னும் கேள்! முன்கூறிய கர்மத்தைத் தவிர சாதுக்களின் பாத பூஜை செய்யும்பொருட்டு மற்ற மூன்று வர்ணங்களுக்கும் அதிகாரமுண்டு. சாதுக்களிடத் தில் பக்தியுடையவன் சண்டாள ஜாதியானாலும் அதிகார முண்டு. இந்தப்படி இல்லறத்திலிருந்து துறவறமடையு மார்க்கம் யாதெனில், முன்கூறியபடியுள்ள மகாத்மாவாயும், அதிவர்ணாச்சிரமியாயும் உள்ளவொரு குருவையடுத்து வர்ணாச்சிரமாதி குலாச்சார தர்மங்களும், விதிநிஷேதாதி குணதோஷங்களும், தர்மா தர்மங்களும், தூரத்தள்ளிவிட் டுத் தன்னுடல், பொருள், ஆவி, மூன்றும் ஸ்ரீ சற்குருவின் திருவடியிற் றாரைவார்த்துப் பாதுகாத்துப் பலநாள் பணி விடைசெய்துப் பழகிவருவதானால் அதிவர்ணாச்சிரமத்தை யடையலாம். சந்தேகம் வேண்டாம். இனி அதிவர்ணாச் சிரமமாவது யாதெனில், நான்கு சாதனங்களுமடைந்து, மும்மலங்களுமற்று ஸ்ரீ சற்குருவின் திருவருட்பெற்று, அபேதமாயும், நிர்மலமாயும், நிர்க்குணமாயும், பரிபூரண

மாயும், பிர்மானந்தமாயுமிருக்கும் மகான்கள்தான் அதி வர்ணாச்சிரமிகளென்றுமறிக.

ஓ சுவாமி! அனேகமான ஜனனமரணத்துன்பங்களுக் கேதுவான சண்டாள சம்சாரசாகரத்தைத்தாண்டி, உண் மைக்ஞான பூமியையடையும்பொருட்டுச் சன்மார்க்கம் யாதென்று திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று மனம் வினவ, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! முதலாவது, நானொரு சம்சாரி யென்றவன் யாரென்றால், மாயாநிர்மிதமாயும், அசத்தாயும், அவித்தியாமானமாயும், அநித்தியமாயும், அசுத்தமாயு முள்ள இந்தச் சரீரமொன்றுதான் நானென்பவன். அது தான் சம்சாரி, அது வாஸ்தவமல்லவென்றறிக. ஆனாலும், அப்படித் தோற்றுவதற்குக் காரணம் அகங்காரம். அகங் காரத்தினால் தோற்றுவது அபிமானம். அபிமானத்திற் கும் அகங்காரத்திற்குங் காரணம் அஞ்ஞானமாயுள்ள மன மொன்றேயாம். ஆதலால், சம்சாரக் கூட்டங்களிற் பிரதா னம் மனமொன்றுதானென்று மறிக. ஆதலால், இந்திரி யங்கள் இருபதும், அந்தக்கரணம் நான்கு மடங்கிவிட்டால், ஜனன மரணாதித் துன்பங்களுக் கேதுவான சம்சாரக்கூட்ட மெல்லாம் அடியோடே நசிக்கும். சந்தேகம் வேண்டாம்.

ஓ சுவாமி! இந்த தத்துவங்கள் இருபத்துநான்கின் சொரூபமாவதென்ன? இதையடக்கும்பொருட்டு உபாய மெப்படி யென்று மனம் கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்த தத்துவங்களின் சொரூபமாவ தென்ன வெனில், மூலப்பிரகிருதி யொன்று, மகத்தத்துவ மொன்று, அகங்கார மொன்று, மனமொன்று, இந்திரியங்க

ளிருபது ஆக இந்த இருபத்துநான்குத் தத்துவங்களுமா மென்றறிக. அதானது, காது, கேள்வி, தோல், ஸ்பரிசம், கண், பார்வை, நாக்கு, ரசம், மூக்கு, நாற்றம், வாக்கு, வசனம், பாதம், கமனம், கை, தானம், குதம், விசர்ச்சனம், உபஸ்தம், ஆனந்தம், மனம், சங்கற்பம், புத்தி, நிச்சயம், சித்தம், சஞ்சலம், அகங்காரம், அபிமானம் இந்தப்படி ஒன்றொன்றும் வோரோர் விடயங்களோடு கூடியதாம். ஆகத்தத்துவங்க ளிருபத்து நான்குமாம் இந்த ஸ்தூல சரீரம்.

இதுதான் சராசர ஜீவர்களுக்கும் சம்சாரமென்றறிக. இதுவே அவித்தியாப் பிரதிரூபமான சரீரம். இதிலிந்த இருபத்துநான்கு பிரகிருதிகளுக்கும் புருஷன் யாரென்றால், சராசரத்திற்கும், அந்தரியாமியாயும், ஏகமாயுள்ள ஜீவனென்றுதான். 'இந்தத் தத்துவங்களை' யடக்கு முபாய மெப்படியெனில், இந்த இருபத்துநான்கு பிரகிருதிகளையும் தங்கள் தன்புருடரான ஜீவனி லடக்குமாறு லடங்கும். அப்படியே இருபத்து நான்குத் தத்துவங்களுமடங்கிவிட்டால், ஜீவனுடைய சம்சார சம்மந்தமடியோடே நாசமாகு மென்பதற்குச் சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓ சுவாமி! தாங்களருளிச்செய்தது சரி. ஆனாலும், இந்த ஜீவன் வந்தவிடமெது? இது போயடங்கு மிட மெங்கே என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பிரகிருதி நாசத்தின்கண் புருஷனென்கிற நாமமனுமாத்திரமானாலுங் கிடையாயென்பது சத்தியம். ஆனாலும், சம்சார உற்பத்தி நாசங்களுக்கும், பெந்தத்திற்கும், மோக்ஷத்திற்கும் காரணம் மனமொன்றே யாமென்றும் இப்படிக்கொத்த மனதை யறியும்பொருட்டு

விசாரித்துப்பார்த்தால், பிர்மாதி தேவர்களானலும் அசாத்தியமாமென்று மறிக.

ஓ மனமே கேள்! இந்த உலகத்தின்கண் யாவனொருவன் தன் மனோரூபத்தை யுள்ளபடி உண்மையாகக் கண்டவர்கள் யாரோ அவர்களே இந்த உலக தத்துவத்தையும் தன்னுடைய தத்துவத்தையும், மனோ ரூபத்தையும், ஆத்ம தத்துவத்தையுமுண்மையாகக் கண்டவர்கள். இதற்கு ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெறவேண்டும்.

ஓ மனமே கேள்! இந்தப்படி தன்னுடைய மனதைத் தான் பார்த்தறியும்போது, தன்னைத்தவிர யணுவளவும் வேறே யில்லை என்பது நிச்சயமாகும். இதைத்தவிர இரண்டாகத் தோற்றுவதற்குக் காரணம் அசுத்த வாசனையோடு கூடிய மனமொன்றுதான். சந்தேகமில்லை.

மனம் ஓ சுவாமி! இந்தப்படி மாயாவியாயிருந்த மனதைச் செயிப்பது யாராலும் அசாத்தியமாமென்று தோன்றுகிறது. ஆனலும், நின் திருவடி யடியினிற் கிருபைசெய்து, என் மனோரூபத்தையு முள்ளபடி யுண்மையாகப் பார்க்கும் பொருட்டு திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனதை மனதிற்கு மனமென்கிற பாவனை மாத்திரமல்லாமல் யெதார்த்தமாய்ப் பார்க்கும் போது, அதற்கு ரூபம் அணுவளவுங் கிடையாதென்பது நிச்சயம். இது பரம ரகசியமாமென்றும், இதை பிர்மாதி தேவர்களாலுங் காணக்கூடாததாம். மனமென்றும் முன் கூறிய தாற்பரியம் என்னவெனில், ரூபமில்லாத வஸ்துவை யாரானலும் பார்க்கக்கூடுமா? கூடாதென்பது நிச்சயம்.

ஆதலால், மனமானதின் ரூபம் பாவனைமாத்திரமல்லாமல் வேறில்லை. மனதிற்குச் சொரூபம் அணுவளவு மில்லை யென்பது சத்தியம். மனதின் நினைவானது அணுமாத்திரம். அதன் பாவனையானது இந்த உலகத்திற்கு மேலுங் கீழும் பூரண விலாசமாயிருக்கும். ஆதலாலிந்த சராசரப் பிரபஞ்ச வஸ்துக்க ளெல்லாம் மனோபாவனை யல்லாமல் அணுவளவுங் கிடையாதென்பது நிஜம்.

ஓ மனமே இன்னுங்கேள்! மனோபாவனை யாவதெது வென்றால், இந்த உலகத்திற்குக் காரணம் மாயை. மாயையில் தோற்றியதாம் ஜீவர்கள். அந்த மாயைக்கு ஜீவர்களில் புத்திர வாஞ்சை யுண்டாயிற்று. அந்த ஜீவர்களெல்லாம் அந்த மாயயைப்பார்த்து மகா மோகமடைந்தன. அந்த மகா மோக நிமித்தம் சங்க முண்டாயிற்று. அந்தச் சங்கத்தினு லிந்த ஜீவர்களெல்லாம் அந்த மாயையோடுக் கூடிச் சேர்ந்து, சிருஷ்டி செய்யும்பொருட்டு இச்சை யடைந்தது. அந்த இச்சையின் நிமித்தம் சங்கற்பமடைந்தது. அந்தச் சங்கற்ப விகற்ப நிமித்தம் பாவனை யென்று மொரு சத்தி பிறந்தது.

ஓ சுவாமி! மனோபாவனையாவதுதெது வென்றுகேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனோபாவனையாவதெதுவென்றால், அது பரமாத்மாவுக்குள்ளிருந்தும் மாயையால் தோற்றமு மொடுக்கமுமாம் இந்த வுலகம். அதாவது, சாக்ரமும் சுழுப்தியும்போலவும். இரவும் பகலும்போலவும், மனச் சங்கற்பமானது கண்ணுற் கண்டதுங் காதினுற் கேட்டதும் மனதினுல் நினைந்ததும் நாம ரூபாதி சமஸ்தமும் மன சங்கற்பமாம். இந்த மன சங்கற்பமானது சாக்ர, சொர்ப்பன,

சுழுப்தி, என்கிற மூன்றவஸ்தையோடுகூடி முக்குண சகிதமா யிருந்தமட்டு மிருக்கும். மூன்றவஸ்தையும் முக்குணங்களும் விட்டால் மன சங்கற்பமறும். மன சங்கற்பமற்றால், மாயையுங் கிடையாது. மாயை இல்லாவிட்டாலது நிற்குணமாம். ஆதலால், மனதைப் பரிசுத்தமாக்கி யேகாந்த ஸ்தானமடைவதாம் மெய்யறி விளக்கமென்றும், உண்மை நிலையென்றும், பிர்ம்மானந்த விளக்கமென்றும், பெரியவாள் சம்மதம். ஆனாலும், மனமிருந்தமட்டும் நானென்றும், நீ யென்று மனேக பேதமாய்த் தோற்றும். மனமடங்கிவிட்டால் நானென்றும் நீ யென்றும், உலகத்தி லிரண்டல்ல. நான், நீ என்ப திரண்டு மில்லாவிட்டால் மனமேது? மன மில்லாவிட்டால் ஜடமேது? ஜகத்தேது? பெந்தமோக்ஷமேது? எல்லாங் கனவுகண்டுணர்ந்ததைப் போலொன்றுந் தோற்றாது. தோற்றமு மொடுக்கமும் மனச்சங்கற்பமான கங்குல் பகலாம். அது மாயை யென்று மறிக. மனச் சங்கற்பமற்றால் கங்குல் பகலறும். கங்குல் பகலற்றால் சுயம் பிரகாசமாய்ப் பரிபூரணானந்தமாய் விளங்குமென் றறிக. மனம், ஆனாலும், முன்கூறிய நான், நீ, என்கிற இரு பாவனையும் விட்டுவிடு முபாய மெப்படி யென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உடல் பொரு ளாவி மூன்று மொரு குருவினிடத்தில் தத்தம் செய்தால், நானேது? எல்லாம் நீயாம். எல்லாம் நீ யானல், நானேது? முக்காலத்திலுங் கண்டதெல்லாங் கனவாமென்றால், நானும் நீயு மில்லை. நானென்பதும், நீ யென்பது மில்லாவிட்டாலுலகமேது? எல்லாம் பிர்ம்மமயமாமென் றறிக. அதாவது மண்ணான குடமுடைத்துத் தூளாக்கிவிட்டாலது மண்ணுமென்பதுபோல, மனம் பரிசுத்தமாய் அகங்காரத்தை யுடைத்துத் தூளாக்கி

விட்டால் அது பரமாத்மாவாம். ஆகாயத்திற்குள்ளே வாய் வாதி நாலு பூதங்களுங் கலந்திருந்தாலும் அதுகளா லாகா யத்திற்குப் பெந்தமில்லாததுபோல் ஆத்மாவிலிருந்து தோற் றப்பட்ட சமஸ்தப் பிரபஞ்சமும் ஆத்மாவினிடத்தில் யாதொரு பற்றுதலுங் கிடையாது. ஆனாலும் தீயும் புகை யும்போல ஆத்மாவினுடைய அம்ஸமாம் சமஸ்தப் பிரபஞ்ச மும். தீயில்லாவிட்டாற் புகையேது ? புகையிருந்தால் தீ யிருக்குமென்கிற நிச்சயந்தான். அதுபோ லுலகத்தைப் பார்த்தால் ஆத்மாவை யறியலாம். ஆத்மா யில்லாவிட்டால் பிரபஞ்சமேது ? பிரபஞ்சத்தைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த் தாலதற்குக் காரணம் ஆத்மாவாமென்று மறியலாம். காரண மில்லாமற்போனு லொரு காரியமுங் கிடையாது. காரண மான நெருப்பில்லாவிட்டாற் காரியமான புகையில்லை. காரணமான மண்ணில்லாவிட்டாற் காரியமான குடமேது ? அதுபோற், காரணமான பரமாத்மாவும், காரியமான பிரபஞ் சமும் வேறல்ல. ஏகமென்றறிந்தால் ஆத்மாவைத் தவிர அணுவளவும் வேறேயில்லை யென்பது நிச்சயமாம். ஆதலால் மாயையானதும் பரமாத்மா, மனமானதும் பரமாத்மா, ஜெகத்தானதும் பரமாத்மா, ஜடமானதும் பரமாத்மா, எள்ளுக்கு ளெண்ணெயைப்போ லெங்கும் பிரகாசமாய்ப் பரிபூரணமாம் பரமாத்மாவானது. வெண்ணெயும் நெய்யும் போலே ஆத்மாவும் பிரபஞ்சமும் ஏகமென்றறிக. அதாவது, அஞ்ஞானமென்கிற இருளை பிரக்ஞானங்கொண்டு நீக்கி, விஞ்ஞானமென்கிற தீபத்தினுல் பார்த்தால், எல்லாம் பிரம்ம மயமாய் விளங்குமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். அகங்காரக் கருவிக ளற்று பரிபூரணானந்தத் தெளிவடைந் தால் சகல சந்தேகங்களும் நசிக்கும் எல்லாம் தானுய்த் தனக் கன்னியமில்லாமல் பரிபூர்ணமாய், பரமாத்ம தத்து வார்த்த சமானமாயும், சர்வ தத்துவங்களுக்கும் அந்தரியாமி

யாயும், அபரிச்சேத்தியனுயும், ஆகாயம்போல் பரிபூரணமாயும், சுயம்பிரகாசமாயும், விளங்குவதாம் பரமானந்தவஸ்து.

மனம் ஓ சுவாமி! இப்படிக்கொத்த பரமானந்த பரிபூரண பரமாத்மசொரூபானந்த நிஷ்டையடையும்பொருட்டு சுலபமான மார்க்க மெதுவென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரமென்கிற கட்டையை அரஹரா வென்றும் ஈஸ்வரார்ப்பணமாக்கிக் குருவின் திருவடியான பரமானந்த பதம் பிடித்து, அறிவான பூமலர்க்கொண்டு பூசைசெய்து, அவ்வியக்தமான பரப்பிரம்மத்திலற்பணமாக்கி, நிராசையான நிர்மல பாததீர்த்தம் சிரசால் வணங்கிச் சாந்தமான பல மதுர பதார்த்தங்களான உபசாரங்களைக்கொண்டு சிரத்தா பக்தி விஸ்வாசமாய் அன்புடன் பூஜைசெய்து, உடல் பொரு ளாவி மூன்றும் தூப தீபங் காட்டிப் பேரின்பத்துடன் திருவடிக்குத் தீர்க்கத்தெண்டமிட்டு, ஆண்டவ னடிமை யென்றும், ஐயனை வணங்கி நின்று, அன்புட னருட்பிரசாத மிருகையால் வாங்கி, அமிர்தமாயனுபவித்து, ஆனந்தப்பாஷ்பம்பொழியத் துதிசெய்து, தீர்க்க தெண்டனிட்டு, திருவடிகள் சிரசால் வணங்கிச் சிந்தையெல்லாம் விட்டு, ஆத்மயோகமென்றும், நிர்விகர்ப்ப சமாதியாய், ஞானனந்த முடிவிலே பிர்ம்மானந்தமாய், மௌன சமாதியிலிருப்பதாம் எதார்த்தக் ஞானம். இது நூதன விவேகிகளுக்குள்ளே நுழையா. ஏனென்றால், அகங்கார மடியோடு நாசமடையு மார்க்கம் பாராமலும், தீவிர வைராக்கியம் குருபக்தி, விவேக மிதுகளில்லாமலும், அகங்கார அபிமானியாய்த் தன்னறிவு முன்னிட்டுக் குருவைப் பின்னிட்டுக் குதற்கியாய், அநேகமான ஞான நூல்களைப் பார்த்தும், சம்சாரக் கடலின் நடுவிலே கிடந் திருகரையுங் காணமலலைந்து, கோடி பிர்ம்மகற்பமானலும் கரைகாணன்.

மனம் ஓ சுவாமி! அறிவானது எதனுடைய பிரகாச மென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அது சிற்சத்தியின் பிரகாசமாம். சிற்சத்தியானது பரமாத்மாவின் பிரகாசமாம். அதாவது, ஞான சிற்சத்தியாம். ஞான சிற்சத்தியா லுணர்வதாம் எதார்த்தக்ஞானம்.

மனம் ஓ சுவாமி! அந்த ஞான சிற்சத்தியின் சொரூப மாவது யாதென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஞான சிற்சத்தியின் சொரூபமெது வென்றால் அது பரமானந்த சொரூபமாம். அந்தப் பரமா னந்த சத்திக்குப் பதியானதும் பரமாத்மா, குருவானதும் பரமாத்மா, இதைத்தவிர சராசர ஜீவர்களுக்கும் குருவா னதும், பதியானதும், அந்த ஞான சிற்சத்தியாம். ஆகா யம்போ லெங்கும் பரிபூரணமான ஞான சிற்சத்திக்குள்ளே பஞ்சபூதங்களும், அநேககோடி பிரமாண்டங்களும், அனேக விதமான ஜீவர்களும், தேவாதிதேவர்களும், மகத்துக்களும், வித்துக்குள்ளே மரம்போலவும், மாத்துக்குள் வித்துப்போல வும், ஸ்தூலமாயும், சூக்ஷுமமாயும், காரணமாயு மடங்கி யிருக்கிறது. இதுகளில் மகத்துக்களானது அந்த ஞான சிற்சத்தியின் அம்சமான திருவவதாரமாம். ஆதலால், சுக ஜீவியாயிருக்கும்பொருட்டு அறிவானதொரு குருவின் திரு வடிக்குப் பின்னிட்டு நடப்பதினல், அறிவு விளங்கி பிர்ம்மா னந்த சக்தியி லடங்கியிருக்கும். அறிவானது ஞான சிற் சத்தியி லடங்கிவிட்டால், அகங்காராதி தத்துவங்களெல்லா மடியோடே நசிக்கும். அகங்காராதி தத்துவங்கள் நாச மடைந்தால், அறிவு விளங்கிப் பரிபூரணமாய் நிர்மலமாயிருப் பதை பிர்ம்மானந்த விளக்கமென்றறிக. ஆதலால், அறிவை

மறந்த மறப்பே மனமாமென்றும், அந்த மனமே திருடனு மென்றும், குருடனுமென்றும், கோர மூடமாமென்றும், கொடும்பாவியா மென்றும், தானே தனக்குச் சத்துருவா மென்றும், எமனுமென்றும், குருத் துரோகியாமென்றும், அதனால் நரகமாம் பலனென்றுமறிக. அறிவை யறிந்த அறிவே குருவாயும், பரமாத்மாவாயும், பெந்துமாயுமிருக் கும். அதாவது, வேதாந்த சித்தாந்த சமரச சச்சிதானந்த ஸ்வயஞ்ஜோதியாய்ப் பரிபூரணானந்தமாய், விளங்குவதாம் மெய்யறி விளக்கமென்றும் பெரியவாள் சம்மதம்.

மனம் ஓ சுவாமி! இப்படிக்கொற்ற ஞானிகளின் இல க்ஷணமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உலகத்தின்கண் ஞானிகளனேகவித மிருந்தாலும், அவர்க ளிரண்டு விதமாம். அதாவது அகக் ஞானிகளென்றும், புறக்ஞானிகளென்று மறிக. இதுகளிற் புறக்ஞானமாவது, அநேக ஞான நூல்களைக் கற்றுணர்ந்தும் எல்லாம் விட்டுத் தீவிர வைராக்கியத்துடன் சந்நியாசியாய் ஞானவீட்டை யடைந்தாலும், ஞானவீட்டிற்குள்ளே நுழை யாமற் றடுக்கும்பொருட்டு மூன்றுவிட முட்டாள் காவலிருக் கிறார்கள். இவர்கள், மகா பலமுடையவர்களும், அறிவு கெட்ட மூடர்களுமாதலா லிவர்கள் ஞான வாசலைத் தடுக் கும் முழுமூடர்களா மென்றறிக. இவர்களுடைய இணக் கமும் நல்லதல்ல. பிணக்கமும் நல்லதல்ல. அப்படிப் பிணங் கினாலும், இணங்கினாலு மிவர்கள் பேரின்பமான ஞானவீட் டிற்குள்ளே விடமாட்டார்களென்பது நிச்சயம்.

மனம் ஓ சுவாமி! இப்படிப் பேரின்பமான ஞானவீட் டின் வாசலைத் தடுக்கும் மகா பலமுடைய துஷ்ட முட்டாள் மூவரும் யாரென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனமானதை யொருமைப்படுத்தி ஏகாந்த சித்தமாக்கிச் சதானந்த சகச நிஷ்டையை யடைந்து ஸ்வரூப சாக்ஷாத்காரமாகும்பொருட்டு உள்முகமாய் விளங்காமல், அதற்கு விரோதமாய் ஞானவீட்டின் வாசலைத்தடுக்கும் முன் கூறிய விட மூடர்கள் மூவரும் யாரென்றால், அதம்பாவனை, சமுசய பாவனை, விபரீத பாவனை. அதாவது அக்ஞானம், விபரீதம், சந்தேகம் என்றிவர்கள் மூவர்களுமாம். இதுகளிற் சந்தேகமென்பது நானென்றும், குருவென்றும், பரமாத்மா வென்றும், உலகமென்று மிதுகள் நான்கும் ஏகமென்றறியாமல் நான் வேறே, குரு வேறே, பரமாத்மா வேறே, உலகம் வேறே, என்றெண்ணி நானாவிதமாய் மனக்கவலையடைந்து அநேகவித சந்தேகத்திற்கிடமாய்க் குரு சுருதி யுக்தி யனுபவமில்லாமற் கெட்டலைந்தும், ஆசாரியார் வாக்கியப் பிரமாணங்களெல்லாம் மெய்யா? பொய்யா? பூரணக்ஞானம் குருவிற்கிருக்குமா? குருவும் நம்மைப்போ லொரு மனுஷியன்தானே! எல்லாவற்றிலும் சிறந்தது கடவுள், இந்தப்படி யெல்லாம் நினைப்பது சந்தேகம். இரண்டாவது விபரீதமாவது மோக்ஷம் பொய்யாமென்றும், போகம் மெய்யாமென்றும், மந்த புத்திகளாய், மோக்ஷம் மெய்யானாலும், ஒரு ஜன்மத்திலடையத்தகுந்த தல்லவென்றும், அநேக ஜன்மம் வேண்டியிருக்குமென்றும், ஆதலாலிந்த ஜன்மத்தில் மோக்ஷங் கிடையாதென்றும், தேகமே நித்தியம், போகமே சத்தியமென்றெண்ணுவதாம். மூன்றாவது அஞ்ஞானம், அஞ்ஞனம் அஞ்ஞானமாவது, நான் அநேக ஞான நூல்களைப் பார்த்திருக்கிறேன். எனக்கு அதனுடைய் தாற்பரியம் நன்றாய்த் தெரியும், ஆனாலும் நான் சம்சாரி, இதுக ளென்னுடைய சம்சார மிதுகளுக்கெல்லாங் கர்த்தா நான்தான். நான் மரணமடைந்தா லிவர்களுக்கு யாருந் துணையில்லை.

ஆதலால் வீண்காலம் போக்காமல் மரணகாலம் வரையில் நல்ல போகங்களைப் புசித்தானந்தமாயிருக்கவேண்டும். செத்துப்போனபின் சுகதுக்கமேது, அதெல்லாஞ் சுத்தப் பொய். இந்தப்படியெல்லாம் நினைந் தாத்மாவை மறந்ததே அஞ்ஞானம். சந்தேகம், விபரீதம், அஞ்ஞானம் இந்தப்படி இம் மூன்று முழுமூடர்களுங்கூடி மனக்கவலை யடைந்ததாதலால், ஞானக்கினி இல்லாமற் கெட்டு, ஏகாந்த ஸ்தானமான நிஜ ஸ்வரூப சாக்ஷாத்காரமடைவதற்கு மார்க்கமில்லை. இதுவே புறக்ஞான லெக்ஷணமென்றறிக. இன்னும் அகக்ஞானிகள் யாரென்றால், நீறுபூத்த நெருப்பைப்போ லிருக்கும். அதாவது திரிகுண மயமான உலக விபூதிக்குள் சூக்ஷ்மமாய் மறைந்திருந்து ஆத்மாவைப் பார்க்கும்பொருட் டந்த திரிகுண மயமான உலக விபூதியை யூதிப்பார்த்தால் ஆத்மாவான நெருப்பு சுயம்பிரகாசமாய் விளங்கும். ஆதலால் திரிகுணமயமான அகங்காரத்தை யடக்கி, நானும் நீயு மெட்டுத் திசை பதினாலுலகமு மதற்குள் சராசர ஜீவர்களும் மற்றும் மேலான தேவாதி தேவர்களுங் குரு தெய்வம், பரமாத்மா யிதுக ளேகமாமென்றும், இது நாமல்ல கடவுளின் திரிகுணமயமான விபூதி சொரூபமாமென்றும், அதுவே நாமாகுமென்றும், அந்த நான் என்கிற அகங்கார விபூதியை யூதிப் பார்த்தால் அந்தகங்காரமும் நாமல்ல, அது மாயை, நாம் பரமாத்மாவா மென்று மறிவதுதான் அகக்ஞானி என்றும், பரோக்ஷ க்ஞானமென்றறிக. அந்தப் பரோக்ஷ க்ஞானமாவது உண்மை நிலையைக் கண்டதாமென்று மிந்தப்படி அகங்காரத்தை விட்டு நிஜஸ்வரூபமான பரோக்ஷமடைந்தாலதுவே அகக்ஞானமா மென்று மதனால் அபரோக்ஷ க்ஞானனுபவமா மென்று மறிக. இன்னும் முன் கூறிய பரோக்ஷமாவது, குருமுகமா யறிவதுதான். அதாவது சராசரத்திற்கும் அந்தரியாமியாயுஞ் சர்வ பரிபூரணமாயும், ஏக

மாயுங் குருவாயுமுள்ள ஆத்மாவைக்கண்டு உபாசிப்பதுதான் பரோக்ஷமென்றும், அபரோக்ஷமாவது சாக்கிர சொர்ப்பன சுழுப்தி இம்மூன்றவஸ்தையோடு கூடிய சாத்வீக, ராஜச, தாமச, மிம்மூன்று குணத்திற் கதீதமாயும், அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமாயும், விளங்குவதாம் பரோக்ஷம். இந்தப்படி பரோக்ஷ அபரோக்ஷ மிரண்டையுமறிந்த நீ யாரென்று உனக்குள் அன்புற்றுப் பார்த்தாலுன்னுடைய சந்தேகமெல்லாம் நசிக்கும். அஞ்ஞான விபரீதங்களுந் தீரும். இதற்குச் சந்தேகம்வேண்டாம். இன்னுங் கேள் மனமே! சந்தேக நிவர்த்தியாவது உலகமெல்லாம் பொருளாயிருந்தாலும் பிதா சம்பாதித்த பொருளுக்குப் புத்திர னவகாசியாமென்பதுபோ லிவ்வுலகத்தில் சாஸ்திரங்கள் அளவிறந்தகோடி யிருந்தாலுந் தன் குரு வுபதேசமான மகா வாக்கியப் பிரமாணங்களை நம்பி பூரண விஸ்வாசமுஞ் சிரத்தையும் பக்தியுமுடைய சிஷ்யர்களுக்குச் சகல சந்தேகங்களுந் தீர்ந்து பூரண க்ஞானத்திற் கவகாசியாமென்றறிக. ஆதலா லறிவுக்குமறிவான வறிவை வணங்கும் மனமேமனம். மனதை யடக்கு மறிவே பரோக்ஷ அபரோக்ஷ அத்துவிதமென்றறிக. மனமானது மாயை. அதான தணுவுக்கணுவாயுமிருந்து அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபமான பரமாத்மாவை மறைக்கப்பட்டதென்றறிக. மன மடங்கிவிட்டால், மாயை கிடையாது. மனமானது சர்வப்பிராணிகளுக்குமொன்றுதான். அறிவான ஆத்மாவுமொன்றுதான் ஆனாலும், வெகுவித பேதமாய்த் தோன்றுவ தெதுவென்றால், அனாதியான வாசனையோடு கூடிய குண பேதமாமென்றறிக. வாசனையுங் குணமூன்று மடங்கிவிட்டால், மனம் பரிசுத்தமாய், அபேதமாய் விளங்குமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். மனம் சரீரகங்காரத்தோடு கூடியிருந்தமட்டு மணுமாத்திரமாயும் அஞ்ஞானத்தால் அநேக பேதமாயுந்

தோற்றுவது சுபாவீகம். ஆதலால், அகங்காரத்தை அறிவு கொண் டடக்கி, அறிவை யாத்மாவென்றறிந்தால், அறிவு விளங்கிச் சந்தேகமெல்லாந் தீரும். சந்தேக நிவர்த்திக்குக் காரணம் முன்கூறிய ஏகாந்த குருபக்தி யொன்றுதான் வேறில்லை. அதாவது குருபக்திகொண்டு, சித்தம் பரிசுத்த மாம். சித்தம் பரிசுத்தமான வுத்தம குருபக்தியடையலாம்.

மனம் ஓ சுவாமி! உத்தம குருபக்தனுக்குக் குருவுப தேசமாவதென்ன வென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! உத்தம குருபக்தனுக் குபதேசமா வது, அனாதமாயும், அனாமயமாயும், அனாதாரமாயும், நிரா தாரமாயும், நிராகாரமாயும், நிரூபமாயும், நிறஞ்சனமாயும், நிஷ்கள களேபரமாயுமுள்ள பிரணவாக்ஷரமாம். அந்தப் பிரணவாக்ஷரத்திலிருந்தும் கடலொலிபோலும், சிங் காரமான வண்டின் தொனிபோலும், மணி நாதம்போலும், ரீங்காரமென்கிற ஒரு நாதந்தோன்றும். அந்த நாதமானது ஞான சிற்சத்தியாம். அந்த ஞான சிற்சத்தியின் பூரணப் பிரகாசமானது ஸ்ரீங்காரமென்கிற மகதத்துவமாம். அந்த மகதத்துவத்திலிருந்தும் அகங்காரமான யகரமென்கிற சப்த தன்மாத்திரையும், அந்த சப்த தன்மாத்திரையிலிருந்தும் வகரமென்கிற ஸ்பரிச தன்மாத்திரையும், அந்த ஸ்பரிசதன் மாத்திரையிலிருந்தும், சிகரமென்கிற ரூபதன்மாத்திரையும், அந்த ரூப தன்மாத்திரையிலிருந்தும் மகரமென்கிற ரசதன் மாத்திரையும், அந்த ரசதன்மாத்திரையிலிருந்தும், நகர மென்கிற கெந்ததன்மாத்திரையும் ஆகப் பஞ்சதன்மாத்தி ரையான ஐந்து சத்திகள் பிறந்தது. இந்தப்படி சப்தஸ்பரி சரூப ரஜகெந்தங்களாம் தன் மாத்திரைகளான பஞ்சவித பஞ்சாக்ஷரமும் முன்கூறின பிரணவ முதல் மூன்றக்ஷரமும் ஆக எட்டக்ஷரமும் அஷ்டாக்ஷரமாம், அஷ்ட சத்தியாம்

இந்த அவ்ஷ்டசத்தியும் அகங்காரமான ஸ்தூலப் பிரபஞ்சத் திற்குக் காரணம். இதுகளில் நகாமுதல் ஏழு அக்ஷாமும் பிரணவத்தில் அடக்குவதாம் அகங்காரத்தி னடக்கமென் றும், யோக முடிவென்றும், நாதமுடிவென்றும், வேதாந்த மென்றும், வேதாந்திகளான பெரியோர்களுடைய அபிப்பி ராயம். ஆனாலும் சொரூப சாக்ஷாத்காரமடையும்பொருட்டு சகல அவயவங்களோடுக்கூடிய கடவுளின் சொரூபமாம். இந்த ஸ்தூலப் பிரபஞ்சத்தை கடவுளின் சொரூபமாயும் அவ்ஷ்டாக்ஷரமாயும், ஏகமாயுங்கண்டு உபாசித்து வணங்கு பவர்களுக்கு வேறொரு தெய்வமுங் கிடையாதென்பது நிச்ச யம். ஆனாலு மிதுகளில் முக்கியமாயும் திரிகாலத்திலும் நாசமில்லாததாயுமுள்ளது பிரணவ சொரூப மொன்றுதான். பிரணவ சொரூப மடைந்தவாளுக்கு வேறொரு தெய்வமும் பேச்சுங் கிடையாது. இந்தப்படி எதார்த்தக்ஞான மடை யும்பொருட்டு பரமாசாரியருடைய உபதேசமும் குருபக்தி விசுவாசமும் வைராக்கியமும் அப்பியாசமு மில்லாமற்போ னால் எதார்த்த க்ஞானமான அனுபவம் கனவிலுங் கிடை யாது. ஆதலால் ஞானத்திற் கதிகாரிகள் ஏகாந்த பக்த யோகிகளாம். குருபக்தி யில்லாமல் சித்தம் பரிசுத்தமடை யாது. சித்தம் பரிசுத்தமடையாமற்போனால் யோகாப்பியா சம் செய்ய முடியாது. யோகாப்பியாச மில்லாவிட்டால் ஞானமடையாது யோகத்தின் முடிவாம் ஞானமென்பதற் குச் சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓ சுவாமி! அப்பியாசயோகமாவதெதுவென்று கேழ்க்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அப்பியாச யோகமாவதற்கு முத லாவது இந்திரியங்களெல்லா மடக்கிச் சித்தம் பரிசுத்த மாக்கிக்கொண்டு அப்பியாசஞ்செய்யவேண்டும். அதாவது

12

சமமா யோராசனத்தில் சமகாயனுயிருந்து அமல யிருதய னுய்ச் சுகமாகும்வண்ணம் இரண்டு கைகளும் துடைமேல் வைத்து ஸ்ரீ சற்குருவின் திருவடி யிரண்டும் சித்தத்தில் ஸ்திரமாய் நிறுத்தி நாசிகா முனையில் ஈக்ஷணனுய் திருஷ் டியை நிறுத்தி பிராணனுடைய சஞ்சார மார்க்கத்தைப் பார்த்து அந்தப் பிராணுபான வாய்வுக்களை ரேசக, பூரக, கும்பக மிதுகளைச் சமானமாக்கிச் சுழிமுனையில் மெள்ள மெள்ளக் கண்டு அப்பியாசஞ்செய்து பழகிவருவதானுல் குரு தெரிசனமாகும். குருவானது பிரணவ சொரூபமாம். அதாவது சாந்தமாயும், சமானமாயும்; சாமளமாயும் கோமள மாயும், குணுதீதமாயும், நிஷ்களமாயும், கோடிசூரியப் பிர காசமாயும் அகண்ட பரிபூரண நித்திய நிர்மல நிர்ச்சலமா யும், சச்சிதானந்த சொரூபமாயும் விளங்குவதாம் பிரணவ சொரூபமென்று மறிக. இதை ஸ்ரீ சற்குருவின் சன்னிதா னத்தின்கண் அப்பியாசிக்க வேண்டுவதாதலால் சங்கிரக மாகச் சொன்னேம்.

ஓ மனமே கேள்! இந்தக் கலியுகத்தின்கண் தாமச குண மதிகமாகையால் சர்வ வர்ணுசிரம குலாசார தர்மங்க ளும் விபரீதமாயிருக்கிறது. வர்ணுசிரம குலாசார தர்மமா வது சதுர் வர்ணத்திற்கும் விதித்த விதிப்படி செய்யவேண் டிய தவசியம். வர்ணுசிரமங்களில் சூத்திரர்களுக்கும் ஸ்திரீ களுக்கும் மந்திர தந்திர கர்மங்களும், வேதசாஸ்திர புராண யிதிகாசங்களுக்கும் ஒருயுகத்திலும் அதிகாரமில்லை. அதைத் தவிர இரண்டாவது வைசியர்களுக்குக் கிருஷி வாணிபம் பசு ரக்ஷை முதலான கர்மங்களை வஞ்சகமில்லாமற் செய்ய வும். மூன்ருவது க்ஷத்திரிய தர்மம். ஜீவகாருண்யமுடைய பிதாவுக்குண்டான புத்திர வாச்சல்யம்போலே பிரசை பரி பாலனஞ் செய்யவும். நான்காவது பிராமண ஜாதிகளுக்குச் சர்வ தர்ம கர்ம மந்திர தந்திராதிகளுக்கும் சரியை கிரியை

யோகம் ஞான மிதுகளெல்லாவற்றிற்கும் அதிகாரமுண்டு. ஆதலால், கிரேதாயுகம் பிராமணனென்றும், திரேதாயுகம் க்ஷத்திரியனென்றும், துவாபரயுகம் வைசியனென்றும், கலி சூத்திரனென்றும் ஆகமாதி புராணுதிகாசங்களிலும் மகாத்துமாக்களும் கூறியிருக்கிறது. அங்ஙனம் கலி வந்தவார் காலபேதத்தினுலும் சற்கர்ம லோபத்தினுலு மென்பது கருத்து. ஆதலால் கலிகாலத்தில் சற்கர்மங்களும் சாதுக்களில் பக்தி விஸ்வாசமும் ஞான விக்ஞான வைராக்யாதிகளும் ஸாத்வீக விருத்தியும் நாஸ்தியாய்ப் போய்விட்டது. தர்மமெல்லாம் காட்டுக்குப் போய்விட்டது. சற்கர்மங்களெல்லாம் சண்டாளனிடம் போய்ச்சேர்ந்தது. அதனுல் தாமசகுண மதிகமாமென்றும் அந்தத் தாமசகுணமே கலியென்றும் அந்தக் கலி தர்மமே சூத்திர சமாசாரமென்றும், சுருதி ஸ்மிருதி வேதசாஸ்திர புராணுதிகாசங்களும் மகாத்துமாக்களும் கூறப்பட்டது சத்தியம். ஆதலால், இந்தக் கலி சர்வ பரிபூரணமாயும் மகா பலமுடையதாயும் சர்வாதிகாரியாயும் சர்வத்திற்கும் கர்த்தாவாயு மிருக்கிறது. இந்தப்படி யுலகமெல்லாந் தாமசகுண மதிகமாய்க் கலிரூபமாய் எல்லாம் சூத்திர வர்ணமாயும் வர்ண சங்கிரஹா மென்பதற்கு என்ன சந்தேகம், அங்ஙன மெப்படியெனில் சர்வாதிகாரமும் கலிதர்மத்தோடு கூடிய சூத்திரனுக்குளடங்கியிருக்க முன்கூறிய பிராம்மணுதி மூன்று வர்ணங்களும் அடிபட்டுக் கீழே விழுந்து எல்லாம் வர்ண சங்கிரமாய்க் கிடக்கிறது. ஆதலா லொருவருக்கும் ஒரு கர்மத்திற்கு மதிகாரமில்லை.

மனம் ஓ சுவாமி! தாமசகுணம் தனியாயிருக்கும் கலியுகத்தில் கலி சபையைத்தாண்டி நற்கதியடையும்பொருட்டு வல்ல சன்மார்க்கமுண்டா வென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! கலிதர்மமெல்லாம் அதர்ம விதர்மங் களாயும், கலிகர்மமெல்லாம் அகர்ம விகர்மங்களாயும், சுகர் மங்களெல்லாம் நாஸ்தியாயும் வந்துவிட்டதால் இந்தக் கலி யுகத்தின்கண் ஒரு கர்மத்தினுலு மொருவருக்கும் சர்க்க திக்கு மார்க்கமில்லை. உலகத்தின்கண் சாதுக்களில்லாமற் போனுல் இந்த வுலகமெல்லாம் கீழே விழுந்துபோகுமென் பதற்குச் சந்தேகம்வேண்டாம், சாதுக்களினு லிந்த வுலகம் நிலைநிற்கிறதென்றும் கருத்து. சாதுக்கள் அதி துர்லபம் கலிகாலத்தில் கலிகர்மத்தினுலும், கலி தர்மத்தினுலும், சர்க் கதிக்கு மார்க்கமில்லை யென்றும் முன்கூறிய தாற்பரியம். ஆனுலும் லோக ரக்ஷகராகிய பகவன் நாமசங்கீர்த்தனங்க ளைக்கொண்டும் துர்ச்சங்கமெல்லாம் தூர விலக்கி சர்ச்சங்கப் பழக்கமுஞ்செய்து பழகிவருவதானுல் சூரிய பகவான் உதய காலமடுத்தால் இருள் மெள்ள மெள்ள நீங்கி வெளிச்சமா வதுபோல் தாமசகுணமான கலிதிமிரம் நீங்கி சாத்வீகம் பிரகாசிக்கும். அங்ஙனம் சாத்வீகம் பிரகாசமானுல் சர்வ கர்மமும் விட்டுச் சித்தம் பரிசுத்தமாய் நிராசையாய் வைராக் கியத்துடன் பரிசுத்தகுண விருத்தியோடுகூடி ஆத்மானு பவ யுக்தனுயுள்ள ஒரு சற்குருவை யடுத்து அவர்கள் தன் பாதபூசை முதலான கைங்கிரியங்களைச் செய்துகொண்டு சந்தோஷமானபடி குருவருள் மகா வாக்கியத்தைக்கொண் டும் அனவரதமும் காத்துப் பன்னிரண்டு வருஷம் வைராக் கியத்துடன் அப்பியாசஞ்செய்து பழகிவருவதானுல் சமாதி கூடும். சமாதி கூடுமானுல் உலகத்தின்கண் சக்கரவர்த்திக் குங் குருவாய் சார்வபவுமனுய் சர்வகாலமும் வாழலாம் சந் தேகம் வேண்டாம். இப்படிக்கொத்த மகத்துக்களுக்குப் பதினெட்டுச் சித்திகளும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கைவசமாயிருக்கும். ஆனுலு மிதுகளெல்லாம் நச்சுரமா மென்றும், சித்திகளினுலுள்ள சுகமெல்லாம் மனோசுகமா

மென்றறிந்து சுவான வாந்தியைப்போல் தூரத் தள்ளிவிட்டு ஆத்மானுபவ சுகத்தைச் சதாகாலமும் பானஞ்செய்துக் கொண்டு பிரம்மானந்தமா யிருப்பார்கள். இதைத்தவிர யுள்ள யோகாப்பியாசத்தைக் கொண்டும் சித்துக்களைக் கொண்டும் நெடுநாள் சிரஞ்சீவியா யிருந்தாலும் மறுபிறப் புண்டு. அங்ஙனம் யாதெனில், ஆத்மயோகத்தைப்பார்க் கில் அதைத்தவிர ராஜயோக முதலான தெல்லா யோகமும் சுத்தப்பொய். அங்ஙனம் வந்தவார் யாதெனில், ஆத்மா வானதெங்கும் ஏகமாயும் பரிபூரணமாயும் என்றைக்கு முள் ளதாயும் சத்தியமாயுமுள்ளது. சரீராதி வஸ்துக்களெல் லாம் அவித்தியா நிர்மிதமாயும், அசத்தியமாயு மனித்திய மாயு முள்ளதாமென்பதற்கு ஒருவருக்கும் சந்தேகமில்லை. ஆதலால் முன்கூறிய யோக சித்திகளெல்லாம் பொய்யா மென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். உலகம் பொய்யா மென்கிற விஸ்வாசம் வந்தால் பூமிமுதல் நாதபடியுள்ள ஐஸ் வரியங்களும் யோகசாதனங்களும், யோகசித்திகளும்பொய். பிராணிகளின் சரீரத்தின் மூலாதாரமுதல் ஆராதாரமும் பொய். பிராணபான வாயுக்களும் பொய். ரேசக பூரக கும்பகமும் பொய். நாசிகாக்கிர சுழிமுனையும் பொய். அதைப்பார்த்துத் தியானஞ்செய்துக்கொண்டிருந்த மனதும் பொய். இப்படிக்கொத்த ராஜயோகத்தை உபதேசிக்கப் பட்ட குருவும் பொய். இதற்குச் சந்தேகம் வேண்டாம் ஆதலால் சற்குரு பக்தி விஸ்வாசங்கொண்டும் ஆத்மயோக மொன்றுதா னெல்லா யோகத்திலும் சிறந்ததாயும், சத்திய மாயும், நித்தியமாயும், சுத்த கைவல்லிய பதத்தையும் அடை யத் தகுந்ததாயுமுள்ளது. ஆதலாலிந்த ஆத்மயோகத்தைச் செய்வது எல்லாவற்றிலுஞ் சிறந்தது. இதற்கு அதிகப் பிரயாசமில்லை. எல்லோருக்கும் அதிகாரமுண்டு இதைத் தவிர முன்கூறிய ராஜயோக முதலான அப்பியாச யோகத்

தைச் செய்வதற்கு அதிகாரிகள் கலியுகத்தின்கண் அதிக துர்லபம். ஆதலால் எல்லாவற்றிலும் சிறந்தது, ஆத்மாவி னால் அனாத்மாவினை மறந்து ஆத்மாவுங்கொண்டு பரமாத்மா வினை யறிந்த யோகிகளும் ஆத்மாவிலன்பு பக்தி விசுவாச முடையவாளுக்கு அதோகதியடையாமல் எமதண்ட பாச மும் நரகமுந் தீர்ந்து மேன்மேலேறி அநேக ஜன்மமானாலும் நித்தியானந்த கைவல்லிய பதமடையலாம் சந்தேகம் வேண் டாம். ஆதலால் இந்த ஆத்மயோகமே எல்லாவற்றிலுஞ் சிறந்தது. ஆத்மாவைத் தவிரயுள்ள தேகாதிப் பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் மாயையின் சொரூபம். மாயாத்தோற்ற மாவது விபரீதப் பிராந்தி. அதானது கானற்ஜலம், கயற்றில் பாம்பு, முயற்கொம்பு, மலடி மகன், முத்துச் சிப்பியில் வெள்ளி, இத்தியாதி நாம ரூபங்களைப் பார்த்து உண்மை யாகத் தோற்றுவ தஞ்ஞானத்தோடுகூடிய மனப் பிராந்தி யல்லாமல் வாஸ்தவமல்ல. ஆனாலும் முன்கூறிய ராஜயோக மெல்லாம் எல்லா யோகத்திலுஞ் சிறந்தது. அந்த ராஜ யோக சித்தியினால் அணிமாதி பதினெண் சித்திகளுமடைய லாம். உலகத்திற்குப் பெரியவாளாயிருக்கலாம், பெரிய யோகி சுவாமியென்று கீர்த்திபெறலாம், மகா ராஜாக்க ளுக்கும் பொருளதிகமுடையவாளுக்குங் குருவாயிருக்க லாம், பொருளதிகம் சம்பாதிக்கலாம், இகலோகத்தில் சுகமாயிருக்கலாம், இந்த லிங்க சரீரம் விட்டு பரலோகம் போகலாம், அனேக லோகங்களிற் சுகமாய்ச் சஞ்சரிக்க லாம், அங்கே சூக்ஷ்ம சரீரம்விட்டு மறுபடியும் ஒருநாள் பூமியில் கும்பி நரகத்தில் வீழும். அப்போதுண்டாகும் துக்கம் இப்போது சொன்னால் ஒருவருக்குந் தெரியாது. ஆதலால் அனாத்ம வஸ்துக்களான தேகாதிப் பிரபஞ்ச வஸ் துக்களிலுள்ள ஆசையும் போக சித்திகளையும் தூரத் தள்ளி விட்டு அஞ்ஞானத்திற் கேதுவான அகங்காரத்தை ஆத்மாவி

லடக்கி, ஆத்மாவினைப் பரமாத்மாவி லடக்கி ஐக்கியம் செய்வதே மோக்ஷம். இதைத்தவிர யுள்ளதெல்லாம் பந்தம். ஆதலால் ஆத்மயோக அப்பியாசம் மெத்தவும் நன்று. அதனு லொருகாலத்தும் அதோகதி யில்லாமல் மேன் மேலேறி நித்தியானந்த மாயுள்ள கைவல்லிய பதமடையலாம். சந்தேகம் வேண்டாம். அதுமல்ல, இந்த ஆத்மயோக சித்தியைத்தவிறயுள்ள யோகசித்தியடைந்தவானுக்கு நான்தான் யோகீஸ்வரனென்றும்; நான் உலகத்திற்குப் பெரியவனென்றும், அகந்தையும், அகமமதையும், மேற்கொண்டு எப்போது முள்ளதாயும் ஆனந்தமாயுமுள்ள ஆத்ம சுகத்தை மறந்துவிடும். அகந்தைகொண்டு ஆத்ம சுகத்தை மறந்தவானுக்கு மகா ராஜயோகியாயிருந்தாலும் அந்தச் சரீரம் விட்டு அடிக்கடியும் தலைகீழாய் வந்து கும்பி நரகத்தில் வீழும். கும்பி நரகமாவது மாதர் குட்சி. ஆதலால் அஞ்ஞானத்திற்கும், அகங்காரத்திற்கும், நரகத்திற்குமேதுவான அனுத்ம யோகத்தையும், காயசித்திகளையும் தூரத் தள்ளிவிட்டு சற்குருபக்தி விஸ்வாசத்துடன் ஆத்மயோகத்திலிருந்தும் அப்பியாசஞ்செய்து பழகிவருவதானுல் எதார்த்தக்ஞானமானது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் கைவசமாகும். அங்ஙனம் யோகாப்பியாசஞ் செய்யாமற் போனுல் ஞானம் வராதென்றும், பல நூல்களிலும் கூறியிருக்கிறது. சரிதான் சந்தேகம் வேண்டாம். ஆதலால் எல்லா யோகத்திலுஞ் சிறந்தது ஆத்மயோகமொன்றுதான். எல்லா சித்திகளிலுஞ் சிறந்தது ஆத்ம சித்தி யொன்றுதான். இதுதான் முன்கூறியதற்கெல்லாம் தாற்பரியம். இந்தப் பரம ரகசியமே மகத்துக்களும், உபநிஷத்துக்களும் கூறியதின் முக்கிய தாற்பரியம். இதுவே மெய்யறிவிளக்கமென்றும், உண்மை நிலையென்றும், மகாத்துமாக்களுடைய சம்மதம். இதனுல் எல்லா லோகத்தையுந் தாண்டி மூலமாயயைக் கடந்து பரமானந்தபத மடையலாம்.

—

ஓ மனமே கேள்! ஆத்மசத்தி யோகத்திலிருந்தும், சுரோத்திராதி ஞானேந்திரியமைந்தும், வாக்காதி கர்மேந்திரிய மைந்தும், குணமூன்றும், அந்தக்கரணம் நான்கும் அடக்கி மனேலயமாவதே ஆத்மயோக லெக்ஷணம். பேராசையானது பாபம், துக்கம், நிராசையானது பரம சுகம், பரம சுகமென்பது பிரம்மானந்தம். இந்த உலகத்தின்கண் சேர்க்கை வாசனையோடு கூடியவாள் சந்நியாசியானாலும் அவாளைக் கலி மோசஞ்செய்யக்கூடும். இயற்கை வாசனையோடு கூடியவாள் சம்சாரியானாலும் அவாளிடத்தில் கலி பயந்திருக்கும். எல்லாம் பகவத் சொரூபமாக நினைந்த யோகிகளிடத்தில் கலி யணுவளவானாலு மிருக்குமா? ஆசையானது கலி, நிராசையானது பிரகாசம். பிரகாச மிருந்தயிடத்தில் இருள் அணுவளவானாலும் வந்தசையுமா? சூரிய பகவானிடத்தில் ஒரு சமயமானாலு மிருள் வந்தணுகுமா? அதுபோல் சாந்த குணமுடைய குரு சிஷ்யனிடத்திலும் எதார்த்த ஞானிகளிடத்திலும் கலி அணுவளவுமில்லை. ஆத்மா பரிபூரணமென்றறிந்த மகத்துக்களுக்குக் கலியென்பது சுத்தப் பொய். நிவர்த்திக்கிச்சையுடையவாளிடத்தில் கலிவந்தடையும், பிரவிர்த்தி நிவர்த்தி யிரண்டும் சமமாய்க் கண்ட மகான்களிடத்தில் கலி சகாயமாயிருக்கும். சாக்ஷாத் பரமாத்மாவினை தன்னிருதயத்தில் வைத்துப் பாவித்துப் பூசித்துச் சேவிப்பவர்களுக்கு பகவான் பரிபூரணானந்தமாயிருக்கும் அந்தயிடத்தில் காலமேது, கலியேது, கர்மமேது, சுகமேது, துக்கமேது, நரக சுவர்க்கமேது, பந்த மோக்ஷமேது, எல்லாந் தானாயிருந்தால் தனக் கன்னியமானது அணுவளவுமில்லை என்பதே பெரியவாள் சம்மதம். கலி வந்தவார் திரிகுண பேதத்தினாலே அங்ஙனம் எப்படியெனில், முக்குணத்தினால் நான்கு யுகம் இதுகளில் கிரேதாயுகமாவது சாத்வீகம் தனி. இரண்டாவது திரேதாயுகம்

சாத்வீகமும் ராஜசமுங்கூடி இரண்டாகக் கலந்திருக்கும். மூன்ருவது துவாபரயுகம், அதானது ராஜசகுணமும் தாமச குணமுங் கூடி இரண்டாகக் கலந்திருக்கும். நான்காவது கலியுகம், அது தாமச குணம் தனியாயிருக்கும் அந்தத் தாமச குணத்தினல் வர்ணச்சிரம குலாசார கர்மங்களும், குலதர்மாசார விதி நிஷேதங்களும், அடியோடே சூன்யமாயிருக்கிறது. அதனல் கலி. கலியினல் கொலே களவுகள் காமம் குரு நிந்தை சூது முதலான துஷ்கர்மங்களும் துராசாரங்களுமாய் அக்கிரம மேலிட்டுச் சரீரமே நித்தியம், போகமே மோக்ஷம் இந்தப்படி விபரீத புத்திகளாய் தாபத்திரயாதிகளோடு கூடிய சம்சாரமான சமுத்திரத்தில்பட்டிருகரையும் காணுமல் அலேயும்பேர்கள் அதிகமாயிருக்கும். இதைத் தாண்டு முபாயம் முன்கூறியபடியுள்ள சத்குரு பக்தி விஸ்வாசமும், வைராக்கியமும், பகவன்நாம சங்கீர்த்தனங்களேக்கொண்டும் அதிகப் பிரயத்தனமில்லாமல் மறுகரை தாண்டி ஜீவன் முக்தி யடையலாம். சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! இந்த உலகமானது அனேகவிதமான அண்டகோளமும், அநேகவிதமான பூதகோடிகளுமிருக்கிறது. ஆனுலு மிதுகளேச் சுவர்க்கம் பூமி பாதாளமாய் மூன்றுலகமாயும், அண்டசம், சுவேதசம், சராயுசம், உற்பிசம் இந்தப்படி நான்குவகைப் பூதகோடிகளாயு மிருக்கிறது, இதுகளிற் சிறந்தது பூமி, இந்தப் பூமியிலும் சிறந்தது ஜம்புத்தீவு. ஜம்புத்தீவு என்பது பாரதகண்டம். இதுவே புண்ணியக்ஷேத்திரம். இந்தப் புண்ணிய க்ஷேத்ரத்தில் புல்லாய்ப்பிறந்தாலும் புண்ணியம். முன் கூறிய நான்குவகைப் பூதங்களிற்சிரேஷ்டமானது மானிட ஜன்மம். அங்ஙன மப்படியிருக்க இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் வந்து மானிட ஜன்மமெடுப்பது அதி துர்லபம். இது

கிடைப்பதரிது. ஆனாலு மிப்படிக்கொத்த புண்ணிய க்ஷேத்திரத்தில் மானிடனாய் வந்து பிறந்தாலும், புண்ணியம் பாபம் சாமான்யம் இந்தப்படி மூன்றுவிதமான கர்மங்களைச்செய்துக்கொண்டு அடிக்கடி நரகம், சுவர்க்கம், நர ஜன்மமடைவது சுபாவீகம். ஆதலா லிந்தப் பாரதகண்டத்தில் மானிட ஜன்மமும் கிடைப்பதரிது. அதவா அப்படிக் கிடைத்தாலும் நரகத்திலும் சுவர்க்கத்திலு மலைவதே சுபாவீகம். அங்ஙனம் எப்படியெனில் அகாதமான ஜலத்தில் ஒருவன் தப்பி விழுந்துவிட்டால் அவனுக்கு அந்த ஜலமே சகாயமாயும், கொலைபாளியாயு மிருக்கும். அதெப்படியெனில் ஜலத்தில் விழுந்தவன் கீழே பூமிவரைபோய் உடனே மேல்வருவான். உடனே கீழேபோவான். இந்தப்படி மூன்றுதரம் போய் வந்து சாகிறது சுபாவீகம். எப்படியெனில், இந்தப் பாரத கண்டமான புண்ணிய பூமியிலிருந்தும் புண்ணியம்செய்தவர்க்குச் சுவர்க்கமும், பாபம் செய்தவர்க்கு நரகம். அந்தப் பாபத்தினாலே அனேககோடி ஜன்மம் நரக மனுபவித்துப் புல்லாய்ப், புழுவாய், மிருகமாய்ப் பலவிதமான ஜன்மமெடுத்து மானிடனாய்ப் பாபஞ்செய்து மறுபடியும் நரகத்திலே விழுகிறது. நல்லது செய்பவனுக்கு நல்லநரனாய், இந்திரனாய், பிரம்மாவாய், விஷ்ணுவாய், சிவனாய், மேல்லோகம் போகிறது சுபாவீகம். இப்படிப்புண்ணிய பாபமிரண்டும் மேலும் கீழும் நடுமத்திய பாகமும் விட்டு மோக்ஷமடைவதே க்ஷேமமென்று அறிந்த மகாத்துமாக்களுக்குச் சொல்லுகிறேன் கேளும். புண்ணிய பாபமிரண்டும் நரக சுவர்க்க மிரண்டுமுள்ளசங்கற்பத்தைவிட்டு என்றைக்குமுள்ள பிரம்மானந்தமடையவேண்டுமென்றும் நினைந்த அப்படிக்கொத்த குருவையடுத்து நான் என் பொருள், என் மனைவி, மக்கள் இப்படிக்கொற்ற ஈஷணாத்திரயங்களெல்லாம் நமக்குத் துக்கமென்று நினைத்து அந்தக்குருவின் திருவடியில் அர்ப்பணஞ்

செய்துத் தூரத்தள்ளிவிட்டு ஆனந்தமாயிருக்கும். சத்திய மாயும் நித்தியமாயுமுள்ள சற்குருவைப் பாரும். மனம் நிர்மலமாகும். அப்போது நித்தியானந்த கைவல்லிய பத மடையலாம். சந்தேகம் வேண்டாம். இப்படி யிருப்ப தாதலால் நிஷ்காம புத்தியாய்ப் புண்ணிய பாப மிரண்டை யும் விட்டு சற்புத்தியோடுங் கூடி ஒரு சற்குருவை யடுத்துப் புண்ணிய பாப மிரண்டையும் அந்தச் சற்குரு விடத்தில் சமர்ப்பணம்பண்ணி சற்குருபக்தியோடிருப்பதே ஞேயம். இதே சத்தியக்ஞானம். இதனல் நிர்மல சகித மாயும், நித்தியானந்தமாயுமுள்ள கைவல்லியபத மடைய லாம். சந்தேகம் வேண்டாம்.

மனம் இதைக்கேட்டு பரிசுத்தமாய் நித்திய பரிபூரணு னந்த சமுத்திரத்தில் மூழ்கிப் பரமானந்த பக்தியாய் அறிவை வணங்கி, ஓ ஆண்டவனே! தேவரீர் திருவருளால் உண்மையிலே யிதுவென்று உணர்ந்தேன். எல்லாம் பரிபூர ணனந்தப் பொருளே நாமென்றறிந்தேன். சந்தேகமெல் லாந் தீர்ந்து தெளிவடைந்தேன். ஆனலும், அடியேனு டைய சந்தேகமாவது ஆகாசம்போல் எங்கும் பரிபூரண மான பரமாத்மா ஏகமென்றும், அதைத்தவிர வேறே அணு வளவு மில்லை யென்றும், முன் கூறியது உண்மையிலே யிது வென்று மறிந்தேன். ஆனல் அநாதியான வாசனையோடு கூடிய ஜீவர்கள் அநேகவித பேதமாய் வேறாகப் பந்தப்படுவ தற்குக் காரண மென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! எங்கும் பரிபூரணமான பரமாத்மா வானதற்கு உற்பத்தி, நாசம், பந்தம், மோக்ஷம், விர்த்தி, க்ஷயங்கள் இதுகளொன்றுங் கிடையாதென்பது எதார்த்த க்ஞானிகளுடைய அபிப்பிராயம். ஆனலும் பரமாத்மா வேறே, ஜீவாத்மா வேறே, ஜீவனுக்குப் பந்த மோக்ஷ சுக

துக்காதிகள் சமஸ்தமும் உண்மையாய்த் தோற்றுவது சுபாவிகம். ஆனாலும், அது உண்மையல்ல. மாயையால் ஆகந்துகமாய்த் தோற்றுவதாமென்றும் அது அப்படித் தோற்றுவது, அக்ஞானிகளுடைய மனதிற்குத் தோற்றமல்லாமல் எதார்த்தமல்ல வென்பதாம். எதார்த்த க்ஞானிகளுடைய அபிப்பிராயம் என்னவென்றால், மாயாப்பிரதிவிம்பிதமாய்ச் சிதாபாசனாயிருக்கும். ஜீவர்களுக்குப் பந்தமென்பது சொர்ப்பனம் போலவும், மோக்ஷமென்பது உணருவது போலவு மென்றறிக. ஜீவ பாவனையாவது மனமொன்று தான். மனதினுடைய ஆசா சங்கற்பமாம் பந்தமென்றறிக. அதாவது மனம் ஆத்மாவைப் பின்னிட்டு அனாத்ம சங்கற்பமடைவதாம் பந்த மென்றும், அந்த அனாத்ம சங்கற்பம் விட்டு ஆத்ம சங்கற்ப மடைவதாம் மோக்ஷமென்றும், சுருதிப் பிரமாணங்களிலும் பெரியோர்களாலும் கூறப்படுகிறது.

மனம் ஓ சுவாமி! ஜீவாத்மா வேறே, பரமாத்மாவேறே, இந்தப்படி வேறுவேறாகத்தோற்றுவதற்குக் காரணமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அப்படி வேறு வேறாகத் தோற்றுவது மனதினுடைய அக்ஞானமாம். அதாவது பூரண ஆத்மாவிலிருந்தும், ஜீவர்கள் வேறாகத்தோற்றுவது எப்படி என்றால், ஏகமான சூரியபகவானை ஜலமிருந்தவிடமெல்லாம் பார்த்தால் அநேக சூரியபகவானைக் கண்டதுபோல, ஏகமாம். ஆத்மாவை மூன்று விதமான மாயா குணமாயும், அநேகவித பேதமாயுமுள்ள ஜலத்தில் அநேகம் ஆத்மாவைக் கண்டது சரிதான். அதாவது முன்கூறிய முக்குணங்களில் சாத்விகமான குணம் தெளிவுடைய ஜலம்போல் அந்தத் தெளிவுடைய ஜலத்திற்கண்ட பூரணப் பிரகாசமாம்

திருமூர்த்திகளுமென்றறிக. இரண்டாவது ராஜஸகுணம் கலக்கமான ஜலம்போல் அந்தக் கலக்கமான ஜலத்திற்கண்ட பூரணப் பிரகாசமாம் ஜீவர்களென் றறிக. மூன்ருவது தாமசகுணம். அதிகக் கலக்கமாய்ச் சேராயிருந்த ஜலத்திற்கண்ட பூரணப் பிரகாசமாம். சரீராதிப் பிரபஞ்ச வஸ்துக்கள். இதனுடைய உண்மை. அன்புற்றுப் பார்த்தால் ஆகாசத்திற்கண்ட சூரியனைத்தவிர ஜலத்திற் சூரியன் கிடையாதென்பது நிச்சயமாம். ஆனாலும் ஜலத்திற்குள் கண்ட சூரியனைப் பார்த்தால் அதற்குக் காரணம் ஆகாசத்திற் கண்ட சூரியன் உண்மையாமென் றறிவதுபோல் மனதிற்குள்ளே சாயல்போலிருந்த ஆத்மாவைப் பார்த்தால் அதற்குக் காரணம் பரிபூரணமாயுள்ள பரமாத்மாவென் றறியலாம். சந்தேகம் வேண்டாம். ஜலமில்லாத பாழான பூமியில் சூரியனுடைய பிரதிபிம்பம் கிடையாததுபோல், திரிகுணமயமான மனக்கலக்கமற்று நிர்மலமான யிடத்தில் ஜீவனேது? ஜடமேது? ஜகத்தேது? பூரண வஸ்துவானதற்கு ஒரு பேதமும், கூடுதலும், குறைவும் ஒரு காலத்திலும் நாசமுங் கிடையாது. இந்த அனுபவம் பரம தேசிகர்தன் திருவுளமாம். மஹா வாக்யமான தத்வமசியின் தாற்பரியமறிந்தவாளுக்குச் சந்தேகம் அணுவளவும் கிடையாது.

ஓ மனமே கேள்! சராசரத்தையும் ஒரு குருவாகக் கண்டவன்தான் தன்னைக் கண்டவன். சராசரத்தையுங் கும்பிட்டவன்தான் தன்னைக் கும்பிட்டவன். சராசரத்தையும் பரிபூரணமாகக்கண்டவனுக்கு நானென்கிற அகங்காரம் அணுவளவும் கிடையாதென்பது நிச்சயம்.

மனம் ஓ சுவாமி! அகங்காரிகள் இன்னாரென அருள் செய்யவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரிகள் யாரென்றால் மூன்றவஸ்தையோடு கூடிய ஜீவாத்மா ஒன்றேயாம் வேறில்லை. ஆதலால் மூன்றவஸ்தையும் தள்ளிவிட்டால் ஜீவன் முக்தனும் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம். மூன்றவஸ்தையின் விபரம்:—சாக்ர, சொர்ப்பன, சுழுப்தி, இதுகள் மூன்றுமாம். அதாவது சாத்வீகம், ராஜசம், தாமசம் இம் மூன்று குணங்களோடு கூடியும் இரவும் பகலுமாயிருக்கும். இதில் சாக்ரம், சொர்ப்பனம் இரண் டவஸ்தையிலும் மூன்று மூன்றவஸ்தையோடு கூடியிருக்கும். இதில் சுழுப்தியில் பேதங் கிடையாது. அதாவது சாக்ரா, சாக்ரம், சாக்ர, சொர்ப்பனம், சாக்ர, சுழுப்தி, சொர்ப்பன சாக்ரம், சொர்ப்பன சொர்ப்பனம், சொர்ப்பன சுழுப்தி, தனியே சுழுப்தி யொன்று ஆக இந்த ஏழு அவஸ்தையும் ஜீவ சிருஷ்டியாமென்றும், அது மன சங்கற்பமாமென்றும், இதுவே ஜீவனுக்குப் பந்தமாமென்றும், இதற்கு மூலகாரணம் மன சங்கற்பமாமென்றும், மன சங்கற்பமற்றால் மூன்றவஸ்தையும் விட்டு ஜீவன் முக்தனுமென்றும், சுருதிப் பிரமாணங்களிலும் மஹான்களும், கூறியிருக்கிறது உண்மை; உண்மை சொல்லாத சிஷ்யனுக்கு உபதேசமாகா. உண்மை சொன்னால் கேளாத சிஷ்யனுக்கு உபதேச மெதற்கு? உண்மைவிளங்காத சிஷ்யனுக்கு உபதேசமானாலும் உண்மை நிலை யடையான். வாக்கு சத்தியமானால் மனம் உண்மை நிலை யடையலாம்; சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓ சுவாமி! மேற்கூறியபடி ஜீவனுக்குப் பந்தகேதுவான ஏழவஸ்தையும் விட்டுவிடுவது எப்படி யென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! முன்கூறிய ஏழவஸ்தையிலும் பிரதானம், சாக்ரா அவஸ்தை, அந்தச் சாக்ரா அவஸ்தையி

லுள்ள மூன்று அவஸ்தையும், நாசமானல் முன்கூறிய ஏழவஸ்தையும் நசித்துப்போகும்.

மனம் ஓ சுவாமி! இந்த மூன்று அவஸ்தையும் விட்டு விடும் உபாய மெப்படி? அதை யருள்செய்ய வேண்டு மென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனதைச் சாக்ரா, சாக்ரமான அவஸ்தையில் ஸ்திரமாய் நிறுத்திக் கடவுளை உபாசித்தால் மற்ற இரண்டவஸ்தையும் அடியோடு நசிக்கும். சாக்ரா சாக்ர மடைவ தெப்படி யென்ருல் நிஷ்காமியாய் சித்தம் பரிசுத்தமாக்கி ஆத்மானுத்மா விசாரணை செய்வதாம். அதாவது வாக்கு மனக் காயங்களினுலும், ஆத்மாவைப் பக்திசெய்வதாம். நானுவிதத்திலுங் கடவுளின் திருவடித் தியானஞ் செய்வதுதான் சாக்ரா சாக்ரம். இனி சாக்ர சொர்ப்பனமாவது, நானுப்பிரகாரமுள்ள போகத்தில் இச்சையும், காம சங்கற்பமுமாம். சாக்ர சுழுப்தியாவது, முன் கூறிய இரண்டவஸ்தையும் மறந்து, மனச் சங்கற்பமற்றது போல் அரைக்கால் நிமிஷம் மயக்கமாயிருந்ததாம். முன் கூறிய சாக்ரா சாக்ரமாவது துரிய நிலையடைவதாம். அதாவது முக்குணத்திற்கும் மூன்றவஸ்தைகளுக்கும் முக்கரணங்களுக்கும், முத்தொழில்களுக்கும் மும்மலங்களுக்கும், மும்மூர்த்திகளுக்கும், அதீதமாயும், பரிசுத்தமாயும் ஆகாசம்போல் பரிபூரணமாயுமுள்ளதாம் துரியநிலை. மனமடங்கி ஜீவபாவனை விட்டுத் துரியநிலை யடைவதாம். அனர்த்த நிவர்த்தி, அனர்த்த நிவர்த்தியே, ஆனந்தப்பிராப்தி, ஆனந்தத்திற் கதீதமே துரியாதீதம். அதாவது அதிசாக்ரா சாக்ரமென்றறிக. எங்கும் பரிபூரணமாம். ஆகாசத்தில் சர்வ பூதங்களும் கலந்திருந்தும், பூரணுகாசத்திற்குப் பற்றில்லாததுபோல் எங்கும் பரிபூரணமான பரமாத்மாவுக்குள் சர்வ பூதங்களும் பூதங்களுக்குள் பரமாத்மாவும் பூரண

மாய்ப் பற்றற்றிருக்கும். மலமற்ற ஆகாசம்போல் எங்கும் நிறைந்த பரமாத்மா ஏகமா யெதற்கும் இடங்கொடுத்தும், எதிலும் பற்றற்றதாயும், பரமானந்த பரம ஜோதியாயு முள்ள பரமாத்மா நித்திய பரிபூரணமாம் என்பது சத்தியம். நாக்கினால் ஒரு பொய்யும் சொல்லாம லிருந்த தினமே புண்ணிய தினம். சரீரத்தினால் ஒரு பொய்யும் செய்யாமலிருந்தால் அது புண்ணிய க்ஷேத்திரமாம். மனதினால் ஒரு பொய்யும் நினையாமலிருந்தால் அது சுவர்க்கத்திலும் மேலாம் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம். கர்மத்தில் சிரத்தை யுடையவாளுக்கு முக்தி வெகுதூரமாம் என்றும் கர்ம சங்கற்பம் விட்டு ஸ்ரீ சற்குரு சங்கற்பமானால் ஜீவன்முக்தி சமீபமாமென்றும் பெரியவாள் சம்மதம்.

மனம் ஓ சுவாமி! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய மஹா வாக்கிய சாரோபதேசங்களைக் கேட்டு அடியேனுடைய சந்தேகமெல்லாந் தீர்ந்துவிட்டது. என்னுடைய சம்சாரமும் தூரத் தள்ளி சம்சாரத்திற் கேதுவான ஆடு, மாடு, மனைவி, மக்கள், வீடு முதலான தன தான்யாதிகளும், எல்லாம் கைவிட்டேன். ஆனாலும் சரீரமொன்றிருக்கிறது. அதானது நானெனதென்கிற பாவனையோடு கூடிய மனமொன்றிருக்கிறது. இதுகளையும் விட்டுவிடு முபாயம் யாது? இதின் சொரூபமாவ தெது வென்று கேட்க அறிவு கூறியது

ஓ மனமே கேள்! நானெனதென்கிற அகங்கார அகமமதையோடு கூடிய மனதின் சொரூபத்தையும், அதன் தொழிலையும் பிரம்மாதி தேவர்களானாலும், ஜனகாதி யோகிகளானாலும், சொல்லத் தகுந்ததும் காணக்கூடியதுமல்ல: அதைக் கண்டுபிடித்து நாசமாக்குவது மகாப் பிரயாசம். ஆனாலும் சுவர்க்கம் பூமி பாதாளம் இம் மூவுலகமும் அதனுட் சொரூபமும் பார்த்துக் கண்டால் மனதையும், அகங்

காரத்தையும் பார்க்கலாம். மனதையும் அகங்காரத்தையும் பார்த்துக் கண்டால் மூவுலகத்தையும் பார்க்கலாம் சந்தேகமில்லை. அதாவது சர்வப் பிராணிகளுக்கும் மனம் ஒன்றுதான். அது பூர்வத்தில் ஏகமாயும், ஆகாசம்போல் பரிபூரணமாயும், பரிசுத்த நிர்மலமாயுமுள்ளதாம் மனமென்றறிக. அங்ஙனம் ஏகமாயும், பரிசுத்தமாயுமுள்ள மனம் அநேக நாம ரூபங்களாயும், அநேகவித பேதமாயுந் தோற்றுவதற்குக் காரண மென்னவெனில், மூன்று மாயாகுண பேதத்தால் தோன்றுவதாம். ஆதலால் இந்த மூன்று குணந்தான் மனதை ஒருவருக்கும் பார்க்கவொட்டாமல் மறைக்கப்பட்டதென்றறிக. அந்த மூன்று குணமானது சாந்த, கோர, மூடமான, சாத்வீக, ராஜஸ, தாமஸமாயும், உத்தம, மத்திம, அதமமாயும், சிருஷ்டி ஸ்திதி சங்காரமாயும், சுக துக்க மிச்சர பேதானுபவமாயும், சுவர்க்கம் பூமி பாதாளமாயும், சாக்ர, சொர்ப்பன, சுழுப்தி இப்மூன்றவஸ்தையோடு கூடியும், பந்த மோக்ஷ மிரண்டுக்கும் மத்தியபாகமாயு மிருக்கிற அகங்காரத்தையும் மனதையும், ஒருவருக்கும் பார்க்கக்கூடியதல்லவென்று முன்கூறியதாற்பரியம்.

மனம் ஓ சுவாமி! இப்படிக்கொற்ற அகங்காரத்தையும், மனதையும், பார்க்கும்பொருட்டு மார்க்கமுண்டாவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனதின் தொழிலற்றால் மனம் பரிசுத்தமடையும். மனம் பரிசுத்தமடைந்தால் மனதை மனதிற்குப் பார்க்கக்கூடும். சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓ சுவாமி! மனதின் தொழிலாவதெதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனதின் தொழிலாவ தெதுவென்றால், சிருஷ்டி ஸ்திதி சங்காரம் மூன்றுமாம். அதாவது

முன் கூறிய முக்குணங்களில் ராஜச குணமானது மனதின் மத்திய பாகத்திலும், சாத்வீக குணமானது அதன் வலப் பாகத்திலும், தாமச குணமானது, மனதினுடைய இடப் பாகத்திலு மிருக்கிறது. ஆனாலும் அந்த மனதின் மத்திய பாகத்திலிருந்த ராஜச குணமானதை ஸ்திரமாய் நிறுத்திக் கொண்டு அந்த ராஜஸ குணம் மேன்மேலும் விர்த்தியாகும் பொருட்டுக் காமியார்த்தமான கர்மங்களில் அதிகச் சிரத்தையோடு கூடியும் கர்மஞ்செய்வதாதலால் அந்த ராஜச குணமானது மேன்மேலும் விர்த்தியாகிறது. அதாவது அநேகவித பேதமாயும், அநேக நாம ரூபங்களைச் சங்கற்பஞ் செய்வதும், ராஜச குணவிர்த்தி சுபாவீகமென்றறிக. இந்தப்படி அநேக கோடி சற்பகாலமானாலும் குலால சக்கரம் போல் சுற்றிச் சுற்றி சிருஷ்டி ஸ்திதி சங்காரமான கடலில் முழுகி இந்தப்படி அடிக்கடி ஆவதும் அழிவதும் ஆதியந்த மில்லை. இதுவே ராஜசகுணம். இனி சாத்வீக குணமானது ராஜச குணத்தின் வலப் பாகத்திலிருந்துக்கொண்டு ராஜச குணத்தினால் சிருஷ்டிக்கப்பட்டவைகளை யெல்லாம் ரக்ஷை செய்வது சாத்வீக குண விர்த்தியின் தொழிலாமென்றறிக. மூன்றாவது ராஜச குணத்தின் இட பாகத்திலிருந்த தாமச குணமானது முன்கூறிய சிருஷ்டி ஸ்திதி, இதுகளிரண்டையும் சங்காரம் பண்ணுவதாம், தாமச குணத்தின் தொழி லென்றறிக. இந்தப்படி குணம் மூன்றும் மனதிற்குள் கலந்திருந்து அடிக்கடி சிருஷ்டி ஸ்திதி சங்காரங்களைச் செய்தும், அதனால் ஜீவன் ஆசாபாசத்திற் கட்டுப்பட்டு அநேகவித சங்கற்ப விகற்ப மடைவதும் மனதின் தொழிலா மென்றறிக. இந்தப்படியுள்ள முத்தொழிலும் விட்டால் மனம் பரிசுத்த நிர்மலமாம். அதாவது குணம் மூன்று மடங்கிவிட்டால் மனதின் தொழிலறும். மனதின் தொழி லற்றால் அது பரிசுத்த நிர்மலமாமென்றறிக. ஆனாலும்

இந்த மூன்று குணத்தையு மடக்குவது மஹாப் பிரயாசமா மென்றும், அதைத் திருமூர்த்திகளாலும் அசாத்தியமா மென்றறிக. ஆனாலும் இதுகளில் ராஜசகுணத்தை முன்னே விலக்கிவிட்டால் மற்றிரண்டு குணமும் தானே யடங்கும். விதியை வெல்லுவது அசாத்தியம். ஆனாலு மிந்த உலகத் தின்கண் சர்வப் பிராணிகளுக்கும் சதா சம்சார துக்கத்திற் கேதுவாயுமிருப்பது ராஜச குணவிர்த்தி யொன்றுதான். சந்தேகம் வேண்டாம். ராஜசகுண மில்லாவிட்டால் உற் பத்தி யேது? உற்பத்தியில்லாவிட்டால் உலகமேது? உலக மில்லாவிட்டால் பந்தமேது? மோக்ஷமேது? சுகதுக்காதி நரக சுவர்க்கமேது? ஆதலால் ராஜஸகுண விர்த்தியால் சிருஷ்டிக்கப்பட்டதுகளாம்; நாமரூபாதி சமஸ்தப் பிரபஞ்ச வஸ்துக்களுமென்றறிக. அதாவது ராஜஸ குணத்திற் பிறந்த ஜீவர்களெல்லாம் ராஜச குணத்திலே வளர்ந்து ராஜச குணத்திலே இருந்து அந்த ராஜசகுணம் மேன்மேலும் விர்த்தியாகும்பொருட்டுப் பேராசையோடுகூடிக் காமியார்த் தமாயுள்ள கர்மங்களை அதிக சிரத்தையோடுங்கூடி அடிக் கடி செய்து பழகிவருவதாதலால் அந்த ராஜசகுணம் மேன் மேலும் விர்த்தியாய்க்கொண்டே இருக்கும். அந்த ராஜச குண விர்த்தியினால் விளைவதெல்லாம் ராகத் துவேஷாதி சம்சார பலன்களாம். அதனால் மஹா மோகமடைந்து கொடிய பாபத்திற்கேதுவான கொலை களவுகள் காமம் குரு நிந்தை முதலான பஞ்ச பாதகர்களாய் ஸ்திரீபோகாதி விஷயங்களிற் பேராசை கொண்டு சதா துக்கிகளாயிருக் கிறது. அது அப்படியிருக்க, அந்தப் போக சுசத்திற்கு ஏதா னும் விரோதம் நேரிட்டால் தன்னிடபாகத்திலிருந்த தாம சகுணத்தை வரவழைக்கும். தாமச குணம் மிகுதியானால் மற்றிரண்டு குணத்தையும் சங்கரிக்கும். அப்போது தாமச குணமானது அமாவாசையும் இராத்திரியும் மேகங்களும்

கூடி நிர்மலமாயிருந்த ஆகாசத்தில் இருள் தோன்றியது போல மனம் தாமச அந்தகாரமாய் வந்துவிடும். அதனால் கர்வம், குரோதம், அகங்காரம் இத்தியாதி குணங்கள் மேலிட்டுக் கொடுங் கோபிகளாய்ப் புத்தி சூன்யராய் சம்சார சாகரத்தில் வீழ்ந்து துக்கிகளாய் மேன்மேலும் ஜனன மரணாதி துன்பங்களுக்கும், ரௌரவாதி நரகங்களுக்கும் ஏதுவான சம்சார சாகரத்தை யடைவார்கள். அற்ப சுகமாயும், அற்ப ஆயுசாயுமுள்ள தேகேந்திரியாதிப் போக சுகத்திற் பேராசை கொள்வதுதான் ராஜச குண விர்த்தியின் சுபாவீகமென்றறிக. அந்த ராஜச குணவிர்த்திகளுக்குப் பங்காளிகளாயும், பகையாளிகளாயும் பதின்மூன்று ராக்ஷதாள் வந்தடையும். அதானது ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம், ஈரிஷை. அசூயை, டம்பம், தெற்பம், அகங்காரம் இவை பதின்மூன்றுமா மென்றறிக. இதுகளில் ராகத்தின் சொரூபமாவது பெண்களிடத்திலுள்ள அன்பு. அதாவது மாதர் போகத்தில் இச்சை கொள்வதாம் அந்த இச்சையை யடையாமற்போனால் அதற்கு விரோதம் செய்தவாளிடத்தில் துவேஷமடைந்து ராவணாகாரமாய் வந்துவிடும். அதனால் காமமும் குரோதமும் மேலிடும். அந்தக் குரோத நிமித்தம் லோபமும், மோகமும் மேலிடும். அந்த மோக நிமித்தம் விட்டில் பூச்சியானது தீபத்தைப் பார்த்து இது நல்ல பழமாமென்று நினைத்து ஆசையை யடைந்து அந்தத் தீபத்திலே வீழ்ந்து நாசமடைவதுபோல் பொம்மையைப் போல் மாயா ரூபமான ஸ்திரீகளைக்கண்டு மோகித்து அந்தக் காமாக்கினியில் வீழ்ந்து நாசமடைவார்கள். அதாவது மோக்ஷத்திற் கிச்சையுடையவாள் முதவாலது ஸ்திரீகளோடு கூடியுள்ள சிற்றின்பமான போகத்தி லாசையும், ராஜச குணத்தையும் அடியோடே தூரத் தள்ளிவிட்டு

கடவுளை உபாசித்தால் சுகஜீவிகளாயும் சிரஞ்சீவிகளாயும் பிரம்மானந்தமாயு மிருக்கலாம். ஆதலால் ராஜஸ குணம் அடியோடே நசித்தால் முன் கூறிய ராகத் துவேஷாதிகள் வந்தடைவதற் கிடமில்லை. ஆனாலு மிப்படிக்கொத்த மஹா பலமுடைய ராஜச குணத்தைப் போக்கடித்தல் பிர்மாதி திருமூர்த்திகளுக்கும் அசாத்தியமா மென்று முன் கூறி யிருக்கிறது. அதாவது சுருதி ஸ்மிருதி வேதசாஸ்திர புராணாதிகாசங்களைக் கற்றுணர்ந்தாலும் இலக்ஷங் காவியங் களை முறையாகப் படித்தாலும், அக்ஷரங்களுடைய இலக்ஷ ணங்களை நன்குய்த் தரித்தாலும். அன்ன தானம், வஸ்திர தானம், சுவர்னதானம், பூதானம், கோதானம், கன்னிகா தானம் இந்தப்படியுள்ள மஹா பஞ்சதானங்களைச் செய் தாலும் மற்றும் அநேக கோடி எக்ஞாதி கருமங்களைச் செய்தாலும், தலைகீழாய்க் கோடி கற்பகாலம் கொடிய தவங்களைச் செய்தாலும், பஞ்சாக்கினி மத்தியிலிருந்தா லும், திருமூர்த்திகளை உபாசித்தாலும், இன்னும் அநேக சிலாக்கியமான கர்மங்களைச் செய்தாலும், ராஜச குணமா னது அணுவளவாகிலும் நசியாதென்பது நிச்சயம். அதுவு மல்லாமல் இதுகளினால் ராஜச குணமானது மென்மேலும் வளரும். ராஜசகுண மிருந்தமட்டும் உலகவாசனைவிடா. உலகவாசனை இருந்தமட்டும் ஜனன மரணாதி சம்சார துன் பம் தீரா. ஆதலா லிந்த ராஜச குணத்தை அடியோடே தூரத் தள்ளிவிட்டு சாந்தமாய் நிர்விஷயானந்த சுகமனுப விக்கும்பொருட்டு சன்மார்க்கமானது முதலாவது விடைய வைராக்கியத்துடன் நிராசையாய்ப் பிரம்மக்ஞானம் குரு பக்தியுமுடைய ஒரு பரமாசாரியரை அடுத்து அதிக அன் புடன் பரம பக்தி விஸ்வாசமாய் அதிக சிரத்தையோடுங் கூடி பாதுகாத்துப் பணிவிடைசெய்து பழகிவருவதும், அந்தத் திருவடியைத் தியானிப்பதும், பூசிப்பதும், சர்வதா

குரு திருநாம சங்கீர்த்தனங்களைப் படிப்பதும், இந்தப்படி சதா பழகிவருவதானால் மனம் பரிசுத்த நிலையை அடைந்து ராஜச குண கர்ம வாசனை அடியோடே நசிக்கும். ராஜச குண கர்மவாசனை இல்லாவிட்டால் தாமச சாத்வீகமும் தானே நசித்துவிடும். இந்தப்படி மூன்று குணங்களு மடங்கிவிட்டால் மனம் பரிசுத்த நிர்மலமாய், ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெறலாம். ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றால் பரமானந்த பதமடையலாம். சந்தேகம் வேண்டாம். இந்தப்படியெல்லாம் அநுஷ்டானஞ் செய்து பழகி வருபவர்களுக்கு இதைத்தவிர வேறொரு கர்மமுஞ் செய்யவேண்டிய தவசியமில்லை என்பது நிச்சயம். அதாவது சர்வ சங்க பரித்தியாகமே ராஜசகுண நிவர்த்தி யென்றும், சாதுக்களின் சம்சர்க்கமே பரிசுத்தமான சாந்தகுண விர்த்தி யென்றும், பரிசுத்தமான சாந்தகுண விர்த்தியடைந்தால் நிர்க்குணத் தியானஞ் செய்யக்கூடுமென்றும், நிர்க்குணத் தியானஞ் செய்து பழகிவருவதானால் நிர்மலக்ஞான மடையலாமென்றும், நிர்மலக் கியானமடைந்தால் பராபரமாயும், பரிபூரணானந்தமாயுமுள்ள பரமாத்மாவினிடத்தில் ஐக்கியமாய் நித்யானந்த கைவல்லிய பதமடையலா மென்பது இதில் முன்கூறிய தாத்பரியம் ஆகையால் நீரும் பாலும் சரியாய்க் கலந்ததைப்போல் ஜீவன் பரமாத்மாவி லிரண்டரக் கலந்தால் பரமாத்மாவாம். அது ஏகமாமென்றறிக.

மனம் ஓ சுவாமி! ஜீவன் வேறு யான் வேறாகத் தோற்றுவதற்குக் காரணம் மனமொன்றே யாம். சந்தேகம் வேண்டாம். அந்த அசுத்த மனம் சுத்தமானால் ஜடமேது? ஜகத்தேது? பந்தமேது? மோக்ஷமேது? ஜீவபரபேதமேது? இதுகளெல்லாம் அசுத்தமாயையால் தோன்றுவதாமென்றும் அசுத்தமாயையை நீக்கிப் பரமானந்த பதமடையும் பொருட்டுச் சன்மார்க்கமாம். இதன் முன்கூறிய தாற்

பரியம். இதைத் தவிர பிறவிக் குருடனுக்கு நல்வழிகாட்டி னுலும் தெரியாதென்பது நிச்சயம். பிறவிக்குருடன் என்பது தாமசகுணமுடையவன். ஆதலால் பிறவிக்குருடை மாற்றுவதற்கு மருந்து கிடையாது. ராஜசகுணமுடைய வராயென்ருல் வெங்குருடாளாமென்றறிக. அந்த வெங் குருடைப் போக்குவதற்கு நல்ல மருந்திருக்கிறது.

மனம் ஓ சுவாமி! அம்மருந்தை அடியேனுக்கு அருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ராஜச குணவிர்த்தியினுல் வந்த மாயாமோகாந்தகாரமான திமிரம் நீங்கி இரண்டுகண்ணும் பரிசுத்தமாய்ப் பார்க்கும் பொருட்டு மருந்தானது யாதெனில் விக்ஞானமென்ற குளிகை. அக்குளிகையைக் கண்ணிலே எழுதப்பட்டால் அஞ்ஞானமென்கிற திமிரம் நீங்கி ஞானம் ஆகாசம்போல் விளங்கி எங்கும் வெட்ட வெளியாயும், ஸ்வயம் பிரகாசமாயும், ஆகாசமும், பூமியும் பார்க்கலாம். அந்த ஆகாசத்திலும் பூமியிலுமுள்ள சர்வ வஸ்துக்களையும் பார்க்கலாம்.

மனம் ஓ சுவாமி! இம்மருந்தை உபயோகித்தால் பத்தியமேதாவதுண்டா? அப்படியிருந்தால் அதை அருள் செய்யவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ரோகிகள் மருந்து உபயோகிக்கும் போது பத்தியமிருக்கவேண்டுவதவசியந்தான். சில நாள் வைத்தியர் சொற்படி பத்தியம் கிரமமாக இருந்தால் வியாதி சுகமாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. பத்தியமாவது:— உப்பு, காறம், புளிப்பு முதலான தாமச, ராஜச, ரஸவர்க் கங்களைச் சேர்க்காமல் சாத்வீகமாம். பால் முதலான நான்கு சாதனங்களைச் சேர்க்கவேண்டும். நான்கு சாதனங்

களாவது :—வைராக்கியம், விவேகம், இயம, நியம, சமத மாதி, முமுக்ஷுத்துவம் நான்கு சாதனங்களாமென்றறிக. இந்தப்படி பத்தியமிருந்து பழகாதபேர்களுக்கு மருந்து கொடுக்கக் கூடாது. ஏனென்றால் முன் கூறிய நான்கு சாதன பத்தியமிருந்து பழகாதபேர்களுக்கு விவேகாநந்தா மிர்தமாம். மருந்து கொடுத்தால் அவர்க ளதைக் கையில் வாங்கிக் கீழே போட்டாலும் போடும். அல்லது அவர்க ளதைப் பத்தியமில்லாமற் சாப்பிட்டாலும் அந்த வியாதி அதிகமாம். ஆதலால் ரோகத்தை நாடிபார்த்து நிதானமாய் மருந்து கொடுப்பவர்களே நல்ல பரிபக்குவமுடைய வைத்தி யர்களென்றும் உலகர் சம்மதம். பவரோகத்தின் நிதான மறியாமலும், அதிகாரத்துக்குத் தகுந்தபடி யல்லாமலும், உபதேசஞ்செய்யும் குருக்கள்மாரும் முன்கூறிய வைத்தியர் களைப்போல் கொலையாளிகளாமென்றறிக. அதாவது பவ ரோகம் சாந்தமாகும்பொருட்டு அதிகாரத்திற்குத் தகுந்த படி உபதேசஞ்செய்பவர்களே ஜீவகாருண்ணியமுடைய சற் குருக்களென்று மறிக. பரமாணுவாயும், பரம்பொருளா யும், பரமானந்த பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவில் மன தை யடக்கி ஐக்கியமாயிருப்பதே முன் கூறிய பவரோக சாந்தமென்றறிக.

ஓ மனமே கேள்! மனதை யடக்கி அந்த மனதினு லறிந்த பொருளே பொருள். வேறொரு பொருளும் பொரு ளல்ல வென்றும், மஹான்களுடைய சம்மதம். ஐம்புலன் களும் மனதுங்கூடி யறிவதெல்லாம் தேகாதிப் பிரபஞ்ச வஸ்துக்களாமென்றும், ஐம்புலன்களும், மனதும் அடக்கிப் பார்த்தால் அது நிர்மல பரப்பிரம்மமாமென்றும் மேற்கூறிய தாத்பரியம். சர்வப் பிராணிகட்கும் சரீரத்திற் கண் மூன்று யிருக்கிறது. அதாவது ஸ்தூலமாயும், சூக்ஷுமமாயும் காரணமாயு மிருக்கிறது. இதுகளில் ஸ்தூலமாவது மாமி

சக் கண்ணும். அதினுற் காணப்பட்ட வஸ்துக்களேது வென்ருல் சூரியன், சந்திரன், அக்கினி, நக்ஷத்திர முதலான தேஜஸ்களையும் மற்றுமனேக நாம ரூபங்களான ஸ்தூலப் பிரபஞ்சத்தையும் பார்க்கக்கூடும். அந்த மாமிசக் கண்ணிற்குக் கண்ணுயும் சூக்ஷுமமாயுமிருப்பதே மனம் அந்த மனமானது ஆத்மாவினையுந் தேகாதிப் பிரபஞ்ச வஸ்துக்களையும் அறியப்படும். இதுகளிரண்டிற்குங் கண்ணுயும் காரணமாயு மிருப்பது ஆத்மா. அதாவது ஞானக்கண். இந்த ஞானக்கண்ணைத் திறந்து பார்த்தால் பூரணனந்த வஸ்துவைத்தவிர அணுவளவும் வேறில்லை யென்றுந்திடப் படும். அதாவது முன் கூறிய மூன்று கண்ணில் ஞானக்கண்ணுவது நெற்றிக் கண். அந்த நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்தால் ருத்திரமூர்த்தி சர்வ சங்காரகாலத்தில் நாம ரூபாதிப் பிரபஞ்ச வஸ்துக்களையெல்லாம் நெற்றிக் கண்ணைத் திறந்துபார்த்துச் சங்காரமாக்கி தற்சுயம் பரஞ்ஜோதியாய் விளங்குவதுபோல் ஞானக்கண்ணைத் திறந்து பார்த்தால் சர்வ யிந்திரியங்களும் நசித்து நித்தியாத்மா தானய் ஸ்வயம்பிரகாசமாய் விளங்குமென்றறிக நெற்றிக் கண்ணனது ஞானக்கண். அதாவது ஐம்புலன்களையும் மனதினுலடக்கி மனதை ஆத்மாவிலடக்கி, ஆத்மாவைப் பரமாத்மாவிலடக்கிப் பார்த்தால் ஆத்மாவைத் தவிர அணுவளவும் வேறே இல்லை யென்பது நிச்சயம்.

மனம் ஓ ஆண்டவனே! இப்படிக்கொத்த திடஞ்ஞானமடையும்பொருட்டு முக்கிய சாதன மெதுவென்றுகேட்க அறிவு கூறியது

ஓ மனமே கேள்! முக்கியமான சாதனம் ஸ்ரீ சற்குரு பக்தி. பக்திக்கு முக்கியமான சாதனம் சத்திய தர்மாதிகளும் வைராக்கிய விவேக இத்யாதி சத் விர்த்திகளுமா

மென்றறிக. பக்தி முற்றும்போது திருவருள்பெற்று ஞேயமாயுள்ள பரமாத்ம ஞானமடைந்து முக்தியுந் தானே கைவசமா மென்பதற்குச் சந்தேகமுண்டா? இப்படிக்கொத்த ஞான விக்ஞான மிரண்டும் ஸ்ரீ சற்குருவின் திருவருளா லறியப்படுவ தல்லாமல் வேறே யொரு கர்மத்தினுலும் அறியக்கூடுவதல்ல. ஆனாலும் நிஷ்காம சற்கர்மத்தினல் சித்த சுத்தி யுடையவாளுக்கு ஸ்ரீ சற்குரு தெரிசனங் கிடைக்குமல்லாமல் காமியகர்மிகளுக்குக் கிடைப்பதரிது. ஏனென்றால் ஸ்திரீ போகாதி வஸ்துக்களில் பேராசை இருந்தமட்டும் நிஷ்காமம் வாாது நிச்சயம். குருவே பரமாத்மா வென்கிற நிச்சயமும், பக்தி விஸ்வாசமு மில்லாதவர்களுக்கு அருளுங் கிடையாது. அருள்பெராமற்போனல் ஞானத்தின் கெந்தமானாலும் கிடையாதென்பது நிச்சயம். சந்தேகம் வேண்டாம். ஏனெனில் ஸ்ரீ சற்குருவினிடத்தில் பரமாத்ம விஸ்வாசமில்லாதவர்களுக்கு சராசரத்திலும் ஜீவகாருண்யமும் ஆத்ம விஸ்வாசமும் வராது. சராசரத்திலும் ஆத்ம விஸ்வாசமு மில்லாதவாளுக்குத் தன்னிடத்திலும் ஆத்ம விஸ்வாசமும் ஞானமும் வராது.

ஒ மனமே கேள்! மனதிற்குத் துக்கம் மனந்தானுண்டுபண்ணுகிறது வேறில்லை. ஆத்மாவானது எதுவென்றால் தேகாதிப் பிரபஞ்ச வஸ்துக்களான நாமரூபங்களொன்றும் ஆத்மாவல்ல. ஆத்மாவானது அரூபம், அதானது சச்சிதானந்தமாயும் ஏகமாயும் அத்துவிதமாயும் பரப்பிரம்மமாயும் நிர்ச்சலமாயும், பரிபூரணமாயும் சர்வப் பிராணிகளிடத்திலும் அந்தரியாமியாயும் அரூபமாயும் நிர்முக்தமாயும் சத்தா மாத்திரமாயும் இன்னபடி யிருக்குமென்று ஒருவருக்கும் அறியக் கூடாததாயும் நிர்மலமாயும் நிரஞ்சனமாயும் நிர்க்குணமாயும் நிர்விகாரமாயும் சம்மயமாயும், சாந்தமாயும், ஜனன மரணாதி சுக துக்கங்க ளில்லாததாயும், சர்வ

காரணமாயும், சர்வவியாபகமாயும், சர்வாத்மாவாயும், சர்வக்ஞராயும், சர்வேஸ்வரராயும், சர்வசாக்ஷியாயும், சர்வாதாரமாயும், சர்வதேவதாமயனும் நிர்விகாராத்மாவாயும் தேஜோமயனும் நிர்விரசனும் நித்தியமாயுமுள்ளதாம் ஆத்மாவென்றறிக. இப்படிக்கொத்த பரமாத்மாவைக் குருப்பிரசாத சித்தமாயும் அருள் பிரகாச சுத்தமாயும் ஆத்மானுத்ம விவேகத்தினு மறியக்கூடியதுமாமென்பது நின் சித்தத்தில் நிச்சயமாய் விஸ்வாசமடைந்தால் அவ்விடத்தில் பரமாத்ம சைதன்யம் விளங்கிப் பூரணாநந்தமடையலாம். சந்தேகம் வேண்டாம். ஏகாந்த குருபக்திகொண்டு சித்தம் நிராசையடையும். நிராசையைத் தவிர பரமானந்தபதங் கிடையாதென்பது நிச்சயம்.

மனம் ஓ ஆண்டவனே! ஏகாந்த குருபக்தி அடையும்மார்க்கம் அருளவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஏகாந்த குருபக்தி அடையும் மார்க்கமெதுவென்றால் மனதினுடைய விபசாரத்தை நீக்கிப் பல வழியில் அலையாமல் ஒரு வழியாக்கிக் குருவின் திருவடியில் நிறுத்திப் பாதுகாத்துப் பணிவிடைசெய்து பழகி வருவதானல் மனம் ஏகமாம். மனம் ஏகமானல் நேர்வழி தெரியும். மனம் நேர்வழி போனுல் ஏகாந்தமாய்ப் பிரம்மரந்திரந் தாண்டி மேலான நிர்மலப் பிரம்ம ஐக்கியமுந் தாண்டி அப்பாலுக்கப்பால் சிவ துரியமுங் கடந்து சிவானந்தமாய்ச் சிந்தையுமற்று சிற்பிரகாசமாயும் தற்பரமாயும் பரமானந்தமாயும் விளங்கும் ஜீவாத்மாவென்றறிக. ஜீவனே பரன், பரனே பரமாத்மா வேறே கிடையாது.

மனம் ஓ ஆண்டவனே! எல்லாம் விட்டு வைராக்கியத்துடன் சந்நியாசியாய் வந்தபின் மறுபடியும் சிலர் ஆசை வலையிற் சிக்கிக் கர்மக் கடலில் விழக் காரணமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஞானிகள் அனேகவிதம். அதாவது அவாளவாளிட பூர்வ வாசனைக்குத் தகுந்தபடி பிராரத்து வம் அனேகவிதமானாலும் நான்கு சாதனங்களு மடைந்து ஆணவாதி மும்மலங்களுமற்று ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்று நிராசையாயிருந்த மகான்களிட உள்ளத்தில் அந்த நிராசை நிறைந்திருக்க ஒரு சமயம் ஆசை வந்தடைந்தா லும் பிராரத்துவவசத்தால் சம்சாரத்திலிருந்து போக மனு பவித்தாலும் அவாளுக்கதினால் யாதொரு பந்தமுங்கிடையா தென்பது நிச்சயம். அதாவது நிராசை பரிபூரணமாய் நிறைந்திருக்குமிடத்தில் அனேக ஆசைக் கூட்டங்கள் வந் தாலும் அதற்குள்ளே நுழைவதற் கிடமில்லை என்பது நிச்சயம். ஆசையானது நரகம், அதாவது இருள்போல் மூதேவியாம் என்று மறிக. நிராசையானது சுவர்க்கத்தி லும் மிகுந்த சுகமுடையதாயும் பிரகாசம்போல் ஸ்ரீதேவி யாயும் இருக்கும். ஆதலால் ஆசையற்ற மஹான்களையடுத் தால் ஆசையற்று நிராசையடையலாம். ஆனாலும் ஆசை யுடைய அபிமானிகளுக்கு அது வெட்கக்கேடாக இருக் கும். ஏனென்றால் ஆசாபாச பந்தத்திற்கும் நரகத்திற்கு மேதுவான சம்சாரக்கூட்டங்களும் அதற்கடுத்த வர்ணாசிர மாதி குலாச்சார தர்மங்களும் விதிநிஷேதாதி குணதோஷ பேதங்களும் விட்டு அபேதமாய் நிர்வகங்காரியாய் அருட்பா லுண்ட மஹான்களையடுத்தால் சுஜன பந்துக்கள் சிநேகிதாள் மற்றும் உலகர் பலரும் பழிக்கும். பணக்காரன் சண்டாள னானாலும் சேவிக்கலாம். அதற்குக் குற்றமில்லை. ஆதலால் ஆசைக்கட்டறுப்பது அரிது. ஆசையையுடைய மாந்தர் கட்கு ஆதிமத்தியந்தம் துன்பம். நிராசையுடைய மஹான் கள் அதிக துர்ப்பலமானாலும் துராசையைவிட்டு ஆத்மாவி லன்புவைத்துப் பக்திசெய்தால் ஆசையெல்லாம் நசித்து நிராசை வந்தடையும். இருதயத்தின்கண் நிராசை வந்து

பரிபூரணனந்த மடைந்தால் அவ்விடத்தில் ஆசையானது அணுவளவானுலும் வந்தடையாதென்பது நிச்சயம். ஆதலால் ஆசையை மெள்ள மெள்ளப் பரமாத்மாவி லடக்கினுல் ஆசை யடங்கும். இதைத்தவிர ஆசையை யடக்கும் மார்க்கம் வேறில்லை. ஆசையை யடக்கி நிராசையாயிருந்த மஹான்களிடத்தில் ஆசைவந் தடுத்தாலும் நிராசைவந்ததைத் தடுக்கும். சந்தேகம் வேண்டாம். ஆகாசம்போல் பரிபூரணமாய் நிராசையாயிருந்த யிடத்தில் மேகம்போல் ஆசை வந்தடுத்தாலும் நிமிஷ நேரங்கொண்டது நாசமாய்ப் போகுமென்பதற்குச் சந்தேகமுண்டா? ஆனுலும் ஆசையின் தொகையானதை எண்ணத் துடங்கினல் அளவும் தொகையுமில்லை. அதாவது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினுயிரம், இலக்ஷம், கோடி, கோடிக்கோடி, மஹாகோடி இந்தப்படி ஆசையினுடைய தொகையை எண்ணி யெண்ணிச் சங்கம் வெள்ளமானுலும் எததனையோகோடி கற்பமானுலும் எண்ணி யெண்ணி எண்ணமானது தொகை அதிகமிருக்கிறது ஆதலால் ஆசைப் படுகுழியில் வீழ்ந்த மந்த புத்தி யுடையவர்கள் மேலேறுவது மஹாப் பிரயாசம். ஏற்றுவதற்கும் ஒருவரும் சகாயமுமில்லை. நிராசையுடைய மஹான்களுக்கு ஒருவருடைய சகாயமும் வேண்டியதில்லை. ஆனுலும் அவாளுக்கு அனைவரும் சகாயமாயிருக்கும். ஆசையற் றருள்பெற்ற மஹான்கள் சம்சாரத்திலிருந்தாலும், சந்நியாசியானுலும் பற்றற்றிருப்பார்கள். சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓ ஆண்டவனே! அனுத்ம வஸ்துக்களோடு கூடி ஐக்யமாயிருந்தவர்கள் அதை விட்டு பரமாத்மாவிலைக்யமடையும் உபாயம் எப்படி யென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அனுத்ம வஸ்துக்கள் அடியோடே நசித்தால் ஜீவாத்மாவானது பரமாத்வாவி லைக்கியமாமென்ப தற்குச் சந்தேகம் வேண்டாம். ஓ மனமே! சம்சாரகாரண மானது ஆசை. சம்சார நாசமாக்குவது நிராசை. ஆத்மா வானது ஆகாசம்போல் எங்கும் பரிபூரணமாயும், ஸ்வயம் பிரகாசமாயும், அபேதமாயும், நித்திய நிர்மலமாயும், பற் றற்றதாயும் எதற்கும் இடங்கொடுக்கத் தகுந்ததாயும் ஆனந்தமாயு முள்ளதாம். இது ஸ்ரீ சற்குரு பதமலராணை சத்தியம்.

மனம் ஓ ஆண்டவனே உலகத்திற்கெல்லாம் கடவுள் ஒருவராயிருக்க அநேகவித மூர்த்தி பேதமாக ஏற்படுத்தக் காரணமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மனதிற்கு மூன்று குணமிருந்த மட்டும் நானுவிதமாய்ப் பிதிர் தேவாதி, ராக்ஷதாள், நராள், சுராள், மாதா பிதா, குரு தெய்வம், மனைவி, மக்கள், பந்து, சத்துரு, நான், நீ இந்தப்படியெல்லாம் குணபேதத் தால் அநேகவிதமான நாம ரூபங்களில் வேறு வேறாக என் னுவது குணத்தின் சுபாவிகம். குணம் மூன்றுமடங்கி மனம் பரிசுத்தமானல் குருவே மாதா, குருவே பிதா, குருவே குரு, குருவே தெய்வம், சராசரமும் குரு, சரா சரத்திற்கும் குருவே தெய்வம்.

மனம் ஓ ஆண்டவனே! சரீராதிப் பிரபஞ்சவஸ்துக்க ளெல்லாம் ஈஸ்வர சிருஷ்டியாமென்று சிலரும், ஈஸ்வர சிருஷ்டியல்ல மாயா சிருஷ்டியாமென்று சிலரும், சொல்லு கின்றூர்களே இதுகளில் எதை நம்பவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இதுக ளிரண்டும் உண்மைதான். ஆனாலும் சர்வத்திற்குங் காரணமானது ஆத்மா வாதலால்

சர்வமும் ஈஸ்வர சிருஷ்டி யென்று சொன்னதுஞ்சரி, ஈஸ்வரன் அரூபியாதலால் ஈஸ்வர சிருஷ்டியல்ல. மாயாகுணத்தினல் தோற்றமாமென்றதுஞ் சரி. ஆனலும் மாயா குணங்கள் ஈஸ்வர சிருஷ்டியாமென் றெண்ணுவோர்களுக்குக் கர்மமுந் தொலையா. ஜன்மமும் சபலமாகா. எல்லாம் மாயா குண கற்பிதமாமென்றும் இதுகள் ஒன்றும் உண்மையல்லவென்றும் குருமுகமா யறிந்தவாளுக்கு இனி ஜன்மமும் கிடையாதென்பது நிச்சயம். அதாவது தன் செயல் ஈசன் செயல் இந்தப்படியுள்ள இரு பாவனையும் விட்டால் ஜீவன் முக்தியடையலாம். எல்லாம் ஈசன் செயலாமென் றெண்ணுவோர்கள் அதோகதி யடையுமென்றும், அதுவுமல்ல எல்லாம் தன் செயலென் றெண்ணுவோர்களும் அப்படியே யாகுமென்றும் வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது. அதாவது மூன்று குணத்தினல் ஆரோபமாயும், சொர்ப்பனம்போல் சத்தியமாயுந் தோற்றுவதா மிந்த உலகம். சொர்ப்பனம் வாஸ்தவமென் றெண்ணுவோர்கள் உலகமும் வாஸ்தவமென் றெண்ணுவார்கள். சொர்ப்பனம் வாஸ்தவமல்லவென்ருல் உலகமும்பொய். ஆனலும் மனமுணர்ந்து பாராமல் மெய்யுணரா. மெய்யுணர்வ தெப்படி யென்ருல் சற்குருவை யடுத்து தக்ஷணமூர்த்தியாகப் பாவித்தும், தியானித்தும், பூஜித்தும், துதித்தும், பழகிவந்தால் மூன்றுவிதமான குணகர்ம வாசனைகளெல்லாம் அடியோடே நசிக்கும். மூன்றுவித குணகர்ம வாசனைகளும் நசித்தால் மனம் பரிசுத்தமாகும். மனம் பரிசுத்தமானல் குரு கைகாட்டியதின் பொருள் விளங்கும். அதானது சின்முத்திரை. சின்முத்திரையின் பொருளாவது ஆணவம், மாயை, கர்மம் இந்த மும்மலங்களும் பொய். பொய். சிவசத்தி இரண்டுமேமெய். மெய் என்றறிவித்ததாம் சின்முத்திரையின் பொருளென்றறிக. ஆனலு மிதின் பொருள் ஏகாந்த குருபக்தர்களுக்கே

விளங்கும். அதல்லாமல் கேவலம் பிராகிருத பக்தாளுக்கு விளங்காதென்பது தாற்பரியம். இந்தப்படி குருமுகமா யறிவதே மெய்யறிவிளக்கமென்றும் உண்மை நிலையென்று மறிக.

மனம் ஓ ஆண்டவனே! மும்மலங்களும் பொய்யா னால் உலக மேது? உலகம் வேறு, ஆத்மா வேறானால் மனம் கவலைபடைகிறதே என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பரமாத்மாவினிடத்தில் கடலில் அலைபோலவும், நுரைபோலவும் தோற்றுவதாம் சமஸ்தப் பிரபஞ்சமும். ஆனாலும் கடலும் அலையும் அதிலுண்டான நுரையும் வேறுவேறாகத் தோற்றுவதுபோல ஆத்மாவும் ஆத்மாவுக்குள் தோற்றப்பட்ட சமஸ்தப் பிரபஞ்சமும் வேறு வேறாகத் தோற்றுவது சுபாவீகம். அந்தப்படி ஒரு சமயம் வேறு வேறாகத்தோற்றினாலும் அது உண்மையல்ல. இது தன்னுடைய மாயையால் தோற்றுவதாமென் றறிந்து சர்வமும் தன்னிடத்திலே கண்டு சர்வமும் தானாயிருப்பவர் கள்தான் மகத்துக்கள். விடாளுக்கு மாயை உள்ளதாயும், ஆத்மா சூன்யமாயுந் தோற்றும். நிர்விஷயமாய் ஆத்மப் பிரகாசமாயும் விளங்குகின்ற மஹான்களுக்கு மாயை சூன்ய மாயிருக்கும். மாயை பொய்யாமென்றறிந்த மெஞ்ஞானி களுக்கு நாம ரூபாதி வஸ்துக்கள் சமஸ்தமும் பொய். அதாவது கர்மவாசனையும் மனதும் இந்திரியங்களு மிருந்த மட்டும் மாயை உள்ளதாயும், ஆத்மா வேறாயுந் தோற்றுவ தல்லாமல் கர்மவாசனையும் மனதும் இந்திரியங்களும் அடங் கிவிட்ட மஹான்களுக்கு ஆத்மாவைத்தவிர வேறே இல்லை யென்பது நிச்சயம். நிர்ச்சலமான சற்குரு பக்தர்க ளிதை நம்புவார்கள். அது கூடாமல் விபசார பக்தியுடையவர்க ளுக்கு இரண்டாகத் தோற்றும். நிர்ச்சலமான பக்தி விஸ்

வர்சமுடையவர்களுக்கு ஏகமாய் விளங்கும். நிர்ச்சலமான சற்குரு பக்தி லக்ஷணம் ஒரு கற்புள்ள மங்கை தன் பதியினிடத்தில் பதிவிரதையாயிருந்தும், வேறொரு புருஷனைச் சேர்ந்தால் பதிவிரதை யாகுமா? ஆகா. அவள் விபசாரியாமென்பதுபோல் ஒரு மஹானை யடுத்து ஸ்ரீ சற்குருவாக நம்பி பாதுகாத்துப் பணிவிடை செய்துகொண்டிருந்து ஒரு சமயம் அதைவிட்டுப் புண்ணியத்திற்காகக் காசிக்குப் போனாலும் கர்மம் தொலையாதென்பது சத்தியம். ஸ்ரீ சற்குருவானவர் எல்லோருக்கும் பொது. அதானது சர்வப் பிராணிகளுக்கும் அந்தர்யாமியாயும், பரதேவதையாயும், பரிபூரணமாயுமுள்ள பிரணவ மொன்றேயாம். இதுதான் மேற்கூறிய மணிநாதம்போல் விளங்குகின்ற பிரணவ சொரூபமான சற்குரு. இதைத் தவிர சிஷன் வேறுண்டோ வென்றால் இல்லை. ஆனாலும் மேற்கூறிய ஓங்கார நாதமான பரப்பிரம்மத்திற்குள்ளிருந்து தோற்றப்பட்ட ஓங்கார விந்துவாம் பிரம்மசக்தி யென்றும் அந்தப் பிரம்ம சிற்சத்தியாம் சிஷனென்று மறிக. இந்தப்படி குரு சிஷ்யர்களிருவருங் கூடி இரண்டறக் கலந்து ஐக்கியமாய் விளங்கிநின்ற இடத்தில் கோடிசூரியப் பிரகாசத்தோடு கூடியும், ஏகமாயும், அகண்ட பரிபூரணமாயும், பரமானந்தமாயுமுள்ள ஒரு அருட் சத்தி பிறந்தது. அந்த அருட்சத்திதான் ஜகத்குரு வென்று மறிக. இந்தப்படி நாதம் விந்து, அருள், இதுகள் மூன்றாகச் சொன்னாலும் அக்கினியும் சூடும் பிரகாசமும் போல பரமாத்மா ஏகமாமென்றறிவதே கருத்து. அதாவதெப்படியென்றால் சூரியனும் சூடும் பிரகாசமும் ஏகமாமென்பதுபோல் மூலப் பிரணவ நாதமும் விந்துவும் அருளுமாகிய இம்மூன்றும் ஏகமாமென்றறிக. இந்தப்படி ஸ்ரீ சற்குருவின் திருவருளால் சற்குருவை யறிந்து திருவடி இரண்டையும் இருதயத்தில் ஸ்திரமாய் நிறுத்தி ராகத் துவேஷாதி

விர்த்திகளும் புண்ணிய பாபங்களுமாகிய இவ்விரண்டையும் பாத காணிக்கையாக வைத்து நிர்ச்சல பக்தி விஸ்வாசத்துடன் அந்தச் சற்குருவின் திருவடி இரண்டையும் பாதுகாத்துப் பணிவிடை செய்து ஐம்புலன்களேயும் மனதையும் அடக்கி அகங்காரத்தை விட்டு ஆவரணம் நீக்கி ஆத்மானாத்ம விவேகங்கொண்டு ஆத்மாவினு லாத்மாவினைப் பரமாத்மாவி லைக்கியம் செய்வதுதான் ஜீவன் முக்தி. இதைத்தவிர உலகத்தின்கண் முத்தி அநேகவித மிருந்தாலும் அதுகளெல்லாம் சரீர முத்தியாமென்றும், சரீர முத்திக்குப் புனர் ஜனன மரணுதி பெருந் துன்பக்கடலில் வீழுமென்றும் சுருதி. ஸ்மிருதி. வேதசாஸ்திர, புராண இதிகாசாதிகளும் கூறியிருக்கிறதைக் குரு, சுருதி, யுக்தி அநுபவத்தினுலும், பக்தி விஸ்வாச சிரத்தையினுலும் இயம நியமாதி மற்றும் நான்கு சாதனங்களினுலும் ஸ்ரீ சற்குரு திருவருள் பிரகாசத்தினுலும், ஆத்மா நித்தியானந்த வஸ்துவாமென்றும், அது யேகமாமென்று மறிந்து சேவிப்பதுதான் குருபக்தி. இதைத்தவிர அநேகவித பக்தி இருந்தாலும் அதுகளெல்லாம் பிராகிருத பக்தியாமென்று மறிக.

ஓ மனமே கேள்! பரமபக்தி வேருயும் முக்தி வேருயுமெண்ணவேண்டாம். இரண்டும் யேகமாம். ஆதலால் ஏகாந்த குருபக்தி யொன்றுகொண்டே ஜீவன் முக்தியடையக்கூடும். சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே! நாம் இந்தப்படியெல்லாம் ஆத்மாவிலன்புவைத்து சதா நிஷ்டையிலிருந்து ஆத்மத்தியானஞ் செய்து ஆத்மாவினை ஆத்மாவி லைக்கியம்செய்தாலல்லவோ பிரம்மானந்தமா யிருக்கலாம். இந்தப்படியுள்ள ஏகாந்தமான நிர்ச்சல குருபக்திகொண்டு ஜீவன்முக்தி கைவசமான மஹான்கள் அதிக துர்லபம். ஏனென்ருல் தாய்க்கு மக

னிடத்தில் அதிகப் பிரியமிருந்தாலும் மகனுக்குப் பிராயம் வந்தகாலத்தில் தன் மனைவி மக்கள் பொருள் முதலான வஸ்துக்களில் அதிகப் பிரியமாயிருந்ததுபோல் ஆத்மாவிற்கு ஜீவர்களிடத்தில் அதிகப் பிரியமிருந்தாலும் ஜீவர்களதை மறந்துவிட்டு நான் எனது யென்கிற அனுத்ம வஸ்துக்களில் அக மமதையும் பிரியமுங்கொண்டு தேகமே நித்தியம், போகமே மோக்ஷம் என்கிறதாக எண்ணி மாயாமோகாந்தகாரமான தாமச குணத்தை யடைந்து குருடனைப்போல் மெய்வழிதெரியாமல் மனச்சஞ்சலமடைந்து பலவிதமா யலைவதாதலால் மேற்கூறியபடியுள்ள நிர்ச்சல பக்தியடைவது அரிது. ஆனாலும் அநேக அநேக ஜென்ம ஜென்மங்களில் நிஷ்காமமாகச் செய்து பழகிவந்த சற்கர்ம புண்ணியம் பூரணமானல் மகத் தெரிசனமடைந்து அந்த ஜென்மத்தில் கர்ம பந்தம் விட்டு ஜீவன் முக்தியடையக்கூடுமென்றறிக. நிஷ்காம சற்கர்ம புண்ணியம் பூரணமானல் நிராசை யடையும்.

மனம் ஓ ஆண்டவனே! இந்தப்படியுள்ள நிர்ச்சலமான சற்குரு பக்தியும் விஸ்வாசமும் சாஸ்வதமான தர்மத்தையு மடையாமல் உலகத்தின்கண் அதிக ஜனங்கள் அநேக வித பேதமாயும் மூடர்களாய்க் கொடிய நரகத்திற் கேதுவான கொடிய பாபக்கடலில் விழக் காரணமென்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! திரிகுணமயமா மிந்த உலகம் அதாவது மூன்றுலகமாயும், மூன்று காலமாயும், முக்குண சகிதமான மூன்றவஸ்தையோடு கூடியும், நாலு யுகமாயும் பந்த மோக்ஷ மிரண்டுக்கும் காரணமாயும், வெகுவித பேதமாயும், அடிக்கடி தோன்றி யழிவதும் சுபாவீகம். ஆனாலும் அந்த நான்கு யுகமும் நான்கு யுகத்திலுமுள்ள மனிதர்களும்

நான்குவிதமான குணகர்ம பேதங்களோடு கூடியு மிருக்கிறது. அந்த நான்கு யுகத்தில் கடைசி இது முடிவான கலியுகமானதால் எல்லோருக்கு மிந்தப் பக்தியும் சிரத்தையும் வருவ தசாத்தியமென்றறிக.

ஓ மனமே கேள்! அநாதியான சேர்க்கை வாசனையோடு கூடிய ஜீவர்களை யெல்லாம் சிருஷ்டி காலத்தில் அவாளவாளுடைய பூர்வகர்ம வாசனைக்குத் தகுந்தபடி மூன்றுவித குணங்களைக் கொண்டு நாலு யுகமாயும் நாலுவிதமாயும் விதிவசால் சிருஷ்டிக்கப்பட்டது. குணம் மூன்றுவது சாத்வீகம், ராஜசம், தாமசம் யுகம் நான்காவது க்ரேதா, த்ரேதா. துவாபர, கலி இதுகளில் சாத்வீக குணம் தனியாயிருந்தவாளுக் கிது க்ரேதாயுகமா மென்றும், சாத்வீககுணமும் ராஜசமும் கூடியிருந்தவாளுக்கிது த்ரேதாயுகமாமென்றும், ராஜசமும் தாமசமுங் கூடியிருந்தவாளுக்கிது துவாபரயுகமா மென்றும், தாமசகுணமே தனியாயிருந்தவாளுக்கிது கலியுகமாமென்று மறிக. இந்தப்படி நான்கு யுகத்திலும் சதுர் வர்ணங்களும் கடவுளை உபாசித்துவந்தது. அதாவது சரியை, கிரியை, யோகம் ஞானம். அதைக் கரும வாசனைகொண்டு காலபேதத்தினால் நாளுக்குநாள் ஆத்மாவில் பக்திக் குறைவாய் வந்தது. ஆதலால் தாமசகுணம் மிகுதியினா லிது கலியுகமென்று சுருதி முதலானதுகளில் கூறப்பட்டிருக்கிறது. கலிதர்மமாவது விபரீதம். ஆதலால் கலியுகத்தில் மனுஷியர்களில் அதிக ஜனங்கள் தாமச குணத்தினால் விபரீதமாய்ச் சரீரமே நித்தியம், போகமே மோக்ஷமென் றெண்ணிக் கலியிலே பிறந்து, கலியிலே வளர்ந்து, அகர்ம விகர்மங்களைச்செய்தும், முடிவில் நரகமான வீட்டையடைவார்கள். ஆதலால் இந்தக் கலியுகத்தில் புண்ணியவான்கள் அதி துர்லபம். பாபிகளானபேர்களோ அதிகம்.

பாபிகளின் நிலையாவது வேருகெட்ட மரம்போலே எவ்வ ளவு ஐஸ்வரியமிருந்தாலும் அதுகளெல்லாம் அரை நிமிஷங் கொண் டழிந்துபோகும். சந்தேகம் வேண்டாம்.

இதைக் கேட்ட மனம் ஓ சுவாமி! சர்வ ஜனங்களும் வர்ணாச்சிரமத்திலிருந்தும் முதற்படி சரியை, கிரியை, யோக மார்க்கத்தோடே முறைப்படி ஏறி நான்காம் பதவியான ஞான மடைந்து ஜீவன் முக்தி யடைவதல்லாமல் வேறே சுளுவான மார்க்கமுண்டோவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! முதலில் வித்தில்லாமல் பலனுண் டாகுமா? அதுபோல இந்த உலகமானது. சாத்வீகம், ராஜச, தாமச இம் மூன்று குணங்களைக்கொண்டு க்ரேதா, த்ரேதா, துவாபர, கலி இந்தப்படி நான்கு யுகமாகப் பிரம் மாவினல் சிருஷ்டிக்கப்பட்டது. அந்தப் பிரம்மாவின் சரீ ரத்திலிருந்தும் சதுர் வர்ணமும் பிறந்தன. அதாவது முகத்திலிருந்து பிராமணன், கையிலிருந்து க்ஷத்திரியன், துடையிலிருந்து வைசியன், பாதத்திலிருந்து சூத்திரன் இவர்கள் நால்வரும் நான்கு யுகத்திற்கும் அவகாசிகளும் அதிகாரிகளுமா மென்றறிக. அதாவது கிராதாயுகத்தில் பிராமணன், த்ரேதாயுகத்தில் க்ஷத்திரியன், துவாபரயுகத் தில் வைசியன், கலியுகத்தில் சூத்திரனும் அதிகாரிகளா மென்றறிக. இதுகளில் க்ரேதாயுகத்தில் தியானமும், த்ரே தாயுகத்தில் எக்ஞமும், துவாபர யுகத்தில் அர்ச்சனையும், கலியுகத்தில் கீர்த்தனமும், சந்யாசம், வானப்பிரஸ்தம், க்ர கஸ்தாஸ்ரமம், பிரம்மசரியம் இந்தப்படி நான்காஸ்ரமங்க ளும் ஞானம், யோகம், கிரியா, சரியா இந்தப்படி நான்கு மோக்ஷ சாதனங்களும் சாயுச்யம், சாரூபம், சாமீபம், சாலோகம் இந்தப்படி நான்கு முக்திகளும் விதிக்கப்பட்

டது. அதானதில் முக்காலத்தின் முடிவாயும், மூன்று யுகத்தின் அந்தமாயு முள்ள நான்காவதான கலியுகமாமிது வென்றறிக. ஆகையால் இந்தக் கலியுகத்தில் பிராணிக ளுக்கு வர்ணாசிரம முறைப்படி ஏறி நான்காம் பதமான முக்தி யடைவதற்கு மஹாப் பிரயாசம். ஏனென்றால் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரனென்கிற பேச்சு மாத்திரமல்லாமல் இவர்களுக் குடைத்தான பிரமசரியம், க்ரகஸ்தாஸ்ரமம், வானப்பிரஸ்தம், சந்நியாச மென்கிற நான்காஸ்ரமமும் அடியோடே நாசமாய்ப்போய்விட்டது. ஆதலால் கலிதர்மமெல்லாம் விபரீதமாயிருக்கிறது. வர்ணத் துக்குத் தகுந்தபடியுள்ள ஆசாரமும், ஆஸ்ரமமும் எள்ளள வுங் கிடையாது. தர்மமெல்லாம் காட்டிற்குப் போய்விட் டது. சாத்விகம் அடியோடே போயிற்று. எல்லாம் தாமச குணத்தினால் அந்தகாரமாயிருக்கிறது. மகத்துவ முள்ள தும் சண்டாளனிடமாய்விட்டது. இந்தக் கலி குடியிருப் பெவ்விடமென்றால் பொய் வார்த்தை பேசுவோரிடத்திலும், சூதாடுவோரிடத்திலும், மதுபானியிடத்திலும், குருத்ரோகி மித்ருத்ரோகிகளிடத்திலும், அதிகாமியிடத்திலும், கொடுங் கோபியிடத்திலும் அரும்பாவியிடத்திலும், பிரபஞ்ச விஸ் வாசியிடத்திலும், விஸ்வாச வஞ்சக பாதகம் செய்வோரிடத் திலும், விபசாரி யிடத்திலும், அதிலோபி யிடத்திலும், பேராசை யுடையவனிடத்திலும், கொலையாளியிடத்திலும், நீசனிடத்திலும், மண்ணிலும் பெண்ணிலும் கனகதன தான்யாதிகளிலும், இன்னும் மற்றும் அநீதியான இடங்க ளெல்லாம் கலி பதினாறு வயதுப் பிராயத்தோடுங் கூடி வாழ்ந்து குடியிருக்குமிடமாகு மென்றறிக. கலியுகத்தில் சதுர் வர்ணமும் (வர்ணசங்கர) என்றும் பிரமாணமுண்டு. அப்படியே அனுபவமும் பார்க்கலாம். அதாவது இந்தக் கலியுகத்தில் வைதீகமுமில்லை. தாந்த்ரீகமுமில்லை. மிஸ்ரகரும

மும் கிடையாது. கலி தாமசகுணமாதலால் யக்ஞம், தானம் தபஸ். சந்நியாசம் முதலான கர்மங்களுங்கூட ஒருவருக்கு மதிகாரமில்லை. தாமசகுண சொரூபமாயிருந்த கலியுட சுபாவீகமாவதெதுவென்றால் மஹா மோஹமான அந்தகாரம். அந்த மஹா மோஹமான அந்தகாரத்தினால் பேராசையும், கொடிய கோபமும், அதனால் கொலை களவு முதலான துஷ்கர்ம துர்மார்க்கர்களாயும், கொடிய பாபிகளாய் நாசமடையப்போகப்போகிற பேர்களுக்கு ஆத்மாவினிடத்தில் அப்பிரியமும், அனாத்மாவான சரீராதி வஸ்துக்களில் பிரியமுமாயிருக்கும். இந்தப்படியெல்லாம் கலிதர்மம் விபரீதமாதலால் இந்தக் கலியுகத்தில் வர்ணாசிரம தர்மங்கள் அணுவளவுங் கிடையாது. ஆகையால் வர்ணாஸ்ரமங் கொண்டு மோக்ஷமடைவது அசாத்தியம். ஆனாலும் வர்ணாஸ்ரமம் விட்டு அருள்பெற்ற மகான்களை யடுத்தால் மோக்ஷமடையலா மென்பது நிச்சயம். அதற்கு முதலாவது காமிய கர்மத்தை விட்டு நிஷ்காமியாய் சற்கருமங்களை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்து மனம் பரிசுத்தமடைந்த மஹான்களிடத்தில் கலி வாா. அதாவது சூரியபகவான் சஞ்சரிக்குமிடத்தில் இருள் வந்தடையாதென்பதுபோல் ஞானிகளிடத்தில் கலி அணுவளவும் வந்தடையாது. சர்வ சங்க பரித்யாகஞ்செய்து நிராசையாயிருந்த ஞானிகளிடத்தில் கலி சொரூபமான மோஹாந்தகாரம் அணுவளவும் வந்தணுகாதென்பது நிச்சயம். இன்னும் சாத்மீகமுடையவாளிடத்திலும், நல்ல சத்தியவான்களிடத்திலும் சாஸ்வதமான தர்மவானிடத்திலும் நிராசையாய்ப் பரிசுத்தமுடைய மனதிலும், நிஷ்காம கர்மிகளிடத்திலும், பகவத்குண நாம சங்கீர்த்தனங்களைச் சதா படிப்பவர்களிடத்திலும் கலி வந்தடையாதென்பதும் சத்தியமே சத்தியம். இந்தப்படி ஆகாசத்தைப்போல பரிசுத்தமான யிடத்திலெங்கும் கலி வந்

தடைவதற்கிடமில்லை. சூரியோதயகாலத்தில் அந்தகாரமான இருள் நாசமடைவதுபோல் எதார்த்தக் ஞானிகளிடத்திலும் கலி வந்தடைந்தால் அந்தக் கலி நாசமடைவதற்குச் சந்தேகம் வேண்டாம். அந்தக் கலியானது இருள்போலெங்கும் பூரணமாயிருந்தாலும், சூரியன் சஞ்சரிக்குமிடத்தில் இருள் இராததுபோல் பூரணக்ஞானிகள் சஞ்சரிக்குமிடத்திலும் கலி இராதென்பது நிச்சயம். அந்தக் கலியானது உற்பத்திஸ்தானமான யிடம் மூன்று. அதாவது மண்ணிலும், பெண்ணிலும், பொன்னிலுமாமென் றறிக. அதாவது கோரமாயும் மூடமாயு மிருக்கும். ஆதலால் மண்ணாசையும், பெண்ணாசையும், பொன்னாசையும் விட்டு நிராசையாயிருந்த மஹான்களிடத்தில் கலி அணுவளவும் இராதென்பது முன் கூறிய தாற்பரியம். கண்ணினாற் கண்டதும் காதினாற் கேட்டதும், மனதினால் நினைத்ததும் எல்லாம் பகவத் சொரூபமாயும் குருவாயும் பாவித்து உபாசிப்பவர்களிடத்திலும் கலி நாசமாம். எங்கும் வெயில்போலப் பரிபூரணமான பரமாத்மாவைத் தவிர அணுவளவும் வேறே இல்லை யென்று அறிந்த மஹான்களிடத்தில் இருள்போலுள்ள கலி அணுவளவும் வந்தணுகாது. கேவலம் கலி சூன்யமென்பது நிச்சயம். இந்தப்படி இன்ப துன்பங்களுக்குக் காரணம் மனமொன்றேயாம். அதாவது மனதும் ஞானேந்திரியங்களும் கூடிக் கலந்திருந்து விடையத் தியானத்தோடுகூடி காம கர்மங்களைச் செய்யும் பாமராள் அடிக்கடி சம்சாரசாகரத்தினடுவிலே விழுந்து செத்தபின் அநேகமான கொடிய நரக மடைவார்கள். இதைத்தவிர ஞானேந்திரியங்களை அடக்கி விடையத் தியானம் விட்டு நிஷ்காமியாய் மனங்கொண் டாத்மத் தியானஞ்செய்து கர்மஞ்செய்வதானல் அந்தக் கர்மேந்திரியங்களும் அடங்கி கர்மபந்தம் விட்டு மனம் ஆத்மாவைச் சேருமென்றறிக. அதாவது

முன் கூறிய மூன்றுகுணங்களும், மூன்றவஸ்தையும், மூன்று காலமும், நான்கு யுகங்களும் சுருதி, ஸ்மிருதி, வேதசாஸ்திர புராண இதிகாசங்களெல்லாம் மனோலய பரியந்தம் சத்தியமா யுள்ளதாய்த் தோற்றும். மனம் லயமடைந்தால் அது சத்தியமல்ல. சத்தியமாயும் நித்தியமாயுமுள்ளதெது வென்றால் நிஷ்கள பரிபூரணம் ஒன்றேயாம். வேறே அணுவளவுங் கிடையாது. மனோலய மாகும்பொருட்டு மார்க்கமாவ தென்னவென்றால் வைராக்கியாதி நற்குணங்களினாலும், அப்பியாச யோகத்தினாலும், குருபக்தி விஸ்வாசத்தினாலும், நேதி, நேதி, மஹாவாக்கிய பிரமாணத்தினாலும் அத்தியாரோப அபவாதத்தினாலும், நிர்க்குணத்தியான யோகாப்பியாசத்தினாலும், வாக்கு, மனக் காயம், மூன்றும் ஸ்ரீ சற்குருவின் திருவடிக்கி அற்பணமாக்கிவிட்டாலது பரமாத்மாவி லடங்கும். அப்போது மனம் லயமாகுமென்றறிக. மனோலயமானால் வாக்கு மனக் காயமேது? வாக்கு மனக் காயமில்லாவிட்டால் உலகமேது? உலக மில்லாவிட்டால் பந்த மோக்ஷ மாவதேது? ஆதலால் எல்லாம் பகவத் சொரூபமாக நினையாமலும், எல்லாம் பகவானிடத்தி லர்ப்பணஞ் செய்யாமலும் உபஜீவனம் செய்பவர்கள் சந்நியாசியானாலும் அவர்கள் பின்ன புத்திகளாமென்றும், அவர்களுடைய தபோ விரதாதி ஞான நிஷ்டைகளெல்லாம் (ஆம கும்பாம்புபோல்) நாசமாய்வந்துவிடும். ஆமகும்பம், பச்சை மண்குடம், அம்பு, ஜலம் அதாவது பச்சை மண்குடத்தில் தண்ணீர் நிறைத்துவைத்தால் அந்தக் குடமும் ஜலமும் இரண்டும் கெட்டழிந்து நாசமாய்ப் போமென்பதுபோல் பேதபுத்திகளாயுள்ள சந்நியாசிகளிட தபோ விரதாதி நிஷ்டைகளும் எல்லாம் விரதாவாய் வந்துவிடுமென்பது முன் கூறிய தாற்பரியம். ஆதலால் எல்லாம் பகவானிடத்திற் பார்த்து எல்லாம் பகவத் சொரூபமாகக் கண்டு எல்லாம்

பகவானுக்கு அர்ப்பணமாக்கிச் செய்வதுதான் சாந்தகுண விர்த்தியென்றறிக. எல்லாம் பகவானுக் கர்ப்பணமாகச்செய்யும் பரம பக்தர்களுக்கு இகத்திலுஞ் சுகம், பரத்திலுஞ் சுகம். பரமாத்மாவி லைக்யமாய் பரமானந்தப் பிராப்தியாமென்பது சத்தியம். சம்சாரம் என்பதே சாகரம். அது மகா துக்கமாமென்றறிக.

இதைக்கேட்ட மனம் ஓ சுவாமி! சம்சாரமாவதுயாது அது தேகத்திற்கோ ஆத்மாவிற்கோ அதன் ரூபமென்ன? அந்தச் சம்சார கர்த்தா யாரென்று அருளவேணுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சர்வப்பிராணிகளுக்குஞ் சம்சாரமானது சரீரம். அதாவது சம்சார கர்த்தா ஜீவன். அவன்தான் புருஷன். அவனுக்குச் சம்சாரமானது மனதும் இந்திரியங்களுமாம். இந்தப்படி இந்திரியங்களும், ஜீவனும் பிரகிருதி புருஷனென்றுமறிக. ஆகையால் மனதும் இந்திரியங்களும் அடக்கமானல் ஜீவனுடைய சம்சார பந்தமற்று ஜீவன் முக்தனமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். ஆனலும் முன் கூறிய இந்திரியங்களையும் மனதையும் அடக்குவது மஹாப் பிரயாசம். அதாவது அனதியான சேர்க்கை வாசனையோடு கூடிய துர்ச்சங்க, துர்விஷய வியாபாரத்தினல் மனம் விபசாரசீலமாய்ச் சோரமாயிருப்ப தல்லாமல் அதை யடக்கி வசமாக்குவது மகாப் பிரயாசையாமென்றும் முன்கூறிய தாற்பரியம். ஆனலும் மனம் பதிவிரத சுபாவமடைந்தால் அது ஜீவனயிருந்த புருஷனிலடங்கியிருக்குமென்பதுசத்தியம். விபசாரப்பட்டுக் கெட்டலையும் மனதைப்பதிவிரதையாக்கு முபாயம் எப்படியென்றல் சரியை, கிரியை, யோகம் ஞானமார்க்கத்திலே முறைப்படி உட்கார

வைத்துப் பழக்கவேண்டும். அந்தப்படி சரியையிலிருந்தும் மனதினுடைய விபசாரம் அடக்கமானல் அந்தச் சரியை விட்டு இரண்டாவது அதற்கு மேலான கிரியைப் படியிலேறி தன் பதியுடன் சேர்ந்து பதிவிரதையாயிருக்கலாம். ஆனுலும் முன் கூறிய சரியையிலிருந்த மனம் கன்னிகையைப் போலவும், கிரியையிலிருந்தமனம் சுமங்கிலியைப்போலவும், யோகத்திலிருந்த மனம் கர்ப்பணியைப்போலவும், ஞானத்திலிருந்த மனம் மெய்ஞ்ஞானமென்கிற குழந்தையைப்பெற்றதைப்போலவும் நிரூபிக்கவேண்டும். இதில் முதலாவது சரியையிலிருந்த மனம் கன்னிகையைப்போ லென்பதற்கு உதாரணம். ஒரு கன்னிகையானது பல புருஷர்களிடத்திலும் விளையாடிக்கொண்டிருந்தாலும் அதற்குக் குற்றமில்லை. பக்குவகாலத்தில் தனக்கிதமான ஒரு புருஷனை மணந்து தன் பதியினிடம் சேர்ந்தபின் வேருெரு முகம் பாராமல் பதிவிரதையா யிருக்கவேண்டும். அதுபோல் முதலாவது மனம் சரியையிலிருந்தும், பலசாஸ்திரங்களையும். பலக்ஷேத்திரங்களையும், பல தீர்த்தங்கள், பலவிதமான சாதுக்களையும் சேவிக்கவேண்டும். இந்தப்படி மற்றும் அநேகமான சத்விருத்திகளையெல்லாம் ஆதரித்தாலும் அதனுல் விபசாரக் குற்றமில்லை, அந்தப்படி பலநாள் சரியையிலிருந்தும் பழகி வருவதானுல் மனதினுடைய தாமஸகுண மடியோடே நசிக்கும். தாமஸகுணம் நாசமடைந்தால் சற்குருவின் தெரிசனங் கிடைக்கும். சற்குருவின் தெரிசனங் கிடைத்தால் சர்வமும் விட்டு அந்தக் குருவின் திருவடி பூசை செய்வது தான் எதார்த்தமானக் கிரியை. அந்தக் கிரியையிலிருந்தும் பதிவிரதையைப்போல் குரு சொன்ன சாஸ்திரம், குரு சொன்ன க்ஷேத்திரம், குரு சொன்ன தீர்த்தங்களெல்லாம் ஆதரித்துக் குருவிற் கற்பணமாக்கி குரங்குக் குட்டியைப் போல் விடாமற் பிடித்துக்கொண்டு குருவின் திருவடியைத்

தியானித்துக்கொண்டு அதை மறவாம லிருப்பதுதான் மன தினுடைய பதிவிரதா தர்மமென்றும், கிரியை யென்றுமறிக. இதனல் ராஜஸகுணமும் அடியோடே நசிக்கும். ராஜஸ தாமஸ மிரண்டும் நாசமடைந்தால் மனதினுடைய விபசார மடியோடே நசிக்கும். அப்போது மனம் நல்ல சுத்தசாத் வீகமாய் விளங்கும். மனம் சுத்த சாத்வீக மடைந்தால் ஸ்ரீ சற்குருவின் திருவருள் கிடைக்கும். சற்குருவின் திரு வருள் பெற்ருல் யோகாப்பியாசஞ் செய்யலாம். யோகாப் பியாசஞ்செய்து பழகிவருவதானல் குணமூன்று மடங்கும். குணமூன்று மடங்கிவிட்டால் மனம் பரிசுத்தமாய் லயமடை யும். மனம் லயமடைந்தால் நாலாம்பதமான ஞானம் கரத லாமலகம்போல் தானே கைவசமாகும். இதைத்தவிர ஒரு சாஸ்திரங் கையிலெடுத்துப்பார்த்து அதனுடைய உண்மை விளங்காமல் அதைக் கீழே போட்டு வேறொரு சாஸ்திரம் பின்னை யொரு சாஸ்திரத்துக்கு மேலான ஒரு சாஸ்திரம். இந்தப்படி அடிக்கடி பல ஞான நூல்களைப் பார்த்து நல்ல சந்தணக்கட்டையைச் சுமந்த கழுதையைப்போ லிலவதும் மனதினுடைய விவேகக்குறைவாம். அது விபசாரத்தொழி லாமென்றறிக. ஒரு குருவை யடுத்துச் சில நாள் பாதுகாத் தும் அதைவிட்டு வேறொரு குருவை யடுத்து இந்தப்படி அடிக்கடி குருவைத் தேடுவதும், மனதினுடைய விபசாரமா மென்றறிக. அதாவது மனதை யடக்குவதற்குத்தான் குரு பக்தி வேண்டும். மனதை யடக்கு முபாயம் அறிவதேசுருதி. மனதை யடக்குமுபாய மிதுதானென்றும் நிச்சயப்படுவதே யுக்தி. மன மடக்கமானல் அதுவே யனுபவம். இதைத் தவிர காரியமே பெரிது, கர்மமே பெரியதென் றெண்ணு வோர்களுக்குக் குருபக்திவாராது. குருபக்தி இல்லாதவா ளுக்கு முக்தியும் வராது. காரியத்தையும், கர்மத்தையும், தூரத் தள்ளிவிட்டு காரண குருவை யடுத்து நம்புமானல்

குருபக்தி வரும். சந்தேகமில்லை. குருபக்தி வந்தால் அருள் கிடைக்கும். அருள் கிடைத்தால் பந்த மோக்ஷம் இரண்டிற்கும் காரணம் பரிசுத்தமான ஞானசிற்சக்தி யொன்றேயாமென்று மறியலாம். அந்தப் பரிசுத்தமான ஞான சிற்சக்தியிலிருந்தும், அசுத்தமாயும், திரிகுண மயமாயுமுள்ள நாம ரூபாதி சங்கற்ப விகற்பமாய்த் தோற்றுவதாம் பந்தமென்றும், நாமரூபாதி சங்கற்ப விகற்பங்க ளடியோடே யற்றது மோக்ஷமென்றும் பெரியவாள் சம்மதம். அதாவது பரிசுத்தமான கண்ணாடிக்குள் கண்ட ரூபம் அசத்தியம். அதுபோல் பரிசுத்தமான ஞான சிற்சத்தியின் சிற்பிரகாசத்திற்குள் கண்ட நாம ரூபங்கள் சமஸ்தமும் அசத்தியம். அதாவது சூரியக்கிரணத்தினுல் தோற்றப்பெற்ற கானற்ஜலம்போல் சத்தியமல்லவென்றறிக. அங்ஙனம் எப்படியெனில் சூரியனில்லாவிட்டால் கானற்ஜலங் கிடையாது, ஆதலால் சூரியனும், கானற்ஜலமும் ஏகமாமென் றறிக. ஆனாலும் கானற்ஜலம் அசத்தியம். கண்ணாடிக்குள் கண்ட முகம் தன் முகமாகுமா? தன் முகம் தன்னிடத்திலிருப்பது நிஜம். கண்ணாடியிற்கண்ட ரூபம் மாயை. அது பொய். ஆனாலும் தன் முகம் தனக்குப் பார்க்கமுடியாதென்பது நிச்சயம். ஆதலால் தன் முகம் கண்ணாடியிற் பார்த்தால் பார்க்கலாம். ஆனாலும் அந்தக் கண்ணாடியிற்கண்ட முகம் தானல்ல. தன்னைத்தவிர வேறேயுண்டா? அந்தக் கண்ணாடிக்குள் இல்லை என்பது நிச்சயமாகுவதுபோல் சச்சிதானந்த விளக்கத்தின்கண் சிற்சாயையானது கண்ணாடி. அதிற்கண்ட ரூபம் மாயை. அந்த மாயா ரூபமானது மனம். மனமானது ஆகாசம்போல் ஏகமாயும் பரிபூரணமாயுமிருக்கிறது. அந்த மன சங்கற்பமானது அநேக விதமாயும், அநேக நாம ரூபாதி சமஸ்தப் பிரபஞ்ச வஸ்துக்களுமாம். அது மாயை. இதுகளுக்கெல்லாம் காரணம் பரமாத்ம

ஸ்வரூபமாமென்றும், பரமாத்ம ஸ்வரூபத்தைத்தவிர அணு வளவும் வேறில்லை யென்றே திடநிச்சயம் வரும். திடநிச்சயம் வந்தால் உன்னுடைய விகற்பங்களடியோடே நசிக்கும். சந்தேகமில்லை. மனதினுடைய சங்கற்ப விகற்ப மற்றால் பந்த மோக்ஷ மிரண்டும் எதார்த்தமல்ல. ஆனாலும் அசுத்தமான மாயையில் தூக்கமடைவது பந்தமாமென்றும், ஞான சிற்சத்தியா லுணர்வது மோக்ஷமாமென்றும், முன்கூறிய தாற்பரியம். இதுகளை ஏகமாய்ப் பார்த்தவாளுக்கு நாமரூப மில்லை. துவிதமாய்ப் பார்த்தவாளுக்கு அநேக நாமரூபமுண்டு. பொய்யறிவு அடங்கிவிட்டால் மெய்யறிவு வெளிப்பிரகாசமாகும். துரியநிலை யடையுமானால் தூக்கமே துரியமாகும். வாக்கு மனக் காயமற்றால் மாயையும் தானே நீங்கும். நிர்மலப் பிரமானந்த நித்தியமாம் பரமாத்மா ஒன்றே. சாக்ஷிகாரணம் பூச்சியம். சர்வமுந் தானே. தானாய்த் தத்வமசி வாக்கியார்த்தமாய் தாரகப்பிரம்மைவாகம், நீயே நானுமென்றும், நானே நீயாமென்றும், நீ நானிரண்டுமில்லை. நிஷ்களமாமது நான்கு மறைக்கும் அந்தமாய் நாத முடிவான படியில் ஜோதிவடிவமாய்ப் பார்ப்பதே பரக்ஞானம். பூரண விளக்கின் ஒளியை சிற்பர வெளியாமென்றும், சிற்பர வெளிக்குளே குருவின் திருவடியைக் கண்டதே எதார்த்தக்ஞானம், அதுதான் நானுமென்றும், நாதரூபமென்று மறிக; ஏகமான கடலும். அலையும் நுரையும்போல் ஆத்மாவும், மாயையும், பிரபஞ்சமும், காரிய காரண கர்த்ருத்துவமூன்றும் ஏகமாய்ச் சமதெரிசனமானால் சிற்பர வெளிக்குளே சராசர ஜீவர்களும் எல்லாந்தானே தானாய்ச் சகல சந்தேகங்களுந் தீரும். தற்பரமாம் சிவசக்தி இரண்டுமா யிரண்டறக் கலந்தது. அகண்ட பரிபூரணவஸ்துவாம், பரமாத்மா ஒன்றுதான். ஆனாலும் பேராசையுடைய பாமராள் பரிசுத்தமடைவது மகாப்பிரயாசம். பரி

சுத்தமடைந்தவாளுக்குப் பாமரத்வம் அணுவளவும் கிடையாது. பரம குருவினிடத்தில் வைத்த பக்தி விஸ்வாசம் கொண்டல்லாமல் மனம் பரிசுத்தமடையாதென்பது நிச்சயம். சொர்ப்பனத்திற் கண்ட சுக துக்கங்கள் உணர்ந்து பார்க்குமளவில் அதுகள் அசத்தியமாமென்பதுபோல் மனமுணர்ந்து பார்க்குமளவில் உலகமெல்லாம் பொய்யாமென்றறியலாம். அதாவது இந்த உலகமெல்லாம் மனமுணர்ந்து ஞானக்கண்ணினல் பார்த்தால் மாயாவி தன்னுடைய ஜாலவித்தையைப்போல் உள்ளதாய்த் தோற்றியதல்லாமல் எதார்த்தமல்ல. ஆனாலும் மோக்ஷத்தி லிச்சையுடையவாளுக்கு முன்கூறிய சரியை, கிரியை, யோக மார்க்கத்தோடே முறைப்படி ஏறிப்போனல் நாலாம்பதமான ஞானமடைந்து நித்தியானந்த கைவல்லியபதமடைவதற்குச் சந்தேகம்வேண்டாம். இந்த முறைப்படி வழி பார்த்து ஏறிப்போய் உபாசனை செய்யாமல் உலகத்தி லொருவருக்கும் முக்தியடையக் கூடியதல்ல. இதுவல்லாமல் ஞானசாஸ்திரங்க ளனேகம் பார்த்தாலும் வாயினுற் பேசி பலபேர்களுக்குங் கற்றுக்கொடுத்தாலும் ஜீவன் முக்தி இன்னபடி யிருக்குமென்று பிரசங்கஞ்செய்தாலும், ஜீவன்முக்தியடைவதற்கு வழிபாராமலும், குரு சேவை செய்யாமலும், வைராக்கியம், அப்பியாச முதலான சாத்வீக விர்த்திகளில்லாமலும், குதற்கம்பேசி காலக்ஷேபஞ் செய்பவர்களுக்கு ஞானத்தின் சுகந்தமானுலுங் கிடையாதென்பது நிச்சயம். ஞானசாதனம் நாலுமடைந்தவர்களுக்கு ஞானம் பக்தி யிரண்டுந் தானே கைவசமாகும். ஞானம் பக்தி யிரண்டும் கைவசமானல் ஜீவன்முக்தனுய் விதேகானந்த கைவல்யபத மடையலாமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். முன் கூறிய சரியை முதல் கிரியை, யோகம், ஞானம் இதுகளில் எந்தப் படியிலிருந்தாலும் அந்தப் படியிலிருந்து சுகர்மம் பண்ணுவதானல் அந்தப்படியிலிருந்

தும் மேலேறிப்போய் நாலாம்பதமான ஞானமடைந்து ஜீவன் முக்தி யடையலாம், இந்த முதல்படி முதலாவது எராமல் நாலாம்பதமான மேற்படிக்கிக் கால்வைத்தால் தலைகீழாய் எல்லாவற்றிற்கும் கீழே விழுந்துபோகு மென்பதுபோல் தோன்றுவதாதலால் முதற்படியிலிருந்து முறைப்படியாய்க் கால்வைத்து மேல்மேலேறிப்போனால் தலைகீழாய் விழு மென்று பயப்படவேண்டாம். ஆனாலும் ஞானம், பக்தி, கர்மம் இதுகள் மூன்றும் புருஷார்த்த சாதனமாமென்றும் இதுகள் அதிகாரம்போல் முறைப்படி யுபாசனைசெய்து பழகிவருபவர்களுக்கு மோக்ஷமடையலாமென்றும், வேதாகம புராண இதிகாசாதிகளில் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் கர்மயோகத்தில் நிஷ்காமியாயிருந்தும் உபாசனையோகத்தைச் சிரத்தா பக்தி விஸ்வாசத்துடன் உபாசனைசெய்து பழகிவருவதானால் ஞானயோகமடையலாம். ஆனாலும் முன் கூறிய ஞானம் பக்தி, கர்மம் மூன்று இதுகளில் கர்மத்திற்கு ஞானகாண்டம் வெகுதூரம். ஞானகாண்டத்திற்கு கர்மகாண்டம் வெகுதூரம். கர்மகாண்டத்திற்கும் ஞானகாண்டத்திற்கும் மத்தியிலிருப்பது உபாசனைகாண்டம். ஆதலால் போகத்திலுள்ள ஆசையும். காமகர்ம சங்கற்பமும் விட்டு பரிசுத்த நிஷ்காமியா யுபாசனை யோகத்திலிருந்தும், ஞானுபாசனஞ்செய்து பழகிவருவதானால் ஆசையும், கர்மவாசனையும் அடியோடே நசிக்கும். ஆசையும் கர்மவாசனையும் அடியோடற்றால் அதுவே ஜீவன்முக்தியாமென்றும், சுருதிப்பிரமாணங்களிலும் பெரியோர்களாலுங் கூறப்பட்டிருக்கிறது. இந்த வுலகத்தின்கண் பிராணிகளில் பிரதானம் மனிதன். மனிதர்களின் க்ஷேமத்தின்பொருட்டு நிவர்த்தி, பிரவிர்த்தி, இரண்டுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதில் காமிகளுக்குப் பிரவிர்த்தியும், நிஷ்காமிகளுக்கு நிவர்த்தியும் அதிகாரமாயிருக்கிறது. அதாவது காமிகளுக்குக் கர்மகாண்டமும்,

நிஷ்காமிகளுக்கு யுபாசனுகாண்டமும், அந்தக்கரண பரிசுத்தமுடைய ஆத்மயோகிகளுக்கு ஞானகாண்டமும், அதிகாரமாகுமென்பதே முன் கூறிய தாற்பரியம். உபாசனு யோகியினுடைய இலக்ஷண மெப்படியென்றுல் உபாசனு யோகங்க ளனேகமிருந்தாலும் ஒரு சற்குருவை யடுத்து நம்பி சேவிப்பதும், உபாசிப்பதும்: எல்லாவற்றிலுஞ் சிறந்த யோகம். அதனுல் சொரூபஞானமடைந்து ஆத்மஞானத்தையு மடையலாம். ஆனுலும் சொரூபக்ஞானமும் ஆத்மஞானமு மிரண்டல்ல. சகள நிஷ்கள மிரண்டு மொன்றுதான். ஆதலால் அந்த சகள நிஷ்கள மிரண்டும், வெண்ணெயும், நெய்யும்போலவும், சூரியனும் பிரகாசம்போலவும், எள்ளும் எண்ணெயும்போலவும், பூமியும் கெந்தமும்போலவும், ஜலமும் இரசமும்போலவும், அக்கினியும் சூடும்போலவும், வாய்வும் ஸ்பரிசம்போலவும் ஆகாசமும் சத்தமும் போலவும், சகள நிஷ்கள மிரண்டும் ஏகமாமென் றறிக. அதாவது நிஷ்களமான பரப்பிரம்மமும், சகளமான சராசரமான மாயாப்பிரபஞ்ச வஸ்துக்களு மிரண்டல்ல. அதுகளிரண்டும் ஏகமாமென்று மறிக. அதாவது பரிசுத்த நிர்மலமாயும், நித்திய நிஷ்கள, நிற்குணமாயுமுள்ள பரப்பிரம்மத்தில் சகளந் தோன்றியது. எப்படியென்றுல் உருக்கின நெய்க் கட்டியாவதுபோலும், பனித்தண்ணீர் கட்டியாவதுபோலவும், மழைத்தண்ணீரானது அலிபக்குவமாவதுபோலவும், ஸதூலமாய், சாக்ரமாய் பிர்மாண்ட ரூபமாய் அநேக மூர்த்திபேதமாய், சகுணமாய், நிற்குணமாய் நிர்ணயித்தறியக்கூடாததாயும், திரிகுணமாயும், திருமூர்த்திகளாயும், இந்திராதிதேவர்களாய், மனுஷிப திரியக்காதி நானுரூபமாய்த் தோற்றுவதெல்லாம் ஏகமாயும், மாயாரூபமாயும் விளங்கும் பரமாத்மா வொன்றேயாமென்று மறிக. அதாவது தீயும் புகையும்போல் பரமாத்மாவிலிருந்துந் தோற்றப்பட்ட சர்

வாத்மப் பிரபஞ்சமும் சர்வ சாக்ஷியும் ஏகம் அதுதான் வேறில்லை. எல்லாம் தானொருவன். ஆனாலும் தனக்கு நாமமனேகவிதஞ் சொல்லுவார்கள். பிரகிருதிகுணம் முதல் நானாவாயும், நானாவர்ணமாயும், சுருதி, ஸ்மிருதி, வேதசாஸ்திர புராண இதிகாசாதிகளாயுந் தோற்றுவதெல்லாம் சப்தப்பிரமாணமல்லாமல் வேறே அணுவளவுங் கிடையாதென்பது நிச்சயம். ஆதலால் ஆத்மாவும் பிரபஞ்சாதி நாமரூபங்களெல்லாம் யேகமாமென்றும், தன்னைத்தவிர வேறே நாமரூபமில்லை யென்று மறிக. நானாவிதமாய்த் தோற்றுவதற்குக் காரணம் சப்த பிரமாணங்களால் தோற்றுவதாம். அதுவும் இந்திரியகோசனமல்லாமல் எதார்த்தமானது ஏகமாய் விளங்கும் ஞானமாமென்றறிக. பிரபஞ்ச நாமரூபங்களையெல்லாம் ஆத்மாவைத்தவிர வேறொரு சொரூபமாக்கி நானாவிதமாயறிவது அஞ்ஞானமாம். எல்லாந் தானாய் ஏகமாய்த் தனக்கன்னியமில்லாமல் கண்டதுதான் பிரமக்ஞானமென்றறிக. பிரம்மக்ஞானமாவது இரண்டு விதம். அதாவது பரோக்ஷம், அபரோக்ஷம், இதில் முதலாவது பரோக்ஷமாவது ஸ்ரீ சற்குருவின் திருவருளால் அறிவதாம். அதாவது சகுணத்திற்குள் நிற்குணமும், நிற்குணத்திற்குள் சகுணமும், ஏகமாய் சமரசமாய்க் கண்டது, பரோக்ஷக்ஞானமாம் சகுணமாய்க் காணப்பட்ட சமஸ்தப் பிரபஞ்ச வஸ்துக்களும், ஆகாசத்தில் சித்திரம்போல் பார்த்து அந்தக்கரண உபாதியற்று சச்சிதானந்த பரிபூரணமாயும், நிர்ச்சல, நிஷ்கள, ஸ்வயம் பரம்ஜோதியாயும், நிராமய, நிற்குண நிரஞ்சனமாயும் அறிவதாம் அபரோக்ஷக்ஞானமென்றறிக. இதுகளில் முதலாவது பரோக்ஷக்ஞானம், பரிபூரணமானால் சொரூபானந்த ஜீவன்முத்தியாமென்றும், அபரோக்ஷக்ஞானம் பரிபூரணமானால் விதேகானந்த நித்திய கைவல்யபதமடையலாமென்றுந் தாத்பரியம். ஆதலால் முதலாவது

பரோக்ஷக்ஞானமடையாமல அபரோக்ஷக்ஞான மடையா தென்பது நிச்சயம். அதாவது எள்ளுக்குள்ளிருந்த எண்ணெய் எடுப்பதுபோல் பரோக்ஷத்திலிருந்தும் அபரோக்ஷ மடையவேண்டும். எள்ளில்லாமற்போனால் எண்ணெயேது? அதுபோல் பரோக்ஷமடையாதவர்களுக்கு அபரோக்ஷமுங் கிடையாதென்பது முன்கூறிய தாற்பரியம். ஆதலால் முதலாவது அபரோக்ஷமடையும்பொருட்டு சிரத்தையுள்ளவாள் பரோக்ஷத்திலிருந்தும் அபரோக்ஷ வுபாசனைசெய்து சொரூபானந்த மடையாமலும் தத்துவங்களையெல்லாம் எண்ணி எண்ணிப் படித்து இதுகளெல்லாம் மித்தையென் றெண்ணுவோர்கள் இரண்டுங் கெட்டு அதோகதி யடையுமென்பது உபநிஷத்துக்களும் மஹாத்துக்களும் கூறியது சத்தியமாமென்றறிக. தத்துவங்களை யடக்குவதே யுக்தி. ஆனாலும் சகள நிஷ்களமாயுள்ள பரோக்ஷ, அபரோக்ஷ மிரண்டும் மனதிற்கு அல்லாமல் பரமாத்மாவினிடத்தி லிதுகளிரண்டுங்கிடையாதென்பது சத்தியம். மனமானது ஆத்மானாத்மா யிரண்டிற்கும் மத்தியஸ்தானமாயிருந்தும் பரிசுத்தமான சத்திய யுபாசனைசெய்து சத்பாவனைகொண்டு அசத்பாவனையைத் தள்ளி, அசத்தும், சதசத்துவம், சத்துவமில்லாமல் அளவற்ற ஆனந்தமாயிருக்கலா மென்பதே முன்கூறிய தாற்பரியம். ஆத்மானுபவம் வந்துவிட்டால் ஆனந்தரூபிணியாயிருந்த வித்தியா, சத்தியும் ஆத்மாவும் ஒன்றாய் இரண்டறக் கலந்திருக்கும். ஆத்மாவிலிருந்து உண்டான ஆனந்தமும், ஆத்மாவும் வேறுவேறல்ல. ஆத்மாவின் சுபாவமே ஆனந்தம். ஆனந்தத்தை யறிவதே ஆத்மா. ஆத்மாவை யறிவது ஆனந்தம். இந்தப்படி அனுபவம் வந்தவர்களுக்கு ஆத்மாவும், அறிவும், ஆனந்தமும் ஒன்றாகவேயிருக்கும். ஆனாலும் அனாத்மாவோடு சேர்ந்து விஷயபோகங்களை யனுபவிப்பதும், சுக துக்கங்களை யூட்டுவதும்

இதைத்தவிர மோக்ஷத்தி லிச்சைகொண்டு வைராக்கியமுடையவர்களுக்கு ஆத்மாவோடு சேர்ந்து பிரம்மானந்தத்தையூட்டுவதும் இந்த ஒரே சத்தியாமென்றறிக. ஆதலால் நித்திய பந்தத்திற்கும், நித்திய முக்திக்கும் காரணம் ஞான சிற்சக்தி ஒன்றேயாம். அதானது வித்தை யென்றும்; அவித்தை யென்று இரண்டு நாமமும் ஒரே சத்தியாம். இந்தச் சத்திஸை யுபாசிக்காமல் போகம், மோக்ஷ மிரண்டுங் கிடையாது. இந்தச் சத்தி அனாத்மாவோடு சேராமற்போனால் விஷய போகங்களும் சேஷ்டிப்புமில்லை. ஆத்மாவோடு சேராமல் மோக்ஷமும் ஆனந்தமுமில்லை. ஆதலால் பந்த மோக்ஷ மிரண்டையும் ஊட்டுவதற்கு வித்தையும் அவித்தையுமாய் இருந்தது இந்த மூல சிற்சத்தி ஒன்றேயாம். இரண்டல்ல. அபிமானிகளுக்கு இரண்டாய்த் தோற்றுவது அஞ்ஞான காரணம். ஞானம் அஞ்ஞானம் இதுகளின் இரண்டிற்கும் காரணமாயும் பிரதானமாயும் இருந்தது மனம் ஒன்றேயாம். அதாவது விஷயங்களைச் சிந்திக்கும்போது அந்த மனம் அந்த விஷயங்களில் சேர்ந்திருக்கும். அதுபோல் ஆத்மாவைச் சிந்திக்கும்போது அந்த மனம் ஆத்மாவைச் சேர்ந்திருக்கும். ஆதலால் மாயாவிமோசனமானால் மனமேது? மனம் அடங்கிவிட்டால் அதுவே பரமாத்மா. மனம் பரமாத்மாவாகும்போது மனம் என்பதும் அவித்தை என்பதும் இல்லை குரு வென்பதும் சிஷ்யனென்பதும் இல்லை. இதுகளெல்லாம் குருவருள் மஹாவாக்கியம்பெற்று மனோலயப்பரியந்தம் இருக்குமென்பதே முன்கூறிய தாற்பரியம். மனோலயமாகும்பொருட்டு மார்க்கம் எதுவென்றால் மனமானது சத்தியத்திலும் புத்தியானது தர்மத்திலும் சித்தமானது குருபக்தி விஸ்வாசத்திலும் அகங்காரமானது ஆத்மாவிலும் உபாசித்துப் பழகிவருவதானால் அந்தக்கரணம் நான்கும் பரிசுத்தமாய் ஸ்வயம்பிரகாசமாய் விளங்கும்.

ஆனாலும் ஏகாந்த பக்தி அடைவதற்கு முன் இளம்பக்தியாய் இருந்தபோது ஒரு அபிஷ்டமான மூர்த்தியை உபாசிக்கவேண்டியது அவசியந்தான். அந்த மூர்த்தியாவது கணபதி, விஷ்ணு, சிவன், மாயை, சூரியன் ஆக ஐந்து. இதைத்தவிர இன்னும் அநேக மூர்த்தி பேதங்கள் இருந்தாலும் அதுகளெல்லாம் இந்த பஞ்சமூர்த்திகளினுடைய அம்சங்களாகவே இருக்கும். இந்தப் பஞ்ச மூர்த்திகளில் ஒரு மூர்த்தியானாலும் அவாளவாளுக்கு இஷ்டமான மூர்த்தியைப் பக்தி முற்றும் காலபரியந்தம் உபாசிக்கவேண்டியது. இந்தப்படி சேவித்துக்கொண்டிருந்தால் சற்குணமும், குரு பக்தியும் உண்டாகும். குரு கடாக்ஷத்தினால் ஆத்மாவை அறியும்போது இந்த ஐந்து மூர்த்திகளும் தத்துவங்களாய் இருக்கும். இந்தப்படி அறிவது உத்தமம். அதாவது உத்தமம் தத்துவபோதம், மத்திமம் வேதபாடம், அதமம் சாஸ்திரபாடம், தீர்த்தாடனம் மனோபிராந்தியுமாமென்றும் பெரியவாளுடைய சம்மதம். குருமுகமாய் அறிவதே எதார்த்தக்ஞானம். ஆதலால் குருமுகமே முகம். அதுவே முடி. குருபதமே பதம். அதுதான் அடி. இதுவே ஆண்டவருடைய அடி முடி. இந்தப்படி அடி முடியை அயனும் மாலும் தேடிக் காணாத வஸ்துவாம் என்றும் அதாவது சூக்ஷ்மத்தில் ஆதியந்தம் இல்லாத அகண்ட பரிபூரண சச்சிதானந்தமாய் விளங்கும் சிவபிரானுக்கு அடிமுடியில்லை என்பதே நிச்சயம். இந்த ஸ்தூலப்பிரபஞ்சத்துக்குத்தான் அடி முடி உண்டென்பது. இந்த ஸ்தூலப்பிரபஞ்சமானது பிர்ம்மாவினால் சிருஷ்டிக்கப்பட்டது.

இந்த ஸ்தூலப்பிரபஞ்சத்துக்கும் இதுகளையெல்லாம் சிருஷ்டிக்கப்பட்ட பிர்ம்மாவிற்கும் காரணம் சூக்ஷ்மமான பரமாத்மா ஒன்றேயாம் என்றறிக. அனேகமான சுருதி

ஸ்மிருதி வேதாகம புராண இதிகாசங்கள் இதுகளையும் இந்தப் பிரபஞ்சம் எல்லாவற்றையும் உண்டுபண்ணி வைத்த பிர்ம்மாவிற்கு நானே சிருஷ்டிகர்த்தா, நானே எல்லாவற்றையும் உண்டுபண்ணினவன் என்கிற ராஜஸஸாபிமான கர்வத்தினல் கோர பாவனைக்கொண்டு சூக்ஷ்ம ரூபியாயிருந்த ஸ்ரீ பரமேஸ்வரனுடைய திருமுடியைத் தேடிக் காணமல் கண்டதாக லோக ரக்ஷகராகிய ஸ்ரீமன் நாராயணருடைய திருமுக முன்பாக நான் போய் சிவன் திருமுடியைப் பார்த்துக்கொண்டுவந்தேன் என்பதாகப் பொய் வார்த்தைச்சொல்லியதாதலால் அந்தத் தலையை பரமசிவன் அறுத்தாரென்றும் புராணங்களிற் கூறியிருப்பது எதார்த்தம் என்பது சத்தியம். அதுபோல் குரு வித்தையும் ஞானனுபவமும் வாராமலும், அகங்காரத்தை விடாமலும், அனேக ஞான நூல்களைப் பார்த்தும் அனுபவிகளைப்போல நான் பிரம்மத்தைக் கண்டேன் என்கிற பொய் வார்த்தை சொல்லித் திரிபவர்களுக்கு என்ன கதி வரப்போகிறதோ தெரியாது. எல்லாம் பகவானைக் கண்டு சேவிப்பவனுக்குத் தன் சொரூபம் விளங்கும். தன் சொரூபம் அறிந்தால் அது சுயம்பிரகாசம் என்றறிக. சொரூபமாவது தானும் குருவும், ஈரேழு பதினன்கு உலகமும், அதற்குள் அடங்கியிருந்த சராசர ஜீவர்களும். பரமாத்மாவும் ஏகமாய்க் கண்டதுதான் தத்சொரூபம் என்றறிக. இந்தப்படி ஏக சொரூபானந்தத்திலிருந்தும் அறிவதே ஆத்மக்ஞானம். ஆத்மக்ஞானத்தினல் பிரம்மானந்தபத மடையலாம். எல்லா வற்றிலும் சிறந்தது பிரம்மானந்தம். இதைத்தவிர விடையானந்தம் முதல் பதினேரானந்தமும் மனேவானந்தமாம். அதுகள் மித்தையாம் என்றறிக. இந்தப் பதினேரானந்தத்திற்கும் மேலானது ஆத்மானந்தம். அதானது பிர்ம்மானந்தம். பிர்ம்மானந்தமே நித்யானந்தமாம் என்றறிக. ஆனலும் இந்தப்படி நித்

தியமான சுகத்தை மறந்து அனித்தியமான சுகம் நித்தியம் என்று எண்ணுவதும் மனோபாவனையாம். விடையத்தியானங்கொண்டு சம்சாரத்தை உண்டுபண்ணுவதும் மனோபாவனையாம். ஆத்மபாவனைக்கொண்டு சம்சார சாகரத்தைத் தாண்டி மோக்ஷமடைவதும் மனோபாவனையாம். இந்த உலகமானதும் மனோபாவனையாம். இந்த உலகத்தின்கண் காணப்படும் சராசரஜீவர்களும் மனோபாவனையாம். சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபாவம் அனுக்ரஹம் இந்த ஐந்து தொழில்களும் மனோபாவனையாம், பாவனைக்கதீதமானதே பரமாத்மா. பாவனையற்றால் மனம் பரிசுத்தமாய் ஆத்மசுகமடையலாமென்றறிக.

மனம் ஓ சுவாமி! மனோபாவனை விடுவது எப்படி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! பிறந்தபோதே பாம்பின்வாய்த்தேரையைப்போல் எமனுக்கு இரையாகப்போகிற இந்தச் சரீரம் இன்றைக்கோ நாளைக்கோ அழிந்துவிடுமென்கிற நிச்சயம் வந்தால் போகத்தில் வைராக்கியம் வரும். அதாவது ஒருவனை யொருவன் கொலைசெய்தால் அந்த கொலை குற்றவாளியை நாளையதினம் தூக்கிலிடும்படி மஹாராஜா விதிக்கப்பட்டது. அதைக்கேட்ட அந்தக் குற்றவாளியின் சிந்தனை எவ்விதமிருக்குமென்றால் நாளையத்தினம் இந்தச்சரீரம் நாசமாய்ப் போகுமென்பது நிச்சயம். இந்தப்படி நினைந்து பயந்தவனுக்கு, அநேகமான போகவஸ்துக்களைக் கொடுத்தாலும் அவனுக்கு அந்த மரணபீதியைத் தவிர போகத்திலாசை வருமா? வராது. அதுவுமல்லாமல் அந்த மரணபீதியைவிட்டு வேறு சிந்தனை வருமா? வராதென்பது நிச்சயம். அதுபோல் இந்தச் சரீரமும் இப்பவோ இன்னொரு சமயமோ இன்றைக்கோ நாளைக்கோ அழிந்து

போகுமென்கிற நிச்சயமடைந்தால் ஆசையும் மோகமும் தானே நசிக்கும். ஆசையும் மோகமு மற்ருல் மனோபாவனை யுங் கிடையாது. மனோபாவனையற்ருல் ஞானம் வரும். ஞானம் வந்தால் அந்த ஞானக்கினியால் சர்வ பாவமும் அடியோடே தகித்துப் போகும். சரீரமும் நசிக்கும். பிர்ம்மானந்தமாயிருக்கலா மென்றறிக.

மனம் ஓ சுவாமி! எல்லாவற்றிலும் சிறந்தது ஆத்மக் ஞானமாமென்றும் அதற்கு முக்கிய சாதனமானது சாதுக் களின் பாதபூசையும் பரம குருவினிடத்திலுள்ள பக்தி விஸ்வாசமாமென்றுந் தெரிந்துகொண்டேன். ஆனாலுமது இந்த உலகத்தின்கண் மனுஷரில் கோடியில் ஒருவரிருந் தாலுமிருக்கும். இதைத்தவிர அனைவரும் சாதுக்களில் பக்தி இல்லாமல், வரக் காரண மென்னவென்று கேட்க, அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்த உலகத்தின்கண் சர்வப் பிராணிகளும் மூன்றுவித குணத்தோடு கூடிப் பிறந்தது. அதானது அவாளவாளுடைய பூர்வ கர்ம வாசனைக்குத் தகுந்தபடி அநேகநேகவித குண பேதங்களோடு கூடி இருப்பதாதலால் எல்லோருக்கும் முன் கூறினபடி சாதுக் களில் பிரியமும் பக்தியும் வராது. அதானது அவாள்வா ளுடைய குணத்தைப்போலுள்ள, இனத்தாரைக் கண்டால் சந்தோஷமாய் வெகுமானித்து மரியாதை செய்வார்கள். அங்ஙனம் எப்படியெனில் சாத்வீகமுடையவாளைப் பார்த் தால் சாத்வீகமுடையவாளுக்குப் பிரியம். அதுபோல் ராஜசகுணமுடையவாளில், ராஜசகுணமுடையவாளுக்குப் பிரியம். தாமசகுணமுடையவாளில், தாமசகுணமுடைய வாளுக்குப் பிரியம். பிராம்மண ஜாதிகளுக்குப் பிராமணக் கூட்டம் பிரியம். ராஜாவுக்கு ராஜாக்களில் பிரியம்.

சண்டாளர்களுக்குச் சண்டாளர்களில் பிரியம். ஆட்டிற்கு ஆட்டிலும், மாட்டிற்கு மாட்டிலும், பொய்யனுக்குப் பொய்யனும், மெய்யருக்கு மெய்யரும், திருடனுக்குத் திருடனும், சத்தியவானுக்குச் சத்தியவானும், விபசாரிக்கு விபசாரியும், பதிவிரதைக்குப் பதிவிரதையும், விளையாடுங் குழந்தைகளுக்கு விளையாட்டுக் குழந்தைகளிலும், சூதாடுவோர்களுக்குச் சூதாடிகளிலும், இந்தப்படியெந்தெந்த ஜெந்துக்களுக்கும் அந்தந்த இனத்தாரைப் பார்த்தால் கூட்டுறவாய் சந்தோஷமாயிருக்கும். அதுபோல் சாந்தகுணமுடைய சத்தியவான்மார்களுக்கு மாத்திரம் சாந்தகுணமுடைய சத்குருவினிடத்தில் பக்தி விஸ்வாசம் வரும், சந்தேகம் வேண்டாம்.

அதாவது அநேகனேக ஜன்மங்களிற் செய்து பழகி வந்த புண்ணிய விசேஷத்தினுலென்றுமறிக. அதாவது ஒரு ஜன்மத்தில் ஒரு நாள் ஒரு சமயம் மஹத்தெரிசனமடைந்தவர்களுக்கு, மறு ஜன்மத்தில் பத்துநாள் சாதுக்கள் தெரிசனங் கிடைக்கும். அதற்கடுத்த ஜன்மத்தில் நூறு ஆயிரம், பதினாயிரம், இலக்ஷம், கோடி, இந்தப்படி அநேக ஜன்ம மடிக்கடியானல் ஒரு ஜன்மத்தில் அளவிறந்த புண்ணியங்கூடும்.

புண்ணியம் பூர்ணமானல் புருஷார்த்த மடையலாம் சந்தேகம் வேண்டாம். ஆதலால் சாதுக்களின் தெரிசனத்தாலடைந்த புண்ணியமெல்லாம் புண்ணியத்திலும் புண்ணியமாமென்றறிக. இதைத்தவிர செய்யும் புண்ணியமெல்லாம் ஆவது மழிவதுமாய்த் தீரும். சத்தான புண்ணியம் பூரணமானல் அதுதான் சாந்தகுணத்தின் சொரூபமென்றறிக.

இதைக் கேட்ட மனம் ஓ சுவாமி! இவ்வுலகத்தின் கண் மனுஷரிலும் மனுஷருண்டு. அதிலும் நாய், கழுதை,

பன்றி முதலான மிருகஜாதிகள்போல் அநேக மனுஷரு முண்டு. இவர்களிலும் சாந்தமாய் சாத்வீககுணமுடைய வர்களாம், மனுஷரிலும் மகிமையுடைய மனுஷரென்றும், புருஷ சிரேஷ்டன்மார்க ளென்றும் சாதுக்களென்று மறிந் தேன். இவரை அடுத்தால் எதார்த்தக் ஞானமடைந்து, மோக்ஷமடையலா மென்பது நிச்சயமானேன். ஆனாலும் அந்த சாத்வீக பக்தியின் சொரூபமாவதெது? அதை யடையும் பொருட்டு அப்பியாசமாவதெது வென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள். அவ்வியக்தமான மூலப் பிரகிருதியி லிருந்தும், விகுற்திகளாய் மூன்று குணங்கள் தோற்றியது. இதுகளில் சாத்வீகத்தின் சொரூபமாவது. ஏகமாயும் நிற்மலமாயுமுள்ளது மென்றறிக. ஆனாலும் அதுவும் மூன்றுவித குணமாயிருக்கும். அதாவது சாத்வீகத்திற் தாமசமும், சாத்வீகத்திற் ராஜசமும், சாத்வீகத்திற் சாத் வீகமுமா மென்று மறிக. இதுகளில்சாத்வீகத்திற் தாமச மும், சாத்வீகத்திற் ராஜசமும் விட்டு, சாத்வீகத்திற் சாத் வீகமடைவதாம் சாந்தகுணவிர்த்தியென்றுமறிக. ஆனாலும் மேற்கூறிய, சாத்வீகத்தில் தாமசகுண விர்த்தியானது எது வென்றால், நிஷ்காமியாய் பலபல புண்ணிய தீர்த்தங்க ளாடனவும், பலபல புண்ணிய க்ஷேத்திர வந்தனமும் பல விதமான சாதுக்களின் தெரிசனமும் பாதபூசை முதலான, புண்ணிய கர்மங்களைச் செய்வதாம்.

சாத்வீகத்திற் தாமசகுணவிர்த்தியின் முடிவென்று மறிக. இந்தப்படி அநேக ஜன்மஜன்மம் சரியையில் பழகி வருவதனால் ஒரு ஜன்மத்தில் தாமசகுணவிர்த்தி நீங்கி நல்ல புண்ணியம் மேலிடும். புண்ணியம் மேலிட்டால் சற்குரு தெரிசனங் கிடைக்கும். சற்குரு தெரிசனங்

கிடைத்தால் அந்தக் குருவையடுத்து, அன்புடன் நம்பி பரமாத்ம விஸ்வாசத்துடன் பணிவிடை செய்து, உடல் பொருளாவி மூன்றுந் தாரைவார்த்து, பிரமசரிய விரதத் தோடுங் கூடியிருப்பதே முன் கூறின சாத்வீககுண விர்த்தி யிலுள்ள ராஜசகுண விர்த்தியின் முடிவு. இந்தப்படி, ஸ்ரீ சற்குருவின் திருவடிக்கடுத்து குரங்குக் குட்டியைப் போல் விடாமற் பிடித்துக்கொண்டு பன்னிரண்டு வருஷ மடுத்து பாதுகாத்துப் பணிவிடை செய்து வருவதானுல் அந்த சாத்வீக குணத்திலுள்ள தாமச ராஜச குணங்க ளிரண்டும் அடியோடே நசிக்கும். அப்போது தற்சொரூப மான சாத்வீகத்தின் சாத்வீகந் தனியாயும், ஏகமாயும், நிர்மல பரிசுத்தமாயும் விளங்கும். அதற்கு எத்தனை ஜன்மங் கொண்டு வந்தாலும் வரட்டும். அந்த சுத்த சாத்வீகத்தின் சொரூபமாவ தெதுவென்ருல் சராசர பூதகோடிகளுக்கெல் லாம் அந்தரியாமியாயும், சாக்ஷியாயும், பூரணமாயுமுள்ள பரமாத்மா ஏகமென்றுமறிந்து அறிந்த அறிவை மறவாமல் சராசரத்தையும் ஏகமாய் சற்குருவாகக்கண்டு உபாசிப்பது தான் சாத்வீகத்தின் சாத்வீகமான சுத்த சாத்வீககுண விர்த்தியின் சொரூபமென்றறிக. இந்தப்படி சாத்வீக மடைவதே சகுணஸ்ரூபமென்றும், சகுணமே நிற்குணமா மென்றுமறிக. ஆதலால் சகுணநிற்குண மிரண்டும் ஏகமாய்ப் பரமாத்மாவாகக் கண்டவனுக்குத் தன் மனமும் பரமாத்மா ஏகமாமென்றறியலாமென்பதற்குச் சந்தேகமுண்டா? சகள நிஷ்கள மிரண்டும் ஏகமாய்க் கண்டக் கண்ணனது முக் குணத்திற்கும் அதீதமான பரிசுத்த நிற்குணமாமென்று மறிக. இந்திரியங்களையும் மனதையுமடக்கினுல் அது சாந்த மாம். சொரூபம் தனியாம். அதே தானுய் தானுமென்று மறிக. இதுகளில் சாத்வீகமானது தெளிவு. ராஜசம் கலக்கம். தாமசம் சேரு இந்தமூன்று குணமு மடக்கமா

ுல் பரிசுத்தமாய்ப் பூரணுனந்தம் விளங்கும். சந்தேகம் வேண்டாம்.

இதைக்கேட்ட மனம் ஓ சுவாமி! முக்குண சகித மான மனதை நிற்குணமாக்கும் உபாயம் எப்படியென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சகுணுபாசனையான யோகாப்பியா சத்திஞலும், நிஷ்காம கருமத்திஞலும் ஞானவிக்ஞான வைராக்கியத்திஞலும், நிற்குணத்தியான நிஷ்டையிஞலும் மனம் பரிசுத்தமாய் நிற்குணத்தோடு சகிதமாய் லயமாகும் போது சகுண சொரூபம் சமஸ்தமும் தன்னிலே அடக்கமா மென்றுமறிக, தத்துவங்களை அடக்குவதை சகுணத்தின் லயமென்றும தத்துவங்களடங்கினபின் பரிசுத்த பரிபூரண மாம், பரமாத்மா என்று மறிவதே ஞானம்.

ஓ மனமே கேள்! மேற்கூறியதெல்லாம் குருசுருதி யுக்தியனுபவத்திஞல் சொன்னதல்லாமல் தன் செயலாவது அணுவளவுமில்லை யென்பது சத்தியம். எல்லாவற்றிலுங் கடவுளிருப்பதாதலால் எல்லாங் கடவுளுக்கர்ப்பணம். குரு விஞலறிவதே சுருதி, சுருதியிலறிவதே யுக்தி, யுக்தியிஞ லறிவதே அனுவபம், அனுபவத்திஞலறிவதே எதார்த்த மான ஆத்மக்ஞான மென்றுமறிக.

மனம் ஓ ஆண்டவனே! நின் திருவடி அருள்செய்த மஹா வாக்கியங்கள் சத்தியம். ஆஞலும் சம்சாரமானது பெருங்கடலைப்போலவும் ராகத்துவேஷாதிகளானது மஹா பயங்கரமான மகரமஸ்யாதி ஜலஜெந்துக்களைப் போலவும் அடிக்கடி ஜனனமரணுதி துன்பங்களுக்கேதுவான சங்கற்ப விகற்பமானது கடலின் அலையைப்போலவும் இப்படிக் கொத்த சம்சாரக்கடலைத் தாண்டுவதற்கு (விதி) அரிகராதி

களாலும் அசாத்தியமாமென்றும் அறிந்தேன் ஆனல் இந்தப் பெருங் கடலுக்குக் கரையாவதெது? இதைத் தாண்டுமுபாயம் எதானலும் இருந்தால் அதைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சம்சாரமானது நிஸ்தாரம். அது சத்தியமுமல்ல. நித்தியமுமல்ல. ஆனலும் அஞ்ஞானிகளுக்கது பெருங்கடலாயும், சத்தியமாயும், நித்தியமாயுந் தோற்றும். அது அநாத்மாவான மாயை. இதைத்தவிர ஆத்மாவிலன்புடன் பக்தி விஸ்வாசமாய் விசாரித்தால் சம்சாரமானது சர்வப் பிராணிகளுக்கும் இருகாலுக்கும் நடுவே இருக்கிறது. அதாவது நடக்கிறதற்காக ஒருகால் வைத்து இரண்டாவது மறுகால் வைத்ததின் நடுவே ஒரு பசுவின் கன்றுக்குட்டியின் குளம்படி பூமியிற் படிய அது நிறைந்த தண்ணீரைப்போலுள்ள சம்சாரக்கடலைத் தாண்டுவதற்கு லகுவாய் இருக்கிறது. அதாவது விவேகமான ஒரு கப்பலில் ஏறி ஒரு சற்குருவை ஓடக்காரனக நம்பி சிரத்தாபக்தி விஸ்வாசமென்கிற பாமரங்கட்டி ஸ்ரீ சற்குருவின் திருவருளான பரமானந்தக் காற்றடிக்க அரை நிமிஷத்திற்குள் ஆயாசமில்லாமலும் துக்கமில்லாமலும் அந்தச் சம்சாரமான அக்கடலின் அக்கரைத்தாண்டலாம். சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! சம்சாரமான சாகரத்திற்குக் கரையானது பிரம்மானந்தப் பட்டணம் என்றும் அறிக.

மனம் ஓ ஆண்டவனே! இந்தப்படி சம்சாரம் லகுவாயும் நிஸ்தாரமாயுமிருக்க சம்சாரசாகரம் பெரிய துக்கமாம் என்று பெரியோர்களும் சுருதிகளிலும் கூறியிருக்கிறது. அப்படிக் கூறிய காரணம் என்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சர்வாந்தரியாமியாயும், சர்வ வியாபகமாயும், நித்தியமாயும், சச்சிதானந்த சொரூபமாயுமுள்ள பரமாத்மாவை மறந்து மனம் அநித்தியமாயுமுள்ள பொய்ப் புலன்களோடுகூடி அதுகளிடத்தில் ஐக்யமாயிருந்த ஆத்மத் துரோகிகளுக்கும், கோடி கோடி கல்பகாலமானாலும் சம்சாரமான கடலைத் தாண்டுவதற்கு அசாத்தியமான பெருங் கடலா மென்பதற்குச் சந்தேகமில்லை. அதாவது ஆத்ம சுகத்தை மறந்து புலன்களோடுகூடி விளையாடுபவர்களுக் கெல்லாம் குருவைக் கொலை செய்த பஞ்சமாபாதகர்களென் றும் எவன் தன்னுடைய ஆத்மாவினை மறந்து துஷ்கர்மங் களைச் செய்து வீண்காலம் போக்குகிற மஹாபாபியானவன் தன்னைத்தானே கொலை செய்த பிரம்மஹந்தாவாமென்று மறிக. சர்வத்திற்கும் காரணமாயும், சர்வப் பிராணிகளுடைய மனதிற்குள்ளும், அந்தரியாமியாயுமுள்ள பரமாத் மாவை மறந்து பொய்ப்புலன்களில் புலையாடி பந்துவாகப் பாவித்து அதுகளைச் சந்தோஷிப்பித்தால் அதிலுள்ள பலனென்ன? மரண காலத்தில் இவர்கள் என்ன சகாயம் செய்யுமோ தெரியவில்லை.

ஓ மனமே இன்னுங்கேள்! சம்சார சாகரமென்பது அசுத்த மனம். அடிக்கடி மனசங்கற்பமடைவதுதான் அலை. மனசங்கற்பமற்றால் அலை அடங்கும். மனம் ஆத்மா விலக்யமானால் சம்சார சாகரமானது அடியோடே நசிக்கும். மனே சம்சாரமான சாகரம் நாசமானால் ராகத்துவேஷாதிகளான ஜலஜெந்துக்களேது?

ஓ மனமே கேள்! மனம் சாந்தமானால் பிரம்மானந்தமாயிருக்கும். பிரம்மானந்தமானது பரமாத்மா, அது குணமுமல்ல, நிற்குணமுமல்ல, ஆதியுமல்ல, அந்தமுமல்ல, அளவுந் துகையுங் கிடையாது. இருளும் வெளியுமல்ல,

நாமரூப குணதோஷாதி பேதாபேதங்கள் ஒன்றுமில்லை விர்த்திக்ஷயாதி சுகதுக்காதிகளொன்றுமில்லை. எதிலும் பற்றற்றதாம். அது பரமானந்தமென்பதே அதற்கு சொரூபம் அல்லாமல் சொல்லக்கூடியதுமல்ல.

ஓ மனமே கேள்! பரமானந்தத்திற்குச் சமானமாய் உபமானம் சொல்லுவதற்கு அதைத் தவிர வேறொரு வஸ்துக்களுமில்லை என்பது சத்தியம்.

ஓ மனமே! அநேக ஞான நூல்களைப் பார்த்தும் பாடம் படித்தும், ராகத்துவேஷாதிகளோடுகூடிய சம்சாரக் கடலில் வீழ்ந்தலையாமல் நிற்வாதமாய் துரியநிலையில் மனமடக்கி ஆத்மாவினை ஆத்மாவில் ஐக்யம் செய்தால் நிர்மலமாய்த் துரியநிலையையடைந்து பிரம்மானந்தபதமடையலாம் சந்தேகம் வேண்டாம். துரியநிலையாவது சாத்வீகம், ராஜசம், தாமசம் இந்த மூன்று குணங்களும் ஏகமாய்ச் சொரூபித்துச் சகளமாயிருந்து முடிவில் ஆத்மாவை ஆகாசம்போல் அகண்ட பரிபூரணமாய் நிஷ்களமாயிருப்பதே துரியநிலை. இந்தப்படியுள்ள துரியநிலையை அடைவதாம் பிரம்மானந்தமென்றுமறிக.

மனம் ஓ ஆண்டவனே! வர்ணாசிரமாதி குலாச்சார தர்மங்களை யெல்லாம்விட்டு நிராசையாய் ஒரு சற்குருவையடுத்து அருள்பெற்ற மஹான்களுக்கு விதிநிஷேதமுண்டா? அவாளுக்குடைய ஆசார மென்ன? தொலையாத கொடிய பாபங்களும் தொலையும்படியுள்ள மகா புண்ணிய தீர்த்தமாவதெது? இழிவான குலம்விட்டு மேலான ஜாதியாகும் பொருட்டுப் புண்ணிய க்ஷேத்திரமாவதெதுவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! வர்ணாசிரமாதி குலாச்சாரங்களும் விதிநிஷேதாதி தர்மகர்மங்களுமெல்லாம் காமியகர்மிகளுக்குடைத்ததாம். இதைத் தவிர அதி வர்ணாசிரமத்தோடு கூடிய ஒரு சற்குருவையடுத்து அருள்பெற்ற மஹான்கள் விதிநிஷேதமான கர்மங்களை ஆசரித்தாலும் அது நிஷேதமல்ல? தீராத கொடிய பாபங்களும் தொலையும் தீர்த்தமாவது ஸ்ரீ சற்குருவின் பாததீர்த்தமே கோடிபாப விநாசனமான கோடிதீர்த்த மென்றறிக. இழிவான ஜாதிவிட்டு மேலான ஜாதியாகும்பொருட்டு உபாயம் யாதெனில் ஸ்ரீ சற்குருவையடுத்து ஏவல் செய்வதாம். குருவின் போசன உச்சிட்டம் புசித்தால் குலமெல்லாம் அடியோடே பரிசுத்தமடையும்.

ஓ மனமே கேள்! எல்லாம் பிரம்மமயமாகப் பார்த்த மஹான்களின் கண் பார்வையினாலும், கை பரிசனத்தினாலும், ஆலிங்கனத்தினாலும் சர்வ பாவமும் அடியோடே நசித்துப் பரிசுத்தமாகுமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். இதை சுருதி முதலான பல நூல்களிலும் மஹாத்மாக்களும் கூறியிருக்கிறது. அது சத்தியமென்று நம்பாதபேர்களுக்குப் பாபமும் தொலையா, கர்மமும் தொலையா. பக்தியும் வராது. ஞானமுமடையா. இதைக்கேட்ட மனம்.

ஓ சுவாமி! இந்த உலகத்தின்கண் பிராணிகளில் பிரதானம் மானிட ஜன்மம் ஆதலால் மனிதர்களில் துக்கமற்று சுகமாயிருப்பவர்களாரென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மானிட ஜன்மமாவது எல்லாவற்றிலும் சிரேஷ்டம். அதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும் ஜனனகாலமுதல் மரணபரியந்தம் துக்கமில்லாமல் சுகமாயிருந்தவர்கள் ஒருவருங் கிடையாதென்பது சத்தியம்.

ஏனென்றால் புண்ணியபாப சமமாய் வந்தகாலத்தில் மாயா வசால் பிறப்பது மானிட சரீரம். இந்த மனிதர்களிலும் சிலர் பாபகர்மமெல்லாம்விட்டுப் புண்ணிய கர்மமே செய்வார்கள். அப்படியே புண்ணிய கர்மங்கள் செய்து பழகிவந்தாலும் அதில் கொஞ்சமானாலும் பாபமும்கூடி வந்து சேருவது சுபாவீகம். ஆனாலும் புண்ணிய மிகுதியிருப்பதாதலால் மரணமடைந்தபின் மேலான சுவர்க்கலோகங் கிடைக்கும். அப்படிச் சுவர்க்கத்திலிருந்தும் புண்ணியத்துக்குத் தகுந்தபடி போகங்களை அநுபவித்தபின் புண்ணியங் குறைந்து மிகுதிய புண்ணியம் பாபத்தோடு சமமானால் மறுபடியும் கீழே பூமியில் வந்து மானிட சரீரம் எடுப்பது சகஜம். இந்தப்படி மேலுங்கீழும் போக்கும் வரவுமாய் ஜனனமரணாதி துன்பங்களை அநுபவிப்பது சுபாவீகம். இதுவும் பந்தம்தான். ஆனாலும் இதுகளில் சுவர்க்கம் பொன்னின் சங்கிலியாம் பந்தம். நரகம் இரும்புச் சங்கிலியால் பந்தமென்றுமறிக. இந்தப்படி நரகமும், சுவர்க்கமும், ஜனனமரணாதி துன்பமும் அடிக்கடி அநுபவிப்பது சுபாவீகம். இந்தப்படி புண்ணிய பாபத்துக்குத்தகுந்தபடி கட்டுப்பட்டு மேலுங்கீழுமான நரகசுவர்க்கங்களை அநுபவித்தபின் பூர்வ வாசனைக்குத் தகுந்தபடி பூமியில் மானிட சரீரங் கிடைத்தாலும் சுகதுக்கங்களிரண்டும் அநுபவிப்பதும், அடிக்கடி ஆவதும், அழிவதும் சுபாவீகம். அதுவுமல்ல இந்த மூன்றுலகமும் சுகதுக்கமிச்சிர மூன்றும் சகசமாயிருக்கிறது. அதானது இந்திராதி தேவர்களானாலும் விட்டகுறை அநுபவியாமல் விடாதென்பது கருத்து. ஆதலால் மானிட ஜாதியாய்ப் பிறந்தால் எல்லாந் துன்பமாயிருந்தாலும் சகிக்க முடியாத துன்பம் ஐந்து. அதானது முதலாவது கர்ப்ப வாச துன்பம், இரண்டாவது ஜனன துன்பம், மூன்றாவது மரண துன்பம், நான்காவது எமதண்டனை துன்பம், ஐந்தா

16

வது நரக துன்பம், ஆனாலும் முன்கூறிய புண்ணியவான்களுக்கு எமதண்டனையும், நரகமுங் கிடையாது. மற்றப் பாபிகளுக்கெல்லாம் முன்கூறினபடியுள்ள ஐந்துவித துன்பங்களுமிருக்கும். இதைப் பாபிக ளறியமாட்டார்கள் ஏனென்றால் அறிவுடைய புண்ணியவான்கள் பாபம்செய்யாரென்பது கருத்து. ஆனாலும் புண்ணியவான்களுங்கூடி மயங்குவார்கள். ஏனென்றால் புண்ணியவான்களுக்கு எமதண்டனையும், நரகமும் இவ்விரண்டு மில்லாவிட்டாலும் கர்ப்பவாச துன்பமும், ஜனன துன்பமும், மரண துன்பமும் இம்மூன்றும் அடிக்கடி வந்துகொண்டே யிருக்கிறது. இதை மாற்றிக்கொள்ளும் உபாயம் எப்படி எனில் பலாபேக்ஷைவிட்டுப் புண்ணிய கர்மங்களை ஈஸ்வரார்ப்பணமாகச் செய்து பழகி வருவதானால் ஈஸ்வரப் பிரசாதமுண்டாகும். அப்படி ஈஸ்வரப் பிரசாதமுண்டானால் மஹாத்துக்களில் பக்தி விஸ்வாசம் வரும். அப்படி மஹாத்துக்களில் பக்தி விஸ்வாசம் வந்தால் ஒரு சற்குருவை அடையலாம். ஒரு சற்குருவை அடைந்தால் ஆண்டவனடிமையாக நம்பி சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் சேவிப்பதானால் கர்ப்பவாச ஜனனமரணாதி துன்பங்கள் அடியோடே நாசமடையும் பொருட்டு அருள் கிடைக்கும். அப்படி அருள் கிடைத்தால் அமுர்தாநந்த கைவல்லியபத மடையலாமென்பது சத்தியம். அங்ஙனம் எப்படியெனில் ஜனன மரணாதி துன்பங்களைவிட்டு மோக்ஷமடையும்பொருட்டு அபேக்ஷையோடுகூடி விடைய வைராக்கியத்துடன் ஒரு ஞானதேசிகரை அடுத்து உடல் பொருள் ஆவி மூன்றும் சத்தியமாய் அந்தக் குருவின் திருவடிக்கி அர்ப்பணமாக்கவேண்டும். அதாவது எப்படியெனில் ஜனனமரணாதி துன்பங்களுக் கேதுவான ராகத்துவேஷாதிகளுக்கு மூலகாரணமாயும், சத்தியமாயும், நித்திய சுகமாயுமுள்ள

பொருளை அபகரிக்கப்பட்டவர்களுமான தாரபுத்திரர்களா யுள்ள சோராளிடத்தில் விஸ்வாசமாகக் கொடுத்துவைத்த உடல் பொருள் ஆவி மூன்றும் பிடிங்கித் தன் கைவசமாக் கிக்கொண்டு அதைச் சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் சத்திய மாய் ஸ்ரீ சற்குருவின் திருவடியில் தாரைவார்த்து பாது காத்துப் பணிவிடை செய்து பழகிவரவே இறைவனருளால் முதலாவது மாயையின் சொரூபத்தை அறிவதாம். இரண் டாவது விவேகம், வைராக்கியம், சமாதி இந்தப்படி நான்கு சாதனங்கள் அவசியம் வேண்டும். மூன்றுவது நிர்ச்சங்கனு யிருந்து குருவைச்சேவித்து விஞ்ஞானம் அடையவேண்டும். நான்காவது குருவின் திருவருள் பெற்றபின் எதார்த்த ஞானம் அடையலாம். சந்தேகம் வேண்டாம். இந்தப்படி ஞேயமாயுள்ள பரமாத்ம வஸ்துவை அறியும்போது மாயா சம்பந்த மயமெல்லாம் அடியோடு நசித்து ஜனனமரணாதி துன்பங்களும் நீங்கி ஜீவன் முக்தி அடையலாம். இதைத் தவிர ஆசாபாசத்தில் கட்டுப்பட்டு ராகத்துவேஷாதி அபி மானத்தோடு கூடிய அஞ்ஞானிகளுக்கு இது கலியுகமாத லால் அவாளுக்குக் கலி எங்கும் பரிபூரணமாய் இருக்கிறது. நிராசையாய் அருள் பெற்று பரிபூரண ஆத்மாவாய் பிர்ம் மானந்தமாய் இருக்கும். மெஞ்ஞானிகளுக்கு இது கிரேதா யுகம் ஆதலால் அவாளுக்கு மாத்திரம் கடவுள் பரிபூரண மாதலால் கலி அணுவளவும் இல்லை என்பது சத்தியம். இதனுடைய உண்மை மஹத்துக்களை அன்புற்றுக் கண்ட வர்களுக்குத்தான் தெரியும்.

ஓ மனமே கேள்! பூமிமுதல் மூலமாயை பரியந்த முள்ள சர்வப் பிரபஞ்ச வஸ்துக்களுக்கும் ஈசனுய் இருந்தா லும் இகபரம் இரண்டிலும் சுகம் அணுவளவும் இல்லை. நிராசையாய் அருள் பெற்று நிர்ச்சலமாய் ஒன்றும் இல்லா

மல் சும்மாயிருக்கும் மஹாத்துக்களானவர்கள் யாரோ அவர்கள்தான் நித்திய சுகிகள் என்றும் அறிக. ஆத்மாவானது பரிபூரணமாயிருந்தாலும் காமகர்மத்தில் சிரத்தையுடைய அஞ்ஞானிகளுடைய அந்தரங்கம் ஆணவாதி மும்மலங்களால் மறைக்கப்பட்டதனுல் ஆத்மாவானது அப்பிரத்தியக்ஷமாயும் வெகு தூரமாய்த் தோற்றுவது சுபாவீகம். நிஷ்காமசர்க்கருமிகளாய் நிராசையாய் சற்குருபக்தராயுள்ள மஹாத்துக்களுக்கு ஆத்மா பரிபூரணமாயும் எங்கும் பிரத்தியக்ஷமாயும் இருக்குமென்பதே முன்கூறிய தாத்பரியம்.

மனம் ஓ சுவாமி! இதுகள் அப்படியிருக்க தாமச குணத்தில் பிறந்த ஜீவர்களுக்கு என்ன கதி என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சாத்வீகம், ராஜசம், தாமசம் என்று மூன்று குணம். இந்த மூன்று குணத்தில் பிறந்த ஜீவர்களில் தாமச குணத்தில் பிறந்த ஜீவர்கள் எல்லாம் அதோகதி அடைவார்கள். சாத்வீக குணத்தில் பிறந்த ஜீவர்கள் எல்லாம் ஊர்த்தகதி அடைவார்கள். ராஜச குணத்தில் பிறந்த ஜீவர்கள் எல்லாம் மறுபடியும் அடிக்கடி மானிடஜாதியாய்ப் பிறப்பார்கள். இந்தப்படி முக்குணத்தில் பிறந்த ஜீவர்களின் கதி. இப்படிக்கொத்த ஜீவர்களின் க்ஷேமத்தின் பொருட்டு ஞானம், கர்மம், பக்தி இதுகள் மூன்றும் புருஷார்த்த சாதனமாமென்றும் வேதங்கூறியது. இதுகளில் ஞானம் என்பது மோக்ஷஹேதுவாயும், கர்மம் என்பது பந்தஹேதுவாயும் இருக்கிறது. பக்தி சித்தசுத்தி காரணமாயும் இருக்கும். ஆனுலும் ஞானமாவது ஆத்மதரிசனம். ஆத்மாவானது அவ்வியக்தம். ஆதலால் அதைப் பார்ப்பது அசாத்தியம்.

மனம் ஓ சுவாமி! இதுகள் இப்படி கவலையாயிருக்க எப்படி ஜீவர்கள் கடைத்தேரும் மார்க்கம் என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! எதார்த்தக்ஞானம் அடைந்து மோக்ஷமடையும் பொருட்டு அபேக்ஷையுடைய மாந்தர்கள் பந்தத்துக்கு எதுவான கரும காண்டத்தை அடியோடு தூரத்தள்ளிவிட்டு மோக்ஷ்கதுவான ஞானகாண்டத்தை மேலாயும் மகிமை உடையதாயும் பாவித்து இது இரண்டுக்கும் மத்திபமான உபாசனா காண்டத்தில் இருந்தும ஸ்ரீ சற்குருவின் திருவடி பூசை முதலான பக்தியோகத்தை அனுஷ்டானம் செய்து பழகி வருவதானால் அந்தக்கரணம் பரிசுத்தமாகும். அந்தக்கரணம் பரிசுத்தமானால் இறைவன் அருளாகும். இறைவன் அருளானால் எதார்த்தக்ஞானம் கரதலாமலகம்போல் கைவசமாகும். இந்தப்படி உண்மையாய் எதார்த்தக்ஞானம் கைவசமானால் ஜீவன் முக்தி அடையலாம் சந்தேகம் வேண்டாம். இதற்கு ஸ்ரீ சற்குருவின் பக்தியன்றி உபாயம் வேறில்லை. ஸ்ரீ சற்குரு பக்தனுக்குப் பிதாவானது ஸ்ரீ சற்குருவாம். மாதாவானது சிற்சத்தியாம். சம்சாரமானது மூன்று குணங்களுமாம். ஆதலால் முக்குணம் மூன்றும் முத்தொழில்களும் மூன்று விதமான மூலவாசனையும் அடியோடு நசிப்பதே ஜீவன் முக்தியென்றும் அறிக.

மனம் ஓ சுவாமி! தாமசகுணம் மிகுதியாய் இந்தக் கலியுகத்தின்கண் அநேக ஜனங்கள் மகிமையுடைய வேதாந்த நூல்களை முகபாடம் படித்தும் கூட்டங்கூடிப் பிரசங்கம் செய்தும் ஆத்மாவானது ஏகம் என்றும், துவிதம் என்றும் குதற்கம்பேசி ஒன்றுக்கொன்று சண்டைபிடிக்கக் காரணம் என்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆத்மாவை மறைக்கப்பட்டது ஆணவாதி மும்மலங்களுமாம். அந்த மும்மலங்களும் அற்று ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்ற மஹான்களே அத்வைதிகள் என்றும் அறிக. அதானது அனுத்ம வஸ்துக்களாயுள்ள சத்தாதி விஷயங்களான இந்திரியங்களும் அநேக சங்கல்ப விகல்பத்தோடு கூடிய அந்தக்கரணமும் அடக்கி மனோலயம் அடைந்தால் அந்த மஹான்கள்தான் குணாதீதப் பொருளாயும், எதார்த்தக் ஞானிகளாயும், ஏகமென்றும், துவிதமென்றும் என்கிற பிடிவாதம் விட்டவர்களாயும் உள்ள மஹத்துக்களுக்கு ஆத்மாவானது ஏகம் இதைத் தவிர சப்தப் பிரமாணங்களினாலும், வாக்கு மனக்காயங்களினாலும் ஆத்மாவை அறியக்கூடியதல்ல என்கிற மஹா வாக்கியப் பிரமாணங்களே சத்தியம். சப்தப்பிரமாணங்களுக்குக் காரணம் வாக்கு, நாக்கு இதுகள் இரண்டு விடயங்களுமாம். இதுகளை உண்மைபாக நம்பிக்கொண்டிருப்பது மனம் ஒன்றேயாம். அத்வைதிகளான மஹத்துக்கள் இதுகளை அனுத்ம வஸ்துக்களாம் என்றும் அறிவார்கள்.

ஓ மனமே கேள்! இந்த உலகம் பொய். பொய் என்றும் அந்த பொய்யான வாக்கு மனக்காயங்களைக் கொண்டு பேசித்திரிவோர்களும் பொய் ஞானிகளாமென்பதற்குச் சந்தேகமுண்டா? ஏனென்றால் வாக்கு மனக்காயங்களாலும் எட்டாத வஸ்து ஆத்மாவாதலால் பொய்யான இந்திரியங்களினால் சொன்ன வாக்கியங்களெல்லாம் பொய். பொய் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஓ மனமே கேள்! இந்த உலகத்தின்கண் ஜீவர்கள் செய்யும் வினைகளெல்லாம் தன் செயலாமென்றும் சிலர், அதல்ல ஈசன்செயலாமென்றும் சிலர், ஆனால் இதுகளிரண்டு பாவனையும் ஜீவர்களுக்கெல்லாம் பந்தத்திற்கும் நரகத்திற்

கும் காரணம் இதைத்தவிர வேறில்லை. ஆதலால் தன் செயலென்றும், ஈசன் செயலென்றும் தோற்றப்பட்ட இரு பாவனையும் அதின் மூல வாசனையும் அடியோடே நாசமானால் ஜீவன் முக்தனுமென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். அங்ஙனம், எப்படி நாசமாக்குவதென்றால், முதலாவது பிராரத்துவ வசத்தால்தான் தான் செய்யும் கர்மங்களையெல்லாம் தன் செயலாக எண்ணாமல் ஈசன் செயலாக எண்ணி சர்வ கர்மமும் நிஷ்காமமாய் ஈஸ்வரார்ப்பணமாகச் செய்து பழகி வருவதானால் தன் செயல் அடியோடே நசிக்கும். தன் செயல் அற்றவிடத்தில் கருமவினைகள் அணுவளவும் வந்தணுகாதென்பது நிச்சயம். அங்ஙனம் தன் செயல் அற்றால் ஈசன் செயலுமில்லை. எப்படியெனில், கருமகர்த்தா ஜீவன், அதுகளுக்கெல்லாம் ஈசன் சாக்ஷிகாரணமாதலால் அவர் கருமகர்த்தாவல்ல. ஆதலால் ஜீவர்களுடைய கர்ம பந்தம் விட்டால் ஜீவன் முக்தனும்.

ஓ மனமே கேள்! முன் கூறியபடி தன் செயலாக எண்ணிச்செய்து பழகிவரும் கர்மங்களெல்லாம் ஈசன் செயலாமென்றும், அதல்லஜீவன் செயலாமென்றும் நினைப்பது மனம் ஒன்றேயாம். அப்படி மனதிற்குத் தோற்றக் காரணம், மூன்றுகுண மாயாசூத்திரத்தோடு கூடிக்கலந்திருப்பதாதலால் அந்த மனதிற்கு நானெனதென்கிற அகங்காரமும், அகமமதையும் உண்டாயிற்று. ராஜசம், தாமசம் இரண்டு குணங்களும் நாசமானால் அந்த ஜீவபாவனையும் தன் செயலும் அடியோட நசிக்கும். அப்படி ஜீவபாவனையும் ராஜச, தாமசமிரண்டும் அடங்கிவிட்டாலும் சாத்மீககுணமிருக்கும். அந்தச் சாத்மீக குணமிருந்தமட்டும் மனதிற்கு ஈஸ்வரபாவனை இருக்கும். அந்தச் சாத்மீகமானதைப் பரிசுத்தமான ஞானசிற்சக்தியில் அடக்கி அருள் பெற்றால்

அந்தச் சாத்மீககுணமும் அடியோடே நசிக்கும். இந்தப்படி மூன்று குணங்களும் நாசமடைந்து அருள் பெற்ருல் ஜீவன் ஏது, ஜீவன் செயலாவதேது, ஜீவனும் ஜீவன் செயலுமில்லா விட்டால் ஈசனென்பதும், ஈசன் செயலாவதும் பொய். எல்லாம் நிற்குணமொன்றேயாம். ஆனுலும் மனேலயத்தின் கண் சர்வசந்தேகங்களுந் தீர்ந்து பிர்ம்மானந்தமாய்த் தனிமே இருக்கலாம். அதற்கு முதலாவது சித்தம் பரிசுத்தமாக்கி ஸ்ரீ சற்குருவின் திருவருள் நான்கு மஹாவாக்கியப் பிரமா ணங்களாகிய சுருதி, யுக்தி அனுபவத்தினுல் அன்புற்றுப் பார்த்தால் ஜீவனே ஈசன், ஈசனே ஜீவன். இந்தப்படி ஜக ஜீவபரம் பரமாத்மா இதுகள் நான்கும் ஏகமாய், அபேத மாய், நிவாததீபம்போல் நிர்மலப் பிரகாசமாய் விளங்கும். அப்போது சர்வசந்தேகங்களுந் தீர்ந்து தெளிவடைந்து அருள் பெற்றுப் பரமானந்தபதமடையலாம். சந்தேகம் வேண்டாம். ஆனுல் இது மெய்யறி விளக்கமென்றும், பரமாநந்த விளக்கமென்றும் மஹாத்மாக்களின் நிச்சயம்.

மனம் ஓ சுவாமி! தொலையாத ஜனனத்தை இதோடே தொலைத்து இந்த ஜன்மத்தில் ஜீவன்முக்தி அடையும் பொருட்டு அப்பியாசம் செய்யும் முறை அடியேனுக்கு உபதேசித்தருளவேண்டுமென்று கேழ்க்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! காலங்கழிக்கும்பொருட்டு அப்பி யாசமாவது அனேகவிதம், அதுகள் எல்லாவற்றிலுஞ் சிறந்தது மோக்ஷமடையும் பொருட்டு ஞானப்பியாசம் செய்வதாம் என்றுமறிக. ஆனுலும் அதற்கு அதிகாரபேத முண்டு. அதாவது நரர்களின் க்ஷேமத்தின்பொருட்டு பக வான் ஆதிகாலத்தில் நான்கு வேதம் மூன்றுகாண்டமாக முறைமுறையாக கூறப்பட்டிருக்கிறது. அதானது ஞானம், கர்மம், பக்தி இதுகள் மூன்றும் மோக்ஷத்திற்கு முக்கிய

சாதனமாமென்றமறிக. இதுகளில் ஞானதி காரியாமவன் முதலாவது நல்ல விவேகசீலனுய் விடயங்களில் தீவிர வைராக்கியத்துடன் ஒரு சற்குருவையடுத்து சமாதி சாதனங்களுமடைந்து மும்மலங்களுமற்று அந்தக்கரணம் பரிசுத்தமாய் ஸ்ரீ சற்குருவின் திருவருள்பெற்ற மஹான்கள் தான் பூரணக்ஞானத்திற்கு அதிகாரியாம் என்றமறிக. வைராக்கியமில்லாது போகத்தில் இச்சையுடையவாளுக்கு கர்மகாண்டமே அதிகாரம். கொஞ்சங் கொஞ்சமாக மனச்சுத்தி வந்தவாளுக்குப் பக்தி காண்டமே அதிகாரமென்றும் வேதங் கூறப்பட்டிருக்கிறது.

ஓ மனமே கேள்! எல்லாவற்றிலும் சிறந்தது ஞானம் ஒன்றேயாம். வேறெ இல்லை, சந்தேகம்வேண்டாம் ஞான சூரியன் உதயமானுல் மனமான பத்மம் மலரும். அங்ஙனம், மனமான பத்மம் மலர்ந்தவுடன் அதில் அமுர்தமான மது விருக்கும். அந்த அமுர்தமான மதுவைப் பானஞ்செய்யும் பொருட்டு மதுவண்டைப்போல் திருஅவதாரமெடுத்து ஸ்ரீ சற்குருவாய் எழுந்தருளிவரும். அப்படி எழுந்தருளி வந்து அந்த அமுர்தமான மதுவைப் பானஞ்செய்து கொண்டு ஆனந்தமாய்ப் பரிபூணமாய்ப் பரந்தெங்கும் சஞ்சரிப்பார்கள். இந்த முறைப்படி அப்பியாசஞ்செய்து ஞானயோக மடைவதே சுத்ததத்துவக் ஞானமென்றும் யதார்த்தக்ஞானம் என்றும் அதனுல் நித்தியகைவல்லிய மென்றும் மஹான்கள் சம்மதம். இதைத்தவிர மற்றுள்ள சாஸ்திரக்ஞானமெல்லாம் புத்திச் சஞ்சலமாயும் துக்ககரமாயும் இருக்கும். ஏனென்றுல் தாமரை அரும்பாயிருந்த காலத்தில் தினசரி கோடிசூரியன் உதயமானுலும் மலருமா? மலராது. அதுபோல் சுத்தமில்லாதமனதிற்குக் கோடி ஞானசாஸ்திரங்களை உபதேசம் பண்ணினுலும் முகபாடம்

படித்தாலும் ஞானத்தின் கெந்தமானாலும் வருமா? வாா தென்பது நிச்சயம். ஆதலால் அதிருவிட்டு நடப்பவர்க ளெல்லாம் அசாத்யக் ஞானிகளாமென்றுமறிக. ஆதலால் முதலாவது அந்தக்கரணம் பரிசுத்தமடையாமல் சுயங்கிருத மாய் ஞான நூல்களைப் படித்தால் ஞானம்வாரா என்றும் அந்தக்கரணம் பரிசுத்தமானால் முன்கூறிய மதுவண்டைப் போல் பகவானே ஒரு குருவாய் எழுந்தருளிவந்து மனதுக் குள் நின்று ஞானோபதேசம் செய்வார். இதுதான் நித்திய சத்திய சுத்ததத்துவக்ஞானமென்றும் மஹான்கள் சம்மதம். சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! இதற்குச் சற்குருவினிடத்தி லுள்ள ஏகாந்த பக்தி விஸ்வாசம் ஒன்றே முக்கியசாதனம், இதைத்தவிரவேறில்லை.

மனம் ஓ சுவாமி! ஏகாந்த பக்தி என்பது ஒரு குருவையடுத்துச் சேவிப்பதாம் என்றும், அப்படி ஒரு வரை ஒருவர் சேவிப்பதானால் துவிதம்வாராதா? அப்படியே துவிதமாகச் சேவிப்பதானால் அத்வீதத்துக்கு விரோத மல்லவா? அப்படித் துவிதமாய்ச் சேவிப்பவனுக்கு அத் வீதக்ஞானம் எப்படி வருமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மஹா யோகிகளானாலும் மஹாக் ஞானிகளானாலும் மஹா பண்டிதரானாலும் பரமக்ஞான சற்குருவினிடத்திலுள்ள ஏகாந்த பக்திவிஸ்வாசங்கொண் டல்லாமல் ஏகமாயுள்ள பரமாத்மாவைப்பார்ப்பதரிது. இது சத்தியம். ஏகாந்த பக்தி எப்படியெனில் ஸ்ரீ சற்குருவின் திருவருளால் சர்வாந்திரியாமியாயும் சர்வசாக்ஷியாயும் ஏக மாயும் பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவைத்தவிர அணு வளவும் வேறில்லை என்கிற பரம விஸ்வாசமுள்ள ஏகாந்த பக்தி யோகிகளுக்குத் துவிதம் யெப்படிவரும். ஓ மனமே! நீ கருவிக்ஞானமான பாழுங்கிணற்றிலும் காமகர்மமான

ராகத்துவேஷாதியான சம்சாரசாகரத்தில் வீழ்ந்து கெட்டலேயாமல் குருவின் சரணாரவிந்தத்தில் பக்தி விஸ்வாசமானல் பரமானந்த பதமடையலாம். சந்தேகம்வேண்டாம்.

ஓ மனமே இன்னுங்கேள்! ஏகாந்தபக்தியினல் அடையும் பயனுவது பரமாத்மாவின் விடயம். அது ஞானசிற்சத்தி. அதானது பரமாத்மாவைத்தவிர வேறல்ல. அது தான் ஞானசிற்சத்தி என்றும் பிர்ம்மானந்த வஸ்துவென்றும் மஹான்கள் சம்மதம் ஆதலால் பரமானந்த சிற்சத்தியும் பரமக்ஞானமும் பரமபக்தியும் வேறு வேறல்ல. ஏகமாமென்றும் மஹான்கள் சம்மதம். நாமரூபாதி சர்வப்பிரபஞ்ச வஸ்துக்களிலும் சரீரத்திலும் உள்ள ஆசை அகமமதையும் அகங்காரமும் மகாமோகமும் நீக்கி அன்புடன் அருள்பெற்று ஆத்மா பரமாத்மாவில் ஐக்யமாய் ஆனந்தமாய் இருந்த மகாபக்தனுக்குத் துவிதாத்வைத சங்கற்ப விகற்பங்கள் அணுவளவும் இராதென்பது சத்தியம். சத்தியம். ஸ்ரீ சற்குருவின் திருவடி ஆணை சத்தியம்.

மனம் ஓ சுவாமி! இந்த உலகத்தின்கண் மோக்ஷத்தை விரும்பின ஜனங்கள் மகான்களே அடுத்து நம்பி சேவிக்க வேண்டுமென்றும் அப்படிச் சேவித்தால் ஸ்ரீ சற்குருவின் திருவருள்பெற்று பிர்ம்மானந்தபதம் அடையலாமென்றும் வேதசாஸ்திரபுராண இதிகாசங்களும் மஹத்துக்களும் கூறப்பட்டது சரி. ஆனல் இந்த உலகத்துக்கு மூல காரணமாயும் ஜகத் குருவாயுமுள்ள விநாயகமூர்த்தியை உபாசித்தால் போதாதா. இதைத் தவிர வேருெரு குரு உண்டா? இந்தப்படி எதார்த்தமிருக்க வேறே ஒரு குருவைத் தேடுவதும் அஞ்ஞானமல்லவாவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! நீ சொன்னது உண்மைதான்? அதற்குச் சந்தேகமில்லை. ஆனாலும், ஸ்தூலமாய்க் காணப் பட்ட சராசரப் பிரபஞ்ச விருக்ஷத்துக்கு மூலவித்தாயும், நிர்மலமாயும், பரிபூரணமாயும், குருவாயுமுள்ளது பிரணவ சொரூபம் ஒன்றுதான். அந்தப் பிரணவ சொரூபமே விநாயகமூர்த்தியென்றும், குருவென்றும் உலகர்சம்மதம்; சந்தேகமில்லை. ஆனால் அதைக்கண்டு உபாசிப்பது திரு மூர்த்திகளாலும் அசாத்தியம். ஏனென்றால், அவ்வியக்தமா யுள்ள விநாயகமூர்த்தியானது உலகசிருஷ்டிக்குமுன் ஏக மாயும், ஆனந்தமாயும், அரூபமாயும், பரிபூரணமாயுள்ள தாதலால் அதைமறைக்கபட்டதெதுவென்றால் மூலகுண் டலி ஒன்றுதான். அந்த மூலகுண்டலியாவது எதுவென் றால், பிரணவ சொரூபமான மூல விநாயகரும், சிற்சத்தி யான வல்லபைசத்தியும் ஏகமாய்க்கூடி இரண்டறக்கலந் திருப்பதாதலால் அதிலிருந்தும் தோற்றப்பட்ட ஸ்வயம் பிரகாசமாம் மூலகுண்டலி அந்த சத்திதான் தன் பதியான கணநாயகரை மறைக்கப்பட்ட தென்றறிக. அந்தக் குண் டலி சத்தி ஒன்றுதான் மூன்று குணத்துக்கும், மூவுலகத்துக் கும், மூன்று மூர்த்திகளுக்கும், மூலகாரணமாயும், அதீத மாயுமுள்ளதாதலால் அந்தக் குண்டலி வலையை அறுத்து சிற்சொரூபமாயும் பிரணவ சொரூபமாயுமுள்ள விநாயக மூர்த்தியைப்பார்த்து உபாசிப்பதற்குத் திருமூர்த்திகளா லும் அசாத்தியமாமென்றும் முன்கூறிய தாற்பரியம். ஏனென்றால், அந்தப் பிரணவசொரூபமானது குணா தீதப் பொருளாதலால் குணசங்கிகளாயுள்ள சம்சாரிகளுக்கு அதைப்பார்ப்பது அசாத்தியமாமென்றும் தாற்பரியம் ஆதலால் சராசரப் பிராணிகளும் அந்தக் குண்டலி வலைக் குள் பந்தப்பட்டிருக்கிறது. ஆதலால், அந்தக் குண்டலி வலையை அறுப்பது மஹாப்பிரயாசம். ஆனாலும், இதைத்

தவிர முன்கூறியபடி ஒரு ஞானதேசிகரையடுத்து அருள் பெற்றால் குண்டலி வலையை அறுக்கலாம்? அறுத்தால் சராசர பிராணிகளிடத்திலும் அந்த விநாயகரைப் பார்க்கலாம்? சந்தேகம் வேண்டாம். அப்படிச் சராசரத்திலும் விநாயக மூர்த்தியை உண்மையாகப் பார்ப்போமானால் தன்னிடத்திலும் ஒரு விநாயகரூபம் தோன்றும். இதற்குச் சந்தேகம் வேண்டாம். அங்ஙனம் எப்படியெனில், ஒரு சற்குருவை வை நம்பி இதுவே பிரம சொரூபம், அதுவே பிரணவஸ்வ சொரூபமான விநாயகமூர்த்தி என்கிற பக்திவிஸ்வாசமாகக் கண்டு சேவிப்பவர்களுக்கு விநாயகமூர்த்தி பிரத்தியக்ஷமாயிருக்கும். இந்தப்படி விநாயகமூர்த்தியைப் பார்ப்பவர்களுக்கு விநாயகமூர்த்தியே குரு, குருவே விநாயகமூர்த்தி இதுகளிரண்டல்ல, ஏகமாமென்றுமறிக. குருவானது பரமாத்ம ஞானசிற்சத்தி, அந்தப் பரமாத்ம ஞானசிற்சத்தியின் சுபாவீகம் எப்படியெனில், சர்வ பூதங்களுக்கும் அந்தரியாமியாயும், சர்வபூதங்களும் அந்த ஆத்மாவுக்கு அந்தரியாமியாயும் இருப்பதாதலால் அதை ஒருவருக்கும் பார்க்கமுடியாதென்பது நிஜம். இந்தப்படி சர்வபூதங்களும் தாங்கள் தாங்களுடைய ஆத்மவஸ்துவை தாங்கள் தாங்களுக்குத் தெரியவொட்டாமல் தன்னைத்தான் மறந்த மறப்பே ஆவரண சக்தி. இதின் முன்கூறினபடி அவித்தையிற் பிறந்த மனிதர்களில் ஒருவன் புண்ணிய விசேஷத்தால் வித்தியா மார்க்கத்தையடைந்து மஹாத்மாவாய்ப் பிறக்கும். அப்படிப் பிறந்தும் விஷ்ணுமாயையைத்தாண்டிப் பிறப்பறுத்த மஹான்கள்தான் சற்குரு. அப்படிக்கொத்த சற்குருவை ஒரு மனிதனாக எண்ணாமல் பரமாத்மாவாக நம்ப வேணும். அந்தப்படி பக்தி விஸ்வாசமாகச் சேவித்துப் பழகிவருவதானால், ஸ்ரீ சற்குருநாதன் கிருபையால் அந்த சிஷ்யனுடைய பரிபக்குவகாலம் பார்த்து அருள் செய்வார்

கள். அப்போது தன்னுடைய ஆத்மாவுக்குள்ளே சராசரத்தையும், சராசரத்துக்குள்ளே தன்னுடைய ஆத்மாவினையும் பார்க்கலாம். சந்தேகம் வேண்டாம். பேரின்பமான சுகமே நித்தியசுகம். அது ஸ்ரீ தேவியாமென்றுமறிக. அந்த ஸ்ரீ தேவியின் சொரூபமாவது சாந்தம். அதனுடைய சுபாவீகமானது பரமானந்தம். அந்தப் பரமானந்தமாயிருந்த ஸ்ரீ தேவி இருக்குமிடத்தில் சர்வ ஐஸ்வரியங்களும், எல்லா மகிமைகளும் நிறைந்திருக்கும். சிற்றின்பமான சுகமே துக்கம் அது மூதேவியாமென்றுமறிக. அதன் சொரூபமானது கோரமூடவிர்த்தியாம். அதன் சுபாவீகமானது ராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிசை, அசூசை, டம்பம், தர்ப்பம், அகங்காரம் இதுகள் பதின்மூன்றுமாம். இந்தப்படி ராகாதிவிர்த்திகள் பதின்மூன்றும் கூட்டங்கூடி யிருக்குமிடத்தில் எல்லாத் துன்பமும் நிறைந்திருக்குமிடம் என்று அறிக.

மனம் ஓ சுவாமி! இந்தப்படி இந்த உலகிடமெல்லாம், சுகதுக்கமிரண்டுமாய் இருப்பதென்றும் அருள் செய்தது சத்தியம். அதை அப்படியே உண்மையாக அடியேன் நம்பிக்கொண்டேன். ஆனால் இந்த உலகத்தின்கண் சுகதுக்கமிரண்டும் இரண்டாகப் பகுத்தவர் யார் என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! சுகதுக்க மிரண்டுக்கும் காரணம் மனம் ஒன்றேயாம். வேறு இல்லையென்பது சத்தியம்.

மனம் ஓ சுவாமி! சர்வப்பிராணிகளும் தன்மனமே தானாய், ஏகமாய் இருந்தும் அது இரண்டு விதமாய்த் தோற்றுவது சுபாவீகம். ஆனாலும் தன்னைத்தான் கொல்லும்படி நஞ்சைச் சாப்பிடுமா என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஏகமாய் ஆகாசம்போல் பரிபூரண மாய்ருந்த மனம் ஒன்றுதான். சர்வப் பிராணிகளுக்கும் மனமொன்றெனவறிக வேறில்லை. ஆனாலும், அநேக குண கர்ம பேதங்களோடுகூடி அநேகநேக விதமாயிருக்கும் சரீரம் அந்தந்தச் சரீரத்திலெல்லாம் நான் நான் என்கிற அநேக பாவனையோடுகூடிய அபிமானம் தோற்றுவது சுபாவீகம். அந்த அபிமானத்துக்குக் காரணம், அனாதியாயுள்ள சேர்க்கைவாசனைப் பழக்கம் ஒன்றுதான். வேறில்லை. ஆதலால், தன்மனம் தன்வசமாகாமல் வெறிபிடித்தவரைப் போலேயும், நாய் கழுதைகளைப்போலேயும், குரங்குகளைப் போலேயும், நானாவிதமாயலைவது சுபாவீகம். ஆதலால், ஆசாவாசனையோடுகூடி அகங்காரமாயிருந்த தன் மனமே தனக்கு நஞ்சாமென்றுமறிக. அந்த நஞ்சான மனமே எமன், அந்த மனமே ஆத்மவஞ்சகி, அந்த மனமே தனக்குப் பகையாளி, அந்த மனமே கொலையாளி, அந்த மனமே கொடும்பாவி, அந்த மனமே தனக்குச் சத்துரு வேறில்லை என்பது சத்தியம்.

ஓ மனமே கேள்! ஒரு சமயம் நின் மனம் மெய்யான வஸ்துக்களைப் பொய்யாக எண்ணுவதும், பொய்யான வஸ் துக்களை மெய்யாக எண்ணுவதும் சுபாவீகம். ஆதலால், நின்மனம் இரண்டுண்டோ, நீயே நீர், நின்னை நீயே நினைந்து பாரு உன் சந்தேகம் தீரும் இந்தப்படி நின்மனம் ஏகமா யிருக்க பந்து சத்துரு பேதமாயும், சுகதுக்க மிரண்டுமுள்ள தாயும், தோன்றுவதற்குக் காரணம் நின்மனமொன்றேயாம். ஆதலால், நின்மனமிரண்டாய்ப் பகுத்தது நின்மனமொன்றே யாம் வேறில்லை. இதற்குச் சந்தேகம் வேண்டாம்.

மனம் ஓசுவாமி! இந்தப்படியுள்ள மனதைக் கைவச மாக்கும்பொருட்டு மார்க்கமேதென்று கேட்க அறிவு கூறி யது.

ஓ மனமே கேள்! ஆத்மாவிலிருந்தும் தோற்றப்பட்ட மாயாவாசனையோடுகூடி நானென்கிற இந்த ஸ்தூல சரீரம், நானல்லவென்றறிந்தும், அந்தச் சரீரத்தைப் பகவானிடத்தில் சமார்ப்பணமாக்கி உபாசனைசெய்து பழகி வருவதானால், அகங்காரம் அடியோடு நசிக்கும். அகங்காரம் நாசமானால் தன் மனம் தன்கைவசப்படும் தன் மனம் தன் கைவசமானால் அந்த மனதைத் தானே ஜெயிக்கலாம், மனதை ஓட்டுவது மனதின் ஆசை ஒன்றுதான், ஆசைவிட்டால் மனம் கைவசமாகும். கைவசமானால் மூலமாயையும் மூவுலகும் ஜெயிக்கலாம்.

மனம் ஓ சுவாமி! இந்த உலகத்தின்கண் ஜனங்கள் அநேகவிதமாய்ப் பகவானைக் கும்பிடுவார்கள். அதுகளில் எந்தவிதமான பக்திசெய்தால் அகங்காரம் விட்டு மனோலயமடையுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அகங்காரத்தையடக்குவது யாராலும் அசாத்தியம். ஆனாலும், மூலமாயையைக் கடந்து அகங்காரத்தை அடக்கி அருள்பெற்ற மஹான்களையடுத்து நம்பி பக்தி விஸ்வாசத்துடன் பாதுகாத்துப் பணிவிடை செய்யவும் வாக்கு மனக்காயம் மூன்றும் குருவின் திருவடியில் சமார்ச்சனை செய்து பழகி வருவதானால் அகங்காரம் அடியோடே நசிக்கும். சந்தேகம் வேண்டாம். ஏனென்றால், மாயைக்குள்ள அவகாசம் சரீரம், பிர்ம்மத்துக்குள்ள அவகாசம் ஜீவாத்மா, இதுகள் இந்தப்படி சத்தியமாயிருக்க இதுகளிரண்டும் நானல்ல. இந்தப்படி குருபக்தி விஸ்வாசங்கொண்டும், சுருதி, யுக்தி அனுபவங்கொண்டுமல்லாமல் அதைத்தவிர அநேகவிதமான சாஸ்திரங்களைப் பாடம் படித்தாலும், அநேகவிதமான யெக்ஞதானாதி தர்மங்களினாலும், சந்நியாசம், யோகம் சமாதிகளினாலும், அகங்காரம்

சாந்தமாவது மகாகஷ்டம். எதைப் படித்தாலும், எத் தொழிலைச் செய்தாலும் அந்தக்கரணம் பரிசுத்தம்வரா என்பது நிச்சயம். அந்தக்கரணம் பரிசுத்தமானல், அகங்காரம் அடியோடே நசிக்கும். அந்தக்கரணம் சுத்தமாக்கும் பொருட்டு உபாயம் முன் கூறியபடியுள்ள பரமசற்குரு பக்தி விஸ்வாசம் ஒன்றுகொண்டு அந்தக்கரணம் பரிசுத்தமாகுமென்பது சத்தியம்.

மனம் ஓ சுவாமி! வசந்தகாலத்தில் நல்ல புஷ்பத்தின் பரிமளம் சந்தோஷமானதுபோல என் மனம் பரிசுத்தமானேன். நானென்கிற அகங்காரம் அடியோடே நசித்துவிட்டது. ஆனாலும் அடியேனுடைய சந்தேகமாவது, ஒரு புல்லைப் பிடிங்கினல் மறுபடியும் அதனுடைய வேரிலிருந்தும் முளைத்துத் தழைத்து காடாய் வந்துவிடுவதுபோல என் மனம் பரிசுத்தமாக்கி அகங்காரம் நசித்துவிட்டாலும் மூலவாசனை நசியாதிருக்கிறது. அதை நாசமாக்கும் பொருட்டு நின் திருவடி கிருபையால் திருவாய் மலர்ந்தருளவேணுமென்றும், சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து ஆனந்த பாஷ்பம் பொழிய உள்ளன்புடன் அஞ்சலியஸ்தனாய் நின்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! அநாதியான மூலவாசனையை நாசமாக்குவது மகாப்பிரயாசம். ஆனாலும், ஞானக்கினியில் அது சாம்பலாய் நாசமடையும், இதற்குச் சந்தேகம் வேண்டாம். ஆனாலும், மூலவாசனை எல்லாம் ஞானக்கினியில் தகிக்குமென்கிற விஸ்வாசமிருந்தால் ஞானக்கினியில் தகிக்குமென்பது நிஜம். ஞானத்துக்கு முக்கியமானது குரு பக்தி, குரு பக்தி உண்டாவதற்கு முக்கியமானது ஞானம், ஆதலால், ஞானம் பக்தி இரண்டும் ஏகமாமென்றறிக.

ஓ மனமே கேள்! குரு நிச்சயமாவது ஞானம், ஞானம் இல்லாமல் குரு நிச்சயம் வராது. குரு நிச்சயமில்லாமல் ஞானமும் வராது. ஆனாலும், எல்லாம் கடவுளின் சொரூபமாகப் பார்த்தால் என் மனம் குரு நிச்சயம் வாராதா? வரும். சந்தேகமில்லை. ஞானத்தை மறைப்பது அகங்காரம். அகங்காரம் நாசமானால் ஞானம் பிரகாசிக்கும். அகங்காரம் நாசமாகும்பொருட்டு உபாயம் எதுவென்றால், ஒரு ஞானதேசிகரையடுத்து தன்னறிவு பின்னிட்டு குருபக்தி விஸ்வாசம் முன்னிட்டுச் சேவித்துப் பழகி வருவதானால் அகங்காரம் அடியோடே நசிக்கும். அகங்காரம் நாசமானால் முக்குணங்களும், மும்மலங்களும் நீங்கி நிர்மலமாய் நிற்குண பரிபூரணானந்தமாயுள்ள ஸ்ரீ சற்குருவின் திருவருள் கிடைக்கும். ஸ்ரீ சற்குருவின் திருவருள் கிடைத்தாலும், நேதி நேதி மஹாவாக்கியங்களினாலும், அத்தியாரோப அபவாதத்தினாலும், அப்பியாச யோகத்தினாலும் எதார்த்தஞானமடையலாம். எதார்த்தஞானமடைந்தால் சர்வ கர்மமும் அதிலுள்ள மூலவாசனைகளும், அநேகவிதமான பாவங்களும், எல்லாம் ஞானக்கினியில் தகித்து நித்தியமாயும், பரிபூரணமாயும், உள்ள பரமானந்த பதமடையலாம் சந்தேகம்வேண்டாம. இது சத்தியம். இதைக்கேட்ட மனம் பரமானந்த சமுத்திரத்தில் மூழ்கித் தனுகரணாதிகளுங் குளிர்ந்து மேகத்தைக்கண்ட மயிலைப் போல மயிர்க்கூச்சலும், ஆனந்தப்பாஷ்பமும் பொழிய இருகையும் சிரசால் வணங்கிச் சாஷ்டாங்கமாய்த் தீர்க்க தண்டம் சமர்ப்பித்து உள்ளன்புடன் சஞ்சல சப்தத்தோடும் கிருதாஞ்சலியஸ்தனாய் நின்று கேட்கிறான்.

ஓ சுவாமி! அனாதியாய், ஆதியந்தமில்லாததாயுள்ள ஜனனமரணாதி சம்சார துன்பங்களுக்கு மூலகாரணமான

சரீர அகங்காரம் இறைவனருளால் இதோடே நாசமடைந்தது. அடியேனுடைய சித்தம் பரிசுத்தமாகித் தெளிவடைந்தேன். ஆனாலும், புல்லினால் காடாயிருந்ததைப் பிடுங்கிப் பரிசுத்தமாக்கினாலும் மறுபடியும் அதன்பேரிலிருந்தும் முளைத்துத் தழைத்தும் விருத்தியாய் முன்போல் என் மனம் பரிசுத்தமானாலும், மரத்தில் வித்துபோலவும், வித்தில் மரம்போலவும், அநேகநேக விதமாயும், அனாதியாயுமுள்ள மூலவாசனைகள் இருக்கிறது. அதுவும், நாசமாக்காமற்போனால் முன்போல் சித்தம் அசுத்தமடைந்து சம்சாரமான காடேறிவிருத்தியடையுமே. ஆதலால், அந்த மூலவாசனைகள் எல்லாம் அடியோடே வேரறுத்து நாசமாக்கும்பொருட்டு எப்படிக்கொத்த ஞானாக்கினி அடையவேண்டுமென்றும், கிருபையால் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! கர்மமிருந்தமட்டும் கோபாதி துர்க்குணங்கள் இருக்கும். கோபாதி துர்க்குணங்கள் எல்லாம் அடியோடே தூரத்தள்ளிவிட்டு சித்தம் பரிசுத்தமானால் கர்மம் செய்தாலும் சம்பந்தமில்லை. ஆனாலும், மூலவாசனை நாசமாகாமல் இருக்கும். அதை நாசமாக்குவது மஹாப்ப்ரயாசம். ஏனென்றால் வாசனைகளுக்கு மூலகாரணம் குணங்கள் மூன்றுமாம். ஆதலால் குணம் மூன்றும் அதன் தொழில்களும், அடங்கிவிட்டால் அருள்பெற்று ஆனந்தமாயுள்ள ஆத்மஞானமடையலாம். ஆத்மஞானமடைந்தால் சர்வ கர்மங்களும் அதன் மூலவாசனையும் பாவமும் எல்லாம் அந்த ஞானாக்கினியில் நசிக்கும்.

மனம் ஓ சுவாமி! சர்வவேதாந்த சித்தாந்தங்களுக்கும் முடிவானது நானாவிதமான விபகாரமுமற்று மவுனசமா

தியை அடைவதே சிலாக்கியமென்றும் அறிந்தேன். ஆனல், இந்த உலகத்தின்கண் ஞானிகளனேகவிதமுண்டு. மவுன சமாதியும் அநேகவிதமுண்டு. அங்ஙனம் எப்படியெனில், ஒருவர் மகாத்தியாகியாய் வெகுகாலம் மவுனசமாதியை அடைந்தும் மறுபடியும் விபகாரதிசையை அடைவார்கள். ஆனல், இதுகளில் உண்மைக்ஞானிகள் மவுனசமாதியை அடைந்து பிர்ம்மானந்தமாய் இருப்பது எப்படியென்று திரு வாய்மலர்ந்தருளவேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஞானிகளும் பலவிதம், மவுனசமா தியும் பலவிதம். அங்ஙனம் எப்படியெனில், சாஸ்திரக் ஞானிகள் தன்னுடைய தத்துவங்களை அடக்கும் உபாயத் தைப் பாராமல் அதை அடிக்கடியும் எண்ணி எண்ணிப் பாடம் படிப்பார்கள். ஆத்மயோகிகள் தன்னுடைய தத்து வங்களை அடக்கும் மார்க்கத்தில் இருப்பார்கள். ஆனலும், உண்மைக்ஞானிகளின் மவுனசமாதியின் இலட்சணமாவது சர்வசங்க பரித்தியாகம் ஒன்றேயாம். வேறில்லை சர்வசங்க பரித்தியாகமென்பதற்கு உரை. மனதைக்கொல்லுவதாம். அதாவது மனதைச் சாந்தமாக்குவதாம் என்றுமறிக. மனம் செத்தால் சங்கமேது? அங்ஙனம், மனதைக்கொன்று மவுன சமாதி அடைவது எப்படியெனில், முதலாவது இந்திரி யங்கள் பத்தும், அடக்கவேண்டும். இரண்டாவது கரணங் கள் நான்கும் அடக்கவேண்டும். இந்திரியங்களாவது, காதுங் கேள்வியும் செத்து, தோலும் பரிசமும் செத்து, கண்ணும் பார்வையும் செத்து, மூக்கும் நாற்றமும் செத்து, நாக்கும் இரசமும் செத்து, வாக்கும் வசனமும் செத்து, பாதமும் கமனமும் செத்து, கையும் தானமும் செத்து, பாயுரும் விசர்ச்சனையும் செத்து, உபஸ்தமும் ஆனந்தமும் செத்து, மனமும் சங்கற்பமும் செத்து, புத்தியும் திருவும்

செத்து, சித்தமும் சலனமும் செத்து, அகங்காரமும் அபிமானமும் செத்து, குணம் மூன்றும் செத்து, பந்தமோக்ஷபேதம் செத்து, அங்கசங்கமோகம் செத்து, அனுதியான மாயாவாசனையும்செத்து, இன்பதுன்பமிரண்டும் செத்து, இகபரபோகமும் செதது, பசி, தாகம், சீதளம், உஷ்ணம், இதம், அகிதம், விருப்பம், வெறுப்பம், சுத்தம், அசுத்தம், பேதம், அபேதம், சத்துரு, மித்துரு, ஜனனம், மரணம், புண்ணியம், பாபம், சுகம், துக்கம், நரகம், சுவர்க்கம், வர்ணம், ஆசிரமம், மானம், அபிமானம், பயம், வெட்கம், பிரியம், அப்பிரியம், நான், நீ, எனது, உனது, இதுகள் எல்லாம் செத்து, இரவும் பகலும் அற்று, மூன்று அவஸ்தையும் விட்டு, சமமாய் ஆகாசம்போல் பரிபூரணமான துரிய நிலையை அடைந்து, நித்தியமாயும், நிர்வாணமாயும், விம்தகானந்தமாயும் உள்ள நிற்விகர்ப்ப சமாதியை அடைந்தும், துரியாதீதமாய் இருப்பதே உண்மைஞானிகளுடைய மவுன சமாதி என்றும் அறிக. இப்படிக்கொத்த சற்குருவின் திருவடிக்கு மனசா வாசா காயால் அனவரதம் நமஸ்காரம். இப்படிக்கொத்த மஹான்கள் மவுன சமாதியை விட்டு விபகாரதிசை அடைந்தாலும் போகத்தை அனுபவித்தாலும் மலமற்ற ஆகாசம்போல் பரிபூரணமாய்ப் பற்றற்று எங்கும் பிரகாசமாய் இருப்பார்கள்.

இதைக்கேட்ட மனம் நித்தியானந்தமாயுள்ள பெரும் வெள்ளத்தில் மூழ்கி, அநேக தீர்க்கதண்டமிட்டு அஞ்சலியஸ்தனாய் நின்று கேட்கிறான்.

ஓ சுவாமி! நின்திருவடி திருவாய்மலர்ந்தருளிய தத்துவமசி மஹாவாக்கியமென்றும் சாரோபதேசமான சத்தியப் பிரமாணங்களைக் கேட்டு அடியேனுடைய சந்தேகம் எல்

லாம் தீர்ந்து தெளிவடைந்தேன். ஆனாலும் தேவரீர் முன் கூறியபடி ஜகஜீவபரம் இவைகள் மூன்றும் பரமாத்மாவில் ஐக்கியமாய் அந்த ஐக்கியமுந்தாண்டி துரியநிலையுங்கடந்து துரியாதீதமாயுள்ள பரமபதம் அடைந்த மஹாத்துமாக்களின் சரீரம் வியோகமானால் சமாதிவைத்துப் பூசைசெய்தால் அதன் பயனாவது என்ன. அந்த ஞானிகட்கோ அதுமல்ல மற்ற உலகத்தார்க்கோ என்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! இந்த உலகத்தின்கண் பூமியிலுள்ள மனிதர்களின் ஒருவரானாலும் சரீரம் இகபரத்திலுள்ள சுகத்தில் ஆசைவிட்டு மோக்ஷம் அடைந்தால் அவாள்தான் உலகத்தில் பெரியவாள் என்றும், வேதாகமபுராண இதிகாசங்களிலும் மஹாத்துக்களும் கூறியிருக்கிறது. அப்படிக்கொத்த மகத்துக்கள் மோக்ஷம் அடைந்த சன்மார்க்கத்தை மறவாமல் கற்பகாலபரியந்தம் உலகத்தில் சத்கீர்த்தி விளங்கும் பொருட்டாயும் பாவம்போக்கி பரிசுத்தமாகும் பொருட்டு பெரியவாளை சமாதியில்வைத்து பூசைசெய்ய வேண்டியது அவசியம். அப்படிச் செய்யாமல் போனால் அந்த ஞானிகளுக்குள்ள பிர்ம்மானந்தபதவி அணுவளவும் குறைவில்லை என்பது சத்தியம். ஆனாலும் முன்னோர்களான சாதுக்களின் சமாதி நினைப்பதும், அவர்களுடைய சரித்திரங்களைப் படிப்பதும், இன்னுமுள்ள சாதுக்களின் பாத பூசை செய்வதும், பஞ்சதானங்களைச் செய்வதும், மகோத்ஸவங்களை நடத்துவதும் உலகத்திற்கு மெத்தவும் க்ஷேமம்.

ஓ மனமே கேள்! இந்திரியங்களும் மனதும் அடக்கி அருள்பெற்று ஆத்மாவில் ஐக்கியமாய் கண் மூடிமவுனியாய் சமாதியடைவதே மெய்யான அத்வீதபக்ஷம்.

ஓ மனமே கேள்! பூசையாவதின் பிரயோசனம் மன சங்கல்பமடக்கும்பொருட்டே அல்லாமல் வேறில்லை. மன

சங்கல்பம் அற்று உபசாந்தமானல் அந்த ஞானிகளுக்குச் சமாதியில் பிரயோசனம் இல்லை என்பது நிச்சயம். அவாள் எங்கும் பரிபூரணனந்தம் என்று அறிக. ஆனாலும் அப்படிக் கொத்த எதார்த்தக்ஞானிகள் இந்த உலகத்தின்கண் கோடியில் ஒருவர் இருந்தாலும் இருக்கும். இதைத்தவிர சரியை, கிரியை, யோகம் இவைகளில் இருந்தும் சரீரம் வியோகமானல் அந்த ஜீவர்களுக்கு சூக்ஷ்ம சரீரம் உண்டு. அந்த சூக்ஷ்ம சரீரத்திற்கும் ஸ்தூல சரீரத்தைப்போல் பசி தாகாதி சுகதுக்கங்களும் உண்டு. ஆதலால் அதுகளுக்குப் பூசை செய்யவேண்டியது அவசியம். அதாவது சந்நியாசி முதலான சாதுக்களைச் சமாதிவைத்து ஈஸ்வரபக்தியுடன் பிதுர்தேவாதி திருமூர்த்திகளை உத்தேசித்தும் மஹா ஞானிகளின் பாதபூசை செய்வதாம் சமாதி பூசை என்றும் குரு பூசை என்றும் அறிக. ஆதலால் சரியை, கிரியை, யோகம், ஞானம் இதுகளிருந்தும் ஸ்தூலசரீரம் விட்டபின் அதிகாரத்துக்குத் தகுந்தபடி சாலோக சாமீப சாரூப்ய சாயுஜயம் இந்தப்படி நாலுமுக்தி உண்டு. ஆதலால் முன்கூறினபடி சமாதிபூசை செய்தவாளும் அந்த ஸ்தானம் அடையலாம் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம். ஆதலால் பெரியவாள் சமாதி பூசையாவது எல்லாவற்றிலும் சிறந்தது. அதாவது கருமமுடிவான தந்திரமாம். அது, ஜன்மசாபல்யமாம் என்று அறிக.

ஆதலால் சமாதி பூசை செய்வது உலகத்துக்கு மெத்தவும் நன்று நன்று. இதனல் தர்மார்த்த காமமோக்ஷ நாலுமடையலாமென்பது சத்தியம். இதனல் எல்லா மூர்த்திகளும் பிதுர்தேவாதிகளும் திருப்தியடையும். எல்லாப் பலனுமடையலாம். ஒரு பெரியவாளைச் சமாதிவைத்துப் பூசித்தால் அது சராசரத்துக்கும் பூசையாம். அது பிர்ம பூசையாமென்றுமறிக.

ஓ மனமே இன்னுங்கேள்! குருபூசையானது எல்லா யெக்கியங்களிலும் சிறந்ததான பிர்ம யெக்கியமென்றும் கர்ம முடிவானதென்றும் ஜன்ம சாபல்யமாமென்றும் வேதங்களிலும் மஹத்துக்களும் கூறப்பட்டது. சத்தியம். ஆதலால் அதை உண்மையாக நம்பவேணும். குருவானவர் யாரென்றால் நான்கு வேதங்களுக்கும் மூன்றுகுண மூர்த்திகளுக்கும் அதீதமாயுள்ள நிர்க்குண மூர்த்தியாமென்றும் அறிவதே பரோக்ஷக்ஞானமென்றும் அருட்ஞானமென்றும் இதனால் எதார்த்தக்ஞான மடையலாமென்றும் இதைத்தவிர சாஸ்திரக்ஞானிகள் இதை நம்பமாட்டார்கள். ஏனென்றால் ஸ்ரீ சற்குருவின் திருவருள் இல்லாமல் ஞான நூல்களைப் பார்த்து சாஸ்திரக்ஞான மடைந்ததாதலால் அவர்களுக்கெல்லாட் குரு மூன்றுகுண மூர்த்திகளாமென்றும் அந்த மூன்றுகுண மூர்த்திகளையும் குருவாகத் தான் கண்டது போல் கொண்டாடிப் பேசித்திரிவார்கள். ஞானிகள் இதைப் பார்க்கில் திருமூர்த்திகளும் குணதத்துவங்களாமென்றும் அறிவார்கள். சர்வஜீவர்களுக்கும் குருவானது பரமாத்மா. அது குணரகிதமாயும், நாசரகிதமாயுமுள்ள பரமாத்மா ஒன்றேயாம். வேறில்லை என்பது நிச்சயம். அந்தப் பரமாத்மாவினுடைய அம்சமானது ஜீவாத்மா. அதனால் ஜீவாத்மாக்களெல்லாம் பரமாத்மாவுக்கு சிஷ்யர்களாமென்றும் அறிக. ஆதலால் ஜீவர்களுக்கெல்லாம் பிதாவாயும் குருவாயுமுள்ள பரமாத்மாவைப் பார்ப்பதுதான் ஐக்கியமென்றும் மோக்ஷமென்றும் மஹான்களின் சம்மதம். அங்ஙனம் எப்படியெனில், அனாதிகாலமாய்ப் பிதாவை விட்டு வெகுதூரம் போய்வந்த புத்திரன் பிதாவைப் பார்த்தான். அந்தப் பிதாவுக்கு மகனிலுள்ள சந்தோஷம்போலே அனாதிகாலமாய் பரமாத்மாவிலிருந்து பிரிந்த ஜீவாத்மா பரமாத்மாவினை பார்க்கும்போது அட்சணம் ஐக்கியமாம் என்

பது நிச்சயம். அங்ஙனம் ஐக்கிமானபின் ஜீவனென்பதும் பொய். ஐக்கியமென்பதும பொய். குரு வென்பதும் பொய். சிஷ்யனென்பதும் பொய். நானொருவன் மெய் யென்பதும் பொய். இந்தப்படி மெய் பொய் இரண்டும் மனோலயத்தின்கண் பரமானந்த பரிபூரண பரமஜோதியாய் விளங்கி யேகமாய் என்றைக்கும் உள்ளது அதுதானென் றும அறிவதே மெய்யறி விளக்கமென்றும் மஹான்கள் சம்மதம் சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

ஓ மனமே கேள்! இந்தக் கலியுகத்தில் மனுஷியர்களு க்கு கர்மத்தினால் கடைத்தேரும்பொருட்டு மார்க்கமில்லை. ஏனென்றால் தாமசகுணமதிகமாகையால் எக்ஞாதிகர்மங் களையெல்லாம் விலக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் எல்லா எக்கியங்களிலும் சிறந்தது பிர்மயெக்கியமாமென்றும், அது சாதுக்களில் பாதபூசை செய்வதே பிரதானமென்று மறிக.

ஓ மனமே வாரும். நான் சொல்வதைக் கேளும். உனக்கு நான் முன் கூறிய மெய்யறி விளக்கத்தின் சாரமா னது சுருக்கமாய் இன்னமுனக்குச் சொல்லுகிறேன்கேளும். இந்த உலகத்தின்கண் சராசர குருவாயும் ஸ்ரீ மகானுபாவ ராயுமிருந்த ஸ்ரீமான் ஆதி சங்கராச்சாரியஸ்வாமிகளவர்க ளால் இயற்றியதின் சாரமான ஒரு ஸ்லோகம் அல்லது இரண்டு மூன்று ஸ்லோகம் உனக்கு நான் சொல்லுகிறேன். அதை நீ உண்மையாக நம்பி இரு காதினாலேயும் கேட்டு சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் நெஞ்சிலே இறக்கி அங்கே அசையாமல் நிலையிலே நிறுத்தி நிர்மலமாய்ப்பாரும் அப் போது உன்னுடைய சந்தேகமெல்லாந் தீரும். ஜனன மரணாதி துன்பமும் நீங்கும் நிர்மலமாய்ப் பிர்மானந்தபத மடையலாம். அதாவது.

ஞானநிமித்தம் குருவுபதேசம்
கலகநிமித்தங்கடோறவாக்யம்
மரணநிமித்தம்குணவிபரீதம்
உதரநிமித்தம்வெகுகிருதவேஷம்
பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
கோவிந்தம்பஜமூடமதே. 1

புனரபிஜனனம்புனரபிமரணம்
புனரபிஜனனிஜெடரேஜயணம்
இஹஸம்ஸாரேவெகுதுஷ்தாரே
க்ருபையாபாரேபாரிமுராரே
பஜகோவிந்தம்பஜகோவிந்தம்
கோவிந்தம்பஜமூடமதே 2

சஸ்ஸங்கத்வேநிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வேநிர்மோஹத்வம்
நிர்மோஹத்வேநிச்சலதத்வம்
நிச்சலதத்வேஜீவன்முக்தி:
பஜகோவிந்தம்பஜகோவிந்தம்
கோவிந்தம்பஜமூடமதே. 3

அதாவது உலகமெல்லாம் மனோபாவனைதான். மனோபாவனையற்றால் மனமுண்டா? இல்லை. மனமில்லாவிட்டால் ஜெகத்துண்டா? அதுவும் பொய். ஜெகத்துமில்லாவிட்டால் குணமுண்டா? குணமூன்றுமில்லாவிட்டால் பந்தமோக்ஷமுண்டா? பந்தமோக்ஷமிரண்டுமில்லாவிட்டால் ஜன்மசாபல்யமாகும். அதுவே நித்திய கைவல்யமென்றும் பரமபதமென்றும் பிர்மானந்தபதவி யென்றும் மஹாத்துமாக்களும் சுருதி வேதாதிபுராண இதிகாசங்களும் கூறப்பட்டதின் முக்கிய தாற்பரியம். இதுவே சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!! இதை நம்புமானால் உனக்கினிமேலும்

நான் உபதேசப் பண்ணுகிறேன். அதை நீ உண்மையாய் நம்பி என்னிடத்தில் அன்பாய்க் காதுகொடுத்துக் கேளும். சரீரமே நானென்கிறபுத்தி இந்த உலகத்தின்கண் சர்வப் பிராணிகளுக்குமிருக்கிறது சகஜம். இநதப் பாவனையானது மகாமோஹ மாதாவான அவித்தையாம் என்றும் நிச்சய மாய் நீ அறி. இந்த உலக சுபாவீகமானது சுத்தப் பொய் யாயும் பரிசுத்த மெய்யாயுமிருக்குமென்பது சத்தியம். அதில் பொய்யை நீக்கி மெய்யறிவு வருவது மகாப்பிரயாசம். ஆனாலும் மெய்யறிவும் பொய்யறிவும் இவை இரண்டிற்குங் காரணம் மனம் ஒன்றுதான். மனமென்பது மாயை. அதானது அனேக சங்கற்ப விகற்பத்தோடு கூடியதே மன தின் சொரூபம். சங்கற்ப விகற்பம் விட்டால் மெய்யும் பொய் பொய்யும் பொய். மெய்பொய் இரண்டுமில்லா விட்டால் மனமேது, ஜகத்தேது, ஜடமேது, பந்தமோக்ஷ மேது, ஜனனமரணாதி துன்பமேது ஒன்றுமே காணவில்லை.

ஓ மனமே கேள்! இந்தவுலகத்தின்கண் பிராணிக ளுடைய சுகம் ஸ்திரீபோகாதி விடையங்களும் சமுசாரங்க ளும் சொர்ப்பன சமானமாம் என்றுமறிக. இந்தத்தேகமோ நித்தியமல்ல. அநித்தியம். அதாவது நீர்க்குமிழிக்குச் சமானம். இந்தத்தேகம் ஜனனமெடுத்தகாலத்திலே இதற்கு நாசமுமுண்டு. இதைப் பிராணிகளுக்குத் தெரியாமல் மூல மாயைக்குள்ளே யிருப்பார்கள். அந்த மூலமாயையிலிருந் தும் சாந்தகோரமூடமாய் மூன்றுகுணந் தோன்றியது. அதுவே பிரத்தியக்ஷ மாயையின் சொரூபம் இதுவே மூன் றுலகம். இந்த மூன்று குணபேதமே ஜனனமரணாதி இன்பதுன்பங்களுக்கும் பந்தமோக்ஷத்திற்கும் காரணம் என்றும் மஹாத்துமாக்களுடைய சம்மதம், சத்தியம். இந்த உலகமானது அவித்தையின் சொரூபமாம் என்று

அறிக. அங்ஙனம் உலகம் உற்பத்தியானவுடன் காலமாய் இருக்கிற ஒரு (அஹி) நம்மைப் பிடித்துக்கொண்டது (அஹி) என்பதற்கு அர்த்தம் ஒரு சர்ப்பம். சர்ப்பத்திலும் பெரிதானது மலைப்பாம்பு. அந்தக்காலமான மலைப்பாம்பின் வாயிலே சர்வ பூதங்களும் பிறந்தது. அதுவே காலாந்தத்தில் சர்வத்தையும் சாப்பிடும். அங்ஙனம் எப்படியெனில் ஒரு மாதாவின் உதரத்தில் நாம் பிறந்த சமயமுதல் நம்மைக் கொல்லும்படியான எமனும் நம்மோடு கூடப் பிறந்தது. அதுவே நம்மைப் பாதுகாத்துப் பலநாளிருந்தாலும் ஒரு நாள் நம்மைச் சாப்பிடும் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம். அந்த மிருத்துவின் அவசானகாலமான மரணம் வரையிலும் சர்வப் பிராணிகளுக்கும் சரீரபயமும் எமபயமும் இருக்கும். அதாவது மாயாபத்தியாகிய ஜனங்களுக்கு நெடுநாள்வரை ஜீவித்து இருந்தாலும் இந்த அவஸ்தை தெரியாது. அதானது பிறந்த காலமுதல் சரீரம் நாசமாய்ப்போகும் என்கிற அவஸ்தையை இன்ன சமயம் என்று தெரிந்தும், தெரியாமல் அகங்காரத்தினாலும் அபிமானத்தினாலும் அஞ்ஞான விபரீத சந்தேகத்தினாலும் மறந்துவிட்டது. சரி, அங்ஙனம் எப்படியெனில் மாயா மோகத்தை அடைந்த பிராணிகளுக்கெல்லாம் இதுவே பகலென்றும், இதுவே இரவென்றும், இனிமேல் பகல் வருமென்றும் இந்தப்படி நெடுநாளிருக்குமென்றும் சிந்தித்துக்கொண்டிருந்த பேர்களுக்கு கடிகாரம்போல் மின்னிட்டு மின்னிட்டுத் தன்னுடைய ஆயுசுக்கம்மியாய்க் கடைசி நாசமாய்ப்போகும் என்பது தெரியாது. ஏனென்றால் மாயா மோகமான சமுசாரசாகரத்தில் ஆழ்ந்து கிடப்பவர்களுக்கு இந்த அவஸ்தை தெரியாது. அங்ஙனம் எப்படியெனில், ஒரு பாம்பானது ஒரு தேரையைப் பிடித்ததுபோல காலமான சர்ப்பம் ஜனனம் எடுத்த காலமுதல் காலின் பெரு

விரல் நுனியிலே பிடித்துக்கொண்டது. அந்தப்படி பிராய காலம் பரியந்தம் பாம்பின்வாய்த் தேரையைப்போல் நாமிருக்கிறோம் என்றும் அஞ்ஞானிகளுக்குத் தெரியாது. அந்தப் பிராயகாலத்திலுள்ள போகத்தை அனுபவித்தும் தன்னுடைய ஆயுசு வீணாய்ப் போகிறது ஒருவருக்கும் தெரியாது. பிராயகாலமான சமயம் அந்தத் தேரையின் உடலை அந்தப் பாம்பு வாயிலே அடக்கிக்கொண்டது அந்தச் சமயம் அந்தத் தேரையானது மரணபயத்தினால் வாயைத்திறந்து (ஆ ஆ) என்று கத்தினது. அதேசமயம் தெய்வகதியால் ஒரு ஈயானது தானே பறந்துவந்து அந்தத் தேரையின் வாயிற்குட்பட்டது. அந்தச் சமயம் அந்தத் தேரையானது வாயை முறுக்கி இந்தச் சமயமிது நல்ல சுகமென என்றெண்ணிச் சாப்பிட்டது.

இதுபோல் மிருத்துவிற்கு இறையாய்ப் பிறந்த மானிடர்களும் நெடுநாள் வரை ஜீவித்து இருந்தாலும் மரணமடையும் என்பதற்குச் சந்தேகம்வேண்டாம். அந்த பாம்பின் வாயிற்பட்ட தேரையைப்போல் மிருத்தியுவான எமனுடைய வாயிற்குள்ளே பட்டிருந்தும் வெகுகாலம் போனாலும் அற்பமாயும் அனித்தியமாயுமுள்ள ஸ்திரீபோகாதி விடயசுகங்களின் இச்சைகொள்வது சுபாவீகம். இந்தப்படி அற்பபுத்திகளாய் சம்சார சுகத்தையே அடைவார்கள். ஆதலால் தேகாபிமானத்தையும் சம்சாரத்தையும் தூரத் தள்ளிவிடுவதே யோகம். குருவாக்கியப் பிரமாணங்களினால் சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் ஜீவாத்மாவினை அந்தக் குருவாம் பரமாத்மா விலக்ஷ்யம்செய்து சிவசத்தி இரண்டுமாய் இரண்டறக்கலந்து ஏகமாய்ப் பரமானந்த பரிபூரணமாய் இருப்பதே ஞானம். இதுவே முன்கூறிய மெய்யறிவு விளக்கத்தின் சுருக்கமான தாற்பரியம்.

ஓ மனமே கேள்! என்னிடத்தில் என்கிட்டேயிருந்து நீ என்னைப்பிரியாமல் பக்திவிஸ்வாசத்துடன் கேளும். தத்துவமசி மஹாவாக்கியத்தின் சாரமான பொருளை உனக்கு நான் சொல்லுகிறேன் கேட்பாயாக. நீ நான் என்கிற இருபாவனைக்கு நடுவிலே பரமாத்மா ஏகமாயிருக்கிறது. அதுவே பரமரகசியம். ஆனாலும், நான் நீ என்கிற இரண்டு மற்ற இடத்திலே பரமாத்மா பரிபூரண பரபரமானந்தமாயும் சத்யமாயும் நித்தியமாயும் சச்சிதானந்தமாயும் என்றைக்குமுள்ள பொருளாயுமுள்ள தென்றும் அறிவதே பிர்ம்மக்ஞானம் என்று அறிக. இதை நான் உனக்குச் சொன்னவார்த்தை உண்மையாக என்னை நீ நம்பி நின் இரண்டுகையும் சிரசால் வணங்கி கைத்தாளம் போட்டுக்கொண்டு மஹாஜனங்கள் கூடிய சபையில் மத்தியத்தில் நின்றும் உபந்நியாசங்களைச் செய்யலாம். இதனால் நீயும் நின்னையடுத்தபேர்களும் நின்வம்சத்தில் இருபத்தோரு தலைமுறையுள்ள பிதுர்க்களும் நீயும் பரிசுத்தமாய்ப் பரமானந்தபதம் அடையலாம்.

ஓ மனமே! என்கிட்டவா இன்னுங்கேள் நீ எனக்கு அன்புள்ள மனைவியைப்போல் இஷ்டசகியாயும் பந்துவாயும் இருப்பதாதலால் உனக்கு நான் பரமரகசியமாயும் ஏகாந்தமாயும் பிரம்மானந்தமாயுமுள்ள வேதாந்தசாரத்தை உபதேசிக்கிறேன். அதானது, மானிடப்பிறவியில் ஜன்மசாபல்யமாவது மோக்ஷம். மோக்ஷ என்பதின் தாற்பரியம் ஸ்தூலசூக்ஷ்ம காரணம் என்றும் மூன்று சரீரம். இந்த மூன்று சரீரத்தையும் விட்டு மனோலயமும், வாசனக்ஷயமும், தத்துவபோதமும் அடைவதுதான் மோக்ஷம். அங்ஙனம், அநாதியாயுள்ள கருமத்தின் மூலவாசனையும் மனதும் நாசமாக்கித் தத்வபோதம் வந்தால் முன்கூறிய மூன்று

சரீரமும் கிடையாது. இந்தப்படி மூன்று சரீரமில்லாவிட்டால் உண்மைஞானம் விளங்கும். உண்மை நிலை அடைவதே மோக்ஷம். அங்ஙனம் யாதெனில் ஸ்ரீ சற்குருவின் திருவருட்பிரசாதத்தினால் அறியவேண்டும். சற்குருவானது பரமாத்மா. பரமாத்மாவின் ஸ்வரூபமானது பரமானந்தம். அங்ஙனம் பரமானந்தமாயும் ஏகமாயும் பரஞ்சோதியாயும் தீக்கொள்ளிபோலவும் இருக்கும். அந்த அகண்டமான தீக்கொள்ளியிலிருந்தும் மாயாக்காற்றினால் மூன்று குணபேதமாக அநேகாநேகம் பொரிகள் பறந்தன. அந்தப் பொரிகள்தான் பலவித கருமிகளான ஜீவர்கள். ஆனாலும் முன்கூறிய தீக்கொள்ளியிலிருந்தும் பறக்கப்பட்டத் தீப்பொரிகள் எல்லாம் விருத்திக்ஷபமடைந்து மனோலயம்வரும் நாள் வரைக்கும் நானாவிதமாய் அலைவதே சுபாவீகம். அங்ஙனம், தீக்கொள்ளியிலிருந்தும் மாயாக்காற்றினால் பறந்துபோன பொரிகளை எல்லாம் அந்தத் தீக்கொள்ளி தன்னிடம் சேரும்படி கூப்பிட்டால் வருமா? வராது. அதுபோல் அகண்டபரிபூரணமாயும் பரம்ஜோதியாயும் சச்சிதானந்த ஸ்வரூபமாயும் ஏகமாயுமுள்ள பரமாத்மாவிலிருந்தும் பிறந்த ஜீவர்கள் எல்லாம் ஜீவகாருண்யமுடைய பகவான் தன்னை அடையும்பொருட்டு வாவா என்று கூப்பிட்டாலும் வருமா? வராது. ஆனாலும் ஜீவர்களிற் சிலர் பூர்வபுண்ணிய விசேஷத்தினாலும் தெய்வவசால் நிவர்த்திக்கிச்சையுடையவராய் சமதமாதி நான்கு சாதனங்களுமடைந்து ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றும் மனோலயம்வந்து தத்வஞானத்தை அடைந்தால் அந்த தத்வக்ஞானம் என்கிற ஞானக்கினியில் அநாதியான கருமத்தின் மூலவாசனையெல்லாம் சுட்டுச் சாம்பலாக்கிப்போட்டு ஜன்மசாபல்யமடைவார்கள். அங்ஙனம் முன்கூறிய கருமவாசனையும் மனோலயமும் அடையும் மார்க்கம் யாதெனில் இந்தக்காயமானது

விளக்கைப்போலவும் கருமமானதை நல்ல தைலத்தைப் போலவும் மனமானது அதை பரிசுத்தமுடைய வத்தியைப் போலவும் காண்க. அங்ஙனம் காயமான விளக்கில் சற் கருமமான தைலம் நிறைத்துப் பரிசுத்தமாய் உள்ள மனோ வத்தியை அன்பாய் அதிற்போட்டு ஞானமாயுள்ள தீபத்தை யேற்றினால் கருமமான தைலம் தானே நசிக்கும். அங் ஙனம் கருமமான தைலம் நாசம் அடைந்தால் மனோவத்தி யும் அந்த ஞானதீபத்தால் எறிந்து சாம்பலாய் அரை நிமி ஷத்திற்குள் நாசமடையும் அப்போது ஞானமென்கிற தீபமும் அடங்கியிருக்கும். அங்ஙனம் காயமாம் விளக்கை நன்றாய் விளக்கி அதில் நிஷ்காம சற்கருமமான தைலத்தை யும் நிறைய ஊற்றி அதில் நின்பரிசுத்தமுடைய மனதைப் போட்டு ஞானதீபம் ஏற்றினால் ஞானப்பிரகாசம் விளங் கும். ஞானப்பிரகாசம் அதிகமானால் முதலாவது கரும வாசனை நசிக்கும். கருமம் நசித்தால் மனோலயம் தானே யடையும். அங்ஙனம் மனோவத்தியைப் பெரிதாக்கிப் போட்டால் கருமதைலம் எவ்வளவு இருந்தாலும் எறிந்து விடும் என்பதே இதன் தாத்பரியம். அங்ஙனம் கருமமான தைலமும் இல்லாவிட்டால் ஞானம் என்ற தீபமும் சூன் யம். அங்ஙனம் வந்தவார் கருமமான தைலம் எவ்வளவு ஜாஸ்தியிருந்தாலும் மனமானவத்தியைப் பரிசுத்தமாக்கிப் பெருங்கணமாய்ப் போட்டால் கரும தைலம் ஞானக்கினி யால் அடங்கிவிடும். அங்ஙனம் கருமதைலம் இல்லாவிட் டால் மனோவத்தியும் ஞானத்தீயினால் உடனே நசிக்கும். அங்ஙனம் எல்லாம் ஞானக்கினியால் நாசமானால் ஞானக் கினியும் இல்லை.

ஓ மனமே கேள்! கருமமும் மனதும் இல்லாவிட் டால் காயமே நான் என்கிற பாவனை இருக்குமா? இராது.

அங்஫னம் காயமும் கருமமும் மனதும் நாசமானால் நானே ஞானியென்கிற பாவனையும் நாமரூபாதிகளும் கிடையாது. எல்லாம் பிர்ம்மமயம் ஏகம் இதுவே நிர்விகர்ப்ப சமாதி என்றும் மெய்யறிவு விளக்கமென்றும் உண்மையான ஞான நிலை என்றும் உபநிஷத்தாதி வேதாந்த சாஸ்திரங்களும் மஹத்துக்களும் கூறியது. சத்தியம்! சத்தியம்!!

ஸ்ரீ அகஸ்தியபகவான் கூறியது.

தானென்றஞானத்தின்பலனைக்கேளு
தலைகீழாம்பஞ்சாக்கினியிடையில்நின்று
கோனென்றகோடிகற்பம்தவஞ்செய்தபலமும்
கூறஸ்வமேதியாகம்நூறுகோடி
தேனென்றுசெய்பலமும்மூவருக்கும்
செகத்தினிலோர்நூறுகற்பமர்ச்சித்தபலமும்
மூனென்றஞானிநிஷ்டைகணஞ்செய்தபலத்துக்கு
ஒவ்வாதுயென்றுமறையுறைக்குந்தானே. (1)

கேளப்பாகருடன்முன்புசர்ப்பந்தானும்
கிட்டவுந்தானில்லாதகெடியைப்போலும்
மாளப்பாயிருள்தானும்சூரியன்முன்நிற்க
மாட்டாதுஓடிப்போம்வரிசைபோலுங்
கேளப்பாபஞ்சதுதான்வடவையனல்முன்பு
கூடியதுநில்லாதுகுறியைப்போலும்
ஆளப்பாவெகுகோடிபாவஞ்செய்தோன்
அருள்ஞானிதனைக்காணிலகன்றுபோமே. (2)

போகாமல்படைத்தவனேஞானிபாதம்
பூசிப்பன்சிரசில்வைத்துபுவனங்காத்தோன்
தாகமாய்ஞானியவன் நினைத்ததெல்லாம்
தலையினாலேசுமந்துதருவன்பாரு
ஏகமாய்புவனமெல்லாம்யெறித்தோன்தானும்
இவன்பின்னேதிரிந்திடுவானிவனைக்காக்க
சாகாதவானவர்க்கும்மனிதருக்கும்ஞானி
சரன்பணியக்கிடைக்குமோசெகத்திற்றானே. (3)

தானென்றஞானிக்கோர்பிடிதான்பிச்சை
தனையளித்தார்தங்களுக்குபலத்தைக்கேளு
கோனென்றஅகரமதுநூறகோடி
கோபுரந்தான்கோடிசெய்தபலத்துக்குமதிகம்
ஊனென்றநால்வேதஞ்சாங்கமாக
வோதியதோர்அந்தணர்கள்கோடிபேர்க்கு
தேனென்றஅன்னமிட்டபலத்துக்குமதிகம்
சித்தாந்தம்வேதாந்தம்செப்பும்பாரே. (4)

செப்புமப்பாஞானியவனிருந்தவிடமெல்லாம்
செம்பொன்மணிகைலாயம்வைகுந்தமென்பார்
ஒப்பிலவன்திரிவதெல்லாம்உலகத்துக்கிரட்சை
ஓங்கிலவன்பாதங்கள்பட்டவிடமெல்லாம்
தப்பில்லாயாகாதிசெய்தவிடமாகும்
தானவனைக்காணசிவதரிசனமுமாகும்
அப்பாகேள்அவன்வார்த்தைமந்திரமுமாகும்
அதைக்கேட்டால்வேதமென்பார்அறிவுள்ளோரே. (5)

இதைக் கேட்ட மனம் பரிசுத்தமாய் அறிவிலடங்கி அறிவும் மெய்யறிவாய் பரிபூரணமாம் பரமாத்மாவில் ஐக்கியமாய் ஆனந்தாதீதமாய் நிரதிசயமாய் விளங்க.

ஓம்நமப்பிரணவார்த்தாய சுத்தக்ஞானைகமூர்த்தயே
நிர்மலாயப்பிரசாந்தாய தக்ஷிணாமூர்த்தயேநம:
நிதியேசர்வவித்யானாம் பிஷஜேபவரோகிணாம்
குருவேசர்வலோகானாம் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தயேநம:

ஸ்ரீ சற்குருவே நம:

மெய்யறி விளக்கம் பரிபூரணம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ சற்குருசரணம்:

பேரின்ப விளக்கம்.

வந்தன சுலோகம்.

ஓங்கார வொளியிலே ஓமனத் தெளிவதிலே
அருளான நிலையிலே ஆனந்த வடிவிலே
அறிவுக்கு மறிவான பொருளா யகண்டமாம்
துரிய பரிபூரணப் பொருளை வணங்குவாம்.

அச்சுதனாய ஜனார்பரனாய்
அமிர்தபரிபூர ணானந்தமாய்
விஸ்வரூபனாய் விஸ்வம்பரனாய்
விஸ்வாத்மாவாய் விஸ்வசாக்ஷியாய்
நித்தியமாய் நிஷ்களமாய் நிகமாந்த
சாரார்த்த தத்வ போதகனுமாய்
சற்குருவாய் அருளாய் அறிவாம்
சுகச்சொரூபத்தையாம் வணங்குவாம்.

சஞ்சல மனக்குரங்கை நாடுமா மகங்காட்டை
அஞ்செழுத் தானவாளால் அடிக்கடி வெட்டிவெட்டி
நெஞ்சமே நேசமான குருவரு ளாதீயால்
சஞ்சிதபாபமான காடிதைச் சுடுவோம் நெஞ்சே.

நூல் ஆரம்பம்.

ஸ்ரீ சற்குரு சரணாரவிந்தபக்தியும், ஜீவகாருண்யமும் பாசவைராக்கியமும் பரக்ஞானமும்உடைய ஒரு தேசிகரிடம் உத்தம குரு பரமபக்தியே பரம

ஜீவன் முத்தியென்றும், பரம விஸ்வாசத்துடன் நம்பி அடுத்த ஒரு சிஷ்யனுக்கு உபதேசமானது.

சிஷ்யனுடைய கேள்வி:—ஒஸ்வாமி! ஆதியந்தமில்லாத ஜனன மரணசம்சார துக்கமான சமுத்திரத்தில் மூழ்கி ஆசையானவலேயில் கட்டுப்பட்டுக் கெட்டலேயும், மந்த புத்தியாம் அடியேனே ஆட்கொள்ள வேணுமென்று அபேக்ஷையுடன் நின்ற சிஷ்யனேப்பார்த்து,

குருநாதன்:—கிருபாளுவாய் மாதா தன் சிசுவைப் போல் கண்ணுல்பார்த்து கையினுல் தடவி தன் சன்னிதானத்திலிருத்தி ஒருவார்த்தை சொன்னதாவது. ஓ மகனே கேள். நிஜ சுகமான ஆத்ம சுகம் அதாவது, பரமானந்த தெரிசனம். பரமானந்த தெரிசனமாவது சர்வலோகமும் விளங்கிக்கொண்டிருக்கும். சூரியபகவான் நம்முடைய கண்ணுக்கு முன்னுலே உதயமானுலும், அதை நாம் பாராமல் மறந்துவிட்டால் தெரிசனங்கிடையாது. அவரை நாம் கண்ணுலே பார்ப்போமானுல், அவர் நம்மையும் பார்ப்பது போல் தோற்றும் அதுபோல ஸர்வாந்திரியாமியாயும், ஸர்வ ஸாக்ஷியும் ஸர்வதா சராசரத்தையும், பார்த்துக்கொண்டிருக்கும் பரமாவித்தினே நம்முடைய உள்ளன்புற்று, உள் முகமாய் நாம் பார்ப்போமானுல் நம்மையும் அவர் பார்த்து காத்துரக்ஷிப்பாரென்பது நிச்சயமாம். ஆனுலும், மனம் பரிசுத்தமடையாமல் ஆத்ம தெரிசனம் கிடையாது. மனதை அசுத்தமாக்குவது மாயையின் குணபேதம். இந்த மாயையானது மாய்யிகளான திரிமூர்த்திகளேயும் கூட மோகிப்பிக்க சாமர்த்தியம் உண்டு. மாயையினுல் வாஸ்தவமாய் தோற்றுவதாம் ஸ்தூல பிரபஞ்சம். இதே சத்தியமாய் தோற்றுவது. மாயையான மனம் ஒன்று தான் அனேக

விதபேதமாய் தோற்றுவது குணபேதம் இந்தமாயா குணங்களுக்கு அதீதமாம் பரமாத்மா. இதைக்கேட்ட சிஷ்யன் மனம் நொந்து ஓ ஸ்வாமி! உற்பத்திஸ்த்தானம் எங்கே இதனுடைய லக்ஷணமாவதென்ன இதைத் தாண்டும் உபாயம் எப்படி பரமாத்மாவினுடைய லக்ஷணமும் அருள வேண்டும்.

குரு:-ஓ மைந்தனே கேள்! அகண்டபரிபூரண சச்சிதானந்தமாயும், நிஷ்கள சுயஞ்சோதியாயும், அவியக்தமாயுமிருக்கும் பரப்பிர்மத்தில் அக்னியின் சூடுபோல அபின்னமாய் ஒரு சக்தி உண்டு. அதனுடைய லக்ஷணமாவது சூன்யம், அந்த லக்ஷணம் சூன்யமாயும், பரிசுத்தமாயுமிருந்த சத்தியிலிருந்தும் மூன்று லக்ஷணங்கள் தோன்றின. அதாவது, சத்து சித்து, ஆனந்தம், அந்த சச்சிதானந்த பரிபூரண சுயம்பிரகாசத்திலிருந்தும், அக்கினியிலிருந்து கிளம்பிய புகைபோல் மலினமாயும், அவ்யக்தமாயும், மூலப்பிரகிருதிதோன்றியது அந்த மூலப்பிர கிருதியின் சுவாபாவீகமாவது எப்படி என்றால் அனாதியான ஜீவர்களுடைய அசுத்தவாசனை யோடுகூடியும், அஞ்ஞானம் விபரீதம் சமுசயம் இம் மூன்று பாவனைகளோடு கூடியும் இருக்கும். இந்த மூலப்பிர கிருதியின் சூக்ஷ்மமான குண சூத்திரத்திலிருந்தும், ஸ்தூலமாய் மூன்று குணங்கள் தோன்றின. அதாவது, பால்வர்ணம், சாத்வீகம் செகப்புவர்ணம், ரஜோகுணம் நீலவர்ணமாம் தாமசம் இவைகளில் சாத்வீகத்திலிருந்தும், சுத்த ஜலத்தில் பிரதிச்சாயைபோலே திரிமூர்த்திகளும், ராஜஸகுணத்திலிருந்தும் கலக்கமான ஜலத்தில் பிரதிச்சாயைபோல அனேகவிதமான வாசனைகளோடுகூடி மூன்றுவிதமான சீவர்களும் தோன்றின. இனி மூன்றாவது தாமசகுணகாரியமாவது அசுத்தமாய் அந்த

காரமான தமோகுணத்திலிருந்தும், அவித்தையென்றும் மாயையென்றும் இரண்டு சத்தியாய் பிரிந்தது. அதாவது அவைகளில் அவித்தையானது அஞ்ஞானமென்கிற ஆவரணசத்தியாம் இரண்டாவது மாயையானது அகங்காரமான விக்ஷேபசத்தியாம் அந்த விக்ஷேபசத்தியிலிருந்தும், சம்சாரத்துக்குக் காரணமான சப்தஸ்பரிச ரூபரஸ கந்தங்களான சூக்ஷ்ம தன் மாத்திரைகள் பிறந்தன. இந்த சூக்ஷ்ம தன் மாத்திரைகளிலிருந்தும், ராகத்துவேஷாதிகளுக்கு எதுவான ஸ்தூல பஞ்சபூதங்கள் பிறந்தன. அதாவது ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, மண், அந்த பஞ்சபூதங்களை பாதி பாதிபாகப் பகுத்து பத்தாக்கி அதில் பத்தில் ஐந்து பாகம் நாலு நாலாக்கி பேர்பாதி ஐந்து பாகமும் கூட்டி பஞ்சீகரணம் செய்து ஸ்ரோத்ராதி ஞானேந்திரியம் ஐந்தும் வாக்காதிகர் மேந்திரியம் ஐந்தும் ஆக இருபத்தைந்து தத்துவங்கள் பிறந்தன. இவைகளில் மூலப்ரகிருதி முதல் மகதத்துவம், அகங்காரம், தன் மாத்திரைகள் ஐந்தும் ஞானேந்திரியங்கள் ஐந்தும் கர்மேந்திரியங்கள் ஐந்தும் இருதயம் ஒன்றும் ஆத்மாவுங்கூடி ஆக இருபத்தைந்து தத்துவங்கள் கூடியதாம் இது ஸ்தூல சரீரம் இதற்கு சைதன்யமாவது பரமாத்மா. அந்த பரமாத்மாவானது ஜீவாத்மாவாய் இந்த ஸ்தூல சரீரத்திலிருந்தும், அந்தக்கரண ஆபாசனுப் மனசாய், கர்மம் செய்வதாதலால் அடிக்கடி சரீரமெடுத்தும், புண்ய பாபசுகதுக்கங்களை அனுபவிப்பதும், அறுதியுமாம் இது தான் மாயையுடைய லக்ஷணம்.

ஓ மகிமையுடைய மைந்தனே கேள்:—நீ கேட்ட கேள்விக்கு, மாயை என்பது சித்து சித்த சங்கல்பமாவது மனம். மன சங்கல்பமாவது அவித்தியா மன சங்கல்மற்றால் மாயையேது?

ஓ மாதவனே கேள்:—மாயாலக்ஷணம் இன்னம் சொல்லுகிறேன். நிற்குணமாயும், கேவலமாயுமிருக்கும் பரமாத்மாவிலிருந்தும், சிற்சத்திதோன்றியது சிற்சத்தியின் பிரகாசத்திலிருந்து சத்குணமான சாத்வீகம் பிறந்தது. அந்த சாத்வீக குணமான சகுணத்திலிருந்து சங்கல்பமான மாயை பிறந்தது. அந்தமாயா சங்கல்பமானது மனம், மனம் சங்கல்ப விகல்பமடைந்து அதனால் சங்கம். சங்கத்தினால் காமம், காமத்தினால் கர்மம். கர்மத்தினால் சரீரம். இந்த ஸ்தூல சரீரமானது நானென்கிற அகங்கார கருவிகளோடு கூடி இதற்கு அந்தர்யாமியாய் அபிமானிப்பது ஜீவன். இவர்கள்தான் பதி. மனமானது பசு. மன் சங்கல்பமாவது பாசம். மனசங்கல்ப மறுவதுதான் ஜீவன் முத்தி. மனசங்கல்பமற்றால் அகங்காரம் கிடையாது. அகங்கார அபிமானியாயிருந்த ஜீவனுடைய லக்ஷணமாவது மூன்று அவஸ்தை, அதாவது சாக்கிரம் சொப்பனம். சுழித்தி, இவைகளில் சாக்கிரமாவது இந்த ஸ்தூல சரீரத்தில் எல்லா இந்திரியங்களோடுகூடி அபிமானிப்பது சாக்கிரம். இதனால் மகா மோகமடைந்தது. அந்தக் கரணம் பிரமித்ததினால் தோற்றுவதாம் சொப்பனம். இவ்விரண்டிற்குமுள்ள மூலவாசனை எல்லாம் லயமடைந்து தன்னை மறந்துவிட்டது சுழித்தி. இம் மூன்று அவஸ்தையும் விட்டுவிடுவதே ஜீவன் முக்தி, அதாவது முன்கூறிய மூன்று அவஸ்தையும் விட்டால் அகங்காரம் அடியோடு நசிக்கும். அகங்காரம் நாசமடைந்தால், அபிமானம் தானே தொலையும். அபிமானம் தொலைந்து விட்டால் முன்கூறிய மூன்று அவஸ்தைகளுக்கும் காரணமாயும், சாக்ஷியாயுமிருந்த ஜீவன் சுயம்பிரகாசமாயும், சர்வ பரிபூரணானந்தமாயும், உள்ள துரியநிலையை அடைந்து பசு, பதி, பாசமற்ற ஜீவன் முத்தியாம். பசு பதி பாசமென்பது மாயையால் தோற்றுவதாம். அதாவது சித்தமாம் சமுத்

திரத்தில் அலையாம் மாயாமனம். அந்த மனசங்கல்பமானது அனேகவித ஜீவர்களாகிய நுரை இந்த நுரைதான் அகங்காரம் இதுதான் சுத்தமாயும், மலினமாயும், பந்த மோக்ஷங்களுக்கு யேதுவாயுமிருக்கிறது. இதுதான் மாயையினுடைய லெக்ஷணம், மாயையினுடைய உற்பத்திஸ்தானமாவது மனம், மனசங்கல்பமாவது பந்தம், மனசங்கல்பம் விடுவது தான் மோக்ஷம். ஆதலால், பந்தமோக்ஷமிரண்டிற்கும் காரணம் மாயை. இதை குரு சுருதி யுக்தி அனுபவத்தினல் அறியப்பட்டவன் ஆத்மயோகி இப்படிக்கொத்த ஆத்மயோகியானவன் விடைய வியாபாரத்தோடுகூடியிருந்தாலும், ஜீவன் முத்தனும் என்பதற்கு சந்தேகம்வேண்டாம். இவ்வுலகத்தின்கண் மனுஷ்யருக்கு க்ஷேமத்துக்காக விதி நிஷேதாதி குணதோஷபேதா பேதங்களும் சுத்தா சுத்தங்களும் வர்ணுசிரமாதிதர்மாசாரங்களும் புண்ணியபாபங்களும், குரு சிஷ்யர் பசு-பதி-ஆண்டவன் அடிமை இந்தப்படி அநேகபேதமாய் விதிக்கப்பட்டவைகள் எல்லாம் சித்தம் சமதத்வம் அடையும் பொருட்டு சன்மார்க்கமாக விதிக்கப்பட்டதாம். சித்தம் சமத்வம் அடைவது பரிசுத்த நிலே. சித்தம், பரிசுத்தமடைந்து எல்லாம் சமானமாய் பார்ப்பவனுக்கு விதிநிஷேதாதி குணதோஷ சுத்தா சுத்தங்கள் அணுவளவுங்கிடையாது. அதுகளெல்லாம் அகிர்த விகிர்த சுகிர்த திரிவித குணபேதத்தினல் விதிக்கப்பட்டதாம். ஆதலால், அவைகளெல்லாம் மாயாமயமென்றறிந்து அகப்பற்றும் புறப்பற்றும் அடியோடற்ற அசைவற்ற பொறுமையுடன் உபசாந்தமாயிருப்பதுதான் எதார்த்த ஞானம். குணம் இருக்குமட்டும் தோஷம் ஆரோபமாம். குணம் அடியோடற்றுவிட்டால் தோஷமேகிடையாது. சுத்தம் இருக்குமட்டும் அசுத்தம் ஆரோபமாம். சுத்தம் அடியோடேவிட்டால் அசுத்தம் அணுவளவும் கிடையாது.

குணத்துக்குக் காரணம் மாயை. மாயை என்பது கவடி. கவடி மாயாரூபத்தைப் பார்த்தவன் குருடன். கவடி மாயா வார்த்தையைக் கேட்டவன் செவிடன். கவடி மாயா வாழ்க்கையை நம்பினவன் அசடன். ஆனுல் பொய்யான மாயையைப்பெற்றவைகள் மெய்யாகுமோவென்ருல் ஆகும். அதாவது மெய்யைப் பொய்யென்று எண்ணும் மூடர்களுக்கு பொய்யை மெய்யாக எண்ணுவது சுபாவீகம். அதாவது மலடிபெற்றமகன் அஞ்ஞானமென்கிற பட்டணத்துக்கு அரசாக்ஷியனுய் ஆனதுபோல் பொய்யான மாயா பெற்றதுகளுக்கெல்லாம் நாமரூபம் பிரத்யக்ஷயா யனந்தமாம். மெய்யானபொருள் அவ்வியக்தமாதலால் அரூபம் கிடையாது. ஆனுலும் பொய்யான மாயா பெற்றதா? பெருதவஸ்துவுக்கு நாமரூபம் ஏது? பொய்யான வஸ்து ஒரு காலத்தில் பிறக்குமா? பொய் பிறந்தால் அது பொய்யாகுமா? ஒரு காலத்திலும் பெருத வஸ்து மற்ருெரு வஸ்துவை பெற்றதாக சொன்னுல் அதை நம்பலாமா? சொப்பனங்கண்டது மெய். உணர்ந்தபின் அந்த சொப்பனம் பொய்யாம். பொய்யாம் என்பதுபோல, பொய்யான வஸ்து முக்காலத்திலும் பொய். பொய்யென்றறிந்த அறிவை மெய் மெய்யென்றுணர்ந்த அறிவை மெய்யாமென்பது. மகனே நீ மனமிருந்தமட்டும் மாயையென்பதும் மெய்யாம். மனதுக்கு மனதினையும் மாயையும் ஆத்மாவையும் விபரமாய் தெரியக்கூடுவதல்ல. மனம் அடங்கிவிட்டால்மாயை கிடையாது. ஆத்ம சந்தோஷம் பிறந்தால் மனது நிர்மலமாம.

இதைக்கேட்ட சிஷ்யன் தெளிவடைந்து பிர்மானந்தத்தில் ஆசையுடையவனுய் ஸ்ரீ சத்குருவின் சன்னிதானத்தில் கேட்கிருர். ஓ ஸ்வாமி! வாக்கு மனக் காயங்களினுலும்

அறியக்கூடாததாயும் திரிமூர்த்திகளையும் மோகமடைவிக்கச் சாமர்த்தியமுள்ளதாயும் இருக்கும் லோகநாயகனுடைய மாயையானது, அந்த மாய்கைக்கு ஆதீனமான மனதையும், ஜெயிக்கும் உபாயத்தையும், ஓ ஆண்டவனே! நின் திருவடி பாதசேவகனான தாசனும் அடியேனுக்கு உபதேசித்து அருளவேண்டும்.

இதைக் கேட்ட குருநாதன் பரிபூரணப்ரம்மானந்த சமுத்திரத்தில்மூழ்கி புன்சிறிப்புடன் ஒரு வார்த்தை சொல்கிறார். ஓ பக்தனே கேள், மாயையால் சிருஷ்டிக்கப்பட்டது இந்த உலகம். அதாவது ஆத்மாவை மறைக்கச்செய்து அனாத்மவஸ்துக்களான தேகாதி பிரபஞ்சமெல்லாம் சத்தியமாய் தோன்றுவதுதான் மாயா. அதாவது சூரிய கிரணத்தினால் தோற்றப்பட்ட கானல் ஜலம்போல பரமாத்ம சைதன்யத்தினால் தோன்றுவதுதான் உலகம். இதற்கு முதலாவது பிரகிருதி முதலான குணங்களும் மகா பஞ்ச பூதங்களும் ஸ்தூலசூக்ஷ்மகாரண சரீரங்களும் ஜாக்ர சொப்பன சுழுத்தி இம்மூன்று அவஸ்தைகளும் அநேகவித கர்ம வாசனை சஞ்சிதத்தோடுகூடிய ஜீவர்களும் இவைகளுக்கு வேண்டிய போகவஸ்துக்களும் எல்லாம் மாயா சிருஷ்டியாம், பழுதையைக்கண்டு பாம்பாக நினைத்துப் பயந்தது அவித்யா. இந்த அவித்தையை ஜெயிப்பது மகா பிரயாசம். ஆனாலும், இதற்கு அதி சுலபமாய் ஒரு வழியிருக்கிறது. அதாவது மகனே கேள் மனதை ஜெயிப்பதானால் மாயையை ஜெயிக்கலாம். மனதை ஜெயிப்பதோ காற்றினைத் தடுத்து ஒரு வீட்டிற்குள்ளே நிறுத்துவதுபோல் மனதை அடக்குவது மகா பிரயாசை என்பதற்குச் சந்தேகமில்லை இவ்வுலகத்திலுள்ள எல்லாவித்தையும் அப்பியசிக்கலாம். அநேக சித்திகள் பெறலாம். காலசக்ரபிரமையில் கோர்த்து அரை

நிமிஷத்திற்குள் அனேக பிரகாரம் சுத்திக்கொண்டிருக்கும் இந்த மனமானதை, வசீகரிப்பது மகா கஷ்டம். ஏனென்றால் முன்கூறிய மாயையால் தோற்றப்பட்டது மனம். மனோ சங்கல்பமானது கர்மம். கர்மம் பல போகங்களை அனுப விக்கும்பொருட்டு அடிக்கடி ஜென்மமும் ஆதியந்தமில்லை. ஆதலால் மனமிருந்தமட்டும் மாயையென்பது சத்தியமாயும் தோன்றும். மாயை இருந்தமட்டும் ஆத்மாவை மறந்து ஜீவன் சம்சார சிந்தனையைக்கொண்டு அடிக்கடி சம்சார விருத்தியடையும். சம்சார சிந்தனையைவிட்டு துரியநிலையை யடைந்து அடிக்கடி ஆத்மசிந்தனை செய்வதானால் மனம் ஆத்மாவின் வசம் சேரும். இவ்வுலகம் சத்தியமாய் தோன் றிக்கொண்டிருந்தமட்டும் நானென்கிற அபிமானமும் சத் தியமாய் தோன்றும். அதாவது அனாத்மாவாயிருந்த சரீராதி சம்சாரபெந்தம் சத்தியமாயும் நித்தியமாயும் திரிகுண மய மான திரிவிதகாரணங்களினால் செய்யப்பட்ட திரிவித கர்ம பெந்தத்தினால் நானாவிதமாயும் நான், எனது, அவன், இவன், என்னுடையது, நின்னுடையது, நான், நீ, என் சரீரம், நின் சரீரம், என் மனைவி, என் கண் மூக்கு காது என்னுடைய ஜீவன், என் மனது இந்தப்படி நினைந்து தன்னைத்தான் அறியாமல் மறந்துவிட்டது அவித்தியா. அதாவது, பத்தாமவன் எண்ணி தன்னைக் காணாமலிருந்தது ஆவரணமாம். அவித்தியாசுத்தியின் வைபவத்தினால் தோன் றுவதெல்லாம் விபரீதமாம். அதனால் மனம் பிரமை யடைந்து கர்மா, கர்த்தா, நானென்கிற அபிமானத்தினால் புண்யபாப சுகதுக்கங்களும் ஜனனமரணாதிகளும் அனுப வித்து பழகிவருவதற்கு ஆதியந்தங் கிடையாது. இந்தப் படி அனாதியான பொய்வாசனைப் பழக்கமுடைய மனதை ஜெயிப்பது பிரயாசமென்று முன் கூறிய தாத்பரியம். ஆனாலும் மனதை அடக்கும்பொருட்டு பரமரகசியமாயும்

பிரயத்தினங் கம்மியாயும் அதி சுலபமாயும் ஒரு வழி இருக்கிறது. அதாவது வாக்கு மனக்காயங்களால் செய்யப்பட்ட கர்மமெல்லாம் நிஷ்காமமாக ஈஸ்வரார்ப்பணமாயும் சத்குரு பத்தி விஸ்வாஸமும் விடயங்களில் வைராக்கியமும் பரமாத்மாவில் ஐக்கியபாவனையாய் அப்பியாசஞ்செய்து பழகிவருவதானல் மனதை ஜெயிக்கலாம். அப்பியாசமாவது என்னவென்றால் ஒரு ஞானதேசிகரை அடுத்து நமது உடல் பொருள் ஆவி மூன்றும் மனசங்கல்பத்தினால், பாதகாணிக்கையாக சமர்ச்சனை செய்து வாக்கு மனம் காயம் இவைகளினால் சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் பணிவிடைசெய்து பழகிவருவதனால் நாலு சாதனமும் அடைந்து ஸ்ரீ சத்குருவின் திருவருள் தத்வமசி மகாவாக்யார்த்த விக்ஞானத்தை உபதேசிக்கும் விக்ஞானமாம். பரோட்சமடைந்தால் அபரோக்ஷஞான மடையலாம். அபரோக்ஷஞான மடைந்தால் மனதும் மாயையும் கிடையாது நாலுசாதன முடையவர் தான் இதற்கு அதிகாரி. ஞானதேசிகர் யார் என்றால் சத்குருபக்தியும், ஜீவகாண்யமும், நிராசையும், பரக்ஞானமும் இந்நாலுமுடையவர்தான் ஞானதேசிகர். இந்நான்கும் உடையவர் இவ்வுலகத்தின்கண் அதிசுலபம் ஆனாலும் அனேக ஜென்ம ஜென்மங்களில் இயற்கையாய்வந்த புண்ணியபரிபாகம் பூர்ணமாய் வரும்போது குரு அருள் கிடைக்கும். மாயாமான மனதை அடிக்கடி அந்த பரமாசாரியரிடத்தில் ஐக்கியம்செய்த மகான்களுக்கு மாயையேது சடமேது சகத்தேது பெந்தமேது மோக்ஷமேது இவைகள் எல்லாம் மனசங்கல்ப விகல்பமாம். இந்த மனசங்கல்ப விகல்பத்தினால் தோற்றுவதாம் என்பதற்குச் சந்தேகமில்லை. மனசங்கல்பமானது விக்ஷேபம் ஒரு நிமிஷத்தில் அனேக சங்கல்பமடைந்து அதை அடிக்கடி மறந்துவிடுவதுதான் ஆவரணம். அதாவது சங்கல்ப விகல்பத்தினால் தன்னை

மறந்த மறப்பே ஆவரணம். விக்ஷேபசங்கல்பம் விட்டால் ஆவரணம் தானே நசிக்கும். ஆவரணம் நாசமடைந்தால் அஞ்ஞானபடலம் நீங்கும். அஞ்ஞானபடலம் நீங்கினுல் விக்ஞானம் உதையமாகும். விக்ஞானம் உதையமானுல் மெஞ்ஞானமடையலாம். இந்தப்படி நிராசைபடையவனு யும் சாந்தனுயுமிருக்கும் குருபக்தனுக்கு இவ்வுலகத்தின் கண் அசாத்தியமாய் ஒரு காரியமுங்கிடையாது. ஆனுலும் நிராசையுடையவனுதலால் அவர்களுக்கு ஒரு அபேக்ஷை யுங் கிடையாது. இதைத் தவிர அநேகவிதமான எக்ய தானுதி தபோவிரதங்களினுலும் அனேக சாஸ்திர பாடங் களினுலும் மனதை ஜெயிக்கமுடியாது என்பது சத்தியம் முன்கூறிய மாயையை ஜெயிப்பது எப்படி என்ருல் ஆண வாதிமலங்களற்று கர்மவாசனையற்று மனேலயமடைந்தவா ளுக்கு அதுவே மாயாஜெயம் என்பதற்குச் சந்தேகம் வேண் டாம். இதனுல் எதார்த்த ஞானமடைந்து நித்தியானந்த கைவல்யபதமடையலாம் எதார்த்தஞான மடையுமானுல் பரமானந்தமா யிருக்கலாம் பரமானந்தத்திற்குச் சமானம் வேறே ஒரு ஆனந்தமுங் கிடையாது. பரமானந்தத்தைத் தவிர அனேகவிதமுள்ள ஆனந்தமிருந்தாலும் அது ஒரு காலத்து நாசமடையும். அப்போது துக்கமுண்டாகும். பிர்மானந்தமென்பது அழிவற்றது. அதாவது நிராசையா யும் சாந்தமாயுமிருப்பதுதான். இதைத்தவிர பிர்மானந்தம் இன்னபடி யிருக்குமென்பது ஒருவர்க்கொருவர் சொல்லி எற்படுத்தமுடியாது. ஆதலால் ஞானமடையும்பொருட்டு பக்தி ஒன்றே போதும். ஞானமும் பக்தியும் இரண்டல்ல. சகுணம் நிற்குணம் இரண்டும் எள்ளும் எண்ணெயும்போலே யேகமென்றறிவதுதான் எதார்த்த ஞானம். ஆத்மாவினை மறைக்கப்பட்டது மனம் மனமானது ஆத்மாவினுடைய அம்சமான மனம் ஆத்மாவினை எப்படி மறைக்குமென்ருல்

சூரியனுடைய அம்சமான மேகங்கள் சூரியனை மறைப்பது போல் ஆத்மாவினுடைய அம்சமான மனம் ஆத்மாவினை மறைக்கிறது அந்த மனமானது சாத்வீகமாயும் பரிசுத்த முடையதாயும் உள்ளது. ஆனாலும் ராஜஸ தாமஸ காரியங் களான ஆணவாதிமலங்களினால் மனம் அசுத்தமாய் சஞ்சல மடைந்து அந்தகாரமாயும் மனதினை மனமே மறைக்கப்பட் டது ஆணவாதிமலமென்பது. ஆணவம் மாயா கர்மம். அதாவது அகங்காராதி இந்திரியங்கள். அதாவது ராஜஸ தாமஸகுண காரியங்களாம். ஆகலால் ராஜஸ தாமஸகுண காரியங்களான இந்திரியங்களை எல்லாம் மனதைகொண்டு அடக்கினால் மனம் பரிசுத்தமாப் சாத்வீகமடையும் சாத் வீகமடைந்தால் ஆணவாதி மும்மலங்களும் அடியோடே நசிக்கும். ஆணவாதி மும்மலங்களும் அற்றால் அல்லும் பகலுமற்று ஆனந்தமாம். அருள் கிடைக்கும் இதைக் தவிர வேறேயுள்ள முக்தி எல்லாம் சரீர முக்தி சரீரமுக் திக்கு புனர்ஜென்மமுண்டு. விதேக கைவல்ய முக்திக்கு புனர்ஜென்மங் கிடையாது.

ஓ பக்தனே கேள்! சாதுக்கள் தெரிசனம் சன்மார்க்க தரிசனம்! சன்மார்க்க தரிசனமே சர்வாத்ம தரிசனம்! சர் வாத்ம தரிசனமே வேதாந்த தரிசனம்! வேதாந்த தரிசனமே நாதாந்த தரிசனம். நாதாந்த தரிசனமே சுத்தசிவ தரிச னம். இவ்வுலகத்தின்கண் எத்தொழிலும் சர்வாத்மகனாகிய பகவான் தன்செயலாம் என்பது சிலர். சர்வாத்மகனாகிய பக வான் நிஷ்கிரியன் நிற்குணன் நிரகங்கார நிராஸ்சரயன். நிஸ்ஸங்கன் நிர்விகாரன் நிர்மலன் நிருபமன் நிராகாரன் பரிணைமசூன்யன் ஆனந்தமூர்த்தி. ஆகலால் சர்வாத்மகனா கிய சிவன் செயல் அணுவளவுங் கிடையாது என்பது சிலர். சர்வாத்மகனாகிய ஈசன் செயல் ஒன்றுமில்லாமற்போனால்

ஜீவன் செயல் அணுவளவும் கிடையாது என்பது சிலர். அந்தகாரமாகிய இருட்டிலே ஒரு பழுதையைப் பார்த்து பாம்பாக நினைந்ததுபோல் விபரீதமாயும் மாயாஜாலமாமிந்த பிரபஞ்சம். சிருஷ்டி-திதி சம்காரம் திரோபாவம் அனுக்கிரகம் முதலான ஐந்து தொழில்களும் இந்த ஸ்தூல சரீர அபிமானத்தினுல் ஞானேந்திரியங்கள் வழி, மனதுக்கு இது சத்தியமென்றும் தோற்றுவதல்லாமல் எதார்த்தமாய் பார்க்கும்போது பாம்பல்ல பழுதையாமென்பதுபோலும் சொப்பனம்போலும் வாஸ்தவமல்ல என்பதாக சிலபேர்கள் இந்தப்படி அவாளவாளுடைய புத்திக்கும் யுக்திக்கும் தகுந்தபடி சொன்னதல்லாமல் இதனுடைய பரமரகசியமான எதார்த்த தார்ப்பரியம் உண்மையுள்ளபடி ஒருவருக்கும் வெளியிட முடியாது. மலடிவயற்று மகன்போலே, ஒரு புதையலெடுத்த தனம்போலே, ஆனுலும் மாயாசகிதனுயும், மாயாரகிதனுயும், சகளநிஷ்கள கேவல சுயஞ்சோதியாயும், பர பரமானந்த பரிபூரணமாயுமிருக்கும் பரமாத்மாவில் பக்திமுற்றும்போது சகல சந்தேகங்களும் தீரும். பத்தியில் பரமாயொருசித்தியுங் கிடையாதென்பது பெரியவாள் சம்மதம். பக்திக்கு முக்கிய காரணமானது பரிசுத்த சாதவீகம். பரிசுத்த சாத்வீகத்தின் லக்ஷணமானது,

மகனே கேள்! சர்வசராசரத்துக்கும் அந்தர்யாமியாயும் சர்வ சாக்ஷியாயுமிருக்கும் பரமாத்மாவினை மலமற்ற ஆகாசம்போல் எங்கும் வியாபகமாயும் ஏகமாய் பார்த்து உபாசிப்பதுதான் பரிசுத்த சாத்வீகத்தின் லக்ஷணம். மலமென்பது மும்மலங்களா. அதாவது, ஆணவம், கர்மம், மாயா. இதில் அகமமதையடையாமல் இருப்பது ஆணவம். நாசமாம் கர்மம். ராகத்துவேஷாதி அடியோடேவிட்டால் கர்மமும் நசிக்கும் ஆசையற்றுல் மாயை நீங்கும். ஆகாசத்துக்கு மலமான

மேகம் இதைத்தவிர இரண்டாகத் தோற்றுவதற்குக் காரணம் மாயா. அதாவது சர்வசாக்ஷியாயும் யேகமாயும் ஆகாசத்தில் விளங்குகின்ற சூர்யபகவானை நாம் ஆகாசத்திலே பார்த்துக்கொண் டிருந்ததை நம்முடைய கையிலிருந்த கமண்டல ஜலத்திலும் பார்த்தது. அதுபோலே மற்றுமனேகமான ஜலங்களிலும் அனேக சூரியனைப்பார்த்தது. ஆனாலும் ஏகமாய் விளங்குகின்ற சூர்யன் ஒன்றே என்றறிவதுபோல் சராசரத்துக்கும் அந்தரியாமியாயிருந்த பரமாத்மா ஏகம். அதாவது ஜலமிருந்தமட்டும் சூரியன் இருக்கும். ஜலமில்லாவிட்டால் ஜலசூரியன் கிடையாது. ஜலமிருந்து சூரியன் மறைந்துவிட்டாலும் சூரியன் கிடையாது ஜலமும் சூரியனும் கூடி இருந்தமட்டும் சூரியன் இரண்டாகத் தோற்றுவதுபோல் மாயாஜல பிரதிபிம்பமாகிய ஜீவனும் சர்வசாக்ஷியாகிய பரமாத்மாவும் இரண்டாய் தோன்றுவது மாயா சுபாவீகம் ஆனாலும் ஜலத்திற் குமளிபோல் இருக்கும் சரீரத்தின் அகமமதை இருந்தமட்டும் ஜீவபாவனையுமிருக்கும் ஜீவபாவனை இருந்தமட்டும் இரண்டாகத் தோன்றும். சரீரபாவனையை மறந்துவிட்டால் ஜீவபாவனை கிடையாது. ஜீவபாவனை மறந்துவிட்டால் ஜீவன் சிவமயமாம். ஏகமாய் விளங்கும் ஜீவன் சிவமயமானால் எமபயங் கிடையாது ஜீவபாவனை இருந்தமட்டும் போகத்தில் இச்சை யிருக்கும். அந்த இச்சையானது கைலாசம் வரைக்கும் இருக்கும். ராகத்துவேஷாதிகளும் அதுபரியந்தமிருக்கும். ராகத்துவேஷாதிகள் இருந்தமட்டும் எமதண்டபயமிருக்கும். அதாவது தர்மார்த்த காமங்களிலும் ஆயுசு கீர்த்தி சித்தி இதுகளிலும் ஆசையுடைத்தவராய் ஆனந்தமாய் சிரஞ்சீவியாயிருக்கலாம் என்கிற மகா மோகத்தையடைந்த பாமர ஜனங்களுக்கு மிருத்யூவானது தன் மனதுக்குள்ளே இருந்தும் தினம் தினம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. மிருத்யூவான

எமபயமும் நாளுக்குநாளடுத்து வருகிறது. அப்படி அடுத்தடுத்து வந்து ஒரு நாள் தன்னையும் சாப்பிடும் என்பது நிச்சயம். அதாவது தினசரியும் நம்முடைய ஆயுசு கம்மியாய்ப்போவது நமக்கே தெரியவில்லை. தெரியாத காரணம் மாயா சமுத்திரத்தில் மூழ்கிக் கிடப்பதாதலால் இதை அறிந்தும் அறியாமல் மறந்துவிட்டகாரணம் என்னவென்ருல் அதாவது துராசையாம். துராசையால் மூடப்பட்ட மனதுக்கு எமலோகமானது வெகுதூரம். அதாவது சொர்க்கம், பூமி, பாதாளம் மூன்று. இதில் பாதாளலோகத்திற்கும் தெற்கு திசை வெகுதூரமாய் எமலோகமென்றறிவார்கள். மனதினுடைய ஆசையானதுதான் எமபாசம். காமிய கர்மத்தின் பலமானதே எமதண்டனை. ஆதலால் நிராசையை பக்தர்கள் தனக்குள்ளே எல்லா லோகத்தையும் பார்த்து அதில் எமலோகத்தையும் பார்த்து ராகத்துவேஷாதிக்குடன்பட்ட மனமே எமனென்றறிந்து ஆசாபாசத்தை யறுத்து ஆனுலும் ஜெயிக்கமுடியாத மிருத்துவான எமபயத்தை அடியோடே தள்ளிவிட்டு சிரஞ்சீவியாயு மானந்தமாயு மிருப்பார்கள். அதாவது பிர்மானந்தம் ஆசையினுலே நாம் அடிக்கடி பிறக்கக் காரணம் பிறந்தால் இறப்பு முண்டு என்பது நிச்சயம். நாம் பிறந்தபோதே மிருத்துவினுடைய வாயிலே நாம் பிறந்த சமயமுதல் அந்த மிருத்துவான எமன் நம்மைபிரியாமல் நம்முடைய நாசகாலம் பார்த்துக் கொண்டு இருக்கிருன். அதாவது பாம்பின் வாயில் தேரைபோல் நாம் எமனுக்கு இரையாய் இருக்கிரோமென்றறியாமல் மாயாமயமாயும் நசுசுரமாயும் இருக்கும். சிற்றின்பமான போகத்தில் பேராசைகொண்டு அனேகமான காமியதபசுக்கள் செய்ய பிரயத்தனப்படுவது அத்தியாச்சரியமாம். எல்லாம் ஈஸ்வரார்ப்பணம் செய்பவனுக்கு எமனேது. எல்லாம் ஈஸ்வர சொரூபமாக பார்ப்பவனுக்கு

எமனேது. உடல், பொருள், ஆவி மூன்றும் சற்குருவுக்கு அற்பணம் செய்து சர்வபூதங்களிலும் ஆத்மாவினையும். ஆத்மாவில் சர்வபூதங்களையும் சமரசமாய்க்கண்டு உபாசிப்பவனுக்கு எமனெங்கே? ராகத்துவேஷாதி அபிமானங்கள் விட்டு மனோலயமடைந்து மாயை தாண்டினவனுக்கு எமனெங்கேயிருக்கும்? ஆதலால் மரணகாலத்திலும் நல்ல சாந்தகுணமிருந்தால் கடவுளை தியானிக்கக்கூடும். கடவுளை தியானிப்போமானல் கடவுள் பதமடையலாம். எமனை தியானிப்பவர்கள் எமலோகம் சேர்வார்கள். கிரகதாரபுத்திரதன தான்யாதி பசுக்களிலும் மமதையடைந்து மகாமோகங்கொண்ட கோரமூடமான ராஜஸதாமஸமாம் குணமுடைய பாபிகள் மரணசமயம் எமனையே நினைந்து எமலோகம் சேர்ந்து நரகமடைவார்கள். மரண சமயம் எந்த ரூபத்தை நினைப்பார்களோ அந்த ரூபம்போல் மறுபடியும் சரீரமெடுப்பார்கள். மனமானதில் எந்த குணம் வியாபிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தந்த சமயங்களில் அந்தந்த குணரூபம் ஞாபகமாயிருக்கும். (அதாவது) சாந்தகுணமானது குருதியானம், ராஜஸகுணமானது நார்த்தியானம். தாமஸகுணமானது சத்துருத்தியானம். இதுகளில் ராஜஸ, தாமஸமிரண்டும் கீழேவிழும்போல தியானிப்பதற்கு பிரயத்தினங்கிடையாது. அதாவது அனாதியான சேர்க்கை வாசனைப்பழக்கம். இயற்கையாய் வந்திருக்கிறதாதலால் கஷ்டமாய் தோற்றுது. அதாவது திடமென்று வந்தடையும் சாந்தமான குணத்தில இயற்கையுடையவர்கள் அதி சுவல்பமாய அதையடைந்தாலும் தியானிப்பதும் மஹாபிரயாசம். ஆனாலும் சாந்தகுணமுடையவர்கள் முன் கூறிய இரண்டு குணத்தினாலும் சலனமடைந்து தவறிக்கீழ விழாதென்பது நிச்சயம். ராஜஸ தாமஸ குணங்களிரண்டும ராகத்துவேஷாதிகளுக்கு வித்தாம். சரீரம்ம நாமனென்

கிற புத்தியானது மகாமோகத்துக்கு மாதாவாம். அவித்தை அதுவே சம்சாரகாரணி காமக்குரோதலோப மோகாதிகள் சத்துருக்களாம். அவை முத்திக்கு விரோதஞ் செய்யத் தகுந்த ராக்ஷதாள் இதில் சாந்தமானது காமசுரபி. அதாவது காமதேனு. சாந்தமானது பேரின்ப விளக்கமாம். சாந்தமே சாஸ்வதானந்தம், சுத்த சிவம். சாந்தமே சின்மய சிவானுபூதி. சாந்தமே சிதம்பரம். சாந்தமே சருணம். சாந்தமே சருணாகதி. சாந்தமே சத்தியம். சாந்தமே நித்தியமாம். சாந்தமே நிற்குண நிற்மலமாம். சித்தம் சாந்தமானால் முத்தினையுமடையலாம். அதாவதற்கு உடல், பொருள், ஆவி மூன்றும் ஈஸ்வரார்ப்பணமாக்கி திரிவித கரணங்களினால் செய்யப்பட்ட திரிவித கர்மங்களினாலும் அகந்தை விட்டுவிடுவதும் சாந்தமாம். ஆனாலும் சங்கல்ப பிரவாகமான சித்தம் சாந்தமடைவது மகா பிரயாசம். ஆனாலும் நிஷ்காம அனுஷ்டானமும் சித்தசுத்தியும் அடைந்தால் சத்குரு தெரிசனம் கிடைக்கும். குரு தெரிசனங் கிடைத்தால் அந்தக் குருவையடுத்து சிரத்தா பக்தி விஸ்வாசம், வைராக்கியம், குருவாக்ய சிரவணார்த்த சமாதானம், அப்பியாசம் இவைகளினால் மெள்ள மெள்ள சித்தம் பரிசுத்த சாந்தியடையலாம். சித்த சாந்தியில் பரம் ஒரு முக்தியும் சித்தியுங் கிடையாது. சித்தம் அசுத்தமாக்குவது ராகாதி விர்த்திகள் பதிமூன்றுமாம். இவைகள் பதின்மூன்றையுந் தூரத்தள்ளி சுத்தமாக்கினால் விவேகமடையலாம். சித்தம சாந்தியடைந்தால் ஜனன மரணமேது. சித்தம் சுத்தமாகி சாந்த மடைந்தால் ஈன சம்சாரமேது. சித்தம் பரிசுத்தமடைந்தால் அதுவே பேரின்பமான ஒரு நிதியாம். பேரின்பமான ஒரு நிதி எப்படியிருக்குமென்றால் விசுத்தமாயும் சுத்தசிவமாயும், சாந்தமாயும், ஆதியந்த சூன்யமாயும், சராசரத்துக்கும் அந்தர்யாமியாயும், சர்வதா

சர்வசாக்ஷியாயும், பரஞ்ஜோதியாயும், பரமானந்தத்திற்கு அதீதமாயும், பரிபூரணானந்தமாயுமிருக்கும். இப்படிக்கொத்த பேரின்ப நிதியை எல்லாரும் எடுத்து நிரந்தரமாய் அனுபவிக்கவொட்டாமல் கஷ்டமடையக் காரணமென்னவென்றால் அகங்காரமான ஒரு காலஸர்ப்பம் காவலாய் இருக்கிறது.

அந்த அகங்காரமான காலஸர்ப்பத்துக்கு மூன்று முகமாகிய மூன்று தலையுடையது. இந்தப்படி மூன்று தலையுடையதாயும், அதி பலமுடையதாயும், கோர மூடங்களாயும் இருக்கும் அகங்கார ஸர்ப்பத்தைக் கொல்லுவது மகா பிரயாசம். ஆனாலும் இந்த மூன்று தலையும் அறுத்துவிட்டால் அகங்காரமென்கிற பாம்பு அடியோடே சாகும். அகங்காரம் நாசமடைந்தால் பேரின்பமான நிதியை எடுத்து, சிரஞ்சீவியாயிருந்து அனுபவிக்கலாம். சந்தேகம் வேண்டாம். ஆனாலும் முன் கூறின முக்குணமாகிய மூன்று தலையையும் அறுப்பது மும்மூர்த்திகளாலும் அசாத்தியமாம். தலையானதை முன்னே அறுக்காமல் வால் முதல் துண்டு துண்டாயறுத்தாலும், அகங்காரம் என்கிற பாம்பு சாகமாட்டாது. தலையை முன்னே அறுக்கும் உபாயம் எப்படி என்றால், அநேக ஜென்ம ஜென்மங்களில் செய்து பழகி வந்த நிஷ்காம சத்புண்ய விசேஷம் பூரணமானால், ஸ்ரீ சத்குருவின் தரிசனங் கிடைக்கும். அந்த சத்குருவை யடுத்து, அவர் பிரசாத சித்தமானால் திருவருள் கிடைக்கும். திருவருள் கிடைத்தால் அதே ஒரு பெரியவாளாம். அந்தவாளே விஞ்ஞான மென்கிறவாள். அவ்வாள் கைவசமானால் சந்தேகமில்லாமலும், பயமில்லாமலும் எடுத்து தைரியமா யொரு தரம் வீசுமானால், முன் கூறிய அஞ்ஞான மென்கிற அகங்கார ஸர்ப்பத்தின் முக்குணமான மூன்று தலையும் அடி-

யோடே அறும். முக்குணமான மூன்று தலையும் அறுத்தால், நிற்குணமான பேரின்ப நிதியை எடுத்து பிர்மானந்தமாய் நெடுநாள் அனுபவிக்கலாம். இதைத்தவிர அனேகமான தானம், விரதம், தபம், எக்ஞம், கர்ம யோக சன்யாசங்களினாலும், அனேக சாஸ்திரங்களைப் பார்த்தும், தத்துவங்களை எண்ணி யெண்ணி முகப்பாடம் படித்தும், பிரசங்கம் செய்தாலும், மற்றுமனேகமான மந்திர, தந்திர, தியான கர்மாதிகளினாலும் அகங்காரம் போகாது. அகங்கார மிருந்தமட்டும் அஞ்ஞானம் போகாது. அஞ்ஞான மிருந்தமட்டும் விவேகம் வராது. விவேகமில்லாதிருந்தமட்டும் நிராசை வராது. நிராசை யடையாதிருந்தமட்டும் எதார்த்த தத்துவம் விளங்காது. இவ் வுலகத்தின்கண் ஏதொரு வஸ்துக்களிலும் பிரியங்கொண்டிருந்தால், அது நம்மை விட்டுப் போகும் சமயத்திலும், அதை விட்டு நாம் பிரிந்து போகும் சமயத்திலும் அதிக துக்கமாம். ஆதலால் யாதொரு வஸ்துக்களிலும் பிரியமும், அகந்தையும் விட்டு நிராசையாயிருப்பவர் நிர்க்குணமாம் என்பது நிச்சயம். ஆசையானது மகாபாபம். பாபத்துக்குஹேதுவானது சரீரம். இந்த சரீரநிமித்தம் அனேக பாபம் வந்தடைவதற்கு விசாலமான இடம் உள்ளம். இந்த பாபமானது உள்ளே வந்து யேறுவதற்கு வாசல் பஞ்ச இந்திரியங்களாம். அதாவது காது, கண், மூக்கு, நாக்கு, தொக்கு. அநேக பாபங்களை உண்டுபண்ணுவது கர்மேந்திரியங்கள். அதாவது வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்த்தம் இவைகளை அடக்குவது தான் ஜீவன் முக்திக்கு வழி. பாபத்துக்கு காரணம் ஆசை. அதாவது மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இவைகளில் பேராசைகொண்டிருப்பதே பெரிய பாபம், இவைகள் மூன்றும் கடவுளின் ரூபமாம். அதாவது மண்ணாவது பூமி தேவியான லெக்ஷிமி. பெண்ணானது பராசத்தியம்மன்.

பொன்னனது கடவுளின்ரூபம். இவைகளில் ஆசைவந்த காரணம் நானெனது என்கிற அகமமதை. ஆதலால் நானென்கிற அகமமதை அடியோடே தள்ளிவிட்டால் பாபந் தொலையும். பாபந் தொலைந்துவிட்டால் எல்லாங் கடவுளின் ரூபமாம். எல்லாங் கடவுளின் ரூபமாக பார்த்தால் உள்ளந் தெளியும். உள்ளந் தெளிவடைந்தால் ஆசை அடியோடே நசிக்கும். ஆசை நாசமடைந்தால் பரமானந்தம் தானே வரும். இதற்கு முதலாவது சுத்த ஸாத்வீகம் ப்ரதானம். இதுகாலம் இந்த யுக தர்மமானது கலி. அதாவது தாமச குணம் மேலிட்டது. ஆதலால் சாஸ்வதமான தர்மமும், எதார்த்த ஞானமும் அதி சுவல்பம். கலி தர்மமாவது பொய், களவு, சூது, காமம் இவைகளில் ஸ்ரத்தையும், ஆசை, கோபம், இத்தியாதி துர்க்குணங்கள் மேலிட்டு, தாமஸ அந்தகாரத்தில் பட்டு ஒன்றுக்கொன்று சண்டை பிடித்து, புத்தி சூன்யராய் நாசமடைவார்கள். காம்மியார்த்தமான கர்மங்களில் சிரத்தையும், விபரீதமான தர்மமும், காம்மியார்த்தமான தபசிகளும், பொய் ஞானிகளும், பொய் குருக்கள்மார்களும், பொய்யடியார்களும் அனந்தங்கோடி உண்டு. இந்தப்படி தாமஸகுணம் மேலிட்டு, உலகமெல்லாம் கலி சபையாயிருக்கிறது. இதைக்கேட்ட சிஷ்யன் ஓ ஸ்வாமி! இப்படிக்கொத்த கலி சபையை தாண்டுவது எப்படி?

குரு:- ஓ மைந்தனே கேள்! இந்த கலிசபையை தாண்டுவதற்கு, முதலாவது துர்ச்சன கலி சங்கம் விட்டு நல்ல சற்சனங்களின் பாத பூசையும், கடவுளின் திருநாம ஸ்மரணையும் செய்து பழகி வருவதனுல் கலி சபையை தாண்டலாம். சாதுக்களில் சிறந்த தெய்வமும் கிடையாது.

ஓ மகனே கேள்! இந்த கலி சபையை அடியோடே தாண்டும் பரம ரகசியமான உபதேசம் உனக்கு சொல்லு

கிறேன். அதாவது சர்வ கர்மமும் விட்டு ஒரு குருவை யடுத்து பரமாத்ம பாவனை விஸ்வாசத்துடன் சேவித்து பழகி வருவதனுல் அகங்காராதி மும்மலங்களும் அறும். மும்மலங்களுமற்ருல் ஸ்ரீ சத்குருவின் அருள் கிடைக்கும். அருள் கிடைத்தால் அசுத்த மாயையை தாண்டலாம். சந்தேகம் வேண்டாம். அசுத்த மாயையை தாண்டினுல், சுத்த மாயையானது கர்ப்பூர தீபம் போலாம். அதாவது கர்ப்பூர மாவது அவித்தியா. அதில் ஏற்றிய தீபமானது வித்தியா. கர்ப்பூரமிருந்தமட்டும் தீபமிருக்கும். கர்ப்பூரம் நாசமடைந்தால் தீபமுங் கிடையாது என்பது ரகசியம்.

சிஷ்யன்:- ஓ ஸ்வாமி! இந்தப்படி வித்தையும், அவித்தையும் பொய்யாமென்ருல் குருவேது? சிஷ்யனேது?

ஓ மகனே கேள்! குருவென்பதும் சிஷ்ய னென்பது மிரண்டும் மாயாதான். இதற்கு சந்தேகமில்லை. ஆனுலும் முன் கூறின கர்ப்பூரம் நாசமாக்கும் பொருட்டு தீபம் வேண்டியது அவசியம். ஆதலால் குரு சிஷ்ய னென்பது கர்ப்பூரமும் தீபம் போலே முடிவில் இரண்டுங் கிடையாது. அதாவது குருவென்பது யாரென்ருல் அகப்பற்றும் புறப்பற்றும் அடியோடே அற்றவர்தான் குரு. சிஷ்யனென்பவன் யாரென்ருல் புறப்பற்று ஒன்றை விட்டவர்தான் சிஷ்யன். அகப்பற்ருவது ஏதென்ருல் ஆணவாதி மும்மலங்களுமாம். புறப்பற்ருவது ராகத்துவேஷாதிகளுக்கு ஹேதுவான மண்ணுசை, பெண்ணுசை, பொன்னுசை இவைகள் முதலான வஸ்துக்களில் ப்ரீதி கொண்டது. அகப்பற்று, புறப்பற்று இவைகளில் முன்னே எதை விடவேண்டுமென்ருல், புறப்பற்று அடியோடே விட்டால் அகப்பற்று விடலாம். அகப்பற்றும் புறப்பற்றும் அடியோடே விட்டவர்கள் சம்சாரத்தில் ஒத்திருந்தாலும் ஜீவன் முக்தராம்.

சிஷயன்:- அகப்பற்றும் புறப்பற்றும் விட்ட சன்யாசி, புறப்பற்றிலே வீழ்ந்து கிடந்தால் மறுபடியும் அந்த அகப் பற்று வந்தடையாதா ?

குரு:—ஓ மகனே கேள்! அகங்காராதி மும்மலங்களு மற்று அல்லும் பகலுமற்று அருள்பெற்ற இருவாசனையு மற்ற மகான்கள் அந்த அருளாலறியப்பட்ட ஆத்மஞான மென்கிற அக்கினியில் ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தவம் இம்மூன்றையும் ஞானுக்கினியால் சுட்டு விபூதியாய் பார்ப் பார்கள். ஆதலால், அகப்பற்றறுத்தவாளுக்கு புறப்பற் றணுவளவும் வந்தணுகாது. இதற்கு பிரமாணமுண்டு. இந்த உலகத்து ஆண்டவரான திரிமூர்த்திகளும், திருவவ தாரம் எடுத்த ராமகிருஷ்ணுதிகளும் மற்றும், மேலான வசிஷ்ட கௌதமாதிமுனீஸ்வரர்களும் மற்றும், ஜனக மஹாராஜர் மகாபலி முதலான மகத்துக்களும் மற்றுமனேக மான சாதுக்களும், அகப்பற்றும் புறப்பற்றுன சம்சாரத் தில் பற்றிருந்தும், தாமரை இலையில் தண்ணீர்போல் பற் றற்று ஜீவன் முத்தரானுர்கள். அதானது நிர்மலமான ஆகாசத்தில் மேகம், வாயு, மழை இவைகளினுல் மூடப்பட் டாலும், நிர்மல ஆகாசத்திற்கு ஒரு பெந்தமும் இல்லாதது போல் அகப்பற்றறுத்து அருள்கிடைத்த ஆத்மாராமனு யிருக்கும் மகான்கள் எங்கிருந்தாலும் எத்தொழில் செய் தாலும், சேற்றிலிருக்கும் புள்ளப்பூச்சியைப்போல் பற்று தல் கிடையாது என்பது நிச்சயம். முன்கூறினபடி குரு வின் திருவடி சேவிக்காமலும் குருவைத்தெரிந்துக் கொள்ளா மலும், குருபக்திவிளங்காமலும், அநேக சாஸ்திரங்களைப் பார்த்தும் கசடறவேஷங்களைப்போட்டும் நானே ஒரு ஞானியென்கிற கபடநாடகமாடும் பாஷாண்டிகளுக்கு முன் கூறின அகப்பற்றும் புறப்பற்றும் சமமாயிருக்கும். அதா

வது இருவினையும் சரியாயிருக்கும் ஆதலால், மாயாஜெயத்துக்கு குருபக்தி முக்கியமென்பது முன்கூறிய தார்ப்பரியம். குருபக்தி முற்றியதுதான். அருட்பழம். அருள்பழுத்த அதின் தருவானது கற்பகவிருக்ஷமாம். அருள்கிடைப்பது மஹாபிரயாசம் ஆனாலும், அருள்கிடைத்தால் அதை ஒரு காலத்தும் மறக்கமாட்டாது. அதாவது ஒரு பதிவிரதையாயிருந்த நாரி ஒரு சோர புருஷனில் பல நாள் ஆசையோடிருந்தும் ஒரு நாள் அவனுடன் சேர்ந்த சுகம் அவள் மறக்கமாட்டாளென்பதுபோல் குருவருள்கொண்ட நெஞ்சம் ஒரு காலத்தும் மறக்கமாட்டாதென்பது நிச்சயம். அருள்மறவாமல் இருந்தமட்டும் ஆணவாதிஇருள் வந்தடையாது. எங்கும் பரிபூரணமாயும், சுயம்பிரகாசமாயும் இருக்கும் பரமாத்மாவை மறைத்தது பஞ்சகோசம். அதாவது அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம் ஆனந்தமயம். அதாவது ஸ்தூலம், சூக்ஷமம், காரணம், மகாகாரணம், முக்தி. இவைகளில் அன்னமயகோசமென்பது, அகங்காரமான ஸ்தூலசரீரம். பிராணமயகோசமென்பது, பசி தாகாதிகளான சூக்ஷம சரீரம். மனோமயகோசமென்பது, சங்கல்பவிகல்ப ராகத்துவேஷாதிகளான காரண சரீரம். விஞ்ஞானமயகோசமென்பது, ஆண்டவனடிமையென்கிற மகாகாரண சரீரம். ஆனந்தமயகோசமென்பது, அகம்பிர்ம்மோஸ்மீ என்கிற முக்திசரீரம். அந்த பஞ்சகோசம் அஞ்சுக்கும் உள்ளே இருப்பது ஜீவாத்மா. இந்த பஞ்சகோசம் ஐந்தும் விட்டால் ஜீவாத்மாவே பரமாத்மாவாம். பஞ்சகோசமிருந்தமட்டும் ஜீவபாவனை இருக்கும். பஞ்சகோசம் ஐந்தும்விட்டால் எங்கும் வெட்டவெளியாம். இதையடையும்பொருட்டு சரியை, கிரியை ஆதிசன்மார்க்கமே உத்தமமென்றும் அதாவது சரியை கிரியாதி சகுணோபாசனை செய்து பழகிவருவதனுல் நிற்குணமடையலாம்.

அதாவது சாரூபமுத்தி சொரூபமடைந்தால் அதுவே நிற்குணமாம். சாயுச்சிய முக்தி அதாவது சகுணம் நிற்குணம் இரண்டும் அல்லவென்றறிந்த அறிவு ஒன்றுதான். ஆனாலும் சகுணம் நிற்குணமிரண்டாய் வேதாகமாதிகளில் கூறியதின் சாரமாவது நின்புத்திகொண்டு விசாரித்து சகுணமாவதேது, நிற்குணமாவதேது, இந்த சகுண நிற்குணமிரண்டையும் பார்த்த நீ யார்? சகுணம் நிற்குணமிரண்டும் தவிர வேறொரு வஸ்துவுண்டா? சகுணம் வேறு, நிற்குணம் வேறு நீ வேறென்றும் மூன்றும் தோற்றுவதற்கு காரணம் வேறே உண்டா? ஆனாலும் அவைகள் வேறுவேருக தோற்றுவது சித்தப்பிரமை. அதாவது ஆத்மாவும் அந்தக்கரணமும் சரீரமும் மூன்றும் யேகமாய்க் கண்டது சகுணமாம். ஆத்மாவும் பிரபஞ்சமும் சாக்ஷியும் யேகமாய்க்கண்டது சாரூப்யமாம். அந்த சாரூப்யத்திலிருந்தும் சகுணம், நிற்குணமிரண்டிற்கும் அதுவே சாயுச்சிய முத்தி. இதற்கு சரியை முதலான சன்மார்க்கத்திலிருந்தும் குருபக்திகொண்டு சாலோக சாமீப சாரூப்யமுமடைந்து, நாலாம்பதமான சாயுச்சிய முக்தியடையலாம். இதை அடைவதற்காக சகல அவயவங்களோடு கூடிய இந்த ஸ்தூல சரீரம் எடுத்தது. இது கிடைப்பதே மகா அரிது. இதை விட்டதே மகா கஷ்டம். கடவுளை சேவிக்காத மனிதர்களெல்லாம் மிருகத்துக்கு சமானம். மிருகங்களுக்கோ தேகமோநித்தியம், போகமோ சத்தியம் என்பதாக தோற்றுவதுபோ லிதினலென்னபலன்.

புல்லாய், புழுவாய், பாம்பாய், மானய், மீனய், மரமாய் மிருகமாய், பக்ஷியாய், பசுவாய் எல்லா பிறப்பு எடுத்தும் கடைசி இவைகளில் சிரேஷ்டமானதும், வெகு புண்ணிய விசேஷத்தினல் கிடைத்ததும், இந்த மானிட சரீரம். இதை விட்டுப்போனல் பின்னுள்ள சுகதுக்கம் இவ்வுலகத்தின்கண்

அல்ப புத்திகளாயும், அல்ப ஜீவிகளாயும், துராசையாயும், இருக்கும். ஜனங்களுக்கு தெரியவில்லை. ஆனாலும் சத்குருவின் அருள்பெற்ற மகான்களுக்கு தெரியும். அதாவது ஆசை இருந்தமட்டும் ஒன்றைவிட்டொன்றினைபற்றி சரீரம் மாறி மாறி எடுப்பதும் சுகதுக்கங்களை அனுபவிப்பதும் சுபாவீகம். அதாவது பழைய வஸ்திரத்தைதள்ளி ஒரு புதிய வஸ்திரத்தை கட்டியதுபோல், ஜீவன் பழைய சரீரத்தை விட்டு புதிய சரீரம் எடுப்பது சுபாவீகம். சுகதுக்கத்துக்கு காரணம் கர்மம். அதாவது புண்ணியம் பாபம். அதினாலடையப்பட்ட பலன் நரகம் சொர்க்கம். கர்மத்துக்குக் காரணம் ஜீவபோகத்திலுள்ள ஆசை. ஆசைக்குக் காரணம் அனாதியான சேர்க்கைவாசனைப் பழக்கம். இவைகளுக்கெல்லாம் காரணம் மனம். மனசங்கல்பமற்றது முக்யபலமான மோக்ஷம். அதாவது துக்கம் நிவர்த்தியானால் சுகமடையலாம். முனி கூறியபடி உடல் பொருள் ஏவல் மூன்றும் ஸ்ரீ ஸத்குருவின் திருவடிக்கு அற்பணமாக்கி வாக்கு மனக் காயங்களினால் சேவித்துப் பழகிவருவதனால் ஆங்காரம் நசிக்கும். ஆங்காரம் நாசமடைந்தால் கர்மம் அடியோடே நசிக்கும். கர்மம் நசித்தால் புண்ணிய பாபங் கிடையாது. புண்ணிய பாபமில்லாவிட்டால் சொர்க்க நரகங் கிடையாது. சொர்க்க நரகமில்லாவிட்டால் சுகதுக்கங்கிடையாது. சுகதுக்கமிரண்டுமில்லாவிட்டால் ஜெனன மரணங்கிடையாது. ஜெனன மரணமற்றால் அதுவே ஜீவன் முக்தி. முன் கூறினபடி உடல் பொருள் ஏவல் மூன்றும் குருவுக்கு அற்பணமாய் தாரைவார்த்தால், நாம் பாழாய் சூனியமாய் போவோமோ என்கிற சந்தேகம் வேண்டாம். ஏனென்றால் நமது சொல்பமான இடம் பொருள் ஏவலெல்லாம் ஒரு மஹாராஜாவுக்கு அடியரவாய்கொடுத்து அவருடைய பிரீதியடைந்தால், அவர் நம்மை சேனாதிபதியாக்கி வைப்பாரல்லவா?

அதுபோல் திரிலோகாதியாயும் சராசர குருவாயுமிருக்கும் ஸ்ரீ பகவானிடத்தில் நமது உடல், பொருள், ஏவல் மூன்றும் பக்தி விஸ்வாசத்துடன் சத்தியமாய் தத்தம் செய்தால் ஸ்ரீ சத்குருவின் பிரசாதமான திருவருள் கிடைக்கும். குருவருளான திருவடி அடையுமானல் பரமசிவனுடைய திருவடியடையலாம். திருவடியடைந்தால் எல்லாம் நம்மிடத்திலேயே இருக்கும். இதற்கு சந்தேகம் உண்டா? நாம் ஒரு மூட்டைக் கட்டி எடுத்துக்கொண்டு எந்த இடம் போய்ச் சேருவோமோ அந்த இடத்திலும் அந்த மூட்டையும் இருக்கும். அதுபோல எல்லாம் பகவானுக்கு அர்ப்பணமாக்கினல் எல்லாம் பகவானிடத்திலிருக்குமென்பது முன் கூறின தாத்பரியம். மாடு, மக்கள், பெண்டு, பொருள் இவைகளோடு கூடி எப்போதிலும் சுகமாய் வாழலா மென்பது நிலையல்ல. அர்த்த மென்பது அனர்த்தமாம். ராகத்துவேஷாதிகள் சத்துருக்களாம். புத்ர தாராதி பெந்துக்கள் எல்லாம் நித்திய உபத்திரவமாம். இதிலுள்ள மோகமானது கால் விலங்கு. ஆதலால் சமஸ்த கர்மங்களும் ஸ்ரீ சத்குருவின் திருவடிக்கே அர்ப்பணமாக்கி சமஸ்தமும் குருவாகப் பாவித்து ஆண்டவனுக்கு அடிமைகொண்டு பசுபதி பாவனையாய், பரம பக்தி விஸ்வாசத்துடன் பூஜித்து சேவிப்பவர்களுக்கு ஆசாபாசத்துக்கு ஹேதுவான மும்மலங்களுமற்று பேரின்பமான பரமபதமடையலாம்.

ஓ மைந்தனே கேள்! மோக்ஷமென்பது ஒருவர்க்கொருவர் கொடுக்கவும் கொள்ளவும் தகுந்ததல்ல. பரமாத்மாவினுடைய அம்சமான வாக்கு மனக்காயங்களை பரமாத்மாவில் சேர்த்து ஜீவாத்மா பரமாத்மா இரண்டும் ஏகமென்றறிந்து, ஐக்கியமே மோக்ஷம், சாஸ்வதமான பேரின்பமான வீட்டை மறந்து, நச்சரமாயும் சிற்றின்பமாயும் இருக்கும்

சரீர விஷய சுகத்தையே பேரின்பமாக நினைந்து ஆசையை வளர்க்கும் காமிய கர்மத்தினல் கட்டப்பட்ட பேர்களுக்கு சொந்தவீடானது எமலோகம். அதானது பெரிய நரகம். அந்த பெரிய நரகமான வீட்டுக்கும் வாசற்படி நான்குண்டு. அதாவது காமம், குரோதம், லோபம், மோகம். இதைத் தவிர சாஸ்வதமான சுகத்தில் இச்சை யுடையவர்களுக்கு பேரின்பமான பெரிய மோக்ஷ வீடு அடைவதற்கும் வாசற் படி நான்குண்டு. அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கு சாதனங்களுமாம். ஆத்ம சுகம் அடைவது பிரதி தினமும் அரை நிமிஷமாகிலும் நம்முடைய மனமானதை பரிசுத்தமாக்கி, நிலை நிறுத்தி, மெள்ள மெள்ள பரமாத்மாவில் சேர்த்து தியானஞ் செய்து பழகி வருவதனல் மனதினுடைய கர்ம வாசனை சங்கல்பமறும். சங்கல்பமற்ருல் விகல்பங் கிடையாது. விகல்பமற்ருல் சாத்வீகத்தின் அம்சமான மனம் நிர்வாணமாம். நிர்வாண பதம் பரமானந்த சுகமனுபவிக்கும் பொருட்டு வழி காட்டுவதற்காக சுருதி, ஸ்மிருதி, வேதசாஸ்திரம், புராண இதிகாச சகல கலைஞான சாதனங்களும், கடவுளாலும், ஞானிகளான மஹத்துக்களாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆதலால் முதலாவது சரியை அதானது துற்சங்கம் விட்டு நிஷ்காமமாய் நல்ல சத் சங்கம் செய்து பழகி வருவதுதான் சரியை. இதனல் தாமசகுணம் நசிக்கும். முத்திக்கு மூல வித்து. அந்த வித்தை ஆசை கொள்ளாமல், முதல். பூமியில் நட்டு விரத்தை என்கிற ஜலம் விட்டு, பக்தி என்கிற எரு போட்டு அதை பிரதிதினம்பார்த்து, பாதுகாத்து, காப்பாற்றுமானல் அது விருத்தியாகி ஒரு விருக்ஷமாகும். அதிலுண்டாகும் புஷ்பமானது கிரியை. அதாவது ஸ்ரீ சத்குரு தரிசனம். அந்த புஷ்பத்திலிருந்தும் தோற்றிய பலனவது யோகம். அந்த யோகமான பலன் முற்றிப் பழுத்து பக்குவமாய் பரி

பாகமாவது ஞானம். ஆதலால் இதைத் தவிர ஞானத்துக்காக நானுவிதமாயலையாமல் முதலாவது சரிபை உள்ளபடி செய்து பழகி வருவதனுல் நான்கு சாதனங்களுமடைந்து நாலாம்பதமான ஞானம் கரதலாகமலகம்போல் தானே வந்தடையுமென்பதற்கு சந்தேகம் வேண்டாம். சற்சங்கமானது சரியை. நிற்சங்கமானது கிரியை. நிர்மோகமானது யோகம் நிற்சல தத்துவமடைவது ஞானம். இதற்கு பிரமாணம் ஸ்ரீமான் சங்கராச்சாரியர் ஸ்வாமி அவர்களால் ஸ்லோகம்

ஸற்சங்கத்வே நிற்ஸங்கத்வம்
நிற்ஸ்ங்கத்வே நிற்மோகத்வம்
நிற்மோகத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன் முத்தி.

இதன் பொருள்:—சற்சங்கமாவத் ஞான வாசலுக்கு முதற்படி. அதாவது நிஷ்காம கர்மியாய் சாதுக்களில் பக்தியும் விஸ்வாசமும், சத்தியம், தர்மம், ஜீவகாருண்யம், தபசு, சாந்தம், இத்யாதி நற்குணங்களை அடைவதும், சாதுக்களிட சம்பாஷணைகளை கேட்டுக்கொள்ளுவதும், கடவுளின் திருநாம சங்கீர்த்தனதிகளை உச்சரிப்பதும் சரிபை. இதனுல் தாமஸ குணம் அடியோடே நசிக்கும். இந்த முதல் படி தாண்டுவது பெரிய கஷ்டம். அதாவது சரியையாகிய முதல்படி தாண்டிவிட்டால் ஷெ மூன்றும் ஏறுவதற்கு கஷ்டமில்லை. 2வது கிரியை அதாவது முன் கூறின சரியையிலிருந்து நிஷ்காம அனுஷ்டானத்தினுல் சித்த சுத்தி அடையும்போது ஸ்ரீ சத்குரு தரிசனங் கிடைக்கும். குரு தரிசனங் கிடைத்தால் சர்வ கர்மமும் விட்டு அந்த குருவை அடுத்து உடல், பொருள், ஏவல் மூன்றும் ஸ்ரீ சத்குருவின் திருவடிக்கி அர்ப்பணமாக்கி, மனதினுல் திருவடித்யான

மும், வாக்கினல் தோத்திரங்களும், சரீரத்தினல் பூஜித்தலும் செய்வது கிரியை. இந்தப்படி கிரியை செய்து பழகி வருவதனல் ராஜஸ குணம் நசிக்கும். ராஜஸ குணம் நசித்த பக்குவகாலத்தில் ஸ்ரீ சத்குருவின் திருவருள் கிடைக்கும். 3வது யோகம் அதாவது முன் கூறிய அருள் நிலையிலிருந்தும் சராசரத்துக்கும் அந்திரியாமியாம். பரமாத்மாவை ஏகமாய் கண்டு உபாசிப்பதுதான் யோகம். இதனல் சாத்விகமும் சாந்தமாம். சாத்மீகம் சாந்தமானல் 4வது ஞானம் அதாவது தன்னைத் தவிற வேறில்லை என்றறிந்து, அறிவை பரமானந்தமாயும், பரிபூரணமாயும், பரிசுத்த நிற்மலமாயும், சுயஞ்சோதியாயும், துரியாதீதமாயும் இருப்பதுதான் ஞானம்.

அதாவது மகனே கேள்! உன்னுடைய அறிவானதை நிலைநிறுத்தி பரமானந்தத்தில் ஐக்கியமாவதுதான் ஞானம். ஐக்கியமென்பது ஜீவாத்மாவை பரமாத்மாவில் சேர்த்து இரண்டில்லை என்றறிந்து, யேகமாய் கண்டு சிவ சத்தி இரண்டுமாய்க் கலந்து ஏகமாய் பரிபூரணமாய் பரமானந்தமாய் இருப்பதுதான். இதில் பரிபூரணமானது பரமசிவம். பரமானந்த மென்பது சுயம்பிரகாச சத்தி. பரமானந்தமான சத்திக்கு அடுத்தது பரிபூரணமான சிவம். பரிபூரணமான சிவத்துக்கு அடுத்தமே பரமான சத்தி. பரிபூரணத்துக்குள்ளிருந்து ஆரோபமாய்த் தோற்றுவதுதான் சமஸ்த பிரபஞ்சமும. எல்லாம் பரிபூரணத்திலடைக்கலமாம். அபவாதம ஆனலும் பூரணப் பொருளானது அழிவற்றது. அதைத தவிர வேறொரு வஸ்துவுங் கிடையாது. இரண்டில்லாத ஆத்மாவானது வேறொரு வஸ்துவினலும் பெந்திக்கப் படுவதுய், பெந்தப்படுவதும் விமோசிக்கப்படுவதுங்கிடையாது. அதாவது பரமானந்தமாயும், பரமாயும், பரிபூரண

மாயும், யேகமாயும், நித்த நித்ய நிர்மல சுயஞ்ஜோதியாயும் விளங்குகின்ற நித்தியாத்துமாவுக்கு பெந்த மோக்ஷமென்ப திரண்டும் மாயையால் தோற்றுவதல்லாமல் எதார்த்தமல்ல. ஆனாலும் உண்மையறியாமல் பெந்த மோக்ஷமிரண்டும் பொய் யென்று எண்ணும் மூடர்களுக்கு கர்ப்பாந்த கால மானாலும் நரகமாம் என்பதற்கு சந்தேகம் வேண்டாம். ஏனென்றால் முன் கூறிய பூரணானந்தக் கடலில் இருந்தும், தோற்றப்பட்ட மூலப்பிரகிருதியான அலை அந்த அலையிலிருந் தும் உண்டான நுரைகளானது மூவுலகும் மும்மூர்த்தி சொரூபாதி அனேகமான ஜீவர்களும், சராசரமான சரீரங் களும் காணப்பட்டது. இவைகளில் விசேஷமானது மானிட ஜாதி. மானிட ஜாதிகளோ எட்டு விதமான பெந்த மோ க்ஷத்திலும், சுக துக்கங்களான நரக சொர்க்கங்களிலும் அடைந்து மாயா சூத்திரத்தினால் கட்டப்பட்டிருக்கிறது. முன் கூறின எட்டுவிதமான மனிதர்கள் யாரென்றால்,

மகனே கேள்! முதலாவது தெய்வ நாஸ்திக மதம். அதாவது நிரீஸ்வர மதம். இரண்டாவது இகலோககாமி. மூன்றாவது பரலோககாமி நான்காவது நிஷ்காமகாமி. ஐந்தாவது முமூட்சு மோக்ஷத்திலிச்சையுடையவன். ஆறா வது அப்பியாசி. ஏழாவது அனுபவி. எட்டாவது ஆரூ டைக்ஞானி. இவர்களில் ஆரூடைக் ஞானிக்கு மாத்திரம் மாயா கல்பிதமான பெந்த மோக்ஷம் இரண்டுங் கிடையாது. ஏனென்றால் அவர்கள் மாய்கையைக் கடந்தவராதலால் அவர்களுக்கு மாயா சம்மந்தமான இறப்பு, பிறப்பு, சுக துக்காதி பெந்த மோக்ஷங்கள் இவைகள் ஒன்றுமே கிடை யாது. இரண்டாவது அனுபவி அனுபவிக்க இந்த ஜென் மமே ஜீவன் முக்தி. மூன்றாவது அப்பியாசி யோகி. அப்பி யாசி யோகிக்கு அடுத்த ஜென்மம் ஜீவன் முக்தி. நான்கா

வது முமூட்சு. அதாவது மோக்ஷத்துக்கு இச்சையுடையவன். மூன்ருவது ஜென்மத்தில் ஜீவன் முக்தி. ஐந்தாவது நிஷ்காமகர்மி. நான்காம் ஜென்மத்தில் ஜீவன் முக்தி. ஆருவதும், ஏழாவதும் பரலோக இகலோக காமி. இவர்களுக்கு மோக்ஷம் கனவிலும் கிடையாது. எட்டாவது நிரீஸ்வரமதம். அதாவது பாஷாண்டம். அவாளுக்கு அநேக கற்பகாலமானுலும் நரகமாம். ஆதலால் குரு சுருதி யுக்தி அநுபவத்தினுல் உணர்ந்து அருள் அடைந்தவாளுக்கு முன் கூறின பெந்த மோக்ஷம் இரண்டும் மாயா காரியமாம். ஆதலால் அவைகள் பொய்யா மென்பதற்கு சந்தேகமில்லை. அகண்ட பரிபூரண சச்சிதானந்த வஸ்துவாயும், சுத்த நிற்மல சுயஞ்சோதியாயும் சுயம்புவாயுமிருக்கும் வெட்டவெளியிலே சிற்றின்பமான இருள் அணுவளவுங் கிடையாது என்பது முன் கூறின தாத்பரியம். சிற்றின்பத்தில் ஆசையானதுவே பெந்தம். பேரின்பத்தில் ஆசையடைந்தால் மோக்ஷமாம். பெந்த மோக்ஷமிரண்டுக்கும் காரணம் மாயா. மாயையானது சுத்தமாயும் அசுத்தமாயுமிருக்கும் அகண்ட பரிபூரணுனந்த சுயஞ்சோதியாம். வஸ்து நிர்ணயமாவது சுத்த மாயை. இதை விபரீதமாய் மறைப்பதுதான் அசுத்த மாயை. பரமாத்மாவை மறைப்பது சத்து. சத்தை மறைப்பது சித்து. சித்தை மறைப்பது ஆனந்தம். ஆனந்தத்தை மறைப்பது அசுத்த மாயை. அசுத்த மாயையை மறைப்பது குணங்கள். குணங்களை மறைப்பது மனம். மனதை மறைப்பது இந்திரியங்கள். இந்திரியங்களை மறைப்பது அகங்காரம். அகங்காரத்தை அடியோடு விட்டுவிடுவதுதான் பேரின்ப மென்றும் எல்லா நூல்களுடைய தாத்பரியம். ஆதலால் அதாவதுக்கு முன் கூறினபடி உள்ள சரியையானது நிஷ்காமமாயும் சரியாய் அநுஷ்டானஞ் செய்து பழகி வருவதனுல் அகங்காரம் அடியோடே நசிக்கும். இக்

திரியங்களும் அடங்கும். இந்திரியம் அடங்கிவிட்டால் இரண்டாவதான முமூட்சு என்கிற கிரியாஸ்தானம் அடைந்து சாமீபமான குரு சேவை செய்து பழகி வருவதனுல் மனதை அடக்கலாம். மனம் அடக்கமானுல் மூன்ருவதான அப்பியாச யோகத்தில் இருந்து சாரூப்பியம் அடைந்து குணம் மூன்றும் அடக்கலாம். குணம் மூன்றும் அடங்கி விட்டால் நாலாவதான அனுபவ ஞானத்தினுல் மாயையைக் கடந்து சாயுச்ய மடையலாம். சாயுச்ய மென்பதுதான் ஆரூட சமாதி. அதாவது அசைவற்ற அமலமாய் நிர்மல ஆகாயம் போலே யிருப்பதாம் இந்தப்படி சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கு சாதனங்களினுல் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்யம் அடையலாம் என்பது முன் கூறின தாத்பரியம்.

ஓ மகிமையையுடைய மாதவனே கேள்! மனதினுடைய துராசையானதே பெந்தம். நிராசையானதுவே மோக்ஷம். இவைகளில் ஆசையின் சொரூபமாவது என்ன வென்ருல் காமம், குரோதம், லோபம், மோகம் இவைகள் நான்குமாம். இவைகளில் காமமாவது மனைவி, குரோதமானது மக்கள், லோபமானது பொருள், மோகமானது நானென்கிற சரீரம். இந்தப்படி நான் எனது என்பதாக விபரீதமாய் தோற்றுவதற்குக் காரணம் குணங்கள். அதாவது சாத்வீகம், ராஜஸ, தாமஸம் இவைகள் மூன்றுமாம். இந்த குணங்களுக்கு காரணம் மாயா. அதாவது மனம். இவைகள்தான் ஆசாபாசமாயும், பெந்தத்துக்கேதுவாயு மிருக்கிறது. ஆனுலும், மனம் பரிசுத்தமடைந்தால் மாயை கிடையாது. மாயை லயமடைந்தால் குணம் மூன்றுங் கிடையாது. குணங்கள் மூன்றும் லயமடைந்தால் முன் கூறின காமாதிகளும் கிடையாது. காமாதிகள் அடியோ

டே நசித்தால் துராசையானது தானே நசிக்கும். ஆசை அடியோடே நசித்தால் அதுவே மோக்ஷமென்பதாம். ஆனாலும் ஆசையானது துன்பம். அதை விட்டுவிடுவது மகா துன்பம். ஆசை அடியோடே விட்டால் அதுவே பேரின்பமாம். ஆனாலும் இவ்வுலகத்தின்கண் எல்லாவற்றிலும் சிறந்ததும் எல்லோருக்கும் பேராசையானதும் கனகம் முதலான பொருள் அந்தப் பொருளிலும் பிரியமானது மக்கள். மக்களிலும் பிரியமானது மனைவி. மனைவியிலும் பிரியமானது தன் சரீரம். சரீரத்திலும் பிரியமானது பரிசுத்த ஆத்மா. இந்த பரிசுத்த ஆத்மா நித்திய ஆத்மாவினை மறந்து விட்டதுதான் துன்பம். மறக்க காரணம் முன் கூறின துராசை. ஆசைக்கு மூலவித்தானது பொருள். பொருளாசை மேற்கொண்டால் மற்றுமனேகமான ஆசை வளரும். முதலாவது பொருளாசையை அடியோடே விட்டால் நிராசையாயிருக்கலாம். நிராசையில்லாமல் பரமாய் ஒரு தெய்வமுங்கிடையாது. ஆனாலும், இந்த கலி தர்மமானது பொருளாசைமேற்கொண்ட தார்மிகளும், கர்மிகளும், பெரியோர்களும் அநேகருண்டு. இதனால் ஆசை வளருமென்பது நிச்சயம். ஆசை வளரவளர காமக்குரோதாதிகளும் வளர்ந்துகொண்டே யிருக்கும். பொருளிற் பேராசை கொண்டால் மூன்றுலோகங்கிடைத்தாலும் ஆசையானது அதற்குமேலே கிளம்பிநிற்கும். பொருளாசை மேற்கொண்டால் அதுவே துக்கம். பொருள்கூடிய இடத்தில் அநேக ஆபத்துகளும், பயமுமிருக்கும். பொருள்கூடின இடத்தில் அநேகவிதமான பெந்து சத்துருக்களும் சுக துக்கங்களும், ராகத்வேஷாதி சம்சார கூட்டமும் வந்தடையும். சிலபேர்கள் பொருள் இருந்தமட்டும் யோகாதி கர்மங்களை செய்து சுரலோகம் அடைவார்கள். சிலபேர்கள் பொருள் பெருகியதினால் மத கெர்வமடைந்து, கொலை, களவு, சூது,

கள், காமம் முதலான கொடிய பாபங்களைச் செய்து நரக மடைவது முண்டு. இந்த கலி சபைக்கெல்லாம் தர்ம கர்த்தா வானதும் பொருள்தான். பொருளாசையை விட்டால் பெந்து சத்துருக்கள் கிடையாது. பெந்து சத்துருக்கள் இல்லாவிட்டால் ராகத் துவேஷாதிகள் அணுவளவும் வந்தணுகாது. ராகத்துவேஷாதி இல்லாவிட்டால் ஆசையே கிடையாது. ஆனாலும் பொருளிருந்தமட்டும் நல்ல அடியார் களைப் பார்த்து தர்மமிட்டால் கர்மந் தொலையும், புண்யம் வளரும், ஜென்மசாபல்யமாகும். சச்சிதானந்தமாயிருக்க லாம். சந்தேகம் வேண்டாம். பொருளிருந்தமட்டும் சாஸ்வதமான தர்மத்தை தேடுவது உத்தமம், நல்ல குணமிருந்த மட்டும் ஞானந் தேடுவது சிலாக்கியம். இந்தப்படி சகல மத சம்மதமாயும், வேதாந்த சாரமாயும் இருக்கும். மஹா வாக்கியாமிர்த சாரமாய் ஞானோபதேசம் கேட்ட சிஷ்யனும் திட சித்தனாய் தெளிவடைந்து மேகத்தைக் கண்ட மயில் போல் மயிர் கூச்சலிட்டு மெய் மறந்து புளகாங்கிதங் கொண்டு, பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி ஸ்ரீ சத்குரு சன்னிதானத்திற்கு மூன்று தரம் பிரதக்ஷணம் செய்து திருவடிக்கு அனேக தெண்டனிட்டு ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஒ மெய்ஞ்ஞான தேசிகரே! நின் திருவடி தெரிசனத்தினாலும், திருவருள் மஹா வாக்யாமிர்தத்தினாலும் பிரவிக் குருடனும் அடியேனுடைய மஹா மோகந்தகாரமான திமிரம் அடியோடே போக்கி, பேரின்பமான வீடு காட்டி, வெட்ட வெளியிலே சும்மாயிருக்க அருள் செய்த உபகாரத்திற்கு பிரதி உபகாரம் அடியேன் செய்யத் தகுந்தது எதுவும் காணேன். என் பொருள், உடல், ஆவி மூன்றும் முன்னமே நின் திருவடிக்குத் தாரைவார்த்தேன். ஆனாலும் அடியேனுடைய விண்ணப்பமானது, ஒ என் ஐயனே! மெய்யனே! சுவிக்ஞான தேசிகனே! என்னை ஆட்கொண்ட குரு

நாதா! நின் திருவடி திருவருள் இரண்டும் மறவாமல் இருக்கும் பொருட்டு கிருபை செய்து அருள வேண்டுமென்றும், அபேக்ஷையுடன் திருவடிக்கு தீர்க்க தெண்டனிட்டு, திருவடி இரண்டும் சிரசால் வணங்கிநிற்கும் சிஷ்யனைப் பார்த்து, குருநாதன் கிருபாளுவாய்ப் ப்ரகாசானந்த சித்தனுய், கையால் தடவி சின் முத்திரை கைக்காட்டி சிரஞ்சீவியாய் இருக்கக் கடவாய் என்று அருள் செய்து, குருநாதன் தனதிஷ்டமான இடம் போய் அடைந்தார்.

இந்த நூலை உள்ளன்புற்று பார்ப்பவர்களுக்கு பார்க்கப் பார்க்கப் பேரின்பமாம். ஆதலால் இந்நூல் பவரோகம் சாந்தமாவதற்கு விவேகாமிர்த ரஸாயனம். ஆதலால் இதை சாதன சதுஷ்டய பத்தியம் இருந்து சாப்பிடும் பேர்களுக்கு பேரின்பமாம். ஆதலால் பேரின்ப விளக்கமென்றும் சாற்றினேன்.

ஸ்ரீ சற்குருநாதன் சரணுகதி.

பேரின்ப விளக்கம் முற்றுப்பெற்றது.

அரிஸ்ரீ கணபதயே நம:
அவிக்கினமஸ்து
ஸ்ரீ குருப்யோந் நம:

அருள் ஞான தீபம்.

குரு வணக்கம்.

ஓங்கார மானபொருள் மூன்ருய்ப் பிரிந்து முதல்
முக்கோண வட்டமாய் மூலமொரு சாலமாய்
பாலகண நாயகனும் அம்மணியும் ஆதியாய்
எட்டுமாய் ரெண்டுமாய் அஞ்சுமாய் மூன்றுமாய்
அகாரமாதி முதல் அன்பத்தோ ரக்ஷரமாய்
ஆதார மாறுமாய் ஆத்தியந்த சூன்னியமாய்
சத்தமாய் சித்துமாய் சுத்தசிவ சத்தியாய்
சித்தமது குடிகொண்ட குருவான தெய்வமே. (1)

அப்பனே யத்தனே அன்புடைய கர்த்தனே
இன்பமுட னெவ்வுயிரும் ஆண்டஜெக தீசனே
சுத்தபரி பூரண சுகானந்த வாரியே
சித்தமது குடிகொண்ட குருவான தெய்வமே
ஈசனே நேசனே இகபரவிலாசனே நாயடியன்
னெளிய வனையாட் கொள்ளு மய்யனே
அத்துவித தத்துவமசி அருள்ஞான தீபமே
எத்தொழிலி லெப்பொழுதும் அஞ்சலி செய்குவாம். (2)

அன்புருகி அருள்பெருகி ஆருய் எழுந்தருளி
இன்பமுட னெங்குமாம் யேகாந்த சித்தனுகி
வேதாந்த சித்தாந்த சமரச சமானமாய்
சாதுவாய் யோதுவாய் காதிலுப தேசமாய்
ஆதியா யனந்தமாய் அண்டபகி ரெண்டமாய்
சத்துமாய் சித்துமாய் முக்திக்கு வித்துமாய்
அரிவிலரி வருளதாம் பரமகுரு பதமலரை
கரளிலிது கருதிதினம் அஞ்சலி செய்குவாம். (3)

அத்தரண மன்பருட சித்தமதி லின்பமாய்
சுத்தபரி பூரண சுகானந்த வாரியாய்
உக்தரண உலகமதி லானும் ஊனும்
சப்தரச பரிசாதி வானுதி பூதமாய்
நானென தனேகமாய் நானுவி சாரமாய்
கோரமாய் மூடமாய் காமாதி வைரியாய்
எம்மனதை யேனறியேன் யேழையிவ னெளியன்
அய்யனுட மெதியடியி தென்சிறசில் வாழுவாம். (4)

சஞ்சல மனக்குரங்கை சாடுமா மகங்காட்டை
அஞ்செழுத் தானவாளால் அடியோடே வேறறுத்து
நெஞ்சமேகேள் நேசமான ஓரெழுத்தான தீயால்
சஞ்சித மானபாபக் காடது படுதீ யாமே.

காப்பு.

சோதியெனு மனோன்மணியைத் தியானஞ் செய்து
சுகமான அருள்ஞான தீபம் புகழ
ஆதியெனும் கணபதியும் வல்லபையும் காப்பு
அரசான பிர்மனொடு சரஸ்வதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கும் ருத்திரியும் ருத்திரனுங் காப்பு
ஓதியதோர் மஹேஸ்பரனும் மஹேஸ்வரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனு மனோன்மணியுங் காப்பே. (1)

மணியான ரவிமதியும் சுழிமுனையுங் காப்பு
மகத்தான வேதியனார் தன்பாதங் காப்பு
கனிவான நால்வேதம் அந்தங் காப்பு
கருணைவளர் சாஸ்திரமோ ராருங் காப்பு
அணியான ஆதார சோரூபங் காப்பு
அருளான அமுர்தரச போதங் காப்பு
கனியான பராபர மாஞ்சோதி காப்பு
சதாநந்த பரிபூரண மாந்தாய் காப்பாமே. (2)

தாயான சிவயோக மூலங் காப்பு
சகல கலைக்கியான பணிப்பீடங் காப்பு
மாயாத வாசிமல ரந்தங் காப்பு
மணிமந் தரநாத வொலிகீதங் காப்பு
சாயாத அடிமுடியும் நடுவுங் காப்பு
சவுமியமாம் தேவ ரிஷிகள் காப்பு
தேயாத வாசியது மவுனங் காப்பு
சிவசிவா அகாரமுடன் உகாரங் காப்பே. (3)

உகாரமென்ற நாதமது சத்தி காப்பு
உறுதியுள்ள யகாரமது சிவமே காப்பு
சிகாரமென்ற சோதியது வாலை காப்பு
சிவசிவாமா காரமென்ற மவுனங் காப்பு
வகாரமென்ற பஞ்சகண தீட்சை காப்பு
மகத்தான சடாட்சரமாம் ஆதி காப்பு
நகார முதல் யகாரவரை ஓங்காரத்தில்
நாம்நின்ற சூட்சமது ஆதி காப்பே. (4)

ஆதிகுரு வேதியர்தன் பாதம் போற்றி
அருள்பெருகும் கேசரியை பூசை பண்ணி
சோதியெனு மருள்ஞான தீபம்போற்ற
சுயஞ்சோதி ஆதியந்த சுழினைகாப்பு
நீதியுட ஞதார மூலந் தன்னில்
நின்றிலங்கும் பிராணநா யகனுர் காப்பு
ஓதியதோர் கலைமகளும் பூமகளும் காப்பு
உண்மையுள்ள சேய்மகளுந் தாய் தாப்பாமே. (5)

கண்ணுயிற் குருமணி பாதங் காப்பு
கருணையுடை திருமணிதாய் காப்பு.

ஸ்ரீ சற்குருவே நம:

அருள் ஞான தீபம்.

வசனம்.

முதலாவது சிஷ்யன்கேட்கிறான். ஆதிமூல ஸ்ரீபரமானந்தவஸ்துவாம்பரமாத்ம சொரூபத்தைஅறியும் பொருட்டு சிரத்தை மிகுந்த சாந்தகுணமுடைய ஒரு சிஷ்யன் பரிசுத்தமுடையவரான ஒரு ஞானசாரியாரிடம் சேர்ந்து திருவடிக்குத் தெண்டமிட்டு அஞ்சலியஸ்தனாய் நின்று கேட்கிறான்:—ஓமல் தேசிகரே! பரமகிருபாளுவாய் அடியேனைப்பார்த்து கார்த்து அருளவேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன். என் உடல் பொருள் ஆவி மூன்றும் நின்திருவடிக்கு அர்ப்பணம். அடியேனுடைய விண்ணப்பமாவது பராபரமாயும், பரமானந்த சொரூபமாயும், பரிபூரணமாயும் இருக்கும். பரமாத்மா சொரூபத்தை அடியேனுக்குப்பார்க்கவேணுமென்று அதிக ஆவலுடன் அநேக சாஸ்திரங்களிலும், அனேக தீர்த்தங்களிலும், அநேக க்ஷேத்திரங்களிலும், அநேக மதாச்சாரியர்களிடத்திலும், உபநிஷத்தாதிசாரமான மகாவாக்கியங்களிலும், தேடி அலைந்தேன். அந்த பரமானந்த சொரூபத்தை அடியேன் ஓரிடத்திலுங்காணேன் ஓ ஆண்டவனே அடியேனுடைய ஜென்ம சங்கடம்போகும்படி நின்திருவடி திருவருளானவாளினால் அடியேனுடைய சந்தேகமெல்லாம் அடியோடு அறுத்து கார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன்.

இந்தப்படி கேட்டுக்கொண்ட சிஷ்யனைப்பார்த்து குருவானவர் சொல்லுகிறார்.

ஓ வாரீர் மகனே கேள் உன்னை நீ நம்பினல் உள்ள படி மெய்யாகுமென்பார். பொய்யைமறந்தால் மெய்யைப் பார்க்கலாம். மெய்யுணர்ந்த ஞானிகள், உள்ளம் யெங்கும் பரிபூரணமாம், சுயம்பிரகாசமாய் விளங்கும் மெய்மறந்த மூடர்களுக்கு மெய்யேது, ஆதலால் இந்த மெய், பொய், இரண்டும் உன்னிடத்திலே பார்க்கும்போது சகல சந்தேகங் களும் தீரும்.

ஓ மகனே கேள்! எதார்த்த ஞானத்தை மறைப்பது மனந்தான். சுருதிப்பிரமாணங்களாவது பெரியோர் வாக்கியமாவது அசத்தியமாய் நினைந்தால் கற்பகாலம் நரகமனுபவிக்கவேண்டும். எங்கும் பரிபூரணமாயிருக்கும் பரமாத்மாவை எல்லோருக்கும் பார்க்கக்கூடாதா என்றால், பார்க்கக்கூடாது. அதாவது, அவ்வியக்தம் ஆதலால், முக்குணமூர்த்திகளாலும் பார்க்கக்கூடிய தல்ல. அது முக்குணத்திற்கும், அதீதப் பொருளாம். பரமாத்மா அந்த பரமாத்ம வஸ்துவானது பரிசுத்தமாய் குருவருள்பெற்றவர்களுக்குப் பார்க்கலாம். இதற்குச் சந்தேகமில்லை. இது பரமரகசியம் ஆனாலும் அந்த பரிசுத்தமான குணத்துக்கு இருப்பிடம பரமரகசியம அதற்கு ரூபமுண்டு. அதை முதலாவது பார்த்தால் அதினல் பரிபூரண வஸ்து இதுதானென்றும், அதைத் தொட்டுக்காட்டும். அப்போது சகல சந்தேகங்களும் தீரும்.

சிஷ்யன் கேட்கிறான்:—எங்கும் பரிபூரணமான வஸ்துவை பார்க்கக்கூடாதென்றும், ரகசியமான வஸ்துவை பார்க்கக்கூடும் என்றும், முன்கூறியது இதில் பரிசுத்த

மான குணத்துக்குயிருப்பிடம் எங்கே? இதற்கு ரூபம் என்ன? இதற்கு லெக்ஷணம் என்ன? இதனுடைய மகிமை என்ன? அதை அடியேனுக்கு உண்மையாக விளங்கும் பொருட்டு உபதேசித்தருளவேணுமென்றும் கேட்டுக் கொண்ட சிஷ்யனைப்பார்த்து குருவானவர் திருவாய்மலர்ந் தருள்வதாவது:–ஓ வாரீர் மகனே! பரிசுத்தமான குணமென் பது. முக்குணத்துக்கும் அதீதமாயும், பிர்மசந்நிதானத் தின் கண் சுயம்பிரகாசமாயும், அக்கினியில் சூடுபோல் அபிந்நமாயும், அபேதமாயும், ஒரு சத்தி உண்டு. அதற்கு நாமம் ஞான சிற்சத்தி என்றும், குருவென்றும், நித்திய சத்திய சுத்ததத்துவ வித்தி என்றும், பராபரை என்றும், மற்றும் அநேக நாமங்கள் சொல்வதுண்டு. அதற்கு ரூப மாவது ஸ்ரீ சற்குருவின் திருவருள் பிரசாதமாம். அதற் கிருப்பிடமாவது நித்திய சுகத்திலும், சாசுவதமான தர்மத் திலும், நிர்விகல்ப்ப அயிக்கியமான மோக்ஷ சுகத்திலும், ஸ்ரீ சற்குருவின் திருவடிக்கி அடியான மிதியடிக்கும் அடி யாயும், அடியார்க்கும் அடியாயும் இருக்கும். அதின் லெக்ஷணமாவது சச்சிதானந்தம். அதன் மகிமை அளவிட முடியாது. குரு என்பவர் யார் என்றால் வைராக்கியம் சீவகாருண்யம் குருபக்தி பரக்கியானம் இது நாலு முடைய வர்தான், உலகத்தில் தேசிகர். அதினுடைய அனுபோக மாவது, ஸ்ரீ சற்குருவின் திருவருளான பரிபூரண விக்ஞான சுரூபா நந்தமாம்.

ஓ புத்திமானே கேள்! இதுவே சித்தாந்த முத்தி. இது சகல மதசம்மதமாயுமிருக்கும். சந்தேகம்வேண்டாம். சந்தேகமானது குணபேதம். ஸ்ரீ சற்குருவின் திருவருள் ஞான சிற்சத்தியால் உணர்வதே திடக்கியானம். இதற்கு முதலாவது சித்தம் பரிசுத்தமாகவேணும்.

சிஷ்யன்:—ஓ சுவாமி! சித்தமாவது என்ன? சித்தம் அசுத்தமாக்குவது எது? அதை சுததமாக்கும் உபாயம் எது?

குரு:—ஓ மகனே கேள்! சித்தமானது சிதாகாசம் இதை அசுத்தமாக்குவது இராகத்வேஷாதி அபிமான விர்த்திகளாம். சித்தம் சுத்தமாக்குவது மகாப்பிரயாசம். ஆனாலும், அல்பமான சரீரத்தில் சிற்றின்பமான இகபர போகத்தின் ஆசையைவிட்டு ஒரு பலனையுங்கோராமல் பேரின்பமான சுகத்தில் இச்சைகொண்டு நல்ல சற்கருமங்களை ஈசுவரார்ப்பணம் செய்யவும், மகான்களுடைய பாத பூசையும் இந்தப்படி நிஷ்காம பக்திசெய்தால் அந்தக்கரணம் சுத்தமாகும். சித்தம் பரிசுத்தமானல் பகவானே குருவாய் கற்பகவிருக்ஷத்தைப்போல உபதேசிக்கவருவார். குரு உபதேசமாவது நித்தியம் இன்னதென்றும், அநித்தியம் இன்னதென்றும், விபரமாகக்காட்டி தெளிவடையச் செய்வதாம். அதாவது, இந்திரசாலகருடைய மாயா வித்தையைப்போல் மாயாஜாலமாம் இந்தப் பிரபஞ்சம். அதாவது பிரகிருதி முதல் இருபத்து நாலு தத்துவங்கள் தோற்றியது. அந்த இருப்த்து நாலு தத்துவங்களில் பிரிவானது தொண்ணூற்ருறு தத்துவங்களாய் தோற்றுவது அதாவது மூலப்பிரகிருதி முதல் குணமூன்றும் ஈசன்மார் மூன்றும் பூதங்களைந்தும் அதின் தன் மாத்திரை ஐந்தும் இந்திரியம் இருபதும் யீஷணம் மூன்றும் தாபம் மூன்றும் தாஷண மூன்றும் அவஸ்தை மூன்றும் தேகம் மூன்றும் பிராணதிபத்தும் கரணங்களெட்டும் ஆதாரமாறும் கோசமஞ்சும் தாதுக்கள் ஏழும் ராகத்துவேஷாதி எட்டும் சீவன் ஒன்றும் ஆக தொண்ணூற்ருறு தத்துவங்களாம். இந்த தேகாதி பிரபஞ்சமாவது இந்த தத்துவங்கள் தொண்ணூற்

ுறும் உண்மையாய் அறியும்போது இதில் வசிக்கும் ஜீவாத்மாவுக்குவாளும் உறையும்போல யாதொரு பற்றுதலும், கிடையாது என்பது நிச்சயம். அதாவது இந்த தொண்ணூற்ருறு தத்துவங்களும் மித்தை என்றறியும்போது சீவாத்மா என்பர் சர்வசாக்ஷியாய் சச்சிதானந்தமாய் யேகமாய் விளங்குமென்பது நிச்சயம். இருவினைக்கும் இரு வாசனைக்கும் காரணம் இந்த தத்துவங்களாம் சீவன் என்பவர். இதில் சாக்ஷியாயும் ஆகாசம்போல் பரிபூரணராயும் எதிலும் பற்றற்றதாயும் இருக்கிறது. ஆனாலும் மாயாருணசூத்திரத்தோடுகூடிய இந்த பிரபஞ்சத்தின் கண் நானெனது என்கிற அத்தியாசத்தினல் சீவன் கர்த்திருத்துவ போக் திருத்துவ கர்த்தா நானென்கிற அபிமானத்தினல் பெந்தமாவேன் சீவன் துக்கியாய் தோற்றுவதற்குக்காரணம் அஞ்ஞானயாம் சீவனென்பவர் எதுவென்ருல் மகனே கேள்! சராசரத்துக்கும் அறிவாய் அந்தரியாமியாய் சத்தியமாய் சுத்தமாய் நிற்முக்தனுய் நிரீகனுய் நிர்த்தொந்துவனுய் நிற்விகாரனுய் சர்வத்துக்கும் ஆதார பூதனுய் நிற்மூலமாய் விஸ்வமூலமாய் நிர்மலமாய் நிராகாரனுய் நிர்லீனமாய் அளவிறந்த மகிமையுடையதாய் நிர்ச்சங்கனுய் நிரூபனுய் பரமானந்தமாய் விளங்குவதாம் ஜீவன் இப்படிக்கொத்த ஜீவன் பிரமையடையக்காரணம் சத்தமானது முக்குணத்தோடு சேர்க்கை வாசனை இருந்த மட்டும் ஜீவன் பந்தமென்றம் மூன்று குணங்களையும் அடியோடே தள்ளிவிட்டு நல்லயியற்கையாவது ஜீவன் முக்தி என்றும் பெரியவாள் சம்மதம். அரை நிமிஷத்தில் அநேக சங்கல்பம் தோற்றவும் ஒடுக்கவும் ஆவதும் அழிவதும் எல்லாம் மாயாகுணகாரியமாம். இந்திரசாலகன் மறைந்திருந்துகொண்டு காட்டும் இந்திரஜாலமாவது எல்லோர்க்கும் பார்க்கக்கூடும் அந்த சமயம் அந்த ஜாலக்காரனை ஒருவர்க்கும் பார்க்கமுடியாது. அதுபோல்

ஜீவன் குண சூத்திரத்திற்குள் மறைந்திருந்து காட்டும் மாயாகாரியமான பிரபஞ்சத்தை எல்லோர்க்கும் பார்க்க முடியும். அதுகளுக்கெல்லாம் அந்தரியாமியாய் இருந்த ஜீவனை ஒருவர்க்கும் பார்க்கமுடியாது. என்பது தாத்பரியம். அதாவது சிவன் என்பது குணாதீதம். அந்த சிவனுக்கு குணபெந்தமிருந்த மட்டும் குணாதீதமானப் பொருளைப் பார்க்கமுடியாதென்றும், அந்த குணபெந்தம்விட்டால் சீவன் முக்குணத்திற்கும், அதீதப்பொருளாம் என்பது தாத்பரியம். அதாவது குணசங்கம்விட்டால் மனம் நிர்க்குணமாம் அதாவது குணாதீதமாம். ஆதலால் யிந்த பரமரகசியமான பரமாத்மாவிலிருந்து பரமானந்தமான சிற்சத்தி பிறந்தது. அந்த சிற்சத்தியின் சுயம்பிரகாசத்திலிருந்தும் சுத்தமான சாத்மீகம் பிறந்தது. அந்த சுத்தமான சாத்துவீகத்திலிருந்தும், அசுத்தமான ராசதகுணம் பிறந்தது. அந்த அசுத்தமான ராசதகுணத்திலிருந்துப், அஞ்ஞான அந்தகாரமான தாமசகுணம் பிறந்தது. அந்த தாமசகுணத்திலிருந்தும், சம்சாரத்துக்கேதுவான தன் மாத்திரைகளும் மகாபஞ்சபூதங்களும் பிறந்தன. அந்த பஞ்சபூதங்களிலிருந்தும் இராகத்துவேஷாதிக்கேதுவான இந்திரியங்கள் பிறந்தது. அந்த இந்திரியங்களுடைய போக நிமித்தம் சம்சாரக்கூட்டம் பிறந்தது. அதாவது, இந்த ஸ்தூலபிரபஞ்சமானது உற்பத்திக்கு முன்னும் பின்னும் அவ்வியக்தமாயிருந்தது. இப்போது ஸ்தூலமாய் தோன்றியிருந்தாலும், இது நிலையல்ல. இந்தப்படி அடிக்கடி உற்பத்திலயம் உள்ளதாய் தோற்றுவதற்குக் காரணம் மாயா. மாயையாவது மனம். மனசங்கல்பமானது விக்ஷேபம். இதற்கு ஆதியந்தமில்லை. இதற்கு அதிஷ்டானமான பிர்மசத்திக்கும் ஆதியந்தமில்லை. இதற்கதீனமான பரமாத்வுக்கும் ஆதியந்தமில்லை ஆதலால், ஞானசாதனங்களில் முக்கிய

மாவது சாத்துவீகம். அந்த சாத்வீகமடையும்பொருட்டு மார்க்கமாவது எப்படியென்ருல், முதலாவது துற்சங்கம் விட்டு சற்சங்க பரிசிலனம். ஆத்மசுகத்திலிச்சை இருசத தாமசமான குணகர்மங்களை தூரத்தள்ளிவிட்டு சாத்வீக மான சுகர்மங்களை வர்ணுச்சிரம தர்மங்களின் விதிப்படி பலா பேக்ஷைவிட்டு ஈஸ்வர பிரசாதமாக அநுஷ்டிக்கவும் இரண் டாவது முன்கூறிய சுகர்மங்களை அநேக ஜென்ம ஜென்மங் களில் பழகிவந்த சத்புண்ய பரிபக்குவமடைந்த புண்ணி யாத்மாவுக்கு பகவானே குருவாய் உபதேசிக்கவருவார். அவ ருடைய பாதசேவைபைக்கொண்டு அநந்நிய பக்தி சிறத்தை விஸ்வாசம் வைராக்கியம சாஸ்திராாதத சாரசஙகரகம விசா ரணை செய்யவும் மூன்ருவது ஈஷணை மூன்றும் அதின் வாசனைசங்கல்பம்விட்டு விடுவதும் நாலாவது நித்தியா நித் திய வஸ்து விவேகம் ஐந்தாவது முன்கூறிய விவேகத்தினல் வஸ்து நிர்ணயமடைந்து மித்தியா ரூபத்தைமறைந்திருப் பதுதான், ஆருவது தன் இருதயம் தெளிவடைந்து ஞானே தயமாய் திருபுடிநசிப்பதுதான், ஏழாவது வஸ்துவின் சுயம் நிலையடைந்து இருவாசனையற்று மவுன சமாதியில் இருப்ப தாம். அதாவது, தன்னையும் குருவையும் லோகாவஸ்தை யும் மறந்து சுழுத்தியானந்தம்போல் தூங்காமல் தூங்கி பிர்மானந்தமாய் இருப்பதுதான் மவுனசமாதி இதுவே துரியமாயும், துரியாதீதமாயும், நிரஞ்சனமாயும், பெரியோர்கள் சொல்லுவார்கள். இதையடையும்பொருட்டு முதலாவது மனம் பரிசுத்தமடையவேண்டும். மனம் சாந்த குணமடைந்தால் பரிசுத்தம் பார்க்கலாம். பரிசுத்த நிலை யடைந்தால் அருள்கிடைக்கும். அவ்வருள் அடைந்தால் பரமானந்த நிலையை அடையலாம். அந்த பரமானந்த ஞானமாவது சிற்சத்தி. இந்த பரமானந்தத்தையனுபவிப் பது அறிவான பரமசிவம். ஆதலால் அறிவான ஆத்மாவும்

அதுக்கு விஷயமான ஆனந்தமும் இரண்டல்ல. அதாவது, தேனும் சுவையும்போல ஆத்மாவை ஆனந்தம் அறியக்கூடும். ஆனந்தத்தை ஆத்மாவும் சமரசமாய் அறியக்கூடும். அதாவது, ஆத்மாவும் ஆனந்தமும் இரண்டறக் கலந்திருப்பதாதலால் பிரகாசமும், தீபமும்போலேயும், அக்கினியும் சூடும்போலேயும், சூரியனும் கிரணமும்போலேயும் ஏகமென்றறியும்போது, உன்னுடைய சகல சந்தேகங்களும் தீரும்.

ஓ மகனே கேள்! ஆத்மாவின் தன் குணமே, ஆனந்தமென்றறிக.

இந்தப்படி ஸ்ரீ சற்குருவின் திருவருள்பெற்ற சிஷ்யன் வெகுமதிகொண்டு ஆனந்தக்கண்ணீர் அடைந்து இந்திரியங்களையும், மனதையும் மறந்துவிட்டு திருவடிக்கு அநேக திருத்தெண்டமிட்டு கிருதாஞ்சலியஸ்தனாய் நின்று கேட்கிறான்.

ஓ சற்குருநாதா! தங்கள் மகாவாக்கியமான அமிர்தத்தை அடிக்கடி பானம்செய்தும் திருப்தியடையாமல் பரவசனாயிருக்கும் அடியேனைப்பார்த்து கார்த்துரெக்ஷிக்கும் பொருட்டு திருவவதாரம் எடுத்தெழுந்தருளிவந்த மாதவமே! தங்கள் திருவடிக்கு அநேக தண்டம். ஆனாலும் அடியேனுடைய சந்தேகமானது ஜீவனும் பரனும் இரண்டாயின் அனேக குணபேதமாயும், அதுமாயையினால் வந்ததென்றும், இதுவே பந்தமாமென்றும், பந்தம்விடுவதே மோக்ஷமென்றும் நின் திருவடி முன்கூறியிருக்கிறது. ஜீவாத்மா பரமாத்மா இரண்டறக்கலந்து ஏகமாய் ஆரூடமுக்தி துவாரமடையும்பொருட்டு கிருபாகடாக்ஷம் செய்தருளவேண்டுமென்ற சிஷ்யனைப்பார்த்து குருவானவர் திருவாய்மலர்ந்தருளுவதாவது:—

கிட்டவா. மைந்தனே கேள்! ஐக்கியமாவது எப்படி என்றால் சகல ஆசையும்விட்டு மிகுதிய உள்ளன்பினால் ஆத்மப்பிரியமாயிருந்தால் ஐக்கியமாம். ஐக்கியமே பிரமானந்த பதம். அதாவது, சீவாத்மா, பரமாத்மா இது அவ்வியகத்தமாயும், இருந்ததாநலால பரமராளுக்கு ஐக்கியமாவது மஹா பிரயாசை. ஏனென்றால் சீவாத்மா பரமாத்மா இரண்டுபாவனைக்கு மத்தியில் மறைத்துக்கொண்டு அசுத்த மாயா சத்தியிருக்கிறது. அதானது, அசுத்த மனம். அந்த மாயமான அசுத்த மனம் பரிசுத்தமடைந்தால் அது நிர்வாணமாம். ஆனாலும், அசுத்தமாயை நீக்கி மனம் பரிசுத்தமாக்கி சமாதியடைவது மகாபிரயாசம். ஆனாலும் மனம் பரிசுத்தமாகும் பொருட்டு பரமரகசியமாய் ஒரு வழியிருக்கிறது அதாவது, முக்கியமானது சற்குருபக்திசெய்தால் மாயையைகடக்கலாம். மனசையுஞ் செயிக்கலாம். மனோலயமானால் மாயைகிடையாது. மாயாஜெயத்துக்கு மாயையை உபாசிக்கவேண்டும் என்றும் அதாவது அழுக்கைப் போக்குவதற்கு அழுக்குவேண்டுவதுபோல அசுத்தமாயையை போக்குவதற்கு சுத்தமாயையை உபாசிக்கவேண்டும். அதாவது, எப்படி என்றால் முதலாவது நிஷ்காம கர்மத்தினாலும் குருபக்தியினாலும் சித்தம் பரிசுத்தமானால் அதுவே வித்தை என்பதாம். மனமாவது வித்தியாவசமானால் அவித்தைதானே நீங்கும். அவித்தை நீங்கிவிட்டால் வித்தை என்பதுங்கிடையாது. ஜீவனும் பரனும் யிரண்டறக்கலந்து சுயம்பிரகாசமாயிருக்கும். அதாவது, தீவிர வைராக்கியமுள்ள சிஷ்யனுடைய அநந்நிய பக்தி லெக்ஷணமாவது, குருசந்நிதானத்தின்கண் மேகங்களைக்கண்ட மயில் கூட்டம்போல மயிர்க்கூச்சலிட்டு ஆனந்த கண்ணீரடைந்து சித்தத்திலாத்திரத்தையும், ஆத்மாவில் சந்தோஷமும், அருளில் ஆசையம், புளகாங்கிதமும், சஞ்சலசுரமும் இந்தப்படி

அநேகவிதமான சத்விசேஷ லெக்ஷணங்களையுடைய சிஷ்யனைப்பார்த்து. ஸ்ரீ சற்குருநாதன், பரமகிருபாளுவாய்! மாதா தன் சிசுவைப்போலும், ஆமைமீன் பாவைபோலும் ஸ்ரீ சற்குருநாதன் சிந்தித்து கண்ணாரப்பார்த்து கையாலணைத்து தன்னிட பாகம்சேர்த்து அருளுவதாவது:—

ஐக்கியம் இந்த ஸ்தூல ஐக்கியத்தினால் சூக்ஷமமான ஏகசுரூபம் அடையலாம். ஏகசுரூபமடைந்தால் கைவல்யமடையலாம். இதற்கு முக்கியமானது ஸ்ரீ சற்குருபக்தி. ஸ்ரீ சற்குருபக்தியினால் சந்தேகமெல்லாம் தீர்ந்து தெளிவடைந்து தன் குருவினிடம்வைத்த உள்ளன்பு தான் ஐக்கியம். அதுவே பரமானந்தமென்றும், முன்கூறிய தாற்பரியம். இது கூடாமல் அநேகதானம், யோகம் நேமம், எக்கிய ஓமம் தபசு இதைத் தவிர இயமநியமாதி சாதனங்களினாலும் அநேக சாஸ்திரபாடங்களினாலும் சாங்கிய போகாதி விரதம் சாந்தியாசங்களினாலும் ஐக்கியமடைவது கஷ்டம். ஆதலால், இந்த ஐக்கியத்திற்கு திரிகுணமயமானவர்ணாஸ்ரம தர்மங்கள் இல்லாமல்போனாலும் குருபக்தி இருந்தால் அதுவே முக்கியமாவதென்றும், இதற்கு முதலாவது சாத்தீக முபாசிக்கவேண்டுமென்றும், இதினுடைய தாற்பரியம் சாத்தீகமாவதற்கு முக்கியம் சத்விருத்தி. சத்விருத்தியினால் சாத்வீகமடையலாம். சத்விருத்திபழக்கமாவது எப்படி என்றால், துர்ச்சங்கம்விட்டு சர்ச்சங்கப் பழக்கமும், சாதுக்களை உபாசிக்கவும், பூசிக்கவும், வந்தனம், வணக்கம், அடக்கம், பிர்மசரியவிருதம், குருசேவை, இயமநியமாதி, சாதனப்பழக்கம், சத்தியம், ஞானத்திலாசை, நிற்பயம், மனசுத்தி, விஷயவைராக்கியம் நிராசை, எதார்த்தஞானநிஷ்டை, இந்திரிய சமனம், சாந்தம் எக்கியம், தானம், தபசு, அப்பியாசம், அத்தியயனம், ஆர்ச்சபம் இதைத் தவிர கொலைகளவு, கோபம், பரதூஷணம்,

இது முதலான துர்க்குணங்களை அடியோடே விட்டுவிடுவதும், தியாகம், சாந்தி, பிராணிகளிடத்தில் ஜீவகாருண்யம், அஹிம்சா, சமாதானம், ஆசையடக்கம், ஆத்ம சந்தோஷம், இதுகளெல்லாம் சாத்வீகத்திற்கு உதவும்படியாயுள்ள தெய்வ சம்பத்துக்கள், இவைகள் தவிர அசுரசம்பத்தி யாவது எப்படியென்றால், அதனுடைய அநுபவம் துக்ககரமாயிருக்கும். இந்த அசுரசம்பத்திகளையுடைய துன்மார்க்கர்களுக்கு சன்மார்க்க நடை எள்ளளவும் தெரியாது. அதாவது, ஆத்மசைதன்னியத்தினலுண்டான பிரபஞ்சமும் இதற்கு காரணமான ஆத்மாவும் பொய்யாகி எண்ணி காணப்பட்ட பிரபஞ்சத்தின் கண் எல்லாம் ஸ்திரீபுருஷாளுடைய சேர்க்கையினால் பிறந்ததென்றும், இதற்கு வேறே ஒரு காரணமும் இல்லை என்றும் ஸ்திரீ புருஷாளுடைய காமம் ஒன்று மாத்திரம் இதற்கு காரணம் என்றும் ஆத்ம சூன்யராய் அனர்த்தத்திற்கு வேலிகட்டும்போல அற்பபுத்திகளாய், துராச்சாரிகளாய், துஷ்கர்மிகளாய், லோகசத்துருக்ககளாய், இம்சாபுத்திகளாய், முன்கூறிய நிரீஸ்வர மதம் அவலம்பித்து தெய்வனஸ்திரராய் லோக நாசத்திற்காக பிறக்கிறார்கள். அசாத்தியமான ஆகாரங்களில் ஆசையுடையவராய் கர்வம், கபடம், டம்பம், பறதூஷணம், இதுகளால் ஞான சூன்யராய் விதியில் நிஷேதமான கர்மங்களை ஆதரித்தவராய் அநாசாரிகளாய் அசூசியான விரத அநுஷ்டானங்களைக்கொண்டு வீண்காலம் போக்குவார்கள். அசுர சம்பத்திவிருத்திகளை இன்னும் கேள்:—மகனே! மேற்கூறியபடி சீவதிசை காலபரியந்தம் காமபோகமே நித்தியசுகமென்றெண்ணி இதைத் தவிர வேறொரு சுகமுமில்லை யென்பதாக எண்ணுவார்கள். அநேக ஆசாபாசத்தையுண்டுபண்ணி அந்த பாசமானதைக்கொண்டு கை கால் விலங்கு போட்டவராய், காமக்குரோதாதிவசராய், காமபோகத்திற்கு

வேண்டி அந்நியாயமாக பொருள் சம்பாதித்து சேர்ப்பார்கள். இந்தப்படி அந்நியாயமாக சம்பாதித்து சேர்த்த பொருள்களெல்லாம் என்னுடைய சுயார்ச்சிதமென்றும் எண்ணுவார்கள். "என்னுடைய சொந்த சம்பாத்தியமாக இவ்விடத்தில் இப்பொழுது முந்நூறுகாணி நஞ்சை இருக்கிறது. இதைத் தவிர இன்னொரு இடத்தில் தொண்ணூறுகாணி இருக்கிறது; அதோடுகூட இன்னும் பத்து காணி சேர்க்கவேணும்; அப்போது அது நானூறுகும். அதுக்கு நான் ஒரு வழிபார்த்திருக்கிறேன். அதுவும், இதுவும் கூடி நானூறுகாணி சரியாயிருக்கும். அதிலுண்டாகும் தானியம் கொண்டு நாலைந்து குடும்பத்தில் வசிப்பவர்களுக்கெல்லாம் நன்ருய் சாப்பிட்டு ஆனந்தமாயிருக்கலாம். இப்போது என்னுடைய சொந்த சம்ரக்ஷணைக்கு ஆறு குடும்பம் இருக்கிறது. ஆறு குடும்பத்திலும் கூடி ஐம்பத்தொரு ஜனமிருக்கிறது. இவர்களெல்லாம் சுற்றினவர்களாதலால் இவர்களுக்கெல்லாம் நானே சரணுகெதி. நான் செத்தபின் இவர்களெல்லாம் அநாதராய் விடுவார்போல் தோன்றுகிறது. இப்போது என்னுடைய சாதகம் பார்த்ததில் எனக்கு வயது எழுபத்தைந்து ஆகிறது. இன்னும் எத்தனை நாள் இருக்குமோ தெரியாது. என்பேரனுக்கு குழந்தைபிறந்து இருக்கிறது. அவனுக்கு ஒரு குழந்தை பிறந்து அந்த குழந்தை கையில் தங்கவளையல்போட்டதை என் கண்ணுல்பார்த்து சந்தோஷமடைந்து அப்புறம் செத்துப்போய்விட்டாலும் நான் மகாபாக்கியவானுக இருப்பேன். இதுபரியந்தம் நான் துணிந்தகாரியம் விடமாட்டேன் எனக்கு விரோதிகளான அனேக சத்துருக்கள் வதையாய் விட்டது. இனி ஒரு சத்துரு இருக்கிறது. அதையும் நான் வதையாக்குகிறேன். ஆக எல்லாம்கூடி நான் பாக்கியவானுயிருக்கிறேன். நானொரு பிரபுவாயிருக்கிறேன். நான்

சுகிமான், நான் பலவான், நான் குலசிரேஷ்டன், நானே நான், நானே ஞானி, நானே பக்தன், என்னைப்போல விவேக சாலிகளும், பொறுமையுடையவரும் இந்த லோகத்தில் ஒரு வரும் கிடையாது. எனக்கு எல்லாபதத்தினுடைய அர்த் தமும் தெரியும்.'' இந்தப்படி சில காலம் சில இடங்களில் தானே முளைக்கும்காளான்கள்போலவும், அக்கினியில் தூபம்போலேயும், நீர்மேல் குமிழிபோலேயும் இருக்கும். சரீராதிவஸ்துக்களில் சத்திய புத்தியுடையவராய், சரீராபி மானிகளாய், குதர்க்கசீலராய், சாதுஜனங்களை நிந்திப்ப ராய், இராசச தாமசகுணமுடையவராய், கோரமூடவிர்த்தி களாய், இதுகளால் சித்தபிர்மையடைந்து மோகவலையிற் சிக்கி அசுத்தமான நரகம்அடைகிறார்கள். இந்தப்படி அநேக நரகம் அநுபவித்த பின் மறுபடியும் பக்ஷிமிருகாதிகளான அசுரயோனிகளாய் பிறப்பார்கள். நரககோட்டையில் வீழ் வதற்கு வாசல் மூன்று. அதாவது காமம், குரோதம், லோபம், ஈஷணாத்திரயத்தினுடைய அநுபவம்இதுதான் என்பதற்கு சந்தேகம்வேண்டாம். ஈஷணாத்திரியமாவது மனைவி, மக்கள், பொருள், இதுகளில் ஆசையை அடி யோடே விட்டுவிடுவது பரமசுகம் என்பதாக பெரியவாள் சம்மதம். ஆனாலும், பொருளானது லோபம், பொருள் வெகுகோடி இருந்தாலும் லோபம். இல்லாமற்போனால் அந்தப்பொருளினாலே ஒரு குற்றமுமில்லை. காமமாவது மனைவி; மனைவி அனேகமிருந்தாலும், காமம் இல்லா விட்டால் அதனால் ஒருகுற்றமில்லை. மூன்றாவது புத்திரர்; அதானது, குரோதம், புத்திரர் அநேகமிருந்தாலும், அது களிடத்தில் குரோதமில்லாவிட்டால் அதினாலும் குற்ற மில்லை. இந்தப்படி திரிலோக ஐஸ்வரியங்கள் அளவிறந்தது. இருந்தாலும் முன்கூறிய காம, குரோத, லோபம் இம் மூன்றும் இல்லாவிட்டால் அவன் ஜனகராஜன் முதலான

வர்களைப்போல சம்சாரத்தோடு ஒத்திருந்தாலும் ஆருடக்கியானியாம் என்பதற்குச் சந்தேகம் வேண்டாம்.

ஓ மகனே! இன்னும் கேள். முன்கூறிய காம, குரோத, லோப மூன்றுக்கும் காரணம் மனசினுடைய மகா மோகம். அதுவே எமபாசம். இது தான் கால் கை விலங்கு. இது நாலும் தாமிச அந்தகாரம். ஆதலால் இது நாலும் தள்ளிவிட்டு மனசுத்தி வரும்பொருட்டு வேண்டிய கர்மம் அவாளவாளதிகாரத்துக்குத் தகுந்தபடி சத்கருமங்களை செய்து பழகிவருவதும், அதாவது பரகெதியடையும் பொருட்டு அபேக்ஷையும் வர்ணாஸ்ரமங்கள் தவறாமல் காரிய காரண விதியில் நிஷேதங்களான குணதோஷங்களை சாஸ்திராநுசார பிரமாணங்களை அநுசரித்தும், பெரியோர்களிடத்தும், ஆலோசித்தும், நிச்சயம் செய்தும், தர்ம சாஸ்திர விதிபை அநுசரித்தும், பலாபேக்ஷையின்றி முன்கூறிய சத்கர்மங்களைச் செய்யவேண்டும். இந்தப்படி செய்வது ஞாயமான விதி. இதனால் ஒரு பாபமும், விபரீதமும் அடையமாட்டாது. இந்தப்படி சூக்ஷம தர்மம் தெரியாமல் அநேக தர்மகர்மங்களைச் செய்தாலும் அதனுடைய பலனுவது விபரீதமாயிருக்கும். அதாவது சுகம், துக்கம், சம்மீஸ்சுரம் முன்கூறிய தாற்பரியம். கர்மமுடிவே மோக்ஷம். அதாவது கர்மம் முடிவதற்கு தக்கதாக ஒரு கர்மம் வேண்டுவது அவசியம். அதாவது திருவித காரணங்களினாலும் செய்யப்படும். திருவித கர்மங்களும் சுயங்கிருதமாகச் செய்யாமல் முன்கூறியபடி பெரியவாளிடத்திலாலோசித்து, ஈசுரார்ப் பணம் செய்து பழகிவருவதானால் அது பிர்ம பூசையாம் என்பது நிச்சயம். இதனால் கர்மமும் அதனுடைய சங்கல்பவாசனையும் நசிக்கும். கர்ம சங்கல்பம் நசித்தால் நிராசையடையும். நிராசையடைந்தால் சென்மசாபல்லியம் அடையலாம். சென்மசாபல்லியமாவது

மோக்ஷம். இந்தப்படி நிஷ்காம சத்கர்மத்தினுல் சித்தம் சுத்தியடையும். சித்த சுத்தி வழியாக சற்குரு தரிசனம் கிடைக்கும். அப்போது சகல கர்மங்களும் அடியோடே தள்ளிவிட்டு ஸ்ரீ சற்குருவின் திருவடி சேவைசெய்து பழகி வருவதானுல் திருவருள் கிடைக்கும். திருவருள் கிடைத்த மகான்களுக்கு ஜெனன மரணமேது? சுக துக்கமேது? இதுகளெல்லாம் மாயா காரியம் என்றுமறிக.

ஸ்திரபுத்தியுடன் இன்னும் கேள் மகனே! இந்த பிரபஞ்சமானது மாயாபாவனை. பிரபஞ்ச வாழ்க்கையானது சொர்ப்பனம். இதை ஸத்திசெய்வது பரமாத்மா. இந்த பிரபஞ்சமானது லயமடைந்தாலும் பரமாத்மா ஒரு காலத்திலும் லயமடைகிறதில்லை. எல்லாம் பரமாத்மாவில் அடங்கியிருக்கும். பரமாத்மா ஒன்றிலும் அடங்கும் வஸ்து வல்ல. முன்கூறின மாயாகாரியமான பிரபஞ்சம் உண்மையல்ல. அதாவது கிளிஞ்சலில் வெள்ளியும், கட்டையில், கள்வனும், கயற்றில் பாம்பும், ஆகாசத்தில் நீலவர்ணம்போலும், மலடி மைந்தனைப்போல் தாமசகுணம்பெற்ற விக்ஷேப காரியமான அபஞ்சீகிருத ப்ஞ்சபூத சேட்டிதங்களான இந்த பிரபஞ்சமானது இந்திரஜாலக்காரனுடைய மாயாவித்தையைப் போல் தோற்றுவதும் கண்டு, கண்டிருக்கவே கண்ணுக்கு முன்னுலே அழிந்துவிடுவதும் மாயையுடைய ஜாலம். இந்த மாயைக்கும் இதுக்கு அதிஷ்டானமான அருட்சத்திக்கும் ஆதீனம் பரமாத்மா வாளும் உறையும்போலும், ஆகாசமும் வாயுவும்போலும் பரமாத்மாவுக்கு பெந்தமும், காரணமும் வேறேகிடையாது. எல்லாவற்றிற்கும் காரணம் பரமாத்மா ஒன்று தான். ஆத்மாவிலிருந்தே சகலமும் உதயம். ஆத்மா இல்லாவிட்டால் ஒன்றுமே கிடையாது. ஆத்மாவிலிருந்தும் அனுத்மா பிறக்குமென்கிற பிரமாணம் சத்தியமல்ல. ஏனென்ருல் பரமாத்மாவைத் தவிர வேறே ஒன்றுமே

யில்லை. என்பதற்கு உபநிஷத்து பிரமாணம் உண்டு. அப்படியிருக்க சமுத்திரத்தில் அலைபோல் தோற்றிய மாயா பிரபஞ்சமும் பரபிர்ம்மமும் வேறல்ல. ஆகையால், சகலத்திலும் ஆத்மா ஸ்திதிசெய்து கொண்டிருக்கிறது. அதாவது ஆகாசத்தில் நாலு பூதங்களும் கலந்திருந்தாலும் ஆகாசம் அதுகளில் ஒட்டாமல் இருந்ததுபோல ஆத்மாவினிடத்தில் பூதகோடிகளெல்லாம் தன் மாயாவசம் பெந்தப்பட்டு கிடக்கிறது. அதாவது எப்படி என்றால் ஒரு நூலில் பல மணிகள் கோர்க்கப்பட்டதுபோல ஆத்மா சர்வத்துக்கும் அந்தர்யாமியாயிருந்து தன் மாயையினால் சிருஷ்டி. ஸ்திதி, சங்காரம், திரோபாகம் அனுக்கிரகம் முதலான ஐந்து தொழில்களும் மற்றும் அனேகமான கிருத்திகளெல்லாம் தோற்றுவிப்பதும் மாயா சூத்திரத்தினால் ஆட்டிவைத்தும் ஆத்மா நிபந்தனையிருக்கிறது. பரமாத்மா எல்லாவற்றையும் கண்டறியத்தகுந்தது. பரமாத்மாவானதை ஒருவராலும் காணக்கூடியதல்ல. ஆனாலும, ஆத்மாவே ஆத்மாவுக்கு அறியக்கூடுமென்பது தாத்பரியம். ஆகாசத்துக்குள் பூதகோடிகளெல்லாம் அடங்கியிருந்தாலும் ஆகாசம் அதுகளை ஒட்டாமலிருந்ததுபோல் ஆத்மா ஒன்றிலும் ஒரு காலத்திலும் பந்திப்பதும் நிவர்த்திப்பதும் கிடையாது. ஆனாலும் மோக்ஷமடையும் பொருட்டு அபேக்ஷயுடைய ஜீவர்களுக்கு மோக்ஷமாவது சேதனா சேதனங்களை பரமாத்மாவிலடக்கி ஆத்மபாவனையால் ஜீவன் முத்தியாம். அதாவது சீவாத்மா பரமாத்மாவில் ஐக்கியமாவது மோக்ஷமென்பதாம். அதாவது ஸ்தூல இந்திரியங்களை சூக்ஷம இந்திரியங்களிலடக்கி, சூக்ஷமயிந்திரியங்களைக்காரணமாம் மனசுகொண்டடக்கி, மனசை பரிசுத்தமான அருள்ச்சத்தியிலடக்கி அருளானது விந்துவிலும் விந்துநாதத்திலும் நாதம் சிவதுரியத்திலும் அடக்கி அனுபவிப்பது தான்

எதார்த்த ஞானம். ஆனாலும் ஜீவனுக்கு பந்தம் மோக்ஷம் இரண்டும் எதார்த்தமல்ல. ஏனென்றால் அதாவது மாயா பாவனை. அந்த மாயாபாவனா சத்தியானது ஆத்மாவுக்கும் அநாத்மாவுக்கும் மத்தியபாகத்திலிருந்து கொண்டு பந்தம் மோக்ஷம் இரண்டுமுள்ளதாய் தோற்றுவிப்பதே சுபாவீகம். இந்த மாயாபாவனைக்கு அதீதமானது பரிசுத்த ஆத்மா. மாயாபாவனையால் உண்டு பண்ணிவைத்தது அசுத்தப் பிரபஞ்சம். கண்ணாலே பார்த்ததும், காதினால் கேட்டதும், மனசினால் நினைத்ததும் எல்லாம் மாயாபாவனையாம். மாயா பாவனைக்கு காரணம் மனம். மனத்துக்கு காரணம் குணம்; மனம் லயமடைந்தால் ஒரு வஸ்துவும் கிடையாது. சுருதி வேதாதிகளெல்லாம் மனோலய பரியந்தமிருக்கும். அந்தக்கரண பிர்மத்தினால் உண்மையாய் தோற்றுவதாம் சமஸ்த்த பிரபஞ்சமும் சித்தப்பிரமையடைவதற்கு காரணம், குணவிர்த்தியினுடைய ஆரோபமாம். அதாவது சித்தமும் குணமுங்கூடி, பாலும் நீரும் போலும் இரண்டறக் கலந்திருந்ததாதலால் அதை வேறுபாடாக்குவது மகாப்பிரயாசம். ஆனாலும் அம்சபக்ஷியானது அந்த பாலையுண்டு நீரை தள்ளுவதுபோல சித்தத்தில் குணவிகல்பமானது எதார்த்தமல்ல. சித்தமும் குணமும் தம்மில் யாதொரு சம்மந்தமும் கிடையாது. ஆனாலும் சுத்த ஸ்ப்படிக்கத்தின் சமீபத்தில் சிகப்பை சேர்த்தால் அந்த ஸ்ப்படிக்கம் சிகப்பாய் தோற்றுவது சுபாவீகம். ஆனாலும் அந்த ஸ்ப்படிக்கமும் சிகப்பும் தம்மில் யாதொரு சம்மந்தமும் கிடையாது. உள்ளதாய் தோற்றுவது மாயாகுணவிர்த்திகளாம். மாயா குண விர்த்திகளில்லாவிட்டால் மானசம் நிர்வாணமாம்.

இன்னும் கேள் மகனே! ஒரு குளவியானது ஒரு புழுவை தூக்கிக்கொண்டுபோய் கூட்டிலே வைத்து

அடைத்த பின் அந்த புழுவுக்கு பூர்வஸ்மரணை விட்டு அந்த குளவி ரூபத்தை கண்டு பயந்து சதா தியானித்துக்கொண்டு இருந்ததினால் தன் பூர்வ திரேகம் விட்டு குளவிரூபமாய் வந்துவிட்டது. இதுதான் முன்கூறிய பாவனா சக்தியினுடைய வைபவம். இதற்கு சந்தேகம் வேண்டாம். ஆதலால் மனமானதை ஆத்மாவினிடம்சேர்த்தால் அந்தமனம் ஆத்ம பெந்து. அனாத்மா வசம் சேர்த்தால் அந்த மனமே ஆத்ம சத்துருவாயிருக்கும். ஆகையால் மனம் சம்சார சிந்தனை விட்டு துரிய நிலையடைந்த குருவின் திருவடியை தியானிப்பதானால் மனம் அந்த துரிய நிலையடையும் என்பது தார்ப்பரியம் இதற்கு சந்தேகம் வேண்டாம். ஆத்மாவினைப் பார்ப்பதும் தியானிப்பதும் ஒன்றுதான். ஆதலால் இதைத் தவிர நானா விபகாரமும் மனோலய பரியந்தமிருக்கும். மன மடங்குவது மகாப்பிரயாசம். அதாவது மனதை மறைக்கப் பட்டது மும்மலங்கள். அந்த மும்மலமாவது ஆணவம், மாயா, கர்மம், இதுகள் இதுகள்மூன்றும் ஞாயமாய் தள்ளி விட்டவர்களுக்கு மனம் தெளிவடைந்து ஸ்ரீ சற்குருவின் திருவருள் கிடைக்குமென்பது நிச்சயம். ஓ மகனே கேள்! உன் உடல், பொருள், ஆவி, மூன்றும் குருவுக்கு சத்தியமாக அர்ப்பணம்செய்துவிட்டால் நீ எது? நின் சரீரமேது? நின் வாக்கேது? நின் மனமேது? மன நிர்வாணமாம் என்பது தாத்பரியம். நிர்வாணம் என்பதற்கு அர்த்தம் மலமற்ற ஆகாசம் போல் நிர்மலமாய், பரிபூரணமாய், ஆனந்தமாய், அரூபமாய், திவ்விய மங்களசுயஞ்ஜோதியாய், சத்தியமாய், நித்திய நிஷ்கள நிராமயமாய், சாந்தமாய், ஏகாந்தமாய், எங்குமாய், எளிதாய், அங்குமாய், அகண்டமாய், அதீதமாய், ஆதியந்தமனாதியாய், சோதியாய், பரமபுராதனமாய் பராபரமாய் நிர்விகல்ப சமாதியாயிருப்பது நிர்வாண பதம் என்றறிக. இப்படிக்கொத்த நிர்வாண பதம் பரமானந்த

தையாயிருந்தால் அதுவே மோக்ஷம். இதில், ஜாக்கிரா ஜாக்கிரமாவது, ஜடமேது, ஜெகத்தேது, பந்தமேது, மோக்ஷமேது, தான் எங்கேயிருந்து வந்தது? கடைசியில் எதை அடையப்போகிறது? தானேது? தன் மாதா, பிதா, மனைவி மக்கள், பொருள் எல்லாம் எங்கேயிருக்கிறது? இதுகளெல்லாம் சொர்ப்பன மென்றறிந்து உணர்வதுதான் ஜாக்கிரா ஜாக்கிரம். இந்த பிரபஞ்சமானது சொர்ப்பனவஸ்தை. இதற்குக் காரணம் ராஜஸம் தாமசம். இதுகளால் ராகத்துவேஷாதிக்குக்காரணமாம். நம்முடைய சித்தமானது ஒரு காட்டு வழியில் சத்திரம் போலிருக்கிறது. எதுபோலென்றால் ஒரு கனவான் ஒரு காட்டுவழியோரம் பரோபகாரம் நல்லதென்றறிந்து, அதற்கு ஒரு தர்ம சத்திரங்கட்டி வைத்து, அதாவது நல்ல விசாலமாயிருந்ததாதலால் நானாவிதமான ஜனங்களும் தினந்தோறும் அதிலேவந்தடைந்து போய்க்கொண்டிருந்தார்கள். அதிலே அனேக புண்ணியவான்களும், அனேக பாபிகளும், கொலை, களவு, சூது முதலான கொடிய பஞ்சமாபாதகக் கூட்டங்களும், வந்தடைந்து அதனால் ஒன்றுக்கொன்று சண்டைபிடித்து கொலை, களவு அக்கிரமங்கள், நடத்தி அதனால் மகாபாபம் மேலிட்டு அதோகெதியடையும் பொருட்டு மார்க்கமாயிற்று. புண்ணியத்திற்காக கட்டிவைத்த சத்திரத்தில் பாபக்கூட்டம் வந்து மேலிட்டதாதலால் இந்தப்புண்ணிய சத்திரம் கட்டிவைத்த நானே இந்தப் பாபத்திற்குக் காரணம். ஆதலால் என்னை விட்டு இந்தப் பஞ்சமா பாதகம் போகுமா, போகாது ஆதலால் அதோகெதியடைந்து நரகத்துக்கு ஆளாய் வந்துவிட்டேன், இப்போது புத்திவந்தது. இனிமேலாவது மகா பாபத்திற்கிடமான இந்தக் காட்டுமார்க்க சத்திரத்தைப் பரித்து அடியோடு தள்ளி சமபூமியாக்கி ஒரு பூந்தோட்டமாக்கினால் அதுவே மெத்தவும் நன்றாயிருக்கும். அதிலுண்

டாகும் புஷ்பங்களை எடுத்து சுவாமிக்குப்பூசை செய்யலாம். அதனால் புண்ணியம் மேலிடும். பாபம் வந்தடையாது. முன் கூறிய பாபக்கூட்டங்கள் வந்தடைவதற்கு இடமில்லை. இந்தப்படி அக்கனவானைப போல நம்முடைய சித்தமானதை ஒரு பூந்தோட்டமாக்கி, விருத்திசெய்தால் புண்ணியமேலிட்டுச் சுகமடையலாம். அதாவது நம்முடைய இருதயமான காட்டு சத்திரம் சமபூமியாக்குவது எப்படியென்றால் ராகத்துவேஷாதிக் கேதுவான ராஜஸ தாமசமான கல்லு கட்டைகளைத் தூரத்தள்ளி சாத்வீகத்தினால் சம பூமியாக்கினால் அதுவே பூந்தோட்டமாகும். அப்போது ராகத்துவேஷாதிகளான ராக்ஷதக் கூட்டங்கள் வந்தடையாது. அப்போது அந்தப் பரிசுத்தமான பூந்தோட்டத்தில் நம்முடைய குரு சுவாமியை வைத்துப் பூசை செய்யலாம். நம்முடைய குரு சுவாமிகள் எப்போதும் பரமானந்தமாயிருந்தால் அதுவே நமக்கு க்ஷேமம். அப்படிக்கொத்த குரு சுவாமியை உள்ளன்பினால் தியானித்துக்கொண்டிருந்தால் அந்தப்பூந்தோட்டத்திற்கு அதுவே வசந்தகாலமாம். அந்த வசந்த காற்றினால், இருதயமான பூந்தோட்டத்தில் உண்டான பூஞ்செடியின்மேல் முன் தழைக்கப்பட்ட பாபமான இலைகளெல்லாம் பழுத்து விழுந்து காய்ந்து தூளாய் பறந்துபோய்விடும். சுத்த புண்ணிய விசேஷமான தளிர்கள் குளிர்போல் தழைத்து விருத்தியாகும். அந்தத் தளிர்களால் அலங்காரமாயிருக்கும் அந்த இடத்தில் சாதுக்களான சகோரபக்ஷிகளுடைய சத்வசனமான மலர்களினால் சோபிதமாயும், சத்வாசனைகளாகிய சுகந்த பரிமளத்தோடு கூடியும், சத்பக்தியாகிற வள்ளிக்கொடிகளோடுகூடியும், விஞ்ஞானமாகிற அமிர்தப் பிரவாகமாம். கெங்காநதியோடு கூடியும் எதார்த்த ஞானமாகிற முக்கிய பலன்களோடு கூடியும், சோபிதமாயும், ஆனந்தமாயும், சயம்பிரகாசமாயும், இருக்கும் பூந்தோட்டத்தில்

நம்முடைய குருசுவாமி ஆனந்தமா யிருக்கும்போது நாம் எல்லா க்ஷேமமுமடையலாம். அநேக ஜன்மஜன்மங்களில் செய்த பாபங்களெல்லாம் அடியோடு நாசமடையும். நம்முடைய வம்சம் இருபத்தோறு தலைமுறையுள்ள பிதுர்க்களும் பரகதியடையார்கள். மற்றும் பிதுர் தேவாதி சாதுக்களும் சந்தோஷிப்பார்கள். இதுவுமல்லாமல் லோகமெல்லாம் சுத்தமாகும். இதைத்தவிர வேறேஒருகர்மமும் வேண்டுவதில்லை. எல்லா கர்மத்தின் பலனையுமடையலாம். ஆதலால் மகனே கேள்! உன்னுடைய சித்தமானது முன்கூறிய பூந்தோட்டம்போல் பரிசுத்தமாக்கி குரு, சுருதி, யுக்தி, அநுபவத்தினல் நீயும் விசாரித்துப் பார்க்கும்போது சகல சந்தேகங்களும் தீரும். பரமாத்மாவானது எங்கும் பரிபூரணமாயிருந்தாலும் குருவருள்பெற்று அசைவற்று ஆனந்தமாயிருந்த சித்தம், சிவம் பிரகாசமாயும், பரிபூரணமாயும், இருக்கும். அதுதான் பரம ரகசியமான சிதம்பரம். அங்கேதான் அம்பிகையும் ஈசனும் கூடி இரண்டறக்கலந்து விளையாடி சதா நடனமாடிக்கொண்டிருக்கும் கனகசபை. அங்கே கண்டா மணி நாதம் ஆடிக்கொண்டே யிருக்கும். தேவசமுகங்கள் அநேகம் சூழ்ந்திருக்கும். இன்னும் அனந்த கல்யாண குணங்களோடு கூடிய சிதம்பரத்தின் மகிமை அனந்தனும் வாகீஸ்வரியும் புகழ முடியாமல் தோற்று ஒளிந்துபோய்விட்டார்கள். அப்படியிருக்கும் சிதம்பரத்தின் மகிமை இந்த ஏழைக்குப் புகலத்தரமா? ஓ மகனே! உன் புத்தியினல் உனக்குள்ளே நீயே விசாரித்து கண்டு தெளிவடைந்து கொள்ளும்போது உன் சந்தேகம் தீரும்.

சிஷ்யன் கேட்கிறன்:— ஓ சுவாமி! அதிசய ஆனந்தமாயிருக்கும் சிதம்பரத்தின் மகிமையை கேட்ட அடியேன் அந்தகனைப்போலிருக்கிறேன். அப்படியிருக்க ஆதியந்தம்

இல்லாத சிதம்பரத்தை எப்படி பார்க்கக்கூடும்? அதைப் பார்க்கும்பொருட்டு வல்ல ரகசிய மந்திரமோ தந்திரமோ இருந்தால், அடியேனுக்கு உபதேசித்து அருள்செய்து காத்து ரெக்ஷிக்கவேண்டு" மென்று குருவின் திருவடிக்குத் தீர்க்க தெண்டனிட்டு அஞ்சலியஸ்தனய் நின்ற சிஷ்யனைப் பார்த்து:

குருவானவர் சொல்லுகிறார்:— ஓ மகனே கேள்! பரிசுத்தமான சிதம்பரத்தைப் பார்க்கும்பொருட்டு அநேகமான மந்திரகலை, தந்திரகலை, இவைகளினல் காணக்கூடுவதல்ல. அதாவது எப்படி பார்க்கலாம் என்றால் ஸ்ரீ சற்குருவின் திருவருளான உபதேச கலையினல் பார்க்கக் கூடுமென்பது நிச்சயம். அதாவது மோக்ஷம், இச்சையுடையவர்களுக்கு மோக்ஷம் கொடுக்கத் தகுந்ததாயிந்த புண்ணிய பூமியில் புண்ணிய க்ஷேத்திரங்கள் அநேகமுண்டு. இதுகளிலெல்லா வற்றிலும் சிறந்தது முன்கூறிய சிதம்பரம் ஒன்றேயாம். இதற்கு சந்தேகம் வேண்டாம். அந்த சிதம்பரமானது பரிசுத்தமுடைய இருதபம். ஆனலும் இருதயமானது ராகத் துவேஷாதி அபிமான விர்த்திகளோடு கூடியிருந்தமட்டும் அது சிதம்பரமாகாது. ராகத்துவேஷாதி அபிமானவிருத்திகளை அடியோடே நீக்கி ஸ்ரீ சற்குரு உபதேசமாம் அருள் ஞான சத்தியினல் சூக்ஷமமாய் பார்க்கும்போது அதுவே சிதம்பரமாம். ஜீவ ஐக்கியத்தை கண்டால் அது கனகசபையாம் என்பது பெரியவாளுடைய சம்மதம். ஆதலால் உன்னுடைய இருதயம் பரிசுத்தமாக்கி சிதம்பரத்தையடைந்து கனகசபைக்குள் சென்று பரமரகசியத்தை கண்டு பரமானந்தத்தை கொண்டு பரிபூரணமா யிருக்கும்போது அதுவே சிதம்பரம். அதுவே புண்ணியக்ஷேத்திரம். அதற்கு சந்தேகமில்லை. அந்த சிதம்பரமடையும்பொருட்டு உபாயம் எப்படி என்றால் சரியை, கிரியை, யோகம் இந்த மார்க்கத்தை அனு

சரித்துப்போனல் ஞானமாயிருக்கிற சிதம்பர தெரிசனம் அடையலாம். சரியை, கிரியை, யோகம், ஞானமாவது எது வென்றால் சற்சங்கமானது-நிர்ச்சங்கம், நிர்ச்சங்கமாவது-நிற் மோகம், நிற்மோகமானது-நிர்ச்சலதத்துவம், நிர்ச்சல தத்துவமானது ஜீவன் முக்தி, இதுவே எதார்த்த ஞான மென்றும், இதுவே சிதம்பர ரகசியமென்று முன்கூறிய தாத்பரியம். இதற்கு முதலாவது ஞான சாதனங்கள் நாலு மடைந்து அனுபூதிமானயிருக்கும் ஒரு பரமாசாரியா ரிடம்சேர்ந்து அவருடைய பாதத்தாமரை மலர்களிரண் டையும் நம்முடைய பரிசுத்தமான இருதயகமலங்கொண்டு யூகமாய்த் தியானித்து, அந்தத் திருவடியை ஸ்திரமாய் இருதயத்திலிருத்தி பூசிப்பவனுக்கு அவனுடைய உள்ளம் சுயம்பிரகாசமானல் அதுவே சிதம்பரமும் கனகசபை யுமாம். அது கூடாமல் நம் மனமானது ராகத்துவேஷாதி அபிமானத்தை யடைந்து அதுகளோடு ஐக்கியமாய் இருந்தமட்டும் நாமே நமக்கெமனும். நம்முடைய ஆசையே நமக்கு எமபாசமாம். அந்த ஆசையை விடாமலிருந்தது எமதண்டமாம். நிராசையடைந்தால் அதுவே முன்கூறிய சிதம்பரமென்பது தாத்பரியம். அதுவானதெந்த வஸ்துவை இருதயங்கொண்டு தியானிக்கிறதோ அந்த ரூபமே நாமா கும். பம்பரம்போல் சஞ்சலமான இருதயம் அநேகநாமரூப சங்கல்பம் அடைவதாதலால் அந்தந்த சமயங்களில் மன மும் அந்தந்த ரூபமாயிருக்கும். எந்த ரூபத்தை ஸ்திரமா யிருதயத்தில் நிலை நிறுத்திக்கொண்டிருக்கிறதோ அந்த ரூப மும் இருதயமும் இரண்டல்ல. எந்த வஸ்துவை இருதயங் கொண்டு தியானிக்கிறதோ அந்த வஸ்துவே இருதயத்தில் கடைசியில் நிலை நிற்கும். மரண சமயத்தில் தான் எந்த ரூபம் நினைத்ததோ அந்த ரூபம் அடுத்த ஜென்மமெடுக்கும். இது நிச்சயம். இதற்கு உதாரணம் முன் கூறிய குளவியே

ஒரு குரு. அப்படி யிருக்க சிந்தையற்ற சிதம்பரமே பெந்த மற்ற மோக்ஷ வீடு. ஈசனிருக்குமிடம் எங்கும் தேடியலைய வேண்டாம். பரமேஸ்வரரானவர் எங்கும் பரிபூரணரானு லும் ஆசையற்ற இடத்தில் திருவடி விளங்கியிருக்கும். அங் கே அம்பிகை ஈசனும் கூடி விளையாடி நிற்கும். அங்கே அடுத்தாலருள் பிரசாதம் கிடைக்கும். அதனுல் ஆனந்தப் பிராப்தி அடையலாம் என்பதாக புராண இதிகாசங்களும் சொல்லியிருப்பதாக பெரியவாள் சம்மதம். அதாவது ஜீவ னுக்கு அனர்த்த நிவர்த்தி, ஆனந்தப் பிராப்தி இதில் ஒரு படுகுழியில் விழுந்தவன் அதிலிருந்தும் கரையேறுவது அனர்த்த நிவர்த்தி. கரையேறியபின் தன் பூர்வ ஐஸ்வரியங் களை அடைந்தது ஆனந்தப் பிராப்தி. அதுபோல் மன மானது நிராசையாய் மெள்ள மெள்ளபரமாத்வாவில் சேர்ப் பதானுல் அந்த மனசினுடைய கர்ம வாசனையும் மெள்ள மெள்ள நசிக்கும். கர்ம வாசனை பற்ருல் குணமூன்றுமடங் கும். குணமூன்றுமடங்கிவிட்டால் திருவித கர்மங்களும் நசிக்கும். திருவித கர்மங்களும் நசித்தால் அதுவே மோட்ச மென்பது தாத்பரியம். விஷயங்களை தியானிக்கும் சித்தம் விடயங்களை சேர்ந்திருக்கும். ஆத்மாவை தியானிக்கும் சித் தம். ஆத்மாவில் ஐக்கியமாயிருக்கும். அதாவது மனோ லயம், வாசனுக்ஷபம், தத்துவபோதம் இம்மூன்றுமடைந் தால் அதுவே வீரசைவ மென்பது தாத்பரியம். அபேதமா யிருந்ததே வீரசைவம். முன் கூறிய சரியை, கிரியை, யோகம், மூன்றுக்கும் அனுபவம் சாலோகம், சாமீபம், சாரூபம் மூன்றும் முத்தி. இந்த மூன்று முத்தியும் சரீர முத்தி. சரீர முத்திக்கு புனர் ஜென்மமுண்டு. நாலாம்பத மான ஞானம் ஒன்றே விதேக கைவல்யம். இதையடையும் பொருட்டு முக்கியமானது சிரத்தை. சிரத்தையாவது ஒரு பரமாசாரியாரிடம் சேர்ந்து, சிரத்தை, பத்தி, விசுவாசத்

துடன் அந்த குருவின் திருவடியை குரங்கு குட்டியைப் போல் விடாமல் பிர்ம சரீயத்திலிருந்தும் குருவினல் நேமிக்கப்பட்ட விதிப்படி நியமங்களை செய்யவும் 'குருவே தெய்வம் இதைத் தவிர வேறொரு தெய்வமும் கிடையாது' என்கிற விசுவாசமும், அந்த குருவினிடத்தில் மிகுந்த அன்பினல் வாக்கு மனக்காயங்களாலும், சேவிப்பதுதான் பக்தி. பக்திக்கு முக்கிய சாதனங்களைந்து. அதாவது சத்தியம், தர்மம், தயா, வித்தியா, தபசு இவ்வைந்து சாதனங்களிலும் முதலாவது சத்தியம் பிரதானம், சத்தியமான பூமியிற் தர்மமாம். விதை போட்டால் தயவான முளை முளைக்கும். அந்த தயவான முளை வளர்ந்து, அதை தபசான காவல் கார்த்தால், வித்தையான விருட்சம் வளரும். ஞானமாம் பலம் கிடைக்கும். ஆதலால் இவ்வைந்து சாதனங்களும் எல்லோர்க்கும் வேண்டுவதவசியம். இதுகளைந்துமிருந்தால் எங்கும் க்ஷேமமாயிருக்கலாம். இதை கேட்ட சிஷ்யன்:- சந்தோஷமாய், ஓ சுவாமி! முன்னருளிய சத்திய தர்மாதிகளடைவது எல்லோருக்கும் க்ஷேமமாமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனலும் இதின் பொருளாவது உண்மையாக விளங்கும்படி அடியேனுக்கு அருள் செய்ய வேணும். குரு:- மகனே கேள்! முதலாவது சத்தியம். அதாவது காரியகாரண சமதரிசனம். இரண்டாவது ஒரு பிராணிகளையும் கொல்லாமலிருப்பது தர்மம். மூன்றாவது ஜீவகாருண்யம். அதாவது தான் கஷ்டமடைந்தும் அன்னிய சீவர்களை காப்பாற்றுவதாம். நாலாவது வித்தியா, அதாவது ஆத்மா அனத்மா விவேகத்தினல் ஒரு பிராணிகளிடத்திலும், ஒரு வஸ்துக்களிலும் பேதமில்லாமலிருப்பதாம். ஐந்தாவது தபசு. அதாவது போகத்துள்ள ஆசையை விட்டு நிராசையாயிருப்பதாம். இது ஐந்தும் அடைந்தவர்களுக்கு இதுவே மாதா, பிதா, மனைவி, மக்கள், சகோதராள் என்பது தாத்பரியம். இதுகளைந்தும் பக்திக்கு

முக்கிய சாதனமாம். பக்தியாவது எல்லாவற்றிலும் சிறந்தது. சற்குரு பக்தி என்பதாக முன் கூறியிருக்கிறது. குரு தியானமாவது பொறிகளைந்தும் இரு விழியாக்கி கரணங்கள் நான்கும் ஒரு வழியாக்கி, குணங்கள் மூன்றும் ஒரு குணமாக்கி, ஸ்ரீ குருவின் பதமலர் சிரசால் வணங்கி தியானிப்பதும், பூசிப்பதும், துதிப்பதும்தான் எல்லாவற்றிலும் சிறந்ததான அனந்நிய பக்தி என்பது தாத்பரியம். இதுவே யோக சமாதி. இதனுல் எதார்த்த ஞானமடையலாம். இதற்குச் சந்தேகம் வேண்டாம். இனி ஞானமாவது, முன் கூறிய சமாதி சாதனங்கள் நான்கும் அடைந்த பின் ஸ்ரீ சற்குருவின் திருவருளான மகாவாக்கியாமிர்தசாரமாம். 'தத்துவமசி' என்கிற தாரக மந்திரம் காதில் உபதேசமாம். வர்ணுசாரமாவது எதற்கென்ருல், அது போக சுகத்திற்காக ஏற்படுத்தியதாம். ஆதலால் போக சுகத்திலாசை யிருந்தமட்டும் வர்ணுச்ரமங்கள் தவருமலிருக்கவேண்டிய தவசியம். போகத்தி லிச்சை விட்டு மோக்ஷத்திலிச்சையுடையவர்கள் வைராக்கியத்துடன் தாமசகுண காரியமான வர்ணுச்ரமத்தையும், அதற்கனுசரணமான விதிநிஷேதங்களையும், போகத்துக்கேதுவான காம கர்மங்களை விட்டுவிடவேண்டியதவசியம். எல்லாம் விட்டு சந்நியாசியாய் வந்தவர்கள் முன் கூறிய விதி நிஷேதங்களான குணதோஷங்களை ஆதரிக்கவும், நிந்திக்கவும் செய்ய விதியில்லை. வர்ணுச்ரமம் விட்டு சன்னியாசியாய் வந்தவாள் மறுபடியும் வர்ணுச்ரமத்தை எடுத்து வைதிகமான கர்மங்களை ஆதரித்தா லவன் கர்ம சண்டாளனும் என்பதற்கு விதியுண்டு. வர்ணுச்ரமாதி தர்மாசாரங்களும், விதி நிஷேதங்களும் குருவின் திருவடிக்கு சத்தியமாய் சமர்ப்பணம் செய்தவனே சந்நியாசி. மறுபடியும் அதை ஆதரிப்பது அசத்தியமாம். சத்தியமே எல்லாவற்றிலும் சிறந்ததாக முன் கூறியிருக்கிறது. அதாவது, சத்

தியமே பிதா, தர்மமே மாதா, சீவகாருண்யமே மனைவி, வித்தையே மகன், தபசே பந்து, ஞானமே தான். அதாவது சத்தியமே தர்மம், தர்மமே ஜீவகாருண்யம், ஜீவகாருண்யமே வித்தியா, வித்தையே தபசு, தபசே சாந்தம், சாந்தமே நிராசை, நிராசையே ஞானம், ஞானமே பிர்மானந்தமென்றறிக. மகனே கேள்! இந்தப்படி அப்பியாசத்துடன் இவ்வுலகத்தின்கண் சஞ்சரிப்பவர்களுக்கு யாதொரு குறைவுமில்லை என்பது நிச்சயம். இதுகளைந்தும் அநுபவம் உடையவர்கள் மகாத்மாக்கள். இதுகளைந்து மிருந்தவர்கள் இந்த ஸ்தூல சரீரம் விட்டுபோனாலும் கூட வரத் தகுந்ததென்றும், இதுவே சத்தியமாய் என்றைக்குமுள்ளதான சாசுவத தர்மமென்றும், அறிய இவைகளில் எதுவானாலும் ஒன்றில்லாத பாபிகள் போகிற வழிக்கு "குழையற்ற ஊசியும் கூட வராது" என்பது நிச்சயம். ஆதலால் முன் கூறிய சத்திய தர்மாதிகளான, சாசுவத தர்மத்தை விட்டுவிடாமல் முன் கூறிய சரியை, கிரியை யோக மார்க்கத்தோடே போய் சுகமாய் நாலாம்பதமான ஆத்மக்கியானமடையலாம். சந்தேகம் வேண்டாம். ஓ வாரீர் மகனே கேள்! அசத்தாயிருக்கும் பிரபஞ்சம் சத்தியமென்றும், சத்தாயிருக்கும் ஞானம் அசத்தியமென்றும் விபரீதமாய் எண்ணும் மூடர்களுக்கிது விபரீதமாயிருக்கும். இப்படிக்கொத்த விடமூடர்களுக்கு சரிபை, கிரியை, யோகம், ஞானம் நாலும் எதுவென்றால், தன் சுகத்துக்காக கல்யாணமடையும் பொருட்டு முதலாவது, மெத்தவுமழகுடைய ஒரு பெண்ணினைத் தேடுவதாம் சரியை. அநேகமாய் தேடிக் கண்டதில் தனக்கிதமாயுள்ள பெண்ணினையடுத்து கைபிடித்து கல்யாணம் பண்ணுவதுதான் கிரியை. அதோடுகூடி சேர்ந்து ஆனந்தமாயனுபவிப்பதுதான் யோகம். குழந்தை பிறப்பதுதான் நாலாம்பதமான ஞானம். நெடுநாள் இதுக

ளோடைக்கியமாயிருந்ததுதான் அனுபவம். இதற்குக் கடைசி ரௌரவாதி நரகமாம். சந்தேகம் வேண்டாம். இது வேதங்கள் சொன்னதாம்; பேதம் வேண்டாம். இதைத்தவிர முன் கூறியபடியுள்ள சத்திய தர்மாதிகளும், பக்தி விசுவாசமும் உடைய மகாத்மாக்கள் எங்கே யிருந்தாலும் பற்றற்று மோக்ஷமாமென்பது தாத்பரியம். இவ்வுலகத்தின்கண் பேதமாவது எப்படி யென்றால் பிரகிருதி புருஷனால் வந்ததுதான் பேதம். பிரகிருதி புருஷாள் பேதமாவது, பிரகிருதி வேறு, புருஷன் வேறாகப் பாவிப்பதுதான் அநேக பேதத்துக்கு காரணம். பிரகிருதி புருஷன் இரண்டும் ஒன்றாக பாவிப்பதுதான் பேதம். அதாவது, பிரகிருதி புருஷனிலும், புருஷன் பிரகிருதியிலும் அடக்கி பரமாத்மாவை உபாசிக்கும்போது பிரகிருதி, புருஷாள் இரண்டும் அந்த பரமாத்மாவிலே அடங்கியிருக்கும். அப்போது அந்த பிரகிருதி புருஷாள் இரண்டும் கற்பூர தீபம்போ லடங்கியிருக்கும். அதாவது, பிரகிருதியடக்கமானால் புருஷனென்கிற நாமம் கிடையாது. பிரகிருதியாவது கற்பூரம் போலவும், புருஷனாவது தீபம் போலவும். இது இரண்டும் சேர்ந்து எரிந்தணைந்துவிட்டால் இது இரண்டும் கிடையாது. அதாவது, பிரகிருதியால் தோற்றுவதாம் ஜீவபாவனை. பிரகிருதி இல்லாவிட்டால் ஜீவபாவனை கிடையாது, ஆதலால் பிரகிருதி யடக்கமே ஜீவன் முத்தி. முன் கூறிய பிரகிருதி புருஷாளுடைய விவரமாவது:- பிரகிருதி தத்துவங்கள் 24. அதுகளுக்கு விவரம்:-மூலப் பிரகிருதி 1, மகத்தத்துவம் 1, அகங்காரம் 1, பஞ்ச தன்மாத்திரை 5, மகா பஞ்ச பூதங்கள் 5, ஞான இந்திரியம் 5, கர்ம இந்திரியம் 5, இருதயம் 1, ஆக பிரகிருதி தத்துவங்கள் 24. இந்த பிரகிருதி தத்துவங்கள் 24ம் கூடி தன் புருஷனை ஜீவன் பெந்திக்கப்பட்டது. ஆதலால் சீவன் நானாவிதமாய் அலைவதற்கு காரணம்

முன் கூறிய 24 தத்துவங்களையும், சீவனுக்குள்ளே யடக்கும்போது சீவன் சிவனயிருக்கும். அப்போது பிரகிருதி தத்துவங்கள் ஏகமாய், சிற்சத்தியாய் ஆனந்தமாயிருக்கும். அதாவது, அறிவே சிவம், ஆனந்தமே சக்தி. இந்த பிரகிருதி தத்துவங்களை யடக்குவது மகா பிரயாசை. ஆனுலும் இந்த தத்துவங்களில் பிரதானமானது மனம். இரண்டாவது வாக்கு, மூன்றுவது சரீரம். இந்த முக்காரணங்களுமடங்கி விட்டால் பிரகிருதி அடங்கியிருக்கும். இந்த முக்காரணங்களும் அடங்கும் உபாயம் எப்படி என்றல், முக்காரணங்களினுலும் கடவுளை உபாசித்தால் அடங்கும். அதாவது மனதினுல் தியானிப்பதும், வாக்கினுல் துதிப்பதும், காயத்தினுல் நமஸ்காராதி கைங்கரியங்கள் செய்வதும் இந்தப்படி பழகி வருவதானுல் பிரகிருதி தானே அடங்கும்.

இன்னும் கேள் மகனே! முன் கூறிய முக்காரணங்களுமடக்குவதற்கு சுளுவாயும் பரம ரகசியமாயுமொரு வழியிருக்கிறது. அதாவது பஞ்சாக்ஷரம். அந்த பஞ்சாக்ஷரத்தின் மகிமை பரமானந்த பதத்திலாசையுடைய புண்ணியாத்மாக்களுக்கு கடவுளை உபாசிக்கும் பொருட்டு அநேக மார்க்கமிருந்தாலும் இரண்டு விதத்திலடங்கியிருக்கும். அதாவது சகுணம், நிர்க்குணம் இரண்டுதான். இதில் நிர்க்குணம் சிரேஷ்டமானுலும் முதலாவது சகுண உபாசனை வேண்டியது அவசியம். சகுணமாவது எது என்றல் கடவுளை மாயாசகிதனைய் உபாசிப்பதுதான். அதாவது ஜெகத் சர்வ சராசரத்தையும் யேகமாய்க் கண்டு உபாசிப்பதாம். அதாவது பஞ்சாக்ஷரத்தி லடங்கியிருக்கும். பஞ்சாக்ஷரமாவது நமசிவயவென்பதாம். நமசிவய வென்பது பஞ்சமூர்த்தி. பஞ்சமூர்த்தியாவது பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் இவர்களுக்கு சுரூபம் பஞ்சபூதாகாரமாம். அதாவது பிரிதிவு, அப்பு, தேய்வு,

வாய்வு, ஆகாயம். இதில் முதலாவது நகரம் பூமி. அதாவது மெத்தவும் பொறுமையுடையதாம். இரண்டாவது மகரம், ஜலம்; பரிசுத்தமுடையதாம். மூன்றாவது சிகரம் அக்கினி, சர்வத்தையும் சங்கரிக்கப்படுகிறதாம். நான்காவது வகரம், வாய்வு. மகா பலமுடையது. அஞ்சாவது யகரம். அது ஆகாசம், தெளிவு, ஏகமாய் எங்கும் பரிபூரணமாய் எல்லாவற்றிற்கும் இடம் கொடுக்கத் தகுந்ததாம். ஆதலால் இந்தப்படி மற்றும் அனேக அனேக கல்யாணகுண மகிமையுடையதுதான் பஞ்சாக்ஷரம். இப்படிக்கொத்த மகிமையுடைய பஞ்சாக்ஷரத்தை குரு முகமாயும் சிரத்தா பக்தியுடன் சதா உபாசித்தால் ஜீவன் முக்தி யடையலாம். பஞ்சாக்ஷரம் ஏகசுரூபமாய் உபாசிப்பதுதான் நிர்மல சகுணம் என்பது தாத்பரியம். இந்தப்படி பரிசுத்தமுள்ள பஞ்சாக்ஷரத்தையும் குரு பதத்தையும், பிரணவத்தையும், இருதயத்தையும் ஏகமாய்க்கண்டு உபாசித்து பழகி வருவதனுல் திரிகுணங்களும் பரிசுத்தமடையும். திரிகரணங்களும் பரிசுத்தமடைந்தால், திரிகுணங்களும் ஒடுங்கும். திரிகுணங்களும் ஒடுங்கினுல் சித்தம் சுயம் பிரகாசமாகும். சுயம் பிரகாசமானுல் அதுவே நிர்க்குணமாம். நிர்க்குணமானது பிரணவகாரமாயும், ஏகமாயும் ஆகாசம்போல் அகண்ட பரிபூரணமாயும் சச்சிதானந்த சுயஞ் சோதியாயும் உள்ள பரமாத்மாவை ஞேயமாய் உபாசிப்பதுதான் நிர்க்குணத்தியானம். மனசுக்கு குணசங்கமிருந்த மட்டும் நிர்க்குணத்தியானம் செய்யமுடியாது. சகுணத்திலிருந்து நிர்க்குணத்தியானம் செய்தால் சகுணம் நிர்க்குணத்திலடங்கியிருக்கும். சகுணம் நிர்க்குண மிரண்டும் உபாசிப்பவன் யார்? என்று தன்னைத்தான் விசாரித்தறியும்போது சகுண நிர்க்குண மிரண்டிற்கும் அதீதமாயும் சுயம்பிரகாசமாயும் பிரமானந்தமாயும் விளங்கியிருக்கும் ஆத்மா ஏகமென்றறிக.

மகனே கேள்! சிரவணத்தினுல் அறியப்பட்ட ஆத்மாவினை மனனம் செய்யும்போது சந்தேகமெல்லாம் தீரும். அதாவது அகாதமாயும், கெம்பீரமாயும் இருந்த சமுத்திரத்தில் உண்டான அலை அடிக்கடி அந்த சமுத்திரத்திலே தோன்றி ஒடுங்குவதுபோல் பரமாத்மாவிலிருந்தும், மாயையால் தோற்றப்பட்ட பிரபஞ்சமும், ஆத்மாவிலே தோற்றமும், ஒடுக்கமுமாம். ஆதலால் ஆத்மாவும் பிரபஞ்சமும் வேறல்ல; எல்லாம் பரமாத்மாவாம். பரமாத்மாவைத் தவிர அணுவளவும் அசையாது என்பது நிச்சயமாம். எல்லாம் பரமாத்மாவாகப் பாவிப்பதனுல் நீயும் பரமாத்மாவாம் என்பது யுக்தி.

அதாவது, சிஷ்யன் ஓ ஆண்டவனே! நின் திருவடி திருவாய்மலர்ந்தருளிய பஞ்சாக்ஷரத்தின் பொருளானதை அடியேனுக்கு உண்மையாக விளங்கும்பொருட்டு அருள் செய்து காப்பாற்றி யிரக்ஷிக்கவேணுமென்று அபேக்ஷிக்கிறேன். அதற்கு குருவானவர் புன் சிரிப்புடன் ஒரு வார்த்தை சொன்னதாவது:- ஓ மகனே கேள்! பஞ்சாக்ஷரம் 'நமசிவய' என்பதின் மத்தியிலிருந்த சிகரம். அதாவது சிவம். அதற்கு இடபாகமிருந்த மகரமும், நகரமும், விஷ்ணுவும், பிர்மாவுமாம். வலபாகத்துக்கண்ட வகரமும் யகரமும், சுப்பிரமணியனும், சதாசிவனுமாம். இடபாகம் சிருஷ்டி ஸ்திதி, வலது பாகம், திரோபாகம். அநுக்கிரகம், மத்தியபாகம், சங்காரம் இதுகள் ஐந்தெழுத்துக்கும் மூலவித்தானது பிரணவம். ஆதலால் இவைகளைந்தும் பிரணவமாம் என்பது நிச்சயம். ஆதலால் மோக்ஷ சாதன விளக்கமாவது, பஞ்சாக்ஷரம். பஞ்சாக்ஷரமாவது முன் கூறிய ஐந்தெழுத்துமாம். அதாவது ஸ்தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம், முத்தி 5. அதாவது நமசிவய:- அதாவது பூமி, ஜலம், தேயு, வாயு, ஆகாயம் 5. அதாவது

பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் 5. அதாவது சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபாகம், அநுக்கிரகம் 5. அதாவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் 5. இந்தப்படி ஐந்துவித இலக்ஷணத்தோடு கூடியும் பஞ்ச வர்ணத்தோடு கூடியுமிருக்கும். இப்படிக்கொத்த மகிமையுடைய பஞ்சாக்ஷரமானது விஸ்வ காரணமாயும், விஸ்வ ரூபமாயும். விஸ்வத்தில் சராசர சொரூபமாயும், உள்ளும் புறமும் விளங்குகின்ற பஞ்சாக்ஷரமானது ஒருவர்க்கும் தெரியவில்லை, ஏனென்றால் பஞ்சாக்ஷரத்தை தவிர இவ்வுலகில் அணுவளவும் வேறே இல்லை என்பது நிச்சயம். ஆனாலும் இதை ஒருவருக்கும் தெரியாமல் போனது மறைப்பு. அதாவது தன்னைத்தான் மறந்தது. மறக்கக் காரணம் மூலாதாரத்தின்கண் அதிபோக குண்டலி சத்தியின் வசமாய் சீவன் படுத்து தூங்குவதாதலால் தன்னைத் தான் மறக்க காரணம் தன்னைத்தான் உணர்ந்தறிவதே மாயாஜெயம். அதை யுணர்த்துவதற்கு முதலாவது மூலாதாரத்தின்கண் மறைக்கப்பட்ட குண்டலிசத்தியை அதட்டி எழுப்பும்பொருட்டு ஜீவகாருண்யமுள்ள ஒரு பரம தேசிகரை அடையவேணும். அதாவது பூர்வ புண்ணியம் பூரணமாகும்போது ஸ்ரீ சற்குருவின் கிருபையினால் குண்டலி சத்தியை உணர்த்தி குண்டலி உணர்ந்து மேல் கிளம்புமானால் குரு தெரிசனமாகும். குரு தெரிசனமானால் பஞ்சாக்ஷரத்தை உணர்த்தலாம். அதாவது முதல் நகரம் நிஷ்காம தர்மத்தினாலும், பஞ்சாக்ஷரதியானம் செய்து பழகிவருவதாலும் நகரம் உணரும். மறுபடியும் சர்வ கர்மமும், ஈசுரார்ப்பணம் செய்து பஞ்சாக்ஷர தியானமானால் மகரம் உணரும். மறுபடியும் ஸ்ரீ குருவின் திருவடி ஸ்திரமாய் சித்தத்தில் நிறுத்தி பஞ்சாக்ஷரத் தியானம் செய்தால் சிகரமுணரும். மறுபடியும் சராசரத்துக்கும் அந்திரியாமியான

ஆத்மாவினையும் பஞ்சாக்ஷரத்தையும் தியானிப்பதானல் வகரம் உணரும் மறுபடியும் ஸ்ரீ குருவின் திருவருள் பிரகாசத்தினல் பஞ்சாக்ஷர தியானம் செய்தால், யகர முணரும். இந்த முறைப்படி பஞ்சாக்ஷாத்தை உணர்த்தி எழுப்பினல், பரமாக்ஷரப் பொருளான சற்குரு தெரிசனமாகும். குரு தெரிசனமடைந்தால் ஸ்தூலம் சூக்ஷமம் காரணமான நகர. சிகர, மகர மென்கிற மூன்று சரீரமும் கிடையாது. மூன்று சரீர்மு மடங்கிவிட்டால் முக்குணங்களும் கிடையாது. முக்குணங்களும் விட்டால் முத்தொழிலும் கிடையாது. முத்தொழிலு மில்லாவிட்டால் முக்கரணங்களும் கிடையாது. முக்கரணங்களு மடங்கிவிட்டால், மும்மலங்களும் கிடையாது. மும்மலங்களுமற்ருல், வகரமான விந்து யகரமான நாதத்தை காட்டி அருள் நிலையடைந்து அறிவையறிந்து சதா சிவமயமாய் மனேன்மணி விலாசமாய் வீதிபோல் நீதியாய் நிர்விஷய சுத்தமாய், சத்துமாய், சித்துமாய், பரிபூரணனந்தமாய், அதீதமாய், ஓங்கார உச்சிவெளி நிஷ்கள பிர்மமாய் சிவானுபூதியாய் மவுன சமாதி யடையலாம். இது பஞ்சாக்ஷரத்தின் மகிமை. சமாதி யோகமாவது இரண்டு விதம். அதாவது சகளம் நிஷ்களம் இவைகளிரண்டும் ஒன்றுதான். இவைகளில் சகளமாவது ஸ்ரீ சற்குருவின் திருவடி சிரசின்மேலும், குருவருள் பிரணவ சுரூபத்தை சுழிமுனையிலும், பஞ்சாக்ஷரமாவது நா வி லும், மனம் அன்னிய சிந்தனைவிட்டு மவுனியாயிருந்து தியானிப்பது சகளம். இதனல் ஸ்வரூபானந்த முத்தி இரண்டாவது நிஷ்களத்தியானமாவது, இந்திரிய கோசரமான நாமரூபங்களை மறந்து அந்தக்கரணமற்று ஆகாசம்போல் பிர்மானந்தத்தில் தூங்காமல் தூங்குவதாம் நிஷ்களத்தியானமென்றும், நிர்விகல்ப சமாதி யென்றும் பெரியவாள் சம்மதம். இப்படிக்கொத்த பஞ்சாக்ஷரத்தை சிரத்தா பக்தியுடன்

படித்தால் உள்ள பலம்-சர்வபயகரம், சர்வபாபகரம், சர்வ விஷகரம், சர்வரோஹகரம், தீர்க்காயுள், சர்வ லோகரும் வசியமாம். சர்வதாபமும் தீரும், லெக்ஷிமிகடாக்ஷமாகும். பராசத்தியருள், இகலோக, பரலோக, தர்மார்த்த காம, மோக்ஷமடையலாம். சந்தேகம் வேண்டாம். இப்படிக் கொத்த மகிமையுடைய பஞ்சாக்ஷரத்தை விட்டவன் இரண்டும் கெட்டவன். பூமியில் பிறந்துவிட்ட சமயத்திலே இறந்துவிட்டவன் போல பாழாவான் என்பது தாத்பரியம்.

சிஷ்யன் கேட்கிறான்:- ஓ சுவாமி! முன் கூறிய சரியை கிரியை, யோக மார்க்கம் ஒன்று. எல்லாம் விட்டு பஞ்சாக்ஷரத்தியானம் இந்தப்படி முன் கூறியதில் எது சிலாக்கியம்? குரு:- ஓ மைந்தனே! நின் மனம், புத்தி இரண்டிருந்ததுபோல, சரியை கிரியை. மார்க்கமும், பஞ்சாக்ஷரதியான மார்க்கமும் இருக்கிறது. இவ்விரண்டும் ஒரு வழிதான். இரண்டல்ல.

சரியையாவது துற்சங்கம் விட்டு குருவைத் தேடுவதாம். கிரியையாவது ஒரு குருவையடுத்து அன்புடன் பூசிப்பதாம். யோகமாவது குரு அருள். ஞானமாவது அனுபவம். இன்னும் கேள்! சரியையாவது இந்திரியங்களை யடக்குவதாம். கிரியையாவது அந்தக்கரணம் அடக்குவது தான். யோகமாவது குணமூன்று மடக்குவதுதான். ஞானமாவது மாயா ஜெயமாம். இன்னும் சரியையாவது சற்சங்கம். கிரியையாவது நிற்சங்கம். யோகமாவது நிராசை. ஞானமாவது நிர்ச்சல பிர்மானந்தம். சரியையாவது சாலோகம். கிரியையாவது சாமீபம். யோகமாவது சாரூபம். ஞானமாவது சாயுஜ்ய பதம். சித்தம் சுத்தம் என்பதற்கு அர்த்தம் அசுத்தம் இல்லையென்பதாம். சித்தம் சமத்துவமானல் அசுத்தம் அணுவளவும் கிடையாது.

சித்தம் சுத்தம் அடைவது எப்படி என்றால், சித்தம் நினைப்பதெல்லாம் சத்து ரூபமாயும், கண்ணினால் பார்த்த தெல்லாம் சித்து ரூபமாயும், காதினால் கேட்டதெல்லாம் ஆனந்த ரூபமாயும் பாவிப்பது பரிசுத்தமாம். அசத்தா யிருக்கும் வஸ்துக்களை உட்கொள்ளுவது அசுத்தம். சத்தா யிருக்கும் வஸ்துக்களை உட்கொள்ளுவது சுத்தம். எல்லாம் பகவத் சுரூபமாகக் கண்டது சுத்தம். சித்தம் அசுத்த மாக்குவது. துராசை சுத்தமடைவது நிராசை. மன சஞ் சலம், அஸ்திரம், மன நிர்ச்சலம், நித்திய நிர்மல நிஷ்களம். அதுவே ஸ்திரம். ஜீவபாவனை அஸ்திரம். ஜெகதீஸ்வர பாவனை ஸ்திரம். ஆத்மாவானதை சிரவணத்தினால் கண் டது சாலோகம். மனனத்தினால் கண்டது சாமீபம். நிதித் தியாசத்தினால் கண்டது சாரூபம். நிரந்தரமாகக் கண்டது சாயுச்சியம்.

இதற்கு ஞானம், கர்மம், பக்தி இம்மூன்றும் புரு ஷார்த்த சாதனங்களாம். இவைகளுக் கதிகார பேதமுண்டு. அதாவது புருஷார்த்த மடையும் பொருட்டு சிரத்தை யுடையவர்களுக்கு முக்கிய சாதனம் ஞானம். ஞானத்தி லும் சிறந்தது குருபதத்தியானம். கர்மத்திலும் சிறந்தது குருவின் திருவடி பூசையாம். பக்தியிலும் சிறந்தது குரு விசுவாஸமாம். இதுவே எல்லாவற்றிலும் சிறந்ததென்றும் இதனால் பரம சாந்தமாய் புருஷார்த்தமாகும் என்றும் எல்லா சுருதி வேதாதிகளிலும் எல்லா மகத்துக்களும் எல்லா மத சம்மதமாயும் கூறியிருக்கிறது சத்தியம். இதை உண்மையென்று நம்புவோர்களுக்கு பரம புருஷார்த்த பர மானந்தபதமடையலாம் என்பதற்குச் சந்தேகம் இல்லை யென்றும் ஸ்ரீ சற்குருநாதன் ஸ்ரீ சற்குருவின் திருவடி ஆணை சத்தியம்! சத்தியம்!!

அருள் ஞானதீபம் சம்பூர்ணம்.

ஸ்ரீ குருசரணம்.

சாதுக்களின் பாதபூஜை பலன்.

தேவதருவைப்போல் கேட்டவரங் கிடைக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஸ்ரீம் நாரதபகவான் வாக்கியம்:— பூர்வ ஜென்மத்தில் நானொரு சூத்திரன். தாசியின் புத்திரனாகப் பிறந்தேன். ஆனாலும் அந்த ஜென்மம் சாதுக்களின் பாதபூஜை செய்து ஜென்ம முடிந்தபின் அதின் பலனாவது இந்த ஜென்மம் பிர்மாவின் புத்திரனாய் நாரதனாகப் பிறந்தேன்.

ஸ்ரீம் வால்மீகர் வாக்கியம்.

பூர்வ ஜென்மத்தில் நான் ஜாதியில் மலைவேடனாக இருந்தேன். சோரனாய் காட்டு நடுவிலிருந்துகொண்டு அனேகம் பிராணிகளைக் கொன்று தின்றேன். அனேகம் வழிப்பிரயாணிக்ளின் பொருள் பறித்து அனேகம் வதை செய்தேன். ஆனாலும் சாது தெரிசனத்தாலும், மராமரேதி திருநாம ஜெபத்தினாலும் எம்மனம் பரிசுத்தமாய் இச்சென்மம் பிர்ம முனியாய் வால்மீகியாய் வந்தது.

ஸ்ரீ அகஸ்திய பகவான் அருளியது.

ஆதியகத்திய ரோதிய தத்துவம்
மேதினில் கற்றவர் தீதில் சித்தரே. (1)

மணிகொண்ட யானையெட்டுந் திசைகளெட்டுங் கிரிகளெட்டும் மதியிரெட்டுங், கணிகொண்ட வியாக்கிருதியேழும் மண்டலமேழு மொருகடல்களேழும், பணிகொண்ட கலைகளஞ்சும் பூதமஞ்சும் தாரமஞ்சும் பதிகளஞ்சும், அணிகொண்ட மறைநாங்கும் புவன மெல்லாம் படைத்தவன்றனடிகள் காப்பாம். (2)

தானென்ற ஞானத்தின் பலனைக் கேளு
தலைகீழாய் பஞ்சாக்கினி யிடையில் நின்று
கோனென்ற கோடிகற்பம் தவஞ்செய்த பலமும்
கூறஸ்வமே தியாகம் நூறுகோடி
தேனென்று செய்பலமும் மூவருக்கும்
செகத்தினிலோர் நூறுகற்ப மர்ச்சித்தபலமும்
மூனென்ற ஞானிபிக்ஷை கணஞ்செய்த பலத்துக்கு
ஒவ்வாதுயென்று மறையுறைக்குந் தானே. (3)

கேளப்பா கெருடன் முன்பு சற்பந்தானுங்
கிட்டவுந்தானில்லாத கெடியைப்போலும்
மாளப்பா யிருள்தானும் சூரியன்முன்நிற்க
மாட்டாது ஓடிப்போம் வரிசைபோலுங்
கேளப்பா பஞ்சதுதான் வடவையனல் முன்பு
கூடியது நில்லாது குறியைப்போலும்
ஆளப்பா வெகுகோடி பாவஞ்செய்தோன்
அருள்ஞானி தனைக்காணி லகன்றுபோமே. (4)

போகாமல் படைத்தவனே ஞானிபாதம்
பூசிப்பன் சிரசில்வைத்து புவனங்காத்தோன்
தாகமாய் ஞானியவன் நினைத்ததெல்லாம்
தலையினாலே சுமந்து தருவன்பாரு
யேகமாய் புவனமெல்லாம் யெறித்தோன் தானும்
இவன்பின்னே திரிந்திடுவா னிவனைக்கார்க்க
சாகாத வானவர்க்கும் மனிதருக்கும் ஞானி
சரன்பணியக் கிடைக்குமோ செகத்திற்றானே. (5)

தானென்ற ஞானிக்கோர் பிடிதான் பிச்சை
தனையளித்தார் தங்களுக்கு பலத்தைக்கேளு
கோனென்ற அகாரமது நூறு கோடி
கோபுரந்தான் கோடிசெய்த பலத்துக்குமதிகம்

ஊனென்ற நால்வேதஞ் சாங்கமாக
வோதியதோர் அந்தணர்கள் கோடிபேர்க்கு
தேனென்ற அன்னமிட்ட பலத்துக்குமதிகம்
சித்தாந்தம் வேதாந்தம் செப்பும் பாரே. (6)

செப்புமப்பா ஞானியவனிருந்த விடமெல்லாம்
செம்பொன்மணி கைலாயம் வைகுந்தமென்பார்
ஒப்பிலவன் திரிவதெல்லாம் உலகத்துக் கிரட்சை
ஓங்கிலவன் பாதங்கள் பட்டவிடமெல்லாம்
தப்பில்லாயாகாதி செய்த விடமாகும்
தானவனைக்காண சிவ தெரிசனமுமாகும்
அப்பாகேள் அவன்வார்த்தை மந்திரமுமாகும்
அதைக்கேட்டால் வேதமென்பார் அறிவுள்
[ளோரே. (7)

பெரியவாள் அடக்கமானால் சமாதிசெய்தால் அதின் பலனுவது.

பூமியில் ஒருகோடி சிவாலயம் கட்டிவைத்து பூசை பண்ணின பலத்துக்கும் அதிகம். (சமாதி கிரமம்)

நாட்டமுடன் பூரணற்றில் நாடினோர்க்கு
நாதாந்த சமாதியுட நன்மைகேளு
தேட்டமுடன் யெவ்விடமே யானுலென்ன
சிவசிவா அந்திடத்தில் செம்மைபண்ணி
வாட்டமென்ன பத்தடியில் சதுரமாக
மைந்தனே ரெண்டுமுழம் ஆழம்செய்து
ஆட்டமுட னதின்கீழே ஆறடியில் மைந்தா
அப்பனே முச்சாணில் ஆழம்பண்ணே. (1)

பண்ணப்பா அதின்கீழே நாலடியில்
பதிவான ஆழமது யெண்சாணீளும்
நண்ணப்பா னிதானமதாய் நன்றுய்ச்செய்து
நலமான கிரகமதில் பிரவேசிக்க

உண்ணப்பா கல்ப்பொடியும் செங்கல்தூளும்
உத்தமனே திருநீறு மூன்று மொன்றாய்
முன்னப்பா செய்துகொண்டு பதனம்பண்ணி
மூர்த்திகர மாவதற்கு முறையைக்கேளே. (2)

கேளப்பாப் பாலுடனே இளநீர்விட்டு
கிருபையுடன் தண்ணீரும் தேனும் விட்டு
சூளடா அபிஷேகம் நன்றாய்ச்செய்து
சுத்தமுடன் மேல்துவட்டி சுகமாமைந்தா
ஆளடா அறைதனக்கு பட்டுவஸ்திரம்
அன்பாக தானணிந்து அதன்மேல் கேளு
மேலடா பாதாதி கேசமட்டும்
மேன்மையுடன் விபூதிதூளிதமே செய்யே. (3)

செய்யடா விபூதிதூளிதமே செய்து
திருவான புருவமதில் திலதம்போட்டு
மெய்யடா தங்கமதால் பட்டம் செய்து
மேன்மைபெற அஞ்செழுத்தை அதிலேமாரி
பையடா நெத்திதனில் பட்டங்கட்டி
பாங்குபெற சுகந்தமலர் மாலைசாத்தி
வையடா அமுதுகறி வர்க்கம் முன்னே
வைத்தபின்பு தூபமொடு தீபங்காட்டே. (4)

காட்டடா தூபமுடன் தீபங்காட்டி
கருணையுடன் ரதமதின்மேல் கடாக்ஷஞ்செய்து
நாட்டடா மணியோசை சங்கின்ஓசை
நலமான ஜேகண்டி மேளவாத்தியம்
முட்டடா சகலஒலி நாதத்தோடே
முக்கியமாய் ரதமதுவை நடத்திக்கொண்டு
சூட்டடா சமாதினுட வாசல்சென்று
சுகமாக கிரகப்பிரவேசம் பண்ணே. (5)

பண்ணப்பா கிரகமென்ற சமாதினுள்ளே
பதிவான மற்றியென்ற எண்சாண் தண்ணில்
நண்ணப்பா தூபமதால் சுற்றிபண்ணி
நாட்டமுடன் அய்யும் கிலியுஞ்சவ்வும் சிவய
[நமாவென்று

கண்ணப்பா யீசானப் பார்வையாக
கருணையுடன் தானிருத்தி கனிவாய்மைந்தா
முன்னப்பா செய்துவைத்த முத்தூள்தன்னை
முக்கியமுடன் சிவவசியென் றெடுத்திடாயே (6)

எடுத்துநன்றாய் பதாதிகேச மட்டும்
இன்பமுடன் தான்தாளைக் கெட்டிசெய்து
அடுத்துமிக பாதமுதல் புருவம் மட்டும்
அளவாகப் பொடியிட்டு அமிழ்த்திமைந்தா
தொடுத்துமிக புருவமுதல் உச்சிமட்டும்
சொல்லுகிறேன் விபூதியிற் கற்பூரம் சேர்த்து
கொடுத்துமிக அமிழ்த்திநன்றாய் தூபதீபங்
குருவான மூர்த்திகர மாவாயெண்ணே. (7)

எண்ணியே அஞ்செழுத்தை உச்சரித்து
இன்பமுடன் மணல்நிமிர்த்தி திரணைபோட்டு
உன்னியே திரணைநடு லிங்கபீடம்
உத்தமனே தான்வகுத்து உறுதியாக
புண்ணியனே சுகந்தமலர் அர்ச்சனைகள் செய்து
பத்தியுடன் சகலரச வர்க்கம்வைத்து
வன்னியென்ற ருத்திரனை தியானம்பண்ணி
மார்க்கமுடன் மானதமாய் பூசைசெய்யே. (8)

செய்யப்பா மானதமாய் பூசைசெய்து
சிந்தைமன தொன்றாக்கி சிவனை நோக்கி
மெய்யப்பா கோதானம் பூதானங்கள்
மேன்மையுள்ள கன்னிகாதானம் செய்து
கையப்பா தவறாமல் பரந்தனக்கும்
கருணையுடன் பூரிகாதானம் செய்து
மையப்பா மெயென்ற குருவைப்போற்றி
மார்க்கமுடன் தன்பதியில் வந்துகேளே. (9)

கேளடா தன்பதியில் வந்திருந்து
கிருபையுடன் சட்ரசவர்க்கம் செய்து
வாளடா குருபதத்தை போற்றி மைந்தா
வணக்கமுடன் குருபூசை வளமாச்செய்து

பாழடா போகாமல் சமாதிமைந்தா
பத்தியுடன் நித்தியமும் பூசைசெய்தால்
கோளடா வாராது சமாதுதன்னில்
குருவான மூர்த்திகரம் அதிகமாமே. (10)

ஆமப்பா அதிகமுள்ள ஆண்பால் தன்னை
அருள்பெருக சமாதுவைக்கும் முறையை [சொன்னேன்
ஓமப்பா உறுதியுள்ள சத்திமாது
உண்மையுடன் மூர்த்திகரமானால் மைந்தா
தாமப்பா முன்போல சமாதுசெய்து
தண்மையுடன் மேல்திசையில் குகைதான்செய்து
நாமப்பா சொல்லுகிறோம் மூர்த்திகரமான
நாதாந்த மாதுதனை சுகாசனமாச்செய்யே. (11)

செய்யப்பா சுகாசனமாய் தீர்க்கம்பண்ணி
சிவசிவா அபிஷேகம் நன்றாய்ச்செய்து
மெய்யப்பா தெரியாமல் பட்டுவஸ்திரம்
மேன் பெறத்தானணிந்து விபூதிசாத்தி
மையப்பா மைய்யமதில் திலதம்போட்டு
மகத்தான சுகந்தமலர் மாலைசாத்தி
வய்யப்பா தங்கமதால் பட்டம் செய்து
மகத்தான எட்டெழுத்தை மாறிக்கேளே. (12)

கேளடா யெட்டெழுத்தை கால்தலையாய் மாறி
கிருபையுடன் நெற்றிதனில் பட்டங்கட்டி
ஆளடா தூபமுடன் தீபம்செய்து
அருள்பெருக ரதமதின் மேலன்பாய்வைத்து
வாளடா மணியோசை சங்கின் ஓசை
மகத்தான ஜேகண்டி நாதம்செய்து
மேளமடா ரதமதுவும் வரவே செய்து
வேதாந்தமான நடுகுகையில் வைய்யே. (13)

வையப்பா கீழ்முகமாய் குகையில் வைத்து
மார்க்கமுடன் செங்கல் லுப்புநீரும்
மெய்யப்பா மூன்றுபொடி ஒன்றாய்க்கூட்டி
மேன்பிறக் குகைநிறைப அமிழ்த்தி வைத்து

கையப்பா தவறுமல் மனல்நிறுத்தி கருணையுடன்
சதிரமதாய் திரணை செய்து
செய்யப்பா திரணைநடு கும்பம் வைத்து
தீர்க்கமுடன் மானதமாய் பூஜைபண்ணே. (14)

பண்ணப்பா சகல ரஜ வர்க்கம்வைத்து
பதிவான மகேஸ்வரியை பூஜைசெய்து
கண்ணப்பா தானேக்கி மனதுகூர்ந்து
கன்னிகா தானமுடன் கோதானங்கள்
பொன்னப்பா தான்விளையும் பூமிதானங்கள்
பத்தியுடன் பூரிகாதானஞ் செய்து
நண்ணப்பா தன்பதியில் வந்திருந்து
நாட்டமுடன் குருபூஜை நன்றுய்க்காணே. (15)

காணவே குருபூஜை நன்றுய்ச் செய்து
கருணைவளர் சமாதுதனிற் கிடாக்ஷமாக
பூணவே நித்தியமும் பூசைசெய்தால்
பூரணமாய் மூர்த்திகரம் புதுமையாகும்
தோணவே சற்றியுட சமாதுதன்னில்
துலங்கவெகு புதுமைகள்தான் யென்னசொல்வேன்
பேணவே பூரணமாய் சமாது பூசை
பெருமைவிட்டு உருமையதாய்ச் செய்துபாரே. (16)

பாரடா ஆண்ரூபம் முனிதானுச்சு
பதிவான பெண்ரூபம் ரிஷிதானுச்சு
சாரடா ரிஷிமுனிவர் கருணைதன்னைக்
கருணையுடன் கண்டறிந்து பூசைசெய்ய
ஆரடா அறிவார்கள் ஆதி அந்தம்
அரகரா ஆதியந்தம் ஆண்பெண்ணுச்சு
நேரடா ஆண்பெண்ணுய் பிறந்தாலென்ன
நேர்மையுள்ள அறிவல்லோ சாக்ஷிதானே. (17)

ஸ்ரீ அகஸ்தியபகவான் அருளிய சமாதி கிரியை
பரிபூரணம்.

பலசமய மதத்துக்கும் பிதாவாயும் பரமாய் அளவற்ற, ஆகாசம்போல் எங்குமாய் சராசரத்துக்கும் ஆதாரமாயும் விளங்குகின்ற சதுர்முகப் பெருமான் திருவடிக்கமலத்திற்கு அடியேன் அடைக்கலம்.

பல சமய மதசகிதராய், சர்வாந்தரியாமியாய், பரமானந்தராய், பரம ஆதாரமாயும், விளங்குகின்ற ஸ்ரீ விஷ்ணு பகவான் திருவடிக்கமலமூலத்துக்கு அடியேன் அடைக்கலம். பல சமய மதரகிதராய் பரிபூரண சுயஞ்சோதியாய் சர்வாத்மாவாய், சர்வாதாரமாய் விளங்குகின்ற சிவபெருமான் திருவடிக்கமலமூலத்துக்கு அடியேன் அடைக்கலம்.

பராபரமானந்த பரிபூரண சுயஞ்சோதியாய் உபசாந்தமாய் விளங்குகின்ற ஸ்ரீ சற்குருவின் திருவடிக்கமலமூலத்துக்கு அடியேன் அடைக்கலம். சர்வசராசரத்துக்கும் அந்தரியாமியாய் எங்குமாய் சர்வசாக்ஷியாய் ஏகமாய் அரூபமாய் சர்வபரிபூரணனந்த சுயஞ்சோதியாய் விளங்குகின்ற சங்கரநாராயணா! நின் திருவடிக்கமல மூலங்களுக்கும் அடியேன் அடைக்கலம்.

ஆருக்குமடியாராய் அடியார்க்கு மடியாராய், அடியார்களின் திருவடிக்கமலமூலத்துக்கு அடியேன் அடைக்கலம்.

உடல், பொருள், ஆவி மூன்றும் நின் திருவடிக்கர்ப்பணமாம். ஸ்ரீ சற்குருவின் திருவடிக்கு அடியேன் அடைக்கலம்.

பரமதேசிகாய பரமானந்தபரி
பூரண பரப்பிரமணே நமா
கண்ணுயிர்க்குயிராய் ஸ்ரீ சற்குருவே
நமோ நமா :

சற்குருவே நம:

ஆத்மயோக ஸங்க்ரஹம்.

கடவுள் வணக்சம்.

ஆதிசத்தி ஆனைமுக பாலை காப்பு
நீதிகற்றநான் முகனும் வாணி காப்பு
பூதிபெற்ற அரிஅர மகேசுரன் காப்பு
சோதியுற்ற சதாசிவனும் மனோன்மணியுங் காப்பாம்.

குரு வணக்கம் — விருத்தம்.

சத்திய பரிபூரண சதாநந்த வாரியில் சித்தபரிபாகமாய்
சுத்தமாய் நித்தியமாய்
தத்வபரி போதமாய் யத்துவித வஸ்துவாய் வேதாந்த
சித்தாந்த சமரச சமானமாய்
ஆதிமத் தியாந்தமாய் ஆத்தியந்த சூன்யமாய் சோதியா
யேகமாய் ஏகாந்த ரூபமாய்
பூதங்களைந்தும் பொறிகரணமற்ற பரஞானவானந்த
குருபதமலரை வணங்குவாம்.
அப்பனுடையடி மலரை யெப்பொழுது மாதரவாய்
தப்பாத மனனமது தப்போத மானபடி
இப்பாபி செய்வதெது முப்பாழு மூவுலகம்
பொற்பாத மாதரவில் அன்புவாய் வணங்குவாம்.

விருத்தம்.

கண்ணா ரிருந்த குருகண் ணாலேகண்டபடி
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை சாம்பலாய்
எண்ணாத எண்ணமது விண்ணாதி பூதமிதை
அண்ணா உமக்கடிமை அன்பாய் வணங்குவாம்.

நிஷ்காம சர்க்கர்ம்ம சன்மார்க்க தெரிசனம்
சற்பக்தி விச்வாச சற்குரு தெரிசனம்
சர்வேச லோகேச சர்வாத்ம தெரிசனம்
சத்துசித்து ஆனந்த சம்பூர்ண தெரிசனம்
சித்தம் சிவாயமாய் சுத்தபர தெரிசனம்
சுத்தபரி பூரண சுகாநந்த தெரிசனம்
தத்துவமசி சாமான்னிய சந்தோஷ தெரிசனம்
சமரச சதாநந்த சற்குரு தெரிசனம்.

ஸ்ரீ சற்குருவே நம:

ஆத்மயோக ஸங்க்ரஹம்.

பெந்த மென்பதும் மோக்ஷ மென்பதும், ஆத்மாவுக்கோ சரீரத்துக்கோ என்று மனம் கேட்க, அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! இவ்வுலகத்தின் கண் ஜீவர்களுக்கு பெந்தமென்றும் மோக்ஷமென்றும், இரண்டுவிதமாக சுருதி ஸ்மிருதி வேத சாஸ்திர புராண இதிகாசாதிகளில் கூறியிருக்கிறது சத்தியம்; ஆனாலும் அது பாமரானுக்கு பிராகிர்த கர்ம பெந்தம்விட்டு கிருதார்த்தமாகும் பொருட்டு உபாயமாகச் சொன்னதல்லாமல், சூக்ஷமத்தில் எதார்த்தமல்ல என்று மகாத்மாக்களும், உபநிஷத்துக்களும் கூறியது சத்தியம். ஆனாலும் ஜீவர்களுக்கு பெந்த மோக்ஷ மிரண்டும் மெய்யாக தோற்றுவது ஸ்வபாவம். அப்படி மெய்யாக தோற்றுவதற்கு காரணம் மாயை. மாயையானது இரண்டு விதம். வித்தை அவித்தை என்கிற நாமத்தோடு கூடியும், சுத்தம் அசுத்தம் இந்தப்படி இரண்டிரண்டு விதமாயும் அநேகமாகும். இவைகளில் வித்தையானது பெந்த நிவர்த்தி. அது மோக்ஷகாரணமென்க; அவித்தையானது சம்சாரம்; அது பெந்தகாரணமென்றும் பெரியோர்கள் சம்மதம். மோக்ஷமாவது, ஜாக்கிரதையாய் உணர்வது தான். பெந்தமானது போகம்; அது சொற்பனமாய் உறங்குவதாம். ஆதலால் தேகேந்திரியாதி விடயங்களில் ஆசை யிருந்தமட்டும் ஜீவன் பெந்தனும் என்றும் அறிக. இதுகளை எல்லாம் அடக்கி மனோசுகமான விடய சுகத்தை தூரத்தள்ளிவிட்டு, மனம் பரிசுத்தமாக்கி, ஆத்ம சுகத்தில்

பிரியமானல் ஜீவன் பெந்தம் விட்டு முத்தனாமென்று அறிக. மனோசுகமானது பூமிமுதல் நாதம் வரையில்; அதுகளெல்லாம் ஒருகாலத்தில் நாசமடையுமாதலால் அதுகள் சத்தியமுமல்ல, நித்தியமுமல்ல; மித்தையாமென்றறிக. ஆத்ம சுகமானது நாதாந்தமாயும், சத்தியமாயும், நித்தியமாயும், உள்ளது. அதானது ஆதிமத்தியாந்த மற்றதாயும், நிர்வாணமாயும், பிர்மானந்தமாயும் உள்ள தர்ம பரமாத்மாவென்றும் அறிக. ஆதலால் பெந்த மோக்ஷ மிரண்டும் உள்ளதாகத் தோற்றுவதற்கு காரணம் அவித்தை. இதற்கு சந்தேகம் வேண்டாம். அவித்தையின் சுரூபமானது இராஜத் துவேஷாதி அபிமான விர்த்திகளோடு கூடிய தேகேந்திரியாதி போகசுகத்தைப் பற்றியிருந்த சித்தம் ஒன்றுதான் அவித்தையின் சுரூப மென்றறிக.

இனி வித்தையின் சுரூபமாவது:—மேற்கூறிய ஆசையை விட்டு வைராக்கியத்துடன் ஒரு ஞானசாரியரை யடுத்து நிராசையாய் பாதுகாத்து பணிவிடைசெய்து, அருள் பெற்று, ஆனந்தமாய் ஆத்மசுகம் அடைவதுதான் வித்தையின் சுரூபமென்றறிக. அதாவது மாயா குண சங்கல்ப மற்று மனம் பரிசுத்தமாய் சாந்தகுண மடைந்தால் பெந்த நிவர்த்தியாம். ஆசைதான் பெந்தத்திற்கும் சம்சார துக்கத்திற்கும் நரகத்திற்கும் காரணம், வேறில்லை என்பது சத்தியம். ஆதலால் ஆசைதான் ஜீவபாவனை; ஆசையற்றால் ஜீவபாவனை நசிக்கும்; ஜீவபாவனை நசித்தால், அனர்த்த நிவர்த்தியாம். அனர்த்த நிவர்த்தியானல், ஆனந்தம் மேலிடும். இதற்கு முக்கிய காரணம் மன சாந்தம் ஒன்றேயாம், வேறில்லை. சாந்த மனதின் சுரூபம் எப்படியெனில், ராகத்துவேஷாதி யபிமானங்கள் அற்றதாயும், சுத்த சாத்வீகமாயும் உள்ளதாம். சுத்த சாத்வீகமானது

சராசரத்துக்கும் அந்தரியாமியாயும், அபேதமாயும், ஏக மாயும், மதரகிதமாயும் உள்ள ஆத்மாவில் பரிபூரணானந்தமா யிருப்பதுதான் சாந்த குண விர்த்தி என்றும், வைஷ்ணவம் என்றும் அறிக. இனி சைவ சமயமாவது, மகா சாந்தமாய் துரிய பரமாய், பரிபூரணானந்த பரஞ்சோதியாய், அபேத மாய், மதரகிதமா யிருப்பதுதான், சைவ சமயம் என்றறிக. இதைத்தவிர, அனேக மதாசாரங்களிருந்தாலும் இதே தெய்வம் எல்லோருக்கும், வேறில்லை; இதுகள் இரண்டி லொரு மதத்தை நம்பி யிருந்தாலும், இதர மதத்தை தூஷித்தால், தன் தெய்வத்தை தூஷித்ததாய்விடும். அதனால் நரகமே பலனும், சந்தேகமில்லை. அதுவுமல்லாமல் பகவான் சர்வக்ஞராயும், சர்வாந்திரியாமியாயும், சர்வ சாக்ஷி யாயுமிருப்பதாதலால், ஒரு பிராணியை கொல்லாமலும், தூஷியாமலுமிருப்பதுதான் ஜீவகாருண்ணியம் என்றும், சாத்வீக விருத்தி என்றும், மோக்ஷ மார்க்கத்திற்கு முதல் பூமி என்றும், மகத்துக்கள் சம்மதம். ஆதலால் இவை இரண்டில் ஏதாகிலும் ஒரு மதத்தை விசுவாசமாக நம்புவா னானால் சற்குருவின் தெரிசனமாகும். சற்குருவினிடத்தில் அன்புற்று கண்டுபற்றி விசுவாசமாக சேவிப்பதாம் மதாசார கிரமம்.

இப்படிக்கொத்த மதாசார கிரமங்களை கைவிடக் கூடாது; கைவிடுமானால் அதோகெதி யடைவார்கள். அதா னது ஸ்ரீசற்குரு பக்தியில்லாமல் மதாசாரியர்களை நம்பி ஆசா பாசத்தினால் கட்டுப்பட்டு சம்சார சாகரத்தினடுவில் ஆழ்ந்து கிடப்பவர்கள் அஞ்ஞானத்தினால் மதகெர்வமடைந்து, ஈசுரனையும் சாதுக்களையும் குற்றம் குறைவு பேசி திரிபவர் களுக்கு முடிவில் ரௌரவாதி நரகமாம் வீடு என்றும் வேத சாஸ்திர புராண இதிகாசங்களில் கூறியிருக்கிறது சத்திய

மாதலால், அபேதமாயுள்ள மகத்துக்களையடுத்து அவித்யா மானமாயுள்ள அசுத்த மாயையும், அஞ்ஞானத்திற்கேது வான கோர மூட விருத்திகளை அடியோடே தூரத்தள்ளி விட்டு, நல்ல சாந்தகுணமடைந்தால் பேரின்பமான பெரிய வீடடைந்து, பிர்மானந்தமாயிருக்கலாம். சந்தேகம் வேண்டாம். முன்கூறிய வைஷ்ணவம் சைவம் இதுகளில் விஷ்ணுவின் சுரூபமாவது விஸ்வரூபமாயும், விஸ்வாத்மா வாயும், விஸ்வசாக்ஷியாயும், விஸ்வம் பரனுயும், விஸ்வகாரண மாயும், சாசுவதமாயும், அவியக்தமாயும், சண்மோகவாரிதி யாயும், சர்வ விபாபகமாயும், சாந்தகுணமாயும், மதரகிதமா யும், சப்தாமாத்திரமாயும், சர்வபரிபூரண சச்சிதானந்த சுரூப மாயும், நித்தியநிஷ்கள நிர்மல சுயம்பிரகாசமாயும், விளங்கு வதுதான் ஸ்ரீ மகாவிஷ்ணு நாராயணமூர்த்தியின் சுரூப மென்றறிக.

இனி சிவரூபமாவது விஸ்வநாதனுயும் விஸ்வரூபமாயும் பசுபதியாயும், நிர்மோகவாரிதியாயும், சாந்தமாயும், மாயா குண ரகிதமாயும், நித்திய நிஷ்கள பரம ஜோதியாயும், அபேதமாயும், மதரகிதமாயும், சர்வாந்திரியாமியாயும், சர்வ பரிபூரணமாயும், துரியமாய் அதீதமாயும், நிர்மல ஆகாசம் போல் மும்மலங்களுமற்று நிர்மலமாய் ஏகமாய் நிர்விகற்ப மாய் விளங்குவதுதான் சிவபெருமானென்றும் அறிக. இவைகளில் வைஷ்ணவ மதாசாரமாவது :— துற்சங்கப் பழக்கமும் துர்க்குணங்களையும் விட்டு நல்ல சற்சங்க பழக்க மும் சாப்தீக விருத்தியும், கெங்கா ஸ்நானம் செய்வதும், பகவத்கீதை பாராயணம் செய்யவும், காயத்திரியை படிக்க வும், துளசிமணியை தரிக்கவும், கோபியை திரிபுண்டரமாக தரிக்கவும், சந்தணம், துளசி பத்திரம், சாளக்கிராம பூஜை, ஏகாதசி விரதம், நாம ஜெபம் அஷ்டாக்ஷர முதலான

பகவன்நாம ஜெபங்களை செய்யவும், ஆசாரிய சேவை செய்ய வும், இத்தகைய சாப்தீகமான சற்கருமங்களைச் செய்வது தான் வைஷ்ணவ மதாசார மென்றறிக.

இனி சைவ மதாசாரமாவது முன்கூறினபடி துற் சங்கமும் துற்குணங்களையும் விட்டு நல்ல சற்சங்க பழக்க மும், சாப்தீக விருத்தியும், சிவநாம ருத்திராக்ஷமும், ஜெப மணி வலங்கையிலும், கெங்கா கீதா கெங்காஸ்நானம் செய்ய வும், ருத்திர கீதை படிப்பதும், காயத்திரியை ஜெபிப்பதும், வில்வ பத்திரம் விபூதி திரிபுண்டரமாகத் தரிப்பதும், சந்த ணம் சாளக்கிராம பூஜை பிரதோஷம் சிவராத்திரி முதலான விரதங்களை அனுஷ்டிக்கவும், பஞ்சாக்ஷரம் அஷ்டாக்ஷர முதலான நாம ஜெபங்களைச் செய்யவும், இத்தகைய சாப்தீக குணமான சற்கருமங்களை செய்வதுதான் சைவ மதாசார மென்றறிக. இந்தப்படி செய்து பழகி வருமானல் இராசச அகங்காரமும், தாமச அகங்காரமும் அடியோடே நசித்து நல்ல சாப்தீக மேலிடும். சாப்தீக மேலிட்டால் நல்ல சற் குருவை கிடைக்கும். சற்குருவை கிடைத்தால் சர்வ தர்ம மும் விட்டு ஸ்ரீ சற்குருவையடுத்தருள்பெற்றபின் சாப்தீக அகங்காரமும் அடியோடே நசிக்கும். சாப்தீக அகங்காரம் நாசமானல் மும்மலங்களுமறும். மும்மலங்களுமற்ருல் அருள்பெற்ற மலானந்தமாய் ஜீவன் முத்தியடையலாம், சந்தேகமில்லை.

மனம்:— ஓ சுவாமி! இப்படிக்கொத்த ஜீவன் முத்தி யானது எல்லோருக்கும் பொது. அங்ஙனம் நிர்க்குண மாயும் கேவலமாயும் அவியக்தமாயுமுள்ள பரமாத்மாவி லிருந்தும் சுவியக்தமாயும் சற்குணமாயுமுள்ள மாயாசத்தி யானது எப்படி யுண்டானதென்று கேட்க அறிவு கூறியது:-

ஓ மனமே கேள்! நிற்குணமாயும் பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவிலிருந்தும் சற்குணமானது எப்படி வந்ததென்றும் குரு சுருதியுக்தி அனுபோகத்தினால் யோசிக்குங்கால் மனசங்கல்ப விகல்பமல்லாமல் ஆத்மாவைத்தவிர மாயையானது அணுமாத்திரமானாலும் வேறேயில்லை என்பது நிச்சயமாம். இந்த மாயமறிவது மகாபிரயாசமானாலும் ஸ்ரீ சற்குருவின் திருவருளால் அறியக்கூடியதுமாம். அதானது குருவருள் பிராதகாலத்து ஞானசூரியன் உதயமானால் அஞ்ஞானத்தால் தோற்றுவதான மாயாந்தகாரம் அடியோடே நசித்து தத்சுரூபம் விளங்குமென்பது நிச்சயம். சத்தியமே நித்தியம் நித்தியமே சத்தியம். இதை உண்மையாக நம்புமானால் மனம் பரிசுத்தமாகும். இதைத்தவிர அசுத்தமாயையின் லெக்ஷணமாவது சத்தியம் அசத்தியமாயும், அசத்தியம் சத்தியமாயும், தோற்றிவைப்பதுதான் அசுத்தமாயையின் சுபாவீகம். அசுத்தமாயை நாசமானால் சுத்தமாயை பிரகாசிக்குமென்பதற்கு சந்தேகம் வேண்டாம். சுத்தமாயை கைவசமானால் அதிலிருந்தும் பரமாத்மாவை பார்க்கலாமென்பதற்கு சந்தேகமில்லை. எவர் இந்தப்படி சற்குருவினிடத்தில் சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் பரமாத்மாவை உபாசிப்பார்களோ அவர்களும் அப்படியே பரமாத்ம சுரூபமாகுமென்பதற்கு சந்தேகமில்லை, இது சத்தியம்.

ஓ மனமே கேள்! சரீரமானது அநித்தியம். அதானது ஜடதுக்கம். சர்வபூதங்களுக்கும் அந்திரியாமியாகிய பரமாத்மாவானது நித்திய சுகமானாலும், சாந்த கோரமூடவிர்த்திகளாய் சம்சாரசாகரத்தினடுவிலாழ்ந்து கிடந்தலையும் துக்கிகளான ஜனங்கள் பரமாத்மா பரமாத்மா வென்றும் அடிக்கடி வாயினால் பேசிக்கொண்டு திரிந்தாலும், பரமாத்

மானுபவம் வாராதென்பது நிச்சயம். அந்தக்கரணம் பரிசுத்தமாகி ஸ்ரீ சற்குருவின் திருவருள்பெற்ற மகான்கள் பரமாத்மாவென்றொருதரம் நினைந்தால் போதும். பிர்மானந்தமாயிருக்கும் சந்தேகம் வேண்டாம். ஜெனகராஜன் மாபலி சக்கரவர்த்தி முதலான பேர்கள் இல்லற ஞானிகளாயிருந்தும் நித்திய கைவல்லியபத மடைந்தார்களென்றும் சில சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. இவர்களில் பூலோக சக்கரவத்தியான ஜனகர் பற்றற்றிருந்தும் ராஜ்ஜியபாரம் செய்தவாறு நானெனதென்கிற அகந்தையும் அகமமதையும் தூரத்தள்ளிவிட்டு நானிந்த பூமிக்கு பதியல்ல, பூமிக்கு பதியானவர் சாக்ஷாத் பரமாத்மா ஒருவரேயாம். பரமாத்மாவானது சர்வபூதங்களாயும், சர்வபூதாந்திரியாமியாயும், சர்வ சாக்ஷியாயும், சச்சிதானந்த சுரூபமாயும் விளங்குகின்ற கடவுள் ஒருவரே சர்வ ஜெகத்பதி, நானல்ல நானல்ல என்பது சத்தியம். ஆதலால் நான் இதற்கு கர்த்தாவல்லவென்று பாவித்து சற்குருபக்தி விஸ்வாசத்துடன் இல்லறத்திருந்தும் ராஜ்ஜியபாரம் செய்தும், தாமரையிலையில் தண்ணீர்போல் பற்றியும் பற்றற்று ஜீவன் முத்தராயிருந்தும் விவேகானந்த நித்திய கைவல்லியபதம் அடைந்தார்களென்பது உண்மை. இனி மாபலி சக்கரவர்த்தியானவர் மூவுலகத்துக்கும் சக்கரவர்த்தியாயும், இல்லறஞானியாய் சம்சாரத்திலிருந்தும், மோக்ஷமடைந்தார்களென்பது பின் வருமாறு காண்க.

அங்ஙன மெப்படியெனில் மூவுலகத்திற்கும் கர்த்தா நானென்கிறபாவனையோடு கூடியும் ராஜ்ஜியாதிகாரம் செலுத்திவரவே விஷ்ணுபகவான் கிருபாநிதியாய் வாமனவேஷமாய் மூன்றடி பூமியை கேட்டதற்கு மூன்றுலோகத்தையும் இரண்டடியாக கைக்கொண்டு மூன்றடி கொடுக்கலாமென்று

சொன்னதில் ஓரடி குறைவாய் இருந்ததினால் நாகபாசத்தால் கட்டப்பட்டும் நானெனதென்கிற அகந்தையும் அகமமதையும் போக்கடித்து பரிசுத்தமாக்கி மோக்ஷம் கொடுத்தாரென்பது நிஜம். அதுபோல், யாரானாலும் இல்லறத்தில் சம்சாரத்தோடொத்திருந்தும் தாமரை இலைமேல் ஜலம் போல் பற்றற்று அகங்காரமும் அபிமானமுமில்லாமல் ஸ்ரீ சற்குருபக்தனாய் அன்புற்று சேவித்து பழகி வருவதானால் அருள்பெற்று அமலானந்தமாய் நித்திய கைவல்ய பதம் அடையலாமென்பது தாற்பரியம். இதைத்தவிர சன்னியாசியானாலும் ஸ்ரீ சற்குருபக்தி இல்லாமலும் அருள் பெறாமலும் அநேக ஞானநூல்களை வாசித்து முகபாடம் செய்து பிரசங்கம் செய்தாலும் மலட்டு பசுவுக்கு தீனி போட்டால் பால் அகப்படாதென்பதுபோல் ஆத்ம சுகம் வராதென்பது நிச்சயம்.

மனம்:— அகங்காரத்தை போக்கும் மார்க்க மெதுவென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! அகங்காரத்தை போக்கடிக்கும் உபாயம் சுலபமாய் ஓர் மார்க்கமுண்டு. எப்படி எனில் ஓர் ஞானதேசிகரை யடுத்து உபதேசமாக பக்தி விஸ்வாசத்துடன் பஞ்சாக்ஷர தியானம் செய்து பழகி வருவதானால் அகங்காரம் அடியோடே நசிக்கும். அதானது மூலப்பிரகிருதிமுதல் பூமிவரையுள்ள சராசரபிரபஞ்ச வஸ்துக்களும் பஞ்சாக்ஷரத்திலடங்கி இருக்கிறது. ஆதலால் அகங்காரத்தை பஞ்சாக்ஷரத்திலடக்கி பஞ்சாக்ஷர தியானம் செய்தால் பஞ்சாக்ஷரத்தை தவிர அகங்காரமானது அணுவளவுமில்லை என்பது சத்தியம். அப்படிக்கொத்த பஞ்சாக்ஷரத்தின் மகிமையை ஆயிரம் நாவுடைய ஆதிசேஷனாலும் வாகீஸ்வரியாலும் புகழ அசாத்தியம். ஆனாலும் அடியேன்

அறிந்ததை அறைகுவேன் கேள். பஞ்சாக்ஷரமே விஸ்வ ரூபம். பஞ்சாக்ஷரமே விஸ்வகாரணம். பஞ்சாக்ஷரமே விஸ்வாத்மா. பஞ்சாக்ஷரமே விஸ்வ வியாபிகம். பஞ்சாக்ஷரமே விஸ்வ சாக்ஷி. பஞ்சாக்ஷரமே பரபிர்ம்ம சுரூபம். ஆதலால் பஞ்சாக்ஷரத்தைத்தவிர நான் என்கிறதும் பொய். நானென்கிறது பொய்யானல் நீ என்பதும் பொய். நானும் நீயும் இல்லாவிட்டால் எனதென்பது அணுவளவுமில்லை என்பது சத்தியம். ஓ மனமே! அஞ்செழுத்துக்குள்ளே நின்னை நீ பார்க்குமானல் அஞ்செழுத்தும் உனக்குள்ளே விளங்கும். அஞ்செழுத்தும் உனக்குள்ளே விளங்குமானல் உன் உள்ளம் சுயம் பிரகாசமாய் விளங்கும். உள்ளம் சுயம் பிரகாசமாய் அன்புற்று பார்ப்போமானல் உனக்குள்ளே அகிலாண்டமும் பார்க்கலாம். அகிலாண்டத்துக்குள்ளே நின்னையும் பார்க்கலாம். இந்தப்படி சமரசமாய் பார்க்குமளவில் நானென்கிற அகங்காரமேது. ஆனலும் உலகத்தின்கண் அஞ்ஞானத்தினல் தோற்றும் அகங்காரமானது அவித்தியாமானமாயுள்ள அசுத்த மாயையின் சுபாவீகம். அதானது மித்தையாமென்றறிக.

ஓ மனமே கேள்! பஞ்சாக்ஷரமே பிரணவ சுரூபம். பஞ்சாக்ஷரமே மாயை. பஞ்சாக்ஷரமே ஜீவன். பஞ்சாக்ஷரமே மூன்று குணம் பஞ்சாக்ஷரமே பஞ்ச பூதம். பஞ்சாக்ஷரமே உலகம். பஞ்சாக்ஷரமே சரீரம். பஞ்சாக்ஷரமே பஞ்சமூர்த்தி. பஞ்சாக்ஷரமே சர்வ சராசரமும். இந்தப்படி ஏகமாயுள்ள சிவத்துக்குள் ஜெகஜீவபரம் அடங்கி யிருக்கிறது. ஜெகஜீவபரத்துக்குள் ஏகமாயுள்ள பரமசிவன் பரிபூரணமாய் விளங்கியிருக்கிறது. ஆதலால் பஞ்சாக்ஷரத்தை பெற்றது பரிபூரணமாயுள்ளது பிரணவம் பரிபூரணமாயுள்ள பிரணவத்தை யறிவது பஞ்சாக்ஷரம்.

ஆதலால் மனம் பஞ்சாக்ஷரத்தில் கலந்து பரிசுத்தமாய் தெளிவடைந்தால் ஏகமாய் பிரணவ சுரூபமாய் விளங்கி யிருக்கும். பிரணவ சுரூபமானது குருபிரணவ யுக்தமாய் அதை அருளாலறிவது அகரம். அகரத்துக்கு மூலம் பிரணவம். அகரம் பெற்றதாம் அஞ்செழுத்து. அஞ்செழுத் தானது பஞ்சமூர்த்தியுமாம். பஞ்சமூர்த்தியானது பிர்மா விஷ்ணு ருத்திரன் மகேஸ்வரன் சதாசிவம். இதுகளில் ஜீவர்களை பெற்றது பிர்மா, வளர்ப்பது விஷ்ணு, காமத்தை சங்கரிப்பது ருத்திரன், திரோபவமாய் மறைந்திருந்தது மகேஸ்வரன், அருளால் தெளிந்திருந்தது சதாசிவம். இப்படிக்கொத்த பஞ்சமூர்த்தியை ஏகமாயுள்ள பிரணவ சுரூபத்தோடு ஐக்கியமாய்ப் பார்ப்பதுதான் மோக்ஷம்.

ஓ மனமே கேள்! ஜீவாத்மாவினை பிரணவ சுரூபமான பரமாத்மாவில் ஐக்கியமாகும்பொருட்டு, முன் கூறினபடி ஜெக ஜீவ பர மூன்றும் பிரணவத்துக்குள்ளே அடக்கி பார்க்குமளவில் ஆக்மா ஏகமாயும், அகண்டபரிபூரண சச்சி தானந்த சுரூபமாயும், சுயம்பிரகாசமாயும் விளங்குவதுதான் ஐக்கிய மென்றறிக. ஓ மனமே இன்னுங்கேள்! ஐக்கிய மாகும் பொருட்டு உபாயம்—இருதய கமலத்தின்கண் அதோமுகமாயும் அனுத்ம வஸ்துக்களில் பிரியமாயுமிருந்த ஜீவனை திருப்பி அந்தக்கரணம் பரிசுத்தமாக்கி ஊர்த்தமுக மாய் ஆத்மாவில் பிரியமாய் வாக்கு மனக்காயங்களை அடக்கி மும்மலங்களைப் போக்கி அன்பாய் அருள்பெற்று ஆத்மா னந்தமாய் சர்வ பூதங்களிலும் ஆத்மாவினையும் ஆத்மாவி னிடத்தில் சர்வ பூதங்களையும் சமரசமாய்ப் பார்த்து பரமா னந்த குருபக்தனாய், சுருதியுக்தி அனுபோகத்தினால் தனுகர ணாதிகளையும் மறந்து ஒன்றும் அறியாத சுழுத்தி அவஸ்தை யைப்போல் துரிய பரிபூரண பரமானந்த பரஞ்சோதியாய்

24

விளங்குவதாம் ஜீவபர ஐக்கியம். ஜீவபரையோரைக்கியமா மோக்ஷம். இந்தப்படி ஐக்கியமாய் மோக்ஷம் அடைவதல்லாமல் தானம் ஓமம் ஜெபம் தபம் விரதம் நியமசாங்கிய யோகாதிகளினாலும் அனேக வேதாந்த சாஸ்திர பாடங்களினாலும் மோக்ஷமடைவது அசாத்தியம். மாயாகுண பேதத்தினால் அனேகவிதமான நாமரூபகுணதோஷ பேதா பேதங்கள் அனேகனேகமாயிருந்தாலும் சர்வ வியாபகமாயும் சர்வாத்மாவாயும் சர்வக்கினராயும் சர்வ சாக்ஷியாயும் ஆகாசம்போல் சர்வ பரிபூரணமாயும் விளங்கும் பரமாத்மாவானது ஏகமாம. அதை ஸ்ரீ சற்குருவின் திருவருளால் அறிவதுதான் பரக்கியான மென்றறிக. உதாரணம் மண்ணனது ஏகம். அதனால் அனேகவித பேதமான ஏனபாருதிகளைப் போலவும், ஏகமாயிருந்த தங்கம் பலவிதமான கடக கங்கணாதி ஆபரணங்களைப் போலவும், பசுவின் பாலானது ஏகநிறம்—பசுவானது பலவிதமாயிருந்தது போலவும், ஆத்மாவானது ஏகம். சரீராதி பிரபஞ்ச வஸ்துக்களானது பின்னம் அதுகள் அனேகவித நாமரூபங்களாய் தோற்றுவது அவித்தையின் சுபாவீகமென்று அறிக.

ஓ மனமே கேள்! இந்தப்படி ஐக்கிய ஞானமடைந்து மோக்ஷமாகும் பொருட்டு முக்கிய சாதனம் ஸ்ரீ சற்குருவினிடத்தில் அசஞ்சலமாயும், அனந்நியமாயும், அன்பாயுமுள்ள ஏகாந்தபக்தி விஸ்வாசம் ஒன்றேயாம்; ஏகாந்த பக்தியானது ஜெக ஜீவ பர சிவம் நான்கும் ஏகமாய்க் கண்டு உபாசிப்பதாம் ஏகாந்தபக்தி என்றறிக.

மனம்:— ஓ சுவாமி! ஏகமாயுள்ள பரமாத்மாவிலிருந்தும் ஜெகஜீவபரம் வேறாய் தோற்றுவது சுபாவீகம். ஆனாலும் இதுகள் மூன்றும் சிவதுரியத்தோடு ஐக்கியமா

யிறண்டறக்கலந்து ஏகமாகும் மார்க்கம் அருளவேணு மென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! மாயாகுண சகிதமானது ஜீவன். மாயாகுண ரகிதமானது சிவம். இதுகளில் மாயாகுண சகிதமானது சர்வ சராசர சுரூபமாம். இதுகளுக்கெல்லாம் அந்தரியாமியாயிருந்தது ஜீவன். ஆதலால் ஜெகமோகினி களான மாயாகுணம் மூன்றையும் அருளால் அடக்கினல், ஜீவாத்மாவானது மாயாகுண ரகிதமான பரத்தோடு சேர்ந்து இறண்டறக் கலந்து பரமானந்தமாய் சிவதுரியத் தோடு ஐக்கியமாய் துரியாதீதமாய் பரிபூரணமாயிருக்கும் பரமாத்மா. சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! முன்கூறினபடி ஜெக சீவ பரசிவம் நான்காக தோற்றுவதற்கு காரணம் அஞ்ஞானம்; அஞ் ஞானம் நீக்கி ஜெக சீவ பரசிவம் நான்கும் ஏகமாய் பார்ப்பதை எதார்த்த ஞானமென்றறிக. மனசின் மாயா குண சகித்வம் விட்டால், ஜீவனும் பரயானசிற்சத்தியும் பரமாத்மாவான சிவதுரியமும் ஏகமாய் விளங்கியிருக்கும், சந்தேகம் வேண்டாம். ஜீவனுக்கு மாயாகுண சம்பந்தம் உண்டாக்கியது மனம் ஒன்றேயாம், வேறில்லை. ஜீவனுக்கு மாயாகுண சம்பந்தம் ஒருகாலத்திலும் இல்லை. சத்திய மாய் விசாரிக்கும்போது ஜீவனுக்கு மாயாகுண சம்பந்த மானது திரிகாலத்திலும் இல்லை என்பது நிச்சயமாய் அறிவது அருள் சத்தியாதலால், மனோலயமடைந்து, அருள் பெறும் வரையில், ஜீவபாவனை யிருக்கும். மனம் சாந்த மானல் அருள் பெற்று சாசுவதமான பரமானந்தபத மடைய லாம், சந்தேகம் வேண்டாம்.

மனம்:—ஓ சுவாமி! ஞான சாஸ்திரங்களில் வேதாந்த மென்றும், சித்தாந்தமென்றும், இரண்டு வகுப்பாக கூறி

பிருக்கிறது; இதுகளில் எது சிலாக்கியமென்று கேட்க, அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! வேதாந்தமென்றும் சித்தாந்தமென்றும் கூறப்பட்டது. இதுகள் இரண்டுக்கும் அந்தமான பரமாத்மா ஒன்றுதான்; ஆதலால் சமரச ஞானிகள் ஆத்மாவை ஏகமாய் அறிவார்கள்; வேதாந்தமென்பதற்குத் தாற்பரியம்:—வேதமானது நான்கு; நான்கு வேதத்திற்கும் அந்தமானது எதுவோ அதுவே வேதாந்தமெனப்படும். வேதமானது சப்த பிர்மம்; சப்த பிர்மத்துக்கு அதீதமானது நாதம்; ஆகலால், நாதபிர்மமே வேதாந்தமென்றும் அது பரமாத்ம வஸ்துவாமென்றும் அறிவார்கள். இனி சித்தாந்தமென்பதின் தாற்பரியமாவது:—சித்தானது முக்குணத்தோடு கூடிய அந்தக்கரண அறிவு; அந்த சித்தறிவானது சரீரபாவனையாதலால், அந்த சித்தறிவுக்கு அந்தமான வஸ்து எதுவோ அது பரமாத்மா; அதுதான் சித்தாந்த மென்றறிக.

ஓ மனமே கேள்! இப்படிக்கொத்த வேதாந்தமோ சித்தாந்தமோ சிலாக்கியமென்று நீ கேட்ட கேள்விக்கு உண்மை சொல்லுகிறேன் கேள். வேதாந்த மென்பதின் பொருள் இந்திரியங்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், குணம் மூன்றும், அடக்கி, மும்மலங்களும் போக்கி, ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்றபின் வேதாந்தமாமென்றும்; சித்தாந்தமானதின் பொருள் முன் கூறினபடியுள்ள இந்திரியங்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், குணமூன்றும் அடக்கும் பொருட்டு சன்மார்க்கமாய் சர்வமும் கடவுளின் சுரூபமாய்ப் பார்த்து, உபாசித்தால் சித்தடங்கி சிவானந்தமாய் விளங்கும், அதுதான் சித்தாந்தமென்றும் அறிக. மாயை முதல் பூமிவரையிலுள்ள சர்வ வஸ்துக்களும் கானல்

ஜலம்போல் பொய்யாமென்று வேதாந்தமும், பூமிமுதல் நாதம்வரையிலுள்ள சர்வ வஸ்துக்களும் மண்ணும் குடமும் போலேயும், நூலும் படவும் போலும் கடவுளின் சுரூபமா மென்று சித்தாந்தமும் கூறினது சரி. இந்தப்படி வேதாந்த சித்தாந்தங்களிரண்டும், இதினுடைய தாற்பரியம் பிடிவாதம் கூடாமல் ஸ்ரீ சற்குருவின் திருவருளால் அறியுமானல் ஏக மாயும் சமரசமாயும் சச்சிதாநந்த சுரூபமாயும் விளங்கு மென்பதற்குச் சந்தேகம் வேண்டாம். இன்னும் முக் கரணங்களும் பொய்யாமென்னும் வேதாந்த மதம். முக் கரணங்களும் அடங்கும் உபாயம் கூறியது சித்தாந்த மதம். வேதாந்திகளுக்கும் சித்தாந்திகளுக்கும் சராசர பிரபஞ்ச வஸ்துக்களுக்கும் ஆத்மாவானதும் ஆசைக்கு அந்தமானதும் பரமாத்மா ஒன்றுதான். அதானது வேதாந்தமுமல்ல சித்தாந்தமுமல்ல; அந்தமும் அல்ல, ஆதியும் அல்ல; ஆதிமத்தியாந்த மற்றதாயும், பரிபூர ஞனந்த பரஞ்ஜோதியாய் விளங்குவதாம் பரமாத்மவஸ்து வென்றறிக.

ஓ மனமே கேள்! பூர்வ கர்ம புண்ணியத்தினுல் வந்ததாம் இந்த மானிட சரீரம். சரீரம் எடுத்ததின் பலனுவது மோக்ஷம், பெந்துவானது குரு, லாபமானது சந்தோஷம், சத்துருவானது ராகத்துவேஷாதி சம்சாரக் கூட்டம். இதின் பலனுவது நரகம், அகங்காரமாம். அஞ் ஞானத்தினுல் தோற்றுவதாம் நரகசொற்காதிகள்.

ஓ மனமே கேள்! ஆத்மாவின் அம்சமான மாயா குணங்களால் தோற்றுவதாம் பஞ்ச பூதம். பஞ்ச பூதமாம் மூவுலகம் ஆதலால் பஞ்ச பூதத்தைத்தவிர நான் என்கிற ஒரு வஸ்துவுமில்லே, இல்லே என்பது நிச்சயம்; இதை சத்தியமாய் நம்பினுல் அகங்காரமான அஞ்ஞானம்

அடியோடே நசிக்கும்; அகங்காரமான அஞ்ஞானம் நாசமானால் நாம் பிறந்ததுமில்லை. பிறவாமல் போனால் இறப்பதுமில்லை. ஆதலால் அகங்காரத்தை பஞ்சபூதத்திலடக்கி பஞ்ச பூதத்தை மாயாகுணத்திலடக்கி மாயா குணமானதை பராசக்தியிலடக்கி பராசக்தியை பரமாத்மாவிலடக்கி சமரசமாய்ப் பார்க்கும்போது ஜீவன் நிராதாரியாய் பரமாத்மாவோடு சேரும் அப்போது பரமாத்மாவைத் தவிர அணுவளவும் வேறே யில்லை என்பது சத்தியம். அது அப்படியிருக்க பொய்யாயுள்ள நான் என்கிற அகங்காரம் ஒன்றுதான் பாபத்துக்குக் காரணம். தன்னைத்தான் அறியாமலிருந்தது அஞ்ஞானம்; ஆசைதான் எமபாசம், புண்ணிய பாபத்தினால் நரக சொர்க்கம், அன்பர்களை அன்புற்று கண்டதுதான் கைலாச வைகுண்ட மென்றறிக. அனாசையாய் அருள் பெற்று ஆத்ம சுகத்தை அடைவதே மோக்ஷம்.

ஓ மனமே கேள்! ஆத்மசுகத்தை அடையும்பொருட்டு சற்குருவினிடத்தில் அனன்னியமாயும் நிற்சலமாயும் ஏகாந்தமாயுமுள்ள பக்தி ஒன்றுதான் ஞான விக்ஞான மோக்ஷத்திற்கும் முக்கிய காரணமென்றும் இதைத்தவிர எக்கியம் தானம் தபசு முதலான கர்மங்களினாலும் அநேக ஞான நூல்களைப் பார்த்தாலும் ஞான விக்ஞான மோக்ஷம் வராதென்றும் எல்லா சாஸ்திரங்களின் தாற்பரியம்.

மனம்:— ஓ சுவாமி! முன்கூறினபடியுள்ள குருபக்தி அடையும்பொருட்டு முக்கிய சாதனம் ஏதென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! சற்குரு பக்திக்கு முக்கிய சாதனம் நவவிதம். அதில் முதலாவது, துற்சங்கம் விட்டு சற்சங்கம்

செய்யவும், இரண்டாவது நல்ல சற்கதைகளைக் கேழ்க்கவும், மூன்றுவது ராசசமாயும் தாமசமாயும் உள்ள குண காமங்களை தூரத்தள்ளி சாத்வீக குணமான சற்கருமங்களை நிஷ்காமமாக ஆதரிக்கவும்; நான்காவது குருபகவானுடைய மகிமையை சிந்திக்கவும், ஐந்தாவது ஸ்ரீ சற்குருவின் திருவடியை இடைவிடாது தியானிக்கவும், ஆறுவது இயமநியமாதி சாதனங்களைக் கொண்டு சற்குருவின் திருவடியில் ஆராதிக்கவும், ஏழாவது ஸ்ரீ சற்குருவின் திருவருள் மந்திரத்தை உபாசிக்கவும், எட்டாவது ஸ்ரீ சற்குருவை ஒரு மனிதனுக என்னுமல் பரமாத்மா என்றும், அதுவே சர்வாத்மா என்னும் பரமவிஸ்வாசமும், ஒன்பதாவது, இப்படி எல்லாம் அப்பியாசமாய் தன்னுடைய ஆத்மதத்துவத்தை விசாரணை செய்யவும். இந்தப்படி அப்பியாசம் செய்து பழகி வருவதானுல் சித்தசுத்தி வரும். சித்தசுத்தி வந்தால் சற்குரு தெரிசனமாகும். இப்படிப்பட்ட ஸ்ரீ சற்குரு பக்திக்கு அதிகாரிகள் யார் என்றுல், கரி, மிருக, பசு, பக்ஷிகளானுலும் மூடர்களாயுள்ள ஸ்த்ரீ சூத்திராதிகளானுலும் மகாத்மாக்களின் திருவடி சேவை செய்யும் பொருட்டு எல்லோருக்கும் அதிகாரமுண்டு. இதற்கு பக்தி ஒன்றே முக்கியம். இந்தப்படி பக்தி செய்து பழகி வருவதானுல் பக்தி முற்றும். அது முற்றும்போது ஏகாந்தமாய் தன் இருதயம் தெளிவடையும். இருதயத்தின்கண் தெளிவானுல் நிர்ச்சலமாய் சர்வாத்மாவானது பரமாத்மனென்கிற விஸ்வாசம் திடப்படும். இப்படியே பரமாத்மாவே சர்வாத்மா என்றும் சர்வாத்மாவே பரமாத்மா என்றும் சமரசமாய் திடநிச்சயமாகும். திடநிச்சயமானுல் தன் ஆத்ம தத்துவம் தானே விளங்கும். தன் ஆத்ம தத்துவத்தை அறிந்தவர்கள் நீசர் குலத்தில் பிறந்தவர்களானுலும் அவர்கள் பரபிர்மமாம் என்பதற்கு சந்தேகமில்லை. மனம்

பலவிதம் ஓடுவது சுபாவீகம். ஆனாலும் பல குருவை நம்பு வதும் பலவிதம் அலைவதும் விபசாரமாம். ஆதலால் மனம் ஒரு சற்குருவை நம்பி சுத்தமாய் உபாசித்தால் உள்ளம் துறவடையும்; உள்ளம் துறவடைந்தால் இருவாசனையும் நசிக்கும். இருவாசனையும் அற்றால் திவ்யமங்கள சுயம் பிரகாசமாய் பிர்மானந்த சுரூபம் விளங்கும். ஆதலால் மனதை ஆதுமட்டும் பரிசுத்தமாக்கி பிர்மானந்த சுரூபத்தை தியானம் செய்தால் மனம் பரிசுத்தமாய் பிர்மானந்த சுரூபம் அடையும்; மனம் எந்த ரூபத்தை தியானிக்கிறதோ அந்த ரூபம் அடையும் சந்தேகம் வேண்டாம். ஆதலால் கற்பக விருக்ஷம்போல் கடவுள் ஒருவரே சர்வமும் சர்வத்துக்கும் அந்தரியாமியாய் இருந்தும் அவாளவாள் கோரினபடி கேட்ட வரம் கொடுப்பார். அந்தக்கரண மிருந்தமட்டும் சரீராதி வஸ்துக்கள் சத்தியமாய்த் தோற்றுவது சுபாவீகம். அந்தக்கரணம் பரிசுத்தமானல் ஒன்றுமே கிடையாது. மாயா பிரகிருதியின் குண விருத்தியால் உண்மையாகத் தோற்றுவதாம். உலகம் பலவிதமாதலால், அதைப்பார்த்து ஒருவரும் பழிக்கலாகாது. அப்படியே பழிப்பதானல் அவர்கள் நரகத்துக்காளாவார்கள்.

மனம்:— ஓ சுவாமி! இப்படி ஏகமாயிருந்த பரமாத் மாவிலிருந்தும் உலகம் பலவிதமாய் வந்த காரணம் என்ன வென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! மாயாமயமான உலகவாசனை யானது அநேக அநேக விதமாய் அளவிறந்த கோடியாய் அனாதியாயுள்ளதால் அது ஒருவருக்கும் தெரியாது. ஆனாலும், பூர்வ ஜென்மத்தில் செய்த கர்ம பலன் இச்சென் மத்தின் அனுபோகம்; இச்சென்மத்தில் செய்த கர்மபலன் கள் அடுத்த ஜென்மத்தில் கட்டாயம் வரப்போகுதென்று

அறியலாம். ஆதலால் கடவுள் எல்லோருக்கும் பொதுவாய் ஒருவரே கேட்டவரம் கொடுப்பவராய் சர்வாந்திரியாமியாய் சர்வ சாக்ஷியாயிருப்பவராதலால் கடவுளுக்கு ஓர் பிராணியிடத்திலும் பக்ஷபேதமில்லை என்பது நிச்சயம். இதை முமுக்ஷுக்களுக்கு பெந்தம் விட்டு மோக்ஷம் அடையும் பொருட்டு சொன்னதல்லாமல் வேறில்லை; குருவானவர் யாரென்றால் நிராசையாயிருந்த மகாத்மாவாம். சிஷ்யன் யாரென்றால் நிஷ்காமியாயும் முமுக்ஷுவாயுமுள்ளவன்தான் அதிகாரி.

ஓ மனமே கேள்! அதிக தாகமுடையவர்கள் நல்ல நதிஜலம் சமீபத்தில் கிடைத்தால் அதைவிட்டு சமுத்திர ஜலத்தை தேடிப்போனதுபோல, மோக்ஷமடையும் பொருட்டு அபேக்ஷையுடையவர்கள் குருவாக்கிய பிரமாணங்களை தள்ளிவிட்டு முன் காலங்களில் அன்பர்களான மகத்துக்களையடுத்த சிஷ்யர்களுக்கு அதிகாரத்துக்கு தகுந்தபடி உபதேசிக்கப்பட்ட ஞானநூல்களைப் பார்த்தும் ஞானம் வராமல் அலைவது மகா கஷ்டம். குருவாக்கியமானது ராகத்துவேஷாதிக்கிடமாயுள்ள சம்சாரமான இருளை நீக்கி சுயம்பிரகாசமாகும்பொருட்டு அநுக்கிரகம் செய்வதாம். இது தீப மார்க்கமாகுமென்றும் இதைத் தவிர மற்ற உபாயமெல்லாம் தூம மார்க்கமாகுமென்றறிக.

ஓ மனமே கேள்! அநேக வழியிருந்த ஓரிடத்தில் போகவேண்டிய ஜனங்கள் வந்தால் அவரவர்கள் போகவேண்டிய வழிகாட்டும் கைகாட்டி மரம்போல், அதிகாரத்துக்கு தகுந்தபடி குரு சொன்னபடி நடப்பது மெத்தவும் நன்றுநன்று. அப்படி நிதானமாம் ஆசாரியன் கைகாட்டிய வழிபோனால் மெய்யறிவு விளங்கி பேரின்பமான மோக்ஷவீடு அடைந்து பிர்மானந்தமாய் இருக்கலாமென்பது சத்தியம்.

சந்தேகம் வேண்டாம். பலமுள்ள விருக்ஷத்தை காத்திருந்தவனுக்கு அதின் பலன் கிடைக்குமென்பதற்கு சந்தேகமுண்டா? அதுபோல அநுபூதிமானுயிருந்த ஸ்ரீகுருவை நம்பியடுத்து பாதுகாத்து காவல் காத்தால் ஞானபலன் கிடைக்கும்.

இதைக்கேட்ட மனம்:- ஓ சுவாமி! தேகாதி பிரபஞ்சங்கள் சர்வமும் பொய்யா மென்றெண்ணுவோர்களுக்கு மோக்ஷமென்பதும் பொய்யாகுமே, தேகாதி பிரபஞ்சங்கள் சர்வமும் மெய்யா மென்றெண்ணுவோர்களுக்கும் அப்படியே; ஆதலால் இருதலைக் கொள்ளியாயிருக்கிறது. இதற்கு என்ன செய்வோம் என்று கேட்க அறிவு கூறியது:-

ஓ மனமே கேள் :—இவ்வுலகத்தின்கண் நான், நீ என இருக்க இந்த உலகம் பொய்யாமென்றும் எப்படி சொல்லக் கூடும்.

ஓ மனமே கேள்! உலகம் பொய்யானால் குருவேது? சிஷ்யனேது? நானேது? நீயேது? சுருதி ஸ்மிருதிவேத சாஸ்திர புராண இதிகாசங்களும் உபநிஷத்தாதி மகா வாக்கிய பிரமாணங்களும், தேவாதி தேவர்களும், சாதுக்களும் பொய்யாகுமே? உலகம் மெய்யா மென்றெண்ணுமானல், தேகமே சத்தியம், போகமே நித்தியம், இந்தப் படி நினைந்தவர்களுக்கு மோக்ஷமில்லை. நிச்சயம் நரகமே பலன்; ஆதலால் இதைத்தவிர மெய், பொய் இரண்டும் அற்ற இடத்தில் அருள் பெருகி அபேதமாய் விளங்கும். அதானது அமுர்த பரிபூரண சுகானந்த வாரியாய் ஏகமாய் விளங்கும். இதைத்தவிர முன் கூறினபடி உலகம் பொய்யாமென்றால் ஜீவர்கள் ஏது? ஜீவர்கள் இல்லாவிட்டால் நீயேது? நானேது? நானும் நீயும் ஜீவர்களும் இல்லாவிட்டால் இறப்பு பிறப்பு ஏது? இறப்பு பிறப்பு

இல்லாவிட்டால் பெந்த மோக்ஷம் இரண்டும் பொய்யாம் என்பதற்கு சந்தேகம் உண்டா? உலகத்தை மெய்யாக நம்புவோர்களுக்கு மோக்ஷமும் உண்டு சந்தேகம் வேண்டாம். எப்படி உலகம் மெய்யாகுமென்ருல், கடலில் இருந்தும் தோற்றப்பட்ட அலையும் நுரையும்போல் பரமாத்மாவின் அம்சமான மாயையால் தோற்றுவதாம் உலகம்! ஆதலால் பரமாத்மாவைத்தவிர அணுவளவும் வேறே இல்லை என்றும் சுருதி கீதை முதலான சாஸ்திரக்களிலும் மகத்துக்களும் கூறியது சத்தியமாய் நம்பவேணும்; அப்படியே நம்புமானல் சித்தம் பரிசுத்தமாய் ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெறலாம். திருவருள் பெற்ருல் மெய் பொய் இரண்டும் பரமாத்மாவில் அடங்கியிருக்கும். அப்படி மெய் பொய் யிரண்டும் பரமாத்மாவில் அடக்கமானல் பிர்மானந்தபதமடையலாம். இதற்கு சந்தேகமில்லை என்பது ச்த்தியம். இதைத்தவிர உலகம் பொய் என்று எண்ணுவோர்கள் நரகத்துக்கு ஆளாகவேணும், ஆனலும் இருளில் பழுதையைக் கண்டு பாம்பாக நினைந்து பயந்தது பொய்! பொய்!! பொய்!!! பாம்பல்ல இது பழுதையாமென்று உண்மையாக கண்டறிவதே மெய்! மெய்!! மெய்!!! என்றும் மகத்துக்கள் சம்மதம்.

ஓ மனமே கேள்! உலகம் மெய் பொய் என்று இரண்டு விதமாக தோற்றும். விபரீதபிராந்தி நாசமடையும் பொருட்டு பரமரகசியமான உபாயம் சொல்லுகிறேன்; காய்ந்த கட்டையை நெருப்பில் வைத்தால் அதிலிருந்து கிளம்பிய புகையைப்போல் சத்தியமாய் தோற்றுவதாம் உலகம். சர்வ வியாபகமாயும் பரிபூரணமாயுமுள்ள பரமாத்மாவின் சிற்சத்தியின் பிரகாசத்தினல் தோற்றுவதாம் இந்த உலகம். ஆதலால் அது பரமாத்மாவில் அடங்கும்போது

உலகம் அணுவளவு ஆனாலும் கிடையாது; சரீராதி பிரபஞ்ச வஸ்துக்கள் அனைத்தும் முன்கூறிய விறகு கட்டையும் அக்கினியும் சம்மந்த மில்லாமல் இருந்தமட்டும் அந்த கட்டையானது அக்கினிக்கு வேறாய் தோற்றுவதுபோல் ஆத்மாவினிடத்தில் ஞானம் வராமல் இருந்தமட்டும் அந்த ஆத்மாவைத்தவிர தேகாதி பிரபஞ்ச வஸ்துக்கள் வேறாயும் சத்தியமாயும் தோற்றுவது சுபாவீகம். இதற்கு சந்தேகம் தீரும்பொருட்டு ஸ்ரீ சற்குருவின் திருவருளே சத்திய பிரமாணம் வேறில்லை.

ஓ மனமே கேள்! இந்தப்படி ஸ்ரீ சற்குருவை அன்புற்று சேவித்து உணராமலும் திருவருள் பெருமலும் பிர்மானந்தத்தை அனுபவியாமலும் சம்சார சாகரத்தின் நடுவில் விழுந்தலையும் மனிதர்கள் தேகாதி பிரபஞ்சமெல்லாம் பொய் என்றால் அது நாஸ்தீக மதமாம்; இதைத்தவிர தேகாதி பிரபஞ்ச மெல்லாம் மெய்யாமென்றெண்ணுவோமானல் அது அஞ்ஞான அந்தகாரமாம்; அது பிருகிர்தமான பாமரத்துவமென்றறிக. இந்தப்படி மெய் பொய் இரண்டும் தோற்றுவதற்கு காரணம் மாயை; மாயையானது இரண்டுவிதம்; அதானது சுத்த மாயை என்றும் அசுத்த மாயை என்றும் அறிக. இதுகளில் அசுத்த மாயையானது மனம். மனம் பரிசுத்தமானல் அது சுத்த மாயையாம் என்றறிக. இது இரண்டிற்கும் காரணம் பரிசுத்தமான மூலமாயை ஒன்றுதான்; அதானது ஞான சிற்சத்தியாம் என்றறிக. ஆதலால் நானுவிபகாரங்களெல்லாம் மனோலய பரியந்தமிருக்கும். மனோலயமானல் மூலமாயையும் பரமாத்மாவிலடங்கி இருக்கும். மனோலயமடைந்தால் எல்லாம் பரமானந்த பரிபூரண பரஞ்சோதியாய் விளங்கும் சந்தேகமில்லை.

மனம்:- ஓ சுவாமி! பாலும் நீரும் கூடி இரண்டரக் கலந்ததுபோல என் உள்ளம் ஞானமும் அஞ்ஞானமும் கூடி இரண்டாக கலந்திருப்பது சகஜம். இதுகளில் அஞ்ஞானம் நீக்கி ஞானம் அடைவதை கிர்தார்த்தமென்றும் புருஷார்த்தமென்றும் அறிந்தேன். முதலாவது அஞ்ஞானம் நீக்கி ஞானமடைய வேணுமா? அதல்ல ஞானமடைந்தபின் அஞ்ஞானம் போக்கவேணுமா? வென்று கேட்க அறிவு கூறியது:-

ஓ மனமே கேள்! இராக்காலத்தில் இருள் நீக்கி சுரூப வஸ்துக்களை பார்க்கும்பொருட்டு ஓர் தீபம் வேண்டுவதவசியம். அப்படியே தீபம் கைவசமிருந்தாலும் அது நின்றுபோனால் மறுபடியும் அத்தீப மேற்றும்பொருட்டு வேறு தீபம் வேண்டியதவசியம். தீபமில்லாவிட்டால் நெருப்பிருந்தாலும் போதும். நெருப்புமில்லாவிட்டால் சக்கிக் கல்லோ அல்லது தீ பெட்டியோ இருந்தாலும் போதும். அதுகள் இருக்கிறதானாலும் இருள் காலமானதால் அதை பார்த்து எடுக்கும்பொருட்டு ஓர் தீபம் வேண்டுவதவசியம். ஆகையால் இது இருதலை கொள்ளியாய் இருக்க எப்படி முடியுமோ? ஆனாலும் முன் கூறியவாறு முதலாவது அஞ்ஞானம் நசியாமல் ஞானம் வாராதென்றும் அதற்குமுன்னே வராமல் அஞ்ஞானம் நசியாதென்றும் இருபக்ஷமாய் சில வித்துவான்கள் பிடிவாதம் செய்வார்கள், அது விருதாவாம். ஆனாலும் முதலாவது அஞ்ஞானம்போக்கடித்தால், ஞானம் தானே வரும். அஞ்ஞானமென்பது தாமசகுண காரியமான இருள். இருள் நீங்கும்பொருட்டு, முதலாவது குருவருள் விஞ்ஞானமென்கிற தீபமேற்றினால் நீங்கும். அப்படியே இருள் நீங்கிவிட்டால், மும்மலங்களும் அறும். மும்மலங்களும் அற்றால் அருள் ஞானம் சுயம்பிரகாசமாய் விளங்கும்.

சந்தேகம் வேண்டாம். இந்தப்படி விஞ்ஞானங்கொண்டு அஞ்ஞானம் போக்கடித்தால் மனம் ஞானசுரூப மடையும். இதைத்தவிர ஞானம் பூரணமாக்கி அஞ்ஞானம் போக்க லாம் என்றால் அந்த பிடிவாதம் மகா துக்கம். ஏனென்றால் அஞ்ஞானம் நிறைந்திருக்கும் இருளில் அணுவளவும் ஞானம் வந்தடைவதற்கு இடமில்லை என்பது நிச்சயம். அதுபோக ஞானம் பரிபூரணமாய் இருக்குமிடத்தில் அஞ் ஞானம் அணுவளவுமிராது என்பது நிச்சயம்.

ஓ மனமே கேள்! ஞானம் அடையும்பொருட்டு முதலாவது சன்மார்க்கமாய் விஞ்ஞானத்தை அடைந்து அஞ்ஞானம் நீக்கி ஞானம் அடைவது சகச போதானந்த சமுத்திரம். அதற்கு நான்கு சாதனங்களும் கற்று, மும்மலங் களும் அற்று அருள் பெற்றால் ஞானம் கரதலா அமலம் போல் சுலபமாய் கைவசமாகுமென்பதற்கு சந்தேகம் வேண்டாம்.

மனம் :— ஓ சுவாமி! எதார்த்த ஞானத்தை யோசிக்கு மளவில் ஆத்மா ஏகமாய் எங்கும் பரிபூரணமாய் நிறைந் திருக்கிறதென்றும், அது அப்படியிருக்க; அஞ்ஞானம் வந்தவாறு எங்ஙனமென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள் ! எதார்த்தமாயுள்ள பூரணக்கியானி களிடத்தில் அஞ்ஞானம் அணுவளவும் இராதென்பது நிஜம். அப்படி அஞ்ஞானிகளிடத்தில் ஞானமும் விளங்காது. ஏனென்றால் ஞானத்தை மறந்ததுதான் அஞ்ஞானமென் றும அஞ்ஞானத்தை மறந்ததுதான் ஞானமென்றும் அறிக. அஞ்ஞானி என்பவனுக்கு அடுத்த பெந்துவாயும் சகாயி களாயும் இருவர்கள் பிரியாமலிருக்கிறது. அவர் யாரென் றால் சந்தேகம், விபரீதம். இந்தப்படி அஞ்ஞானம், விபரீதம்

சந்தேகம் இவர் மூவரும் ஒருமையாய்க்கூடி அநாதியாய் ஆத்ம துரோகிகளாயும், ஆத்ம சூன்யராயும், கொடும்பாபிகளாயும், நரகத்திற்கே ஆளாக்குவர்களாயுமிருக்கிறார்கள். இதுகளில் அஞ்ஞானமென்பவன் யாரென்றால் தாமசகுணமான இருள். விபரீதமானது ராசசகுண ரூபமானது பாம்பு; சந்தேகமானது பழுதை; அதானது இராக்காலத்தில் கயர் கண்டதைப்பார்த்து, பாம்பாக நினைந்து பயந்தது விபரீதம்; ஆதலால் இப்படியுள்ள தாமச ராசசமான கோர மூட துஷ்டர்களை தூர ஓட்டி ஸ்ரீ சற்குருவின் திருவருள் பிரகாசத்தினால் கவனித்து பார்க்குமளவில் பாம்பு அல்ல; இது பழுதையாமென்று அறியும்போது விபரீதம் நசிக்கும்; விபரீதம் நாசமானால் முன்கூறினபடி சந்தேசமும், அஞ்ஞானமும் தானே நசிக்கும். இப்படி அறிவதே பூரணக்கியானமென்றும், மகான்கள் சம்மதமானாலும், பூரண ஞானத்துக்குள்ளே அஞ்ஞானம் தோற்றுவதெப்படி எனில் கடவுள் ஒருவருக்கே தெரியக்கூடும். அதைத்தவிர வேறு ஒருவருக்கும் அறியக்கூடியதும், சொல்லத்தகுந்ததும் அல்ல என்பது நிச்சயம். ஆனாலும் கேவலம் நிர்மலமாயும் பரிபூரணமாயுமுள்ள ஆகாசத்தின்கண் அநேக அநேகவித பேதமான விசித்திரங்களெல்லாம் தோற்றி அழிவதுபோல பரமாத்மாவானது ஏகமாய், நிர்மலமாய், பரிபூரணமாய், சர்வ வஸ்துக்களுக்கும் இடம் கொடுத்து ஆவதும் அழிவதும் எல்லாம் தானாய் தனக்கன்னியமில்லாமல் பற்றற்று நிர்ச்சங்கனாய், நிர்விகாரியாய், பிர்மானந்தமாய் இருக்கிறது. இதற்கு ஸ்ரீ சற்குருவின் திருவருளே பிரமாணம்.

ஓ மனமே கேள்! இந்த உலகத்தின்கண் நரர்களின் க்ஷேமத்தின் பொருட்டு சர்வ பிராணிகளிடத்திலுமுள்ள ஜீவ காருண்ணியமே எல்லாவற்றிலும் சிறந்ததென்று நீதி சாஸ்

திரங்களிலும், மகத்துக்களும் கூறி இருக்கிறது சத்தியமாம். ஜீவகாருண்ணியத்தினல் அடையும் பயனுவது பொறுமை. பொறுமைக்குமேல் யாதொரு தர்மமும் கிடையாது. ஆதலால் ஜீவகாருண்ணியமும், பொறுமையுமுடைய மகான் களுக்கு மூன்றுலகத்தையும், மூலமாயையுந்தாண்டி ஜீவன் முத்தி அடையலாம் என்பதற்கு சந்தேகமில்லை என்பது பெரியோர்கள் சம்மதம். ஜீவகாருண்ணியமில்லாதவர்கள் காசிக்குப் போனலும், கர்மம் செய்தாலும் பலன் விபரீதமாய் வந்துவிடும். ஜீவகாருண்ணியமுடையவர்கள் எங்கேயிருந்தாலும், எத்தொழிலைச் செய்தாலும் பிர்ம்மானந்தமாய் இருப்பார்கள். ஆதலால் ஜீவகாருண்ணியமே குருபக்தி; ஜீவகாருண்ணியமே குருவருள்; ஜீவகாருண்ணியமே ஜீவதெரிசனம்; ஜீவதெரிசனமே பரதெரிசனம்; பரதெரிசனமே சிவ தெரிசனம்; சிவதெரிசனமே பிர்ம்மானந்தமாம்; பிர்ம்மானந்தமாவது நித்தியானந்தம்; நித்தியானந்தமாவது சத்தியம். பரமசிவம் ஒருவரே அகண்டபரிபூரண சச்சிதானந்த சுரூபமாயும், சர்வத்திற்கும் அந்திரியாமியாயும், சர்வ சாக்ஷியாயும் இருப்பது மெய்யானல் அதைத் தவிர ஜீவர்கள் ஏது?

மனம்:— ஓ சுவாமி! அது அப்படியிருக்க, ஜீவர்கள் செய்யும் கர்மமாவது ஏது? அப்படியே ஜீவர்களுக்கு கர்த்தத்துவமில்லாமல் போனல் கர்மபெந்தமாவதேது? பெந்தமில்லாவிட்டால் சுகதுக்க மோக்ஷங்கள் ஏற்படுத்த காரணமென்ன? வென்று கேட்க, அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! சர்வத்திற்குங் காரணமாயும் ஏகாம்பர நாயகன் ஒருவரே. ஆதலால் அவரே சர்வத்திற்கும் அந்திரியாமியாய் இருந்ததும் அவர்தான். அப்படியே அந்திரியாமியாய் இருந்தும், அஞ்ஞானமான மாயா மோகத்தி

ளுல் நான் செய்தேனென்கிற கர்த்தத்துவத்தினுலும் ஜீவன் பெந்தனைத் தோற்றுவது சுபாவீகம். அங்ஙனம் எப்படி எனில், பரமாத்மா ஒருவரே சர்வத்திற்கும் அந்திரியாமியாய் இருந்தும் வாக்கு மனக்காயங்களினுல் செய்யப்பட்ட திரிவித கர்மங்களுக்கும் காரணம் அவர் ஒருவரே. ஆதலால் அவர் செயலாக எண்ணுமல் நான் செய்தேன் என்கிற கர்த்தத்துவமிருந்தமட்டும் ஜீவர்கள் அந்தந்த கர்ம பலன்களை அநுபவித்து தீரவேண்டுமென்பது உண்மை. அதைத்தவிர கர்ம பலத்திலும், போகத்திலுமுள்ள ஆசையைவிட்டு வைராக்கியத்துடன் நிஷ்க்காமமாய் நான் செய்தேன் என்கிற அகமமதையும், அகங்காரமும் விட்டு கர்மம் செய்தால் கர்ம பெந்தம் கிடையாதென்பது நிச்சயம். எல்லாம் சிவமயமாய் இருக்க, அதைத்தவிர நான் செய்தேனென்கிற அகங்காரம் அணுவளவுமில்லை என்பது நிச்சயம். அதனுல் பெந்தம் கிடையாதென்பது தாற்பரியம்.

ஓ மனமே கேள்! பரமாத்மாவின் அம்சமான மாயையால் தோற்றப்பட்ட வாக்கு மனக்காய மூன்றும் பரமாத்மாவில் அடக்கமானுல் முக்குணங்களும், முத்தொழிலும், மும்மலங்களுமற்று மூலமாயை தாண்டி ஸ்ரீ சற்குருவின் திருவருள் பெற்று பிர்ம்மானந்த பதமடையலாம்; சந்தேகம் வேண்டாம். ஸ்ரீ சற்குரு புத்தி விசேஷமானுல் ஆத்ம புத்தி திரமாகும்; ஆத்ம புத்தி திரமானுல் அனுத்ம புத்தி நசிக்கும்; அனுத்ம புத்தி நாசமானுல் குருகாருண்ணியம் பூரணனந்த சமுத்திரமாம். இதைக்கேட்ட மனம், அனலை அடைந்த மெழுகுபோல் மனமுருகி அன்பாக ஆனந்த பாஷ்பம் பெருகி புளகாங்கிதத்துடன் அஞ்சலியஸ்தனுய் நின்று கேட்கிறுன்:—

ஓ சுவாமி! தேவரீர் இதுவரையிலும் அருளிச்செய்த மகாவாக்கிய உபதேசங்களைக்கேட்டு அடியேனுடைய சந்தே

கங்களெல்லாம் தீர்ந்து அறிவுதான் பிர்ம்மமென்றும் பரம விஸ்வாசமாய் அறிந்தேன். ஆனாலும் என்னுடைய அறிவுக்குள் சுகதுக்கமிரண்டும் சகசமாயிருக்கிறது. இதை நீக்குமுபாயம் எப்படி? என்று கேட்க, அறிவு கூறியது.:-

ஓ மனமே கேள்! உனக்கு மாத்திரம் ஓர் அறிவு வேறில்லை. அதானது சராசரத்துக்கும் அறிவாயும், அந்திரியாமியாயும், சர்வ சாக்ஷியாயும், பொதுவாயும், ஏகமாயும் உள்ளதாம். அந்த அறிவுக்கு சுகதுக்கமிரண்டும் சுபாவீகமாக தோற்றினாலும் உண்மையல்ல. அங்ஙனம் வந்தவாறு, ஆகந்துகம் என்பது மத்தியில் வந்தது. அங்ஙனம் வரக்காரணம் அஞ்ஞானம். அதாவது இரண்டு விதம், அஞ்ஞான ஆபரணமென்றும், அபான ஆபரணமென்றுமறிக. இந்தப்படி இன்னும் அறிவை மறைக்கப்பட்ட வஸ்துக்கள் ஆணவம், மாயை, கர்மம், இம்மூன்றுமாமென்றறிக. இதுகளில் ஆணவமென்பது முன் கூறிய அஞ்ஞானம். அஞ்ஞானமாவது இரண்டுவிதம். அதாவது இந்திரியாக் ஞானமென்றும், சுரூபாக் ஞானமென்றும் அறிக. இன்னும் மாயையானது மூன்று விதம்; அதானது சாத்தீக குணமாயை என்றும், ராசசகுண மாயை என்றும், தாமச குண மாயை என்றுமறிக. இனி கர்மமானது மூன்றுவிதம்; அதானது ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் இம்மும் மலங்களுமடங்கிவிட்டால் அறிவு விளங்கி சுகதுக்க விகர்ப்பங்கள் நீங்கிவிடும். நீங்கி விட்டால் அறிவு நிர்விகாரியாமென்றறியலாம், இதைக்கேட்ட

மனம்:— ஓ சுவாமி! இந்த மும்மலங்களும் போக்கி அருள் பெறும் உபாயம் எப்படி? என்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! மும்மலங்களும் போக்க உபாயம் எப்படி எனில் முதலாவது கர்மத்தை விடவேண்டும். கர்மம் விடும் உபாயம் எப்படி என்ருல், கோரமூட விர்த்திகளான துஷ்கர்மங்களை தூரத்தள்ளி சாப்தீகமான நல்ல சற்கர்மங்களை நிஷ்காமமாகச் செய்து பழகி வருவதானல் ஆகாமியம் சஞ்சிதமிரண்டும் அடியோடு நசிக்கும். ஆகாமியம் சஞ்சித நாசமானல் பின் பிராரத்துவம் அனுபவித்து தீரும். இந்தப்படி கர்மம் மூன்றும் நாசமடைந்தால் தாமச குணமாயையும், ராசசகுண மாயையும் அடியோடே நசிக்கும். நல்ல சாப்தீக குணமாயை மேலிடும். சாப்தீக குணமாயை மேலிட்டு சாந்தமானல் அந்தக்கரணம் பரிசுத்தமாகும்; அந்தக்கரணம் பரிசுத்தமானல் சாப்தீக குணமாயையும், இந்திரியாக்ஞானமும், சுரூபாக்ஞானமும் நசிக்கும். இந்திரியாக்ஞானமாவது:- ஞானேந்திரியமைந்து, கர்மேந்திரியமைந்து. இதுகளில் அந்தக்கரணத்தையும், ஆத்மாவையும் மறைப்பதாம் சுரூபக்ஞானமென்பதற்கு தாற்பரியம். மனம், புத்தி, சித்தம், அகங்காரம், இதுகள் நான்கும் கூடியது அந்தக்கரணம்; அந்தக்கரணத்தினல் ஆத்மாவினை மறைக்கப்பட்டதாம் சுரூபக்ஞானமென்றறிக. இந்தப்படியுள்ள மும்மலங்களும் போக்கி அருள் பெற்று பிர்ம்மானந்த பதமடையும்பொருட்டு முக்கிய சாதனம் முன் கூறினபடியுள்ள ஸ்ரீ சற்குரு பக்தி ஒன்றேயாம். வேறில்லை.

ஓ மனமே இன்னும் கேள்! மும்மலங்களும் அடக்கும் உபாயம் ஸ்ரீ சற்குருவின் திருவருள் பஞ்சாக்ஷர சுரூபத்தை அன்புற்று பார்த்தால் மும்மலங்களும் அதில் அடங்கி இருக்கும். பஞ்சாக்ஷரத்தின் சுரூபமாவது பூமி முதல் ஆகாசம் வரையுமாம். அதுவும் அல்ல; பூமி முதல் நாதம் வரையிலுள்ள சராசர பிரபஞ்ச வஸ்துக்களும் அதுதான்.

அதானது ஆமையைப்போல் மூலமாயையானது ஐந்து அவயவங்களோடு கூடிப் பிரணவ சுரூபமான பரமாத்மாவை அந்தரங்க சங்காரகமாய் மறைத்து வைத்துக் கொண்டு, காலசத்தி ரூபமாய் ஐந்தவயவங்களோடு கூடிய ஒரு சுரூபமாக இருக்கிறது. ஐந்தவயவங்களாவது தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம், முத்தி. இதுகளில் தூலமானது பூமி, ஜலம், அக்கினி, வாய்வு, ஆகாசம். சூக்குமமாவது கெந்தம், ரசம், ரூபம், பரிசம், சத்தம் இதுகள் ஐந்துமாம். காரணமாவது அகங்காரம்; அதானது சாத்தீக குணம், ராசசகுணம், தாமசகுணம் இதுகள் மூன்றும், மூலப்பிரகிருதி ஒன்றும், ஜீவாத்மா ஒன்றும் ஆகயிதுகள் ஐந்துமாம். மகா காரணமாவது ஜீவ பர சிவம் இதுகள் மூன்றுமாம். முத்தியாவது பர சிவம் இரண்டும் ஏகமாய் யிரண்டறக்கலந்து இருப்பதாம்.

ஓ மனமே கேள்! இப்படிக்கொத்த மகிமையுடைய பஞ்சாக்ஷர சுரூபமே கடவுளின் சுரூபம். இதன் பொருளை அகங்காரத்தைவிட்ட ஸ்ரீ சற்குருவின் திருவருளால் அறியக்கூடும். அருளை அடையும் உபாயம் எப்படியெனில், இந்திரியங்களை யெல்லாம் அஞ்செழுத்திலே அடக்கி, அஞ்செழுத்தை அந்தக்கரணத்தில் அடக்கி, அந்தக்கரணத்தை முக்குணத்தில் அடக்கி, முக்குணத்தை மூலமாயையில் அடக்கி, மூலமாயையை அருள் பரத்தில் அடக்கி, அருள் பரத்தை பரஞ்ஜோதியான சிவதுரியத்தில் அடக்கி, பார்த்தால், பஞ்சாக்ஷரத்தின் பொருள் விளங்கும் பஞ்சாக்ஷரமானது நமசிவய, என்னும் அஞ்செழுத்தாம். இதுகளில் நகரமானது பகவானுடைய சிசினம், அதானது பிர்ம்மாவும் சரஸ்வதியுமாம். இரண்டாவது மகரமானது பகவானுடைய நாபி, அது விஷ்ணுவும் லெக்ஷிமியுமாம்.

மூன்ருவது சிகரமானது, பகவானுடைய இருதயம், அதானது, ருத்திரனும் பார்வதியுமாம். நான்காவது வகரமானது பகவானுடைய வாய், அதானது மகேஸ்வரனும், மகேஸ்வரியுமாம். அஞ்சாவது யகரமானது, பகவானுடைய சிரசு, அதானது சதாசிவமும் மனேன்மணியுமாம், பகவானுடைய திருவடியானது ஓங்காரம், இந்தப்படி மகாமகிமையுடைய பஞ்சாக்ஷர சுரூபத்திலிருந்தும் தோற்றப்பட்டதாம் இந்த உலகம். அதானது சூரிய கிரணத்தினுல் காணப்பட்ட கானல் ஜலம்போலும் மனே பிருந்தியாம். பலவித பேதமாகக் கண்ட சொர்ப்பனம் போலவும், இந்திர ஜாலகனுடைய மாயா வித்தையைப்போலவும், சிற்பிரகாசத்தியானுல் தோற்றப்பட்ட மாயா ஜாலமாம் இந்த உலகம். முடிவில் சரீரம் அஞ்செழுத்திலே லயம் அடையப்போகிறது. ஆதலால் அஞ்செழுத்தையும் நெஞ்சிலே திரமாய் நிருத்தி, அந்த அஞ்செழுத்தையும் ஆமையைப்போல் பிரணவத்துக்குள்ளே அடக்கி தியானம் செய்து பழகிவருவதானுல், ஆணவம், மாயை, கர்மம் மூன்றும் அடங்கும். அங்ஙனம் ஆணவம், மாயை, கர்மம் மூன்றும் அடங்கிவிட்டால் ஜீவன் பரத்தோடொத்து, பரமாத்மாவில் ஐக்கியமாய், சிவசத்தி இரண்டும், இரண்டறக்கலந்து ஏகமாய், துரியபர பரிபூரணனந்தமாய் விளங்குவதாம் பஞ்சாக்ஷரத்தின் பொருள் என்றுமறிக. இந்தப்படி கிரமமாய் மும்மலங்களும் போக்கி யருள் பெற்று, சுரூப சாக்ஷாத்காரமடையும் பொருட்டு பூர்வ புண்ணியம் விசேஷமாய் இருக்கவேண்டும். இதைத்தவிர இந்த உலகத்தின்கண் உள்ள மனிதர்களில் அதிக ஜனங்கள் தாமசகுண விகுர்திகளாய் பிருகிர்த ஜீவராய் சரீர போஷணத்தில் பேராசையுடையவர்களாய் மிருக ஜாதிகளேப்போல் மகாபோகிகளாய், வர்ணுசிரம குலாசார தர்ம கர்மாதிகளும் மரியாதையும் நஷ்டமாய், குரு, சுருதி,

ஸ்மிரிதி, வேதம், சாஸ்திரம், புராணம், இதிகாசாதிகளும், இதுகளில் கூறப்பட்ட சன்மார்க்க நடவடிக்கையும் தவறி, கலியினுல் அந்தகாரத்தில் பட்டு கொலை, களவுகள், காமம், குரு நிந்தை முதலான துஷ்கரிமிகளாய், துராசை மேலிட்டு, அந்த சம்சாரமான பாழுங் கிணற்றில் விழுந்து அலையும் ஜனங்கள் அதிகமாய் அந்தகர்களாயும், அதாமுகமாய், ஆத்ம துரோகிகளாயும் அந்தகனுக்காளாயும் இருக்கிறுர்கள். இதற்கு நாம் என்ன செய்வோம். ஆனுலும் இப்போது கலியைத்தான் வெகுமானிக்கவேண்டும். ஆதலால் எல்லோரும் கலியை தன்னை வணங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றுல் அதிக துக்ககரமாயிருக்கிற கலியை நாசமாக்கும் பொருட்டு ஏது கர்மத்தினுலும் முடியாது. அதானது பாப கர்மத்தை எல்லாம் தூரத் தள்ளி நல்ல புண்ணிய கர்மங்களை செய்தாலும் பாபமே மேலிடும். அப்படி வருவது ஏதென்றுல், கலியுடைய மகிமை அவ்வள விருக்கிறது, அது கலிதர்ம மென்றறிக.

மனம்:—ஓ சுவாமி! இந்தப்படி இந்த கலியுகத்தில் கோரமூட விர்த்திகளாய், அநியாயமும், அதர்மமும், அக்கிரமமும் அதிகமாய் இருக்கும் இந்த கலி சகிதமான உலகத்தில் எந்த கர்மம் செய்தால் பாபம் துலையும், புண்ணியம் மேலிடும், என்றும் நின் திருவடி திருவுளம் பெற்று அடியேனில் ஜீவகாருண்யமுண்டாகி திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! மாயாகுண பேதமான தாமச குணமாம் கலி. ஆதலால் மாயாகுண பேதமானது மனம் ஆதலால் தாமச குணமிருந்தமட்டும் மனந்தான் கலி என்றும் அறிக. குணபேதத்தால் மனம் சங்கல்ப்ப விகல்ப்ப மடைந்தது. அந்த சங்கல்ப்ப விகல்ப்பத்தால் வந்தது காமம்.

காமத்தால் கர்மம், கர்மத்தினுல் கலி, கலியினுல் கொல்லும் கோபம், கோபத்தினுல் ஆத்மசூன்யமாதலால், கலிவந்தடைவதற்கேதுவான தாமசகுண கர்மத்தையும் ஆசை வந்து அடைவதற்கேதுவான, ராசசகுணகாமிய கர்மத்தையும், குரோதலோப மோகாதிகளேயும் தூாரீக்கி, நிராசையை நிலை நிறுத்தி சிரசால் வணங்கி, முன் கூறியபடி பஞ்சாக்ஷரத்தையும் ஸ்ரீ சற்குருவின் திருவடி மறவாமல் இருதயத்திலிருத்தி நிற்சலமாய் இருந்து, தியானம் செய்து பழகிவருவதாணுல், அனுதியாயுள்ள பாபமெல்லாம் பஞ்சுபோல் பறக்கும்; பாபம் அகலவே புண்ணியமேலிடும், புண்ணியமேலிட்டால் கலி நாசமாம், புருஷார்த்த மடையலாம்.

ஓ மனமே கேள்! உண்மையாய் இன்னும் பஞ்சாக்ஷர தியானம் செய்யும்பொருட்டு ஆனமட்டும் மனதை நிலையிலிருத்தி சமமாயுள்ள ஓர் ஆசனத்தில் சுகமாய் இருந்து ஊர்த்த முகமாய் நாசிகாக்கிரத்தில் பார்த்து பிரணவ சுரூபமான ஸ்ரீ சற்குருவின் திருவடி சித்தத்திலிருத்தி சிரத்தா பக்தி விஸ்வாசத்துடன் மனசினுல் தியானிக்கவும், அருளான பஞ்சாக்ஷரத்தை வாக்கினுல் ஜெபிக்கவும், பூஜா முதலிய கைங்கரியங்களே காயத்தினுல் செய்யவும் இந்தப்படி திரிகரணங்களேக்கொண்டு தினசரியும் அப்பியாசம் செய்து பழகிவருவதாணுல் திரிகரணங்களும் அடங்கும்; திரிகரணங்களும் அடங்கிவிட்டால், கிரேதாயுகம் பிறக்கும், கிரேதாயுகமானது சாந்தம், கிரேதாயுகம் வந்தால் கலி அடியோடே நசிக்கும், கலி நாசமாணுல் மும்மலங்களுமறும், மும்மலங்களுமற்ருல் அருள்பெற்று பிர்மாநந்தமாய் இருக்கலாம், சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! இதைத் தவிர இந்த கலியுகத்தில் கலிசபைபை தாண்டி மோக்ஷமடையும்பொருட்டு வேறெரு

மார்க்கமுங் கிடையா; ஏனென்றால் தாமச குணம் அதிகமான கலி தோஷத்தால் எக்கியம், தானம், தபசு முதலான கர்மங்களும், வர்ணாசிரம குலாசார தர்மங்களும் நஷ்டமாய் வந்துவிட்டது. ஆதலால் பகவன்நாம சங்கீர்த்தனங்களைக் கொண்டும், சாதுக்களின் பாத பூஜையைக் கொண்டும், பக்தி விசுவாசங்கொண்டும் கலி சபையைத்தாண்டி மோக்ஷமடையலாமென்றும், புராண இதிகாசாதிகளிலும், கூறியிருப்பது சத்தியம்; இதற்கு அதிகாரிகள் யார் என்றால் சதுர் வர்ணங்களும்; ஸ்திரீகள் சண்டாளர்களுக்கும் அதிகாரமுண்டு. ஆனாலும் இந்த கலியுகத்தில் பக்தி வருவது மகா அபூர்வம்; நிராசையாய் பக்தி உடையவாளுக்கு இந்த கலியுகம் மெத்தவும் நன்று நன்று.

மனம் ஓ சுவாமி! வைதீகமான வர்ணாசிரம குலாசார தர்ம கர்மத்தினால் அடையும் பலனாவது, சரீரத்துக்கோ ஆத்மாவுக்கோ என்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! எதார்த்தமாய் அறியும்போது சரீரத்துக்குமில்லை ஆத்மாவுக்குமில்லை; ஆனாலும் வைதீகமான குலாசார தர்மங்களை எல்லாம் சன்மார்க்கமாயிருந்து, அகங்காரத்தைவிட்டு, அந்தக்கரணம் பரிசுத்தமாகும் பொருட்டு சொன்னதல்லாமல் வேறில்லை. ஆனாலும் அப்படியே ஆசாரமிருந்தமட்டும் அகங்காரமுமிருக்கும். ஆதலால் அகங்காரத்தை விட்டுவிடும்பொருட்டு, நிஷ்காம தர்மகர்மத்தினாலும், அப்பியாசம் யோகத்தினாலும், சாதுசங்கப் பழக்கத்தினாலும் சித்தம் பரிசுத்தமாய், அபேதமானால், முன்கூறினபடியுள்ள வர்ணாசிரமம் குலாசார தர்ம கர்மங்களெல்லாம் தானே நசிக்கும் சந்தேகம் வேண்டாம். சரீரமானது நிச்சேட்டமான மரக்கட்டைக்கு சமானமாம்; ஆத்மாவானது

நிஷ்கரிய நிர்ச்சலன். ஆதலால் இதுகள் இரண்டுக்கும் குலா சார தர்மம் சம்பந்தமில்லை.

ஓ மனமே கேள்! அஞ்ஞானத்தினுல் சாசுவதமாய் காணப்பட்ட, விஸ்வரூபமானது சாசுவதமல்ல, நச்சுரமா மென்றும், சாசுதமானது பரமாத்மாவென்றும் நிச்சயமாய் ஸ்ரீ சற்குருவினுல் அறியுமானுல், முன்கூறிய வர்ணுசிரம குலாசார தர்மகர்மங்களெல்லாம் பொய்ப்புலன்களால் செய்வதாம். அதுகளெல்லாம் பொய் பொய்யாமென்றும் உபநிஷத்துக்களும் மகத்துக்களும் கூறியது சத்தியம் சத்தியம். ஆனுலும் வர்ணுசிரம குலாசார தர்மத்தோடு கூடியிருந்தும் தவருமல் நிஷ்காமமாய் கடவுளை உபாசித்து சேவித்து பழகி வருவதானுல் சாலோகாதி சரீர முத்தி கிடைக்கும். சரீர முத்தர்களுக்கெல்லாம், புனர் ஜென்மமுண்டு. இதைத் தவிர, அதிவருணுசிரமத்திலிருந்தும், கடவுளை உபாசித்தால் புனர்ஜென்மமில்லாமல் விதேகானந்த சாயுச்சியமுத்தி யடையலாம் சந்தேகம் வேண்டாம்.

மனம்:—ஓ சுவாமி! இந்தப்படி முன்கூறிய, வர்ணுசிரம குலாசார தர்மங்களெல்லாம் எதார்த்த ஞானத்திற்கு விரோதமாமென்றும் எதார்த்தஞானத்தை பார்க்குமளவில், அவனி முதல் ஆகாசம் வரையிலுள்ள சர்வ பூதங்களும் நச்சுரமாமென்றும் அறிந்தேன். ஆனுலும் இதுகளிலுள்ள அகமமதை அணுவளவுமில்லாமல் மனம் பரிசுத்தமாகி, பற்றில்லாமலிருந்தால் போருதா? காயத்திலும் வாக்கிலும், ஆசாரமிருந்ததினுல் பற்று உண்டாகுமா என்று கேட்க, அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! முக்கரணங்களும் ஒத்து உபாசனை செய்தால் அல்லவோ, முக்கரணங்களும் அடங்கும். முக்

கரணங்களும் அற்றல் அல்லவோ மும்மலங்களும் அறும். மும்மலங்களும் அற்றல் அல்லவோ அன்பும், ஆசானுடைய அருளும், எதார்த்த ஞானமுமடையக்கூடும். ஆதலால், முக்கரணங்களும், காயத்திலுள்ள அபிமானம் முதலாவது விட்டுவிடவேண்டும். இரண்டாவது வாக்கு பரிசுத்தமாய் இருக்கவேண்டும். மூன்றுவது மனதை யடக்கவேண்டும். இதுகள் மூன்றும், சமரசமாய் அடக்குவதே சத்தியம். இதைத்தவிர மனம் ஒன்றுமாத்திரம் பரிசுத்தமாய் இருந்தும் காயம் வாக்கு அடக்கமில்லாவிட்டால் மனம் எப்படி பரிசுத்தமாய் இருக்கும். இராது. ஏனென்றல், காயத்திலும் வாக்கிலும், அகங்காரம் இருந்தமட்டும், மனசுக்கும் இருக்கும் சந்தேகமில்லை. ஆதலால் முக்கரணங்களும் சமமாய் அடக்குவதே யுக்தி, இதனுல் அருள்பெற்று எதார்த்த ஞானம் அடையலாம்.

ஓ மனமே கேள்! மனம் பரிசுத்தமானுலும் வாக்கு, காயங்களும் அடக்காமல் சம்சார சாகரத்தின் நடுவில் ஆழ்ந்து கிடந்தும், வாசாஞானம் பேசுவது, கபட ஞான மென்றும் அறிக. திரிகரணங்களும் ஒத்து பேசுவதும், தொழில் செய்வதும், நினைப்பதும், மெத்தவும் நன்று நன்று. இது சத்தியம். இதைத்தவிர, வாக்கிலே ஒன்று தொடுப்பாய், மனதிலே ஒன்று நினைப்பாய், காயத்தினுல் பலவிதம் செய்வாய், இது நம்பக்கூடாது.

மனம்:— ஓ சுவாமி! கர்ம புண்ணியத்தினுல் வந்ததாம் மானிட சரீரம், ஆதலால், இன்னும் கர்மம் செய்து பழகி வருவதானுல், இனிமேலும் ஜென்மம் வாராதா? கர்மமானது பெந்தம், அதை விட்டுவிடுவதே மோக்ஷம் என்று திருவாய் மலர்ந்தருளி இருக்கிறது. ஆனுலும் இலாக்கியமான கர்மத்தை விட்டால், மோக்ஷங் கிடையா

தென்றும், சில மகத்துக்கள் சொல்லுவார்கள். இதுகளில் எதை நம்பவேணுமென்று கேட்க, அறிவு கூறியது:-

ஓ மனமே கேள்! கர்மமாவது திரிவிதமாயும், அது நவவிதமாயும் இருக்கிறது. அதாவது புண்ணியம், பாபம், மிசரம் மூன்று; சுகர்மம், அகர்மம், விகர்மம் மூன்று; ஆகாமியம், சஞ்சிதம், பிறாரத்துவம் மூன்று; இந்தப்படியாக கர்மம் ஒன்பது விதம். இதுகளில் முதலாவது பாப கர்மத்தையும், மிசிரகர்மத்தையும், தூரத்தள்ளி வர்ணாசிரம, குலாசாரத்திற்கு தகுந்தபடி அதிகாரம்போல் சுகர்மங்களை செய்வது சிலாக்கியமென்றும், வேதங்களில் கூறப்பட்டது சரி. ஆனாலும், போகத்தில் இச்சையும், சம்சாரமும்விட்டு வைராக்கியத்துடன், சர்வ கர்மமும் முடித்து, பெரியவாளை யடுத்து, சரணசேவை செய்வதே சிலாக்கியமென்றும், இரண்டாவது உபநிஷத்துக்களும் பெரியவாளும் கூறப்பட்டது சத்தியம்.

ஓ மனமே கேள்! முன் கூறியதில் அகர்மம், விகர்மம் இரண்டும் மகா பாபத்துக்கும் நரகத்துக்கும் காரணம். சுகர்மம் ஒன்றே பரகதிக்கு வழி. ஆனாலும் வர்ணாசிரமத்துக்கு தகுந்தபடி அதிகாரம்போல் சற்கருமங்களை செய்வதே சுகர்மம். அப்படி செய்யாமலிருந்தது அகர்மம். தடமாரி செய்வது விகர்மம். இதுகள் மூன்றும் விட்டு, ஸ்ரீ சற்குருவின் திருவருள்படி கர்மம் செய்வது பரிசுத்தமான சுகர்மம். இதனால் பெந்தம்விட்டு புருஷார்த்தமடையலாம். இதைத்தவிர பிராமண ஜாதிகள் ராஜசேவை, வியாபார முதலாய இழிவான கர்மங்களை செய்தால், அது விகர்மமாம் என்றும், விதியில் நிஷேதமாமென்றும், சந்தியாவந்தனம் காயத்திரி முதலான ஜெபதபங்களை சூத்திர

ஜாதிகள் செய்வது விகர்மமாம். இதனுல் நரகமே பலமாம் என்றும் முன் கூறியிருக்கிறது.

ஓ மனமே கேள்! கர்மேந்திரியத்தின் தொழிலாவது கர்மம், கர்மத்துக்கு காரணம் ஞானேந்திரியம், ஞானேந்திரியத்துக்கு காரணம் அந்தக்கரணம், அந்தக்கரணத்துக்கு காரணம் ஜீவன் ஆதலால், இந்திரியங்கள் பத்தும், அந்தக்கரண நான்கும் இருந்த மட்டும் கர்மமிருக்கும், கர்மமிருந்தமட்டும் ஜீவன் கர்மபலத்தை யநுபவிப்பது சுபாவீகம். இதுகளுக்கெல்லாம் சாக்ஷியாவது, பரமாத்மா; இந்தப்படி இந்திரியங்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், போகத்தில் ஆசையிருந்தமட்டும், கர்மம் சிலாக்கியமாக எண்ணுவார்கள்; அதனுல் ஜீவன் கர்மபலபோக்த்தாவாய் தோற்றுவது சுபாவீகம். நிராசையாய் இந்திரியங்கள் பத்துமடக்கி, அந்தக்கரணம் பரிசுத்தமாக்கினுல் கர்மம் அடியோடே நசிக்கும். கர்மம் அடியோடே நாசமானுல், கர்த்தா போக்த்தா என்கிற அகந்தையும், அகமமதையும், அடியோடே நசித்துபோகும். இதனுல் ஜீவன் முத்தியடையலாம்; சந்தேகம்வேண்டாம்.

ஓ மனமே கேள்! பக்திவிசுவாசமாய் முக்கரணங்களைக் கொண்டு கடவுளின் திருவடிசேவை செய்தால் முக்கரணங்களும் அடங்கும். முக்கரணங்களும் அடங்கிவிட்டால், காயமேது? கர்மமேது? பெந்தமோக்ஷ பேதாபேதம் ஏது? நான் என்கிற ஆகங்காரமாவதேது? நாமரூபாதி சமஸ்த வஸ்த்துக்களும் அடங்கி இருக்கும். இதைத் தவிர போகத்தில் ஆசையும், குணமூன்றும், முக்கரணங்களும் இருந்தமட்டும் காயகர்மங்களை சிலாக்கியமாய் எண்ணுவார்கள். குணமூன்றும், முக்கரணங்களுமிருந்தமட்டும் கர்மமிருக்கும். கர்மமிருந்தமட்டும், காயத்துக்கு ஜனனமரணுதி நரக

சொர்க்க சுகதுக்கங்களுமிருக்கும். ஆதலால், அனியாய மாய் இந்த உடலை நம்பாமல் ஞாயமாய்ப் பெரியவாளை யடுத்து, ஞேயமாயுள்ள பரமாத்மா வினையறியும்பொருட்டு பெரியவாளையடுத்து, சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் அகங்காரத்தையும், குணகர்மங்களையும் தூரத்தள்ளிவிட்டால், ஆத்மானந்தம் விளங்கும்; ஆத்மானந்தம் விளங்குமானல், விஞ்ஞானம்வரும். விஞ்ஞானம் வந்தால் மெஞ்ஞானம் விளங்கும். மெஞ்ஞானம் விளங்குமானல், ஜீவாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே ஜீவாத்மா. இந்தப்படி சமரசமாய் ஜீவாத்மா பரமாத்மாவைபார்க்கும் அளவில், பரமாத்மாவைத் தவிரவேரே ஜீவாத்மா இல்லை என்பது நிச்சயமாய் மெய்விளங்கும்; அங்ஙனமெப்படி எனில், ஒரு வஸ்துவை சுட்டிபலநாமம் சொல்வதுபோல், ஜீவாத்மா என்றும், ஆத்மா என்றும், பரமாத்மா என்றும், சொல்வது பரியாயநாமம்; பரியாயநாமாவது:- ஆகாசமானது ஏகம். அதற்கு ஆகாசம், மகாகாசம், குடாகாசம், குக்ஷியாகாசம், அந்தரிக்ஷம், இத்தியாதிபலநாமங்கள் சொல்வது போல, ஏகமாய்இருந்த ஆத்மாவுக்கு பலநாமம் சொன்னதல்லாமல், வேறில்லை, எதார்த்தஞானம் அடைந்தவாளுக்கு, ஜீவாத்மா பரமாத்மாரெண்டும், ஏகமானலும், உலகர் இரண்டாய் சொல்வதற்கு காரணம் அஞ்ஞானம் ஒன்றேயாம்; சந்தேகம்வேண்டாம். ஆதலால், அஞ்ஞானம் நீங்கியருட்கண்ணல் பார்த்தால், ஆத்மா ஏகம்.

ஓ மனமே கேள்! பரமாத்மாவானது ஏகமாயும் நித்தியமாயும், நிர்விர்த, நிர்மோக, நிர்விஷய, நிரந்தரமாயும், நிஷ்களமாயும், நிர்வாச்சியமாயும், நிரூபமாயும், நிருதாரமாயும், நிர்வேத்தியமாயும், நிர்விகர்ப்பமாயும், நிர்த்தோஷமாயும், நிர்லீனமாயும், நிரந்தரமாயும், நிர்த்தொந்தமாயும்,

நிர்வேத, நிர்வேத்திய, நிர்மலமாயும், நிர்க்கதமாயும், நிர்முகத்தமாயும், நிர்மூலமாயும், நிரஞ்சனமாயும், நிர்ச்சங்கமாயும், நிஷ்காமநிர்வாதமாயும், நிர்க்குணநிராமய நிர்வாணமாயும், நிர்வயிரமாயும், நிராசர்யமாயும், நிராகாரமாயும், நிரீகமாயும், நிர்ச்சல நிராகுலமாயும், நிரதிசயமாயும், சச்சிதாநந்த சமரசமாயும், பரிபூரண பரஞ்சோதியாயும், விளங்குவதாம் ஆத்ம வஸ்து வென்றறிக. இந்தப்படி ஞேயமாய்உள்ளபரமாத்மாவினை, ஞாயமாய் அறியும்போது, மாயாசம்பந்தபயமெல்லாம், நீங்கி ஜீவன் முத்தனாய் பிர்மாநந்தபதம் அடையலாம், சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! அனேக ஞானநூல்களைத் தேடிப் பார்த்து அலையாமலும், பலவிதமான கர்மங்களைச்செய்து, அதுகளில் பெந்தப்படாமலும், நான் செய்தேன் என்கிற அகங்காரமும், அகமமதையும், விட்டு மனதையடக்கும் உபாயத்தைப்பாரும். மனம் அடங்கிவிட்டால், அதுவே ஜீவன்முத்தி. இந்தப்படி மனம் அடங்கும் பொருட்டு, உபாயம் முன்கூறினபடி ஸ்ரீ சற்குருபக்தி ஒன்றேயாம் என்றும், பக்தி முத்தினால் அது ஞானபக்குவமாம் என்றும் அறிக. ஞானமாவது இரண்டு விதம்—அதானது பரோக்ஷமென்றும், அபரோக்ஷமென்றும் அறிக. இதுகளில் பரோக்ஷமாவது இறைவனருளாலறிவதாம். அபரோக்ஷமாவது அந்த பரோக்ஷத்தினால் அசைவற்ற ஆகாசம்போல், ஏகமாய் பரிபூரணானந்தமாய் விளங்குவதாம் அபரோக்ஷ ஞானமென்றறிக.

இதைக்கேட்ட மனம்:—ஓ சுவாமி! ஏகமாய் இருந்த நிர்மலபிர்மத்தில், பரோக்ஷமென்றும், அபரோக்ஷமென்றும், இரண்டுவிதமாக வந்த காரணமென்னவென்றுகேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! ஏகமாயுள்ள சுத்தபிர்மத்தில், அபின்னமாயிருந்த, சிற்சத்தியின் பிரகாசமானது, மாயை. மாயாசிருஷ்டியானது, ஸ்ரீ மூர்த்திகளுமாம். ஸ்ரீ மூர்த்திகளால் சிருஷ்டிக்கப்பட்டதாம் ஜெகத் ஜீவர்களெல்லாம்; ஜீவசிருஷ்டியானது ராகத்துவேஷாதிசம்சாரங்கள். ஆதலால், இந்தப்படி சம்சாரசாகரத்தில் பட்டு அலையும் ஜீவர்களுக்கெல்லாம், பெந்தமோக்ஷம் இரண்டுக்கும் காரணமாய் ஏழு அவஸ்தை; இதுகளில் பெந்த ஏதுவானது, அஞ்ஞானம், ஆபரணம், விக்ஷேபம், இதுகள் மூன்றுமாம்; இனி மோக்ஷ ஏதுவானது, பரோக்ஷம், அபரோக்ஷம், அனர்த்த நிவர்த்தி, ஆனந்தபிராப்தி, இதுகள் நான்குமாம்.

இதைக்கேட்ட மனம்:—ஓ சுவாமி! இந்தப்படி ஏழு அவஸ்தையின் சுரூபமாவதென்ன? இதைவிட்டு அத்வித பதம் அடையும் மார்க்கம் என்னவென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ மனமே கேள்! முன்கூறிய ஏழு அவஸ்தையில், பெந்தத்திற்கு ஏதுவானது, அஞ்ஞானம், ஆபரணம், விக்ஷேபம்; இதுகளில் அஞ்ஞானம் என்பது, ஆணவம்; ஆணவமென்பது மாயை; விக்ஷேபம் என்பது கர்மசங்கல்பம். இனி மோக்ஷ ஏதுவானது, பரோக்ஷம், அபரோக்ஷம், அனர்த்தநிவர்த்தி, ஆனந்தபிருப்தி இதற்கு உதாரணம்.

ஓ மனமே கேள்! பத்துபேர்கூடி ஓர் வழி போகிற சமயம், மத்தியில் ஓர் ஆறு இருந்தது. அந்த சமயம் பத்து பேரும் ஒன்றாக ஆற்றை தாண்டியானபின், அதில் ஒருவன் பத்து பேரும் சரியாக இருக்கிறதா என்று எண்ணிப் பார்த்தான்; அப்போது ஒன்பதுபேரை எண்ணி அதில் ஒருவனைக் காணவில்லை. இந்தப்படி பத்துபேரும் எண்ணி

எண்ணிப் பார்த்தபோதிலும் ஒருவன் குறைவாக இருக்கிறது. ஐயையோ ஆறு தாண்டிய சமயம் ஒருவன் ஜலத்தில் வீழ்ந்து நாசமாய் போய்விட்டதென்று பரிதாபப்பட்டு அழுதுகொண்டிருந்தார்கள். அந்த வேளையில் அங்கு வேறொருவன் வந்து ஒன்பது என்று எண்ணிக்கொண்டு இருந்தவனை முதலாக எண்ணிப்பாருமென்று சொன்னதைக்கேட்டு தன்னை முதலாக எண்ணிப்பார்த்தளவில் பத்துபேரும் சரியாய் கண்டு, சந்தோஷமடைந்தார்கள்.

ஓ மனமே கேள்! பத்துபேரில் ஒருவன் முதலாவது தன்னை எண்ணாமல் ஒன்பதென்றெண்ணியது அஞ்ஞானம். அதில் ஒருவன் நாசமாய்போய்விட்டது என்று தோற்றியது ஆபரணம். அதனால் துக்கப்பட்டு அழுதுகொண்டிருந்தது விக்ஷேபம். அந்த சமயம் அங்கு ஒருவன் வந்து பத்து பேரையும் சரியாக காட்டி சந்தோஷமடையச் செய்தது பரோக்ஷம். இப்போது பத்துபேரும் சரியாக இருக்கிறது இனிமேல் நமக்கு நாசமில்லை என்று கண்டது அபரோக்ஷம். பொய்யான துன்பம் நாசமாய் போய்விட்டது. இனிமேல் பிறப்பில்லை என்கிற நிச்சயமானது அனர்த்த நிவர்த்தி; நித்தியாநந்தமாயுள்ள பரமாத்மாவினிடத்தில் அன்புற்று ஐக்கியமாய் இருப்பதுதான் ஆநந்த பிராப்தி என்று அறிக.

ஓ மனமே கேள்! சர்வாந்திரியாமியாயும், சர்வ சாக்ஷியாயும், சச்சிதாநந்த சுரூபமாயும், சத்தியமாயும், நித்தியமாயும், பரிபூரண பரம்ஜோதியாயும் உள்ள பரமாத்மாவை தன்னிடத்தில் பாராமல் இருந்ததுதான் அஞ்ஞான மென்றும் தத்துவங்களை எண்ணி எண்ணிப்பார்த்தும், தன்னைக் காணாமல் இருந்தது ஆபரணம்; ஆத்ம சூனியமாய் ஆத்மா இல்லை இல்லை என்றும் துக்கப்பட்டு அழுதுகொண்

டிருந்தது விக்ஷேபம். அப்போது அதவா ஒருவர் பூர்வ புண்ணிய விசேஷத்தினால், பரமாசாரியராய் வந்து சராசரத்துக்கும் அந்தரியாமியாயும் சர்வ சாக்ஷியாயும் இருந்த, பரமாத்மாவை எண்ணி அதில் தன்னையும் காட்டி தெளிவடையச் செய்தது பரோக்ஷம். பரோக்ஷத்தால், அனுபவித்தறிவதாம் அபரோக்ஷம்; இந்தப்படி உண்மை சொல்லாதவர் குருவல்ல; குருவருள் வாக்கியத்தை உண்மையாக நம்பாதவன் சிஷ்யனும் அல்ல; பொய்வினை எல்லாம் தூரத் தள்ளி, மெய்யறிவாய் இருந்தவர்தான் சற்குரு. சர்வ கர்ம கர்மங்களும் விட்டு, குருவை நம்பி பக்தி விஸ்வாசத்துடன் அடுத்தவன்தான் சிஷ்யன்; இந்தப்படி குரு சிஷ்யர்களாயிருந்தும், ஆத்மாவினை ஆத்மாவைக்கொண்டறிவதே எதார்த்த ஞானமென்றும், இதனால் ஜீவன் முத்தனாய் விதேகானந்த கைவல்லிய பதம் அடையலாம் என்றும், நான்கு வேதங்களிலும், புராண இதிகாசங்களிலும், உபநிஷத்துக்களிலும், மகத்துக்களிலும் கூறியிருக்கிறது, சத்தியம் சத்தியம் சத்தியம். நிராசையாய் இருப்பதே துக்க நிவர்த்தி; அருளால் அறிவதே நித்தியானந்தம்; நித்தியானந்தமாவது, விதேக கைவல்லியம்.

ஓ மனமே கேள்! கேவலம் அவியக்தமாயும், லெக்ஷண சூனியமாயும், உள்ள பரமாத்மாவுக்கு மூன்று லெக்ஷணம் தோன்றி, அதானது சத்து சித்து ஆனந்தம், இந்தப்படியுள்ள சச்சிதானந்த லெக்ஷணத்தை, யார் அறிவார்கள் என்றால், இதுகளில் சத்தானது சித்தை அறியும், சித்தானது ஆனந்தத்தை அறியும்; ஆனந்தமானது ஜீவாத்மாவினை அறியும்; ஜீவாத்மாவானது தன்னுடைய அம்சமான அனாத்ம வஸ்துக்களை அறியும், அனாத்மவஸ்துக்களானது, அந்தக்காரமாய் இருக்கிறது. ஆதலால் ஆத்மாவினை மறைக்

கப்பட்டது அனுத்ம வஸ்துக்களாம் என்றறிக. ஆதலால், அனுத்ம வஸ்துக்களை எல்லாம் அறிவு கொண்டு, ஆத்மாவி லடக்கி, ஆத்மாவினை, குருவருளால், பரமானந்தத்திலடக்கி, பரமானந்தத்தை சித்தத்தில் இருத்தி, சித்தத்தை சத்திலே பார்த்து, சத்தும் அசத்தும் சதசத்தும் இல்லாமல், அவி யக்தமாயும், லெக்ஷண சூன்யமாயும், சத்தியமாயும், நித்திய மாயும், துரியமாயும், அதீதமாயும், நிர்ச்சல, நிஷ்கள, நிர்க் குண, நிராதாரமாயும், சர்வபரிபூரண சுயம்பிரகாசமாயும், விளங்குவதாம் பரமாத்ம வஸ்து.

ஓ மனமே கேள்! ஜீவன் சப்தாதி விஷயத்திலுள்ள பிரியம்போல், ஆத்மாவில் பிரியம் வந்தால், சித்தம் பரிசுத்த மாயும், ஸ்ரீ சற்குரு பக்தி விஸ்வாசம் உண்டாகும்; ஸ்ரீ சற்குரு பக்தி விஸ்வாசமில்லாமல், அனேக ஞான நூல் களைப் பார்த்து, அகங்கொள்ளாமலும், சித்தம் பரிசுத்த மாக்குவதே பிர்மக்கியானம்; சித்தம் பரிசுத்தமாக்குவது மகா பிரயாசம். சித்தம் அசுத்தமாக்குவது, பெண்கள் முதலான ராகாதிகள் பதிமூன்றும். ஆனலும் சித்தம் பரிசுத்தமாக்கும் பொருட்டு, ராகத்துவேஷாதிகளுக் கேது வான சம்சாரக் கூட்டங்களும், சுஜன பந்துக்களிடத்தி லுள்ள பிரியமும் வேரோடு பிடுங்கி தூரத்தள்ளிவிட்டு அதிக கருணையும், பொறுமையும், அருளும் பொருந்தின, ஒரு ஞானதேசிகரை அன்பாய் அடுத்து, உடல் பொருள் ஆவி மூன்றும், புண்ணிய பாப மிரண்டும் சத்தியமாய் தாரைவார்த்து, ஆண்டவன் அடிமையாய் பக்தி விஸ்வாசத் துடன் பாதுகாத்து பணிவிடை செய்து பழகி வருவதா னல், சித்தம் பரிசுத்தமாகும். சித்தம் பரிசுத்தமானல் பசுபதி பாசமற்று, தத்துவ ஞானம் விளங்கும்.

ஓ மனமே இன்னும் கேள்! எதைப் படித்தாலும் எந்த ரூபத்தை நினைந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும்,

அகங்கொள்ளாமல், எல்லாம் பிர்ம்ம சுரூபமென்கிற விஸ்வாசம் வந்தால், நானெனதென்கிற அகந்தையும், அகமமதையும் அணுவளவானாலும் இருக்குமா? இராதென்பது நிச்சயம். சத்தியமாய் விசாரித்து பாரும். உன்னுடைய சந்தேகமெல்லாம் தீரும். ஆனாலும் பொய்யான அகங்காரத்தை, அஞ்ஞானிகள் மெய்யாக எண்ணுவது சுபாவிகம். அகங்காரமானது அசுத்த மாயாசத்தி; அந்த மாயாசத்தியானது பரமாத்மாவினுடைய அம்சமாம்; ஆதலால் அந்த மாயைக்கும், ஆத்மாவுக்கும் ஆதி மத்தியாந்தம் கிடையாது. ஏனெனில் சூரியனும் பிரகாசமும் போல், ஆத்மாவும் மாயையும் ஏகமாம் என்று அறிக. உதாரணம், பரமாத்மாவானது கடல்போலேயும், மாயையானது அந்த கடலின் அலையைப் போலேயும், ஜெகத் ஜீவர்களும், திருமூர்த்தி முதலான தேவாதி தேவர்களும், அந்த கடலின் அலையில் தோற்றப்பட்ட நுரைகளைப்போலவும் காண்க.

ஓ மனமே கேள்! கடலானதும் ஜலம், அலையானதும் ஜலம், நுரைகளானதும் ஜலம், அதுபோல் நிர்க்குண பிர்ம்மத்திலிருந்தும் தோற்றப்பட்ட மாயா குணசகிதமான, ஜெகத் ஜீவர்களும், திருமூர்த்திகளும் ஏகமாயுள்ள பரப் பிர்ம்மமாம், வேறில்லை. ஆதலால் சகுண நிர்க்குண மிரண்டும் ஏகமாய் பார்த்து, அசஞ்சலமான ஸ்ரீ குரு பக்தி விஸ்வாசத்துடன் சேவிப்பது மகா பாக்கியம்; இதுவே எல்லாவற்றிலும் சிலாக்கியம்; இதனால் எமதண்ட பாசமும் நீங்கி; ஜெனன மரணாதி துன்பங்களும் நரகங்களும் தீரும். அதுவுமல்லாமல் ஆனந்தம், ஆயிசு, கீர்த்தி, சித்திகளும், தர்மார்த்த காம மோக்ஷ மிதுகள் அடையலாம். சந்தேகம் வேண்டாம்.

ஓ மனமே கேள்! முதலாவது சற்குணத்தைவிட்டு நிர்க்குணத்தை சேவிப்பதற்கு, எல்லோராலும் அசாத்தியம்; பக்தி இல்லாமல் போனால் முத்தியுங் கிடையாது. ஆதலால் நிர்க்குணத்திலிருந்தும், தோற்றப்பட்ட சகுணமும் வேறு அல்லது நிர்க்குணமாம் என்று அறிந்து அந்த சகுணத்தில் பக்தி விஸ்வாசமுடையவாளும், நிர்க்குணமாம் சந்தேகம் வேண்டாம். யாதொருவரானாலும், தன் உள்ளே பரமாத்மாவையும், பரமாத்மாவுக்குள் தன்னையும் பார்த்து உபாசிப்பதை, ஆத்மயோக ஸங்க்ரஹ மென்றும், எல்லா யோகத்திற்கும் முடிவானதென்றும் தாற்பரியம்; இப்படிக் கொத்த மகத்துக்கள் எதைச் செய்தாலும், எல்லாம் பிர்ம்மார்ப்பணமாதலால், அதுகளெல்லாம் பரிசுத்தமாய், பரப்பிர்ம்மமாய் இருக்குமென்பது சத்தியம்.

இதைக் கேட்ட மனம்:—ஓ சுவாமி! ஜீவனுடைய லெக்ஷணமாவது யாது? ஜீவபாவனை விட்டுவிடா லெக்ஷணமாவது யாது? ஜீவபாவனை விட்ட லெக்ஷணமாவது யாது? பரப்பிர்ம்மத்தின் லெக்ஷணமும் யாது? திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க அறிவு கூறியது:—

ஓ பரிசுத்தமுடைய மனமே கேள்! ஜீவலெக்ஷணமாவது அளவிறந்தகோடி ஆகையால் அதை ஒருவருக்கும் அறியக்கூடியதும் சொல்லத்தகுந்ததும் அல்ல; ஆனாலும் குருவருளால் அறிந்தமட்டும் சொல்லுவேன் கேளும். ஜீவ லெக்ஷணம், அண்டசம், சுவேதசம், உர்பிச்சம், சராயுசம் இந்தப்படி நால்வகை யோனி, எழுவகைத் தோற்றம், எண்பத்துநான்கு நூறாயிரம் கோடி ஜீவராசிகளில் பிர்ம்மதேவன் முதல் கிராமிகிரீடாதிகளாயும் கற்பகவிருக்ஷமுதல் திரணம் வரையுள்ள ஸ்தாவர ஜெங்கமங்களாயும் சராசர ரூபமாயுமுள்ள சரீரத்தில் ஜீவர்கள் பஞ்சகோசவிலக்ஷணனாயும்

அவஸ்தாத்திரிய கர்த்தராயும் போகபோச்தாவாயும் ஸௌபாப விகாரமுடையதாயும் பசி, தாகம், சுகம், துக்கம் ஜெனனமரணாதி துன்பமுடையதாம். இந்தப்படி அநேக விதமான இன்பதுன்பப்பட்டு பவசாகரத்தில் மூழ்கி இரு கரையும் காணுமல் பரிதாபப்பட்டு அலேவதே ஜீவலெக்ஷண மென்றறிக. இன்னும் கேள்: ஜீவபாவனே விட்டுவிடா லெக்ஷணமாவது முன் ஜீவலெக்ஷணத்தில் கூறினபடியுள்ள சராசர சுரூபமும் ஏகரூபமாயும், விஸ்வரூபமாயும், பிர்ம்மாண்ட பஞ்சகோச விலக்ஷணனுய் ஏக ஜீவனுயும், சாக்கிராவஸ்தையோடு கூடியும் , பாலென பரமாயும் உள்ளதுதான் ஜீவனுடைய விட்டுவிடா லெக்ஷண மென்றறிக. இனி ஜீவபாவனே விட்ட லெக்ஷணம் கேள். நீரில் குமிழி போலவும், அக்கினியில் தூமம் போலவும், நூலால் படம் போலவும், மண்ணுல் குடம் போலவும் ஆத்மாவுக்குள்ளிருந்தும் ஆரோபமாய் தோற்றப்பட்ட மாயாகுணகாரியமான தேகாதிப் பிரபஞ்ச வஸ்துக்களே எல்லாம் ஆத்மாவுக்குள் அடக்கி, அபவாதமானபின், ஜீவபாவனே விட்ட லெக்ஷணமென்றறிக. இன்னும் கேள்! பிர்ம்ம லெக்ஷணமாவது சிருஷ்டி, திதி, சம்காரங்களுக்கு காரணமாயும் அகாரணமானதும் பரபிர்ம்ம அவஸ்தாத்திரியங்களிலும் தேகேந்திரியாதிகளிலும் ஜீவனுயிருந்து விசேட்டிப்பதும் பரபிர்ம்ம. முக்குணத்துக்கும் உள்ளும்புறமும் பரிபூரணமாயும் சூத்திராத்மாவாய் விளங்குவதும் பரப்பிர்ம்ம; மூலப்பிரகிருதி மகதத்துவ அகங்காராதிகள் சர்வமும் தானுய் அதில் சைதன்னியமாய் இருப்பதும் எல்லா வஸ்துக்களுக்கும் மூலமாய் உள்ளதும் பரபிர்ம்ம; சத்தினும் அசத்தினும் பரமாயும் நித்தியமாய் உள்ளதும் பரபிர்ம்ம; சூரியபகவான் உலகமெல்லாம் சேஷ்டிப்பித்ததுகளில் பிரகாசரூபனுய் இருந்தும் நிபந்தனுயும் நிற்சங்கனுயும் லோகதத்துவங்களுக்கெல்லாம்

சாக்ஷியாய் விளங்குவதுபோல் ஏகமாய் சர்வத்திலும் காரணம் பரபிர்ம்ம; சற்குணமாயும் நிற்குணமாயும் சற்குண நிற்குண மிரண்டுமில்லாமலும் வாக்கு மனக் காயங்களினல் அறியக்கூடியதாயும், பரமானந்த பரிபூரணமாயும், சுயஞ்சோதியாயும் விளங்குவதுமாம் பரபிர்ம்ம லெக்ஷணமென்றறிக.

ஓ மனமே! நீ முதலாவது இந்நூலின் ஆரம்பத்தில், பெந்த மோக்ஷ மிரண்டும் ஆத்மாவுக்கோ சரீரத்துக்கோ என்று கேட்ட கேள்விக்கு சமாதானம் சொல்லுவேன் கேள். உதாரணம்:- சரீரமானது பின்னுப்பிரகிருதி குண காரியமாம். ஆத்மாவானது அபின்னுப்பிரகிருதி காரியமாம். இவைகள் இரண்டும் கூடி இரண்டறக் கலந்திருப்பதுதான் அகங்காரம். அகங்காரம் இருந்தமட்டும் பெந்த மோக்ஷங்களிரண்டும், சத்தியமாய் உள்ளதாகத் தோற்றுமென்பது நிச்சயம். இதுகளிரண்டும் வேறு வேருகப் பிரித்து பார்க்கும்போது, பெந்தமேது மோக்ஷமேது? அதானது அகங்காரம் நாசமானல் பின்னுப்பிரகிருதி காரியம் நசிக்கும். அங்ஙனம் பின்னுப்பிரகிருதி நாசமானல் அகங்காரமேது? அகங்காரமில்லாவிட்டால் சரீரமேது? பெந்தமோக்ஷமேது? அங்ஙனம் சரீரத்துக்கு பெந்தமோக்ஷமில்லாவிட்டால் திரிகாலத்திலும் நாசரெகிதமான ஆத்மாவுக்கு பெந்தமோக்ஷமேது? ஆதலால் பெந்தமோக்ஷமிரண்டும் மாயையால் தோற்றுவதல்லாமல் அதுகளிரண்டும் எதார்த்தமல்ல. மாயை நாசமானல் ஆத்மா நிர்வாணமாம் என்று மறிக. அங்ஙனம் எப்படி எனில் பரமஞானிகளுடைய அபிப்பிராயத்தை கேளும். வாக்கு மனக்காய மூன்று மிருந்தமட்டும் சுருதி ஸ்மிருதி வேதசாஸ்திர புராண இதிகாசாதிகளும் தேகாதி பிரபஞ்ச வஸ்துக்களும் சத்தியமாய் தோற்றுவது

சுபாவீகம். இதற்கு சந்தேகமில்லை. வாக்கு மனக்காயம் மூன்றும் அடக்கி அந்தக்கரணம் பரிசுத்தமானல் முன் கூறினபடி உள்ள சுருதிவேதாதிகளும் தேகாதிபிரபஞ்ச வஸ்துக்களும் சொர்ப்பனசமானமாமென்றறிக; அங்ஙனம் எப்படி எனில் சொர்ப்பனம் கண்டுணர்ந்தபின் அந்த சொர்ப்பனத்தில் கண்ட வஸ்துக்களெல்லாம் பொய்யா மென்றும் அறிவதுபோல் எதார்த்த ஞானத்தினல் பார்க்கும்போது தேகாதி பிரபஞ்ச வஸ்துக்களும் சத்தியமாய் தோற்றுவது சுபாவீகம். இதற்கு சந்தேகமில்லை. வாக்கு மனக்காயம் மூன்றும் அடக்கி அந்தக்கரணம் பரிசுத்த மானல் முன் கூறினபடியுள்ள சுருதி வேதாதிகளும் தேகாதி பிரபஞ்ச வஸ்துக்களும் சொர்ப்பன சமானமாமென்றறிக. அங்ஙனம் எப்படி எனில் சொர்ப்பனம் கண்டுணர்ந்தபின் அந்த சொர்ப்பனத்தில்கண்ட வஸ்துக்களெல்லாம் பொய்யா மென்றும் அறிவதுபோல் எதார்த்த கியானத்தினல் பார்க்கும்போது தேகாதி பிரபஞ்ச வஸ்துக்களெல்லாம் பொய் பொய். ஆனலும் ஸ்ரீ சற்குருவின் திருவருள் ஆனபின் சந்தேகம் எல்லாம் தீரும்; இது பரம ரகசியமாம் என்பது சத்தியம் சத்தியம்.

ஓ மனமே கேள்! முதலாவது சகுணத்தியானம் செய்து பழகி வருவதானல் அது சாரூப்பிய முத்தி; அங்ஙனம் சாரூப்பிய முத்தியடைந்து நிற்குணத்தியானம் செய்து பழகி வருவதானல் அது சாயுச்சிய முத்தி; ஆதலால் முதலாவது சகுணத்தியானம் செய்யவேண்டும். அங்ஙனம் சகுணத்தியானமாவது எப்படி எனில்:— பஞ்ச பூதங்கள் ஐந்தும் மூலமாயை ஒன்றும் விந்து நாதமிரண்டும் ஆக எட்டும் ஏக சுரூபமாய் மாயாகுண சகிதமாய் கண்டு உபாசிப்பதை சகுணத்தியான மென்றும், இந்தப்படி

சகுணத்தியானம் செய்து பழகி வருவதானல் மனோலய மடையும், மனோலயமடைந்தால் மாயாகுண சகிதமாயுள்ள சகுணமும் லயமடையும்; மாயாகுணம் நாசமானல் நிர்க்குணத்தியானம் செய்து பரிபூரண பிர்ம்மானந்த பதமடையலாம், சந்தேகம் வேண்டாம்; ஆதலால் இதை ஆத்மயோக சங்கரகமென்றும் முன்கூறியதின் தாற்பரியம். அரி அர நமசிவாய என்றும் அனவரதம் ஸ்ரீ சற்குருவே நமோ நமகா.

ஆத்மயோக ஸங்க்ரஹம் சம்பூரணம்.

குருவருள் மகாவாக்கிய சாராமாமிது; சத்தியம். சத்தியம்.

ஸ்ரீ சற்குருவே நமோ நம:

காம தகனம் கதை.

மனம் :— ஓ அறிவாயிருந்த பரம்பொருளே! அடியேனுடைய விண்ணப்பமாவது இந்த உலக சிருஷ்டி கர்த்தா பிர்மாவாமென்று சாஸ்திரங்களில் கூறியது சரி, ஆனலும் சிருஷ்டிக்கு மூலகாரணமுண்டாவென்று கேட்க,

அறிவு :— ஓ மனமே கேள்! இந்த உலக சிருஷ்டிக்கு மூல காரணம் காமன்.

மனம் :- காமனுடைய உற்பத்தி ஸ்தானமாவது எது?

அறிவு :— நிஷ்களமான பரப்பிர்ம்மத்திலிருந்தும் தோற்றமாம்.

மனம் :— அந்த நிஷ்களமான பரப்பிர்ம்மத்திலிருந்தும் பிறந்த காமன் எப்போது நாசமடையும்?

அறிவு:—நிஷ்களமான பரப்பிர்ம்மத்திலிருந்தும் பிறந்த காமன் கோடானகோடி கல்பகாலமானுலும் ஒரு காலத்தும் நாசமடையாது.

மனம் :— காமனை ஒருகாலத்தில் சிவபெருமான் தட்சணமூர்த்தியா யிருந்தசமயம் நெற்றிக்கண்ணுல் சுட்டதாக புராண இதிகாசங்களில் கூறியது மெய்யா? பொய்யா?

அறிவு :— ஓ மனமே கேள்! புராண இதிகாசங்களில் கூறியது மெய்தான்; அதுகளெல்லாம் பொய்யா மென்று நினைத்தவர்கள் அதோகதியடையுமென்பது நிச்சயம். ஆனுலும் பரமசிவன் தட்சணமூர்த்தியா யிருந்தசமயம் காமதேவன் தன்னுடைய பஞ்சாயுதத்தை யனுப்பியது சரி; அந்த சமயம் அந்த பஞ்சாயுதத்திற்பட்ட தட்சணமூர்த்தியும் மஹா மோகத்தையடைந்து, அந்த மஹா மோகத்தினுல் அதிக காமத்தையும், கொடுங்கோபத்தையுமடைந்து, அந்த கோபாக்கினியில் காமனுடைய தூல சரீரத்தை சுட்டாரென்று புராண இதிகாசங்களில் கூறியதின் தாத்பரியம்; ஆனுலும் அந்த காமதேவனுடைய சூக்ஷம சரீரத்தையும், காரண சரீரத்தையும் சுட்டதில்லை என்பது நிச்சயம். ஏனென்றுல், ஸ்தூலம், சூக்ஷமம், காரணம் என்று மூன்று சரீரமும் சராசர சீவர்களுக்குமுண்டு. ஆனுலும் அதில் ஸ்தூல சரீரம் அடிக்கடி நாசமடைந்தாலும் சூக்ஷமம், காரணம் இரண்டு சரீரமும் ஒரு காலத்திலும் நாசமடையாமலிருக்கிறது; அதினுல் ஜனன மரணுதி சம்சார துன்பங்களுக்கு ஹேதுவான ஸ்தூல சரீரம் அடிக்கடி ஆவதும் அழிவதும் சுபாவீகம்; ஆதலால் அந்த காமனும் ஸ்தூலசரீர மெடுத்தாரென்பது நிச்சயம். ஆதலால் காமனை ஜெயிப்பது அசாத்தியம்! காமன் ஒருகாலத்திலும் பிறந்ததுமில்லை ஒருகாலத்திலு மிறப்பதுமில்லை; அது

ஆனுதியாம். ஆதலால் காமனைச் கொல்லுவதற்கு திரு மூர்த்திகளாலும் அசாத்தியமா மென்பது சத்தியம். காமன் தான் ஜெகஸ்ரூபம், காமன்தான் ஜெகத்ஜீவன். காமன் செத்தால் உலகமேது? திருமூர்த்திகளேது? ஜீவர்கள் ஏது? சராசர சீவர்களுக்கும் உற்பத்தி காரணம் காமன். ராகாதி விர்த்திகளில் பதின்மூவர்களில் பிரதானியாயும் மஹா பெலமுடையதாயுமுள்ளதாம் காமனென்று அறிக. ராகத்துவேஷாதி சம்சாரத்தை அபிவிர்த்தி செய்வதற்கு மோக்ஷத்திற்கு விரோதமாயும் உள்ளதாம் காமன். கால மானதுங் காமன்; கர்மமானதுங் காமன்; மூலமானதுங் காமன்; முக்குணங்களுங் காமன்; தபசிகளுடைய தபசை கெடுப்பதுங் காமன்; சாதுக்களே பெற்றதுங் காமன்; உலகமெல்லாவற்றையும் பெற்றதும் காமன்; அதிற் கலியை பெற்று கலகத்தை உண்டுபண்ணி சம்சாரத்தைக் கெடுப் பதும் காமன்; கொடுப்பதும் காமன். இந்தப்படி அடிக்கடி ஜனன மரணுதி சம்சார துன்பங்களே உண்டுபண்ணுவதற்கு முக்கிய காரணம் காமனென்றேயாம்; மற்றில்லை என்பதும் நிச்சயம். ஆதலால் காமன் மஹா பலமுடையவனுயும் உலகத்துக்கெல்லாம் பிரதானியாயும் உள்ளதாமென்றும் மேற்கூறிய தாத்பரியம். ஆனுலும் இந்த உலக நாசத்தின் கண் காமன் நாசமடையுமோவென்றுல் நாசமடையாது. அங்ஙனமெப்படி யெனில் பிர்ம்மப் பிரளயாந்தகாலத்திலும் மூலமாயையோடுகூடி லயமடைந்து சூக்ஷமத்தில் வித்தில் மரம்போலவும் மரத்தில் வித்துபோலவும் நிற்விகற்பமாய் பரப்பிர்ம்மத்தில் லயமடைந்து இருக்கும். ஆனுல் மனே லயமடைந்த மஹாத்மாக்களின் பாதத் தியானமான ஞானுக்கினியில் காமன் நாசமாய் சாம்பலாகுமென்பது சத்தியம். சந்தேகம் வேண்டாம்.

மனம்:— ஓ ஆண்டவனே! நின்றிருவடி மேற்கூறிய நிஷ்கள பிர்மத்திலிருந்தும் பிறந்த காமன் நிஷ்கள பிர்மத்திலே இறந்தாரென்று திருவாய் மலர்ந்தருளியது சரி, சந்தேகமில்லை; ஆனாலும் அந்த காமனுடைய சொரூபமாவது எது? பஞ்சாயுதமாவது எது? வில்லாவதெது? நாணாவது எது? அதனுடைய லட்சணமாவது எது? அதை அனுப்பும் லட்சியமாவது எது? லட்சியார்த்தமாவது எது? அதனுடைய சுபாவீகமாவது எது?

அறிவு:— ஓ மனமே கேள்! காமனுடைய சொரூபமாவது அசத்துவாசனையோடு கூடிய மனமொன்றுதான்; அதாவது அநேக நாமரூபமாயுமிருக்கும்; அதனுடைய பஞ்சாயுதமாவது பஞ்சேந்திரியமாயுள்ள காது, தொக்கு, கண், மூக்கு, நாக்கு இந்த ஆயுதங்களஞ்சுமாம். அதனுடைய வில்லாவது புத்தி; அதனுடைய நாணாவது சித்தம்; அதனுடைய சுபாவீகமாவது மாயா அகங்காரம்; அதனுடைய லட்சியமாவது ஜீவன்; அதனுடைய லட்சியார்த்தமாவது பிரணவமொன்றேயாம்.

ஓ மனமே கேள்! அதுகளெல்லாம் இந்தப்படி இருக்க இதுகளை எல்லாம் மேற்கூறிய லட்சியார்த்தமான பிரணவ சொரூபமான ஸ்ரீ சத்குருவின் திருவடியிலடக்கி சின்னபின்னமாக்கி திருவுளம் பெற்றால் அந்த சத்குருவின் திருவருள் ஞானக்கினியில் மாயாவாசனையோடுகூடிய காமனும் அந்த காமத்தாலுண்டான மாயாவாசனையும் எல்லாம் அடியோடே நசிக்கும். பிர்மானந்தபதமடையலாமென்பதே மேற்கூறிய தாத்பரியம்.

ஓ மனமே கேள்! முன்னம் ஒருகாலத்தில் சிவபெருமான் காமனை சுட்டாரென்றும் புராணங்களில் கூறியது

பிராகிருதமாம். ஆனாலும் அந்த காமனைச் சுட்டாரென்பது அகங்காரமான ருத்திரன்; அகங்காரத்தினால் காமனைக் கொல்லமுடியாது; நிச்சயம். அகங்காரமிருந்தமட்டும் காமனு மிருக்குமென்பதற்குச் சந்தேகமுண்டா?

ஓ மனமே கேள்! அகங்காரத்தைவிட்டு சித்தம் பரிசுத்தமாக்கி ஸ்ரீ சத்குருவின் திருவருள் பெற்று பூரணானந்தப்பொருளை யடைந்தால், காமமேது? காலமேது? கலியேது? உலகமேது? எல்லாம் பிர்மானந்தமயமாய் பார்ப்பார்களென்பது நிச்சயம்.

ஓ மனமே கேள்! பகவானிடத்தில் சொரூப சந்தோஷமடைந்தாலே பக்தி செய்யக்கூடும்; சத்பக்திகொண்டு ஏகாந்தபக்தனானால் மனம் லயமடையும். மனம் லயமடைந்தால் அரூபசந்தோஷமாய் ஆமோகானந்தமா யிருக்கலாம் சந்தேகம் வேண்டாம். முக்குணத்திலும் காமனுடைய கல்யாணமாம்; நிற்குணத்தில் பூரணகல்யாணம்; பூமி முதல் நாதம் வரையில் மூவுலகமாதலால், உலகமெல்லாம் காமரூபமான கர்மரூபமாயும், கடவுளின் சொரூபமாயும் எவனொருவன் காமத்தையும் கர்மத்தையும் தூரத்தள்ளி ஸ்ரீ சத்குருவின் திருவருள் பெற்ற மஹான்களிடத்தில் காமன் பூரணகாமனா யிருக்குமென்பது சத்தியம். இதனுடைய அனுபவத்திலும் உண்மையாக விளங்கும் பொருட்டு அபேட்சையுடைய மாந்தர்கள் ஸ்ரீ சத்குருவின் திருவருளான நேதிநேதி மஹாவாக்ய பிரமாணங்களினாலும் அடிக்கடி அத்தியாரோபம் அபவாதமிதுகளினாலும் சந்தேகமெல்லாந் தீரும். இது பரமரகசியமாமென்றுமறிக. எல்லாம் பரிபூரணத்திற் கலந்த தேஜோமய ஜீவபிர்மவைக்கியம்.

மனம்:— ஓ சுவாமி! ஞானிகள் ஞானக்கினியில் காமனைச் சுட்டாரென்றும், காமமும் கர்மவினைகளும் விட்டவாளுக்கே ஞானம் வரும் என்றும், மேற்கூறி இருக்கிறது. இதுகளிரண்டில் எதை நாம் நம்பவேண்டுமென்று கேட்க,

அறிவு:— ஓ மனமே கேள்! அஞ்ஞானமிருந்தமட்டும் ஞானம் பிரகாசிக்க இல்லை என்றும், அஞ்ஞானம் நீங்கி விட்டால் ஞானம் சுயம்பிரகாசமாய் விளங்குமென்றுமறிக. ஆதலால் முதலாவது அஞ்ஞானம் நீங்கும்பொருட்டு அப்பியாசம் செய்யவேண்டும். ஞானக்கினியில் சர்வ கர்ம வாசனையும் பாபமும் நசிக்குமென்றும், அதற்கு காமமற்றால் கர்மமுத்தியாகுமென்றும், மேற்கூறியது உண்மைதான். ஆனாலும் முதலாவது காமம் விட்டு கர்மமுத்தியாகும் பொருட்டு முயற்சியுடன் ஒரு சத்குருவையடுத்து காமமெல்லாம் அந்த குருவடியில் சமர்ப்பணமாக்கி, குருவடி பூஜை செய்து, பழகிவருவதானால் காமமெல்லாம் அந்த பரமாத்மாவிலடங்கும். காமமெல்லாம் பரமாத்மாவிலடங்கி விட்டால் கர்மவினைவிட்டு பூர்ணக்ஞானம் சுயம்பிரகாசமாய் விளங்கும். காமமானது கடலாமென்றும், கர்மமானது அலையாமென்றும், மோக்ஷமானது கரையாமென்றும், இந்த காமவலையை யறுத்து காமக்கடலைத் தாண்டி பிர்மானந்தமாய் இருக்கலாமென்கிற புத்தியும் பக்தி விஸ்வாசமுமுடையவாளுக்கு ஓடமானது தன் சரீரம். ஓடக்காரன் குரு. ஆனாலும் அந்த ஓடக்காரன் பரம குரு பக்தியும் பரமஞானமுமுடையவானை ஓடக்காரனாக நம்பவேண்டும். ஓடக்காரன் பழக்கமுள்ளவனாயும் சுவாதீனமாயிருந்தாலல்லவோ ஓடம் நேர்வழியோடும். ஓடம் நேர்வழி போனாலல்லவோ கடலைக்கடந்து கரை சேரலாம். ஆதலால் ஞானானுபவமுடைய சத்குருவை நம்பவேண்டும். பூசையின்

முடிவானது குருபூசை. எல்லா சங்கல்பத்திலும் தியானத்திலும் முடிவானது குருபதத் தியானம் எல்லா கீர்த்தனைகளிலும் முடிவானது ஸ்ரீ.குரு கீர்த்தனம். எல்லா சாத்திரங்களிலும் முடிவானது குருமஹாவாக்யம் பிரமாணமாம். எல்லா கர்மத்திலும் முடிவானது குருதிருவடிக்கு பணிவிடை செய்வதாம். எல்லா தீர்த்தங்களிலும் முடிவானது குருவின் பாததீர்த்தமாம். எல்லா க்ஷேத்திர உபவாசங்களிலும் முடிவானது குருவின் திருவடிக்காவல். எல்லாவற்றிலும் முடிவானது குருபக்தி. எல்லா ஞானத்திலும் முடிவானது ஸ்ரீ குருவின் திருவருள் ஞானம். ஆதலால் எல்லாவற்றிலும் முடிவானதும் ஸ்ரீ சத்குருவின் திருவடி பூசை செய்வதாம் குருபூசையின் முடிவு. இந்தப்படி அப்பியாசம் செய்து பழகி வருவதானல், அதோகதி அடையாதென்பது நிச்சயம்.

குருபூசையின் கிரமம்.

மனம்:— ஓ சுவாமி! மந்திரதந்திரங்களிலும் அநேகவிதமான பூசாவிதானங்களிலும் முடிவானது குருபூசையாமென்றும், திருவாய் மலர்ந்தருளியது சரி, ஆனலும் அந்த குருபூசை உள்ளபடி செய்யும்பொருட்டு அடியேனுக்குள்ளபடி உபதேசித்தருளவேண்டுமென்று கேட்க,

அறிவு:— ஓ மனமே கேள்! குருபூசை என்பதின் தாத்பரியம் கர்ம முடிவாம். கர்ம முடிவதே கிருதார்த்தம். அப்படி கர்மம் விட்டு புருஷார்த்தமாகும்பொருட்டு, முன்கையிருப்பிருந்து புண்ய பாப மிரண்டும் ஸ்ரீ சற்குருவின் திருவடியில் சமர்ப்பணமாக்கி, நிராசையுடன் உடல், பொருள், ஆவி மூன்றும் தாரைவார்த்து வாக்கு மனக் காயங்களினலும் சோடசோபசாரம் ஆர்க்யபாத்தியாதி

அபிவாத்தியங்களினுலும் ஜலகெந்ததீபதூப புஷ்ப நைவேத்தியங்களினுலும் அன்னதானம் வஸ்திரதானம் சொர்ணதானம் முதலான தானதர்மங்களைக்கொண்டு இந்தப்படி சிரத்தாபக்தி விஸ்வாசத்துடன் நிஷ்காமமாய் குருபூசை செய்து பழகிவருவதானுல் இருவினையும் அடியோடே நசிக்கும். இருவினையும் இருவாசனையும் அடியோடே நசித்தால் ஜீவன் முத்தியடையலாம். ஆனுலும் மேற்கூறிய குருபூசை செய்வதும் கர்மம். செய்வது கர்மேந்திரியத்தின் தொழில் கர்மேந்திரியமடக்குவதாம் குருபூசையின் பலன். கர்மேந்திரியம் அடக்கமானுல் குருபூசை வேண்டாம். குருபூசையின் பயனுவது அந்தக்கரணம் நான்கும் இந்திரியங்கள் பத்தும் அடக்கமானுல் அதுவே குருபூசையின் முடிவு. இதின் பயனுவது சத்தியமாயும் நித்தியமாயும் உள்ள பிர்ம்மானந்தபத மடைவதாம்.

இதைக் கேட்ட மனம் ஓ சுவாமி! தாமசகுண மிகுதியாய் இந்தக் கலியுகத்தின்கண் அநேக ஜனங்கள் மகிமையுடைய வேதாந்த நூல்களை முகபாடம் படித்தும், கூட்டங்கூடி ஆத்மாவானது ஏகமென்றும், துவிதமென்றும் குதர்க்கம்பேசி ஒன்றுக்கொன்று சண்டைபிடிக்கக் காரணம் என்னவென்று கேட்க அறிவு கூறியது.

ஓ மனமே கேள்! ஆத்மாவை மறைக்கப்பட்டது அஞ்ஞானுதி மும்மலங்களுமாம். அந்த மும்மலங்களுமற்று, ஸ்ரீ சத்குருவின் திருவருள் பெற்ற மகான்களை அத்வைதிகளென்றும் அறிக. அதானது அனுத்ம வஸ்துக்களாயுள்ள சத்தாதிவிஷயங்களான இந்திரியங்களும் அநேக சங்கல்ப விகல்பத்தோடு கூடிய அந்தக்கரணமும் அடக்கி மனேலயமடைந்தால், அந்த மகான்கள்தான் குணுதீதப்பொருளாயும் எதார்த்தக்ஞானிகளாயும் ஏகமென்றும் துவிதமென்றும்

பிடிவாதம் விட்டவர்களாயும், உள்ள மகத்துக்களுக்கு, ஆத்மாவானது ஏகம். இதைத்தவிர சுத்தப்பிரமாணங்களினாலும், வாக்கு மனக் காயங்களினாலும், ஆத்மாவை அறியக் கூடுவதல்ல என்கிற மகாவாக்கியப்பிரமாணங்களே சத்தியம். சுத்தப்பிரமாணங்களுக்குக் காரணம் வாக்கு, நாக்கு இந்த இரண்டு விடயங்களுமாம். இதுகளை உண்மையாக நம்பிக் கொண்டிருப்பது மனம் ஒன்றேயாம். அத்வைதிகளான மகத்துக்கள் இதுகளை அனாத்ம வஸ்துக்களாம் என்றும் அறிவார்கள்

ஓ மனமே கேள்! இந்த உலகம் பொய்யென்றும், வாக்கு மனக் காயங்களைக்கொண்டு பேசித்திரிவோர்களும் பொய் ஞானிகளாம் என்பதற்குச் சந்தேகம் உண்டா? ஏனென்றால் வாக்கு மனக்காயங்களாலும் எட்டாத வஸ்து ஆத்மாவாதலால் பொய்யாத இந்திரியங்களினால் சொன்ன வாக்கியங்களெல்லாம் பொய். பொய் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆதலால், இந்திரியங்களும் மனதும் அடக்கி அருள் பெற்று, ஆத்மாவில் ஐக்கியமாய், கண்மூடி, மௌனியாய் சமாதியடைவதே மெய்யான வேதாந்தம்.

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஸ்ரீ சற்குருவே நம:

ஹரிசர்வமுகம்

ஸ்ரீ சற்குரு சுவாமிகள் கீர்த்தனை.

வந்தனம்.

குருபாதாம் புஜம் வந்தே
விஸ்வரூபம் ஜெகத் சர்வம்
சர்வாத்மகம் சதா னந்தே
சத்தியம் நித்தியம் நமாமிதே.

தல்பதக் கமலபதே யருணஜக் கருணை செய்யும்
தொல்பதக் கவலையாலே யடியார்க்கு மடியேன்முடியே
அசிபதக் கமலபதி யன்போர்க் கானந்தமாம்
பொருமை மழைக்கிருபை பெய்யுமமிர்தெனக் கருளுவாயே.

சங்காசிவ சங்கராசிவ சங்கராசிவ சங்கரா
சங்கராசிவ சங்கராஹர சந்திரசேகர பாலயாம்.

ஐங்கரன் துணை ஆதியம்மணி
ஐயனும் துணை யாகவே
துய்யனே திருவாய் மலர்ந்தருள்
சந்திரசேகர பாலயாம் (1)

ஓந்தரம் பரம்மாயுரந்தரம்
ஓதுவாய் உபதேசமாய்
அந்தரங்க சமாதியே அருள்
சந்திரசேகர பாலயாம் (2)

அஞ்செழுத்தினு மாதியாம் பரஞ்
சோதியே சுகவாரியே
நெஞ்சிலன்புடன் எங்களுக்கருள்
சந்திரசேகர பாலயாம் (3)

ஆதி யஞ்செழுத்தாதியாம் பரஞ்
சோதியாவதனுதியே
பூதமஞ்சும் விபூதியே யருள்
சந்திரசேகர பாலயாம் (4)

இத்தரம்வெகு தோத்திரங்களை
நித்தியமும் துதிசெய்பவர்
சித்தபங்கஜஞ் சுத்தமாயருள்
சந்திரசேகர பாலயாம் (5)

ஈசனம்மணி நேசனேயிட
பாகமம்மணி பூசனே
நாசிகாமுனை வாசனே யருள்
சந்திரசேகர பாலயாம் (6)

உள்ளமம்பரஞ் சோதியா யுல
கேழிரண்டிலு முள்ளதாம்
வள்ளலே திருவாய் மலர்ந்தருள்
சந்திரசேகர பாலயாம் (7)

ஊசிநின்றது வாசியே
சிவகாசி என்பது பூசையே
நாசிகாமுனை வாசியே யருள்
சந்திரசேகர பாலயாம் (8)

எத்திசைக்கும்மீ தெவ்வுயிர்க்கும்மீ
தெம்பிரான்பர தம்பிரான்
இத்திசைக்கிறை வாயனே யருள்
சந்திரசேகர பாலயாம் (9)

ஏழிரண்டுல கெங்குமாம்பரி
பூரணானந்த சோதியே
பாழுவாய் மனந்தாழுவாயருள்
சந்திரசேகர பாலயாம் (10)

ஐயனே சிவலோகநாயக
மெய்யனே பரதெய்வமே
துய்யனேசிவ துரியனே யருள்
சந்திரசேகர பாலயாம் (11)

ஒருதரம்பர மந்தரங்கமாய்
சிந்தனைசெய்ய ஞேயமாய்
பரதரம்பெரும் பொறுமையை யருள்
சந்திரசேகர பாலயாம் (12)

ஓமனக்கம லாலயத்துளே
காமனைச்சுட்ட கண்ணுளே
வாமனுய்த் திருவாய் மலர்ந்தருள்
சந்திரசேகர பாலயாம் (13)

ஔவனம்மனந் தெளிவடைந்தபின்
எம்பிரான்பதம் கும்பிடும்
துன்பமில்லினி எங்களுக்கருள்
சந்திரசேகர பாலயாம் (14)

அன்புமம்மணி நாதனைசிவ
சின்மயானந்த சம்புவே
இன்பமென்னுயிர்க் கீசனே யருள்
சந்திரசேகர பாலயாம் (15)

அத்தனங்களு மப்பனம்மையும்
தற்பரப் பிரகாசமே
தொம்பரம்பர தெய்வமே யருள்
சந்திரசேகர பாலயாம் (16)

உண்மையென்பது சின்மயானந்த
நிர்மலம் பரிபூரணம்
உண்மையேயிது அம்மையே யருள்
சந்திரசேகர பாலயாம் (17)

விண்ணுமெம்மனக் கண்ணுமம்மணி
நாதமும் குருபாதமும்
எண்ணுமெங்களுக் கெம்பிரானருள்
சந்திரசேகர பாலயாம் (18)

கங்குமப் பகலற்றதங்கமா
யெங்குமாம் சுயஞ்ஜோதியே
பங்கமற்ற பராபரே யருள்
சந்திரசேகர பாலயாம் (19)

கண்ணும் விண்ணுமாய்க் கூடுமம்மணி
கோடிசூரியப் பிரகாசரே
கண்ணுயிர்க் குருநாதனே யருள்
சந்திரசேகர பாலயாம் (20)

சங்கராசிவ சங்கராசிவ
சங்கராசிவ சங்கரா
சங்கராசிவ சங்கராஹர
சந்திரசேகர பாலயாம். (21)

(இ-ம்) நாட்டை—ஏகதாளம்.

பல்லவி.

கணேச பூஜிதமகேச சங்கர சதாசிவா சிவநமாமிதே
பார்வதி பாதிபரா பரமீஸ்வரி நமாமிதே நமசிவாயமே (க)

அநுபல்லவி.

அகேதபூத விநாயகநாயக சுகேது காரண நமாமிதே
குகேசபூஜித சுகாமிநாமிதை நமாமிதே நமசிவாயமே (க)

சரணங்கள்.

அஞ்சிதகுஞ்சித நெஞ்சிலிதம்பர சாம்பசதாசிவ நமாமிதே
பஞ்சரிபஞ்சன பாபவினாசன பரம பராபர சிவாயமே. (க)

சுசேஷபூஷண பரேஷ்டகாரண பராபரே குரு நமாமிதே
குகேச பூரண பரேஷ்ட சேவித நமாமிதே நமசிவாயமே (க)

காலநிசாசர காலவினசன காலசொரூப நமாமிதே
கால நிராமய கமலநிரூபித கோலசொரூப நமாமிதே (க)

அண்டர் புராதி பரிண்டரொழிப்பாய் தொண்டனுமாவர [நமாமிதே
அண்டசராசர குருவரப்பாதம் ஆண்டவரே நமசிவாயமே(க)

கேத்யம்.

இகத்திலொரு பரமுங் காணே
பரத்திலொரு சுகமும் வேணே
மகத்திலொரு முகமுங் காணே
மனதை மனமறியேன் நெஞ்சே.

அருணஜல ஸ்தலம்.

(இ-ம்) மத்யமாவதி—ஏகதாளம்.

பல்லவி.

அண்ணமலைக் கமலே அருள் உண்ணமுலைத் தாயே
இன்னும்வரக் காணேன் கடைக்கண்ணலெனைப் பாரும் (அ)

அனுபல்லவி.

மூலேகுண மூலேகுரு மூலாக்ஷர மத்யே
மேலேவேத மேலேவெகு ரூபாத்மனி தாயே (அ)

சரணங்கள்.

கோபாக்கினி பாபாக்கினி காலாக்கினி நீரே
யோகாக்கினி சுவாலாக்கினி ஞானக்கினி தாயே (அ)

ஆர்த்தியாக்கினி கார்த்தியாக்கினி கிருத்தியாக்கினி நீரே
ஆருக்கினி மாருக்கினி யருணக்கினித் தாயே (அ)

அகிர்தாத்மனி விகிர்தாத்மனி சுகிர்தாத்மனி நீரே
அமுர்தாத்மணி யகிலாத்மணி கருணத்மணி தாயே (அ)

கண்ணே மறைக்கண்ணே கடைக்கண்ணூ ருண்ணிக் கண்
[ணே
மன்னேமலப்பொன்னே கடைக்கண்ணல் வரமருள்வாய்(அ)

(இ-ம்) காம்போதி—ரூபகம்.

பல்லவி.

மய்யருக் கமலத்தி லனுபவமானலும்
ஐயாவுன் பதமுத்தைக் கடைத்தேறும் பெருமாயம் (ம)

அனுபல்லவி.

மெய்யாய்நின் திருப்பாதத் திருவண்ணு மலையிலே
தீர்த்தங்கள் வழியாகும் திருவுள்ளப் பெருமழை (ம)

சரணங்கள்.

அண்ணுவா தம்பிவாவா அண்ணு மலையிலிது
விண்ணவர் நதமாகும் புண்யமான கோடிதீர்த்தம்
பஞ்சபாப விநாசனமாம் பஞ்சநவ பாததீர்த்தம்
வஞ்சனைவிட்டவர் நெஞ்சி லஞ்ஜிதாத்மா கோடிதீர்த்தம் (ம)

நீதிவிட்டவர் கெட்டு நீசமாம் நிலைப்பட்டு
பாடுபட்டுப் பயப்பட்டும் பாழான நரகத்தில்
நீதி நியமகுண சர்துசன் மார்க்கத்தூடே
நேதிநேதியாய்க் கூடி ஏணியேறி வழியாகே (ம)

கோச பஞ்சகம்விட்டு பாழையுந் தள்ளிவிட்டு
பாப சங்கற்பம்விட்ட மௌன சற்குருபாதம்
பக்தி விஸ்வாசமூலம் சித்தசுத்தி விசாரமாய்
தத்துவந் தெரியவேணும் தத்துவமசியாம் ஞானம் (ம)

சாந்தமா யுபசாந்த மந்தசுகந்த வெந்தம்
சிந்தனை செய்யவந்தாய் சாந்தமாய் சிவானந்தம்
ஆதியனுதி ஜோதி கேவல சுயஞ்ஜோதி
வீதமீ ததிமீதி நிர்மல பிர்மரீதி (ம)

ஆசைக் கடலைவிட்டு பாசமுந் தள்ளிவிட்டு
ஆசானடி மலரி லாசாரமாகக் கூடு
கண்ணூர் மார்மாணிக்கமாம் குருவின் திருவடியை
எண்ணியெண்ணி விசேஷமாய்க் கருணைக் கிருப்பிடமாய்(ம)

(இ-ம்) தந்நியாசி—ஏகதாளம்.

பல்லவி.

அருணா கிரீபுரீ யுதய மிதாச்சிது
உலகந் தெளிந்திதை யுணர்ந் தருளாச்சிது (அரு)

அனுபல்லவி.

பலபல பங்கஜம் விரிவது மாச்சிது
மதுபானம் பல வண்டுக ளாச்சிது (அரு)

சரணங்கள்.

மான் மயில் குயில்க ளாடுறதாச்சிது
வாமணி பல கிளிபாடுற தாச்சிது (அரு)

சங்கனி நாதத்தைக் கேழ்க்கிற தாச்சிது
சங்கரி வசி யென்றுபாடுற தாச்சிது (அரு)

ஆரண ரர்ச்சனைக் கால மிதாச்சிது
அமரர்கள் பூசை யிதாரம்ப மாச்சிது (அரு)

காரண பூரணம் ஆரண ராச்சிது
அணிமா திகளைத் தேடுற தாச்சிது (அரு)

சுவாமி யுணர்ந் திருந்தெழுந் தருளாச்சிது
அந்திய சாமமா மாதியி தாச்சிது (அரு)

ஆனந்தம் வெகுமதி தெளிவது மாச்சிது
கோவிலில் பூசைக ளாரம்ப மாச்சிது (அரு)

அந்தண சாந்த ரிதைவர வாச்சிது
அந்தகக் கலசத்தை யாடுவ தாச்சிது (அரு)

ஜெலகெந் தாதிக ளர்ச்சனை யாச்சிது
பஞ்சா மிர்தாச பாயாச மாச்சிது (அரு)

ஜெப கோமாதிகள் தபங்களை வாச்சிது
உபசாரங் கொண் டலங்கிர்த மாச்சிது (அரு)

ஆசாரங்களை யாவது மாச்சிது
அம்மணி நாதங்க ளடிப்பது மாச்சிது (அரு)

சுவாமியு மம்மனு பொருமையி லாச்சிது
நந்தி நாயகர் யெழுந்தரு ளாச்சிது (அரு)

தேங்கனி மாங்கனி பால்பழ மாச்சிது
மத்தளங் திமிந்திமி யென்றடிப்பது மாச்சிது (அரு)

தாசிமார் பலபதம் பாடுற தாச்சிது
பாகதர் பலபதம் பாடுற தாச்சிது (அரு)

தாளங்கள் மேளங்கள் கூடுற தாச்சிது
ஓம்மெய் யென்று னந்தமாவது மாச்சிது (அரு)

வீணா பாணிகள் பாடுற தாச்சிது
நாகிகள் நாடக நடன மிதாச்சிது (அரு)

சங்கீதம் சாகித்யம் தேடுற தாச்சிது
சரிகம பதநி யென்றூடுற தாச்சிது (அரு)

வேதியர் வேதங்க ளோதுவ தாச்சிது
பாதஜ ராசாரம் கூடுற தாச்சிது (அரு)

நவரச குதுகம் நடன மிதாச்சிது
நாம விசேஷம் பாடுற தாச்சிது (அரு)

அடியார்க் கடிபணி யடிக்கடி யாச்சிது
அடியேன் குருபதம் கண்ணூ ராச்சிது (அரு)

திருவடி பணிவதே வேலை யிதாச்சிது
திருவுள மெங்கும் பூரண மாச்சிது (அரு)

(இ-ம்) நாதநாமக்கிரியா—ரூபகம்.

பல்லவி.

காமவல்லி கர்ப்பவல்லி கனகமா மலைவல்லீ
கைவல்லி நவவல்லி கைலாசா லயமல்லீ (காம)

அனுபல்லவி.

உள்ப்பூவில் சுகவல்லி யுல்லாசமான வல்லீ
சற்குரு சகுணமல்லி சந்தோஷமான வல்லீ (காம)

சரணங்கள்.

நித்தியசுகமான வல்லி நிற்குண பிர்மவல்லீ
சத்தியமானச வல்லி சச்சிதானந்த வல்லீ (காம)

தண்டாடுந் தாமரைவல்லி கண்டாடுங் கொசுமவல்லீ
வண்டாடு மமுர்தவல்லி கொண்டாடு மதுரவல்லீ (காம)

கண்ணூர்க் கமலவல்லி காருண்யாம் வரவல்லீ
அவரே சற்குருவல்லி யம்பலத் தெய்வமல்லீ (காம)

(இ-ம்) காம்போதி—ரூபகதிசிரம்.

பல்லவி.

மனமே வாமனமே நீ நித்தியானந்தத்தை நாடு
மனமே நினைந்தால் நித்தியம் நினைவே நாமென்றுபாடு (மன)

அனுபல்லவி.

மதுவுண்டு வண்டுகூடி யானந்தமாடிப் பாடி
குருவடிப் பொடிசூடி கூடிவிளையாடி யாடி (மன)

சரணங்கள்.

மலைக்குச்சமான மனமே நாமென்று பாடு
நிலைக்கும் நிலையில்விட்டால் நீயே நானென்று பாடு
ஆடுவாயே பாடுவாயே யானந்தத்தைக் கூடுவாயே [யே
அகிலமுர்த வித்தை யுண்ணுவாயே யற்புதத்தைப் பாடுவா

கூடுவாயே குருபாதம் பாடுவாயே நரஹரி
நமாமிதை நடேநடே நமீநமீ யென்று பாடு
அரமாடு பரமாடு பரம்பொருள் தெரிந்தாடு
தெரிந்தவர் பாதமுத்தை நினைந்து நித்தியமும் நாடு (மன)

அந்தமாடு நந்தமாடு யந்தசிந்தை விட்டுப்பாடு
அந்தரங்க மானவரை யாடிவிளையாடிப் பாடு
அமலனே விமலனே யனுகூல பரதேசி
அகமெய் நினைந்து நித்தியம் திருமெய்யென்றுடிப் பாடு (ம)

கடலாம் பராபரையி லலையாமல் நின்றுபாடு
நிலையா நடுக்கடலில் பரிசேறிப் பதம்பாடு
மரவிரி மானுந்தத்தில் கனவிழிக் காலத்தீயால்
புரமெரி செய்தவரை யிருவினை விட்டுப்பாடு (மன)

ஜனிக்குநாள் பட்டபாபம் மறிக்குநாள் தீருமென்றும்
பழிக்குஞ் சற்சனமென்றால் பதிக்குமே நரகத்தில்
கடைக்கண்ணூர்க் குருபாதம் மனக்கண்ணே நினைந்துநீ
வரக்கண்ணு லவரைநாம் பரக்கண்ணும் பதம்பாடு (மன)

(இ-ம்) சாவேரி—ரூபகம்.

பல்லவி.

என்னென்ன பாபஞ்செய்தேனோ நானய்யா ராம ராமா
ஏனிந்தப் பாபஞ்செய்தேனோ ராமய்யா ராம ராமா (என்)

அனுபல்லவி

உன்னை மறந்துவிட்டேன் இன்றும் பிறந்துவிட்டேன்
நீசா நிலையிற்பட்டேன் நீதியறியாக் கெட்டான் (என்)

சரணங்கள்.

பத்துமா தஞ் சுமந்துபெற்ற தாயை மறந்தேன்
தத்துவம் பதமறந்தேன் தானேதான் மெய்மறந்தேன்
கைமறந்தேன் கால்மறந்தேன் கண்மூக்குச் செவிமறந்தேன்
வாக்கும்நாக்கு மறந்தேன் நானேநான் பொய்மறந்தேன் (எ)

அன்ன மாசையிற்பட்டேன் மாதர்யோனியுட் புக்கேன்
கீடாதியூடே திரேகம் கோடான கோடியாச்சே
கோடான கோடி பாபஞ்செய்த கூடமாமிதை
கூடாமலினி மேலும் பாடுவாய் ராமநாமம் (என்)

புல்லாதி முதலான யெல்லாஜென்மமு மாச்சே
இல்லை போகவும் போச்சே யிந்தக் காயமும்மூச்சே
சீவேசா ஜெகல்பேதம் மாயாவாசனைப் பட்டு
ஜென்மக்கடலில் வீழ்ந்து கர்மவலையிற் பட்டேன் (என்)

வாடா மல்லிகைப் பூவைச்சூடும் புருஷனுக்கு
கூடும் சுகந்தத்தைப்போற் கூடுவாய் குருபாதம்
சற்குருபாத மிரண்டும் தத்துவமசி யென்றெண்ணு
சித்தம் விளக்கமானல் நித்தியமாம் பரமாத்மா (என்)

(இ-ம்) மோகனம்—ஏகதாளம்.

பல்லவி.

அருண திவ்வியாலயா பாலயா பாலயா
கைலயா கைநிலை கைலா சாலயா (அரு)

அநுபல்லவி.

தருண திவாகர கோடி சமானன
திவ்விய மான சமான சமாலயா (அரு)

சரணங்கள்.

தூற்சட பார மாற்சவ வீரியம்
ஆச்சரியம் பரமாத்ம விசாரம் (அரு)

நீறுடு சூலம் பாச கபாலம்
பாலன ரூபவ ரூபம ரூபம் (அரு)

கௌரி விநோதம் பரமபுராதம்
சௌரி முராரி சமார்ச்சன பாதம் (அரு)

அம்பிளி தும்பை யம்முதி சூடும்
எம்பெரு மானடி யெம்முடி சூடும் (அரு)

வெள்ளுறு வேலொடு மான்மழு சங்கரி
ஆடக நிர்மல யோக சமுகம் (அரு)

ஐம்பது லக்ஷம் சம்முக கிங்கரா
ஒருமையோ டொருமையி லேறி விமானம் (அரு)

வெண்மணி மேடை பொன்மணி நாதம்
அம்மணி கண்மணி சின்மணி யல்லவோ (அரு)

அருண கிரிக்கும் பரம புரிக்கும்
அடிக்கடி யடிமலர் முடிமேற் சூடி (அரு)

(இ-ம்) காபி—ஆதிதாளம்.

பல்லவி.

கேசவயானே கேவலக்ஞானே ஈசனே பரனே பராபரமே (கே)

அனுபல்லவி.

சூலகபாலம் வாலகோபாலம் லீலவினோதம் ஈரேழுலகம் (கே)

சரணங்கள்.

காலவிசேஷம் கலியுடசேஷம் காரண குருவின் கருணை
விசேஷம் (கே)

பஞ்ச பஞ்சாத்மா பாபபுண்யாத்மா பார்ப்பவர்க்கானந்தமாம்
பரமாத்மா (கே)

காசியில் வாசா காரணரூபா தேசிகதேவ தேவ தேவேசா (கே)

இப்புற பாலா முப்புற காலா நிற்குண பூரண நிர்மல தேவா
திருமலை யானே திருவடிதானே யருணகிரீச குகேசமகேசா
சுரநதிசூடி புரிசடை யூடே பனிமனிப்பாலே பரவெளி யாடும்

கும்மி—ஆதிதாளம்.

பல்லவி.

சச்சிதானந்த சதானந்தமாம்பர முத்தியை சித்தம்மறவாதே
சற்குருபாதம் வணங்கி யிணங்கிநீ சிந்தித்துக்கும்மி யடியுங்
[கடி

அனுபல்லவி.

அம்மானந்த மனந்தசுகம்பர பிர்மானந்த நிறைந்தசுகம்
சின்மயானந்தமாம் சிற்சபை வந்தித்துச் சிந்தித்துக்கும்மி
[யடியுங்கடி (ச)

சரணங்கள்.

கர்மானந்தவலையிலே பட்டுப்போய் ஜென்மானந்தக்கடலிலே
[விழாமல்
பிர்மானந்தப் படவிலேறி பதம் பாடிக்கும்மி யடியுங்கடி (ச)

குப்பையறுத்துக் குலமறுத்து சுவாமி கூடுவீடாடுமாடாசை
[விட்டு
அப்பனிருக்கு மவ்விடங்கண்டு மனயன்பாய்க் கும்மி
[யடிப்பமடி
அஞ்சித சஞ்சித பாபமற்று சுவாமிஐயைந்து தத்வவிசார
[மற்று
அம்மாளிருக்கு மவ்விடம்விட்டு மனம் பிர்மானக்கும்மி
[யடியுங்கடி (ச)

கண்ணாலே பார்த்ததும் காமமற்று சுவாமி காதாலே கேட்ட
[தும் கோபமற்று
மனதால் நினைந்ததும் பாபமற்று பதம் பாடிக்கும்மி யடி
[யுங்கடி
கொல்லும் விஷயத்தில் கோபமற்று சுவாமி ராகாதிகள்வர்க
[ளாகையற்று
நாரணசற்குரு பாதமடிக்கடி நாடிக்கும்மி யடியுங்கடி (ச)

சத்திலேவாசனை ஜாலம்போச்சி சிவசித்திலே ஞானவிசார
[மாச்சி
சுத்தவிசாரமாய் நித்யானந்தத்தை நிறைந்துக்கும்மி யடி
[யுங்கடி
நானென்ற பாபமறுத்துவிட்டு சுவாமி நான்மறை நாலைக்
[குறித்துவிட்டு
நாதாந்த சற்குரு நயனூரில் வாழுமாம் வேதாந்தக்கும்மி
[யடியுங்கடி (ச)

(இ-ம்) காபி—ஏகதாளம்.

பல்லவி.

கூடுகூடு குருபாதம் கூடியாடி விளையாடு
அபிநமீ செய்துபாடு சிவகாமி ராமநாமம் (கூ)

அனுபல்லவி.

குருநாத னருள்செய்த மறைமொழி மறவாதே
அவர்பாத பங்கஜத்தை சிரசால் வணங்கிக்கொண்டு (கூ)

சரணங்கள்.

நரகஜெனன நாசஞ் செய்வதுக் கிதேநல்லு
நரஹரி திருநாமம் நாவே நடனமாடு
சுரநதி மதிசூடும் பரமசி பார்வதியும்
வ:சிவசி யென்றுபாடும் சிவகாமி ராமநாமம் (சூ)

கவிமாதும் விரிஞ்சனும் கவிதாச முதலானோர்
அபிநமி செய்துபாடும் சிவகாமி ராமநாமம்
ஜனகாதி மாமுனிமா ரஷ்டதிசை பாலகரும்
அஷ்டவதீ பதம்பாடும் சிவகாமி ராமநாமம் (சூ)

சித்தர்களும் முனிவரியா பூசுராருந் தேசிகரும்
சித்தமாடி விளையாடும் சிவகாமி ராமநாமம்
அரசரும் பூசுரரு மந்தியஜாதி நாரிமாரும்
அந்த சிந்தை யானந்தமாம் சிவகாமி ராமநாமம் (சூ)

அகிகால வசமான கலிகால மிதுபார்த்தால்
இதுகாலமிதே முத்தி சிவகாமி ராமநாமம்
விதியே மதியதானல் மதியே யிதுவேகதி
அகமதி யாடிப்பாடும் சிவகாமி ராமநாமம் (சூ)

சித்தசுத்தி காரணமாம் முத்திநாலு மளித்திடும்
சித்தமே நினைந்து பாடு சிவகாமி ராமநாமம்
குருவை நினைந்துமனம் பருவம் வருமளவும்
அபிநமி செய்துபாடு சிவகாமி ராமநாமம் (சூ)

(இ-ம்) தந்நியாசி—ஏகதாளம்.

பல்லவி.

சரவணபவ வுந்தன் சரணமடிக்கடி
சரணமாகினே னையா சுவாமி சரணமாகினேன்

அனுபல்லவி.

ஆடி யடிக்கடி கூடிய சாரம்
சூடியடிக்கடி பாடுவாய் நெஞ்சே

சரணங்கள்.

காரணமாயைக் கடைத்தேறு வழியை
தேடுவாய் நாடுவாய் கூடுவாய் நெஞ்சே (சர)

ஆதியனந்த மனந்தபுரம் பரம்
சோதி விலக்ஷண முருவாய் நெஞ்சே (சர)

சம்சாரத்தரு புண்ய பாபம்
வாசனை மூலம் பாரிது நெஞ்சே (சர)

புத்திர பித்திராதிகள் சாகைகள் பத்திரம்
பலபல புஷ்பம் பாரிது நெஞ்சே (சர)

ஞானபலத்தை தருமீ விருக்ஷம்
யோகபலத்தரு பணிவிடை நெஞ்சே (சர)

கூடலாகாலன் கூட மகேசன்
தேடிய பாதத்தைப் பணிவாய் நெஞ்சே (சர)

நவசுக மானசமான சங்கற்பம்
நவரச நவகிருத நவமணி நெஞ்சே (சர)

வேதிய ரோதும் வேதவிவாதம்
பாதசநாம ளறியே நெஞ்சே (சர)

உங்கருணை சிம்மயி ஜெகன்மயி
ஆனந்தத் தாயினியல்லவோ நெஞ்சே (சர)

மாந்தளிர் மேனிநின் திருமேனி
சாந்தனு மாபரமேஸ்வரி நெஞ்சே (சர)

தேசிகனேகம் தேவரனேகம்
தேடியபாதம் பிடித்தறி நெஞ்சே (சர)

காரணகாரியங் கொண்டுறு வாயொரு
பூரணதீபம் பிரித்தறி நெஞ்சே (சர)

தல்ப்பதத் தாமரை தொம்பதத்தாரகம்
அன்பெழும சிபதமறியேன் நெஞ்சே (சர)

நிற்சலரூபம் நிர்மல தேகம்
சற்குருபாதம் பிடித்தறி நெஞ்சே (சர)

நாமாவளி.

ராமநாமமே நாமம் அதைநாடுவோ நாமிருசாமம்
சாமியே தருவார் க்ஷேமம் அதைசம்மதிப்பதே நேமம் (ரா)

(இ—ம்) சாவேரி—ரூபகதிசிரம்.

பல்லவி.

அநுமான் போய்வரவேணும் யிலங்காபுரிக்கினிமேல்
அடியேன் போய்வாரேன் சுவாமி யபயமபயமினி (அ)

அனுபல்லவி.

வாயுதனயா போபோ வாயுவே கேனுவாவா
வாயுசகாயமுண்டு போய்வாரு மநுமானே (அ)

சரணங்கள்.

ராமகாரண மானும் சீதாகாரியமே காரியம்
நல்லவினயத்தூடே போய்வாரு மநுமானே (அ)

பிராணரக்ஷணஞ் செய்வீர் பிராணிகுலத்தை நீரே
பிராணதனயா சீக்கிரம் போய்வாரு மநுமானே (அ)

நீயே யெனக்குச்சகி இஷ்டபெந்துவும் நீரே
கஷ்டமுழுதுந் தீர்க்கப் போய்வாரு மநுமானே (அ)

முப்பதுதினம் போச்சே யிப்பரிதாப மாச்சே
காலாபுரியில்ப் போச்சே போய்வாரு மநுமானே (அ)

இக்கண்ட வரிலாரும் யிக்கடல்தாண்ட மாட்டே
மதிமான் மாருதிநீயே போய்வாரு மநுமானே (அ)

போரவழிக்குத் துணை ராமரு ளிருக்க
சீதாகாரிய மல்லவோ போய்வாரு மநுமானே (அ)

மாயாப்பட்டண மங்கே சோராளி ருக்குமிடம்
யாருக்குமிட ரிடாமல் போய்வாரு மநுமானே (அ)

பானு தனயனுக்கும் ராமருக்கும் சகிநீயே
அம்மெய் நினைந்துகொண்டு போய்வாரு மநுமானே (அ)

அயசுதன் சொன்னமொழி யகமெய் நினைந்துகொண்டு
ஆகாச மார்க்கத்தூடே போய்வாரு மநுமானே (அ)

இக்கடல் தாண்டினுலு மசுரர்கள் தெரியாமல்
அம்மா ளிருக்குமிடம் போய்வாரு மநுமானே (அ)

அடியேன் போய்வாரேன் சுவாமி யபயமபயமினி
அரைநிமிஷங் கொண்டு சீதையைக்கண்டு வாரேன் சுவாமி ()

இந்தக்கடலைத் தாண்டி யந்தப் புரமெரித்து
மண்டிப்போய் கண்டுசீதைக் கொண்டுநான் வாரேன் சுவாமி()

இந்தப் பிரபஞ்சத்துக்கு ஏகக் கரகஸ்தரான
ராமரருளிருக்க யடியேன் போய்வாரேன் சுவாமி (அ)

ராமநாமாங்கிதமா மங்குலீயவு முண்டே
ராமன் கிருபையாலே யடியேன் போய்வாரேன் சுவாமி (அ)

சம்சார சமுத்திரத்தை வாக்கால்த் தரணஞ்செய்யும்
ராமரருளிருக்க யடியேன் போய்வாரேன் சுவாமி (அ)

ஆத்மாவுவொண்டு ரமாத்மா ராமனுய் நித்தியம்
சுவாத்மாவருளிருக்க யடியேன் போய்வாரேன் சுவாமி (அ)

கண்ணூர் பரமகுரு பரா பரமிருக்க
கண்ணேபரகெதிக்கா யடியேன் போய்வாரேன் சுவாமி (அ)

(இ-ம்) காபி—ஆதிதாளம்.

பல்லவி.

அருணகிரீசம் ஜெய ஜெகதீசம்
பார்வதி நேசம் துரியாதீதம் (அ)

அனுபல்லவி.

ஓம்மணி நாதத்தை வோசையடிக்கடி
ஆடிய பாதத்தைச் சூடி (அ)

சரணங்கள்.

அம்மணிநாதம் பொம்மணி பாதம்
எம்மணி சிம்மணி கண்மணியல்லவோ (அ)

அஞ்சன காசம் விஞ்சனதாரம்
குங்கும திலகம் குவலய நயனம் (அ)

முத்தனைபாதம் பணிவதே ஞேயம்
பக்திவிஸ்வாசம் செய்வதே ஞாயம் (அ)

சித்தமே பாரும் சிம்மயன்ஜீவன்
அறிவதேமாயம் தெளிவதே ஞானம் (அ)

பிர்மகபாலம் வேலொடு சூலம்
தர்மகபாலம் தாபச சீலம் (அ)

அங்குசபாசம் மாந்துடி மழுகும்
எம்பெருமான்பர பராபர மீசம் (அ)

கண்மணி நடுவில் காரணமணியும்
ரவிசந்திரக் கலையும் திவ்வியகடாக்ஷம் (அ)

குருவடி சாரம் குணியிலதீதம்
சிம்மய மல்லவோ சிவமயமாக்கும் (அ)

(இ-ம்) முகாரி—ரூபகம்.

பல்லவி.

பழனிமாமலை வாழுமையனே வள்ளிமாமண வாளனே
ஐயனே மயிலேறி வாவடிவேலனே பரதேசிகா

அனுபல்லவி.

ஐயனே பரமெய்யனே பரமமெய்யனேபுரி பாலயா
துயயனே துரமையனே சுகதானசில மகேஸ்வரா (ப)

சரணங்கள்.

விஸ்வசிவித சிவசிவித விஸ்வரூப மகேஸ்வரா
அச்சுதாச்சுத மகிலசாஸ்வத நிர்ச்சலாத்ம பரமாத்மனீ
வெள்ளிமாமலை பள்ளிகொள்ளுமாம் புள்ளிமான்மழு
[கேந்திவா
வள்ளிமாதொடு மாமகேஸ்வர வெள்ளிவேலுப சாந்தனே (ப)

சண்முகாநதி தீரவாசமி ஷண்மலாங்குர நாசனே
மன்மதாஹர சங்கராசுத யெம்பிரான்பரி பாலயா
அடியேனுக்குத கன்புசெய்யவே திருவடிக்கிட ராகுமோ
அடிமலர்ப்பொடி முடியிலேற்பதி மாசையத்தினுவாசவா (ப

சூரநிக்ரஹ குமரகுககுரு வீரபத்ர சகோதரா
வேதசாஸ்த்ர புராணகாசித வேததெத்த கிருபாலயா
அம்மரம்பர ஜீவனென்பதும் துன்பசங்கட மல்லவோ
தம்பிரான் பதமெம்பிரான் பரதெய்வமே மமதேசிகா (ப)

சுத்தமான குணத்திலும் பரிசுத்தமான ஜெகல்ப்ரபோ
சித்தான சிவசித்திலும் பரமமுத்தனே மமதேசிகா
காலடிக்கடி கூடுவான்வழி தேடுவான்வர மேகுவாய்
திருவடிக்கடி யமுர்தகர்த்தனே யம்பிகாத்மஜ தேசிகா (ப)

(இ-ம்) வசந்த—அடதாளம்.

பல்லவி.

ஸ்ரீ ராம தாசனே சிவலோக நாதனே
சீதாவிரகா ரெகுதீரா ஸ்ரீராமராமா (ஸ்ரீ)

அனுபல்லவி.

ஐயன் பரமகுரு பாதம் பணியவந்த
காயமே மாயமென்றும் மனதை நிர்மலஞ்செய்து (ஸ்ரீ)

சரணங்கள்.

தேகாபிமானி பாபிகாய மென்றறிந்து நீ
தேகியஜன மிர்தேனுத் மானுத்மாபி ராமன்
தீராத வினைகளைத் தீர்க்கும் பரமகுரு
பாதம்வணங்கி யொன்ருய்ப் பாரும் பரமபதம் (ஸ்ரீ)

அல்லும் பகலுமாக யுன்னைநினைப் பேனேநான்
ஐயா வுன்னருளாலே யாண்டிக்கடிமை யாச்சே
முன்னமெடுத்த வினை யின்னும் பொசித்துவிட்டால்
இனிமேல் வரப்படுமோ ஈசா ஸ்ரீ ராமராமா (ஸ்ரீ)

தல்ப்பதத் தாரகமாய் தானுய்த் தெரிந்தவரை
சிற்பர பிரகாசமா யவரைநாம் வலஞ்செய்து
மார்க்கத்தில் போட்டவிதை யேனத்தி லன்னமாமோ
சின்னன் வருமளவில் கண்ணன் கருணைவேணும் (ஸ்ரீ)

முன்ன மரூபமான ஜோதிவிளக்கைப் பார்த்து
இன்றும் பரமயோகி ஜனக நாரதராதி
பாதவந்தனஞ் செய்து சேதுபெந்தனங் கண்டு
ராமநாமமு மோதி ராமலிங்கமும் பார்த்து (ஸ்ரீ)

சித்தந்தெளிந்து குரு பக்தி விஸ்வாசமாக
நூறுயோசனை தாண்டி லங்காமர்த்தனஞ் செய்து
ராகாதி ராக்ஷதராம் ராவணுதியை வென்று
சிஷ்ட சகிகளுமாய் புஷ்ப விமானமேறி (ஸ்ரீ)

க்ஷணங்கொண்டு லோகம் சாக்ஷிலக்ஷியமென் ருக்கி
சாக்ஷால் மாயையாம் சீதா ஸூக்ஷ்மசமேதனுய்
சுரலோக சமானமாம் சரசா மயோத்தியாபுரி
வாயு தனயனுக்கு ஞானேபதேசஞ் செய்த (ஸ்ரீ)

கர்மக்கடலை லோகம் கானற்ஜல மென்றெண்ணு
கருணைக் கடலாங்குரு பாதம்வணங்கி யொன்ருய்
கண்ணூர்க் கமலமணி விண்ணூர் விமலமாச்சி
இன்றும் நினைந்துநெஞ்சே ராமாரா மேதிபாடு (ஸ்ரீ)

நாமாவளி.

பரமானந்தம் பஜகோவிந்தம்
சர்ச்சனசங்கம் நிஜவிர்த்தாந்தம்

(இ-ம்) காபி—ரூபகம்.

(வாலைக்கும்மி)

அத்தலடக்க மருந்துசெய்து நல்ல
ஆகாசம்போலே பாருங்கடி
முத்தி மணிமாலை மார்பிலசையாமல்
தத்துவம் பாரடி ஞானக்கண்ணே (அ)

தேரிதுநல்ல திருவடி யேறிய
தேரிதை முன்னாலே பாருங்கடி
அண்ணாமலையி லடக்கமாம் தேரிதை
கண்ணாலே பாரடி ஞானக்கண்ணே (அ)

இரத்தனமிது நல்ல ரெத்னமிதுவடி
பத்ம ராகாதியாம் பாருங்கடி
பச்சை மரகதமும் பவழமும்
சித்தமே பாரடி ஞானக்கண்ணே (அ)

ஆனலரூபத்தைக் காட்டுமாம் தேரிதை
போனாலும் போச்சொரு மூச்சிதடி
நேரிதைப் பாருவா யாருவாய்காருவாய்
ஆனந்த மாக்குவாய் ஞானக்கண்ணே (அ)

கோடானகோடி நவகோடிக் கெட்டிய
கூடான தேரிதைப் பாருங்கடி
நாடா நவமணி யாயிரங்கட்டிய
சூடாமணி நீ ஞானக்கண்ணே (அ)

விஸ்வமனேக மடிக்கடி காட்டிய
விஸ்வகர்மா செய்த தேரிதடி
அஸ்வமனேக மடிக்கடி மாட்டிவைத்
தசையாமல் தேரிதை ஞானக்கண்ணே (அ)

மூர்த்திகள் மூவர்களேறிய தேரிதை
முத்தொழில் முன்னாலே பாருங்கடி
முன்னூலால் கட்டியுருட்டிய தேரிதைக்
கண்ணாலே பாரடி ஞானக்கண்ணே (அ)

பட்டுவிதானம் பலபல சித்திரம்
கூட்டிய தேரிதைப் பாருங்கடி
ஆலவட்டங்குட வெஞ்சாமரம் நல்ல
வாலத் தருணிமார் ஞானக்கண்ணே (அ)

பத்துக் குதிரையும் நாலுசிங்கத்தையும்
கட்டிய தேரிதைப் பாருங்கடி
தேரிலிருக்கும் குருக்க ளொருவரை
ஆகார மாமீதி ஞானக்கண்ணே (அ)

சுவாமியிடப்பாகத் தம்மா ளிருக்குது
ஆனந்த மல்லவோ பாருங்கடி
பக்தி பலவழி முத்திக்கிதுவழி
சித்தமே பாரடி ஞானக்கண்ணே (அ)

அக்கண்ட மாம்பழம் காய்கனிபூக்குலை
யிக்கண்ட மாயமோ பாருங்கடி
இக்கண்டத் தேரிலிருக்கும் பரமாத்மா
அக்கண்ட ஞாயமோ ஞானக்கண்ணே (அ)

அச்சுதண்டுக்கு வச்சாணி பலத்தினுல்
வண்டிக் கபிமான மாச்சிதடி
விஸ்வமெல்லா மொரு நிச்சயமாய்நின்ற
விஸ்மயம் பாரடி ஞானக்கண்ணே (அ)

அஷ்டதிசை பால ரஷ்டகஜங்களை
மாட்டிய தேரிதைப் பாருங்கடி
ஆரிரண்டாயிரத் தாசிமார் கூட்டத்தில்
ஆட்டிய தேரிது ஞானக்கண்ணே (அ)

மாத்திரை யஞ்சினுல் தீர்த்தபெருவீதி
தேருக்கலங்கார மாச்சிதடி
சித்தம் விளக்கும் விளக்கிதி லாயிரத்
தெட்டு தீபமிதை ஞானக்கண்ணே (அ)

சிந்தாமணி நல்ல சிந்தையிதுவடி
சந்தோஷ மாகவே பாருங்கடி
அந்தமனந்த மனந்தசுக மிது
சிந்தனை செய்குவாய் ஞானக்கண்ணே (அ)

அண்ணே சராசர லோகமீ ரேழும்நீ
உண்ணாமுலை யிதைப் பாருங்கடி
அண்ணாமலையி லடிக்கடி கும்பிட்டே
கண்ணாலே பாரடி ஞானக்கண்ணே (அ)

புஷ்பவிமான சமானமாம் தேரிதைக்
கற்பகாலங் கண்டு கைதொழுவாய்
ஆடியபாதத்தைச் சூடிய தேரிதை
ஆனந்த மாய்ப்பாரு ஞானக்கண்ணே (அ)

அம்மணி நாதமனந்த மநேகமாய்
ஆனந்த சிம்மணி தன்மணியே
கண்மணி காலகமல மணியே நீ
கண்ணாலே பாரடி ஞானக்கண்ணே (அ)

மன்னே மணியே மனோன்மணியே நல்ல
பொன்மணியே திவ்விய மாமணியே
சச்சிதானந்த சதாமணியே நல்லார்
முத்திமணியே நீ ஞானக்கண்ணே (அ)

கண்ணே கடலே கமலாலயேதிரு
உண்ணாமுலையே நீ பாருங்கடி
கண்ணூரில் கண்ட குருவடி திருவடிக்
கண்ணே நீ பாரடி ஞானக்கண்ணே (அ)

(இ-ம்) காம்போதி—ரூபகம்.

பல்லவி.

சாதுக்கட் கன்புசெய்யும் பக்தி விஸ்வாச மூலம்
வழியே நானென்றறியே னறியேன் நெஞ்சே (சா)

அநுபல்லவி.

அடியார்க்குள வகாசம் யடிமலற் பொடிசூடும்
வழியே நானறியே னடியே நெஞ்சே (சா)

சரணங்கள்.

பாக்கிய வாரிதேசாக்கியம் பக்திவிஸ்வாச யோக்கியம்
இதுவே நமக்கு யோக்கியம் ஈசனிருக்குஞ் சிலாக்கியம் (சா)
சரியா கிரியாதியோகம் ஞானமாம் பல மூலம்
வழியே நானென்றறியே னறியேன் நெஞ்சே (சா)
வேதப்புராண மென்றும் சாதுக்களுட கீதை
வாசிப்படி வழியே னறியேன் நெஞ்சே (சா)
கர்மசாகரம் சக்கரம் துக்கசாகர மூலம்
வேதப் பொருளை நானேதறியேன் நெஞ்சே (சா)
தேசிகபாத முத்தை ஈசனென் றறியாமல்
ஆசைக்கடலில் வீழ்ந்தே யலையேன் நெஞ்சே (சா)
அஷ்டதசம சித்திமுத்தி பெறும் வழியே
சித்தே நானென்றறியே னறியேன் நெஞ்சே (சா)
உள்ளபடிக் கடியே கள்ளமொழிச் சுறுவே
இன்னு மடிக்கடியே னறியேன் நெஞ்சே (சா)
அஞ்செழுத் தாதிமூலம் ஐம்பத்தோ ரக்ஷரமும்
துஞ்செழுத்தாகு மதை யறியேன் நெஞ்சே (சா)
சேதிக்கும் பரமான ஜோதிக்கும் ஜோதியேதோ
நேதிக்கும் நேதிநேதி யறியேன் நெஞ்சே (சா)
சாதிக்குஞ் சமமான சாதன சற்குருவைநான்
சேவிக்கும் வழியேதோ யறியேன் நேஞ்சே (சா)
வானுக்கு ளகிலமும் பாவிக்குங் குருவடி
பாவிக்கும் வழியொன்று மறியேன் நெஞ்சே (சா)
கண்ணூர்க் குருவைநான் காருண்யம் வரக்காணேன்
கண்ணுக்கும் கண்ணிதென் றும் கருணைக்கடலே நெஞ்சே ()

(இ-ம்) நீலாம்புரி—ரூபகம்.

பல்லவி.

நாராயண நாராயண நாராயண கிருஷ்ண
தாமோதரமே கேசவ கோவிந்த முகுந்தா (நா)

அநுபல்லவி.

முப்பாரித முப்பாழித யப்பா கிருபதெத்தா
தொல்ப்பாத மெனக்கேகுமல் கோவிந்த முகுந்தா (நா)

சரணங்கள்.

கோராரண போராய்மகள் தீராவினை தீர்க்கும்
நாராயண யுந்நாமமீ தென்னுவில் முகுந்தா (நா)

ஈசன்ஜெக மேகம் குருஜீவன் பரமாத்மா
சோகம் சிவயோகம் பரமானந்த முகுந்தா (நா)

குன்றுகிற பாபக்கடல் கரையேற்றுற பாதம்
என்மானச மென்றுகிலும் கோவிந்த முகுந்தா (நா)

கல்ப்பாசையி லப்பேசுக மெப்பேருத மாக்கி
உள்ப்பூவிலு ணர்ந்திடருள் கோவிந்த முகுந்தா (நா)

ஐயேயுனக் காளாய்மனம் வையே யினிமேலும்
மெய்யா யெனக்கானந்த மருளிடு முகுந்தா (நா)

உன்னுமமீ தென்னுவி லுதித்திடுக வேணும்
என்மானசக் கண்ணுகடல் கண்ணூருண்ணிக் கண்ண (நா)

வேதாந்தக்கீர்த்தனை.

காரணகுருவே கருணாநிதியே
பூரணமருளே பெரும்பரப்பொருளே
ஆரணமுடிவே யருளேதேனே
ஆனந்தக்கொடியே யடியன்முடியே (கா)

சித்தாந்தத்தித சின்மயசிவனே
சத்தானந்த சர்வாத்மகனே
நிஷ்களமான நிர்மலதேசா
சகலகளேபர சர்வமகேஸ்வரா (கா)

முக்குணகாரண மூலவிசாலா
நிற்குணபூரண நிர்மலசீலா
அந்தமனந்த பராபரம்பொருளே
சிந்தையிறந்த சிவானந்தமருளே (கா)

சிந்தைசிதம்பர சிவபசுபதியே
சிவசிவசின்மய சிவபரகெதியே
நித்தியநிராமய நிர்மலநிதியே
நித்தியானந்த நிலைக்கதிபதியே (கா)

நித்தியநிர்மல நிஜபததுதியே
நிஷ்களநிர்ச்சல நிஜபரகெதியே (கா)

மங்களம்.

வாலகண நாதனுக்கும் வேலனுக்கும் மங்களம்
காசிபுர பாலனுக்கு மீசனுக்கும் மங்களம்
அண்டர்புர நாதனுக்குந் தொண்டருக்கும் மங்களம்
குருவடிக்கும் திருவடிக்கும் யடிமுடிக்கும் மங்களம்.

ஸ்ரீ சற்குருவே நம:

முற்றிற்று.

உ

ஸ்ரீ சற்குருவே நம:

ஹரிசர்வமுகம்.

ஸ்ரீ சற்குரு சுவாமிகள் கீர்த்தனம்.

அந்தரங்க வாசுதேவ லக்ஷ்மிபூமி வல்லபா
அருள் நமசிவாய விஸ்வ பார்வதீச நாயகா 1

நான்முகாதி வாணிதேவி நாரதாதி சற்குரோ
நவரசங்கள் நாடியெங்கள் நாவில்வந்து பாடுவாய் 2

பெந்தமோக்ஷ பாபபேத பெந்தமற்ற தேசிகன்
அந்தரங்க மன்புருகி யருள்பெருகிப் பாடுவாய் 3

ஆதியஞ்சு பூதமா யநேகநாம ரூபமாய்
ஜோதியா யரூபமாய் நிறைந்ததே சிவாயமே 4

அப்பனம்மை யோடுகூடித் தப்புசெய்தக் காரியம்
செப்புவா யிதிந்தத் தேகமென்ன மாயமீசனே 5

அஞ்செழுத்து மூன்றுலோக மப்பனம்மை யாகுமே
அப்புமண்ணு மஞ்சுபூதந் தப்புசெய்த தாரடா 6

ஆதியஞ்சு பூதமாதி நாதவிந்துக் களையிலே
ஜோதியா யதீதமாய் நிறைந்ததே சிவாயமே 7

நல்லவா ளிணக்கமும் நல்லநாம கீர்த்தனம்
நல்லதிக் கலியுகே நமோ நமசிவாயமே 8

நாதனெங்களுக் கதீத விந்துநாத முடிவிலே
ஜோதியஞ் செழுத்ததீத மானதே சிவாயமே 9

எட்டிரண்டு மாதியா யெடுத்த தேக தேகிகள்
எட்டிரண்டு மறிகிலே யென்னமாய மீசனே 10

அஞ்சுபஞ்ச பூதமா யநேகநேக ஜீவராய்
நெஞ்சிலன்பு கொண்டருள் நமோநம சிவாயமே 11

வாதபித்த சேஷ்மமொடு கூடிநின்ற குடிலையிற்
நாடிநின்ற பிராணவாயு நானுநீரு மல்லயே 12

ஓடியோடி யெங்குமா யலையுமெங்கள் மானசம்
கூடிருந்துப் பாரும்வேளை நானுநீரு மல்லயே 13

மூலநாடி மூலமாய் முளைத்தநாடி மூன்றுமாய்
மாலயனு மரனுமாய் நானறிந்த தில்லையே 14

புத்திமோச மானதே பிறப்பிறப்புக் காரணம்
புத்திவந்து ஞாயமாகி லின்லையில்லை யில்லையே 15

பக்திவந்து முற்றுமாகில் முத்திநாலு மடையலாம்
சித்தசுத்தி யாவதுஞ் சதாசிவா சிவாயமே 16

சுவாமிசேவை செய்துநாம கீர்த்தனங்கள் சொல்கிலோ
சுவாமிவந் தருளுமே சதாசிவா சிவாயமே 17

பொய்யிறந்து மெய்யுணர்ந்து நாலுநாம மோதினல்
ஐயமில்லைத் துய்யனே சதாசிவா சிவாயமே 18

கண்ணிறந்துக் காதிறந்துக் கவலைவிட்டு மானசம்
எண்ணிறந்த ஜோதியே சதாசிவா சிவாயமே 19

நாக்கிறந்து மூக்கிறந்து வாக்குபாதப் பாணியும்
ஊக்கமோ டுபஸ்தமு மிறந்ததே சிவாயமே 20

அந்தமான கரணமற் றகந்தைபற்று சின்மயம்
நிர்மல ஸ்வயம் பரமஜோதியே சிவாயமே 21

அந்தரங்க பக்திகொண் டகந்தைவிட் டகமலர்
அன்புகொண் டறிந்ததே சதாசிவா சிவாயமே 22

காமலோப மோகமற்றக் கபடமற்ற யோகியை
கருணையோடு கண்டதே சதாசிவா சிவாயமே 23

ராமநாமக் கீர்த்தனம் சர்வநாமக் கீர்த்தனம்
சர்வதா மனோகரஞ் சதாசிவா சிவாயமே 24

சத்துராமக் கீர்த்தனஞ் சித்துராமக் கீர்த்தனம்
முத்திராமக் கீர்த்தனஞ் சதாசிவா சிவாயமே 25

சுத்தராமக் கீர்த்தனஞ் சுலபமானக் கீர்த்தனம்
பக்திராமக் கீர்த்தனம் பராபர சிவாயமே 26

சர்வராமக் கீர்த்தனஞ் சராசராத்மக் கீர்த்தனம்
சர்வதா மனோகரஞ் சதாசிவா சிவாயமே 27

அந்தராமக் கீர்த்தன மனந்தராமக் கீர்த்தனம்
சிந்தைராமக் கீர்த்தனஞ் சிறந்ததே சிவாயமே 28

ஆதிராமக் கீர்த்தன மனாதிராமக் கீர்த்தனம்
ஜோதிராமக் கீர்த்தனஞ் சதாசுகஞ் சிவாயமே 29

சாந்தராமக் கீர்த்தனஞ் சமானமானக் கீர்த்தனம்
சமாதியோக சாதனஞ் சதாசிவா சிவாயமே 30

ஆசைராமக் கீர்த்தன மனாசைராமக் கீர்த்தனம்
பூசைராமக் கீர்த்தனம் புகழ்வதே சிவாயமே 31

ராமநாம மந்திரம் நிராமியாமி தந்திரம்
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 32

சாந்தலிங்க தன்பரம் சர்வலிங்க மம்பாரம்
சாந்தமான சம்பஜே சதாசிவா சிவாயமே 33

ராமலிங்க மம்பரம் ரெமாபதே சிதம்பரம்
ராமநாம நாமமே சதாசிவா சிவாயமே 34

நல்லடக்க மானசம் நன்றுசத்தி யதர்மமும்
நல்லவா ளிணக்கமும் நமோநம சிவாயமே 35

தொல்லையில்லை நல்லதே நமசிவாய மந்திரம்
சொல்லுசொல் லகந்தைபோம் சதாசிவா சிவாயமே 36

விஸ்வரங்க நாதனே விபோநெஜகஸ் சொரூபனே
விஸ்வகாக்ஷி பூதனே நமோநம சிவாயமே 37

விஸ்வரூப பசுபதே நிர்ச்சலாத்ம ஸ்ரீபதே
சாஸ்வதாய தாயகா சதாசிவா சிவாயமே 38

சைவசமய மாவதே சமாதிநா லு சாதனம்
சர்வசமய சம்மதஞ் சதாசிவா சிவாயமே 39

பழவினைக் கருவிக ளறுத்துநான்கு சாதனம்
பழகிவருவ தருமைமையே சதாசிவா சிவாயமே 40

பொருளிலாசைப் பெருகியென் பொருள்கவர்ந்த கள்வரை
கருதிநல் விவேகமொடுக் கண்டதே சிவாயமே 41

பொருளறிந்துப் பெரியபெருளி லமிதமான பக்திகொண்
டகமலர்த் தெரிந்ததே சதாசிவா சிவாயமே 42

சத்திலே மனமிறந்து சித்திலே சிவமிருந்து
சுத்தமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 43

மோகமான வாரியில் மூழ்கிமோசம் போகுதே
ஆசையான பாசமே யெமன் சதாசிவாயமே 44

ஆசையான வலையிலே மமதைகொண்டு மானசம்
மோசமா யலையுதே சதாசிவா சிவாயமே 45

ஐயனை மறந்துவிட்டப் பொய்யனு மவன்திருடன்
மெய்யனை யறிந்தவாள் சதாசிவா சிவாயமே 46

பராபரத்தி லயிக்கமும் பரோபகார சிந்தையும்
பார்த்துப் பாதுகார்ப்பவர் சதாசிவா சிவாயமே 47

பாவனைக் கதீதமாம் பரமயோக நிஷ்டையில்
பார்த்துப் பாதுகாப்பவர் சதாசிவா சிவாயமே 48

சாதுவை யறிந்தவாள் சமாதியாம் பராபரம்
ஜோதியே சுகாமியே சதாசிவா சிவாயமே 49

ஆதிபூத நாதவிந்து அருளிருந்த நிலையிலே
ஜோதியம் பரத்ததீத மானதே சிவாயமே 50

அஞ்செழுத்து மாறெழுத்து மௌவுமுவ்வு மௌவுமாய்
அஞ்செழுத்து நெஞ்சிலே யறிந்ததே சிவாயமே 51

அஞ்செழுத்துப் பஞ்சபாப ரூபமானக் காயமாம்
துஞ்செழுத்தை நெஞ்சிலே நினைந்ததே சிவாயமே 52

ஆசைமூன் றுப் பாசமான மோசமாயக் கட்டடா
நாசமானக் காயமேது மறிவதில்லை யில்லையே 53

பஞ்சகோசப் பாசமான சஞ்சிதங்கள் நெஞ்சிலே
சஞ்சலங்கள் நீக்கிநின்ற நிலையிலே சிவாயமே 54

அஞ்சுமா ரகந்தைவிட்டு சித்தசுத்தி நிஷ்களம்
தஞ்சுமா றறிந்ததே சதாசிவா சிவாயமே 55

அஞ்செழுத்தி லோரெழுத்தை நெஞ்செழுத்தில் நேசமாய்
தஞ்சுமா றறிந்ததே சதாசிவா சிவாயமே 56

ஊனெடுத்து மானமாய் மனைவிமக்கள் தானமாய்
தானிருந்த மாயமாரு மறிவதில்லை யில்லையே 57

மூவெழுத்து மூலமான மேலெழுத்து நடுவிலே
ஓவெழுத்து நாவிலே நானறிந்த தில்லையே 58

மௌனமா யிருந்துபூனை எலிபிடித்தத் தன்மைபோல்
கவனமாயிருந்து நீ யறிந்துகொள்ள வல்லீரே 59

சூக்ஷ்மவிந்து நீயதாய் ஸ்தூலவிந்து நானதாய்
ஸ்தூல சூக்ஷ்மக் காரண மறிந்ததே சிவாயமே 60

சிவாயமஞ் செழுத்தினு லபாயமன்றி மானசம்
உபாயமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 61

நமசிவாயமந்திரம் நாவில் நல்ல தந்திரம்
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 62

நாமமஞ் செழுத்தையும் நாவுமென்ற மானசம்
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 63

நல்லவா ளிணக்கமும் நேசமான பூசையும்
நல்லநாமக் கீர்த்தனம் நானறிந்த தில்லையே 64

அண்டபிண்ட பாண்டமா யகண்டமா யரூபமாய்
தொண்டர்கண்ட மண்டபஞ் சதாசிவ சிவாயமே 65

அஞ்செழுத்தை யாதியா யஞ்சுமூன்று மெட்டதாய்
நெஞ்செழுத்தை நேசமாய் நானறிந்த தில்லையே 66

பரவெளிக் ககம்புறம் மேலுங்கீழு மப்புறம்
பெருவெளிப் பிரகாசமாய் நிறைந்ததே சிவாயமே 67

அஞ்செழுத் தரிஹரன் நான்முகாதித் தேவர்கள்
அஞ்செழுத் ததீதமாஞ் சதாசிவா சிவாயமே 68

கைலையென்ற மலையிமேலே மனமிறந்த நிலையிலே
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 69

மனமிருந்த நிலையிலே நீயிருந்த மலையிலே
நானறிந்த தில்லையே நமோநம சிவாயமே 70

நல்லதான தந்திரம் நமசிவாய மந்திரம்
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 71

சுத்தமான மந்திரம் சுலபமான தந்திரம்
சொல்லடா சுகம்வருஞ் சதாசிவா சிவாயமே 72

ஸ்தூலமான தந்திரஞ் சூக்ஷ்மமான மந்திரம்
ஸ்தூலமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 73

ஆதியான தந்திர மனாதியான மந்திரம்
ஓதடா சுகம்வருஞ் சதாசிவா சிவாயமே 74

தேகமான தேதடா தேகியாவ தேதடா
தேகதேகி ரண்டுமா யறிந்ததே சிவாயமே 75

மாயையுடைய யோனிற் பிறந்த ஜீவனேதடா
மாயையும் மலடியென்று நானறிந்த தில்லையே 76

இந்தனத்தி லக்கினிபோ லிருக்குமிந்த ஜீவனை
அந்தரங்க பக்திகொண் டறிவதே சிவாயமே 77

மனக்கலக் கமற்றுக்காம லோபமோக மற்றுநீ
இணக்கமுற் றிருப்பதே சதாசிவா சிவாயமே 78

அணுவகண்ட மானபேத மாவதேது மாயையால்
அணுவகண்ட மானதுஞ் சதாசிவா சிவாயமே 79

அப்புமுப்பு மொப்பமாய்க் கலந்துபாரு மளவிலே
அப்புமுப்பு மோகமாஞ் சதாசிவா சிவாயமே 80

நாழியுப்பு நாழிநீர் மெய்க்கலந்துப் பாரடா
ஆழிவின் ணகந்தையு மகண்டமாஞ் சிவாயமே 81

சத்தியுஞ் சிவனுமாய் விளங்குகின்ற பூரணம்
சித்தமேது மறிகிலே னென்னமாய மீசனே 82

வானிலந்த ரங்கமா யனந்தகோடிப் பூதமாய்
வானிமேகப் பூரணஞ் சதாசிவா சிவாயமே 83

பூரணம் புராணமாய் விளங்குகின்ற ஜோதியே
நாரணாதி ஜீவர்கள் சதாசிவா சிவாயமே 84

பூரண சுபாபமாஞ் சொரூபமென்ற றிந்தபின்
பூரணப் பிரகாசமாய் விளங்குமே சிவாயமே 85

ஒவில் நாலுபூதமுங் கலந்திருந்த போதிலும்
ஒவினேது மில்லை பெந்தமென்பதே சிவாயமே 86

ஆதிபூத மாதியா யனேகநாம ரூபமாய்
ஜோதியோடு பெந்தமில்லை யென்பதே சிவாயமே 87

பூரணத்தி லற்பமுங் குறைவுகண்ட மானசம்
பூரணத் திடம்வரா சதாசிவா சிவாயமே 88

பூரணத்தி னப்புறம் பிறந்தமாயையேதடா
காரணத்தை யுற்றுப்பார்க்கக் கபடமாஞ் சிவாயமே 89

நாடகத்தை யாடுகின்ற கோட்டிவேட மென்றபோல்
கூடெடுத்த நாடகம் நமோநம சிவாயமே 90

பூரணங் குடத்திலுங் குளத்திலும் நிறைந்தபோல்
காரணம் ஜகத்திலும் பரத்திலும் சிவாயமே 91

பூரணத்தி லணுவகண்ட மானபேத மேதடா
காறணத்தை யுற்றுப்பார் கவலைதீரு மென்பதே 92

எண்ணைத்தாரைப் போலவே யிடைவிடாத பூரணம்
எங்குமாய் நிறைந்திருந்த ஜோதியே சிவாயமே 93

பூரணப் பிரகாசமாய் விளங்குமிந்த உலகமும்
பூரணப் பிரகாசமாய் நிறைந்ததே சிவாயமே 94

பூரணத்தை விட்டுவே றுலகமென்ப தாணவம்
ஆணவத்தை விட்டுப்பார் கவலைத்தீரு மென்பதே 95

அஞ்சுபஞ்ச பூதமஞ்சு மாத்திரைகள் சூத்திரம்
நெஞ்சிலே நினைந்ததே சதாசிவா சிவாயமே 96

அஞ்சுமில்லை மாறுமில்லை நெஞ்சுணர்ந்து பாரடா
அஞ்சுமஞ்சும் வஞ்சகமென் றறிவதே சிவாயமே 97

நாலுஜாதி நாலுவேத மாறு சாஸ்திரங்களும்
கூறுகின்ற நிலையிலே நிறைந்ததே சிவாயமே 98

காற்றினல் பறக்குகின்ற பூச்சிபோல் மனுஷரும்
சோற்றினல் பிறந்திறந்து சாகுதே சிவாயமே 99

எண்ணெய் தாரைபோல வெங்கு மிடைவிடாத பூரணம்
கண்ணுயிறிற் கண்டதே சதாசிவா சிவாயமே 100

அரூபமா வெளியிலே சொரூபமான வொளியதை
சுபாபமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 101

எழுகோடி மந்திரம் நூறுகோடி தந்திரம்
பாழடா பராபரம் பாரதை சிவாயமே 102

ஞானபுத்தி கொண்டுநீ கருத்திருத்தி மானசம்
மௌனமா யிருப்பதே மனோகரஞ் சிவாயமே 103

கானகத்தி லப்புமக் கனவுகண்ட வஸ்துவும்
மனமுணர்ந்து பாருமளவி லில்லையில்லை யில்லையே 104

முப்பிறப்பிற் பண்ணிவைத்த புண்ணியபாப வினைகளை
இப்பிறப்பு வந்ததற்குக் காரணஞ் சிவாயமே 105

இப்பிறப்பில் செய்துவிட்டக் குறைகளினி மேலினும்
பிறப்பிறப்புக் காரணஞ் சதாசிவா சிவாயமே 106

இப்பிறப்புத் தப்பினலினிப் பிறப்பு மேலினும்
எப்பிறப்பு வாய்க்குமோ யானறிந்த தில்லையே 107

செத்துசெத் தழிவதுஞ் சலனமற் றிருப்பதும்
சுத்தசுத்த மாயையாஞ் சதாசிவா சிவாயமே 108

ஜீவஜீவ னெங்குமாய் விளங்குகின்ற ஜோதியை
ஜீவனு யிருந்ததுஞ் சதாசிவா சிவாயமே 109

மூலவிந்து மூலமாய் முளைத்தமூன்று முளையிதை
மூன்றுகட் டறிக்கிலோ பிறப்பறுஞ் சிவாயமே 110

முக்கடங்கள் தீர்த்து மூன்றுலகமுங் கடந்துப்போய்
அக்கடற்கு மக்கரைக் கடந்ததுஞ் சிவாயமே 111

நாக்கினுற் கலங்குகின்ற மானசம் மயக்கமாய்
வாக்கினுற் பிறப்பிறப்பு மாவதே சிவாயமே 112

தேகமோ நமக்குபெந்து மோகமேது மறிகிலேன்
போகமே நமக்குபெந்த மாவதுஞ் சிவாயமே 113

பத்துமாத மம்மையின் வயிற்றினுள் ளிருந்ததும்
சித்தமேது மறிகிலே னென்னமாய மீசனே 114

சுத்தமான தேதடா அசுத்தமான தேதடா
சுத்தமு மசுத்தமு மனக்கலக்க மாகுமே 115

செத்துப்போன சமயநீ சுத்தமா யிருக்குமா
சித்தமேது மறிகிலேன் சதாசிவா சிவாயமே 116

சூட்சமவிந்து சுக்கிலம் ஸ்தூலவிந்து ரத்தமும்
சுத்தமாவ தேதடா சதாசிவா சிவாயமே 117

தோலெலும்பு ரத்தமு மாமிசமும் மலங்களும்
சுத்தமாவ தேதடா சதாசிவா சிவாயமே 118

செத்துப்போன நாள்முதற் சடங்குசெய்து மேலினும்
சுத்தமாவ தேதடா சதாசிவா சிவாயமே 119

வாயினுள் ளெச்சிலும் வயற்றினுள் மலசலம்
சுத்தமாவ தேதடா சதாசிவா சிவாயமே 120

மூக்கினுங் கபஞ்சளி நாக்குபல்லினும் மலம்
சுத்தமாவ தேதடா சதாசிவா சிவாயமே 121

நாறுமுடலை நம்பினாலு ஜாதியு மயங்குதே
நாநீதென் றகந்தையாவ தென்னமாய மீசனே 122

துர்க்குணங்கள் நீக்கிநல்ல நிற்குணம் பஜிக்குலோ
ஜாதிநல்ல ஜாதியென்று நான்மறைகள் சாற்றுதே . 123

ஆசையானப் பாசமே காலபாச மாகுமே
ஆசையற் றிருப்பதே சதாசிவா சிவாயமே 124

அண்டகண்ட மண்டல மருட்பிரகாச மண்டலம்
தொண்டர்கண்ட மண்டலம் மனோகரஞ் சிவாயமே 125

அண்டகண்ட மண்டல மரூபமான மண்டலம்
சொரூபமா யறிவதே சதாசிவா சிவாயமே 126

ஞானமா யிருந்தறிவில் நாலுதீப மேகமாய்
ஜோதியாய் விளங்கிகின்ற ஜீவனே சிவாயமே 127

சித்தமோ ரெழுத்திலே சிறந்தபக்தி முற்றினல்
சுத்தமாய் மனந்தெளிந் தருளுமே சிவாயமே 128

சத்திபாத மூலமே சரணயுக ளம்மணி
முத்திமூல மாவதுஞ் சதாசிவா சிவாயமே 129

நாளைநாளை யென்றெண்ணி நாளுபோன நாளிதே
நாளுவந் தடுத்ததேதும் நானறிந்த தில்லையே 130

காலமென்ப தெண்ணியெண்ணி கவலைவந்து போகுதே
காலனுலே வந்தவேளை நானறிந்த தில்லையே 131

உலகுகபடநாடகம் நாநீ தென்ற மாயமே
விகடமென்ற வாசலும் பலருமுண்டு காவலும் 132

பதமறிந்த ஞானிகள் பலருமுண்டு ஞாயவும்
மதமொழிந்த மானசம் நமோநம சிவாயமே 133

அந்தரங்க பக்திகொண்டு சாதுபாத பூஜைசெய்து
சிந்தையற்ற சிந்தையே சதாசிவா சிவாயமே 134

அன்பினு லரும்பெடுத்தவர் பதத்தி லர்ப்பணம்
இன்பமாய்ச் செய்வதே சதாசிவா சிவாயமே 135

அஞ்சுபூத சஞ்சயந் தேகமான தம்பலம்
ஆறுசுவாமி யந்தரங்க வாசியாஞ் சிவாயமே 136

ஆதியான யம்பலம ஞதியான தந்திரம்
ஜோதியான தன்பரம் நானறிந்த தில்லையே 137

ஜோதியான தீபமும் நீதியான தூபமும்
சிந்தையாஞ் சுகந்தமுஞ் சதாசிவா சிவாயமே 138

ஆத்ரமான பக்குவமு மமிர்தமாம் நைவேத்தியமும்
சாந்தமான புஷ்பமுஞ் சதாசிவா சிவாயமே 139

ஆறுகோவி லாறுசுவாமி யாறுகால பூசையும்
கூறுவாய் குணலயே மனேகரஞ் சிவாயமே 140

சுழிமுனைக் கதிதமா யமிர்தவிந்து நாதமாய்
அழிவிறந்த ஜோதியே சதாசிவா சிவாயமே 141

ஆசையற்று பாசமற்று கோசமற்று நேசமாய்
பூசையுற் றிருப்பதே சதாசிவா சிவாயமே 142

சங்கையற்று சலனமற்று சகுணசேவை செய்கிலோ
சம்மதிக்கு மீஸ்வரன் சதாசிவா சிவாயமே 143

அந்தரங்க சாந்தமா யகந்தைவிட்டு நிஷ்களம்
சிந்தைரங்க நாதரே சதாசிவா சிவாயமே 144

ஞானவாசலைத் திறந்துபாரு மன்பிலம் பலம்
ஊனமற் றிருப்பதே சதாசிவா சிவாயமே 145

ஆசையான பூவதை நிராசையா யெடுத்துநீ
பூசைசெய்கி லாசையும் நிராசையாஞ் சிவாயமே 146

கங்குபகலு பங்கமற்று மண்டலங்கள் மூன்றுமாய்
தங்கமான ஜோதியே சதாசிவா சிவாயமே 147

அருள்வெளிக்ககம் புறமங்கு மிங்கு மேகமாய்
பொருள்வெளிப் பிரகாசமா யறிந்ததே சிவாயமே 148

மாயமான தாயடா மயக்கமாந் தகப்பனும்
நேயமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 149

மாயமான காயமேக நாளழிந்து போகுமே
ஞேயமா யறிந்ததே சதாசிவா சிவாயமே 150

காயமாவ தேதடா கர்மவினைக ளாகுமே
கர்மமற் றிருப்பதே சதாசிவா சிவாயமே 151

கோரமான பாதங்கள் கோடிகோடி செய்கிலும்
கூறுவாய் சதாசிவா சிவாசிவா சிவாயவே 152

சர்வபாப மோசனஞ் சர்வலோக பாவனம்
சர்வதா மனோகரஞ் சதாசிவா சிவாயமே 153

சற்குருதங் பதமலரில் நிருத்திமெல்ல மானசம்
நித்தியமுந் துதிப்பவர் சதாசிவா சிவாயமே 154

தர்ம மர்த்த காமமாதி பக்திசித்தி முத்தியும்
சித்தமாஞ் சதாசிவா சிவாசிவா சிவாயமே 155

குருப்பிரசாத சித்தமாய்க் குணங்கள்மூன் றதீதமாய்
அருள் பிரகாச சுத்தமா யறிந்ததே சிவாயமே 156

பூதனந்த ஞாதனைப் புகழனந்த சயனனைப்
ஆதியந்த மற்றதாஞ் சதாசிவா சிவாயமே 157

பூரணே புராதனே பூதநாத ஜோதியே
நாரனே நகாரனே சதாசிவா சிவாயமே 158

சாமளம் மனோகரங் கோமளாங்க மீஸ்வரம்
சாமியெங்கள் நாதனே சதாசிவா சிவாயமே 159

ஆத்மயோக மாகையால் விதேகதேகி யைவரும்
ஆத்மனே பராத்மனே சதாசிவா சிவாயமே 160

ஆதியந்த மற்றதா யகண்டபரம ஜோதியாய்
வீதியே விதானமே சதாசிவா சிவாயமே 161

மூலமாய ஜாலமான மூன்றுலோக ரூபமாய்
மாலையாதி ரூபமாய் மறந்ததே சிவாயமே 162

எள்ளிலுள் ளெண்ணெய்போல் நிறைந்திருந்த ஜோதியை
கள்ளமற்ற வுள்ளிலே கண்டதே சிவாயமே 163

கனவுகண்ட மனைவிமக்கள் நினைவுமந்த பொருளுமே
மனமுணர்ந்து பாருமளவி லில்லையில்லை யில்லையே 164

சர்வலோக மங்களஞ் சர்வதா மனோகரம்
சர்வசாக்ஷி பூரணஞ் சதாசிவா சிவாயமே 165

சூழவின் னிருக்கவே யாழிவின்னைக் கொண்டபோல்
பாழியிதன்ற தேகமோக மென்னமாய மீசனே 166

பிரகிருதியின் குணங்களாற் கலங்கிநின்ற மானசம்
விகிர்தியென் றறிவதுஞ் சதாசிவா சிவாயமே 167

ஆரணந்த பூரண மருணகோடி பூரணம்
கருணையோடு கண்டதே சதாசிவா சிவாயமே 168

காலசத்தி கொண்டுமூல மாயமேது மறிகிலேன்
பாலசத்தி பாதமே சதாசிவா சிவாயாமே 169

சத்துசித்த மாய்விளங்கும் நித்தியநிஷ் களங்கமாம்
சுத்தபரம ஜோதியே சதாசிவா சிவாயாமே 170

மாதர்போக மோகமாய் மனக்குரங்கி னின்பமா
சூதுகபட நாடகங்கள் நாடுதே சிவாயமே 171

தேகமோ நமக்குசொந்தந் தேகியோநமக்குச் சொந்தம்
தேகமல்ல தேகியென் றறிவதே சிவாயமே 172

சுத்தபரம ஜோதியே சுகானந்த வாரியே
அத்துவித வத்துவே சதாசிவா சிவாயமே 173

காரியக் காரணத்துளே கலந்திருந்த ஜோதியை
பூரபூரணத்துளே நிறைந்ததே சிவாயமே 174

சாந்தமாங் கருத்திலுஞ் சரணமம் பரத்திலும்
கருணைவந் துதிக்குமே சதாசிவா சிவாயமே 175

சுத்த நிர்மல சுயஞ்ஜோதியா யரூபமாய்
சித்தமேது மறிகிலேன் சதாசிவா சிவாயமே 176

அகாதமான மாய்கையிற் கலந்திருந்த ஜோதியை
விகாதமா யிருந்ததுஞ் சதாசிவா சிவாயமே 177

கண்ணிலுண் ணியாயிருந்தக் கருணையென் பெருமையால்
காத்துக்கொள்ளு மீஸ்வரன் சதாசிவா சிவாயமே 178

ஆதியிற் பிறந்தமாயை யஞ்செழுத் தாகுமே
பூமியிற் பிறந்ததே யிந்தவுலக மீசனே 179

தற்பரத்தி லாடிநின்ற தத்துவபேத மாயனே
சிற்பரப் பிரகாசனே சதாசிவா சிவாயமே 180

அஞ்சுசத்தி யஞ்சுரூப ஐம்புலன்க ளாகுமே
நெஞ்சிலன்பு கொண்டதே சதாசிவ சிவாயமே 181

மூலசத்தி பாலசத்தி வல்லபைக் கதீதமாய்
மேலிருந்த சத்தியே சதாசிவா சிவாயமே 182

எண்ணுமஞ்சுப் பூதமானப்புண்ணிய பாபதேகமும்
மண்ணிலே பிறந்திருந்த மாயமே சிவாயமே 183

எண்ணுமஞ்சுப் பூதமாயை யெண்ணிறந்த கோடியாம்
எண்ணியெண்ணி யேழைநெஞ்ச மேங்குதே சிவாயமே 184

கண்ணிரண்டு நடுவிலே கருத்திருத்தி மண்டலம்
மூன்றுமாய் விளங்கிநின்ற ஜோதியே சிவாயமே 185

கண்ணுயிர்க் கருத்திருத்தி யெண்ணுமெங்கள் மானசம்
கருணையோடு கண்டதே சதாசிவா சிவாயமே 186

கர்மமான தேகடா காமகர்ம மாகுமே
கர்மவினைகள் விடுவதே மனோகாஞ் சிவாயமே 187

காமமென்ற கள்வர்கள் கொள்ளைசெய்வ தெந்தனம்
நாமறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 188

காருபூண்ட பூரணங் கலந்துநின்ற ஜோதியை
நீறுபூத்த நெருப்புபோல் நிறைந்ததே சிவாயமே 189

நிலையறிந்து நிற்பவர்க்கு நிலையிதாறு மாறுமாம்
கலையில்வந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 190

மனமடக்கி மாயைநீக்கி யப்புரத்தி லப்புறம்
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 191

கறந்தபாலில் வெண்ணெய்போற் கலந்திருந்த ஜோதியை
நிறந்தரம் நிராசையா லறிந்ததே சிவாயமே 192

மாயைகொண்டு லோகமே ழிரண்டுமண்ட பிண்டமாய்
காயமான தாயமுஞ் சதாசிவா சிவாயமே 193

சின்மயந் தெளிந்தவற்கு ஜீவஜீவ னாகுமே
சம்மயம் மனோகரஞ் சதாசிவா சிவாயமே 194

எண்ணுமஞ்சு பூதமா யேழிரண் டுலகமாய்
கண்ணும் விண்ணிரண்டுமாய்க் கலந்ததே சிவாயமே 195

கண்ணு விண்ணிரண்டிலுங் கலந்திருந்த ஜோதியை
கருணைவந்துக் காட்டுமே சதாசிவா சிவாயமே 196

சிற்பரத்தி லப்புறஞ் சிவனிருந்த தற்பரம்
முப்புறத்தி லப்புறம் முகந்ததே சிவாயமே 197

வானில்நாலு பூதமா யநேகநாம ரூபமாய்
ஏகமா யகண்டமாய ரூபமாஞ் சிவாயமே 198

சாதுபாத பூசனை சர்வபாப மோசனம்
சர்வலோக மங்களஞ் சர்வதா சிவாயமே 199

சாதுநாம கீர்த்தனஞ் சமாதியோக சாதனை
சர்வதா மனோகரஞ் சதாசிவா சிவாயமே 200

சாதுசங்க சங்கமுஞ் சர்வசங்கத் தியாகமும்
சாதுநாம கீர்த்தனஞ் சதாசிவா சிவாயமே 201

நானுநீரு மொத்திருந்த சித்தமான மெத்தையில்
சுத்தபரம ஜோதியே சதாசிவா சிவாயமே 202

மாயைகொண்டு மாயைநீக்கி மரணமென்ற தூக்கமும்
மானிடப் பிறப்பிறப் பறுப்பதே சிவாயமே 203

உள்ளதொன்று முள்ளதல்ல உள்ளதின்னும் நாசமில்லை
உள்ளுணர்ந்து பாரடா சதாசிவா சிவாயமே 204

வானில்மயிலு கானல்நீரு கனவுகண்ட போகமும்
மனமுணர்ந்து கருதுமளவி லில்லையில்லை யில்லையே 205

பீமலங்கள் மூத்திரம் நாறுமிந்த வுடலையும்
நாநீதென் றகந்தையு மறிந்ததே சிவாயமே 206

நீரிலே குமிழியும் நிழலுமிந்தத் தேகமும்
நிலையிதல்ல நித்தியமாம் சதாசிவா சிவாயமே 207

நீரிலெண்ணெய் விட்டபோல் நீகலந் திருப்பதை
நானறிந்த தில்லையே சதாசிவா சிவாயமே 208

ஆதியந்த மற்றிடம் பூதமஞ்சு சுட்டிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 209

ஐம்புலன்க ளற்றிடம் மும்மலங்க ளற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 210

அருள்பெருகி நின்றிடம் பொருளரியத் தன்னிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாவமே 211

மானகர்வ மதமடக்கி மாய்கையற்று நின்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 212

பொரிகரண மற்றிடம் யிறுவினைகள் விட்டிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 213

கரணமஞ்சு தருணமுங் குணங்கள் மூன்றுமற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிதா சிவாயமே 214

காமலோப மோகமுங் குரோதமற்று நின்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 215

மூன்றுநாடி மூன்றவஸ்தை மும்மலங்க ளற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 216

ஈஷனங்கள் மூன்றுமற்றுத் தூஷனங்க ளற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 217

ஆதிமூன்று மண்டலம் அவதிகண் டிடத்திலும்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 218

த்ங்குமங் ககந்தெளிந்து கங்குபகலும் மற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 219

ஆசையற்று நேசமாய் நிலையில்நின்ற மானசம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 220

அச்சமற் றகந்தையற் றருள்பிறந் திடத்திலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 221

பற்றறுத்து பாசமற்று பகலிரவு மற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 222

நான்கு சாதனங்கள் பெற்றருள் பெற்றிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 223

பெண்ணினோ டினக்கமற்று பெரியயின்பமா மிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 224

மண்ணினோ டிணக்கமற்று மானமற் றிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 225

பொன்னினோ டிணக்கமற்று பொருமைபோ டிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 226

நானென தகந்தையற்று நாமரூப மற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 227

தானமான பேயறுத்து தானகந்தை விட்டிடில்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 228

நாலுவேத வாதமற்று ஜாதிபேத மற்றிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 229

புண்ணியபாப மானமற்று மனமிறந்து விட்டிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 230

பூதலத்தி லொருவரிந்த மாயைவிட் டறிந்திடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 231

அன்புகொண்டு தேசிகன்ற னருள்பொருந்தி மானசம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 232

துரியபெரியப் பொருளிலும் மறிவிருந்த நிலையிலும்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 233

பூதலத்தில் மாயமற்றுக் கபடமற் றிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 234

காமமற்று கர்மமற்று கவலையற் றிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 235

சுத்தமான வெளியிலே சுபாபமான வொளியிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 236

அந்தரங்க மடியிலே யருள்பிறந்த முடிவிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 237

பூரணே புராதனே பூதநாதத் தீதனே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 238

ஆதியந்த நடுவிலே நாதவிந்து முடிவிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 239

நானிறந்த முடிவிலே நீயிருந்த படியிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 240

ஞானகந்தை முடிவிலே நீயகண்ட வடிவிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 241

மூன்றவஸ்தைவிட்டு மூலதுரிய பெரியப் பொருளிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 242

நித்திய நிஷ்களங்கமாய் நிர்விகற்ப நிர்மலம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 243

குருபிரசாத சித்தமாய்க் குணங்கள்மூன் றதீதமாய்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 244

குருபதம் பணிந்துநின் றுகூறுமெங்கள் மானசம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 245

நித்தியமான குருபதம் நிர்மலேன பூஜிதம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 246

பூரணனு பூதியாய் நாதவிந்து முடிவிலே
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 247

ஆசையற்ற ஞசையாய் விசாலமா யிருப்பிடம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 248

சிந்தையற் றிருப்பிடஞ் சிவாலபத்தி னந்தரம்
ஜோதிவந்து காட்டுமே சதாசிவா சிவாயமே 249

சாதுபாத பூசைசெய் திதைப்படிப் பவர்களும்
சாதுவாஞ் சதாசிவா சிவாசிவா சிவாயமே 250

பராபரா புராஹரா தயாபரா சிவாயமே
சராசரா குருபரா சாதாசிவா சிவாயமே 251

சதாசிவா சிவாசிவா சிவாசிவா சிவாயமே
சிவாசிவா சிவாசிவா சதாசிவா சிவாயமே 252

முற்றிற்று.

உ
கடவுள் துணை.

ஸ்ரீ சற்குரு திருநாம சங்கீர்த்தனங்கள்

(இ-ம்) நாட்டை தாளம் சாப்பு.

பல்லவி.

குருநாதன் கிருபையானல் வருமோ இனிமேற் சென்மம்
அருட்பாத மறவாதே யகமே சுகமே நித்யங் (குரு)

அநுபல்லவி.

பொருட்பாதம் பெருமோதங் கருத்தாயிருந்தவர்க்குந்
திருப்பாதந் தினந் தினம் துதித்தானந்தமாடுவாய் (குரு)

சரணங்கள்.

திருத்தாய் திருப்பாதத்தில் திருத்தித் திருப்பிமன
மருட்பாத முன்பாக அழுத்தி யழுத்திமெள்ள
அநுபோதம் தானேவரும் தானே தானயிருந்தும்
நினைவில் நினைவிருந்தும் நீயே நானயிருந்தும் (குரு)

சத்துசித்தானந்தமாய் நித்யபரிபூரணமாய்
முத்திக்கு மூலமாயும் மூவுலகுக்கரசாயும்
அங்குமங்குமெங்குமாயும் ஏகமேகாந்தமாயும்
தங்குமாத்மபரமாயும் தாரகப்பிர்மமாயும் (குரு)

அரனரியாறுமுகன் நான்முகப்பெருமானும்
நரசுர முனிமாறும் பரமசித்தாந்திகளும்
சித்தருஞ் சாத்தியரும் வேதவேதாந்திகளும்
அனைவரும் புலவரும் புகழப்புகழவேயென (குரு)

குருபாதத்திடத்திலும் திருவாய்மலர்ந்தருளும்
பருவம் வந்தயிடத்திற் பரமாய் நிறைந்தருளும்
பரமாயித் திரமாக்கிப் பரயானந்தமுமாக்கும்
குருவாக்யம் திரமாக்கும் இருவாசனையும்போக்கும் (குரு)

மூலவிந்து நாதவடி மூலமாயிருந்தபடி
மாலயனுங் காணுதடி மாயமாய் மறைந்தபடி
குருநாதன் கிருபையாலே யருளாலறிந்தபடி
அருளாலும் பொருளாலு மானந்தமானபடி (குரு)

சத்திவரும் முத்திதருஞ் சுத்தபரிபூரணமாம்
சித்தம் பரிபாகமாக்கும் சின்மயானந்தமாக்கும்
பெந்த மோக்ஷ பேதம் நீக்கி வேதவேதாந்தமாக்கும்
அந்தமும் அனந்தமாக்கும் ஆனந்தமயமாக்கும் (குரு)

---

2. (இ-ம்) ஆனந்தபைரவி ஆதிதாளம்.

காணவேணுங் கடைக்கண்பார்—கருணையாலெங்களை நீ
கார்த்து பாதுகாப்பவரை-பார்த்தருளும் பரமாத்மா (காண)

நம்பவேணுமவரை நாம் ஆதரால் வணங்கவேணும்
அன்புவேணுமவரிடத்தில் இன்பமாகக்கூடவேணும் (காண)

மனமொருவழியாக்கி இருவினை தூரப்போக்கிச்
சுழிமுனை நடுவிலே பழிவில்லாப் பெரும்பொருள் (காண)

ஆணவாதி மும்மலங்கள் தூரவிலக்கியருள்
ஞான தீபவொளியிலே பூரணமாம் மெய்விளக்கம் (காண)

பாருமாருங்குருபாதந் தீருமே பஞ்சமாபாபம்
சேருமே சிவலோகம் சின்மயானந்தரூபம் (காண)

---

3. (இ-ம்) பூபாலம்-சாப்பு தாளம்.

பல்லவி.

நாதாஉமக்கடிமை அடியார்க்குமடிமை யென்
னுடல் பொருளாவி மூன்றும் சற்குருநாதா

அனுபல்லவி.

நாதாந்தரூபமான வேதாந்த வெளியிலே
சோதிமுனந்தப்பூரணம் புகழப்புகழுவேயாம் (சற்குருநா)

அறியாதபேதகன் பெரியோர் பாதந்தேடி
அறிவோடிருந்தவரை உறவாய்வணங்கி நின்றும் (சற்குரு)

மின்னலுமிடியும்போல் தோன்றும்உடலை நம்பி
இன்னும் மறந்துவிட்டேனிறைவா உன்னருட்பாதம் (சற்)

ரவிமதிசதகோடி உதயமானதுபோலே
குருபாதமுதயமாய் திருவாய் மலர்ந்தருளும் (சற்குருநா)

மெய்விளக்கிப் பொய்வழக்கில் பெருந்தீயால் தீபமேற்றி
கைவிளக்கிக் கால்விளக்கி கண்ணுயிரில் கைகாட்டி (சற்)

---

4. (இ-ம்) காம்போதி தாளம் ரூபகம்.

பல்லவி.

பாதுகாத்துப்பரமன் பதத்தைநீ
பாரும் பவபயந்தீரும் (பாது)

அனுபல்லவி.

தீமாவினைகளுந் தீரும் திருவடிச்சேரு நின்றுநீபாரும்
பராபரம் பரிபூரணனந்தமாம் சோதிமுன்னாகவேநின்றும்

சரணம்.

ஓமோர்தரந் திருநாமசங்கீர்த்தனம்
வாழ்த்தித்துதித்து வணங்கி
நாராயணநமோ நாராயணவென்றும்
பாராயணஞ் செய்துபாரும் (பாது)

வெட்டிமுறித்தாவிழுந்த மரம்போலொருதினம்
விட்டுவிழுமிந்த தேகம்
கட்டித்திரட்டிப்புரட்டி யெமதூதர்
கஷ்டமாயுள்ள நரகத்தீமாட்டுமுன் (பாது)

சித்தம்பலவழி சிந்தாதேமனம்
சுத்தமாக்கிப் பரிபூரணனந்தமாய்
நித்யமாய் சத்யமாய் சச்சிதானந்தாய்
தானாய் நிறைந்த பரம்பொருளை (பாது)

ஞானத்திடத்தில் கருத்திருத்தி மனம்
மௌன சமாதியில் கூடி
ஊனமற்றேயாமல் தூங்காமற்றூங்கி நீ
துரியநிலையில் நிறுத்தி மனம் (பாது)

நாஸற்றகம்பரம் நீரற்ற நிர்மலம்
நித்தியானந்தமாய்க் கூடி
ஆனைம்மனோஜயம் ஆனந்தவெள்ளமாய்
ஊனமற்றேயாமல் ஓங்கார ரூபமாய் (பாது)
ஆதாரமாருக்கு மாதாரரூபமாய்
பூதாரமாய் நின்ற புலங்கட்கதீதமாய்
நேராயிருந்த நிலையிலுமுன்புரம்
பூரணானந்தமாய் நிறைந்த பரம்பொருள் (பாது)
பாராருமாரும் பரந்தபராபரம்
பாரிடமெல்லாம் நிறைந்தபரம்பொருள்
பூரயமாயிந்த பூமிமுதல் நாதம்
நீருயிருந்த நிலையிலும் அப்புரம் (பாது)
பறையாயிருந்ததும் பரமாயிருந்ததும்
நீருயிருந்த பரம்பொருளே
நேராயிதைப்படித் தானந்தமாளிகா
மேடைமேற்பள்ளி யுறங்கி யுறங்காமல் (பாது)
அரிவாயிருந்ததி லுருவாயிருந்ததும்
அருளாயிருந்ததும் நீயே
குருநாதன் கிருபையாலே வணங்கி
யிணங்கிநின்றம் துணையாக நின்று நீகார் (பாது)

---

5. (இ-ம்) ஆரபி—தாளம் ஆதி.

பல்லவி.

ஓம்மனத் தாமரை பூமகள் மணவாளா
வாமனசாபஜ மானஸவாசா (ஓம்)

அனுபல்லவி.

ஹாகாரத்தர மம்பலத்தாளா
ஹமிர்தானந்தத் தாண்டவத்தாளா (ஓம்)

சரணம்.

உஊஉலகிட உமையாள்சகிதா
உடலுயிராவி மனோகுணரகிதா
ஊனெடுத்தேனதில் மானிடதேகம்
ஏனெடுத்தேனிது மாயாமோகம் (ஓம்)

நானெனதென்கிற மானமதங்களும்
மனைவியுமைந்தரு மாண்டால் வருமோ
கைதொழுதவர்பதம் வினையமதாக்கிக்
கவலைகளெல்லாந் தூரவேபோக்கி (ஓம்)

ஆசையடக்கி அரைநிமிஷம் குரு
பூசையிருத்திப் புகழ்வாயனுதினம்
நாசமில்லாப்பதம் பெறும் பரம்பொருளை
நாடுவாயனுதினமானந்தம் நாடுவாய் (ஓம்)

காசியும் வேண்டாம் பூசையும் வேண்டாம்
காமதபங்களைச் செய்யவும்வேண்டாம்
நேசமிதைத்துதி யனுதினமிதைப்படி
நாசமில்லாப்பொருள் நாசிகமுனையிலே (ஓம்)

மெய்யறிவாயொரு குருவைத்தேடி
அய்யே ஆண்டவ னடிமையாய்க்கூடி
அவர்பதம் அனுதினம் முடிமேற்சூடி
ஆனந்தமயமாயத் தாண்டவமாடி (ஓம்)

---

6. (இ-ம்) கமாஸ் தாளம் ஆதி கண்ணிகள்.

பல்லவி.

ஓங்காரநாதவிந்து ஒன்றாயிருந்தபொருள்
இரண்டாகத் தோன்றுவது போகம் (ஓங்)

அனுபல்லவி.

விந்துவிதானமாக்கி வீரேழுலகம்பெற்ற
பந்தானபாமரத்தில் பரமாயிருந்தபொருள் (ஓங்)

சரணம்.

பாங்கானபரமபொருள் பரமாய்பரந்தபொருள்
நீங்காமநின்றருளை நீயாயிருந்தபொருள் (ஓங்)

பாரும்பாருமுனைப்பாரும் ராவும்பகலுந்திரும்
தூரம்தூரமநானெனதும் நான்மறைக்குந்தூரமான (ஓங்)

ஊனாயிருந்ததேகம் நானாயிதிந்தமோகம்
மானாபிமானமாயும் மனமேநினைவேமாயம் (ஓங்)

முன்னஞ்சொன்னநாதவிந்து முன்னும்பின்னுமேகமாமே
பின்னமில்லையேகமாயும் அங்குமிங்குமெங்குமாயும் (ஓங்)

கருணையோடென்மனக் கவலைகளெல்லாம்போக்கி
தருணமாய்நித்திய நிர்மலதீபமாக்கி (ஓங்)

பூரணைகப்பொருளைநாம் பூரணத்தில்பரமில்லை
காரணத்தையுற்றுபாரும் கவலைகளெல்லாந்தீரும் (ஓங்)

பாரும்பாரும்கடைக்கண்பார் பரமன்பதத்தைப்பாரும்
பகலுமிரவுமற்றக் குருவின்திருவடியை (ஓங்)

கண்ணூரில்குருநாதன் கருணையாலென்மோகம்நீக்கி
நிர்மலமாக்கிசிவ சச்சிதானந்தமாக்கி (ஓங்)

---

7. (இ-ம்) நாதநாமக்கிரிகை தாளம் ஆதி.

பல்லவி.

நாதனைத்துதிசெய்வாய் மனமே ஓம்குரு
நாதனைத்துதிசெய்வாய் (நாத)

அனுபல்லவி.

நாதனைத்துதிசெய்தால் வருமே மோக்ஷம்
ஆதியனாதியா யானந்தமயமாக்கும் (நாத)

கர்மவினைகள்போக்கிக் காமிதபலந்தரும்
ஜெனனமரணம்நீக்கிச் ஜென்மஸாபல்யமாக்கும் (நாத)

ஞானப்ரகாசமாயும் ஆனந்தமயமாக்கும்
ஊனமற்றேயாமல் உமையாள் சகிதமாயும் (நாத)

பூதவேதாந்தமான நாதாந்தப்பொருளைநின்
நாவிலும்மனதிலும் மறவாதே
மாதாபிதாமனைவி மைந்தரும் பொருளும்
வீதவினையிது கனவிலும் நினையாதே மனமே (நாத)

நாரதஜனகஜனசன முனிவர்கள்
அனைவரும்புகழும் குருவருட்பாதம்
அடிக்கடி துதிசெய்வா யன்புடன்கும்பிடு
ஆதரவால்திருமலரடி சூடுவாமனமே (நாத)

புத்தியும்யுக்தியும் குருபக்தி விஸ்வாசமும்
சத்யமாய் நித்யமும் மறவாதே
சுத்தாந்தகரணமாய் சித்தாந்ததரணமாய்
சித்திக்குமுத்திக்கும் மூலகாரணமாய்மனமே (நாத)

எப்போதுலையுந்துன்பம் ஏகாந்தஸ்தானமாக்கும்
எப்போவருபோயீசன் இனிமேல்நாமென்னசெய்வோம்
தப்பானதானமானம் அப்பாலேதூரம்போக்கி
தப்பாதேஞானவானும் அப்பாவுனக்கடிமைமனமே (நா)

இருபத்தோராயிரத் தருநூறுதாசிமார்
போக்கும்வரவுமாயும் இரவும்பகலுமாயும்
வாக்குமனமடக்கிப் பார்க்கில்பகலிரவும்
கோக்கிச்சிவானந்தமாய் சிந்தைமறந்தருளேமனமே (நாத)

அஞ்சும்மணிமாளிகைமேல் ஆனந்தமயமாயும்
நெஞ்சம்பரகாஸமாய் நிர்மலப்பிர்மமாயும்
நித்யநிஷ்களங்கமாய் நிர்மலஸகிதமாய்
சுத்ததத்வபோதமாய் சுந்தரரூபமாய் (நாத)

---

8. (இ-ம்) ஆனந்தபைரவி தாளம் ஏகம் கண்ணிகள்.

பல்லவி.

மண்ணிற்பிறந்தபுண்யம் மானிடஜாதகமாய்
எண்ணிப்பிறந்திறந்தேன் என்னசெய்வோமேழைநெஞ்சே

அண்ணவிமனைவிமக்கள் அனைவர்களும்பொருளும்
மண்ணாகிப்போகுமென்றும் யெண்ணுதோயேழைநெஞ்சே

மண்ணைசமதயானை பெண்ணைசப்பெரும்பாம்பாம்
பொன்னைசப்புலியாக யெண்ணுதோயேழைநெஞ்சே (ம)

ராகாதிமிருகங்களும் ராக்ஷதரும்வேட்டையாடும்
அகங்காரக்கொடுங்காட்டில் கெட்டலையாதேழைநெஞ்சே ( )

காட்டுத்தீப்போலேவரும் காலனைக்கண்டுபயம்
கூட்டிலிருந்தசுகம் போதும்போதுமேழைநெஞ்சே (ம)

கூட்டைவிட்டுப்போகும்போது கூட்டாரொருவரில்லை
மாட்டுவார்கள் படுகுழியில் யெமதூதர்யேழைநெஞ்சே (ம)

மாயாமலடிபெற்ற மைந்தனையரசாக்கி
காயாபுரிபட்டணத்தை பாராயோ யேழைநெஞ்சே (ம)

காயாபுரியீதென்றும் பேயானபட்டணத்துக்
காசான் நாயகன்ராஜா அறியாதோ யேழைநெஞ்சே (ம)

சுட்டித்தருணிமாரைக் கட்டிப்புணர்ந்தபாபம்
உணர்ந்த ஞானியைக்கண்டால் பரக்கும்பஞ்சுபோல்
[நெஞ்சே (ம)

கட்டற்று விழும்பொம்மை போலவேயிந்ததேகம்
சட்டற்றுவிழுமிதைக் கேட்டாயோயேழைநெஞ்சே (ம)

ஈரேழுலகம் பெற்ற யீசனையிருந்தாலும்
ஆசையடக்கிமனம் மௌனியாயிருந்தாலும் நெஞ்சே (ம)

நாசமாய்ப்போகுமிந்தக் காயமும் கர்மமும்
மாயாமயமீதென்றும் அறியாதோயேழைநெஞ்சே (ம)

எல்லாம் வெளிமயக்கம் யேகாந்தசாரங்கேளும்
நல்லார் மனப்பழக்கம் நாடுவாய் நல்லநெஞ்சே (ம)

புல்லாய் பிறந்தபுண்யம் பூமியில்பலதுமாய்
எல்லாமெடுத்திளைத்தேன் என்னசெய்வேனேழை
[நெஞ்சே (ம)

சுடுகாட்டில் மனைவிமக்கள் வழிகாட்டுமல்லாமல்
படுகாட்டில்பயமாக்கும் பாபபுண்யம் கூடவரும்நெஞ்சே (ம)

கஷ்டம்கஷ்டமேநாமினி பட்டபாடுபோதும்போதும்
கெட்டுப்போகாதினிமேலும் கேட்டாயோஏழைநெஞ்சே(ம)

காலவசம் பிறந்தக் கோலதைநம்பி
காலன்வந்தடுத்ததும் கண்டாயோ ஏழைநெஞ்சே (ம)

காலாரி திருநாமம் காலை தினம் வணங்கி
மேலான் திருவடியைப் பாராயோ ஏழைநெஞ்சே (ம)

பாரும்மகத்துக்களிப் பாரும்பரமசிவம்
சேரும்திருவடியில் பாராயோ ஏழைநெஞ்சே (ம)

பாரும் பரகுருவின் பாகம் வணங்கி நின்றும்
சேரும் சிவனடியில் சேராயோ யேழைநெஞ்சே (ம)

---

9. (இ-ம்) பியாக் தாளம் ஆதி கண்ணிகள்.

பல்லவி.

குருமணிநாதம் விந்துவினோதம் திருவருட்பாதம் பிர்மா
(குருமணி) [னந்தம்

இகபரமோகம் யிதுபெருமாயம் யீசானனபஜா மானஜசாரம்
(குருமணி)

பரமொருபாகம் பார்வதிபாகம் பரிபூரணசிவம் எங்கும்
(குருமணி) [பிரகாசம்

புரமெரிசெய்ததும் பரமருள்கொண்டதும் ஒருதரம்பாருந்
(குருமணி) [துவிதங்கள்தீரும்

அஞ்சும்மணிமயம் அன்புலன்கரணமும் நெஞ்சிலடக்குவாய்
(குருமணி) [நேர்வழிகாட்டும்

அஞ்சித சஞ்சித பாபங்கள்போக்கும் அகமகம்நீக்கும்
(குருமணி) [ஆனந்தமயமாக்கும்

நிர்மலசித்தம் தில்லையம்பலம் தில்லையம்பலத்தரசே துரியம்
(குருமணி)

துரியம் பரமதிலதிகம்மோதம் துரியாதீத நிறைஞ்சனபோ
(குருமணி) [தம்

நல்லார்மணி மாதுமனோன்மணி சொல்லாமநிர்மலசிந்தை
(குருமணி) [சிரோன்மணி

எல்லாம் குருமணி ஏகமனோன்மணி ஏகாந்தஸ்திரமெங்கும்
(குருமணி) (திருமணி

---

10. நோட்டு தாளம் ஏகம்.

பல்லவி.

வரதராஜவாசுதேவ நந்தகோபமைந்தனே
பரமஹம்ஸ ராமகிருஷ்ண தேஜஸேநமோ நமோ (வரத)

ஐயனேயனந்தகோடி பூதனந்தஸயனனே
மெய்யனே சிவானுபூதி தேஜஸே நமோ நமோ (வரத)

தேவதிரிய மானுஷாதி ஜாதிபேதசூன்யனே
தாபபாப நாசனுய தேஜஸேநமோ நமோ (வரத)

கிருஷ்ணராம நளின நயன பக்திபாப துரிதசமன
பத்மநாப பரமபுருஷா தேஜஸே நமோ நமோ (வரத)

எண்ணிறந்த கோடிபூதம் மண்ணிலே பிறந்திறந்து
மாயமாய் நிறைந்திருந்த தேஜஸே நமோ நமோ (வரத)

முன்னமில்லை பின்னமல்ல பின்னமான கேவலம்
என்னிலும் நிறைந்திருந்த தேஜஸே நமோ நமோ (வரத)

யோகமானமுடிவிலேக போகமான நடுவிலே
மோகமான தேகமோக தேஜஸே நமோ நமோ (வரத)

அகிலமொருவரறியுமோ வதிலுமிவரையறியுமோ
நிகிலபுவன பூதநாத தேஜஸே நமோ நமோ (வரத)

நிலையிலந்த மாயமான மனசிலந்த ஞாயமாய்
நினைவிலே மறைந்திருந்த தேஜஸே நமோ நமோ (வரத)

கலையிலே கபாலமான தலையிலேக நிலையிலே
புலையிலே மறைந்திருந்த தேஜஸே நமோ நமோ (வரத)

சித்தபேத தேகமோக தத்வநாம ரூபமாய்
சுத்தமான தேகதேஜ தேஜஸே நமோ நமோ (வரத)

திருவனந்த சயனமான பாமரங்கநாதனே
பரமனந்த ஸயனமான தேஜஸே நமோ நமோ (வரத)

அணுவிலணுவிலணுவதா யகண்டமான பூரணம்
அறிவிலறிவ ரூபமான தேஜஸே நமோ நமோ (வரத)

தெய்வமேது போதமான நாதவிந்து முடிவிலே
துய்யமேக துரியமான தேஜஸே நமோ நமோ (வரத)

பூரணந்த நாதனே புராணபுருஷ பூதனே
பூதநாத ஜோதியே தேஜஸே நமோ நமோ (வரத)

ஆரணந்தகாரமான விந்து நாதபூரனே
நாரணந்தகரணமான தேஜஸே நமோ நமோ (வரத)

குருப்ரசாத பாவனை லருட்பிரகாச ரூபமாய்
திருப்ரதாய மானதேவா தேஜஸே நமோ நமோ (வரத)

அந்தரங்கமைந்தனே அளவிறந்த பூதகோடி
சிந்தைரங்கமைந்தனே தேஜஸே நமோ நமோ (வரத)

கோபகோப கோபிகா ரெமணகோபி மைந்தனே
பேகபோக யோகமாய தேஜஸே நமோ நமோ (வரத)

11. நாமாவளி.

சிவசிவசிவசிவ, சிவசிவசிவசிவ, சிவசிவசிவசிவ மஹாதேவா
சிவசம்போசங்கர சாம்பசதாசிவ
சரணம் மேதவ சரணயுகம்
நிஷ்கள நிச்சல நிற்மல நிரூபம்
நிஷ்கரிய நிரகங்கார நிராஸ்ரியா
நிற்குண நித்திய நிராகுல நிற்மல
நித்யானந்த சதாசிவ சின்மய (சிவசிவ)

12. ஆனந்தக்களிப்பு.

அரஹர சங்கர சம்போ ஹர
சங்கர சங்கர சம்போ ஹர ஹர (அரஹர)

ஆலகாலத்தைப் புசித்தாய் ஹமிர்
தாகாரத்தை யெடுத்தாய் ஹரஹர
காலனைக் காலாலுதைத்தாய் கடைக்
கண்ணால் காமனை யெரித்தாய் (அரஹர)

மானும் மழுவுந் தரித்தாய் மலை
மங்கையிடப்பாகம் தரித்தாய் அரஹர
பாலமதியைத் தரித்தாய் பரஞ்
ஜோதியா யெங்கும் நிறைந்தாய் (அரஹர)

சூலகபாலந் தரித்தாய் கர
வாரியைச் சடையிலொளித்தாய் அரஹர
நீரொடு தும்பையணிந்தாய் நீ
ராதரமாகியும் எங்கும் நிறைந்தாய் (அரஹர)

வெள்ளேரு தேறிநடப்பாய் வேத
முடிவிலே தானயிருப்பாய் அரஹர
புள்ளிமான் புலித்தோலுடுத்தாய் பூமி
முதலான பூதியிலிருப்பாய் அரஹர (அரஹர)

ஆசாபாசத்தை யருத்தாய் யரு
ளானந்தவெள்ளம் நிறைந்தாய் அரஹர
பேசித்திரிந்தே நடந்தாய் பெருந்
தீயால் திரிபுரம் சுட்டுக்களித்தாய் (அரஹர)

நாமாவளி.

ராமராகவ ராகவ ராகவ ராகவ ராகவ ராமானந்தம்
ராமானந்தம் பிர்மானந்தம் பிர்மானந்தம் நித்யானந்தம்.

ஸ்ரீ சற்குரு திருநாம சங்கீர்த்தனங்கள் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஸ்ரீ குருசரணம்.

அம்பாள் ஸ்தோத்திரம்.

ஸ்ரீ விஸ்வநாத கருணாகர சூலபாணே
சப்போகிரீச சிவசங்கர சந்திரமௌளே
ஸ்ரீ நீலகண்ட மதனாந்தக விஸ்வமூர்த்தே
கௌரீபதே மைநிதேஹி கிருபையா கடாக்ஷம்.

அச்சுதஅஜனாய் அரனாய் அமிருதபரி பூரணானந்தமாய்
விஸ்வரூபனாய் விஸ்வம்பரனாய் விஸ்வாத்மாவாய் விஸ்வ [சாக்ஷியுமாய்
நித்தியமாய் நிஷ்களமாய் நிகமாந்தஸாரார்த்த போத்திய [போதகனுமாய்
ஸத்குருவாய் அருளாய் அறிவாம் சுகஸ்வரூபத்தையாம் [வணங்குகின்றேனே.

தோடிராகம்—ஏகதாளம்.

பல்லவி.

பாலசுந்தரீ மூலநாயகி நீலிசூலி கபாலினி
ஸ்ரீ நீலகண்ட குடும்பினீ சிவகாமி பார்வதி சங்கரீ
ஓந்தரி அரிசோதரீ ஹேமசுந்தரீ கௌரீ சங்கரீ
தன்பரீ அரதன்பரீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

மூலயே குணமூலயே சிவமாலஜே கமலாலயே
காலயே கருணாலயே அருள்பாகி தேவி சதாசிவே (பா)

முக்குணத் தனிமூவர் சிந்தனி முப்புரம் பரிபாலினீ
நிற்குண பரிபூரணீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

சேதனம் பரமாயயா குணபேதமாய் வெகுரூபமாய்
யேக்மாய தரூபமாய் அருள்பாகி தேவி சதாசிவே (பா)

அஞ்செழுத்தெனும் ஆதிமூல மனுதிசோதி பராபரீ
யோம்துஞ்செழுத்தது நேசமாய் அருள்பாகி தேவி
[சதாசிவே (பா)

சாந்தமான ஸபூரணி சமசச்சிதானந்த ரூபிணீ
ஆரணி அருணபூரணி அருள்பாகி தேவி சதாசிவே (பா)

பத்மலோசனபாரதீ புரவைரிதல் பிரியமங்களே
ஆத்மனுபரமாத்மனீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

சர்வதோனந்தரூபிணீ சர்வமங்களே விஷ்ணுமாயையே
உருவிபார வினசனீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

பஞ்சபூதநிரூபிணீ அருள்கொண்ட நெஞ்சில் விசாரணீ
பஞ்சபாப வினசனீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

மூலமந்திர ஞானசுந்தரீ துரியநிர்மல நிஷ்களே
அவிஜயே பரமவிஜயே அருள்பாகி தேவி சதாசிவே (பா)

அண்டபிண்ட சராசரீ அகிலாண்டகோடி மஹேஸ்வரீ
தொண்டர்கண்ட பராபரீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

தெய்வமே பரதெய்வமே சர்வமாம் பரமேஸ்வரீ
துய்யமே பரதுரியமே அருள்பாகி தேவி சதாசிவே (பா)

எண்ணுமஞ்சு விதானரூபிணீ எழிரண் டுலகம்பிகே
கண்ணுயிர் துரு கருணையே அருள்பாகி தேவி சதாசிவே(பா)

அரமணீ பரதரமணீ அருள்விந்து நாத மனோன்மணீ
குணமணீ குருதிருமணீ அருள்பாகி தேவி சதாசிவே (பா)

இன்பதுன்ப மொழித்தருள் கனகம்பணீ பரவிம்பணீ
நம்பினேன் உன்னை நம்பினேன் அருள்பாகி தேவி சதாசிவே

தத்துவவித்தினு நித்தியமித்துதி முத்திஞனு மளிக்குமே
பரிசுத்தசான விசாரமே அருள்பாகி தேவி சதாசிவே (பா)

சங்கரீசிவ சங்கரீசிவ சங்கரீசிவ சங்கரீ
சங்கரீ அரதன்பரீ அருள்பாகி தேவி சதாசிவே (பால)

சாதுஜன ஹிருதயத்தில் மோதமாய்நின்ற போதமயனே
[விந்துனுதமயனே
வேதாந்தமணியினுல் விளங்குகின்ற தன்மயனே நித்யபூரண
[சோதிர்மயனே

அவனிமுதல் நாதபடி சகலமும்ஆண்ட ஜெகதீஸ்வரீ
[ஆனந்தவல்லீநீ
ஆதிசத்தியோங் தாசதாசனும் என்மனக் கவலேகளைத்தீர்த்து

ஆனந்தமெனக் கருள்வாய் சிதம்பர சிவகாமீ
உன்னேயான் நம்பினேன் நம்பினேன் நம்பினேனே.

சுபமங்களம் நித்திய சுபமங்களம்.

உ

சிவமயம்.

ஸ்ரீ சற்குருவே நம:

வேதாந்தக் கிளிப்பாடல்.

விருத்தம்.

கணபதிபகவானும் அப்பயோனும்
பரனேயினி யாகிய வாணி தேவிதானும்
அரனரி குருநாதனுந் துணேயாகவே
ஆதரவா லன்புடன் யென்மனம் பாடுவாயே.

(இ-ம்) நாதநாமக்கிரியை—ஏக தாளம்.

பல்லவி.

அஞ்சுமது மொழியே கிளியே ஆனந்தத்தாயி வாயே
நெஞ்சந் தெளியவேணுங் கிளியே நீரே நானாகவேணும்

அனுபல்லவி.

அஞ்சும் பரமாத்மா கிளியே யானந்தமாய்ப்பார்க்க
சாதனை நான்குவேணுங் கிளியே சற்குரு சுவாமிவேணும்

சரணங்கள்.

தத்துவந் தெரியவேணுங் கிளியே தாமசம்போய் விட்டால்
சித்தந் தெளியவேணுங் கிளியே சிந்தை யிறக்கவேணும்
முன்னூலைக் கண்டதடிக் கிளியே மூலப் பிரகிருதியாகும்
முக்கோண மொன்றிதடி கிளியே வோங்கார ரூபமாகும்
அங்காரப் பிர்ம்மமடிக் கிளியே உங்கார மாத்திரையாம்
மங்காரமான மட்டுங் கிளியே சிங்காரமாகப் பாரும்
முக்கோணம் பாரடியோ கிளியே சற்குணமாக நின்று
முத்தொழி லாச்சிதடிக் கிளியே மும்மூர்த்தி தேவர்களும்
அஞ்சித பஞ்சபூதங் கிளியே சஞ்சித புண்ணியபாபம்
இந்தப் பிரபஞ்சமூலங் கிளியே பஞ்சதன் மாத்திரையாமே
இந்திரிய ஜாலங்களுங் கிளியே இந்திர ஜாலமாகும்
மாத்திரை யஞ்சதினாற் கிளியே சூத்திரமா முலகம்
சுரோத்திராதி விஷயமஞ்சுங் கிளியே சத்தாதிமாத்திரையாம்
சுக்தியிற் றூரமடிக் கிளியே புத்திதெரிந்த பேர்க்கும்
காய மூன்றிதடி கிளியே ஜாக்ராதி மூன்றும்பாரு
வாக்காதி கர்மமஞ்சுங் கிளியே கர்மாணியாகப் பாரும்
பிராணாதி யஞ்சிதடி கிளியே தன்மாத்திரைகாரணமாம்
ஈஷணம் மூன்றிதடி கிளியே தூஷணம் மூன்றும்பாரு
ராகாதி யெட்டிதடி கிளியே பாராதக் கள்ளராகும்
கோசமீ தஞ்சடியோ கிளியே மண்டலம் மூன்றும்பாரு
தாபவு மூன்றிதடி கிளியே தத்துவந் தெரிந்தபேர்க்கு

நாடிகள் மூன்றிதடி கிளியே கூட மன்புற்றுப்பாரு
தாதுக்க ளேழடியோ கிளியே சற்குரு வாழுமிடம்
நான்கு கரணமடிக் கிளியே ஜீவனு மொன்றிதடி
நான்கு கரணமற்றால் கிளியே வாசனு ஜாலமேது
கூடமிது வடியோ கிளியே ஜீவ பரமிருக்கும்
ஆசை யறுத்துவிட்டாற் கிளியே ஜீவனும் வாசமெங்கே
ஜீவனை யுற்றுப்பார்த்தாற் கிளியே நிர்மலப் பிர்மமாகும்
ஈசனிருக்குங் கோவிற் கிளியே ஈரே ழுலகமாகும்
ஈசனிது வடியோ கிளியே யிருவினை விட்டுப்பாரும்
ஆதார மாறிதடிக் கிளியே ஆசா னன்புற்றுப்பாரு
ஆசானிடத்தைவிட்டாற் கிளியே ஆசார மேதடியோ
ஆதார மாறுக்குமேற் கிளியே ஆதார மாறிதடி
ஆகாச மானமட்டுங் கிளியே பூதாரமாகப் பாரும்
ஆயிரத் தெட்டிதழிற் கிளியே ஹம்ஸ மண்டபத்தில்
ஐம்பத்தோ ரக்ஷரமாங் கிளியே அற்புதக் காக்ஷியடி
அன்புற்றுப் பாரடியோ கிளியே ஆதார மாறுமாகும்
ஆதாரம் விட்டுப்பார்த்தாற் கிளியே ஆசா மேதுக்கடி
சற்குண மானுலுங் கிளியே சாதனை யுற்றுப்பாரும்
நிற்குண மாகுமடிக் கிளியே நீயே நானாகும்படி
ஸ்தூல மிதுவடியோ கிளியே சூட்சமதன்மாத்திரையாம்
ஸ்தூலமி தாகுமடிக் கிளியே சூட்சமமாய்ப் பார்த்துக்
[கண்டால்
காரண மில்லடியோ கிளியே கர்மவினைக ளற்றால்
பூரண மாகுமடிக் கிளியே பூமிமுதல் நாதபடி
அக்கினியில் தூமம்போலே கிளியே ஆகாய மேகம்போலாம்
காரியமான காயங் கிளியே காரண காசமாமே
நாமென் றறிந்தறிவே கிளியே நான்கு வேதமுமாகும்
நான்மறை விட்டுப்பார்த்தா் கிளியே நாமமும் ரூபமில்லை
வர்ணம் பலத்தடியோ கிளியே பாலும் பசுவும்போலே

பிண்டம் பலதடியோ கிளியே மண்ணுங் குடமும்போலே
மாதரும் மைந்தரடிக் கிளியே மாயா மயக்கமாமே
மாயா மலடியடிக் கிளியே மைந்தரு மில்லையடி
சித்தமடக்க மானாற் கிளியே முக்தி யடையலாமே
தத்துவ மானாலும் கிளியே தாமசம் போய்விட்டால்
நான்மறை நாலிதடிக் கிளியே நான்முகன் சொன்ன [தாகும்
சற்கர்ம மானதடி கிளியே சங்கடந் தாண்டலாமே
சத்திது பாரடியோ கிளியே சித்தின் பிரகாசமாமே
முத்தும பவழம்போற் கிளியே சத்தே சித்தானந்தமாம்
சத்திய மிதுவடியோ கிளியே நித்தியம் நினைத்துப் [பார்த்தால்
நீதி யிதுவடியோ கிளியே நிர்மல மாகவேணும்
தத்துவந் தெரிந்தவரை கிளியே தத்துவ மசியாய்ப்பாரும்
சித்தந் தெளிந்தவரைக் கிளியே சிவனை யறியவேணும்
சற்குரு பாதங்கூட்டிக் கிளியே சாதனை நான்குங்கூடடி
நிற்குண வட்டங்கூட்டிக் கிளியே நிர்ம்மல மாகப்பாரும்
பக்தி யிதுவடியோ கிளியே யுக்தி தெரிந்தபேர்க்கும்
சித்த மடக்கமானாற் கிளியே சிவனே ணுகுமடி
கண்ணிற்கு ளானந்தமாங் கிளியே கண்ணாரிற் கண்டகுரு
விண்ணிற்கு ளானந்தமாங் கிளியே யிம்மூன் றுலகமும் பார்த்தால்

முற்றிற்று.

உ

ஸ்ரீ சற்குருவே நம:

வேதாந்தக் கும்மி.

ஸ்ரீகணபதி பதந்தன்னிலே—வந்தித்து
சிந்தித்து முன்னே நின்று
ஆகாம சாரமாங் கும்மிதன்னை
ஆடிப்பாடுவோம் பாருங்கடி. 1

நித்தியானந்த நதிதன்னிலே—நல்ல
நிர்மலமான ஜலந்தன்னிலே
பக்தியுடன் முழுகி சதாநந்தத்தைப்
பணிந்துக் கும்மி யடிப்பமடி. 2

சத்துசித்தானந்தப் பட்டுடுத்தி—நல்ல
தத்துவ கஸ்தூரி பொட்டுமிட்டு
முத்துமணி மாலைமார்பில் அசையவே
மகிழ்ந்துக் கும்மி யடியுங்கடி. 3

சமதமாதிகள் ஆபரணம்—நல்ல
சந்தோஷ மென்பதோர் ஆபரணம்
அனவரதமும் ஆனந்த நிர்த்த
ராஜனைக் கும்மி யடியுங்கடி. 4

அஞ்ஞான மென்கிற பட்டணமாம்—அதுக்
ககங்கார மென்கிற துஷ்டராஜா
பிரக்ஞான மென்னும் பெருந் தீயினாற்சுட்டு
பேர்த்துக் கும்மி யடியுங்கடி. 5

காமமென்னும் பெருங்காட்டை வெட்டிக்-கொடுங்
கோபமென்னும் செந்நாயை யோட்டி
நானென்னு மதகெஜம் தன்னைவெட்டி எங்கள்
நாதனைக் கும்மி யடியுங்கடி. 6

தனமுள்ள போதிலே தர்மந்தேடு—நல்ல
குணமுள்ள போதிலே ஞானந்தேடு
மனமுள்ள போதிலே மானம்விடு
மனமானந்தக் கும்மி யடியுங்கடி. 7

கண்ணாலே காதாலே செய்தகர்மம்—அந்தக்
கண்ணாலே காதாலே தீரவேணும்
எண்ணாயிரம் பணமிருந்தால் கூடவும்
எள்ளளவு கர்மம் போகாதடி. 8

வாதமும் பித்தமும் தள்ளுங்கடி—கொடுங்
கோபமும் கோழையுங் கொல்லுங்கடி
ஜோதிமுன்னாலே நில்லுங்கடி எங்கள்
சுகசொரூ பத்தைப் பாருங்கடி. 9

தேகமோ குப்பக்காரப் பிள்ளையா—ரிந்த
தேகியோ நித்திய நிரஞ்சனராம்
மோகமென்னும் சிறுதேவடியாள் அவள்
கண்ணை மயக்குகிறாள் பாருங்கடி. 10

நாதமிரு செவி கேட்குதடி—அதை
நானன் றறிந்தாயதைச் சொல்லாமடி
நாதனிருக்கும் மணிபீட மாமது
நாடிக்கும்மி யடியுங்கடி. 11

காலமனேக மாய்ப் போகுதடி—அதிற்
காலன் வரவேநீ கண்டாயோ
கோலமெடுத்தது கொண்டாயே எங்கள்
கோமானைக் கும்மி யடியுங்கடி. 12

மூடமதியால் நிறைந் திருக்கும்—இந்த
உலகமுங்காயமும் மாயமடி
பாலமதியால் மறைந்திருக்கும் எங்கள்
சுவாமியைக் கும்மி யடிப்பமடி. 13

ஆதிகுரு விதை யந்தரங்கம்—அதை
அந்தமா யுள்ளது சாந்தலிங்கம்
சொந்த குருவருள் சுத்தமடி அந்தச்
ஜோதியைக் கும்மி யடிப்பமடி. 14

மூவுலகெங்கும் நிறைந்தப் பொருள்—மூல
விநாகயப் பாதங் கூப்பி
நான்குமறையுங் கடந்த பரம்பொருள்
நாதனை கும்மி யடியுங்கடி. 15

தங்கம்போல் ஏகம் பரமாத்மா—அதைக்
தாலிபோலே வெகு நாமரூபம்
சங்கையில்லாமல் சதானந்த சின்மயம்
சிந்தித்துக் கும்மி யடிப்பமடி. 16

கர்மம் பலபல காயமடி—இதைக்
கண்ணாலே கண்டதும் கர்மமடி
கர்மமும் காயமும் மாயமடி இதைக்
கண்டுக் கும்மி யடியுங்கடி. 17

கண்ணாலேகாணாத கடைக்கண் நடுவிலே—உன்
னவின்மீதி லுணர்ந்து பாரு
உச்சிக்குழிக்குக் கீழ்வைத்த பொருளை நீ
உணர்ந்துக் கும்மி யடியுங்கடி. 18

அகாரமான தகண்டமடி—அதில்
உகாரமானது நாதமடி
மகாரமானது ஜோதியடி அதைப்
பார்த்துக் கும்மி யடியுங்கடி. 19

சத்துசித் தானந்தக் கும்மியடி—நல்ல
சுத்த வெளியிலே கும்மியடி
சித்தந்தெளிந்து விளங்கி நிஜானந்த
தத்துவக் கும்மி யடியுங்கடி. 20

சற்குருபாதம் வணங்கி நின்று—நல்ல
சந்தோஷமாக இணங்கி நின்று
நிற்குணபூரண நித்தியா னந்தத்தை
நினைந்துக் கும்மி யடியுங்கடி. 21

நித்தியா னந்தத்தை நீயறிந்திலடி—அது
நிர்மலமான பரஞ்சோதி
நானறிந்தாயதை சொல்லாமடி அதை
நாடிக்கும்மி யடியுங்கடி 22

தங்கமலையிலே எங்கும் பிரகாசமாய்
ஏகமாயுள்ள பரஞ்சோதி
அங்குமா யிங்குமாய் எங்குமுள்ளதை
அங்ஙனம் கும்மி யடிப்பமடி. 23

கண்ணாயிரங் கொண்டு கண்டாலு மதைக்
காணக் கிடையாதத் தங்கமடி
கண்ணூரிலிருக்கும் குருவின் திருவடி
கும்பிட்டுக் கும்மி யடிப்பமடி. 24

பக்தியளித்த பரதெய்வமே—பர
முக்தியளித்த குருதெய்வமே
சித்தம்விளக்கிச் சிவானந்தமாகவே
சிந்தித்துக் கும்மி யடியுங்கோடி. 25

முற்றுப்பெற்றது.

Printed at the Karunanithi Press, Vijayapuram 36-7 gggr